
திருக்குர்ஆன்
தீர்ப்பு - 2
ஷெய்ஹுல் முப்லிஹீன்

திருக்குர்ஆன் தீர்

இரண்டாம் பாகம்

நூலாசிரியர்

ஷெய்ஹுல் முப்லிஹீன்
எம்.எஸ்.எம்.அப்துல்லாஹ் (ரஹ்)

மணிமேகலைப் பிரசுரம்

தபால் பெட்டி எண்: 1447,
7 (ப.எண்: 4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை – 600 017.
தொலைபேசி: 24342926, 24346082
மின் அஞ்சல் : manimekalai1@dataone.in
இணைய தளம் : www.tamilvanan.com

Print errors

Page	*Error*	*Correction*
67	*042:45*	*042:35*
99	*021:30*	

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	**Thirukkuran Theerpu - Part II**
Author	:	**Sheihul Mufliheen M.S.M.Abdullah (Rah)**
Subject	:	**Spiritualism**
Language	:	**Tamil**
First Edition in Tamilnadu	:	**2010**
Copy right	:	**All Ceylon Thareekathul Mufliheen**
Publisher	:	**All Ceylon Thareekathul Mufliheen, Sri Lanka.**
First Publication	:	**25.01.1990**
Second Published	:	**31.01.2005**
Paper Used	:	**70 Gsm Bank**
Paper Size	:	**A5**
Size of the Book	:	**1/8**
Type used for Text	:	**Kalaham**
Number of pages	:	**iv + 416 = 420**
ISBN	:	**955 - 1212 - 00 - 2**

இந்திய விலை	:	ரூ. 225/-

Publishers in Tamilnadu :

Manimekalai Pirasuram

Post Box: 1447,
7 (Old No: 4), Thanikachalam Road,
T.Nagar, Chennai-17
Phone: 24342926, 24346082
email: manimekalai1@dataone.in
website: www.tamilvanan.com

பொருளடக்கம்

		பக்கம்
1.	பிரதான தத்துவங்கள்	1
2.	குர்ஆனின் நான்கு பிரமாணங்கள்	6
3.	திருக்குர்ஆன் தரும் தெளிவான விவரம்	7
4.	எனது நோக்கம்	9
5.	உலகமக்களின் இரு அடிப்படைக் கொள்கைகள்	19
6.	இணை (ஷிர்க்) என்பது என்ன?	35
7.	ஷிர்க்கிற்குரிய இரண்டாவது காரணம்	44
8.	ஷிர்க்கிற்குரிய 3ஆவது காரணம்	48
9.	ஷிர்க்கிற்குரிய 4ஆவது காரணம்	52
10.	ஷிர்க்கிற்குரிய 5ஆவது காரணம்	61
11.	ஷிர்க்கிற்குரிய 6ஆவது காரணம்	64
12.	சில சொல் விளக்கங்கள்	70
13.	ஒரு தத்துவ ஞானம்	110
14.	குர்ஆனில் முரண்பாடு உண்டா?	116
15.	2ஆவது கொள்கை தௌஹீது	143
16.	தௌஹீதில் பலவகையுண்டா?	
	1ஆவது கொள்கை விளக்கம்	151
17.	2ஆவது கொள்கை விளக்கம்	153
18.	3ஆவது கொள்கை விளக்கம்	155
19.	றசூல்(ஸல்) அவர்களின் கொள்கை எது?	165
	4ஆவது கொள்கை விளக்கம் உண்மைத்தௌஹீது	165
20.	முரண்பட்ட ஆயத்துகள்	168
21.	(அர்ஷ்) என்பது எங்கே உள்ளது	196
22.	விரிவுரை	199
23.	இஸ்லாத்தின் லேபலில் இல்யாஸிஸம்	223
24.	மூலப் பிரமாணங்களின் முடிவு	232
25.	பத்துவா (மார்க்கத்தீர்ப்பு)	239
26.	அ.இ.த முப்லிஹீன் வழங்கும் பத்துவா	261
27.	பைத்தியத்துக்கு வைத்தியம் அவசியம்	264
28.	கலிமாவின் கருப்பொருள்	287
29.	தௌஹீதினால் ஏற்படும் நன்மை தீமைகள்	289
30.	அறிவு என்பது என்ன?	294
31.	திருக்குர்ஆனின் பகிரங்கச் சவால்	308
32.	போட்டியில் பங்கு கொள்பவர்களுக்கு நிபந்தனை	311
33.	நிரூபணம் காண்பது எப்படி?	320
34.	பிரத்தியட்சப் பிரமாணம் என்றால் என்ன?	321
35.	அனுமானப் பிரமாணம் என்றால் என்ன?	323
36.	மனித அறிவின் கேள்வி	333
37.	இஸ்லாத்தின் கொள்கை துவித சித்தாந்தமா?	352
38.	இளம் சந்ததிகளுக்கோர் அறிவுரை	394
39.	குர்ஆனைப்பற்றிய விவரம்	399
40.	இஜ்மாஉ என்பது என்ன?	402

ஒரு இலட்ச ரூபாய் சன்மானம்

(திருக்குர் ஆன் தீர்ப்பு 2ஆம் பாகம்) இந்த நூலில் (அல்லாஹ் றசூலின்) குர்ஆன் ஹதீஸுகளின் சார்பாகவும் மதியிழந்த மக்களால் கொலை செய்யப்பட்ட, நாடு கடத்தப்பட்ட, இம்ஸிக்கப்பட்ட அன்பியாக்கள் அவ்லியாக்களின் சார்பாகவும் என் பேனைமூலம் ஓர் பகிரங்கமான சவால் விட்டிருக்கிறேன்.

அல்லாஹ்வுடன் அவனல்லாத இலாஹுகளும் சிருஷ்டிகளும் இணையாய், துணையாய், சமமாய், நிகராய், ஒப்பாய் உண்டென்று யாராவது எழுத்து மூலம் நிரூபித்துக்காட்டினால் தரீக்கத்துல் முப்லிஹீன் தரீக்காவின் சார்பாய் ஓர் இலட்ச ரூபாய் சன்மானம் தருவதாக வாக்களித்துள்ளேன். அதற்குரிய நிபந்தனைகளும் தந்துள்ளேன். விரும்பிய கல்விமான்கள் இந்த நூலை முதலிருந்து முடிவுவரையிலும் வாசித்துப் பார்த்த பின் குர்ஆன் ஹதீஸுகளுக்கும் அறிவுக்கும் மாறாய் அல்லாஹ்வுடன் அவனல்லாததும் உண்டென்று நிரூபிக்க முடியுமானால் உடனே முன்வாருங்கள் நிரூபணம் செய்து காட்டுங்கள்.

கலிமத்துத்தையிபா:- அல்லாஹ் தவிர இலாஹு இல்லை,
குர் ஆன்:- 27:64 அல்லாஹ்வுடன் வேறு இலாஹு இருக்கிறதா? (இல்லை) நீங்கள் (உண்டென்று) உண்மை சொல்பவர்களாய் இருந்தால் உங்களுடைய ஆதாரங்களைக் கொண்டு வாருங்கள்.

குர் ஆன்:- 43:84 அவனே வானத்திலும் இலாஹுவாய்ப் பூமியிலும் இலாஹுவாய் இருக்கிறான்.

குர் ஆன்:- 57:3 ஆதியும் அவனே, அந்தமும் அவனே, தோற்றுவதும் அவனே, மறைந்திருப்பதும் அவனே, அவன் எல்லாம் அறிந்தவனே.

இப்படிக்கு
நூலாசிரியர்

இதை வாசிக்காமல் உள்ளே நுழையாதீர்கள்!

பிரதான தத்துவங்கள்

இந்த நூலில் நான் கூறியுள்ள தௌஹீதின் உண்மையை நீங்கள் புரிந்துகொள்வதானால், அவசியமான சில தத்துவ விளக்கங்களை அறிந்திருக்க வேண்டியது அவசியம். இல்லையானால் குர்ஆன் ஹதீஸுகளின் விவரங்களைப் புரிந்துகொள்ள முடியாது. ஆதலால், குர்ஆன், ஹதீஸுகளும், விஞ்ஞான உலகமும் பிற சமூகப்பெரியார்களான தத்துவ மேதைகளும் (முஹக்கிகூன்களும்) பூரணமாய் ஏற்றுக்கொண்டுள்ள சில மூலதத்துவங்களை இங்கே தருகிறேன். மனிதன் தன் ஆயுள்முழுமையும் ஆராய்வு செய்தாலும் இந்தத் தத்துவ விளக்கங்களை அனுபவத்தில் கண்டறிந்து ஒழுங்குபடுத்தி எடுப்பது அவ்வளவு இலகுவான ஒரு வேலையல்ல. இதை இலகுவாய் உணர்ந்து கொள்வதற்கு ஒரு ஆசிரியர் அவசியம். ஆதலால் வாசகப் பெருமக்கள் இதை இலகுவாய் உணரவேண்டும் என்பதற்காகவே அவை இங்கு தரப்படுகின்றன.

1ஆவது: “வாஜிபுல் உஜூது” இதன் விவரம்: எப்போதும் (நித்தியமாய்) உள்ளதாய், அழியாமல் மறையாமல், மாறுபடாமல் நிலைப்பட்டிருக்கிற (பகுத்தறிவில் உணரமுடியாத அனுமானத்தால் அறியக்கூடிய) ஆதாரம் அல்லது மூலப்பொருள் என்பதே.

A. இதில் எண்ணிக்கை கிடையாது. இதை ஏகம் என்று கூறுவதே சரி.

B. இதற்கு எதிரிடை கிடையாது.

2ஆவது: “மும்தனி உல் வுஜூது” இதன் விவரம்: இப்படியொன்று எங்கேயும் எப்போதும் கிடையாது. இது இல்லாதது.

மனிதக்கற்பனையால் உருவாக்கப்பட்ட வெறும் பொய் "பாதில்" ஆகும். முன்கூறிய வாஜிபுல் உஜூதுக்கு இது எதிரிடையானது, இப்படியொன்று இல்லவே இல்லை, உண்மையான வாஜிபுல் வுஜூதை விளங்கிக்கொள்வதற்கு இதை எதிரிடையாய்க் கற்பனைபண்ணி விளக்கம் தரப்பட்டதேயன்றி இப்படியோர் பொய் பாதில் இல்லவே இல்லை, இதற்கு உண்மையில்லை.

A. இரு பொருட்கள் ஏககாலத்தில் ஒன்றாய் (ஏகமாய்) இருக்காது.

B. ஒரே பொருள் ஏககாலத்தில் இரு இடங்களில் இருக்க முடியாது. (இவ்விரு தத்துவங்களின்படி)

C. உள்ளதுடன் இல்லாதது இருக்காது.

D. உள்ளது இல்லாததாய் அழியாது.

E. இல்லாதது உள்ளதாயும் இராது.

3ஆவது: "மும்கினுல் உஜூது" இதன் விவரம்: ஒருகணம் இருப்பதாயும் மறு கணம் மறைந்ததாயும் (அழிந்ததாயும்) காட்சியளிப்பது. இதற்கு உண்மையுமுண்டு. இன்மையுமுண்டு. உண்மையும் இன்மையும் ஒன்றுசேராது. ஆகவே இன்மையென்பது மறைதலேயன்றி அழிதல் என்பது பொருளல்ல. அழிதல் என்பது புலனாட்சியிலிருந்து மறைதலே. உண்மை உஜூதை நோக்கியதாயும், இன்மை மனித அறிவிலுள்ள வஹ்மு என்ற பேதபுத்தியை நோக்கியதாயும் இருக்கிறது. இதைக் குணம், ஆதேயம் ஸிபாத் என்று கூறப்படும்.

4ஆவது:ஆதாரம், ஆதேயம், குணிகுணம் என்பவை சொல்லினால் வேறுபட்டிருப்பினும் பொருளினால் ஒன்றேதான். இதை வெவ்வேறாகப் பிரிக்கவோ ஒன்றைவிட்டொன்றை மறைக்கவோ முடியாது. இவ்வளவையும் அடிப்படையாய்க் கொண்டு ஆரிபுகள் தந்துள்ள விளக்கங்களை இங்கே தருகிறேன் கவனியுங்கள்..

5ஆவது:"மௌஜூது" "மஹ்தூபாகவும்", மஹ்தூபு மௌஜூதாகவும் மாறாது. இதன் கருத்து: உள்ளதாய் இருப்பது இல்லாததாகவோ, இல்லாதது உள்ளதாகவோ ஆகாது. உள்ளது என்றுமுள்ளதுதான். இல்லாதது என்றும் இல்லாததுதான்.

6ஆவது:தாத்தியய்யாத்து தாத்தை விட்டு எப்போதும் நீங்காது. இதன் விவரம்:- ஒரு பொருளின் சுயதன்மைக்கு அவசியமானவை எவையோ அவை சுயதன்மையை விட்டும் எப்போதும் நீங்காது என்பதே.

7ஆவது:"கல்புல் ஹகீகதிமு ஆலுன்" இதன் விவரம்: எதார்த்தமான சுய தன்மை மாறுபடுவதோ அழிவதோ இல்லை.

8ஆவது:"அஹ்றாலுடைய உஜூது ஜவாஹிறுடைய உஜூதுக்கு நிலைக்களனாக (ஜனாக) இருக்கும்". இதன் விவரம்: ஆதேயம் (குணம்) என்பதன் உண்மை, ஆதாரம் என்ற குணியின் இருப்பு (உண்மை) ஆகவே இருக்கும். அதாவது ஆதாரம், ஆதேயம், குணி, குணம், உஜூது, மவுஜூது என்பவை சொல்லினால் வேறுபடினும் உண்மையில் அவை ஒன்றேயொன்றுதான். இவை வெவ்வேறாய்ப் பிரிபடா.

9ஆவது:உஜூது, குணி, ஆதாரம் எப்போதும் அழியாததாயும் மவுஜூது, குணம், ஆதேயம் ஒவ்வொரு கணமும் மாறுபடுவதாயும் அறிவுக்குத் தென்படலாம். (இதைத்தான் மும்கினுல் உஜூது என்று கூறப்படுவது.)

10ஆவது:உள்ளதான ஒன்று அழிவதில்லை. ஆகவே அழிதல் என்றால் மனித அறிவுக்கு மறைந்திருப்பது என்பதே பொருள். இல்லாமல் ஆகிவிட்டதென்பது பொருளல்ல. அழிதல், மறைதல் எல்லாம் சிருட்டியிடத்தில்தான். இதன் காரணம் மறதி. இறைவனுக்கு மறதி இல்லை. அவனிடத்தில் அழிதலும் மறைதலும் கிடையாது.

11ஆவது:றப்புடைய தன்மைக்கு அப்துக்களுடைய (சர்வ சிருட்டிகளுடையவும்) தன்மை முற்றிலும் மாறுபட்டது. அதாவது றப்புக்கு அப்து நேர்முரணானது.

12ஆவது:றப்பு அப்தாவதோ, அப்து றப்பாவதோ இல்லை. அப்து அப்துத்தான். றப்பு றப்புத்தான்.

நாம் இங்கே மிகச் சுருக்கமாய் விளக்கிய இந்த 12 மூலதத்துவ விளக்கங்களும் குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஉ, கியாஸ், சிந்திக்கும் பகுத்தறிவு ஆகிய பிரமாணங்களால் உறுதிப்படுத்தப்பட்ட உண்மை மட்டுமல்ல இன்றைய விஞ்ஞானமும் உலகிலுள்ள தத்துவமேதைகள் யாவரும், உலக மதங்கள் யாவும் ஏகமனதாய் ஏற்றுக்கொண்ட ஓர் பூரணமான உண்மையாகும். இங்கே தரப்பட்ட தத்துவ விளக்கங்களை உதறித் தள்ளிவிட்டு மார்க்க ஆராய்வு செய்வது வீண் பொழுதைக் கழிப்பதாய் முடியும். மேலும் இத்தத்துவங்களை மீறி ஆராய்வது பெரும்பாலும் வழி தவறாகவே அமையும். இவ்வித தத்துவ விளக்கத்தைப் புரிந்து கொள்ளாத ஒருசில மக்கள்தான் இன்று குர்ஆன் ஹதீஸ்களையும் அறிவையும் கூட மறுக்கிறார்கள். ஆதலால் இந்த நூலை வாசிக்க முற்படும் நீங்கள் எக்கட்டத்திலும் இதை மறக்காமல் மனத்தில் இருத்திக் கொண்டு வாசித்து விழங்கியறிந்து உண்மையின் அடிப்படையில் உங்கள் வாழ்வை அமைத்துக்கொள்ளும்படி ஆலோசனை கூறுகிறேன்.

இன்றைய உலகிலுள்ள பெரும்பாலான மக்கள் ஏதாவது ஓர் கொள்கையை முன்பின் ஆராயாமல் பின்பற்றல் முறையிலும் சுயநலன் கருதியும் பற்றிப் பிடித்துக் கொண்டு குர்ஆன் ஹதீஸ்களையும் ஆன்றோர் வாக்கியங்களையும் தத்தம் கொள்கைக் கேற்றபடி புரட்ட மறைக்க வியாக்கியானம் செய்ய முற்படுகிறார்கள். இது ஓர் பழைய பரம்பரை நோய்தான். இஸ்லாத்தின் கொள்கை தௌஹீதென்கிறார்கள். தௌஹீதென்றால் ஓர் இறைவனை ஒப்புக் கொள்ளுதல் என்கிறார்கள். உலகிலுள்ள மதங்களெல்லாம் தௌஹீதை

அடிப்படையாய்க் கொண்டவைதானென்றும் அதற்காதாரம் உபநிடதங்கள், பகவத்கீதை போன்றவையென்றும் புகழ்கிறார்கள். ஆனால் அந்த உபநிடதங்களில் குறிப்பிட்ட அத்வைதம் இஸ்லாத்திலுள்ளதல்ல என்கிறார்கள். தௌஹீதுக்கு எதிர்மறை வஹ்தத்துல் வுஜூது என்கிறார்கள். ஐயோ! பாவம். ஓர்இறைக் கொள்கை, தௌஹீது, அத்வைதம் வஹ்தத்துல் உஜூது, ஏகத்துவம் என்பவை போன்ற சொற்கள் இவர்களுக்கு நன்றாய்த் தெரியும், ஆயினும் இவற்றில் இஸ்லாத்தின் கொள்கை எது? என்பதே அந்தப் பேச்சாளர்கள் எழுத்தாளர்களுக்கு இதுவரை தெரியாது இந்தவிதமக்கள் அல்லாஹ்வுக்கு இணை கிடையாதென்கிறார்கள் ஆனால் சிருட்டி அல்லாஹ்வின் வேறு, அது இல்லாமையில் உண்டானது என்கிறார்கள். இவ் வார்த்தை அல்லாஹ்வுடன் இல்லாமையும் உண்டு என்ற ஷிர்க்கை உருவாக்கிவிட்டதென்பதை அறிந்து கொள்ளும் ஆற்றல் இவர்களிடமில்லை. ஷிர்க்கைப் பற்றியோ தௌஹீதைப் பற்றியோ இவர்கள் விளங்கிக் கொள்ளாத காரணம் நாம் கூறிய தத்துவப் பிரமாணங்களை இவர்களறியாமலிருப்பதே. ஆகவேதான் இத் தத்துவங்களை மீறி ஆராய்பவன் தன்னை மு.்மீனாய்க் கருதுபவன் தன்னை நடமாடும் பிராணிகளில் ஒன்றாய்க் கொள்ள வேண்டுமேயன்றிப் பகுத்தறிவுள்ள மனிதனாய்க் கொள்ள முடியாதென்று கூறுகிறேன். இஸ்லாம் பிராணிகளுக்குரியதல்ல. அறிவுடைய மனித குலத்துக்குரியது.

குர்ஆனின் நான்கு பிரமாணங்கள்

குர்ஆன் ஹதீஸ்களை ஆராய நீங்கள் முற்பட்டால் முன் கூறிய தத்துவங்களுடன் இங்கே தரப்படுகிற நான்கு பிரமாணங்களையும் கல்பில் இருத்திக் கொண்டே ஆராய வேண்டியவர்களாய் இருக்கிறீர்கள். இது குர்ஆன் ஹதீஸ்களுக்குரிய விசேட விளக்க மாகும்.

1ஆவது: "இபாரத்துன்னஸ்": ஓர் ஆயத் அல்லது ஹதீஸின் வெளிச்சத்தப் பிரமாணத்தைக் கொண்டறிதல்.

2ஆவது: "தலாலத்துன்னஸ்": கருத்துப் பிரமாணத்தைக் கொண்டு அறிதல்.

3ஆவது: "இஸாறத்துன்னஸ்": சைக்கினைப் பிரமாணத்தைக் கொண்டறிதல்.

4ஆவது: "இஹ்திலாவுன்னஸ்": உவமானப் பிரமாணத்தைக் கொண்டறிதல்.

குர்ஆன் ஹதீஸ்களில் இந்த நான்கு பிரமாணங்களும் ஒத்துக் கூறுபவை எவையோ அவை ஒரே பொருளுடைய "முஹ்கமு"வைச் சேர்ந்தவையாயும் உறுதியான திடப் பிரமாணமாகவும் இருக்கும். இவ்வகை ஆயத்துகள் ஹதீஸ்களை எவராலும் மறுக்கமுடியாது. மறுப்பவன் இறை வேதத்தை ஏற்றுக்கொள்ளாத காபீராவான். இப்பிரமாணங்களை மீறும் ஆயத்துகள் முதஸாபிஹாத் இனத்தைச் சேர்ந்ததாய் இருக்கும்.

5ஆவது:முஹ்கமுவான ஆயத்துகளில் இடம்பெறும் முகம், கை, வெட்டினான் போன்ற சொற்களுக்கு எவ்விதக் காரணம் கொண்டும் வலிந்துரை கொள்ளக்கூடாது. இவ்விதச் சொறகள் முதஸாபி ஹாத்தான ஆயத்துகளில் இடம் பெற்றால் எமது அவசியத்துக்கேற்றபடி பொருள் கொள்ளலாம்.

திருக்குர்ஆன் தரும் தெளிவான விவரம்

1ஆவது:அறியப்படுவதும் அறிவதும் அறிவும் (தாத்து, சிபத்து, அஸ்மா) வேறென்றில்லாமல் ஏகமாய்த் தரிபாடாய் நிலைத்திருப்பது எதுவோ அதற்கு இஸ்லாம் தந்துள்ள கலைச்சொற்கள் உஜூது, தாத்து, ஹக்கு, குன்ஹு என்பவையே. ஹக்கு என்பது பாதில் என்ற சொல்லுக்கு எதிரிடையாய்த் தென்படுவது மனிதனிடத்தில் தான். ஹக்கு என்ற சொல்லுக்கு இறைவனுடைய விஷயத்தில் எதிர்ச்சொல் கிடையாது. குர்ஆன் ஹதீஸுகளில், நல்லடியார்களின் பேச்சு எழுத்துகளில் இச்சொற்கள் இடம்பெற்றால், தாத்து, ஸிபாத்து, அஸ்மா ஆகிய மூன்றையும் ஒன்றாய் ஏகமாய்க் கொண்டே இச்சொற்கள் பாவிக்கப்படுகின்றன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

2ஆவது:உஜூதை, தாத்தை, ஹக்கைக் குறிப்பிட்டுக் காட்டுவதற்காக இறைவனால் குர்ஆனிலும் றசூல்(ஸல்) அவர்களால் ஹதீஸுகளிலும் பாவிக்கப்பட்டிருக்கிற இடுகுறிப் பெயர்ச்சொல் "அல்லாஹ்" என்பதே. இது தாத்துக்குரிய நாமம்தான். இதில் எவரும் எதுவும் கூட்டு இல்லை. அஸ்மா, ஸிபாத்து, தாத்து எல்லாம் இச்சொல்லின் வேறுபாடில்லாமல் குறிப்பில்லாமல் கட்டுண்டிருக்கின்றன. இந்த அல்லாஹ் என்ற நாமத்துக்கு எதிர்ச்சொல்லோ பொருளோ கிடையாது.

3ஆவது:இறைவனுடைய அல்லாஹ் என்ற திருநாமம் நீங்கலாயுள்ள மற்றெல்லா நாமங்களும் எதிர்ச்சொல்லும் பொருளுமுடையன. அவசியத்தின் போது சிருட்டியின்பேரிலும் இந்த நாமங்களைப் பாவிக்கலாம். ஆனால் அல்லாஹ் என்ற நாமம் அல்லாஹ்வுக்கு மட்டுமே சொந்தமென்றிருப்பதால் எந்த ஒரு சிருட்டிக்கும் இந்த நாமத்தைப் பாவிப்பது பொருந்தாது.

4ஆவது:அல்லாஹ் என்ற நாமத்தின் ஒலியும் அட்சரங்களும் மாறுபடினும் கருத்து மாறுபடாது. இந்த அல்லாஹ் என்ற நாமம் ஒருமை, பன்மை, உயர்திணை, அ.்றிணை, தன்மை, முன்னிலை, படர்க்கை, இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் போன்ற சகல இலக்கண வரம்புகளையும் கடந்த ஒன்றாகும். மற்றும் திருநாமங்கள் இப்படியல்ல.

முன் கூறிய தத்துவங்களுக்கும் பிரமாணங்களுக்கும் மாறாக, குர்ஆன் ஹதீஸுகளுக்குப் பொருள் கொள்வது பித்அத்தாகவே முடியும். மனிதனை வழிகேட்டிலேயே செலுத்தும். இங்கே நாம் குறிப்பிட்டுக் காட்டிய தத்துவ விளக்கங்களைத் திருக்குர்ஆன் தீர்ப்பு 1ஆம் பாகத்திலும் கூறியுள்ளேன். வாசக நேசகர்களான நீங்கள் குர்ஆன் ஹதீஸுகளையும் அவற்றால் தரப்பட்ட தத்துவ உண்மைகளையும் ஏற்றுக் கொண்டவர்களானால் இந்த நூலை நீங்கள் வாசிக்கலாம், உண்மையை அறியலாம் அல்லாஹ் நாடினால் நேர்பாதை (ஸிறாத்)யில் சென்று இம்மை மறுமைகளில் நிச்சயமாக வெற்றியும் பெறலாம். இதை விட்டுவிட்டு மூடப் பிடிவாதத்தோடு மனம்போன போக்கில் இந்த நூலை வாசிக்கவும் அலட்டிக்கொள்ளவும் வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

எனது நோக்கம்

ஷரீயத்திலுள்ள தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ்ஜு போன்ற கடமைகள் ஏறக்குறைய உலக முஸ்லீம்கள் யாவராலும் கையாளப்பட்டு வருகிறது. மத்ஹபுகள் வேறுபட்டிருப்பதனால் முஸ்லீம்களிடையே இக் கடமைகளில் வேறுபாடு தென்படுகிறது. இந்த மத்ஹபுகளை உருவாக்கிய இமாம்கள் பர்லு, சுன்னத் போன்ற எல்லா விஷயங்களிலும் சட்ட நுட்பங்களிலும் ஒருவருக்கொருவர் முரண்பட்ட கருத்துகளைக்கூறி முரண்பட்ட சட்டங்களையும் இயற்றியுள்ளார்கள். உதாரணமாக, ஹனபி இமாம் தொழுகையின் போது நிய்யத் செய்வது பர்லல்ல (சுன்னத்) என்று கூறுகிறார். ஸாபி இமாம் தொழுகையின் போது நிய்யத்துச் செய்வது "பர்லு" என்று கூறுகிறார். தொழுகையிலில்லாத 3 செயல்கள் தொழுகையின்போது தொடர்ந்து இடம்பெற்றால் அத்தொழுகை பாதில் என்று ஸாபி இமாம் கூறுகிறார். பாதிலல்ல என்று ஹனபி இமாம் மறுக்கிறார். இன்னும் வேறு ஒரு இமாம் தொழுகையின் பின் துஆ ஓதலாம் என்றால் மற்றொரு இமாம் அதை மறுக்கிறார். ஒருவர் தக்பீர் கட்டும்போது தொப்புளில் கையைக் கட்டிக்கொள்ளும்படியும் இன்னொருவர் மார்பில் கட்டிக்கொள்ளுமபடியும் கூறுகிறார். ஒருவர் முள்ளம் பன்றி, உடும்பு போன்றவற்றை உண்பது ஹறாம் என்கிறார் இன்னொருவர் அவை ஹலால் என்கிறார். ஓரு விவாகத்தை நடாத்த 4 விஷயம் அவசியமென்று ஷாபிமத்ஹபு கூறுகிறது.

1. இரு சாட்சிகள் 2. வொலி 3. மகர்
4. ஏற்றுக்கொள்ள உபயோகிக்கும் வசனம்.

இதே விஷயத்தில் சாட்சி அவசியமல்ல என்பது ஹனபி மத்ஹபு.

இதே விஷயத்தில் வொலி தேவையில்லை என்பது மாலிகி மத்ஹபு.

ஒரு மத்ஹபில் தொழுகையின் போது முழங்காலுக்கும் தொப்புளுக்குமிடையில் உடையணிவது போதுமானது, இன்னொரு மத்ஹபில் கோவணம், லங்கோட் போன்றவற்றை அணிந்துகொண்டாலே தொழுகைக்குப் போதுமானது. இன்னும் எவ்வளவோ அடுக்கிக்கொண்டே போகலாம். இவர்களெல்லோரும் குர்ஆன் ஹதீஸ்களைக் கொண்டுதான் ஆதாரம் தருகிறார்கள். இவர்களில் எவரை மூ.்மீன் முஸ்லீம் என்று தீர்ப்புக் கட்டுவது? எவரை முஸ்லீம் மூ.்மீனல்ல என்று தள்ளிவிடுவது.

இந்த இமாம்களை மிகநுட்பமாய் ஆராய்வுக்கெடுத்தால், இவர்கள் அவரவர் அறிவு விளக்கத்துக்கேற்றபடி குர்ஆன் ஹதீஸ்களை ஆராய்ந்து அவரவர் சொந்த அபிப்பிராயத்தைக் கூறியிருக்கிறார்கள். இவர்களுடைய அபிப்பிராயங்கள் ஒவ்வோரு கூட்டத்தினருக்குச் சரியாய் இருக்கலாம், ஆயினும் இந்த இமாம்களின் அபிப்பிராயங்களே முற்றிலும் உண்மையானதென்றும் தீர்ப்புக் கட்டமுடியாது. உலகமக்கள் யாவரும் ஏகமனதாய் இவர்களை ஒப்புக்கொள்ள வேண்டும் என்று நிர்ப்பந்திக்கவும் முடியாது. இவர்களை ஒப்புக் கொள்ளாதவன் காபீர், முர்த்தத் என்றும் நாம் பத்துவா வழங்கவும் முடியாது. இந்த இமாம்கள் யாவரும் முடிவான உண்மைதான் கூறினார்களென்றால் எல்லோரும் ஒரே அபிப்பிராயத்தையே கூறியிருப்பார்கள். சிற்சில விஷயங்களில் எல்லா இமாம்களும் ஒருமித்த அபிப்பிராயத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். உதாரணமாக தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ்ஜ் ஆகிய கடமைகளை எல்லா இமாம்களும் ஏற்றிருக்கிறார்கள். இக்கடமைகளையும் சிலர் முன்பின்னாய்க் கூறியுள்ளார்கள், ஆயினும் அக் கடமைகளுக்காக அவர்களால் வகுக்கப்பட்ட சட்டதிட்டங்களில் சில ஒன்றுக்கொன்று நேர்முரணானவை என்பதை எவராலும் மறுக்க முடியாது. அனேக ஆதாரங்களைத் தரலாம்.

இஸ்லாம் உயிரற்ற வெற்றுடலல்ல. அதற்கோர் உயிருண்டு. அதன் பெயர் ஈமான். ஈமானற்ற இபாதத்துகள் மட்டுமே இஸ்லாம் என்று மனிதர்களில் பெரும்பாலார் நம்பியுள்ளார்கள்.

நாம் இமாம்களாய்க் கொண்டிருப்போர் எமக்களித்த விளக்கங்கள் இஸ்லாத்தின் வெளி உடலைப் பொருத்தவைதான். இந்த விவரங்களில் ஊறித்திளைத்த மனிதன் தொழுகை, நோன்பு போன்ற கடமைகளை எடுத்துக் கொண்டால் நான் இஸ்லாத்தில் வெற்றியடைந்து விட்டேனென்றும், தான் அறிந்த செய்திகளுக்கு மாறாய்க் கூறப்பட்டவை எல்லாமே பித்அத்துத்தான் என்றும் நம்பிவிடுகிறான். இன்று எம் உலமாக்களிடையேயுள்ள பித்தலாட்டங்களையும் பிடிவாத உணர்வையும் அபிப்பிராயங்கள், நம்பிக்கைகளையும் அறிவுக்கண்கொண்டு ஆராய்ந்து பாருங்கள். இவ்வகையில் சட்ட அடிப்படையில் உலகிலுள்ள உலமாக்கள் யாவருமே இஸ்லாத்தின் விஷயத்தில் ஒருமைப்பட்டவர்களென்பதை நிரூபிக்க முடியாது.

இந்த மத்ஹபுகளைப் பின்பற்றிய மக்கள் கொள்கை விளக்கங்களிலும் செயல் விளக்கங்களிலும் ஒருவருக்கொருவர் முரணாய் வேறுபட்டிருக்கும் போதும், ஒவ்வொரு கூட்டத்தினரும் தங்களைச் சுன்னத்வல் ஜமாஅத்துக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களென்றே கூறுகிறார்கள், எழுதுகிறார்கள். இவர்கள் யாவரும் சுன்னத்வல் ஜமாஅத்தினர் தான் என்றால் எல்லோரும் ஒரேவிதக் கொள்கையையும் ஒரேவிதச் செயல்களையுமே கையாள வேண்டும். இன்றைய உலக முஸ்லீம்கள் அப்படியில்லை. றசூல் (ஸல்) அவர்களும் அவர்களுடைய தோழர்களும் எந்தக் கொள்கையில் எச் செயல்களில் ஈடுபாடு கொண்டிருந்தார்களோ அக்கொள்கையையும் செயல்களையும் எடுத்துக் கொண்டவர்கள் எவர்களோ அவர்கள் தான் உண்மையான சுன்னத்வல் ஜமாஅத்தினராவார்கள். அவர்களுடைய கொள்கை விளக்கங்கள் செயல் விளக்கங்கள் குர்ஆன் ஹதீஸ்களினாலும் றசூல்(ஸல்) அவர்களுடைய நடைமுறையினாலும் உறுதிப்படுத்தப்பட்டவை. இவர்களின் கொள்கை அல்லாஹ்வுடன் எதுவும் சம்பந்தமாய், கூட்டாய், இணையாய், துணையாய், நிகராய் இல்லையென்பதே. ஆனால் இன்றுள்ள ஒருசில நல்லடியார்களைத் தவிர ஏனைய முஸ்லீம்கள் இக்கொள்கையின் அடிப்படை வாக்கியமான கலிமாவை நாவினால் ஒப்புக் கொண்டவர்களாயும் கருத்தில் அல்லாஹ்வுடன்

அவனல்லாதவையும் உண்டு என்று வாதிடுபவர்களாயும் றசூலினதும் ஸஹாபாக்களினதும் கொள்கையைத் தஜ்ஜாலுடைய கொள்கையென்று கூறுபவர்களாகவும் இருப்பதோடு இக்கொள்கையை விளக்குவோரைக் கொன்றொழிக்க முயற்சிப்பவர்களாயும் இருக்கிறார்கள். இவர்களை நாம் முஸ்லீம்கள் மூ.்மீன்கள் என்று ஏற்றுக்கொள்ளமுடியுமா? இவர்களுக்கு மார்க்கவிளக்கம் தரக்கூடிய ஆற்றலுண்டா? இவர்களுடைய, குர்ஆன் ஹதீஸுகளுக்கும் பகுத்தறிவுக்கும் கூட மாறான கொள்கையை, நடைமுறையைக், கலிமா கூறிய ஒரு மூ.்மீன் ஏற்கமுடியுமா? இவர்கள் நபியைப் பின்பற்றிய சுன்னத்துவல் ஜமாஅத்துக் கூட்டத்தினர் என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது. இவ்வகையினர் உலகாதாய நோக்குடையவர்களாகவும் வரட்டுக் கௌரவத்துக்காகவே மௌலவி செட்டிவிக்கட்டைப் பெற்றுக் கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள்.

சரியான ஆதாரங்களோடு உண்மையை வெளிப்படுத்தும் போதும் தௌஹீதுக்கு எதிர்மறை வஹ்தத்துல் வுஜுத் என்றும் அது இந்துக்களின் வாதமென்றும் நச்சுக் கருத்தென்றும் கூறி மக்களை மாடாய் மேய்ப்பது மட்டுமல்லாமல், இஸ்லாத்தின் உண்மையான கொள்கை விளக்கம் தரும் நூற்களை ஒழித்துக் கட்டப் பாராளுமன்ற உதவியைக் கோரும் இக்கும்பல் எந்தக் கூட்டத்திலுள்ளதென்பதை வாசக நேயர்களான நீங்களே எடை போடுங்கள். இக்கூட்டம் இஸ்லாத்தில் ஷரீயத்தேயன்றி தரீக்கத், ஹகீகத், மஹ்ரிபத், கிடையாதென்று வாதிக்கிறது. இக்கூட்டம் தங்கள் வாழ்நாளில் எப்போதாவது குர்ஆனைப் புரட்டிப் பார்த்ததுண்டா? முதலிருந்து முடிவுவரை வாசித்ததுண்டா? இவ்வேலைக்கு அவர்களுக்கு நேரமில்லை.

குர்ஆன்: 4:168

(நபியே!) எவர்கள் நிராகரித்து விட்டு அக்கிரமம் செய்கிறார்களோ அவர்களை அல்லாஹ் மன்னிக்கமாட்டான்; அன்றி நேரான வழியில் (தரீக்கத்) அவன் அவர்களைச் செலுத்தவும் மாட்டான்.

தரீக்கத்தில் சென்று கொண்டிருப்பவர் பாவம் மன்னிக்கப்பட்டவர் என்பதும் நேர் வழியில் செல்பவர் என்பதும் தென்படுகிறது. இப்படியோரு வழி இஸ்லாத்தில் இல்லையென்று கூறும் கூட்டம் இஸ்லாத்திலுள்ள கூட்டமா? இஸ்லாத்தின் லேபிலைப் போட்டுக் கொண்ட ஜாஹில் கூட்டமா?

என்னறிவுக்கெட்டிய வரையில் இன்றைய உலக உலமாகளில் நல்லறிவும் இறை வழிகாட்டலுமுள்ள ஒருசிலரைத் தவிரப் பெரும்பான்மையோர் இஸ்லாத்தின் கொள்கை விளக்கத்தைச் சரிவரப் புரிந்து கொள்ளாதவர்களென்றே நான் காணுகிறேன்.

இவற்றை அலசி ஆராய முடியாத பெரும்பாலான மக்கள் ஒருவரையொருவர் எதிர்த்துத் தங்களுக்கிசைந்த பெயர்களையும் சூட்டிக் கொள்கிறார்கள். இவையெல்லாம் மதம் என்ற போர்வையில் புகுத்தப்பட்ட வெறும் அறியாமையும் மருட்சியுமே என்று நான் காணுகிறேன்.

குர்ஆன்: 23:53
எனினும் தங்களுடைய வேதத்தைப் பல பிரிவுகளாய்ப் பிரித்துக் கொண்டு ஒவ்வொரு வகுப்பாரும் தங்களிடமுள்ள பிரிவைக் கொண்டு சந்தோஷமடைகின்றனர்.
(இவ்வாயத்து எஹூது நஸாறாக்களை மட்டும் சுட்டுவதாய்க் கொள்வது தவறு. எம் சமூகத்துக்கும் பொருத்தமானதுதான்.)

பக்தியென்பது இஸ்லாத்தின் ஆரம்பப்படித்தரம் என்பதை இன்றைய உலகின் பெரும்பாலான மக்கள் உணரவில்லை. ஒரு பக்திமான் கையாளும் செயல்கள் அவனுடைய வெற்றிக்கு உதவி தரும் உபகரணங்களேயன்றி மூலகாரணமல்ல. வெற்றிக்கு மூல காரணமாய் அமைந்துள்ளது நோக்கம் (நிய்யத்) அல்லது விசுவாசம் தான். இந்த நிய்யத்தைக் கொண்டுதான் செயல் வெற்றி பெறுமல்லாமல் செயல்மட்டும் தனித்து நின்று வெற்றிபெறாது. தக்பீர் கட்டும்போது மார்பில் கட்டினாலும் சிறிது மேலே கீழே கட்டினாலும் நான் இறைவனுக்குச் சங்கை செய்வதற்காகவே

கையைக் கட்டிக் கொண்டேன் என்றுணர்கிறவர்கள் எங்குத்தான் கையைக் கட்டிக் கொண்டாலும் அது பயனளிக்கும் என்பது எனது அபிப்பிராயம். ஆயினும் எல்லோரும் ஒன்றுபோல் செய்வது மிக நல்லதுதான். இப்படி உலகமக்களை ஒன்றாயச் சமப்படுத்துவது எவராலும் எப்போதும் முடியக்கூடிய ஒரு விஷயமேயல்ல. ஷரீயத்துடைய அமல்களில் சிறு தவறுகள் இருப்பதாய்க் காணும் அறிஞர்கள் அவ்வப்போது அவற்றைத் திருத்தும் முயற்சியில் ஈடுபாடு கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். இவ்வித உலமாக்கள் ஏறக்குறைய எல்லாக் கிராமங்களிலுமே இருக்கிறார்கள். இவ்வுலமாக்களின் வேலையைக் கையாள நான் முன்வரவே இல்லை.

ஷரீயத்தின் வெளி அமல்களால் இம்மையிலும் மறுமையிலும் நாம் வெற்றிபெற வேண்டுமானால் இந்த அமல்கள் உயிருடையவையாய் அமையவேண்டும். இந்த உயிர் என்பதுதான் ஈமான், விசுவாசம், எகீன் என்பது. இந்த நம்பிக்கை இன்றைய முஸ்லீம்களிடையே ஒன்றுக்கொன்று முரணான இருவகைப்பட்டதாய் இருக்கிறது. இவற்றில் எது சரியென்பதைக்கூடப் பெரும்பாலான முஸ்லீம்கள் அறியாதவர்களாய் இருக்கிறார்கள். இந்த இரு நம்பிக்கைகளையும் அவற்றின் கிளைகளையும் எடுத்துக் காட்டி, குர்ஆன் ஹதீஸ்களினால் (வேதங்களினாலும் நபிமார்களின் உபதேசங்களினாலும்) விளக்கித்தரப்பட்ட சுத்த சத்தியமான (நம்பிக்கை, விசுவாசம்) ஈமான் எது? என்பதை ஆதாரபூர்வமாய் உலகமக்கள் யாவருக்கும் பொதுவாகவும் முஸ்லீம்களுக்குக் குறிப்பாகவும் விளக்கிக்காட்ட வேண்டும் என்பதே எமது உண்மையான நோக்க மாகும்.

ஏனென்றால் இந்த ஸமானில் (காலத்தில்) ஈமானின் உண்மையை ஆதாரங்களோடு அறிவு ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் விளக்கி இஸ்லாத்தின் உயிரான தௌஹீதைத் தெளிவு படுத்தி மக்களை நேர்வழியில் அழைத்துச் செல்லக்கூடிய நல்லடியார்கள் நம் நாட்டில் மிகமிக அபூர்வமாய்த் தென்படுகிறார்கள். ஒரு சிலருக்கு இவ்விஷயம் கடமையல்லாமலும்

இருக்கிறது. என்னைப் பொருத்தவரையில் இறந்துகொண்டிருக்கும் ஈமானை ஆதாரங்களோடு விளக்கி ஈமானைப் புனருத்தாரணம் செய்வதும் எத்திவைப்பதும் என் கடமை என்று நான் கண்டேன். ஷரீயத்தில் நான் தலையிடவேண்டிய அவசியம் எனக்கில்லை. நான் ஷரீயத்தின் கடமைகளிலும் ஏதோ குளறுபடி செய்கிறேனென்று ஒரு சிலர் கூறுவது வெறும் பொய்யாகும். முன் ஒருபோது முஹ்யித்தீன் அப்துல்காதிர் (றஹ்) போன்றோர் இறந்துகொண்டிருந்த "தீனை"ப் புனருத்தாரணம் செய்து தந்திருக்கிறார்கள். ஒரு தரீக்காவையே உருவாக்கியிருக்கிறார்கள். முஹ்யித்தீன் இப்னு அறபி(றஹ்) போன்ற பல பெரியார்கள் அவரவர் ஸமானில் அவரவரால் இயன்றவரையில் அவர்களுடைய கடமைகளைச் சரிவரச் செய்திருக்கிறார்கள். இவ்வகையினரின் கூற்றை விளங்கிக்கொள்ள முடியாத சிலர் இவர்களை முர்த்தத், காபீர் என்றெல்லாம் பட்டம் சூட்டினார்கள். ஆதலால், அவர்களுடைய அறிவுரைகள், நல்லுபதேசங்கள் இந்த நாட்டு மக்களில் பெரும்பாலாருக்குக் கிடைக்கவேயில்லை. இதற்கு மிகமிக முக்கிய காரணம் பாஷைதான். ஆதலால், எனக்குத் தெரிந்த ஈமானின் (தௌஹீதின்) உண்மைகளை எம் நாட்டு முஸ்லீம் மக்களுக்குக் குறிப்பாகவும் உலக மக்கள் அனைவருக்கும் பொதுவாகவும் எனக்குத் தெரிந்த தமிழ்ப் பாஷையில் எல்லோரும் இலகுவாய் விளங்கக்கூடிய நாட்டுத் தமிழில் கூறியிருக்கிறேன்.

நான் இந்த நூலில் கூறியுள்ள தௌஹீது பிற மத இடைச் செருகல்கள் உள்ளதல்ல. உலக மக்களால் கையாளப்படும் மதக் கோட்பாடுகளையும், மேல்நாட்டு, இந்தியநாட்டு, தத்துவ விளக்கங்களையும் பல வருட முயற்சிசெய்து ஆராய்ந்து குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஉ, கியாஸ் முதலாம் ஆதாரங்களோடுள்ள சுன்னத்வல் ஜமாஅத்தின் கொள்கை, தத்துவ விளக்கங்களையும் ஒப்பிட்டு நோக்கியபோது இறைவனால் அனுப்பப்பட்ட நபிமார் றசூல்மார்களின் கொள்கை, தத்துவ விளக்கங்களே சரியானவை, உண்மையானவையென்று சந்தேகமின்றித் தெரிந்து கொண்டேன். மனித அறிவில் மத விஷயமாய் ஏற்படக்கூடிய சந்தேகங்கள், மயக்கங்கள் யாவையும் நீக்கி உண்மையை உணர்த்தக் கூடியது இக்கொள்கையே என்பதையும் அறிந்து கொண்டேன்.

மேலும் நபிமார்களால் மக்களுக்குபதேசிக்கப்பட்ட சுத்தமான தௌஹீதுக் கொள்கை பற்பல காலங்களில் மக்களின் விளக்கப் பிசகினால் (அறியாமையினால்) மூடப்பட்டு, சிதைத்துத் திரிபுபடுத்தப்பட்டு விட்டதென்றும் அறிந்தேன். முன்புள்ள ஒருசில ஆராய்ச்சியாளர்கள் தங்கள் சொந்தச் சிந்தனையினால் கண்டறிந்த சிற்சில கோட்பாடுகளை அச்சத்தின் காரணமாய் மதக் கோட்பாடென்று கூறி உயிர் தப்பியிருக்கிறார்கள் என்பதும் எனக்குத் தென்பட்டது. மேலும், வெளிநாட்டு மேதைகளான, பிளேற்றோ, ஸாள்ஸ், ஹற்ஸோன், பிறாட்லி, செயின் பொனவென்டுறா, கிறீன், ஷில்லர், சோக்றட்டீஸ், கான்ற், ஹெகல், அரிஸ்டோட்டில் போன்ற தத்துவ மேதைகளும் இந்திய நாட்டைச் சேர்ந்த கௌடபாதர், சங்கரஇராமானுஜர், வித்தியாராணியர் போன்ற தத்துவ மேதைகளும் இஸ்லாத்தில் (குர்ஆன் ஹதீஸுகளில்) விளக்கப்பட்ட சுத்த சத்தியமான தௌஹீதுக் கொள்கையை நூறு வீதமும் ஏற்றுக் கொண்டவர்களாயிருந்தும் அக் கொள்கையை நிரூபணம் செய்யும் முறையில், அதை விளக்கித் தரும் முறையில் மிகப் பல தப்புத் தவறுகளை விட்டிருக்கிறார்கள் என்பதும் எனக்குத் தெரியவந்தது. இவ்வித விளக்கப் பிசகினால்தான் நபிமாரின் கொள்கை மாசுபடுத்தப்பட்டு ஒவ்வொரு கூட்டத்தினரும் ஒவ்வொரு வகையான தௌஹீதை விளக்கியுள்ளார்கள். நபிமாரின் கொள்கையைவிட மற்றெல்லாம் "ஹுலுல் இத்திஹாத்" நிறைந்தவையே என்றும் கண்டேன்.

மேலும், முஹ்யித்தீன் இப்னு அறபி (றஹ்) அப்துல் காீமும்ஜீலி (றஹ்) போன்ற முஸ்லீம் பெரியார்களின் வாதப் பிரதிவாதங்களைப் பெரும்பாலான முஸ்லீம் அறிஞர்கள் (பெரும்பாலான மௌலவிகள்) விளங்கிக் கொள்ளாமலே, இதுவரையிலும் இஸ்லாத்தின் கொள்கை விளக்கத்தில் இருட்டடிப்பும் திருபுபடுத்தலும் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதும் எனக்குத் தென்பட்டது. நான் மேலே கூறிய தத்துவ விற்பன்னர்களின் தவறுகளை இஸ்லாத்தோடு இணைத்துக் காட்டி இந்தியத் தத்துவநூற்கள் எழுதப்பட்டுள்ள பாணியில் விளக்கமளிப்பதானால் பல ஆயிரம் பக்கங்களைக் கொண்ட பல நூற்கள் எழுத

நேரிடலாம். இது எம்மால் சாதிப்பது கடினம். பல வருட அரும் முயற்சியும் தேவையாகலாம். ஆதலால் இந்த நூலில் தௌஹீது என்ற அடிப்படையில் 4 கொள்கைகளை எடுத்துக் காட்டி மூன்று கொள்கைகளை மறுத்து ஒரேயோரு கொள்கையை மட்டும் ஆதாரங்களோடு நிரூபணம் செய்து காட்டியுள்ளேன். நான் மறுத்துள்ள 3 கொள்கையிலும் தான், நான் முன்பு கூறிய தத்துவ நிபுணர்களின் கருத்துகள் அடங்கியுள்ளன என்பதையும், நான் விளக்கிக் காட்டி ஆமோதித்துள்ள கொள்கையே நபிமாரினால் அறிமுகப்படுத்தப்பட்ட, குர்ஆன் ஹதீஸ் முதலாம் ஆதாரங்களால் நிரூபிக்கப்பட்ட, அறிவு ஏற்றுக் கொண்ட சுத்த சத்தியமான இஸ்லாத்தின் உண்மைக் கொள்கையாகும் என்பதையும் நீங்கள் பல கோணங்களில் ஆராய்ந்து புரிந்து கொள்ளும்படி கேட்கிறேன்.

இஸ்லாத்தைச் சரிவர ஆராய்ந்தறிந்த ஒருசில உலமாக்களான மகான்களைத் தவிர (நல்லடியார்களைத் தவிர) இன்றைய உலகின் மிகப் பெரும்பாலான இக் கொள்கையைச் சரிவர உணர்ந்து கொள்ளவில்லையேயென்று கண்ணீர் வடிக்க வேண்டியதாய் இருக்கிறது. இஸ்லாத்தின் கொள்கை எவராலும் எதிர்வாதம் செய்ய முடியாத ஒன்று என்பதை நாம் உணர வேண்டும்.

நான் இந்த நூலில் கூறியுள்ள விவரங்களை நடுத்தர அறிவுடைய மக்களின் அறிவுக்கேற்ற வகையில், கடின பதங்கள், கடின வசனநடைகள் இல்லாமல் மிகமிக இலகுவாய் நாட்டுத் தமிழில் விளக்கியுள்ளேன். நான் தந்துள்ள விவரங்கள் உங்களறிவில் சரியாய்ப் பூரணமாய் அமையா விட்டால் என்னுடன் நேரில் உரையாடித் தெளிவு பெறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நூலெழுதுவதற்குச் சில வரைவிலக்கணங்கள் நம் முன்னோரால் தரப்பட்டுள்ளன. எடுத்துக்கொண்ட விஷயத்தில் வேறு விஷயங்கள் கலக்கப்படாமல், சுருக்கிக் கூறி விளக்கமளிப்பதும், கூறியது கூறாமல் எழுதுவதும் தான் முக்கியமான விஷயங்கள். இம்முறை உலகக் கல்விகளுக்கு (கலைகளுக்கு)ப் பொருத்தமானதுதான். ஆயினும் ஆத்மீகத் துறைக்கு (ஞானக்கலைக்கு) இம்முறை பொருந்தாது. சுருங்கக்

கூறி விளக்கமளிப்பதைத் தத்துவ விற்பன்னர்களான "முஹக்கிகூன்"கள் விளங்கிக் கொள்வார்களேயன்றி, தத்துவ நுட்பங்களையறியாத நடுத்தர அறிவுடைய மக்கள் விளங்கிக் கொள்ள மாட்டார்கள். ஆகையால்தான் நான் எடுத்துக் கொண்ட விஷயத்துடன் பற்பல தினுசான வேறு விவரங்களையும் உட்புகுத்தி விரிவாய்த் திரும்பத் திரும்பக் கூறி எழுதியுள்ளேன். எமது நோக்கம் எமது கூற்றைத் திணிப்பதல்ல. மனிதர்கள் எவ்வகையிலேனும் விஷயத்தை விளங்கிக்கொள்ள வேண்டும் என்பதே. முற்காலப் பெரியார்கள் இதே பாணியில் எழுதியுள்ள பல நூற்களை ஒரு சாரார், மஸ்த்தோடு எழுதப்பட்டவையென்று இன்றும் கூறிக் கொண்டிருப்பதன் காரணம், அப்பெரியார்களின் நோக்கைப் புரிந்து கொள்ளாமைதான். அப்பெரியார்கள் தங்கள் சொந்த அனுபவத்தை அடிப்படையாய்க் கொண்டுதான் இப்படி எழுதுவதே சரியென்று கண்டார்கள். என் சொந்த அனுபவத்திலும் அதுவே ஆத்மீகத்துறைக்குப் பொருத்தமானதென்று கண்டுதான் இந்த நூலையும் அதே பாணியில் நான் எழுதியுள்ளேன். மூடப்பிடிவாதமும் ரியா என்ற மேலெண்ணம் அல்லது வரட்டுக் கௌரவமும் உள்ளத்தில் குடியிருக்கும் வரையும் இஸ்லாத்தின் உண்மையான கொள்கையை விளங்கிக் கொள்வது கடினம்தான்.

குர்ஆன்: 29:69
யார் நம்மில் பாடுபட்டார்களோ அவர்களுக்கு நாம் நம்முடைய வழிகளைக் காட்டுவோம்.

குர்ஆன்: 39:22
எவனுடைய இருதயத்தை இஸ்லாத்தைப் பெற்றுக் கொள்ள அல்லாஹ் விசாலப்படுத்தினானோ அவன் தன் இறைவனின்(நூரில்) பிரகாசத்தில் இருக்கிறான்.

இப்படிக்கு
ஷெய்ஹுல் முப்லிஹீன்
M.S.M அப்துல்லாஹ் (ரஹ்)

ஆதாரமின்றியே சர்வசக்தனாகிய அல்லாஹ்வுக்கே சர்வபுகழும் உரித்தாகட்டும். எமது றசூலே கரீம்(ஸல்) அவர்களுக்கும் அவர்களைப் பின்பற்றி ஒழுகிய ஸஹாபாப் பெருமக்கள் மற்றும் நல்லடியார்கள் யாவருக்கும் சாந்தியும் சமாதானமும் உண்டாகட்டும்.

ஆமீன்,

உலகமக்களின் இரு அடிப்படைக் கொள்கைகள்

அன்புப் பெருமக்களே!

உலக மக்கள் யாவரையும் கொள்கை அனுஷ்டானம் ஆகிய இரு விஷயங்களையும் அடிப்டையாகக் கொண்டு நோக்கினால் மக்கள் இருபெரும் பிரிவுகளாய்ப் பிரிக்கப்படுகிறார்கள். ஒன்று ஷிர்க்கென்ற கொள்கையில் ஊறிய கூட்டத்தினர். மற்றொன்று தௌஹீது என்ற கொள்கையில் ஊறிய கூட்டத்தினர். இவ்விரு கூட்டத்தினரையும் வேறோர் கோணத்தில் நோக்கினால் 73 கூட்டங் களாய்ப் பிரிக்கப்படுகிறார்கள். இந்த 73 கூட்டத்திலும் தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு கூட்டத்தினர் மட்டும்தான் "சுன்னத்வல் ஜமாஅத்" கூட்டத்தினராவார்கள். ஆனால், உலகிலுள்ள ஒவ்வொரு கூட்டத்தினரும் தாங்களே சுன்னத்வல் ஜமாஅத் கூட்டம் என்று வாதிடுகிறார்கள். சாதாரண மனிதர்களுக்கும் பகுத்தறிவு தொழிற் படும் சிந்தனையாளர்களில் மிக அனேகருக்கும் கூட சுன்னத்வல் ஜமாஅத்தாரின் கொள்கை விளக்கம் என்ன என்பது தெரியாத ஒரு விஷயமாகவே இருக்கிறது. ஆகவே, இக்கொள்கை விளக்கங் களை மக்கள் தெளிவாய் விளங்கி உண்மையின் அடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வதற்காக ஷிர்க், தௌஹீது ஆகிய இரு கொள்கைகளையும் இங்கே விளக்க வேண்டியதாய் இருக் கிறது. தெளிவாய் விளங்கியறிவதும் ஏற்றுக் கொள்வதும் ஏற்றுக் கொள்ளாமல் மறுப்பதும் உங்கள் சுய விருப்பைப் பொறுத்ததாகும்.

1ஆவது கொள்கை ஷிர்க் (இணை ஏற்படுத்தல்)

இதன் சரியான விவரம் என்னவென்றால் அல்லாஹ்வுடன் அவனல்லாத பொருளும் ஜோடியாய், இணையாய், துணையாய், சமமாய், ஒப்பாய் இருக்கிறதென்று நம்புவதாகும். இந்த ஷிர்க் மாபெரும் குற்றம் என்றும் இது மன்னிக்கப்பட முடியாததென்றும் குர்ஆன் ஹதீஸுகளும் நல்லடியார்களின் அபிப்பிராயங்களும் மிகமிகக் கடினமாய் வலியுறுத்துகின்றன. ஆகவே முதலில் இக் கொள்கையை விளங்கிக் கொண்டு பின் இதற்கு மாறான தௌஹீதை விளங்கியறிவோம்.

எம்முடைய றசூல்(ஸல்) அவர்களுடைய வாழ்க்கை விவரங்களை முஸ்லீம்களாகிய நாம் தெளிவாய் அறிந்திருக்கிறோம். அவற்றில் ஓர் சிறு விஷயத்தை மட்டும் இங்கே நோக்குவோம். றசூல்(ஸல்) அவர்கள் நாற்பதாம் வயதில் நபிப்பட்டத்தைப் பெற்றிருந்தும் அதை மக்களிடையே வெளிப்படுத்தினால் பல கஷ்ட நஷ்டங்கள் ஏற்படலாம் என்ற எண்ணத்தினால் சுமார் இரு வருடங்கள் வெளிப்படுத்தாமலே மறைத்து வைத்துக கொண்டிருந்தார்கள். அதன்பின் இறைவனின் கண்டிப்பான உத்தரவின்படி ஸபா என்ற சிறு குன்றின் மீது ஏறி மக்களில் ஒரு கூட்டத்தினரை நோக்கி வெளிப்படுத்தினார்கள். இந்த றசூல்(ஸல்) அவர்கள் அந்த அறபு மக்களிடையே பிறந்து வளர்ந்து அல்அமீன் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றிருந்தவர்கள். றசூல்(ஸல்) அவர்கள் தம்முன்னே கூடியுள்ள மக்களை நோக்கி முதலில் சில கேள்விகளைக் கேட்கிறார்கள். மக்கள் விடையளிக்கிறார்கள். அவ்விஷயத்தைப் பாமர மனிதனும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் நம் நாட்டுப் பாணியில் இங்கே தருகிறேன்.

றசூல்(ஸல்) அவர்களின் வினா:
மக்களே! நான் உங்கள் மத்தியில் ஏதோ ஒரு விஷயத்தைக் கூறினால் அதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா?

மக்களின் விடை:
ஆம். நிச்சயமாக ஏற்றுக் கொள்வோம்.

றசூல்(ஸல்) வினா:
உங்கள் கண்களால் காணாத காதுகளால் கேட்காத நீங்களறியாத ஒரு விஷயத்தை நான் கூறும் போது நீங்கள் அதை எப்படி ஏற்றுக் கொள்வீர்கள்?

மக்களின் விடை:
முஹம்மதே! நாங்கள்தான் உமக்கு அல்அமீன் என்று பட்டம் சூட்டியவர்கள். நீர் நன்னம்பிக்கைக்குரியவர். பொய் சொல்ல மாட்டீர் என்பதை நிச்சயமாக நாங்கள் அறிவோம். ஆகவே நீர் கூறுவதைத் திட்டவட்டமாக நாங்கள் நம்புவோம்.

றசூல்(ஸல்) வினா:
இக்குன்றின் அருகில் உங்களை எதிர்ப்பதற்காக ஒரு கூட்டம் இருந்து கொண்டிருக்கிறதென்று நான் கூறினால் ஏற்பீர்களா?

மக்களின் விடை:
நீர் பொய் கூறமாட்டீர் என்பதை நாங்களறிவோம். நீர் சொல்வதை நிச்சயமாக நாங்கள் நம்புவோம். றசூல் (ஸல்) அவர்கள் மீண்டும் மீண்டும் பல விஷயங்களைப் பலமுறை கேட்டறிந்த பிறகுதான் "லாஇலாஹ இல்லல்லாஹ் முகம்மதுர்ற சூலுல்லாஹ" என்ற வாக்கியத்தை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறினார்கள். அங்கிருந்த மக்களில் றசூல்(ஸல்) அவர்களின் தந்தை அப்துல்லாஹ் என்பவரின் சகோதரர் அபூலஹப் என்பவரும் ஒருவர் (அதாவது றசூலின் பெரியதந்தை) இந்த அபூலஹபுவும் அவரின் ஸஹாக்களும் மண்ணைவாரி றசூலின் மீது வீசி நீர் நாசமாக, இந்தப் படுபொய்யைக் கூறவா எம்மை இங்கழைத்தீர் என்றார்கள்.

அறபு மக்களிடையே ஏற்பட்ட சிற்சில விவகாரங்களை நபிப்பட்டம் பெறுமுன்பே முஹம்மது (ஸல்) அவர்கள் நீதிபதியாய் இருந்து தீர்த்து வைத்திருக்கிறார்கள் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். அந்தத் தீர்ப்புகளை அறபுமக்கள் பிழைகண்டவர்களல்ல. நபியின் தீர்ப்புச் சொல்லை நிச்சயமான உண்மையென்றே அந்த மக்கள் நம்பியிருந்தவர்கள். இந்த அறபு மக்களால் முஹம்மது (ஸல்) அவர்களுக்கிடப்பட்ட அல்அமீன்

என்ற பட்டப்பெயர் உலக மக்களில் எவருக்கும் எப்போதும் எவராலும் இடப்பட்டதாக நாம் அறியவில்லை. இந்த முஹம்மது (ஸல்) என்பவர் கலிமாவை மக்களிடம் கூறி வெளிப்படுத்துவதற்கு முன் எந்த ஒரு மனிதராலும் எங்கேயும் இம்ஸிக்கப்பட்டவர்களேயல்ல. கலிமாவைக் கூறிய அதே வேளையில்தான் அல்அமீன் என்று கூறிய வாய்கள் பொய்யர் என்று பட்டம்சூட்ட முற்பட்டன. முஹம்மது பிறந்துவிட்டார் என்று கேள்விப்பட்டு ஓர் அடிமையை விடுதலை செய்து சந்தோஷமடைந்த பெரியதந்தை அபூலஹப் தானே பொய்யர் என்று கூறினான். றசூல் (ஸல்) அவர்கள் கலிமாவை நாவினால் கூறினார்களேயன்றி யாரையும் ஏசவோ அடிக்கவோ இம்ஸிக்கவோ இல்லை! அப்படியிருந்தும் அந்த மக்களுக்கு றசூலின்மீது இவ்வளவு அடங்காக் கோபம் ஏற்படக் காரணம்தான் என்ன?

றசூல் (ஸல்) அவர்கள் சிறுபராயத்தில் ஒருநாள் காணாமல் போய்விட்டார்கள். அவர்களை அரும் முயற்சி செய்து கண்டுபிடித்தவர் அபுல்ஹிகம். (அறிவாளிகளின் தந்தை) (அபூஜஹீல்-மடையர்களின் தந்தை) என்ன கூறுகிறார் தெரியுமா?

ஹதீஸ்:

(முஹம்மதே!) நிச்சயமாக நாம் உம்மைப் பொய்யராக்கவில்லை, எனினும் நீர் எதனைக் கொண்டு வந்தீரோ அதனையே பொய்யாய்க் காணுகிறோம் என்று அபூஜஹீல் நபியை நோக்கிக் கூறினான், அப்போது நபியே அவர்கள் கூறுவது உமக்குக் கவலையளிக்கிறது என்பதைத் திட்டமாக நாமறிவோம். அவர்கள் உம்மைப் பொய்யராக்கவில்லை. ஆனால் இவ்வக்கிரமக்காரர்கள் அல்லாஹ்வுடைய வசனங்களையே பொய்யாக்கிப் புறக்கணிக் கிறார்கள் என்ற 6:33 ஆயத்தை அல்லாஹ் அருளினான்.

அறிவிப்பவர்: அலி(றலி) அவர்கள்

ஆதாரம்: திர்மிதி

வேத வசனத்தின்படியும் ஹதீஸின் படியும் அபூஜஹீலும் அவனைச் சேர்ந்தோரும் றசூல் (ஸல்) அவர்களைப் பொய்யரென்று கூறாமல் அவர்களால் தரப்பட்ட விஷயங்களைத்தான் பொய்யாய்க்

கண்டார்கள். பொய்யென்று கூறினார்கள் என்பது தென்படுகிறது. அந்த மக்கள் றசூலை முன் எப்போதும் பொய் கூறியதாய்க் கண்டவர்களல்ல. இது எமது யூகமோ அனுமானமோ அல்ல. குர்ஆன் ஹதீஸுகளின் ஆதாரத்தோடுள்ள உண்மையாகும்.

றசூல் (ஸல்) அவர்கள் கலிமாவைக் கூறி அதை உறுதிப் படுத்த ஆதாரமாய்த் தந்த தலீல்களில் ஒன்றை இங்கே காண்போம்.

குர்ஆன்: 57:3
ஆதியும் அவனே, அந்தமும் அவனே; தோற்றுவதும் அவனே; மறைந்திருப்பவனும் அவனே; அவன் சகலவற்றையும் அறிந்தவன்.

ஹதீஸ்:
முஹம்மதுடைய உயிர் யார்வசம் இருக்கிறதோ அந்த றப்பின் மேல் ஆணையாக நீங்கள் நீர் மொள்ளும் பாத்திரத்தில் கயிற்றைக் கட்டிக் கீழ்ப்பூமியாகிய பாதாளத்துக்கு இறக்குவீர்களானால் அது நிச்சயமாக அல்லாஹ்வில் விழும் என்று கூறி அதன்பின் ஆதியானவன், அந்தமானவன், தோற்றுபவன், மறைந்தவன், எல்லாமறிந்தவன் என்ற 57:3ஆம் ஆயத்தை ஓதினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுறைறா(றலி) அவர்கள்

ஆதாரம்: கீதத்துல் அஜாயிப்

(இந்த ஹதீஸ் லபீது (றலி) அவர்களாலும் கூறப்பட்டுள்ளது. இதைத் தாவீலாத்துன் நஜ்மியா என்ற நூலில் காணலாம்).

கலிமாவையும் அதன் ஆதாரங்களையும் கண்ட அறபு நாட்டு மக்கள் அறபுபாஷையைத் தாய்ப்பாஷையாய்க் கொண்டிருந்தபடியால் அவற்றின் கருத்தைத் தெளிவாய் அறிந்தார்கள். அவர்களுக்கு இலக்கண, இலக்கிய, அகராதி அறிவு அவசியமல்ல. உம்மி நபியால் உம்மிகள் முன்னிலையில் தான் அவை கூறப்பட்டன. உம்மி நபியின் உபதேச வாக்கியங்கள் உணர்த்தும் பொருள் அவர்களுக்குத் தெளிவாய்த் தென்பட்டிருந்தாலும் அதை அவர்களால் ஏற்க முடியவில்லை.

ஏனென்றால் நபியின் சொல்லும் கருத்தும் தங்கள் வாழ்வில் கண்டறிந்த அனுபவ உண்மைக்கு முற்றும் முரணாகவும் பிழையாகவும் (பொய்யாகவும்) தென்பட்டது. நாம் அப்போதிருந்திருந்தால் எமக்கும் பிழையாய்ப் பொய்யாய்த்தான் தென்பட்டிருக்கும், ஏனென்றால் நபி கூறிய கலிமாவும் அதன் தலீல்களும் வெளிச்சத்தப் பிரமாணமான "இபாரத்துன்னஸ்" ஸினால் அல்லாஹ் தவிர இலாஹ¨ இல்லையென்றுணர்த்துகின்றன. கருத்துப் பிரமாணத்தினால் "தலாலத்துன்னஸ்"ஸினால் எல்லா இலாஹ¨ம் அல்லாஹ்தான் என்றுணர்த்துகின்றன. முஸ்ரிக்குகள் ஏற்படுத்திக் கொண்ட இலாஹ¨களை அல்லாஹ் அல்லாதவையென்றே நம்பியிருந்தவர்கள். அவர்களில் எவரும் அந்த இலாஹ¨க்களை அல்லாஹ்வாக ஏற்றிருந்ததில்லை. மேலும் நாய், பன்றி முதலாம் நல்ல தீயபொருள்கள் யாவும் அல்லாஹ்தான் என்று இந்தக் கலிமாவும் தலீல்களும் விளக்கம் தருவதுபோல் தென்படுகிறது. இதை அறிவு அனுபவம் எப்படி ஏற்றுக்கொள்ளும்?

இந்த 21ஆம் நூற்றாண்டில் கூட விளக்கம் பெறாத மனிதன் கலிமாவைக் கூறி விளக்கமளிப்போரைப் பொய்யனாய் வழி கெட்டவனாய்க் காணும்போது அக்கால மக்கள் நபிமாரைப் பைத்தியக்காரரென்றும் மூடர்கள் என்றும் கணித்தது ஆச்சரியமல்ல. முற்கால நபிமாரில் சிலரை அக்கால மக்கள் கொலை செய்தார்கள். கொலைசெய்ய முயன்றார்கள். இம்ஸைப்படுத்தினார்கள். நாடு ''கடத்தினார்கள்.'' இன்றுள்ள நிலையும் இதுதான்.

முஸ்ரிக்கீன்களான மக்கள் எப்போதும் எங்கேயும் அல்லாஹ்வையோ அவனுடைய சக்தியை (வல்லமையை)யோ மறுத்ததில்லை என்று குர்ஆன் சாட்சியம் கூறுகிறது.

குர்ஆன்: 10:31

(நபியே!) நீர் அவர்களை நோக்கி வானத்திலிருந்தும், பூமியிலிருந்தும் உங்களுக்கு ஆகாரமளிப்பவன் யார்? உங்களுடைய கேள்விக்கும் பார்வைக்கும் உரிமையாளன் யார்? இறந்தவற்றிலிருந்து உயிருள்ளவற்றையும், உயிருள்ளவற்றிலிருந்து இறந்தவற்றையும்

வெளிப்படுத்துபவன் யார்? சகல காரியங்களையும் திட்டமிட்டு நடத்துபவன் யார்? என்று கேட்பீராக. அதற்கவர்கள் ''அல்லாஹ்தான்'' என்று கூறுவார்கள்; ''அவ்வாறாயின் நீங்கள் பயப்பட வேண்டாமா?''என்று கேட்பீராக.

குர்ஆன்: 23:86,87
ஏழு வானங்களைப் படைத்தவனும் கனம் தங்கிய அர்ஷை உண்டாக்கியவனுமாகிய றப்பு (நாயகன், இறைவன்) யார்? என்று (அந்த முஸ்ரிக்கீன்களைக்) கேட்பீராயின் ''அல்லாஹ்''தான் என்று அவர்கள் கூறுவார்கள்.

குர்ஆன்: 29:61
வானங்களையும், பூமியையும் படைத்தவன் யார்? சூரியனையும், சந்திரனையும் தன் திட்டப்பிரகாரமே நடக்கச்செய்தவன் யார்? என்று நீர் அவர்களைக் கேட்பீராயின் நிச்சயமாக ''அல்லாஹ்'' தான் என்று கூறுவார்கள்; அவ்வாறாயின் அவர்கள் எங்கு வெருண்டோடுகின்றனர்.

குர்ஆன்: 43:9
வானங்களையும், பூமியையும் படைத்தவன் யார்? என்று நீர் அவர்களைக் கேட்டால் அஸீஸும் அலீமுமாகிய ''அல்லாஹ்'' தான் அவற்றைப் படைத்தான் என்று அவர்கள் கூறுவார்கள்.

இவைபோல் குர்ஆன் ஹதீஸுகளில் முஸ்ரிக்கீன்களை முன்னோக்கிக் கூறப்பட்ட அத்தனை ஆயத்துகளையும் ஹதீஸ்களையும் ஒன்றுசேர்த்துப் பாருங்கள். அந்த முஸ்ரிக்கீன்கள் சர்வவல்லமையுமுள்ள சிருட்டிகர்த்தாவான றப்பை, அல்லாஹ்வை முழுமனதாக ஈமான் (விசுவாசம், நம்பிக்கை)கொண்டு தான் இருந்திருக்கிறார்கள். அது மட்டுமா? அந்த இறைவன், அல்லது அல்லாஹ் என்பவன் ஒருவனே என்றும் தான் ஈமான் கொண்டிருந்திருக்கிறார்கள். இது குர்ஆன் தரும் சாட்சியம்.

மெய்தான் இந்த முஸ்ரிக்கீன்கள் விக்கிரகங்களை அல்லாஹ்வாக நம்பினார்கள் என்று நாம் கூறலாமா? முடியாது. விக்கிரக வணக்கம்தான் இவர்களை முஸ்ரீக்காக மாற்றியதென்று கூறலாமா? அதுவும் முடியாது விவரம் பின்னால் தருவேன்.

அல்லாஹ், நாயன், ஒருவனேயென்றும் அவன் சர்வ வல்லமையுமுடையவன் என்றும் நம்பியிருந்த மக்களையே குர்ஆனில் முஸ்ரிக்கீன்கள் என்று இறைவன் கூறுவது உண்மையெனறால் வணக்கத்துக்குரியநாயன் யாருமில்லை அல்லாஹ்வைத் தவிர என்று கூறும் மனிதனுக்கும் அந்த முஸ்ரிக்குவிற்கும் இடையில் என்னதான் ஈமானில் வித்தியாசமிருக்கிறது? இருவரின் ஈமானும் ஒரே அடிப்படைக் ''கொள்கையுடையதுதான்.''

அந்த முஸ்ரிக்கீன்களும் இன்றுள்ள முஸ்ரிக்கீன்களும் அல்லாஹ் தவிர இலாஹ் இல்லையென்ற கலிமாவையும் அதன் தலீல்களையும் எதிர்க்கவும் புரட்டவும்தானே செய்கிறார்கள். எல்லா இலாஹ்ம் அல்லாஹ்தான் என்று கூறுகிற றசூல் அந்த இலாஹ்களுக்கு இபாதத்து செய்ய வேண்டாம் என்றும் கூறுகிறார். ஆகவே, இவர் ஒரு பைத்தியம்தான் என்று முடிவு கட்டினார்கள். இன்று முஸ்ரிக்குகளின் கொள்கையில் ஊறிய ஒருசில லேபல் முஸ்லீம்கள் குர்ஆனுக்கு மாறாக ஓர் புரட்டலைக் கையாளுகிறார்கள். எப்படியென்றால் விக்கிரகங்களை அவர்கள் நாயன்களாய் (அல்லது அல்லாஹ்களாய்) ஏற்றுக் கொண்டதாலும் அவற்றை வணங்கியதாலும்தான் குர்ஆனில் அவர்களை முஸ்ரிக்கென்று இறைவன் கூறுகிறான் என்றும் நாங்கள் ஒரே இறைவனை ஏற்றுக்கொண்ட தோடு விக்கிரகவணக்கம் செய்யாமலிருக்கும் நிலையில் நாங்கள் முஸ்ரிக்கீன்களேயல்ல என்றும் கூறுகிறார்கள். இவர்களின் கூற்று குர்ஆனுக்கு மாறான படுபொய்யாய் இருக்கிறது. அக்கால முஸ்ரீக்குகள் அஸீஸ்ம் அலீமுமான இறைவன் உண்டு என்றும் அவன் ஒருவனேயென்றும் அவன் நித்திய ஜீவனுடையவனென்றும் படைத்தல், காத்தல், அழித்தல் முதலாம் சகல சக்தியும் அவனுடையதேயென்றும் ஒப்புக் கொண்டுதான் இருந்திருக்கிறார்கள். இந்த வல்லமையுள்ள அல்லாஹ்வை நெருங்கிச் சேர்வதற்கு உதவியாய் வஸீலாவாய்த்தான் விக்கிரகங்களுக்கு இபாதத்துச் செய்திருக்கிறார்கள். இவர்கள் இலாஹ்களான பௌதீக சூட்சும சிருட்டிகளை எப்போதுமே நாயன்கள், ஆண்டவர்கள், அல்லாஹ்கள் என்று கூறியதே கிடையாது. இதோ குர்ஆனைக் கேளுங்கள்.

குர்ஆன்: 39:3
ஆலிஹத்துகள் (பௌதீக சூட்சும சிருட்டிகளான இலாஹுகள்) அல்லாஹ்விடத்தில் நெருங்கிச் சேர்ப்பதற்காகவேயன்றி நாங்கள் அவற்றுக்கு இபாதத்துச் செய்வதில்லை.

இவ்வாயத்தினப்படி அந்த முஸ்ரிக்கீன்கள் விக்கிரகங்களுக்காக எந்த இபாதத்தையும் செய்யவில்லையென்பதும் அல்லாஹ்வை நெருங்கிச் சேர உதவியாகவே விக்கிரகங்களை எடுத்திருந்தார்கள் என்பதும் தெரிகிறது. அதாவது இந்த முஸ்ரிக்கீன்களின் கூற்றுப்படி அல்லாஹ்வை அண்முவதற்கு உதவியாக விக்கிரகங்களை எடுத்துக்கொண்டு ஸுஜூது செய்தார்கள், வணங்கினார்கள், இபாதத்துச் செய்தார்களேயல்லாமல் அந்த விக்கிரகம் இறைவன்தான் என்று நம்பி அவர்கள் செயல்படவே இல்லை என்பது வெளிப்படையான உண்மை. இந்த உண்மையை மறந்துவிடாதீர்கள்.

குர்ஆன்: 38:5
என்னே! (எல்லா) இலாஹுகளையும் ஒரே இலாஹுதான் என்று ஆக்கிவிட்டாரா? (இந்த முஹம்மது)

குர்ஆன்: 38:7
முன்னுள்ள சமுதாயத்தாரிலும் இதனை நாம் கேள்விப்பட்டதில்லை; இது சிருட்டியேயன்றி வேறில்லை. இது ஓர் ஆச்சரியமான விஷயம்தான்!

முஸ்ரிக்கீன்களான அபூஜஹ்ல்கள் றசூல் (ஸல்) அவர்களால் கூறப்பட்ட கலிமாவும் அதன் தலீல் (ஆதாரம்)களும் அல்லாஹ்வையன்றி இல்லையென்றும் இருப்பது அவனேயென்றும் வலியுறுத்துவதைத் தெளிவாய் விளங்கினார்கள். அவர்கள் இறைவனை அரூபியாய்த்தான் நம்பினார்கள். ஆனால் றசூலின் சொற்கள் இறைவன் அரூபி மட்டுமல்ல ரூபியும்தான் என்று வற்புறுத்துகின்றன. மேலும், கலிமா அல்லாஹ்வையன்றி இலாஹு இல்லையென்று கூறுகிறது. ஆனால் அரூபியான இறைவனையன்றி ரூபியான இலாஹுகள் பல இலட்சாதி இலட்சம் இருக்கும் போதும் அல்லாஹ் தவிர இலாஹு இல்லையென்பது ஆச்சரியப்பட

வேண்டிய ஒன்றாகவே தென்பட்டது. ஆகையால்தான் அவர்கள் இதை ஆச்சரியமாய்க் கண்டார்கள். மேலும், நபியின் சொற்கள் அகண்ட பொருளான இறைவனைக் கண்ட பொருளாய்க் கணிப்பது போலவும் தென்படுகின்றன. இதை அம்மக்கள் எப்படி ஏற்றுக் கொள்வார்கள்?

முஷ்ரிக்கீன்களின் நம்பிக்கை (ஈமான்) அல்லாஹ் வேறு சிருஷ்டிகள் அல்லாஹ் அல்லாத வேறுவேறானவை என்பதே. ஆனால், றசூலின் உபதேசம் அல்லாஹ்வையன்றி எதுவுமில்லை, எல்லாமாய்த் தோற்றுவது அவனே என்பது. இங்கே அவசியமானது என்னவென்றால் முஸ்ரிக்கீன்களின் கொள்கைக்கு றசூலின் கொள்கை நேர் முரணானது என்பதே. இதை நாம் நினைவில் இருத்திக்கொள்ள வேண்டும்.

இன்னொரு விஷயம் என்னவென்றால் நம்மிடையேயுள்ள எத்திவைக்கும் கூட்டமும் அவர்களோடுள்ள சில உலமாக்களும் கலிமாவின் பொருள் எவருக்கும் தெரியாதென்றும் அதை அல்லாஹ் மட்டும்தான் அறிவான் என்றும் கூறுகிறார்கள். மக்கள் அறிந்து கொள்ள முடியாத ஓரு வசனத்தை மக்களிடம் கூறும்படி இறைவன் ஏன் கூறவேண்டும் என்பதை அவர்கள் சிந்திப்பதே இல்லை. இன்னும் சிலர் கலிமாவின் உண்மையைப் பாமர மக்களிடையே கூறவே கூடாதென்று ஊளையிடுகிறார்கள். இவையெல்லாம் வரட்டு வாதமும் சிதறிய சிந்தனையின் விளைவுமாகும். இம்மக்கள் அல்லாஹ்வையும் றசூல்மார்களையும் மடையர்களாய்க் காண்கிறார்கள் போலும். கலிமாவின் பொருளை எல்லோராலும் விளங்க முடியும். ஆயினும் எல்லோரும் உண்மையோடு உறுதியாய் நின்று கொள்ளமாட்டார்கள் என்பது உண்மைதான். இதற்குக் காரணம் வஹ்மு என்ற பேதபுத்தியே.

அல்லாஹ்வுடன் அவனல்லாதவையும் உண்டு என்று மனிதன் அறிவீனத்தால் நம்பியுள்ள குருட்டு நம்பிக்கையை மாய்ததொழித்து மனிதனை மனிதனாய் மாற்றிவைப்பதற்காகத்தான் கலிமாவையும் நபிமாரையும் இறைவன் அனுப்பியிருக்கிறான்.

அல்லாஹ்வுடன் அவனல்லாதவையும் உண்டு என்று நம்பும் சுத்தமான ஷிர்க்குத்தான் உலகிலுள்ள தீமைகளுக்கெல்லாம் ஆணவேராய் இருக்கிறது. இத்தீமைகளை அழித்தொழித்து மனிதன் சாந்தி சமாதானத்துடன் வாழ்க்கையை இம்மையிலும் மறுமையிலும் பெறவேண்டுமென்பதற்காகத்தான் ஷிர்க்கிற்கெதிரான தௌஹீதை மக்களிடையே பரப்பும்படி இறைவன் நபிமாரை ஏவினான். இதைப் பகுத்தறிவு தொழிற்பாடடையாத மக்கள் விளங்கிக்கொள்ள முடியாமையால் தௌஹீது என்பது மக்களுக்கு நஞ்சு போன்றது என்று நம்புகிறார்கள். தௌஹீதை விளக்கும் மக்களைக் கொன்றொழித்தார்கள். இக்காலமும் இந்த நிலையில்தான் தென்படுகிறது.

குர்ஆன்: 37:35,36

''அல்லாஹ் தவிர இலாஹு இல்லையென்று'' அவர்களுக்குக் கூறப்பட்டால், நிச்சயமாக அவர்கள் கர்வங்கொண்டு என்னே! நாங்கள் பைத்தியம் கொண்ட ஒரு கவிவாணருக்காக எங்களுடைய இலாஹுகளை மெய்யாக விட்டுவிடுவோமா?

இவ்விதமான ஆயத்துகளின்படி அந்த முஸ்ரிக்கீன்கள் இலாஹு என்றால் தங்களால் வஸீலா என்ற முறையில் வணங்கபபட்டு வந்த பௌதீக சூட்சும சிருட்டிகள்தான் என்பதைத் தெளிவாக அறிந்தே இருந்தார்கள் என்பது வெளிப்படையாகவே தென்படுகிறது. இதை மக்களிடம் மூடிமறைக்க வேண்டிய அவசியமே கிடையாது. இலாஹு என்பது ஒருமைச்சொல். ஆலிஹத் என்பது பன்மைச்சொல்.

அந்த இலாஹுகளை வணக்கத்துக்குரிய நாயனாக அல்லது வணக்கத்துக்குரிய அல்லாஹ்வாக அவர்கள் ஏற்கவில்லை. இலாஹுகளை இறைவனிடம் நெருங்கிச்சேர வஸீலாவாகத்தான் வைத்துக் கொண்டிருந்திருக்கிறார்கள். இந்த முஸ்ரிக்கீன்களின் கொள்கையில் ஊறியுள்ள லேபல் முஸ்லீம்களான சிலர் தொழுகையென்ற "ஸலாத்தை" வஸீலாவாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்விரு கூட்டத்துக்குமுள்ள வித்தியாசம்

வணங்கும் முறையில் மட்டும்தான். இரு கூட்டத்தாரின் கொள்கையும் ஒன்றேதான்.

நபிகள் கலிமாவைக் கூறியபோது அந்த முஸ்ரிக்கீன்கள் கலிமா கூறும் உண்மையைத் தங்களனுபவத்துக்கு முரணாய் கண்டு மறுத்தது போலவே இன்றுள்ள லேபல் முஸ்லீம்களும் மறுக்கிறார்கள், எதிர்க்கிறார்கள். அதுமட்டுமா? இறைவேதமான குர்ஆனின் விவரங்களைப் புரட்டி மூடிமறைக்கவும் முற்படுகிறார்கள். இககலிமாவின் உண்மையான விளக்கம் இந்துக்களின் வேதாந்த மதத்திலுள்ளது என்றும் கூறிப் பாமர மக்களை இருளில் தட்டலையும்படி செய்கிறார்கள். இந்துக்களுக்கென்றோ அறபிகளுக்கென்றோ ஒரு வேதம் கிடையாதென்பதும் ஆதம் (அலை) அவர்கள் காலம் முதல் இறுதிநாள் வரையிலுமுள்ளது இஸ்லாம் என்ற ஒரேயோரு தீன் தான் என்பதும் இந்த அறிவீனர்கள் அறிந்து கொள்ளாத ஒரு விஷயம்தான். மனிதனின் அறிவு வளர்ச்சிக்கேற்றபடி ஒரு வேதம் நாலு பகுதிகளாய் அருளப்பட்டிருக்கிறது. இந்த நான்கு (வேதம்) பகுதிகளுக்கும் அடிப்படை தௌஹீதுக் கலிமாவேயாகும். இதை யாரால் மறுக்க முடியும்? உலகிலுள்ள மற்றெல்லா வேதங்களும் மனிதர்களின் கற்பனையால் உருவானவைதான். ஹிந்துக்களால் வேதாந்தமதம் என்று கூறப்படுவது நபிமாரால் தரப்பட்ட வேதங் களின் அடிப்படையைக் கொண்டு அவரவர் அறிவுக்கேற்றபடி இடைச் செருகல்கள் புகுத்தப்பட்டு வேதாந்தமதம் என்று காட்சியளிக்கிறதேயல்லாமல் இந்துக்களுக்கென்று ஒரு வேதாந்த மதமோ வேறு மதங்களோ கிடையாது.

நாம் இங்கே தந்த உண்மையை, "மனமும் அமைதியும்" என்ற நூலிலும் டாக்டர் டி. எ. எம். பி. மகாதேவன் எம். ஏ. பி. எச்டி (தத்துவப் பேராசிரியர்) அவர்களால் எழுதப்பட்ட "அத்துவிதத்துவம்" என்ற நூலிலும் இவைபோல் இன்னும் பல நூற்களிலும் தெளிவாய்க் காணலாம். இந்த உண்மையை இந்துக்களே தெளிவாய்க் கூறியுள்ளார்கள். இவற்றையெல்லாம் அறியாமல் இருந்துகொண்டு மக்களை மருட்டி உண்மையைப் பொய்யாயும் பொய்யை உண்மையாயும் புரட்டிக் காட்டுவதும் உண்மையை உணர்த்தும் மக்களை மனித சமூகத்தின்

துரோகிகளாய்க் காண்பதும் ஏன்? அறிவு வளர்ச்சியின்மையும் "றியா" என்ற மேலெண்ணமும் வரட்டுக் கௌரவமும்தான்.

மனித வாழ்வில் நாம் காணும் ஒவ்வொரு பொருளும் தனித்தனித் தன்மையுடையதாய் இருப்பதைப் பார்க்கிறோம். இவற்றையெல்லாம் ஒன்று சேர்த்து அவையெல்லாம் அல்லாஹ்வைவிட்டு வேறான தனித்தனிப் பொருட்களல்ல என்று கொள்ளுவது தெளிவுபடாத அறிவில் அமையவே அமையாது என்பது நிச்சயமான உண்மைதான். சரிதான் றசூல்(ஸல்) அவர்கள் மட்டும்தான் கலிமாவைக் கூறி மக்களைக் குழப்பத்துக் குள்ளாக்கினார்களா? என்று ஆராய்ந்தால், இல்லவே இல்லை. இதற்குமுன் தோன்றிய 1,24,000 நபிமார்களும்தான் இந்த வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். நபிமார்களுக்குப்பின் தோன்றிய அவ்லியாக்களுக்கும் இதே வேலைதான் இருந்திருக்கிறது. இந்த நல்லடியார்கள் மக்களிடையே புகழ்பெற, பொருள்பெறத்தான் இந்த வேலையில் ஈடுபட்டார்களா? இல்லை. மனிதனை மனிதனாக வாழ வைக்கவேண்டும் என்பதற்காகத்தான் இறை ஏவலோடு இவ்வேலையில் இறங்கியிருக்கிறார்கள். இவ்விடத்தில் எமது ஆராயும் அறிவை நாம் கொஞ்சம் செயல்படுத்துவோம். றசூல்மார்கள் நபிமார்கள் உலக மக்களுக்காக இறைவனிடமிருந்து கொண்டு வந்த செய்தி தான் என்ன? என்பதை நோக்குவோம்.

குர்ஆன்: 7:59

திடமாக நூஹுநபியை அவருடைய ஜனங்களிடம் அனுப்பினோம்; அவர் என் ஜனங்களே! (கவுமுகளே!) நீங்கள் அல்லாஹ்வுக்கே இபாதத்துச் செய்யுங்கள், அவனல்லாத யாதொரு இலாஹும் இல்லை: உங்களுக்கு மகத்தான ஒரு நாளின் வேதனைக்குப் பயப்படுகிறேன் என்று கூறினார்.

குர்ஆன்: 7:65

ஆதுக்கூட்டத்தாரிடம் அவர்களின் சகோதரர் ஹூது நபியை அனுப்பினோம். அவர் என் கவுமுகளே! நீங்கள் அல்லாஹ்வுக்கே இபாதத்துச் செய்யுங்கள்; உங்களுக்கு அவனல்லாத யாதொரு இலாஹும் இல்லையென்று கூறினார்.

குர்ஆன்: 7:73

ஸமூதுக் கூட்டத்தாரிடம் அவர்களின் சகோதரர் ஸாலிஹுு நபியை அனுப்பினோம். அவர் என் கவுமுகளே! நீங்கள் அல்லாஹ்வுக்கே இபாதத்துச் செய்யுங்கள்; உங்களுக்கு அவனல்லாத யாதொரு இலாஹும் இல்லையென்று கூறினார்.

குர்ஆன்: 7:85

மத்யன் கூட்டத்தாரிடம் அவர்களின் சகோதரர் ஷுஜபு நபியை அனுப்பினோம். அவர் என் கவுமுகளே! நீங்கள் அல்லாஹ்வுக்கே இபாதத்துச் செய்யுங்கள்; உங்களுக்கு அவனல்லாத யாதொரு இலாஹும் இல்லையென்று கூறினார்.

(இவை போன்ற மற்றும் ஆயத்துகளையும் நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் ஆராயுங்கள்.)

குர்ஆன்: 41:43

உமக்கு முன்வந்த றசூல்மார்களுக்குக் கூறப்பட்டது எதுவோ அதனையன்றி உமக்குக் கூறப்படவில்லை.

(இந்த ஆயத்து றசூல் (ஸல்) அவர்களை முன்னோக்கிக் கூறப்பட்டதாகும).

குர்ஆன்: 21:25

உமக்கு முன்னர் நாம் அனுப்பிய தூதர்களுக்கெல்லாம் ''நிச்சயமாக என்னைத் தவிர வேறு இலாஹுு இல்லை, எனக்கே இபாதத்துச் செய்யுங்கள்'' என்று நாம் வஹி அறிவிக்காமலில்லை.

நாம் தந்த இவ்வேதவசனங்களைத் தெளிந்த அறிவோடு நோக்கிப்பாருங்கள். உலகில் தோன்றிய நபிமார்கள் அனைவரும் இரு விஷயங்களில் ஒன்றுபடுகிறார்கள். ஒரு விஷயம் கொள்கை, மற்றொரு விஷயம் இபாதத்.

இங்கே நாம் பகுத்தறிவைக் கொண்டு நோக்கவேண்டியது என்னவென்றால் அல்லாஹ் தவிர இலாஹுு இல்லை என்பதே நபிமார்களின் கொள்கையாயும், இந்தக் கொள்கையில் நிலைப்படுவதே இபாதத்தாயும் இருக்கிறது என்பதே. இந்தக் கொள்கை மனிதனுடைய அறிவுக்கும் அனுபவத்துக்கும் முரணாய்

இருப்பது இறைவனுக்குத் தெரிந்திருந்தும்தான் சுமார் 1,24,000 நபிமாரைக் கொண்டு இக்கொள்கையை மக்களிடையே இறைவன் வற்புறுத்துகிறான். இது ஏன்? மனிதன் மறதியாளனாய் வாழ்கிறான். ஏதோ ஒன்றை மறந்துவிட்டான். இதை அவன் ஞாபகப்படுத்திக் கொள்ளாவிட்டால் அவன் தன் குறிக்கோளைப் பெறவே முடியாது. ஆகவே இம்மனிதனுக்கு ஞாபகத்தை ஊட்டி வெற்றிபெறச் செய்வதே இறைவனுடைய ஆழிய நோக்கமாகும். முஸ்ரிக்கீன்கள் ஒரே இறைவனை ஏற்றிருந்தார்கள் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். றசூல்மார்கள் இறைவன் ஒருவனுண்டு என்று கூறியிருந்தால் அல்லது இறைவன் ஒருவனே என்று கூறியிருந்தால் அல்லது வணக்கத்துக்குப் பாத்திரமானவன் அல்லாஹ்தான் என்று கூறியிருந்தால், அந்த முஸ்ரிக்கீன்கள் அந்த நபிமாரை அரசர்களாகவே ஆமோதித்திருப்பார்கள். இன்னும் நம் முஸ்லீம் மக்களில் அனேகர் அல்லாஹ் தவிர இலாஹ¨ இல்லை என்பவர்களைக் காபீர்கள் முர்த்தத்துக்கள் என்று ஏன் கூறுகிறார்கள்? அறியாமையும் ஆராய்வின்மையும்தான்.

இவர்கள் குர்ஆனை ஹதீஸை ஆராயாமல் பின்பற்றலில் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். எல்லா மனிதர்களாலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு கொள்கையைக் கொண்டுவர இத்தனை நபிமார், கறாமாத், முஹ்ஜிஸாத், யுத்தம் அவசியமா? தேவையில்லையே. மனித அறிவில் இலகுவாய் அமையாத ஏதோ ஓர் உண்மையை மக்களுக்கு விளக்கிக் காட்டி வழி நடத்துவதற்காகத்தான் இத்தனை நபிமாரையும் நான்கு வேதங்களையும் இறைவன் அருளினான்.

இது இறைவனுடைய பேரன்புதான், இதை நாம் பகுத்தறிவைக் கொண்டு ஆராயாமல் விட்டுவிடுகிறோம். முஸ்ரிக்கான அபூஜஹீலின் கொள்கைக்கு நேர்முரணானதே மு.ஃமீனான றசூலின் கொள்கை என்பதை மறந்துவிடுகிறோம். இதை நுட்பமாய் விளங்கித் தெளிவுபெறாத சில பட்டதாரிகள் கூடத் தற்காலத்தில் அபூஜஹீலின் கொள்கையைத் தௌஹீதாயும் றசூலின் கொள்கையை ஷிர்க்காயும் காண்கிறார்கள். இஸ்லாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது என்பதை நோக்கிப் பாருங்கள். றசூல்(ஸல்) அவர்களுடைய வபத்துக்குப் பின் சுமார் 30 வருடங்கள்

தான் இஸ்லாம் உயிருடன் இருந்திருக்கிறதென்பதும் அதன்பின் காலாகாலம் புரட்டப்பட்டே வந்திருக்கிறதென்பதும் பட்டதாரிகளில் அனேகருக்குத் தெரியாது. இன்று மக்களைச் சீர்திருத்த முயலும் கூட்டங்களில் மிகப் பெரும்பாலானவை முஸ்ரிக்கீன்களின் கொள்கையிலுள்ளவைதான்.

வேதத்தை ஆராயும் திறமையும் அவகாசமும் பெரும்பாலாருக்கு இல்லாமல்தான் இருக்கிறது. உண்மையைக் கண்டறிய விரும்பினால் அந்த விருப்பம் உண்மையாகவும் இருந்தால் அதற்குரிய அறிவையும் சந்தர்ப்ப சூழ்நிலையையும் இறைவன் தந்து ஹிதாயத்துச் செய்வான் என்பது நிச்சயம். அபூஜஹீலின் கொள்கையை மனதில் இருத்திக் கொண்ட மனிதன் "லலாலத்தில்" மாட்டிக் கொண்டிருக்கிறான் என்பதை அவன் அறிவதே இல்லை.

இவ்வளவு தூரமும் மிகக்குறுகலாய்த் தந்த விவரப்படி இஸ்லாத்தில் விதிக்கப்பட்ட கொள்கை எது? அதற்கு நேர்மாறான ஷிர்க் என்னும் கொள்கை எது? என்பதை நாம் சக்குச் சந்தேகமில்லாமல் அறிய வேண்டியதாய் இருக்கிறது. அப்படியறிந்து ஈமான் கொள்ளாவிட்டால் நாம் நஷ்டவாளராய் மாற்றமடைவோம் என்பதை நாம் உணரவேண்டும். முதலில் ஷிர்க் என்றால் என்ன? என்பதைக் கண்டறிவோம். குர்ஆன் ஹதீஸுகளையே நீதிபதியாய்க் கொள்வோம். உண்மையைக் கண்டறிய விரும்புகிற மக்கள் தெளிவுபெறும் வரையிலும் எந்த ஒரு பக்கமும் சாராமல் நடு நிலைமையில் நீதிபதியாய் இருந்து ஷிர்க்கையும் தௌஹீதையும் சீர்தூக்கிப் பார்த்து முடிவுபெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குர்ஆன் ஹதீஸுகளை நீங்கள் ஏற்றுக் கொண்டவர்களாய் இருந்தால் நான் தரும் விளக்கத்தைச் சிந்தனை செய்து தெளிவு பெறுங்கள். உங்களறிவுக்குக் குர்ஆன் ஹதீஸுகள் பிழையாய்த் தென்பட்டாலும் உண்மையை அறியும் வரையிலும் அவற்றை ஒதுக்கித்தள்ளிவிடாமல் பகுத்தறிவுக்கு வேலை கொடுங்கள். பகுத்தறிவு மட்டும் போதாது. சிந்தனையும் வேண்டும்.

இணை - ஷிர்க் என்பது என்ன?

குர்ஆன் ஹதீஸுகளை மிகமிக நுட்பமாய் ஆராய்ந்தால் மனிதனால் செய்யப்படும் பாவங்கள் எல்லைமீறியவையாய் இருபபினும் அவை இறைகிருபையால் மன்னிக்கப்படலாம் என்பதும், ஷிர்க் என்பது இறைவனால் மன்னிக்கப்படாத குற்றம் என்பதும் தென்படுகிறது. அனேக ஆதாரங்கள் தரலாம். ஒன்றை மட்டும் பார்ப்போம்.

குர்ஆன்: 4:116
நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைப்பதை (ஷிர்க்கை) மன்னிக்கவேமாட்டான்; அதனையல்லாத (குற்றத்)தைத் தான் விரும்பியவர்களுக்கே மன்னிப்பான்; ஆகவே எவனேனும் அல்லாஹ்வுக்கு இணைவைத்தால் அவன் வெகுதூரமான வழிகேட்டில்தான் இருக்கிறான்.

இதைப்போன்ற பல ஆயத்துகள் ஹதீஸுகள் இருக்கின்றன. ஷிர்க் என்பது இறைவனால் மன்னிக்கப்படாத குற்றமாய் இருப்பதால் நிச்சயமாக நாம் அந்தச் ஷிர்க்கில் இருந்தும் விடுபட வேண்டியவர்களாய் இருக்கிறோம். ஆயினும் இணை ஏற்படுத்தல் என்றால் விக்கிரகத்தை உருவாக்கி வணங்குதல் என்றுதான் எமது வழிகாட்டிகள் நமக்கு விளக்கம் தந்திருக்கிறார்கள். இன்னும் ஷிர்க் (இணைவைத்தல்), குபிர் எல்லாம் ஒரே விஷயம்தான் என்றும் நாம் கற்பிக்கப்பட்டிருக்கிறோம். நம்மில் பெரும்பாலாருக்கு ஷிர்க் அல்லது இணைவைத்தல் என்றால் என்ன? என்பதுகூட இதுகால வரையிலும் தெரியாமலே இருக்கிறது.

குர்ஆனையும் ஹதீஸுகளையும் ஆராய்ந்தால் அவற்றில் ஷிர்க்குக்குரிய முக்கிய காரணம் ஒன்றும் கிளைக்காரணங்கள் ஐந்தும் தென்படுகின்றன. அந்த முக்கிய காரணம் நீக்கப்படும்போது துணைக்காரணங்கள் யாவும் நீங்கிவிடும் என்பதும் தென்படுகிறது. அக்காரணங்களில்

1ஆவது: விக்கிரகத்தையும் சூட்சும சிருட்டிகளையும் அதாவது சிருட்டியைச் சிருட்டி வணங்குவது. ஸுஜூது செய்வது (சிருட்டிக்காகச் சிருட்டி இபாதத் செய்வது)

2ஆவது: பௌதீக விக்கிரகங்கள் சூட்சும சிருட்டிகளான இலாஹுகள் அல்லாஹ்விடத்தில் ஸபாஅத்தைத் தேடித்தரும் என்று நம்புவது. அதாவது சிருட்டிகள் உதவி செய்யும் அல்லது உதவிபெற உதவி செய்யும் என்று நம்புவது,

3ஆவது: சிருட்டிகளுக்கு இலாஹு என்று அல்லது பன்மையில் ஆலிஹத் என்று பெயர் சூட்டுவது.

4ஆவது: இறைவன் உருவமுடையவன் என்று (தஸ்பீஹில்) உருவத்தில் மட்டும் இறைவனைக் கட்டுப்படுத்துவது.

5ஆவது: இலாஹுகளான பௌதீக சூட்சும சிருட்டிகள் லாபம், நஸ்டம், நன்மை, தீமை போன்றவற்றைக் கொடுக்கும் என்று நம்புவது.

6ஆவது: அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாதவையும் உண்டு என்று நம்புவது. அதாவது இறைவன் வேறு என்றும் சிருட்டிகள் இறைவனல்லாதவையென்றும் நம்புவது.

இந்த ஆறு கொள்கைகளும் அல்லது நம்பிக்கைகளும் தான் குர்ஆன் ஹதீஸுகளின் விவரப்படி ஷிர்க்காகத் தென்படுகின்றன. இன்னும் நுட்பமாய் ஆராய்வுக்கெடுத்தால் இவற்றில் ஒன்று மட்டுமே ஷிர்க்கை உருவாக்கும் ஆணிவேராயும் மற்ற ஐந்தும் ஷிர்க்கை உறுதிப்படுத்த உதவும் பக்கவேர்களாயும் இருக்கின்றன. இவ்விவரத்தைக் குர்ஆனைக் கொண்டே நோக்குவோம். இப்போது விக்கிரகங்களை அல்லது சூட்சுமசிருட்டிகளை வணங்குவது, ஸுஜூது செய்வது ஷிர்க் என்பதற்கு ஆணிவேராய் இருக்கிறதா? கிளைவேராக இருக்கிறதா? என்பதைக் காண்போம். இது ஆணிவேரல்ல கிளைவேர்தான் என்றும் இந்த விக்கிரக வணக்கத்தை நீக்கிக் கொண்டாலும்கூட ஷிர்க் இருந்து கொண்டேயிருக்கும் என்பதும் தென்படுகிறது. எப்படியென்றால்.

குர்ஆன்: 2:34

மலக்குகளை நோக்கி, ''ஆதமுக்குச் ஸுஜூது செய்யுங்கள்'' என்று (இறைவன்) கூறியபோது இப்லீஸைத் தவிர யாவரும் ஸுஜூது செய்தார்கள். அவனோ பெருமை கொண்டு விலகிக் காபீராகிவிட்டான்.

இப்லீஸ் நெருப்பினால் படைக்கப்பட்டவன். ஜின் இனத்தைச் சேர்ந்தவன். மலக்குகளை நோக்கியே இறைவன் ஸுஜூது செயயும்படி ஏவினான். இவ்விடத்தில் ஒரு நுட்பம் உண்டு. இப்லீஸ் ஜின் இனத்தைச் சேர்ந்தவனாயிருந்தாலும் அவன் தன் அமல்களினால் மலக்குகளின் பதவியில் இருந்தான் என்று நாம் எடுத்துக் கொண்டால் இவ்விடத்தில் போதுமானது. இதை விவரிக்க இவ்விடம் பொருத்தமல்ல. இப்லீஸின் விவரத்தைப் பின்னால் நோக்குவோம்.

ஆதம் (அலை) அவர்கள் எம்மைப் போன்ற ஒரு சிருட்டிதான் என்பதிலும், ஷைத்தான் அல்லது இப்லீஸ் என்பவனும் எம்மைப்போல் ஒரு சிருட்டியே என்பதிலும் எவருக்கும் சந்தேகமே இல்லை. ஆதம் (அலை) அவர்களுக்குச் ஸுஜூது செய்த மலக்குகளை இறைவன் குர்ஆனில் எவ்விடத்திலும் முஸ்ரீக்குகள் என்றோ இணைவைப்பவர்கள் என்றோ கூறவில்லை. ஹதீஸுகளிலும் கிடைக்கவே கிடையாது. இந்த ஸுஜூதில் ஈடுபடாமல் விலகிக் கொண்ட இப்லீஸ் தான் இறைவனுடைய லஹ்னத்துக்கு ஆளாகியிருக்கிறான் இந்த இப்லீஸைக்கூட இறைவன் காபீர் என்று கூறினானேயல்லாமல் அவனை முஸ்ரீக் என்று கூறவேயில்லை. நாம் தந்த 2:34ஆம் ஆயத்தை மீண்டும் ஒருமுறை பாருங்கள்.

ஆதம் (அலை) அவர்களை மலக்குகள் ஸுஜூது செய்தார்கள் என்று அறிவிக்கிற அதே குர்ஆன் யூசுபு (அலை) அவர்களை ஒருசில மக்கள் ஸுஜூது செய்தார்கள் என்று அறிவிக்கிறது. இதைப் போலவே யஹ்கூபு (அலை) அவர்களையும் சில மக்கள் ஸுஜூது செய்ததாக எமது குர்ஆன் விவரம் தருகிறது. இவ்விதம் சிருட்டிகளை ஸுஜூது செய்த மற்றும் சிருட்டிகளைக் குர்ஆனில் இறைவன் காபிரீன்கள் என்று கூறுகிறானேயன்றி

அவர்களை எவ்விடத்திலேனும் முஸ்ரிக்கீன்கள் என்று கூறவே இல்லை.

குர்ஆன்: 12:100

பின்னர் அவர் தன் தாயையும் தந்தையையும் சிம்மாசனத்தின் மீது உயர்த்தினார். அவருக்கு அவர்கள் அனைவரும் சிரம்பணிந்து ஸுஜூது செய்தார்கள்.

இதில் ஸுஜூது செய்தவர்களை இறைவன் முஸ்ரீக்கீன்கள் என்றோ காபீர்கள் என்றோ கூறவில்லை.

குர்ஆனின் சில ஆயத்துகள் இந்த ஸுஜூதில் ஈடுபட்டோரைக் காபீர் என்றும் சில ஆயத்துகளில் காபீர் என்றோ முஸ்லீம் என்றோ கூறப்படாமலும் விடப்பட்டிருக்கின்றன.

இவ்வாயத்துகளின்படி சிருட்டியைச் சிருட்டி ஸுஜூது செய்வது குபிரேயன்றிச் ஷிர்க்கல்ல என்பது தென்படுகிறது. குபிர் மன்னிக்கப்படலாம். ஆகவே விக்கிரக வணக்கம் ஏன் ஷிர்க்காகிறது என்பதை நாம் இன்னும் ஆராயவேண்டியிருக்கிறது. இன்ஷா அல்லாஹ் ஆராய்வோம். இங்கே நீங்கள் ஒரு சந்தேகம் கொள்ளலாம். அதாவது ஆதம் (அலை), யூசுபு (அலை), யஹ்கூபு (அலை) போன்றோருக்கும் பௌதீக சூட்சும சிருட்டிகளான இலாஹுகளுக்கும் பேதமுண்டேயென்று சந்தேகிக்கலாம். இச்சந்தேகம் வீண் சந்தேகம் தான், ஏனென்றால் சிருட்டி என்ற அடிப்படையில் உயிருள்ளதும் இல்லாததும் சமம்தான். சிருட்டி என்ற அடிப்படைக்கு மூலம் ஒன்றாகவே இருப்பதால் சிருட்டி எல்லாம் ஒரே அடிப்படையிலுள்ள்வைதான்.

ஆதம் (அலை) அவர்களும் அவர்களை ஸுஜூது செய்த மலக்குகளும், யூசுபு (அலை) அவர்களும் அவர்களை ஸுஜூது செய்த மக்களும், யஹ்கூபு (அலை) அவர்களும் அவர்களை ஸுஜூது செய்த மக்களும் விக்கிரகங்களும், அவற்றைச் சுஜூது செய்த மக்களும் சிருட்டிகளே என்பதில் எவரும் சந்தேகப்பட வேண்டியதே இல்லை. சிருட்டியைச் சிருட்டி சுஜூது செய்வது

தகாது என்றிருந்தால் ஆதம் (அலை) அவர்களை ஸுஜூது செய்யும்படி மலக்குகளை இறைவன் ஏவியிருக்கமாட்டான்.

இங்கே மிகப்பல சந்தேகங்களும் கேள்விகளும் நமக்கு ஏற்படுகின்றன. சிருட்டியைச் சிருட்டி ஸுஜூது செய்வது ஷிர்க்கிற்குரியீ முக்கிய காரணமல்ல என்றால் அல்லாஹ்வும் நமது றசூல் (ஸல்) அவர்களும் அவர்களுக்கு முன்னுள்ள நபிமாரும் விக்கிரக வணக்கத்தை ஏன் தடைசெய்தார்கள்? இப்றாஹீம் (அலை) விக்கிரகங்களை ஏன் உடைத்தெறிந்தார்கள்? க.ஃபாவிலிருந்த விக்கிரகங்களை றசூல் (ஸல்) அவர்கள் ஏன் தடைசெய்தார்கள்? விக்கிரக வணக்கம் ஷிர்க்கின் ஆணிவேரல்ல என்பதை ஏற்கமுடியாமல் இருக்கிறதே என்பதுதான் எமது சந்தேகமும் கேள்வியுமாகும். இதற்குரிய சரியான விடையை இன்ஷா அல்லாஹ் நாம் கண்டறிவோம்.

பௌதீக சூட்சும சிருட்டிகளைச் ஸுஜூது செய்யக்கூடாது, வணங்கக் கூடாது என்பதற்குப் பல காரணங்கள் தென்படுகின்றன. அவற்றில்,

1ஆவது காரணம்: வாஜபுல் உஜூது என்று கூறப்படுகிற அல்லாஹ் என்றைக்கும் அழிந்தொழிய முடியாத உண்மைப் பொருளாய் (ஹக்காய்) இருக்கிறது. பௌதீக சூட்சும இலாஹுகளான சர்வ சிருட்டிகளும் தோன்றி மறையும் (ஸிபத்தான) பண்பான ஆதேயமாய் இருக்கின்றன. ஆதேயம் என்பது ஆதாரத்தின் குணமும் தோற்றமுமேயன்றி உண்மையில் பொருளல்ல. அவை வெறும் கற்பிதமான தோற்றங்களாய் இருக்கின்றன, அவை கணத்துக்குக் கணம் மாறுபடுபவையாயும் அழிந்தொழிபவையாயும் தமக்கென்று ஓரு செயலையும் ஆதாரமின்றி நிகழ்த்த முடியாதவையாயும் இருக்கின்றன. ஆகவே ஆதாரத்தையன்றி ஆதேயத்தை வணங்குவதால் பிரயோசனம் பெறமுடியாது. சிருட்டியென்றால் என்ன? என்பதைப் புரிந்து கொள்ளாதோர் இதை விளங்கிக் கொள்வது கடினம்தான்.

2ஆவது காரணம்: வாஜிபுல் உஜூது என்று கூறப்படுகின்ற அல்லாஹ் எல்லை, மட்டுத்திட்டம், காலம், இடம் யாவையும் கடந்து நிற்கிற அகண்ட பொருளாய் இருக்கிறான். அவனையன்றி வேறொன்றில்லாத சர்வ வியாபகமானவனாய் இருக்கிறான். சிருட்டிகளோ உஜூது என்ற அகண்ட பொருளுக்கு நேர்மாறான, வெறும் தோற்றமான கண்ட பொருளாய் இருக்கின்றன. ஆகவே சிருட்டியான கண்ட பொருளை வணங்கக் கூடாது. அந்தச் சிருட்டியான இலாஹு அல்லாஹ்தான் என்று எடுத்துக் கொண்டால் சர்வ ஆலங்களிலுமுள்ள சர்வ சிருட்டிகளையும் வணங்கவேண்டி ஏற்படும், இது மனிதனால் முடியக்கூடிய காரியமல்ல. மேலும் சிருட்டியான இலாஹுவை அல்லாஹ்வாக நம்பி வணங்கினால் ஒரு குறிப்பிட்ட ஸுறத்தில் மட்டும் இறைவனைக் கட்டுப்படுத்திய குற்றமும் உண்டாகும். சிருட்டிகளான இலாஹுகள் அல்லாஹ் அல்லாதவையென்றும் அவற்றை வஸீலாவாக எடுத்துக் கொண்டோம் என்றும் வணங்கினால் சிருட்டியான இலாஹுவுக்கு வணங்கும் வணக்கம் அல்லாஹ்வுக்கென்றாகாமல் அல்லாஹ் அல்லாத கற்பனையிலுள்ள இன்னொன்றுக்கென்றாகும். மேலும் அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாதவையும் உண்டு என்ற சுத்தமான ஷிர்க்கில் மூழ்கவேண்டி ஏற்படும். விக்கிரகம் அல்லாஹ் அல்லாதது என்று நம்பி வணங்கினால் அது சுத்தமான ஷிர்க்காகும். அந்த விக்கிரகம் அல்லாஹ்தான் என்று நம்பி அதை வணங்கினால் அந்தச் செயல் குபிராகும். ஆகவே ஷிர்க்கிலிருந்தும் குபிரிலிருந்தும் விடுபடவேண்டுமானால் விக்கிரக வணக்கம் (சிருட்டி வணக்கம்) செய்யவே கூடாது. ஷிர்க் மன்னிக்கப்பட முடியாத குற்றமாயும் குபிர் மன்னிக்கப்படக்கூடிய குற்றமாயும் இருக்கிறது.

3ஆவது காரணம்: இன்ஸான் என்பவனுடைய உண்மைத் தோற்றம் பாதினாயும் அவனுடைய உடல் லாஹிறாயும் இருக்கிறது. இன்ஸான் ரூபியாயும் அரூபியாயும் இருக்கிறான். சிருட்டியான இலாஹு வெறும் ரூபியாய் (நாமமாய்) மட்டும் இருக்கிறது. இன்ஸானையும் மற்றும் சர்வ சிருட்டிகளையும் நோக்கினால் இன்ஸான் சர்வ சிருட்டிகளையும் ஆட்சிபண்ணக்கூடிய உயர்

பதவியுடையவனாய் இருக்கிறான். சிருட்டிகளோ தாழ் பதவியுடையனவாய் இருக்கின்றன. உயர் பதவியிலுள்ள இன்ஸான் தாழ் பதவியிலுள்ள சிருட்டியை வணங்கவே கூடாது.

4ஆவது காரணம்: வணக்கத்துக்கெடுத்துக் கொண்ட சிருட்டியின் தோற்றம் மனதில் பதிந்து கொண்டால் இறை தியானத்தின் போது வெளியாகக்கூடிய சிற்சில சூட்சும காட்சிகள் மனதில் பதிந்திருந்த கற்பனைக் காட்சியைப் போலவே முடியும். உண்மையான "றூயா" "முஸாஹிதா" போன்றவை வெளியாகத் தடையாயும் இருக்கும்.

5ஆவது காரணம்: மேலே காட்டிய நான்கு காரணங்களையும் விட மிக முக்கியமான காரணம் சிருட்டியான இலாஹுவை வணங்குபவன் அந்த இலாஹு இறைவனைச் சமீபிக்கச் செய்யும் என்றும் அது அல்லாஹ் வேயல்ல என்றும் நம்பித்தான் வணங்குகிறான். இதுவோ மிகமிகக் கடினமான ஷிர்க்காக இருக்கிறது. அல்லாஹ்வுடன் சுத்தசூனியமான இல்லாமை உண்டு என்று கொள்வதும் சுத்தமான ஷிர்க்கேயாகும். அதாவது இந்த வணக்கவாளி அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாதவையும் உண்டு என்று நம்புவதே உண்மையான ஷிர்க்காக இருக்கிறது. அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாதவையும்உண்டு என்பதுதான் இணையேற்படுத்தல், ஷிர்க்கு, நித்துகளை உண்டாக்கல் என்று கூறப்படுவது. இதைப் பொறுமையோடு குர்ஆன் ஹதீஸுகளைக் கொண்டு விளங்கியறிய வேண்டும்.

மேலே காட்டிய காரணங்களைவிட இன்னும் சில நுண் காரணங்கள் இருக்கின்றன. இதை இறைவழி செல்லும் நல்லடியார்களேயன்றி ஏனையோர் இலகுவாய் விளங்கிக்கொள்ள முடியாது என்பது உண்மை.

குர்ஆன்: 16:49
வானங்களிலும் பூமியிலுமுள்ள மற்ற ஜீவராசிகளும் அல்லாஹ் வுக்கே ஸுஜூது செய்கின்றன. மலக்குகளும் அவ்வாறே.

இதைப்போல் இன்னும் பல ஆயத்துகள் இருக்கின்றன. இருக்கின்றன. வானத்திலுள்ளோர் பூமியிலுள்ளோர் யாவரும் அல்லாஹ்வையே ஸுஜூது செய்கிறார்கள் என்றால் இவ்விடத்தில் பகுத்தறிவுக்கு ஒரு மயக்கம் தென்படுகிறது. பூமியிலுள்ள மக்களில் மிகமிக அனேகர் விக்கிரகங்களுக்கே ஸுஜூது செய்கிறார்கள். கல், மண், பொன், வெள்ளி போன்றவற்றையும் மிருகங்கள் பறவைகள் படங்கள் கற்பனைப் படங்கள் போன்றவற்றையும் மனிதன் ஸுஜூது செய்து கொண்டிருக்கும் போதும் யாவரும் அல்லாஹ்வுக்கே ஸுஜூது செய்கிறார்கள் என்று இறைவன் கூறுவது, அல்லாஹ் அல்லாதவையே சிருட்டிகள் என்றால் பிழையாய் முடியுமல்லவா? குர்ஆன் கூறுவது பொய்யென்றாகுமல்லவா? விஷயம் அப்படியல்ல, குர்ஆன் கூறுவதே உண்மை, "வலில்லாஹியஸ்ஜுத்" என்று இறைவன் கூறியிருப்பது, எதை எதை எவர் எவர் எப்படி எப்படி ஸுஜூது செய்தாலும் அந்த ஸுஜூது அல்லாஹ்வுக்கேயன்றி இல்லை யென்றுதான் விவரம் தருகிறது.

உஜூது என்ற குணியை விட்டு அதன் குணமான சர்வ ஆலங்களும் வேறுபட முடியாது. குணியும் குணமும் ஒன்றே. குணம் லாஹிறாயும் குணி பாதினாயும் இருக்கிறது. ஆகவே லாஹிறான குணத்துக்கு ஸுஜூது செய்பவன் உண்மையில் குணிக்குத்தான் ஸுஜூது செய்கிறான். ஆனால் அவன் குணியைவிட்டுக் குணம் வேறு என்று நம்பியிருப்பதால் அதை அவன் உணர்ந்துகொள்வதே இல்லை. இந்த மனிதன் குணி வேறு குணம் வேறு என்று நம்பிய ஷிர்க்கில் மாட்டிக் கொண்டிருப்பதால் இவனுடைய வணக்கம், ஸுஜூது அங்கீகரிக்கப்படாவிட்டாலும் இவன் செய்த ஸுஜூது அல்லாஹ்வுக்கே என்பதில் எவ்விதச் சந்தேகமுமே கிடையாது. ஸுஜூது செய்யப்பட்ட விக்கிரகம் அல்லாஹ் அல்லாத தனிப்பொருள் என்று இவன் ஈமான் கொண்டிருப்பதால் இவன் செய்த ஸுஜூது இவனுடைய மனோ இச்சைக்காகவே என்றாகும். இது அங்கீகரிக்கப்படமாட்டாது. இவனுடைய ஸுஜூது அல்லாஹ்வுக்கேயன்றி இல்லையென்பது உண்மை. இவனுடைய

ஷிர்க்கின் காரணமாய் அது பிரயோசனம் செய்வதில்லை. ஆகவே இறைவசனம் பொய்யாக முடியாது.

குர்ஆன்: 5:90

விசுவாசிகளே! நிச்சயமாகச் சாராயமும், சூதாட்டமும், விக்கிரக ஆராதனையும், அம்பெறிந்து குறிகேட்பதும், ஷைத்தானுடைய அருவருக்கத்தக்க வேலைகளிலுள்ளவையாகும்; ஆகவே இவற்றிலிருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள். நீங்கள் சித்திபெறுவீர்கள்.

மேலே காட்டிய ஆயத்தின்படி சூதாட்டம், மதுவருந்தல் போன்ற ஒரு குற்றம்தான் விக்கிரக வணக்கம் என்பதைச் சிந்தனை செய்து தெளிவுபெறுங்கள். விக்கிரகம் அல்லாஹ் அல்லாதது என்று நம்பி அதற்கு ஸுஜூது செய்வது சுத்தமான ஷிர்க்காயும் அந்த விக்கிரகம் அல்லாஹ்வின் வெளிப்பாடுகளில் ஒன்று என்று நம்பி ஸுஜூது செய்வது ஷிர்க்கல்லாத குபிராயும் இருக்கிறதென்பதை மறந்துவிடாதீர்கள். ஆனால், விக்கிரக வணக்கத்தை மட்டும் நீக்கிக் கொண்டால் நாம் ஷிர்க்கில் இருந்து விடுபட்டுவிட்டோம் என்று கூறமுடியாது. ஏனென்றால் ஷிர்க் என்பது விக்கிரக வணக்கத்தில் மட்டும் கட்டுண்டிருக்கவில்லை. இது ஷிர்க்கிற்குரிய ஒரு கிளைக்காரணமேயன்றி முழுமுதற் காரணமல்ல. நான் விக்கிரக வணக்கத்தை ஆதரிக்கிறேனென்று மருண்டு விடாதீர்கள். விக்கிரக வணக்கத்தின் தகுதியைத்தான் நான் எடுத்துக் கூறியிருக்கிறேன். விக்கிரக வணக்கத்தை ஆதரிக்கிறேனென்பது கருத்தல்ல.

ஷிர்க்கிற்குரிய 2ஆவது காரணம்

பௌதீக சூட்சும இலாஹுகள் இறைவனிடம் நெருங்கிச் சேர அனுகூலமளிக்கும் அல்லது உதவிசெய்யும், அல்லது உதவி பெற உதவிசெய்யும் அல்லது ஸபாஅத்துச் செய்யும் என்று நம்புவது.

குர்ஆன்: 39:3
"அவர்களை எங்களை அல்லாஹ்வின்பக்கம் சேர்த்துச் சமீபமாக்கும் என்பதற்காகவேயன்றி நாங்கள் ஆலிஹத்துகளுக்கு இபாதத்து செய்வதில்லை"

இது முஸ்ரிக்கீன்களின் கூற்றாகும். இதை ஆராய்ந்தால் இக்கொள்கையும் ஷிர்க்கிற்குரிய முக்கிய காரணமேயல்ல. இதுவும் ஒரு கிளைக்காரணமாகவே இருக்கிறது. எப்படியென்றால் அல்லாஹ் வேறு றசூல்வேறு என்று நாம் நம்பியிருக்கும் போதும் றசூலின் ஸபாஅத்தில் நாம் ஆதரவு வைக்கிறோம். அல்லாஹ் எவருக்கு அனுமதியளிக்கிறானோ அவர் ஸபாஅத்துச் செய்வார் என்று குர்ஆன் ஹதீஸுகள் விளக்கம் தருகின்றன.

குர்ஆன்: 43:86
அவனையன்றி எவற்றை இவர்கள் அழைக்கிறார்களோ, அவைகள் பணிந்து பேசவும் (ஸபாஅத் செய்யவும்) சக்திபெறா, ஆயினும் எவர்கள் உண்மையை அறிந்து அதனைப் பகிரங்கமாகவும் கூறுகிறார்களோ அவர்களைத் தவிர,

இவ்வாயத்தில் அவ்லியாக்கள் அன்பியாக்கள் யாவரும் ஸபாஅத் செய்யக் கூடியவர்கள் என்பது தென்படவில்லையா? வஹ்ஹாபிகள் தப்லீக் கோஷ்டிகள் றசூலுக்கு அவ்லியாக்களுக்குச்

ஸபாஅத் கிடையாதென்று கூறுவது குர்ஆனுக்கு மாறான படு பொய்யென்பதை இப்போதாவது நம்புங்கள். இவ்வாயத்தின்படி அல்லாஹ் நாடியவர்களுக்குச் ஸபாஅத்துச் செய்யும் உரிமை உண்டு என்பது தெளிவுபடுகிறது. நாம் கொழும்பைச் சென்றடைவதற்கு கார் போன்ற வாகனத்தை எடுத்துக் கொள்கிறோம். அந்தக் கார் கொழும்புக்கு எம்மைக் கொண்டு செல்ல, நெருங்க உதவி செய்யும் என்பதில் எவ்விதச் சந்தேகமும் இல்லை. இது ஷிர்க்கேயல்ல. இதை ஷிர்க்கு என்று எடுத்துக் கொண்டால் வாழ்க்கையை வாழ முடியாது. நீதி மன்றத்தில் நாம் வெற்றி பெறுவதற்காக ஓரு சட்டத்தரணியில் ஆதரவு வைக்கிறோம். இது ஷிர்க்கல்ல. ஓரு உத்தியோகத்தைப் பெறுவதற்காக இன்னோர் உத்தியோகத்தரிடம் ஸபாஅத்தின் ஆதரவு வைக்கிறோம். நான் ஓரு மௌலவியாக வேண்டுமென்பதற்காகச் செட்டிவிக்கட்டில் ஆதரவு வைக்கிறேன். ஓரு மிருகத்தைச் சுட்டுவீழ்த்தத் துப்பாக்கியில் ஆதரவு வைக்கிறோம். எந்த ஓரு சிருட்டியும் இன்னொரு சிருட்டியில் ஆதரவு வைக்காமல் வாழ முடியாது. இயங்கும் சிருட்டியிலோ இயங்காத சிருட்டியிலோ சிருட்டி ஆதரவு வைப்பது ஷிர்க்காகாது. இங்கே ஓரு சந்தேகம். அப்படியானால் குர்ஆன் ஹதீஸ்கள் இதை ஏன் ஷிர்க்காக வர்ணிக்கின்றன?

ஓரு சிருட்டி இன்னொரு சிருட்டியில் ஆதரவு கொள்ளும் போது, அந்தச் சிருட்டி தன்னுடைய சொந்தச் சக்தியினால் எனக்கு உதவி செய்யும் என்று நம்பித்தான் மனிதன் ஆதரவு வைக்கிறான். இந்த நம்பிக்கைதான் ஷிர்க்காக மாற்றமடைகிறது. சிருட்டி என்பது நிறம் தோற்றங்களைக் கொண்ட இறைவனின் கற்பனையான மழ்ஹறாய் இருக்கிறது. அந்தச் சிருட்டியில் வெளியாகும் சக்தி இறைவனுக்குரியதேயன்றிச் சிருட்டிகளுக்குரியதல்ல.

குர்ஆன்: 2:165

சர்வசக்தியும் அல்லாஹ்வுக்கே உரியது.

சிருட்டி என்பது வெறும் பெயர் மட்டும்தான். இறைவன் சொல்லாயும் அச்சொல்லால் உணர்த்தப்படும் பொருளாயும் அச்

சொல்லின் சக்தியாயும் இருக்கிறான். சர்வ ஆலங்களிலுமுள்ள எப்பொருளும் அல்லாஹ்வை விட்டு வேறான தனித்தனிப் பொருடகளேயல்ல. அவற்றில் வெளியாகும் சக்தி இறை சக்தியேயன்றிச் சிருட்டியின் சக்தியல்ல. அதனால் பெறப்படுவது நல்லதேயானாலும் தீயதேயானாலும் அது இறை சக்தியேயாகும். இந்த இறை சக்தி என்ற ஓர்தத்துவத்தைத் தவிர வேறு எந்த ஒரு தத்துவமும் கிடைக்கவே கிடையாது. ஏகவியாபகமாய் உள்ளது ஒரே தத்துவம்தான். தத்துவம் என்றால் உண்மை ஹக்கு என்பதுதான் அதன் பொருள். ஏகத்துவம் என்பதே இஸ்லாத்தின் உயிர். ஏகத்துவக் கொள்கை. தான் இஸ்லாத்தின் கொள்கை. அல்லாஹ் ஒருவன் உண்டு என்றும் அவனல்லாத சிருட்டிகளும் உண்டு என்றும் எடுத்துக் கொண்டால் இது முஸ்ரிக்கீன்களின் கொள்கையாகும். எப்படி? அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாதவையும் உண்டு என்றால் அவை தனித்தனி உண்மையும் தனித்தனிச் சக்தியுமுடையவை என்றாகும். உள்ளது ஒரே தத்துவம் என்பதற்கு மாறாக உள்ளவை பல தத்துவங்கள் என்றாகும். இதுதான் ஷிர்க்கு என்பது. இது மனிதனின் மனோ மருட்சியேயன்றி உண்மையல்ல. கலிமாவைக் கொண்டேயன்றி உண்மையை ஒருபோதும் மனிதன் ஒப்புக் கொள்ளவேமாட்டான். கலிமாதான் புரட்டப்பட்டுச் சுமார் 1400 வருடங்களை நெருங்கியிருக்கும்போது இன்றுள்ள பெரும்பாலான மக்கள் எப்படி அறிவார்கள்?

நாம் எடுத்துக்கொண்ட விஷயத்தில் ஒரு முஸ்லீம் சிருட்டியில் ஆதரவு வைப்பது போலவே ஒரு முஸ்ரீக்கும் சிருட்டியான இலாஹ்வில் ஆதரவு வைக்கிறான். இவ்விரு கூட்டத்தினருக்கும் வோறுபாடு கிடையாது. இங்கே, "லேபல் தப்லீக்" குறிப்பிட்டுக் கூறுகிற ஒரு ஹதீஸை நோட்டமிட்டுப் பாருங்கள்.

செருப்பின் வார் அறுந்து போனாலும் அல்லாஹ்விடத்தலேயே உதவி தேடுங்கள். (இதுதான் ஹதீஸ்)

இது உண்மையான ஒரு ஹதீஸ்தான். ஆனால் அல்லாஹ் அல்லாதவையும் உண்டு என்று கூறுகிற முஸ்லீம்களால் இந்த ஹதீஸின்படி வாழ முடியுமா? முடியவே முடியாது. இவர்கள் ஆயிரம் வருடம் பிரார்த்தனை செய்தாலும் இறைவன் அர்ஷைவிட்டு இறங்கி வந்து செருப்பின் வாரைத் தைத்துக்கொடுக்கப்போவதே இல்லை. மனிதனோ, மலக்கோ, ஜின்னோ அல்லது வேறு ஏதோ ஒரு சிருட்டிதான் இந்த வேலையைச் செய்து கொடுக்கவேண்டும். ஆகவே இவர்கள் பேசுவது வாய் வேதாந்தமேயன்றி வாழ்க்கையில் கடைப்பிடித்தொழுகக்கூடிய வேதாந்தமல்ல.

ஆனால் ஒரு மூ.்மீனால் இந்த ஹதீஸை வாழ்க்கையில் அமைத்துக் கொள்ள முடியும். மூ.்மீன் கலிமாவையும் அதன் தலீல்களையும் கொண்டு அஹதாய், ஏகமாய் இருப்பது ஒரேயோர் உண்மைப் பொருளையும் அதன் குணா குணங்களையும் தவிர வேறில்லையென்று அவர் ஈமான் கொண்டிருக்கிறார். அவர் எப்பொருளை எந்தச் சிருட்டியைக் கண்டாலும் அச்சிருட்டி அல்லாஹ்வின்(மழ்ஹர்) அல்லது வெளிப்பாடு என்றும் அந்த மழ்ஹரில் வெளியாகும் சக்தி நல்லதாயினும் தீயதாயினும் அல்லாஹ்வின் சக்தியே என்றும் நம்புகிறார். சம்மானிடத்தில் செருப்பைத் தைத்துக் கொள்கிறார். சம்மான் என்ற நாமமும் அதன் தோற்றமும் அவரிடத்தில் வெறும் கற்பனையென்றுணரப்பட்டிருப்பதால் அவர் அல்லாஹ்விடத்தில் தான் உதவி தேடினார், பெற்றார், அவ்வுதவியைச் செய்தவனும் அவன்தான். ஆகவே இந்த மூ.்மீன் கூறுவதுதான் குர்ஆன் ஹதீஸுகளால் தரப்பட்ட உண்மையாய் இருக்கிறது. வாழ்வில் அமுல்செய்யக் கூடியதாய் இருக்கிறது. முஸ்ரீக் சொல்வது வெறும் கற்பனையாயும் வாழ்வில் அமுல் நடாத்த முடியாததாயும் இருக்கிறது.

ஆகவே சிருட்டி அல்லாஹ் அல்லாதது என்று நம்பி ஆதரவு தேடல் ஷிர்க்காயும், சிருட்டி அல்லாஹ்வின் வெளிப்பாடே என்று நம்பி ஆதரவு தேடல் தௌஹீதாயும் (ஒருமைப்படுத்தலாயும்) இருக்கிறது.

ஷிர்க்கிற்குரிய 3ஆவது காரணம்

பௌதீக ஸுட்சும சிருட்டிகளான இலாஹுகளுக்கு இலாஹு என்று பெயர் சூட்டுவது. இந்த விஷயத்தை ஆராய்வுக் கெடுத்தால் இதுவும் ஒரு கிளைக்காரணமேயன்றி முக்கிய காரணமல்ல என்று தெரிகிறது.

குர்ஆன்: 27:64
அல்லாஹ்வுடன் வேறு இலாஹு இருக்கிறதா? "நீங்கள் உண்மை சொல்பவர்களாய் இருந்தால், உங்களுடைய அத்தாட்சிகளைக் கொண்டுவாருங்கள்" என்று நீர் கூறும்.

குர்ஆன்: 4:171
அல்லாஹ் என்பதெல்லாம் ஒரே இலாஹுதான்.

குர்ஆன்: 43:84
அவனே வானத்திலும் இலாஹாய்ப் பூமியிலும் இலாஹாய் இருக்கிறான்.

இந்த ஆயத்துகளை நுட்பமாய் நோக்குங்கள். க.்பா என்ற ஆலயத்துக்குள் மட்டும் 365 இலாஹுகள் இருந்தபோது தான் அல்லாஹ்வுடன் வேறு இலாஹு உண்டா? என்று இறைவன் கேட்கிறான். அக்காலத்தில் பல இலட்சாதி இலட்சம் இலாஹுகள் இருந்ததாகச் சரித்திரம் விபரமளிக்கிறது. அப்படியானால் அல்லாஹ்வுக்கு விடையாக ஆம் உண்டு என்று சொல்லிக் கொண்டும் ஒரு விக்கிரகத்தைத் தூக்கிக் கொண்டும் போய் இதோ! அல்லாஹ்வுடன் வேறு இலாஹு இருக்கிறது என்று காட்டி றசூலின் வாயை அல்லது அல்லாஹ்வின் வாயை அடைத்திருக்கலாமல்லவா? முஸ்ரிக்கீன்கள் ஏன் அப்படிச் செய்யவில்லை? முஸ்ரிக்கீன்கள் மட்டுமல்ல உலகிலுள்ள எந்த மக்களாலும் செய்யமுடியாது. ஏன் செய்ய முடியாது?

றசூல்(ஸல்) அவர்களால் கூறப்பட்ட கலிமாவும் அதன் தலீல்களான வேத வசனங்களும் அல்லாஹ்வையன்றி அணுவும் கிடையாதென்று வலியுறுத்தும்போது எந்த உலகிலுள்ள எந்த விக்கிரகத்தைக் காட்டமுடியும்? நாம் எதைக் காட்டினாலும்கூட அது அல்லாஹ் அல்லாததல்ல என்றல்லவா அல்லாஹ்வும் றசூலும் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

குர்ஆன்: 34:27
அல்லாஹ்வுக்கு இணையானவையென நீங்கள் அவனுக்குச் சமமாய்ச் சேர்த்து வைக்கிறீர்களே அவைகளை நீங்கள் எனக்குக் காண்பியுங்கள்! (அவனுக்கு இணையாக அவனுடன் ஒன்றுமே) இல்லை! அவனோ மிகைத்தோனும்; ஞானமுடையோனுமாகிய அல்லாஹ்வாகும்; என்று கூறும்.

வெளிப்படையாய் இருந்து கொண்டிருக்கிற சர்வ ஆலங்களையும் அவற்றிலுள்ள சிருட்டிகளையும் விசேடமாய் மனிதனால் செய்யப்பட்ட விக்கிரகமான இலாஹுவையும் ஒன்று சேர்த்தே இந்த ஆயத்தில் இலாஹு என்ற பதத்தைப் பொதுப்பெயர்ச் சொல்லாக இறைவன் கூறியிருக்கும்போது அல்லாஹ் அல்லாத இலாஹு உண்டு என்று எந்த ஆதாரத்தைக் கொண்டு நாம் நிரூபிக்கலாம்? ஆதாரம் கிடைக்கவே கிடையாது. இந்த ஆயத்து அல்லாஹ்வுடைய ஒரு சவாலாய் இருக்கிறது. அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாதவையும் உண்டு என்று நிரூபிக்க முடியுமானால் ஆதாரங்கள் தரமுடியுமானால் முயலுங்கள். உங்களால் முடியவே முடியாது.

அடுத்த ஆயத்துகளையும் பாருங்கள். அல்லாஹ் என்பதெல்லாம் ஒரே இலாஹுதான். வானத்திலும் இலாஹாய்ப் பூமியிலும் இலாஹாய் இருக்கிறான். முஸ்லீம்களின் வணக்கத்துக்குரிய நாயன் அர்ஷில் குந்திக்கொண்டிருக்கிறான் என்றுதான் கேள்விப்பட்டோம். சரிதான். பூமியில் இலாஹாய் இருக்கிற வணங்கப்படுகிற நாயன் யார்? வணங்கப்படுகிற சிருட்டிகளான விக்கிரகங்கள்தானே.

குர்ஆனில் எங்கெங்கு இலாஹ் என்றசொல் பாவிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் சிருட்டியையும் சிருட்டிகர்த்தாவையும் ஒன்றிணைத்துப் பொதுப் பெயர்ச்சொல்லாகவே பாவிக்கப்பட்டிருப்பதை நீங்கள் தெளிவாய்க் காணலாம். ஆகவே, பல பொருட்களுக்கொரு சொல்லான இலாஹ் என்ற பொதுப் பெயர்ச் சொல்லைச் சிருட்டியான விக்கிரகத்துக்கிடுவது ஷிர்க்கல்ல. நாம் முன் கூறியது போல நாம் எடுத்துக்கொள்ளும் சிருட்டி அல்லாஹ் அல்லாதது என்று எடுத்துக் கொண்டால்தான் இலாஹ் என்ற பெயர் சூட்டுவது ஷிர்க்காகும். பொதுப் பெயர்ச்சொல்லைச் சிருட்டியின்மேல் கூறப்பட்ட பல ஆதாரங்கள் குர்ஆனில் உண்டு. ஒன்றிரண்டை மட்டும் தருகிறேன்.

குர்ஆன்: 22:65
அல்லாஹ் மனிதர்களுடன் இரக்கமும் கிருபையும் உடையவன்.
(இவ்வாயத்தில் இறைவன் றஹீமுன், றஊபுன் என்ற தன் திருநாமங்களைத் தன்னுடையதாய்க் கூறுகிறான்.)

குர்ஆன்: 9:128
உண்மையாக உங்களிலிருந்து உங்களுக்கு ஒரு தூதர் வந்துவிட்டார். நீங்கள் எண்ணுவது அவருக்கு மிக்க இலேசானது. ஈமான் கொண்டவர்கள் மீது அவர் மிகவும் கிருபையும் இரக்கமும் உள்ளவர்.

இவ்வாயத்திலும் றஹீமுன், றஊபுன் என்ற நாமங்கள்தான் தரப்பட்டிருக்கின்றன. அல்லாஹ் மனிதர்கள் யாவர் மீதும் கிருபையும் இரக்கமும் உடையவனாய் இருக்கிறான். றசூல்(ஸல்) மூ.்.மீன்கள் போில் மட்டும் கிருபையும் இரக்கமும் உடையவர்களாய் இருக்கிறார்கள். இவ்வித பேதமிருந்தும் றசூலுக்குத் தன் திருநாமங்களையே இறைவன் கூறியிருக்கிறான்.

இதைப்போல இன்னும் பல நபிமார்களுக்கும் தனக்கும் சிற்சில திருநாமங்களை இறைவன் பொதுவாகப் பாவித்திருக்கிறான். குர்ஆனில் பல இடங்களில் காணலாம். ஆனால் இதில் ஓரு

நுட்பம் குர்ஆன் ஹதீஸுகளில், தனிப்பட்ட சிருட்டிகளுக்கு அல்லாஹ் என்ற நாமம் எங்கேயும் கூறப்படவில்லை. சிற்சில இடங்களில் அல்லாஹ் என்ற சொல் "இஸ்தியாரா" இரவல் வழக்காக மட்டும் பாவிக்கப்பட்டிருக்கிறது.

அறபு மக்கள் வணங்கப்படுகிற சிருட்டிகளுக்கு இலாஹ் என்று பெயர் சூட்டியது ஷிர்க்கேயல்ல ஆனால் அவை அல்லாஹ் அல்லாதவையென்று நம்புவதால்தான் அது ஷிர்க்காக மாற்றமடைகிறது.

ஷிர்க்கிற்குரிய 4ஆவது காரணம்

அல்லாஹ் என்பவன் (தஸ்பீஹில்) உருவத்தில் மட்டுண்டவன் என்று நம்புவது, அதாவது நிறம், தோற்றம், உருவம் அல்லது ஸுறத்தில் கட்டுண்டவன் என்று மட்டுப்படுத்தும் நம்பிக்கை. இதை ஆராய்வுக்கெடுத்தால் இது ஷிர்க்கின் ஓர் கிளைக் காரணமேயன்றி மூலகாரணமல்ல என்பது தென்படுகிறது. மேலும் இது குபிரேயல்லாமல் ஷிர்க்கல்ல என்பதும் தென்படுகிறது. குர்ஆனில், ஹதீஸில் இதற்கு ஆதாரமுண்டு. அஹ்லுல் கிதாபிகளான எஹூது நஸாறாக்கள் இறைவனை உருவப் பொருட்களில் மட்டுப்படுத்தியவர்கள். (தஸ்பீஹில் கட்டுப் படுத்தியவர்கள்). எஹூதுகள் உஸைறு(அலை) அவர்களை அல்லாஹ்வுடைய மகன் என்றும், நஸாறாக்கள் ஈஸா (அலை) அவர்களை அல்லாஹ்வுடைய குமாரன் என்றும் கூறியவர்கள்.

குர்ஆன்: 9:30
யூதர்கள் உஜைரை அல்லாஹ்வுடைய மகன் என்று கூறுகின்றனர்; நஸாறாக்கள் மஸீஹை (ஈஸாவை) அல்லாஹ்வுடைய குமாரன்(மகன்) என்று கூறுகின்றனர்; தங்கள் வாய்களால் கூறும் இக்கூற்றானது இவர்களுக்கு முன்னிருந்த காபீர்களின் கூற்றையே ஒத்திருக்கிறது; அல்லாஹ் அவர்களை அழிப்பானாக! இவர்கள் எங்கு வெருண்டோடுகின்றனர்?

இவ்வாயத்தின்படி எஹூது நஸாறாக்களான, அஹ்லுல் கிதாபிகளான மக்கள் காபிரீன்களேயன்றி முஸ்ரிக்கீன்களல்ல என்பது தொரிகிறது. ஆகவே, இறைவனைத் தஸ்பீஹில் மட்டுப்படுத்தும் குபிருக்கும் இறைவனுடன் இறைவனல்லாததும் உண்டு என்னும் ஷிர்க்கிற்கும் இடையில் மிகமிக வேறுபாடு தென்படுகிறது. எப்படியென்றால் எஹூது நஸாறாக்களான காபீர்களின் உணவு பெண்கள் போன்றவற்றை மூ.்மீன்களுக்கு ஹலாலாகவும், முஸ்ரீக்குகளின் உணவு பெண்கள் போன்றவற்றை

மூ.மீன்களுக்கு ஹறாமாகவும் இறைவன் குர்ஆனில் விளக்கியிருக்கிறான்.

குர்ஆன்: 2:221

இணை ஏற்படுத்தும் (முஸ்ரீக்கான) பெண்களை அவர்கள் ஈமான் கொள்ளும் வரையில் நீங்கள் மணந்து கொள்ளாதீர்கள்; முஸ்ரீக்கானபெண், உங்களைக் கவரக்கூடியவளாய் இருப்பினும், மூ.மீனான ஓர் அடிமைப்பெண் அவளைவிட நிச்சயமாக மேலானவள்; முஸ்ரீக்கான ஆண்கள் ஈமான் கொள்ளும்வரையிலும் (மூ.மீனான பெண்களை) மணம்செய்து கொடுக்க வேண்டாம்; முஸ்ரீக்கான ஆண் உங்களைக் கவரக்கூடியவனாய் இருப்பினும், மூ.மீனாகிய ஓர் அடிமை அவனைவிட நிச்சயமாக மேலானவன். இவர்களெல்லாம் நரகத்துக்கு அழைப்பார்கள், அல்லாஹ்வோ தன் கிருபையைக் கொண்டு சுவர்க்கத்துக்கும், மன்னிப்புக்கும் அழைக்கிறான். மனிதர்கள் கவனித்துக்கொள்ளும் பொருட்டுத் தன் வசனங்களை விபரிக்கிறான்.

குர்ஆன்: 5:5

(விசுவாசிகளே!) இன்றுமுதல் பரிசுத்தமானவைகளே உங்களுக்கு ஆகுமாக்கப்பட்டுள்ளன; (அஹ்லுல்கிதாபிகளான) வேதத்தை யுடையவர்களின் உணவும் உங்களுக்கு ஆகுமானதே. உங்களுடைய உணவும் அவர்களுக்கு ஆகுமானதே; விசுவாசம் கொண்ட கற்புடைய பெண்களையும், வேதம் கொடுக்கப்பட்ட கற்புடைய பெண்களையும் விபச்சாரிகளாகவோ, வைப்பாட்டிகளாகவோ கொள்ளாமல், அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய மஹர்களையும் கொடுத்து (மணம்செய்து) கொள்வது உங்களுக்கு ஆகும்; அன்றி எவன் விசுவாசம் கொண்டதின்பின் காபீராக மாறுகிறானோ, அவனுடைய செயல் நிச்சயமாக அழிந்துவிடும் - அவன் நஷ்டமடைந்தவனாகவே இருப்பான்.

இவைபோன்ற ஆயத்துகளை ஆராய்ந்தால் இறைவனைத் "தஸ்பீஹில்" ஸுறத்தில் அல்லது உருவத்தில் அல்லது லாஹிறில் கட்டுப்படுத்துவது குபிரேயல்லாமல் ஷிர்க்கல்ல என்பது தென்படுகிறது. இது ஷிர்க்கில்லாமல் ஏன் குபிராகக் கொள்ளப்படுகிறது என்று ஓர் கேள்வி பிறக்கலாம்; நியாயமான கேள்விதான். பதில்:-

குர்ஆன்: 57:3

ஆதியும் அவனே, அந்தமும் அவனே; தோற்றுவதும் அவனே; மறைந்திருப்பவனும் அவனே; அவன் சர்வத்தையும் அறிந்தவன்.

இந்த ஆயத்தின் விதிப்படி அல்லாஹ்வுக்கு (லாஹிர், பாதின்) வெளிப்பாடும் மறைவும் உண்டு என்று நம்பிக்கை கொள்ள வேண்டியதே ஈமான் என்பது. அஹ்லுல்கிதாபிகளான மக்கள் லாஹிறான வெளிப்பாட்டை மட்டும் ஈமான் கொண்டிருப்பதனால் அவர்களுடைய ஈமான் குறைவுடையதாய் நிறைவு பெறாததாய் இருக்கிறது. ஆகையால்தான் இவர்களைக் காபீர்கள் என்று இறைவன் கூறுகிறான். இதேபோல முஸ்லீம்களின் மிகப்பெரும் பாலார் பாதினை மட்டும் ஏற்றிருக்கிறார்களேயன்றி லாஹிறை ஏற்காமல் இருப்பதால் இவர்களும் அஹ்லுல் கிதாபிகளின் அந்தஸ்த்தில்தான் குபிருடையவர்களாய் இருக்கிறார்கள். இவர்களும் ஈமானில் ஒரு பகுதியை மட்டும் எடுத்துக் கொண்டவர்களாய் இருக்கிறார்கள். ஆனால் மூ.்மீன்களோ லாஹிறையும், பாத்தினையும் எடுத்துக் கொண்டவர்கள். ஈமானில் இவர்கள் நிரப்பம் பெற்றவர்கள்.

இப்போது பகுத்தறிவுக்கு வேலைகொடுப்போம். சிந்தனையைத் தொழிற்படுத்துவோம். அல்லாஹ் அரூபி என்றெடுத்துக் கொண்டால் ரூபியாய் இருக்க முடியாத குறைவுடையவன் என்றாகும், ரூபிதான் என்று எடுத்துக்கொண்டாலும் அதே குற்றமுண்டாகும். அல்லாஹ் குறைவற்றவன். சமது என்ற பெயருடையவன். எல்லாம் நிரப்பமாயுள்ள தேவையற்றவன். அவனில் குறைவுகாண இடமில்லை. ரூபம், அரூபம் இரண்டையும் ஏற்றுக் கொண்டால் இறைவன் தேவையற்றவன், சர்வ வல்லமையுடையவன் என்பதை நாம் ஒத்துக் கொண்டவர்களாவோம். அதாவது இறைவனுடைய லாஹிறையும், பாதினையும் ஏற்றுக்கொள்வதே ஆரம்ப ஈமானாய் இருக்கிறது. இதற்கப்பாலும் உண்மையுண்டு. ரூபம் என்பது சிருட்டி என்ற மார்த்தபாவை நோக்கியது. அரூபம் என்பது சிருட்டிக்கு நேர் முரணான "குன்ஹ'' என்ற சுயநிலைமையை நோக்கியது.

இவ்விரு நிலைமைகளும் ஒரே உஜூதின் இரு பண்புகள் என்றெடுத்துக்கொண்டால் அவன் சர்வ வல்லமையுள்ள ஏகன் என்றாகும். இவ்விடத்தில் மிகத் துல்லியமான ஒரு ஞான இரகசியம் மறைந்திருப்பதால்தான் 57:3ஆம் ஆயத்தில் அல்லாஹ் என்றோ றப்பு என்றோ வெளிப்படையாய்க் கூறாமல் "ஹு" அது, அவன் என்று இறைவன் கூறுகிறான். இந்த "ஹு" என்றசொல் உயர்திணை, அ.்றிணை, உயிருள்ளது, உயிரற்றது யாவையும் ஒன்றுசேர்த்தே அது என்ற பொருளைக் கொடுக்கிறது. இந்த "ஹு" என்பதைக் கொண்டு அதனால் சுட்டப்படுவது அல்லாஹ்வைத்தான் அல்லது றப்பைத்தான் என்று "இஸ்தியாரா" இரவல் வழக்காக நாம் எடுத்துக் கொள்கிறோம். அல்லாஹ் ரூபியாயும் அரூபியாயும் இருக்கச் சக்தியுடையவன் என்று நம்பிய நாம் வேறு ஒரு சிக்கலில் மாட்டிக் கொள்கிறோம். எல்லா வல்லமையும் அவனுக்குண்டு என்றால் பொய் சொல்லும் வல்லமையும் அவனிடம் இருக்கத்தானே வேண்டும் என்று ஒரு சந்தேகம் பிறக்கிறது? உண்டென்றால் குர்ஆன் ஹதீஸை ஏற்கமுடியாத ஒரு நிலைமை ஏற்படும். இப்படி ஒரு மயக்கேற்பட்டவர்தான் அப்துல் வஹ்ஹாப் நஜ்தியும் அவரைப் பின்பற்றிய இல்யாஸ் போன்றோரும் இவர்கள் அல்லாஹ் பொய் கூறுவது அவன் சக்திக்குட்பட்டதென்று கூறுகிறார்கள். இதை நடைமுறையிலும் அமுல்படுத்துகிறார்கள். அவர்களுடைய அறிவுக்கு முரணான ஆயத்துகளையும் ஹதீஸுகளையும் அவர்கள் ஏற்பதே இல்லை. ஆகையால் இவ்விஷயத்தை, அல்லாஹ் பொய் கூறமாட்டான் என்பதை ஓரளவு விளக்க வேண்டியது அவசியமாகிறது.

லாஹிர் என்ற சிருட்டி (அறிவின்) இறையறிவின் கற்பனையாய் இருப்பதைப்போல, பொய்யென்பது சிருட்டியின் கற்பனையாய் இருக்கிறது. இறைவனின் கற்பனை உள்ளதாய் (நிலையாய்) இருப்பது. இது மாறுபாடடையலாம். ஆனால் அழியாது. உள்ளது உள்ளதுதான். அது எப்போதும் அழியமுடியாது. சிருட்டியின் கற்பனையில் உருவான பொய்யென்பது இல்லாதது. இல்லாதது எப்போதும் இல்லாததேதான் இல்லாதது இருப்பதாகாது. ஆகவே, சிருட்டியின் கற்பனையிலுள்ள (சொல்லில் செயலில்

வெளியாகிற) பொய் சிருட்டியறிவில் ஏற்பட்ட மருட்சியேயன்றி உண்மையாய் உள்ளதல்ல. ஆகவே பொய் என்பது சிருட்டியைப் பொருத்ததேயன்றி அல்லாஹ்வைப் பொருத்ததல்ல. அல்லாஹ் "ஹக்கு" உண்மையென்றால் அவனுடன் பொய் எப்படி இருக்கமுடியும்? இருப்பதற்கு பொய்தானும் இல்லையே. அவனுடன் பொய்யும் உண்டு என்றால் அவன் இணையுடையவன் என்றாகுமே. இது சுத்த ஷிர்க்காயிருக்கிறது. இல்லாதது என்றுமில்லாததுதான். ஆகையால் இருப்பதுடன் சேராது. சேர்க்கமுடியாது. சேர்க்க முற்பட்டால் அவன் சிந்தனையற்ற, அறிவு விருத்தியாகாத கால்நடையென்றே கூறவேண்டும்.

சிருட்டிக்கும் சிருட்டி கர்த்தாவுக்குமிடையில் நேர் முரண்பாடு என்பதை நாம் மறக்கக்கூடாது. சிருட்டி பொய் கூறுபவன் என்றால் சிருட்டிகர்த்தா பொய் கூறமாட்டான் என்பது நிச்சயமான உண்மை சிருட்டி உள்ளது. சிருட்டியில் இடம்பெற்ற பொய் இல்லாதது. அது வெறும் மருட்சிதான். இங்கே வேறோரு சந்தேகம் உருவாகிறது. சிருட்டியாய் இருக்கும் லாஹிர் அல்லாஹ் அல்லாததல்ல என்னும் போது (லாஹிரில்) சிருட்டியில் வெளியான பொய்யும் அல்லாஹ்வுடையதுதானே? என்று ஓரு கேள்வி எழலாம். லாஹிர் பாதினை மட்டும் எடுத்துக் கொண்டால் அல்லாஹ்வைப் பற்றிய அறிவு அத்தோடு முடிந்துவிட்டதென்று கூறமுடியாது. ஏனென்றால் லாஹிர், பாதின் ஆகிய இரண்டும் புலன்கள் வாயிலாகவும் சிந்தனையென்ற அனுமான வாயிலாகவும் மனித அறிவில் கட்டுண்டு விடுகின்றன. ஆனால், அறிவைக் கடந்து கட்டுப்பாட்டில் அமையாததாய் இருப்பது எதுவோ அதுவே வுஜூது, தாத்து, என்பது. ஆகவே, அந்த வுஜூதுக்கு எம்மால் ஏற்படுத்திக் கொண்ட ஓரு மர்த்தபாதான் லாஹிறாயும் பாதினாயும் அறிவில் அமைவதாயும் இருக்கும். இந்த மர்தபாவில் உஜூதுக்கிடப்பட்ட நாமம்தான் றப்பு என்பது. இது மனித அறிவில் அமைவதால் இதை விளக்கவும் விளங்கவும் மனிதனால் முடியும்.

இறைவனின் சுய தன்மையில்(குன்ஹு) லாஹிறும் பாதினும் அவ்வலும் ஆகிறும் கிடையாது. பெயரும் கிடையாது. இதை

அறிவதற்கு ஆட்களும் கிடையாது. இது தனித்தது. இதைபபற்றி எதுவும் எவருக்கும் தெரியாது. இப்படி ஒன்றுண்டு என்பது மனிதயூகம்தான். இந்த யூகத்துக்கு ஆதாரம் குர்ஆன் ஹதீஸுகளே. இந்த யூகத்தை வேறெவ்வகையிலும் நிரூபிக்க முடியாது. அது நிரூபணமாவது அனுபவத்தைக் கொண்டு மட்டும்தான். ஒரு பொருளை நாம் காணும்போது (தோற்றத்தை) லாஹிறைப் பார்க்கிறோம். நாம் கண்டது நிச்சயமாக இருந்துகொண்டிருந்த பொருளைத் தான். இதில் சந்தேகமே இல்லை. இப்போது அப்பொருளை விட்டும் கண்ணை மூடிக்கொண்டால் அந்தப் பொருள் எம்மிடத்தில் இல்லாமல் மறைந்து பாதினாய் விடுகிறது. லாஹிறாக (தோற்றுவதாய்) இருந்த பொருள் மறைந்த பாதினாய் மாறியது ஏன்? இது எமது கண் என்ற புலனைக் கொண்டு உண்டான மருட்சியே. கண்ணை மூடியபோது மறைந்த பொருள் நினைவாற்றலால் பதியப்பட்ட உள்ளத்தில் இருக்கவே செய்கிறது. இதை வெளிக்கண் காணாது. ஆனால் அறிவுக்கண் இதை அறியும். அறிவிடத்தில் அறியப்பட்டதாயிருக்கும் பொருள் லாஹிறாயும் கண்ணால் பார்க்கப்பட்ட பொருள் பாதினாயும் இருக்கிறது. இதைப்போல கண்ணைக் கொண்டறிந்த அறிவிடத்தில் பார்த்த பொருள் லாஹிறாயும் உள்ளத்திலுள்ள பொருள் பாதினாயும் இருக்கிறது, வெளிமனம் கண்ணை உபயோகித்தது உள்மனம் நினைவை உபயோகித்தது. ஆகவே லாஹிர் பாதின் என்பதற்குக் காரணம் புலனாட்சியும் நினைவாட்சியுமேயாகும். இப்போது தெளிந்த அறிவுடன் நடுநிலை நின்று ஆராய்ந்தால் லாஹிறும் பாதினும் ஒன்றே என்பதும் தென்படும். நிலையாயுள்ள உஜூதுக்கு எவ்விதக் கட்டுப்பாடும் விதிக்க முடியாதிருப்பதால் அதற்கு லாஹிறும் பாதினும் கிடைக்காது. லாஹிர் பாதினுடைய சிருட்டியும் அவற்றைக் கடந்த ஹக்கும் ஒன்றேயன்றி வேறில்லையென்பதை உணர்த்துவதற்காகவே 57:3ஆம் ஆயத்துத் தரப்பட்டதென்பதை நாம் உணரவேண்டும். மேலும் அந்த ஆயத்தில் இறைவனையோ, சிருட்டியையோ தனிப்பட்ட வகையில் நோக்காமல் பொதுப்படையாய் "ஹு" என்பதைக் கொண்டு சுட்டப்படுவது எது என்பதைப் புரிந்து கொண்டால் அந்த ஆயத்தின் உண்மை புலனாகிவிடும். குற்றம் குறைகள் சிருட்டியைப் பொருத்த மருட்சியாகும். குற்றம்குறை

காண்பது சட்ட அடிப்படையில்தான். அல்லாஹ்வோ மிகமிகப் பரிசுத்தமானவன்.

மனித அறிவில் ஒரு விஷயம் அமைவதானால் ஒன்றுக்கொன்று நேர் முரணான இரு தன்மைகள் இருக்க வேண்டியது அவசியம். இல்லையானால் புலன்கள் சரியாய் இயங்கா. பகுத்தறிவு தொழிற்படாது, யூகம், அனுமானம், ஆராய்வு எதுவும் நடைபெறாது. காரணகாரியப் பொருத்தத்தை மனிதன் எப்போது உணர்ந்து கொள்கிறானோ அப்போதுதான் அவன் சிந்திப்பவனாய், யூகிப்பவனாய், ஆராய்பவனாய்க் கணிப்பவனாய், குறிக்கோளையடைய முற்படுபவனாய்ப், பகுத்தறிவாளனாய் மாற்றமடைகிறான். ஆகவே, இவனிடத்தில் உண்மையும் பொய்யும் அவசியம். இம் மனிதனிடமுள்ள இவ்விரண்டும் அவனறிவில் ஏற்பட்ட ஓர் மருட்சியின் இரு தன்மைகளேயன்றி நிலையாய் உள்ளவையல்ல. பகுத்தறிந்து காரண காரியப் பொருத்தத்தைக் கண்டறிந்து அவ்விடமிருந்து ஆரம்பமாவதே இன்றைய விஞ்ஞானம். இது இன்னும் எவ்வளவோ வளர்ச்சியடையலாம் ஆயினும் இதற்கொரு முடிவுண்டு. காரண காரியப் பொருத்தம் கூட மருட்சிதான் என்றறியும் நிலையில் இருந்து ஆரம்பிப்பதே நுபுத்துவம், விலாயத் என்பவை. இதன் முடிவை இறுதியைச் சிருட்டி அறியாது.

இந்த எல்லையற்ற முடிவில்லாத அறிவை விளக்கி வழி காட்டும் நோக்காகவே லாஹிர், பாதின் என்ற சொற்கள் பகுக்கும் ஆற்றலுள்ள அறிவுக்குத் தரப்பட்டன. இந்த மனித அறிவு தன் சுய நிலையை அடைய உதவியாய்த் தரப்பட்ட சொற்கள்தான் குர்ஆனில் இடம்பெறும் லாஹிர், பாதின், ஹக்கு, பாதில், அப்து, றப்பு போன்ற சொற்கள். இவற்றிலுள்ள சிறப்பியல்பு மனிதன் இம்மையிலும் மறுமையிலும் வெற்றிபெற வழிவகுப்பதே. அப்துக்கு ஜோடி உண்டு. ஜோடியுள்ள அப்துத்தான் உண்மையையும் பொய்யையும் ஜோடியாய்க் காணுகிறது. றப்பிடம் உண்மையுமில்லை பொய்யுமில்லை. அதனிடம் எது உள்ளதோ அது அதன் இயல்பே. இதை மனிதன் உள்ளதாயும் இல்லாததாயும் காணுகிறான். இதுதான் மறதி மருட்சி வஹ்மு என்பது. இங்கே இன்னொரு

கேள்வி பிறக்கிறது. அதாவது றப்புக்கு ஹக்கு (உண்மை) என்று கூறப்படுகிறதே? பொய்யின் எதிர்மறைதானே உண்மையென்பது, ஆகவே, பொய்யென்பது இருக்க வேண்டுமே? இதுதான் கேள்வி.

விஷயம் அப்படியல்ல. ஹக்கு என்று இறைவனைக் குறிப்பிடும்போது பொய்க்கு மாறான உண்மையென்று மனிதன் தன் அனுபவத்தை அடிப்படையாய்க் கொண்டனுமானித்த அனுமானம்தான் அது. இது தவறான விளக்கம். எது நித்தியமாய்த் தரிபாடாய் உள்ளதோ அதைக் குறிப்பிடப் பாவிக்கப்படும் சொல்தான் "ஹக்கு" உண்மை என்பது. இது பொய்க்கு மாறானது என்ற பொருளுடையதல்ல. நாட்டுத் தமிழில் கூறுவதானால் பொய்யில்லாத உண்மை என்று கூறலாம். இதனால் குறிப்பிடப்படுவது நித்திமாய் உள்ளது என்பதே.

இன்னொரு நுட்பம் வுஜூதை ஹக்கு என்று கூறுகிறோம். ஹக்கு என்றால் உண்மையென்பது பொருள். உண்மையுடன் பொய் இருக்க முடியாதென்றால் உண்மையென்ற ஹக்கு எப்படிப் பொய் கூறும்? பொய்தான் அதனிடமில்லையே.

அவ்வல், ஆகிர், லாஹிர், பாதினுக்கு வரைவிலக்கணம் கூறலாம். இது அறிவில் அமையலாம். இந்த அறிவுக்குக்கூட வரைவிலக்கணம் கூறலாம். ஆனால் இவ்வித கல்விகளைக் கொண்டு அல்லாஹ் என்ற சொல்லால் குறிப்பிடப்படும் வுஜூதுக்கு, தாத்துக்கு வரைவிலக்கணம் பூரணமாய்க் கூறமுடியாது. எமக்குத் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களெல்லாம் குர்ஆன் ஹதீஸுகளை அடிப்படையாய்க் கொண்ட அனுமானங்கள்தான். இறைவனுக்குள்ள வாஜிபான ஸிபத்துக்களெல்லாம் இந்த அடிப்படையிலுள்ளவையே. இவை மனித அறிவுக்கு அமையக் கூடியவைதான். ஆயினும் அந்தக் கட்டுப்பாடுடைய அறிவின் எல்லைக்குள் அமைவானதே தாத்து என்று கொண்டால் அது பெரும் தவறாகும். இப்படிக் கொள்வதனால்தான் அவன் பொய்யும் சொல்லலாம் என்று மருட்சியடைகிறோம். மனித அறிவு சிதறிய சிந்தனையோடொட்டியது. சிதறிய சிந்தனையை ஒருமுகப்படுத்தும் நோக்கம்தான் இபாதத்துக்களில் முதலிடம்பெறும் "இக்லாஸ்" என்பது. இதை

ஏகாக்கிரசித்தம் என்றோ அல்லது உறுதியான ஒருவழிப்பட்ட எண்ணம் என்றோ கூறலாம். இந்த "இக்லாஸ்" ஏற்பட ஆசை (விருப்பம்) அவசியம். விருப்பு வெறுப்புச் சூழலால் உருவாவதென்றாலும் கூட அது மனித அறிவின் ஆட்சியில் இல்லை.

மனித அறிவு ஒருமுகப்படுத்தப்படும்போது அங்கு பல என்பது இடம்பெறா, மனித அறிவு இப்போது அங்கில்லை. இப்போதிருக்கும் அறிவுக்குப் பகுத்தறிவு என்று பெயரும் கிடையாது. இவ்விடத்தில் லாஹிர், பாதின், அவ்வல், ஆகிர், அப்து, றப்பு என்ற சொற்கள் மட்டுமல்லாமல் பாஷை, எண், எழுத்து முதலாம் குறியீடுகளும் இல்லாதொழிந்துவிடும். உள்ளது எதுவோ அது மட்டும்தான் உள்ளது. அதற்குப் பெயரும்தான் இல்லையே. அங்கே உண்மையும் பொய்யும் ஏது? ஆகவே, உண்மையென்பதும் பொய்யென்பதும் மனித அறிவில் குடிகொண்டுள்ள ஒரு மருட்சியேயாகும். குற்றம் குறைகள் கலாகத்ரில் (ஹுக்குமில்) கட்டுண்ட சிருட்டியுடைய கற்பனையும் அனுமானமும் அல்லாமல் இறைவனிடத்தில் எவ்விதக் குற்றமும் பொய்யும் இருக்கமுடியாது. ஆகவே, இறைவன் பொய் கூறுவான் என்பதும் குர்ஆனில் பிழையுண்டு என்பதும் பகுத்தறிவுத் தொழிற்படாத அபூஜஹீலின் கூட்டத்தைச் சேர்ந்த கால்நடைகளின் வாதமாகும்.

ஷிர்க்கிற்குரிய 5ஆவது காரணம்

இலாஹுகளான சிருட்டிகள் நன்மை தீமை, லாப நஷ்டம், சுகம், துக்கம் போன்ற குணங்களைத் தரும் என்று நம்புவது. இதை ஆரய்ந்தால் இதுவும் ஷிர்க்கின் ஓர் கிளைக்காரணமேயன்றிப் பரிபூரணமான ஷிர்க்கல்ல. ஷிர்க்கின் ஆணிவேரல்ல. எப்படியென்றால் பெரும்பாலான மக்களால் அல்லாஹ் அல்லாதது என்று கணிக்கப்படுகிற சிருட்டிப் பொருட்கள் குணம் கொடுப்பவைதான் என்பதில் மூ.ீனும் முஸ்ரீக்கும் சமமான நம்பிக்கையுடையவர்களே. நெருப்புச் சுடும் தீய்க்கும் என்பதில் யாருக்குத்தான் சந்தேகம். ஒவ்வொரு சிருட்டிக்கும் தனித்தனியான குணங்கள் உண்டு என்பதைக் குர்ஆன் ஹதீஸுகளோ பகுத்தறிவோ அனுபவமோ மறுக்கவில்லை. இன்ன மருந்து இன்ன நோயைத் தீர்க்கும் என்று முஸ்ரீக்கும் நம்புகிறான். முஸ்லீமும் நம்புகிறான். குர்ஆனில் எத்தனையோ மருந்துகள் கூறப்பட்டிருக்கின்றன. நபிமார்கள் எத்தனையோ மருந்துகளைக் கூறியிருக்கிறார்கள். மருத்துவம் செய்திருக்கிறார்கள். எத்தனையோ ஆதாரங்களைத் தரமுடியும். உணவு பசியையும், நீர் தாகத்தையும் தணிக்கும் என்பதில் முஸ்ரீக்கும் முஸ்லீமும் சமமாகத்தானே இருக்கிறார்கள். இவர்கள் சர்வ சிருட்டிகளும் அல்லாஹ் அல்லாதவை என்று நம்புகிறார்கள். ஆகவே, இவர்கள் எடுத்துக் கொண்ட சிருட்டி ஓரு தனி மூலப்பொருளாய் இருப்பதால் அந்தச் சிருட்டியே குணம் கொடுத்தது என்று நம்புகிறார்கள். இறைவனுடன் அவனல்லாததும் உண்டு என்று நம்பியது மட்டுமல்லாமல் இறைவனின் சக்தியை விட்டும் வேறான சக்தி சிருட்டியிலுண்டு என்றும் காணுகிறார்கள். இதனால்தான் இது ஷிர்க்காக மாற்றமடைகிறது.

குர்ஆன்: 53:43

நிச்சயமாக அவனே உம்மைச் சிரிக்க வைக்கிறான்: அழவும் வைக்கிறான்.

குர்ஆன்: 32:13

நாம் விரும்பியிருந்தால், ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் நேரான வழியில் செல்லக்கூடிய அறிவைக் கொடுத்திருப்போம்; எனினும் "ஜின்களையும் மனிதர்களையும் கொண்டு நிச்சயமாக நரகத்தை நிரப்புவோம்" என்று நம்முடைய தீர்ப்பு ஏற்பட்டுவிட்டது.

எப்பொருளில் எப்போது எப்படிச் சக்தி வெளியானாலும் அது றப்பின் சக்தியேயன்றிச் சிருட்டியின் சக்தியல்ல. சிருட்டி ஓர் தனிப்பட்ட உஜூது என்றும் அதன் சக்தி அதற்குரியதென்றும் கொள்வதே ஷிர்க்காய் இருக்கிறது. இங்கே ஓர் சந்தேகம் பிறகிறது. சிருட்டியில் வெளியாகும் சக்தி இறைவனுடையதென்றால் சிருட்டியில் வெளியாகும் பொய்யும் இறைவனுடையது தானேயென்று ஓர் மயக்கம் ஏற்படுகிறது. பொய் என்பது சிருட்டியறிவில் உள்ள ஓர் மருட்சியேயன்றி உண்மையல்ல. இது சிருட்டியின் சுயநிர்ணய உரிமையைப் பொருத்த சிருட்டியின் செயலேயன்றி ஆனால் இச் செயலுக்குக் காரணமாய் அமைந்த சக்தி இறைவனுடையதுதான். இந்த சக்தியை மருட்சியில் ஊறிய மனிதன் தவறான வழியில் பயன்படுத்துகிறான். சுயநிர்ணய உரிமை இருக்கும் வரையில் இது மனிதனின் தவறுதான். இதுவும் அதாலத்தென்ற நீதி நிர்வாக அடிப்படையிலுள்ளதேதான். இவ்வளவு விபரமே கவாஸுகளுக்குப் போதுமானது.

இரக்கமும் கோபமும் இருகுணங்களாய் இருப்பினும் அவற்றின் உற்பத்திஸ்தானமும் நோக்கமும் ஒன்றாயிருப்பதுபோல, லலாலத்தும் ஹிதாயத்தும் வெவ்வேறு போல் தென்பட்டாலும் அடிப்படையும் நோக்கமும் ஒன்றாயிருப்பது போல, எம்மிடத்தில் உண்மையும் பொய்யும் ஒரே அடிப்படையில் ஒரே நோக்கில் பிறந்தவையே என்றுணர்ந்து கொண்டால் பிரச்சினை இருக்காது. அறிவு தெளிவு பெற்றுவிடும் (பாதில் என்ற சொல்லை விளக்கும் போது இன்னும் சில நுட்பங்களை அங்கு தருவேன் பொறுமை யடையவும்). மூ.்.மீன் இவர்களுக்கு மாற்றமானவராய் இருக்கிறார். மூ.்.மீன் சர்வ ஆலங்களும் சர்வ பொருட்களும் இறைவனின் வெளிப்பாடே என்று ஈமான் கொண்டிருக்கிறார். எப்பொருளிலிருந்து எந்தக் குணம் வெளியானாலும் அது அல்லாஹ்வின்

குணமேயென்று காணுகிறார். இறைவனே ஒவ்வொரு மர்தபாவில் ஒவ்வொரு ஸுறத்தில் ஒவ்வொரு குணத்தில் காட்சியளிக்கிறான் என்றும் ஒவ்வொரு மர்த்தபாவும் ஒவ்வொரு (ஹுக்கூம்) சட்டத்தைக் கொண்டு நிலைப்படுத்தப் பட்டிருப்பதாயும் காணுகிறார். இவர் இறைவனையும் இறைவனின் குணா குணத்தையுமேயன்றிக் காணாமலிருந்தாலும் ஒவ்வோர் சிருட்டிக்குமுள்ள சட்டங்களைக் கொண்டு ஒவ்வோர் சிருட்டியையும் தனித்தனியாயும் காணுகிறார். இவர் ஏவல் விலகல்களை மீறமுடியாது. இவரிடத்தில் ஓர் அணுவும் ஷிர்க்கிருக்கவும் முடியாது. இவர்தான் உண்மையான ஓரு மூ.். மீன் ஆகவே சிருட்டிகள் அல்லாஹ் அல்லாதவை என்ற விசுவாசத்தோடு அவை குணம் கொடுக்கும் என்று நம்புவது சுத்த ஷிர்க்காய் இருக்கிறது. அல்லாஹ்வையன்றி எதுவுமே இல்லை யென்ற ஈமானோடு, சிருட்டி என்ற மர்த்தபாவில் இருக்கும் இறைவனே குணம் கொடுத்தான் என்று நம்பும் போது அதில் எவ்வித ஷிர்க்குமே இடம்பெற முடியாது. சிருட்டிப் பொருட்கள் குணம் செய்யும் என்பதை ஷிர்க்காக மாற்றியது அவை அல்லாஹ் அல்லாதவையென்ற நம்பிக்கைதான். சிருட்டி குணம் கொடுக்கும் என்று நம்புவது ஷிர்க்கென்றால் தௌஹீதுவாதிகளான நல்லடியார்களைத் தவிர வேறு எந்த ஓரு மனிதனும் ஷிர்க்கில்லாமல் தப்ப முடியாது. அல்லாஹ்விடத்திலேயே உதவிபெற வேண்டுமென்றால் அதற்குரிய ஒரேயொரு வழி தௌஹீதை விளங்கியறிவதேயாகும். அப்படியில்லாமல் அல்லாஹ் வேறு சிருட்டி வேறு என்று எடுத்துக் கொண்டால் உண்ணல், குடித்தல் முதலாம் சர்வ காரியங்களும் எண்ணத்திலுள்ள அல்லாஹ் அல்லாதவற்றிற்காகச் செய்த இபாதத்தாக முடியும். மனோஇச்சையைத் தெய்வமாய்க் கொள்வதன் உண்மை இதுதான். அல்லாஹ் அல்லாதவை இல்லை. ஆயினும், மனிதன் சிருட்டிகளை அல்லாஹ் அல்லாதவை யென்று கணித்துச் செயல்பட்டால் அது ஷிர்க்காகும் என்பதே. அல்லாஹ் அல்லாதவற்றிடம் உதவி தேட வேண்டாம் என்ற சொல் அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாதவையும் உண்டு என்பதுபோல் தென்படுகிறது. இது அப்படியல்ல. இதற்கு நீண்ட விளக்கம் அவசியமாகிறது. இன்ஷாஅல்லாஹ் இதை எதிர்வரும் ஷிர்க்கிற்குரிய ஆறாவது காரணத்தில் விளக்குவோம்.

ஷிர்க்கிற்குரிய 6ஆவது காரணம்

அல்லாஹ் வேறு சிருட்டி வேறு என்று நம்புவது. அதாவது அல்லாஹ் என்பது ஒரு தனிப் பொருள் என்றும் சிருட்டிகள் அல்லாஹ் அல்லாத வேறு வேறு தனிப் பொருள்கள் என்றும் நம்புவது (ஈமான் கொள்வது). இன்னும் விபரமாய்க் கூறினால் "முஜர்ரத்" லாத், உஜ்ஜா, மனாஸ் முதலாம் பௌதீக விக்கிரகங்கள் சூட்சும சிருட்டிகளான இலாஹ்கள் அல்லாஹ் அல்லாதவையென்றும், அவை இல்லாமையைக் கொண்டு இறைவனால் உருவாக்கப்பட்டவை என்றும் கொள்ளும் நம்பிக்கையாகும். இவ்விஷியத்தைக் குர்ஆன் ஹதீஸ்களையும் பகுத்தறிவையும் அவ்லியாக்களுடைய இஜ்மாஉ, கியாஸ் முதலாம் ஆதாரங்களைக் கொண்டும் நுட்பமாய் நோக்கினால் இறைவனால் விபரம் தரப்பட்ட சுத்தமான ஷிர்க் இந்தக் குருட்டு விசுவாசம்தான் என்பது தென்படுகிறது. அது மட்டுமல்லாமல் முன்பு கூறிய 5 காரணங்களையும் ஷிர்க்காக மாற்றிக்கொண்டிருந்ததும் இந்த நம்பிக்கைதான் என்பதும் தென்படுகிறது. உண்மையாகவே, அபூஜஹீல் போன்ற முஸ்ரிக்கீன்கள் கொண்டிருந்த மூடத்தனமான கொள்கை இதுதான். இந்த மூடத் தனமான கொள்கையை நீக்கி வைப்பதற்காகவே 1,24,000 நபிமார்கள் தோன்றினார்கள். ஸ்ஹுபுகள் (ஆகமங்கள்) வேதங்கள், முஹ்ஜிஸாத்துக்கள் தரப்பட்டன. இறுதியாக றசூல்(ஸல்) அவர்கள் பல அரிய யுத்தங்களையே செய்துள்ளார்கள்.

குர்ஆன்: 34:27

அல்லாஹ்வுக்கு இணையானவை என நீங்கள் அவனுக்குச் சமமாகச் சேர்த்து வைக்கிறீர்களே அவர்களை எனக்குக் காண்பியுங்கள்! (அவனுக்குச் சமமானவை) இல்லை.

குர்ஆன்: 28:74

இறைவன் அவர்களை நோக்கி "எனக்கு இணையானவை

(சமமானவை) என்று நீங்கள் எண்ணிக் கொண்டிருந்தீர்களே! அவை எங்கேயென்று?" கேட்கப்படும் நாளை அவர்களுக்கு ஞாபகமூட்டும்.

குர்ஆன்: 26:213

ஆதலால் நீர் அல்லாஹ்வுடன் வேறொரு கற்பனை ஆண்டவனை (இலாஹுவை) அழைக்காதீர் அதனால் நீர் வேதனை செய்யப்படுவீர்.

இவ்வித ஆயத்துகளின் விவரப்படி வணங்கப்படுகிற விக்கிரகங்களான பௌதீக சூட்சும இலாஹுகள் அல்லாஹ் அல்லாத தனித்தனி உஜூதுகள் என்று மருண்ட புத்தியினால் நம்பியிருக்கும் நம்பிக்கையே ஷிர்க் என்றும் சமமாக்கல் என்றும் வெளிப்படையாகவே தென்படுகிறது. முஸ்ரிக்கீன்கள் எடுத்துக் கொண்ட எந்த ஓர் இலாஹுவையும் அவர்கள் அல்லாஹ்வாக நம்பவில்லை என்பதை நாம் மறக்கக்கூடாது.

பௌதீக சூட்சும இலாஹுகள் அல்லாஹ் அல்லாதவையாய் இருந்தும் அவை குணம் கொடுக்கின்றன என்று நம்பியதால் தான் சக்தியென்ற அடிப்படையில் அந்த நம்பிக்கை ஷிர்க்காக அமைகிறது. இறைவல்லமைக்குச் சமமான வல்லமை இறைவனல்லாத வற்றுக்குமுண்டு என்றாவதால் சக்தியில் மட்டுமன்றி தாத்து, சிபாத்து, அஸ்மா யாவற்றிலுமே சிருட்டி சமமானதென்றாகும். இதுதான் ஷிர்க். இந்த நம்பிக்கையோடு அமலில் ஈடுபாடு கொள்வது எவ்வித பிரயோசனமும் தராது. மேலும், அந்த அமல்கள் எதிரிடையாயும் பலன் தரலாம். சாபக்கேடாகவும் அமையலாம்.

குர்ஆன்: 8:22

நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் கால்நடைகளில் கேவலமானது அறிந்து கொள்ள முடியாத செவிடர்களும், ஊமையர்களும்தான்.

குர்ஆன்: 50:5

அவ்வாறிருந்தும் அவர்களிடம் வந்த உண்மையை அவர்கள் பொய்யாக்கி வெறும் குழப்பத்துக்குள்ளாக்கி விட்டனர்.
(இவ்வாயத்து அஹ்லுல் கிதாபிகளுக்கு மட்டுமல்ல எமக்கும் தான்)

பகுத்தறிவு தொழிற்படாத முஸ்ரிக்கீன்களான மக்கள் கொண்டிருந்த இந்த மூடத்தனமான குருட்டு நம்பிக்கையை (உளநோயை) நீக்கி உண்மையை உணரச் செய்வதற்காகவே எல்லா நபிமார்களும் முதல் வேலையாகக் கலிமாவைக் கொண்டு ஈமான் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். சிற்சில கட்டுப்பாடான நிபந்தனைகள் மூலமே வேதங்கள் மக்களிடம் புகுத்தப்பட்டுப் படிப்படியாய்ப் பகுத்தறிவு தொழிற்படவும் சிந்தனை உருவாகவும் கூடிய வகையிலே நபிமார்கள் போதனை செய்தார்கள் என்பது நிச்சயமான உண்மை. இதைப் புரிந்து கொள்ளாத ஒரு சிலர் வேதம் பகுத்தறிவுக்கப்பாற்பட்ட குருட்டு நம்பிக்கையின் கட்டுப்பாட்டில் உருவான வெறும் குருட்டு நம்பிக்கைதான் என்று கூறுகிறார்கள். கட்டுப்பாடற்ற சிதறிய சிந்தனை ஒருமுகப்படுத்தப் படாதவரையிலும் உண்மையை உணரமுடியாது என்பதை அன்னவர்கள் அறியவில்லை. கட்டுப்பாடில்லாமல் சிந்தனையை ஒருமுகப்படுத்த முடியாதென்பதை நாம் உணரவேண்டும்.

றசூல்(ஸல்) அவர்களின் இறப்பிற்குப் பிறகு சுமார் 30 வருடங்களின் பின் கலிமாவின் உண்மை ஒருசில மக்களால் புரட்டப்பட்டு வலிந்துரை கொள்ளப்பட்டிருக்கிறது. தப்ஸீர்களை நீங்கள் முழுக்கவனத்தோடு ஆராய்ந்தால் இவ்வுண்மையை அறியலாம். இன்றுள்ள பெரும்பாலான மக்கள் குர்ஆன் ஹதீஸுகளைத் தாங்கள் மனப்பூர்வமாக ஏற்றிருக்கிறோம் என்கிறார்கள். ஆனால் குர்ஆன் ஹதீஸுகளின் உண்மையை ஒருவர் விளக்கினால் உடனே அவரைக் காபீர் என்றும் முர்த்தத் என்றும் கூறுகிறார்கள். இது ஏன்? மக்களில் அனேகர் குர்ஆன் ஹதீஸை ஒப்புக்கொண்டோம் என்று வாயால் கூறினாலும் உண்மையாகவே அவர்கள் அவற்றை ஒப்புக்கொள்ளவில்லை. பழக்கவழக்க அடிப்படையில் பின்பற்றல் வழியிலேயே செல்கிறார்கள். குர்ஆன் ஹதீஸுகளைப் பெரும்பாலும் அவர்கள் வாசிப்பதோ ஆராய்வதோ கிடையாது. வஹ்ஹாபிஸ அடிப்டையிலுள்ள ஒருசில மௌலவிகளைக் கேட்டால் இதெல்லாம் ஷைத்தானின் புரட்டலென்றும் அறபு பாஷை தெரியாத காரணம் என்றும் இது இந்துத்தத்துவம் என்றும் மக்களின் அறிவுக்கு

விலங்கிடுகிறார்கள். உண்மையென்னவென்றால் இவர்களுக்குத் தௌஹீதின் விளக்கம் தெரியாமைதான். மேலும், இதில் தலையிட்டால் தாங்கள் பொதுமக்களிடம் மாட்டிக்கொள்வோம் என்றும் நம்புகிறார்கள்.

குர்ஆன்: 42:45
நம்முடைய ஆயத்துகளில் (வீணாகத்) தர்க்கிப்போர் (நம்முடைய வேதனையிலிருந்து) தப்ப எந்த வழியுமில்லை என்பதை இவர்கள் அறிந்து கொள்ளட்டும்.

குர்ஆன்: 10:39
எனினும் அவர்களுக்குத் தெரியாததும் அதன் தலீல் (ஆதாரம்) அவர்களுக்குக் கிடைக்காததுமான சங்கதியைப் பொய்யென்று அவர்கள் கூறுவார்கள்.

அதுமட்டுமல்ல, இன்றுள்ள மதரஸாக்களில் பெரும்பாலும் தௌஹீதுடைய இல்மு போதிக்கப்படுவது இல்லை. ஆகவே, இஸ்லாத்தின் உயிரான தௌஹீது அவர்களால் அறியப்படாத ஒரு விஷயமாகவும் இருக்கிறது.

தற்காலம் நம்மிடையே உலாவும் தப்லீக் கோஷ்டியிலுள்ள ஒரு சில தஜ்ஜால்கள் இந்தத் தௌஹீது என்ற உண்மையை மூடிமறைக்க மொட்டையடிக்க உதவியாய்த் தற்போது ஒரு யூகததைக் கையாளுகிறார்கள். அதாவது, குர்ஆன் ஹதீஸுகளைக் கொண்டு ஒருசிலரால் விளக்கப்படும் தௌஹீது இந்துக்களின் அத்வைதம் என்றும் குர்ஆனின் தௌஹீது தொழுகைதான் என்றும் சிருட்டி அல்லாஹ் அல்லாதவையேயென்றும் கூறுகிறார்கள். மேலும், வேதாந்தம் இஸ்லாத்திலில்லாத இந்துக்களின் கொள்கையென்றும் வற்புறுத்துகிறார்கள். அதுமட்டுமா? பகுத்தறிவைக் கொண்டு குர்ஆன் ஹதீஸை நோக்கக்கூடாதென்றும் மார்க்கம் என்பது பகுத்தறிவுக்கமையாத வெறும் நம்பிக்கைதான் என்றும் கூறுகிறார்கள். பகுத்தறிவுக்கமையாத வெறும் குருட்டு நம்பிக்கை யானது மார்க்கம் என்று நம்பும் இவர்கள் அதிலுள்ள தொழுகையை மட்டும் மக்களிடையே மிகமிகக் கடினமாய் வற்புறுத்துகிறார்களே இது ஏன்?

இவர்களிடத்தில் உண்மையாகவே பகுத்தறிவு தொழிற்படுவதில்லை. இவர்கள் கால்நடைகளுக்கொப்பானவர்கள். இவர்கள் அபூஜஹ்லீன் கூட்டமாயும் அப்துல்வஹ்ஹாப்நஜ்த் என்பவரின் கொள்கையான மௌட்டிகத்திலூறிய ஷைத்தான்களாயும் இருப்பதால் இவர்களின் இயல்பான மொட்டையடிக்கும் தொழிலைச் செய்கிறார்கள். இன்றுள்ள முழுமூடர்களான தப்லீக்கைப்பற்றி றசூல் (ஸல்) அவர்களால் கூறப்பட்ட பல ஹதீஸுகளில் ஒன்றை மட்டும் இங்கே தருகிறேன்.

ஹதீஸ்:

நபிகள்(ஸல்) அவர்கள் கூறியதை நான் என் காதாரக் கேட்டேன், இறுதிக்காலத்தில் சிறுவர்களும் அறிவற்றவர்களும் சேர்ந்த கூட்டம் ஒன்று வெளியாகும். வெளித்தோற்றத்தில் நல்லதையே (தொழுகையையே) அவர்கள் கூறுவார்கள். ஆனால், ஈமான் என்பது அவர்களின் தொண்டைக் குழிக்குக் கீழ் இறங்காது. இலக்கை நோக்கிப் பாயும் அம்பைப்போல் அவர்கள் மார்க்கத்தை விட்டும் வெளியேறி விடுவார்கள்.

அறிவிப்பவர்: அலி(றலி) அவர்கள்

ஆதாரம்: புஹாரி

குர்ஆன்: 63:3

(இதற்குரிய) காரணமாவது இவர்கள் விசுவாசித்துப் பின்னர் நிராகரித்து விட்டதுதான்; ஆகவே அவர்களுடைய இருதயங்கள் மீது முத்திரையிடப்பட்டு விட்டது; (எதையும்) அவர்கள் உணர்ந்து கொள்ள மாட்டார்கள்.

குர்ஆன்: 63:4

நபியே, நீர் அவர்களைப் பார்த்தால், அவர்களுடைய உடலமைப்பு உம்மை ஆச்சரியப்படுத்தும்; அவர்கள் பேசினால், அவர்களுடைய வார்த்தையையே நீர் கேட்கும்படி ஏற்படும்; (அவ்வளவு சாதுரியமாய் நீர் பேசுவதற்கு இடம் தராமல் பேசுவார்கள். எனினும் உமது உபதேசத்தைச் செவியுறாத) கிடத்தப்பட்ட மரக்கட்டைகளைப்போல் இருப்பார்கள்; (அவர்கள் செவியுறும்) எச்சத்தத்தையும் தங்களுக்கு

விரோதமாகவே எண்ணிக் கொள்வர்; இவர்கள் தாம் விரோதிகள்; இவர்களைப் பற்றி நீர் எச்சரிக்கையாக இருந்துகொள்ளும்; அல்லாஹ் அவர்களை அழித்து விடுவான்; எங்கு செல்லுகின்றனர்?

இந்த எத்திவைக்கும் கூட்டத்தின் ஸ்தாபகர் இல்யாஸ் என்பவர், ஜனங்கள் நினைக்கிறார்கள் (தப்லீக்) இது தொழுகையைப் பற்றி ஏவக்கூடிய இயக்கம் என்று, நான் சத்தியம் செய்து சொல்லுகிறேன் இது ஒருபோதும் தொழுகையைப் பற்றி ஏவக்கூடிய இயக்கமல்ல, எனது நோக்கம் புதிய ஒரு கூட்டத்தை உண்டாக்குவதாகும் என்று கூறியிருக்கிறார். "இல்யாஸ் ஒளர் உன்கீதீனிதா.ஃவது" (இல்யாஸும் அவரின் மார்க்க அழைப்பும்) என்ற நூலில் 205ஆம் பக்கம் காணலாம். இந்த நூல் அபுல்ஹஸன் நத்வியாஸ் (இல்யாஸின் தோழர்) எழுதப்பட்டதாகும். அப்படியானால் நம்மிடையே உலாவும் தப்லீக் தொழுகைக்கழைப்பது ஏன்?

இவர்களுடைய உண்மையை ஏதோ ஒரு லேபல், வேஷம் இல்லாமல் மக்களிடம் நுழைக்க முடியாது. மக்கள் இவர்களின் கொள்கையை அறிந்தால் இவர்களைப் பின்பற்ற மாட்டார்கள். ஆகவே மக்களைக் கவர்வதற்கு ஒரேயொருவழி தங்களைத் தொழுகைக்கழைப்போராகக் காட்டிக்கொள்வதே.

சில சொல் விளக்கங்கள்

கலிமாவினால் உணர்த்தப்படும் உண்மை என்ன? தௌஹீது என்பது என்ன? என்பதை நாம் உள்ளபடி உணரவேண்டுமானால் குர்ஆன் ஹதீஸுகளில் இடம் பெறுகிற அவ்வல், ஆகிர், லாஹிர், பாதின், அலீம் ஆகிய ஐந்து சொற்களின் (இறைவனுடைய திருநாமங்களின்) உண்மையான பொருட்களை அறியவேண்டியது கட்டாய கடமையாக இருக்கிறது. ஏனென்றால் றசூல்(ஸல்) அவர்கள் கலிமாவைக் கூறி அதன் பொருளை விளக்குவதற்கு ஆதாரமாய்த் தந்த பிரதான தலீல்களில் ஒன்றுதான் இந்தச் சொற்களைக் கொண்ட வேதவசனம். இதைச் சரியாய் உணர்ந்து கொள்ளாத எவரும் கலிமாவைக் கொண்டு ஈமான்கொள்ள முடியாதென்பது நிச்சயமான உண்மை. இதை விளங்கிக்கொள்ளாத மக்கள் அன்றிலிருந்து இன்றுவரையிலும் கலிமாவையும் குர்ஆனையும் தத்தம் இஷ்டம் போல புரட்டிக்கொண்டும் தாங்கள் மூ.ீன்களேயென்று நம்பிக் கொண்டுமிருக்கிறார்கள்.

அவ்வல் என்றால் ஆரம்பம், ஆதி, தொடக்கம் என்பது பொருள். அவ்வல் என்பதன் எதிர்ச்சொல்தான் ஆகிர். ஆகிர் என்றால் முடிவு, அந்தம், இறுதி என்பதே அதன் பொருள். இவ்விரு சொற்களையும் நோட்டமிட்டால் இச்சொற்கள் இறைவனின் திருநாமங்களாய் இருப்பதற்குப் பொருந்தாதனபோல் தென்படுகின்றன. ஆரம்பம், ஆதி, தொடக்கம் என்றால் அதற்கு முன் இல்லாமல் இருந்தது என்றுதான் பொருள்தரும். அதேபோல முடிவு, அந்தம், இறுதி என்றால் முடிவுக்குப்பின் இல்லாதது என்றுதான் பொருள்தரும். இவ்விஷயம் சிருட்டிக்குத்தான் பொருந்தும். முன் இல்லாதிருந்து தோன்றி அழியும் பொருள் எதுவோ அதற்குத்தான் ஆதியும் அந்தமும் இருக்கும். இறைவனோ நித்திய ஜீவனானவன். (ஹையுல்கையூம்) என்றும் இருப்பவன். அவனுக்கு ஆதியும் அந்தமும் உண்டு என்றால் அவனை நித்திய ஜீவன் என்று கூறுவது எப்படி? அவன் நித்தியஜீவன் என்று

நம்பியிருந்த ஈமான் இப்போது எங்கே போய்விட்டது? ஏன் போய் விட்டது? நாம் அந்த இரு சொற்களையும் விளங்கியறிந்து ஈமான் கொள்ளவேயில்லை.

அவ்வல், ஆகிர் என்ற சொற்களுக்கு அகராதிகள், தொடக்கம் முடிவு அல்லது ஆதி, அந்தம் என்று கூறிக்கொண்டிருக்கலாம். ஆனால் குர்ஆனில் 57:3ஆம் ஆயத்தில் பாவிக்கப்பட்ட அச்சொற்கள் உறுதியான தௌஹீதை உணர்த்தும் சொற்களாய் இருக்கின்றன. என் அறிவுக்கெட்டிய வரையில் 6 வகையாய் (ஆறு கோணங்களில்) விளக்கம் தருகின்றன. அவற்றில் இரண்டுவகையை மட்டும் எடுத்துக்கொள்வோம். இன்றுள்ள ஏறக்குறைய எல்லாத் தப்ஸீர்களிலும் 57:3ஆம் இலக்க ஆயத்துக்கு ஒரே மாதிரிதான் பொருள் கூறப்பட்டுள்ளது. அது உண்மையானதே என்பதை நாமும் முற்றாய் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் அவ்வல், ஆகிர், லாஹிர், பாதின், ஆகிய நான்கு சொற்களுக்கும் சரியான விரிவுரை தரப்படவில்லை. ஆதி, அந்தம், தோற்றம், மறைவு ஆகிய நான்கு பண்புகளும் மனிதனுக்கு மட்டுமல்லாமல் சர்வ உலகங்களுக்கும் அவற்றிலுள்ள சர்வ சிருட்டிகளுக்குமே இருக்கின்றன. மனிதனுக்கு ஆதியந்தம் தோற்றம் மறைவு நிச்சயமாக உண்டு என்பதை அறிவுள்ள எவரும் மறுக்க முடியாது. அப்படியிருந்தும்கூட அப்பண்புகள் இறைவனுக்குடையவையென்று குர்ஆன் ஹதீஸ்கள் விவரம் தருகின்றன. நாம் கற்பனையில் அறிந்துள்ள, அல்லது நூற் கேள்வியறிவினால் அறிந்துள்ள இறைவனின் ஆதியந்தம், தோற்றம், மறைவு முதலாம் நான்கு பண்புகளில் மறைவு என்பதை மட்டுமே ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இறைவன் தோற்றமுடையவன் என்றால் மறுக்கிறோம். இது ஏன்? இந்த நான்கு சொற்களில் பொதிந்துள்ள ஞான இரகஸியம் எமதறிவில் பிடிபடாததே காரணம்.

ஆதியந்தம் வெளிப்படை உட்படையுடைய சிருட்டி என்பது அல்லாஹ்வை விட்டு வேறானதல்ல என்பதை உணர்த்திக் காட்டுவதே அந்த ஆயத்தின் நோக்கமாகும். நாம் கூறிய இந்த நான்கு பண்புகளும் றப்புக்கே உண்டு என்றால் சிருட்டியிடம்

அப்பண்புகள் இருக்க முடியாது. ஏன்? அப்துக்கு நேர்முரணானது தானே றப்பு என்பது. ஆகவே சிருட்டிகர்த்தாவையும் சிருட்டியையும் வேறு வேறு என்று கொண்டால் இந்த ஆயத்து எவ்வகையிலும் ஒத்துவராது. ஏன்? சிருட்டி சிருட்டிகர்த்தாவுக்குச் சமமான தென்றாகும். இதுவோ சுத்தமான ஷிர்க்காகும். அவனையன்றி ஒன்றுமில்லையென்பதும், இருப்பது அவன் மட்டுமே என்பதும்தான் தௌஹீது. ஆகவே, சிருட்டி என்பது நமக்குத் தற்போது புரிந்து கொள்ள முடியாதது என்றாலும் இறைவனின் ஒரு நிலைமையின் பெயரே சிருட்டி என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

மனித அறிவு ஒரு எல்லைக்குள் மட்டுப்படுத்தப்பட்டது. இதைத் தாண்டும் ஆற்றல் எல்லா மனிதர்களிடமும் இல்லை. இறைவனோ அறிவின் எல்லையில் கட்டுண்ணாதவன். ஆகவே நாம் எம் அறிவுக்கேற்றபடி ஒரு எல்லையை வைத்துக்கொண்டு ஆராய்வோம். இல்லையானால் புத்தியில் அமையவே அமையாது. எமது இரு கண்களையும் இறுக மூடிக்கொண்டு எமது அறிவை வானத்தை நோக்கிச் செலுத்துவோம். அறிவு பல கோடாகோடி வருடம் ஒளி வேகத்தில் சென்றாலும் இன்னும் போய்க் கொண்டே தான் இருக்கும். சிருட்டியின் எல்லை முடிந்தால் இனம்காண முடியாத ஒரு சுத்த சூனியம் மட்டுமே அறிவுக்குத் தென்படும். எமது அனுபவ அறிவைக் கொண்டு அதை நாம் சுத்த சூனியம் என்று கூறினாலும் உண்மையில் அதைச் சுத்தசூனியமென்று கூறமுடியாது. இதைப் போல மேல், கீழ், முன், பின், வலம், இடம் ஆகிய ஆறு திசைகளிலும் அறிவைச் செலுத்தினால் சிருட்டிக்கு ஆதி அந்தம் சுத்த சூனியமாகவே இருக்கும். சிருட்டி அழிந்தொழிந்து விட்டால் சிருட்டியின் அந்தமும் அந்தச் சுத்தசூன்யமாகவே இருக்கும். அப்படியானால் சிருட்டி என்பது எம்மறிவில் தென்பட்ட சூன்யத்தில் தான் இருக்கிறது. அந்த சூன்யம்தான் ஒரு வட்டத்துக்குள் (எமதறிவின் வட்டத்திற்குள்) ஆதியாய், அந்தமாய், தோற்றமாய், மறைவாய் இருந்திருக்கிறது. இரு பொருட்கள் ஒரே நேரம் ஒரே இடத்தில் ஒன்று சேர்ந்திருக்க முடியாது. இது தத்துவம்.

அப்படியானால் சுத்தசூன்யம் என்பதை ஒரு பொருளாகவும் சிருட்டியை வேறு பொருளாகவும் கொள்ள முடியாது. சிருட்டி என்பது நாம் உணரமுடியாத இந்தச் சூன்யமாகவேதான் இருக்கும். ஆகையால் ஆதியந்தமுள்ள சிருட்டியும் ஆதியந்தமற்ற சிருட்டி கர்த்தாவும் பெயரளவில் வேறுபட்டாலும் ஏகமானதாகவே இருக்கும். மிகச் சுருக்கமாய் நான் இங்கே தந்த விஷயத்தைப் பலமுறை வாசித்து இருதயத்தில் இருத்திக் கொள்ளுங்கள், இன்னோர் நுட்பம் தந்துவிட்டு தொடர்கிறேன்.

எமது அறிவு ஆறு திசைகளிலும் சென்றுதான் ஏகப் பெருவெளியான சுத்தசூன்யத்தை அறிந்தது, இந்த சூன்யத்துக்கு மேல் கீழ் முன் பின் வலம் இடம் என்ற திசைகளும் கிடையாது. ஏன்? திசை கணிப்பது இன்னொன்றை அல்லது பலதை அடிப்படையாய்க் கொண்டுதானே! இப்போது எம் அறிவு எல்லாவற்றையும் இழந்து நிற்கும்போது திசை எப்படி அமையும்? அமையாது. இதைப் போல் காலத்தை நோக்குங்கள். நாம் சூரிய சந்திரனைக் கொண்டே காலத்தைக் கணித்தோம். இப்போது சூரிய சந்திரனெல்லாமே எமதறிவில் கிடையாது. ஏன்? அவற்றையெல்லாம் கடந்துதான் சூன்யத்தில் நுழைந்திருக்கிறோம், சூரிய சந்திரன் இல்லாவிட்டாலும் அந்தச் சூன்யமே காலமாக இருக்கும். இடத்தை நோக்கினால் இதுவும் அதேபோலத்தான். எம்மறிவு எங்கே எப்படிச் சென்று கொண்டிருந்தாலும் இடமும் இருந்துகொண்டுதான் இருக்கும். இந்தக் காலமும் இடமும் பெயரளவில் வேறுபட்டாலும் விஷயம் ஒன்று தானே. இப்போது பாருங்கள் சூன்யத்தையடைந்த எமது அறிவில் தான் சர்வ ஆலங்களும் அவை அமைந்துள்ள இடமும் காலமும் கட்டுண்டிருக்கிறது. இதற்கப்புறம் எமதறிவுக்கு ஆற்றலில்லாமையால் அறியமுடியாத ஏதோ ஏகமாயுள்ள இனம் தெரியாத ஒன்றைச் சூன்யம் என்று கூறுகிறோம். உண்மையை நோக்கினால் அது சூன்யமேயல்ல. சூன்யமாய்த் தென்பட்டது எமதறிவின் மருட்சியே.

இந்தச் சூன்யத்தில் இருந்துதான் சிருட்டி ஆரம்பமாகிறது. சிருட்டியின் முடிவும் இந்தச் சூன்யம்தான். ஆகவே, ஆரம்பமும்

முடிவும் சிருட்டிகளுக்குரியது என்று நாம் எடுத்துக் கொண்டாலும் இந்தச் சிருட்டி சூன்யமாய் இருப்பதால் அது எல்லையற்ற சூன்யத்தின் மனித அறிவுக்கமைந்த ஓர் (மர்த்தபா) நிலைமையாகவே இருக்கும். ஆகவே, சிருட்டி சிருட்டிகர்த்தாவை விட்டும் வேறான தென்று எப்படிக் கூறமுடியும்?

எம்மறிவு எல்கையில்லாத சுத்தசூன்யமாய்க் கண்ட இடம் தான் ஸிதறத்துல் முன்தஹா என்பது. ஜீப்ரீல் (அலை) அவர்களுடைய ஸ்தானம் இவ்விடம்தான். இதற்கதிகமான விவரம் இங்கு அவசியமல்ல. அவ்வல் ஆகிர் என்ற சொற்கள் காலத்தில் இடத்தில் கட்டுண்டவையாயும் கட்டுண்ணாதவையாயும் இருக்கின்றன.

ஒருசில தப்ஸீர்களில் சிருட்டிக்கு முன்னும் சிருட்டிக்குப் பின்னும் இறைவன் இருப்பதால் ஆதியும் அந்தமும் அவனே என்று கூறப்பட்டது என்று வியாக்கியானம் செய்கிறார்கள். பாமரமக்களிடத்தில் இது சரியானதுதான். இது இறை வசனங்களின் ஆழிய ஞானத்தையும், நோக்கத்தையும், காரண காரியப் பொருத்தத்தை அடிப்படையாகக் கொண்ட விஞ்ஞான விளக்கமும் அறியாத ஒரு சிலர்தான் இப்படி வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். இவர்கள் கூற்றுப்படி இறைவனைக் காலததிலும் இடத்திலும் கட்டுண்டவன் என்று கொள்ள வேண்டியதாய் இருக்கிறது. இது குபிர். காலமோ திடமாக அல்லாஹ்வாகவே இருக்கிறது.

ஹதீஸ்:

திராட்சைப் பழத்தைக் கண்ணியம் வாய்ந்ததென்று கூறாதீர்கள். காலத்தின் கேடே என்றும் கூறாதீர்கள். ஏனெனில் நிச்சயமாக அல்லாஹ்வே காலமாகும் என்று றசூல்(ஸல்) கூறினர்.

அறிவிப்பவர்: அபூஹுறைறா(றலி)

ஆதாரம்: புஹாரி, முஸ்லீம், அபூதாவூத்.

இந்த ஹதீஸ் "இபாரத்துன்னஸ்"ஸினால் காலம் அல்லாஹ் தான் என்பதை அறிவிக்கிறது. இடம் இல்லையானால் காலம் கணிக்கப்பட முடியாது. ஆகவே "தலாலத்துன்னஸ்"ஸினால் இடமும் அல்லாஹ்தான் என்று நிரூபணமாகிறது.

குர்ஆன் ஹதீஸுகளில் இன்னும் ஆதாரமுண்டு. மனிதன் நிகழ்ந்த நிகழ்கிற, நிகழப்போகிற வரையறைகளை வைத்துக் கொண்டுதான் காலத்தைக் கணிக்கிறான். பொருளைக் கொண்டு தான் இடத்தைக் கணிக்கிறான். சந்திர சூரியன்கள் சிருட்டிகப்படு முன்பும், சிருட்டிகள் உருவாக்கப்படு முன்பும் காலமும் இடமும் ஏகமாய் (ஒன்றாய்) இருந்ததுதான். இவையாவும் அழிந்த பின்பும் அவை (காலம், இடம்) ஏகமாய் ஒன்றாய் இருக்கப்போவதுதான். ஆகவே, தப்ஸீர்களின்படி சிருட்டிக்கு முன்னும் பின்னும் உள்ளவன் என்று கொண்டால் சிருட்டியின்போது இல்லாதவன் என்றல்லவா சொல்ல வேண்டியேற்படும். இது தவறு, அந்த வேத வசனங்கள் சிருட்டிகர்த்தாவை விட்டும் சிருட்டி வேறான, தனியான, ஜோடியான, இணையான, சமமான பொருளல்ல என்பதை விளக்கம் தருவனவாய் இருக்கின்றன. இவற்றில் மிகத் துல்லியமான ஞான விளக்கங்கள் நிறைந்திருக்கின்றன. இதைச் சரியாய் அறிவதானால் காலத்தைப் பற்றிய பூரண விளக்கம் தெரிந்திருக்க வேண்டும். முடியாவிட்டால் குறைந்தபட்சம் விஞ்ஞான அறிவாவது வேண்டும். இவ்வித அறிவில் பாண்டித்தியமில்லாத ஒருசிலர், ஒவ்வொரு கிரகமும் அதன் அதன் வழியில் சுற்றுகின்றன, சுழல்கின்றன என்று குர்ஆன் தெளிவாய்க் கூறும்போதும் சுழல்வதுபோல் தென்படுகின்றன என்று வலிந்துரை கொண்டார்கள். இதன் முடிவு குர்ஆனின் உண்மையான அறிவு விளக்கத்தை (ஞானத்தை) மூடிமறைப்பதாகவே முடிந்தது.

காலம், இடம், வெளி (ஆகாயம்) ஆகிய மூன்றும் அனுமான வாயிலாய் அறிந்து அனுபவ வாயிலாகத் தன்னிடத்தே நிரூபணமாக வேண்டியவையாகும். இவற்றை வேறு எவ்வகையிலும் நிரூபித்துக் காட்ட முடியாது. இது விஞ்ஞானம் ஏற்றுக் கொண்ட உண்மையாகும். இம்மூன்றும் மனித அறிவில் வெவ்வேறாயினும்

உண்மையில் ஒரே விஷயம்தான். இடம் என்பது மனித அறிவைக் கொண்டமைந்த சடம் இருப்பதனால்தான் தென்படுகிறது. இந்தச் சடம் (பௌதீகம்) மாறுபடவும் மனித அறிவில் அழிந்தொழிவதாய்த் தென்படவும் கூடியது. இந்தப் பௌதீகம் மனிதனுக்குள்ள புலன்களுக்கமைவாய்த் தோற்றமளிக்கிறது. புலனாட்சியற்ற பிணத்திடம் பௌதீகம் இல்லாததாயும் புலனாட்சியுள்ள ஜீவனிடத்தில் உள்ளதாயும் காட்சியளிக்கிறது. இது புலனாட்சியின் மருட்சியேயன்றி உண்மையல்ல. வாஜிபுல் உஜூது என்பது எப்போது உண்டோ அதன் குணாகுணமும் அப்போதே உள்ளதுதான். இதற்கு அழிவோ மாறுபாடோ இருக்க முடியாது. ஆயினும் அழிவும் மாறுபாடும் நிகழ்வதை மனிதன் காணுகிறானே! இது ஏன்?

வாஜிபுல் வுஜூதில் உள்ள குணம் என்பது அதன் நிறையறிவேயாகும். இந்த அறிவு இலக்கத்தில் கட்டுண்ணாத, இரண்டில்லாத ஒன்றே. இந்த அறிவை விஜ்தான் என்றோ இறையறிவு என்றோ நாம் கூறுவோம். இதில் எவ்வித பகுப்பும் பிரிவும் கிடையவே கிடையாது. இந்த அறிவில் இயல்பாய் இருந்ததே, இருப்பதே பிரபஞ்சம் என்பது. இப்பிரபஞ்சத்திலுள்ள மனிதனை மட்டும் இங்கே நோக்குவோம். இந்த மனிதன் வெளியாவதற்கு முன்னும் (உடல், உயிர் இரண்டும்) இறையறிவில் உள்ளதுதான். ஆனால், இவ்வுண்மை இறையறிவுக்குத் தெரியுமேயன்றி மனிதனுக்குத் தெரிவதில்லை. ஏன்? மனிதன் வெளியுலகில் தன்னை இறையறிவை விட்டும் வேறானவன் என்றும் என் அறிவு என்னுடையதேயென்றும் நம்புகிறான். காரணம் அவன் புலன்கள் வாயிலாய் இடத்தையும், காலத்தையும், ஆகாயத்தையும் தன்னையும் கூட வெவ்வேறாகவே காண்கிறான். இதனால் இவனிடத்தில் ஒரு மருட்சி ஏற்படுகிறது. இந்த மருட்சியை அனாநிய்யத் (நான் மற்றவற்றைவிட வேறானவன்) என்ற எண்ணத்தை ஏற்படுத்திக் கொண்டான். இது அவனுடைய புலனாட்சியில் ஏற்பட்ட மயக்கம்தான். இந்த மயக்க நிலையில் உள்ளது எதுவோ அதுவே சிருட்டி என்பது. இச் சிருட்டி மனித அறிவில் வெளியானதேயன்றி இறையறிவில் எள்ளளவு மாறுபாடும் இல்லாமல் என்றும் இருந்தது போலவேதான் இருக்கிறது. அந்த அறிவில் இயல்பாய் இருந்த மனிதனுக்குத்தான் மயக்கம் (மருட்சி)

கற்பிக்கப்பட்டிருந்தது. இந்த மயக்கில் இருக்கும் மனிதன் தான் தன் சுய தன்மையை மறந்தவனாய், இடம், காலம் போன்ற கட்டுப்பாடுகளின் அடிப்படையில் எங்கேயோ எப்போதோ வெளியாகியிருப்பதாயும் இறந்தொழியவேண்டி இருப்பதாயும் நம்புகிறான். இது உண்மையிலேயே சிருட்டியென்ற மனிதனால் ஏற்பட்ட தன்னியக்கமல்ல. இதை இறாதா என்று கூறப்படும். இறை நாட்டம் என்பதே அதன் அர்த்தம். நாட்டம் என்றால் விருப்பம் ஆசையென்று பொருள் கொள்வது பிழையாகும். இறாதா என்றால் வுஜூதில் இயல்பாய் உள்ளது என்றே பொருள்கொள்ள வேண்டும்.

இந்த (இறாதா) நாட்டம்தான் தன் அறிவில் தன்னைச் சிருட்டியாய் அமைத்திருக்கிறது. இந்த சிருட்டி இதை அறியாது. ஏன்? அது வெறும் கற்பனையேயன்றி தன்னியக்கமுள்ள தனிப் பொருளல்ல. இந்த மருட்சியைச் சிருட்டிதான் மருட்சி யென்றுணர்கிறதேயன்றி மருட்சி என்பது ஒன்று கிடையாது. இந்த மருட்சியென்பது மனிதனால் இடப்பட்ட இறையறிவின் மறுபெயர் தான், புலனறிவுடைய மனிதனுக்குத் தான் வேறுபாடு தென்படுகிறது. இறையறிவு ஒன்றேதான். அதில் பாகுபாடு உயர்வுதாழ்வு காண்பது இறையறிவிலுள்ள சிருட்டியாகும். சிருட்டி சில இயற்கைச் சட்டங்களின் அடிப்படையில் (கலாகத்ர்) கட்டுண்டிருப்பதால் இதற்குப் பாகுபாடு (வேறுபாடு) அவசியமாகிறது. பாகுபாடில்லையானால் அதற்கிடப்பட்ட அடிப்படை இயங்காது. இந்தப் பாகுபாட்டோடிருக்கும் நாம் இப்போது, இறையறிவென்ற ஒரே விஷயத்தைப் பல பிரிவுகளாய்க் கொள்ள வேண்டியவர்களாகிறோம். உள்ள ஒரே இறை அறிவை, விஜ்தான், நூர், அகில், நுண்ணறிவு அல்லது விவேகம், பகுத்தறிவு, வஹ்மு என்று பல பிரிவுகளாக வகுக்கிறோம். இப்படி வகுக்காவிட்டால் நாம் சிருட்டியென்றாகாது. உள்ளது ஒரே அறிவு என்று கொண்டால் அதற்குரிய உடமைக்காரனான அல்லாஹ் மட்டும்தானே இருப்பான். அவன் இன்றும் அப்படித்தான் இருக்கிறான். அப்படியிருந்து கொண்டும்தான் சிருட்டியென்றும் பெயர் பெறுகிறான். இது அவனிடத்தில் முரணல்ல. வேறு வேறு என்று நம்பிய சிருட்டியிடத்தில் முற்றிலும் முரணானதே. (நுட்பமாய் உணர்க)

சிருட்டியாய் இருக்கும் குழந்தை ஆரம்பத்தில் புலனறிவு வாயிலாகவே வழர்ச்சியடைகிறது. இது பழக்க, வழக்க, நூலறிவு, கேள்வியறிவு, மனோ இச்சை போன்றவற்றை அடிப்படையாய்க் கொள்ளாமல் வாழமுடியாது. காலக்கிரமத்தில் தன் சுயநிலையை முற்றாய் மறந்த நிலைமைக்கு இட்டுச் செல்லப்படுகிறது. இதற்கு ஓர் எல்லை 10 வயதுதான். ஒருசிலருக்குக் கூடலாம் குறையலாம். இதன்பின் இக்குழந்தைக்கு அனுமானம், யூகம், போன்றவற்றை அடிப்படையாய்க் கொண்டு சில விஷயங்களில் நம்பிக்கையூட்ட வேண்டியது அவசியமாகிறது. இந்த அனுமானம், யூகம், உண்மையின் அடிப்படையில் அமையவேண்டியதாகவும் இருக்க வேண்டும். இல்லையானால் அக்குழந்தை ஒருபோதும் தன் சுயநிலையை உணரவே முடியாது. ஆகையால்தான் லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமா இஸ்லாத்தின் அடிப்படையாய் அமைகக்ப்பட்டது. இக்கலிமாவைக் கொண்டேயன்றி வேறு எவ்வகையிலும் மறதியை நீக்கவும் நினைவை உருவாக்கவும் முடியாது. மனிதன் புலனாட்சியில் கட்டுண்டிருப்பதால் கலிமாவை அவனால் இலகுவாய் உணரவும் முடியாது. இதை உணர்த்த வேண்டும் என்பதற்காகவே அனுமான அடிப்படையில் கலிமாவை நிரூபித்துக் காட்டும் தலீல்கள் தரப்பட்டன. அவற்றில் ஒன்றுதான் (ஹுவல் அவ்வலு) 57:3ஆம் ஆயத்தாகும்.

இன்னொரு விஷயம் நாம் காலம் இடம் போன்றவற்றில் கட்டுண்டிருப்பதால் சர்வ ஆலங்களையும் நம்மை விட்டும் வேறானவையாய்க் காணுகிறோம். இக்காட்சியில் நான், எனது அறிவு எனது ஐந்து புலன்கள் அடங்குகின்றன. என் புலன்கள் என் ஊடகம் தான். இந்தப் புலன்கள் தனிப்பட்ட அறிவுடையவையல்ல. நான் என் அறிவைக் கொண்டு புலன்கள் மூலம் உலகைக் காண்கிறேன். இக்காட்சி எனது மனதில் (அறிவில்) பதிவு செய்யப்படுகிறது. இந்தப் பதிவுக்கு நினைவாற்றல் என்பது பெயர். ஆகவே ஐயறிவு என்று மக்கள் கூறுவது தவறான விளக்கமாகும். அறிவு ஒன்றே. அது பதிவாவதற்கு உறுதுணையாய் இருப்பவை ஐந்து புலன்களும்தான். மனதில் நிகழும் பதிவு புலன்கள் வாயிலாய் எடுத்துக் கொண்ட ஒன்றுக்கொன்று முரணான

பல பொருட்களாய் (பௌதீக மாய்) இருக்கலாம். அது பகுப்பில்லாத ஒன்றாய்ச் சூட்சுமமாய் இருந்தால் மனதில் பதிபடமுடியாது. இப்போது நாம் தந்த இதைத்தான் மக்கள் பகுத்தறிவு என்று கணிக்கிறார்கள். உண்மையில் இது பகுத்தறிவேயல்ல. இதன் பெயர்தான் வஹ்மு என்பது.

இந்த வஹ்மு நினைவாற்றலை அடிபப்டையாய் வைத்து இயங்க ஆரம்பிக்கும் போது தான் அது பகுத்தறிவு என்ற பெயரைப் பெறுகிறது. அதாவது வஹ்முவாக இருந்த அறிவு சிந்திக்கும் ஆற்றலைப் பெறுகிறது. தான் எடுத்துக் கொண்ட பொருட்களை அல்லது விஷயங்களை ஒன்றோடு ஒன்றை ஒப்பிட்டு நோக்கிப் பகுத்து ஆராய்ந்து அனுமானித்துக் கணித்து முடிவுகட்டுகிறது. இதன் உயர் நிலைக்கு நுண்ணறிவு விவேகம் என்று கூறப்படும். இவ்வகையறிவுடையவர்கள்தான் பகுத்தறிவுவாதிகள், முத்தக்கீன்கள் என்று குறிப்பிடப்படுபவர்களும் இவர்கள்தான். இவர்களுக்கு (லவ்வாமா) நிந்திக்கும் மனம் இருப்பதால் அந்தமனமே தராசாகவும் (மீஸான்) வேலைசெய்கிறது. இவர்களுக்குத்தான் இறைவேதம் வழிகாட்டும். இது அறிவில் நாம் ஏற்படுத்திக் கொண்ட ஒரு படித்தரமே. இவ்வித அறிவுடையோரின் வாழ்க்கைத் திட்டத்திலுள்ள சகல அம்சங்களையும் ஒழுங்குபடுத்திச் சட்ட அடிப்படையில் அமைக்கப்பட்ட ஒரு வகுப்புத்தான் ஷரீயத் என்பது. நாம் கூறிய ஆராய்வு, அனுமானம், கணிப்பு என்ற தகைமைகளைக் கொண்ட பகுத்தறிவு, பகுக்கப்படும் பல பொருட்கள், பல விஷயங்கள் இல்லாமல் இயங்காது. ஆகவே, இந்த பகுத்தறிவுக்கு ஓர் எல்லை உண்டு. இந்த எல்லையின் பெயர்தான் "ஸிதறத்துல் முன்தஹா" என்பது.

இதை இலகுவாய் விளங்குவதற்கு நாம் முன் கூறிய உதாரணமே போதுமானது. மனிதன் கண்களை மூடிக்கொண்டு முன், பின், மேல், கீழ், வலம், இடம் ஆகிய ஆறு திசைகளிலும் அறிவைச் செலுத்தினால் எல்லா ஆலங்களையும் கடந்து இறுதியில் ஒரு சுத்தசூன்யத்திலே அந்த அறிவு நின்றுவிடும். அந்தச் சுத்தசூனியம் இருளா ஒளியா என்றுகூட அறிய முடியாது. ஏன்?

அங்கு ஒப்பிட்டு நோக்கி முடிவுகட்ட எதுவும்தான் இல்லையே. இந்தச் சுத்தசூனியம் தென்படுவதால் அதற்கப்பால் எதுவுமில்லையென்பது பொருளல்ல. பாகுபாடில்லாமையால் பகுத்தறிவு வேலை செய்யவில்லை என்பதே பொருள். இதுதான் பகுத்தறிவின் எல்லை. இதற்கப்பால் பகுத்தறிவு செயல்பட முடியாதிருப்பதால் இறைவனும் நானும் வேறு வேறென்ற உணர்வுதான் இந்தப் பகுத்தறிவில் அமையும். ஆகையால்தான் இம்மனிதன் அறிவுக்கு முரணானதை திணிப்பினால் (கட்டுப்பாட்டினால்) ஏற்றுக் கொண்டு இபாதத் செய்கிறான். பழக்கம் வழக்கமாய் மாற்றமடையும்போது இந்த இபாதத்தாளி அவரின் நிலைமையை விட்டும் மேலேற முடியாமல் போகலாம். இதைத்தான் பக்திமார்க்கம் என்றும் ஹுர்புல் பராயிலியென்றும் கூறுகிறோம். குர்ஆன் ஹதீஸ்கள் இவ்வகையினருக்கு மட்டுமுரித்தல்ல. இவர்களைவிட உயர் பதவியிலுள்ள வருக்கும் அது வழிகாட்ட வேண்டும். இல்லையானால் அது பொதுமறையென்றாகாது. நாம் காட்டிய இந்தப் பகுத்தறிவு வாதிகளான சிந்தனைச்செல்வர்கள் அவரவர் அறிவுக்கேற்றபடியே குர்ஆன் ஹதீஸுகளுக்கு விரிவுரை வழங்கினார்கள். இந்த விரிவுரைகள் ஒவ்வோரு வகையினருக்குச் சரியாய் அமையலாம். ஆனால் அதுதான் பூரண உண்மை என்றாகாது.

இந்தப் பகுத்தறிவின் இறுதியில் இன்னோரு நுட்பம் இருக்கிறது. இதை அகில், ஹிக்மத் என்று கூறலாம். அகிலும் நுண்ணறிவும் ஒரே கருத்துடையதாய் இருப்பினும் இரண்டும் இரு திசையை நோக்கிச் செயல்படுகின்றன. நுண்ணறிவு பல பொருடகளைக் கொண்டும் "அகில்" பாகுபாடில்லாத ஒன்றை மட்டும் அடிப்படையாய்க் கொண்டும் இயங்குகின்றன. அகில் என்பது தெளிவடைந்த உள்ளத்துக்குரியது. நுண்ணறிவு ஓரளவு சலனமுள்ள உள்ளத்துக்குரியது. நுண்ணறிவு (பகுத்தறிவு) உலகம் என்னை விட்டும் வேறானதென்றும் கண், செவி முதலாம் ஊடகங்கள் வாயிலாய் உலகை உள்ளத்தில் நினைவாற்றலைக் கொண்டு பதிவு செய்து கொண்டேன் என்றும் நம்பியிருந்தது. ஆனால் அகில்லோ இதற்கு மாறாய்க் காணுகிறது. அதாவது

நான் என்றுணரும் என் அறிவிலுள்ளதை (உலகை) கண் செவி முதலாம் ஊடகங்களைக் கொண்டு என்னிலும் வேறாய்க் காணுகிறேன் என்றுணர்கிறது. இன்னும் விபரமாய்க் கூறினால் நான் என்னிடமுள்ளதைப் பார்க்க, அறிய, உணர, விரும்பி, என்னை விட்டும் உலகை வேறானதாயும் நானே உலகுக்கு மையமாயும் நானே உலகாயும் என்னறிவில் காட்சியளிக்கிறேன் என்று காணுகிறது. இது "அகில்" என்ற அறிவு அறியும் அறிவேயன்றி அனுபவமல்ல. இவ்விடம்தான் தரீக்கத் என்பது. (ஹகீகத் மஹ்ரிபத் இங்கே நமக்கு அவசியமல்ல)

இப்போது நோக்கிப் பாருங்கள். பௌதீகமும் சூட்சுமமும் ஒன்றேயென்றும் அது என்னில் இயல்பாயுள்ள என்குணமான அறிவேயென்றும் அகில் அறிகிறது. சிருட்டியாய் இருப்பதும் சிருட்டி கர்த்தாவாய் இருப்பதும் அறிவின் ஒரு படித்தரமே என்றும் அகில் அறிகிறது. இந்த அகில்தான் றப்பையும் அப்தையும் கலாகதிர் என்ற ஹுக்கூம்களில் கட்டுண்ணவைத்தது. சிருட்டியும் சிருட்டி கர்த்தாவும் சொல்லினால் வேறுபட்டாலும் கருத்தினால் (பொருளினால்) ஒன்றே என்றும் கண்டது. பகுத்தறிவு, வஹ்மு போன்றவையும் என்னைவிட்டு வேறல்ல என்று கண்டது. லாஹிறும், பாதினும், அவ்வலும், ஆகிறும் ஒரே விஷயத்தை வஹ்முக்கும் பகுத்தறிவுக்கும் விளக்குவதற்காகப் பாவிக்கப்பட்ட கலிமாக்கள் என்பதை அறிந்தது. அவ்வல் ஆகிர் சிருட்டிக்குரியதென்றும், சிருட்டி தனிப் பொருளாய் இல்லாதிருப்பதால் அது இறைவனின் வெளிப்பாடேயென்றும், வெளிப்பாட்டின் எதிரிடை மறைவாய் இருப்பதால் இறைவன் மறைந்தவனென்றும் சிருட்டியும் சிருட்டி கர்த்தாவும் ஒரே பொருளின் இரு நிலைமைகள் என்பதையும் அகில் அறிந்து கொள்கிறது. ஆகவே பகுத்தறிவு விட்ட எல்லையிலிருந்து அகில் வேலை செய்ய ஆரம்பித்தது. இதற்கும் ஒரு எல்லையுண்டு. இதற்கப்பால் சிருட்டி என்பது இல்லாதொழிந்துவிடும். அகிலும் அற்றுவிடும்.

நாம் கூறிய ஷரீயத், தரீக்கத் இரண்டையும் ஒன்றின் வாயிலாய் மற்றொன்றைத் தரிப்படுத்தும் நோக்கோடுதான் குர்ஆன் ஹதீஸுகளில் சரியான பதங்கள் பாவிக்கப்பட்டுள்ளன. இப்பதங்களை முறைதவறி வியாக்கியானம் செய்வது நுண்ணறிவையும்

அகிலையும் அதற்கடுத்த படித்தரங்களையும் இருட்டடிப்புச் செய்து விடும். நாம் எடுத்துக் கொண்ட விஷயத்துக்கு இவ்வளவு விளக்கமே போதுமானது.

நாம் இங்கே தந்த விளக்கமும் இனிமேல் லாஹிர், பாதின் விஷயமாய்த் தரப்பட இருக்கும் விளக்கமும் கல்வியறிவு சிந்தனை ஆராயும் திறமையுள்ள கவாஸ்களுக்கேயன்றிப் பாமர மக்களுக்கல்ல என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

இப்போது லாஹிர், பாதின் என்ற இரு சொற்களையும் எடுத்துக் கொள்வோம். அவ்வலுக்கு ஆகிர் முரணாய் இருந்ததைப் போலவே லாஹிர் என்ற சொல்லுக்கு பாதின் என்ற சொல் நேர் முரணானதுதான். இதற்கு ஓர் உதாரணம் தராமல் இலகுவாய் விளக்கமுடியாது. இறைவன் விஷயத்தில் தரப்படக்கூடிய எந்த ஓர் உதாரணமும் நூறு வீதமும் சரியாய் இருக்க முடியாது. ஆகவே, உதாரணத்தை முன்மாதிரியாய்க் கொண்டு உண்மையை உணர வேண்டும் என்பதே உதாரணத்தின் நோக்கமாகும். இதைவிட இவ்வுதாரணம் கிறிஸ்தவர்கள் அல்லது இந்துக்கள் கூறியதென்று ஒதுக்க வேண்டியதுமில்லை. மக்கள் அறிவைக் குழப்ப வேண்டியதுமில்லை. உதாரணம் தருவது அனுமானிப்பதற்கே.

எனது நண்பர் இரும்பு என்று ஒரு பொருள் இருப்பதாய்க் கூறினார். நான் அதை எனக்குக் காட்டவேண்டும் என்று கூறினேன். நான் இரும்பைக் கண்டதே இல்லை. நண்பர் ஏதோ ஒரு பொருளைக் கையில் தூக்கி இதோ கோடரி, இதுதான் இரும்பு என்றார். நான் அப்படியானால் இரும்பு எது? கோடரி எது? என்று கேட்டேன்.

நண்பர்: இரும்புதானப்பா கோடரி.

நான் : அப்படியானால் இதை ஏன் கோடரி என்கிறீர்கள்?

நண்பர்: இரும்பினால் ஆக்கப்பட்ட ஒரு பொருள்தானே கோடரி.

நான் : அப்படியானால் இரும்பினால் ஆக்கப்பட்ட வேறு பொருளுமுண்டா?

நண்பர்: ஆம் உண்டு. கத்தி, சுத்தியல், மண்வெட்டி போன்ற யாவும் இரும்புதான்.

நான் : உங்கள் கூற்றுப்படி இரும்பின் ஒவ்வோரு தோற்றத்திற்கும் ஒவ்வோரு பெயர் கூறுகிறீர்கள். ஆனால் எனக்கு இரும்பை மட்டும் காட்ட வேண்டும், இரும்பின் ஒவ்வோரு தோற்றததைக் காட்டி என்னை ஏமாற்ற வேண்டாம். தயவு செய்து இரும்பை மட்டும் காட்டுங்கள்.

எனது நண்பர் ஏதோவெல்லாம் பிரயத்தனம் செய்தார். இரும்பை நீர்போல் உருக்கியும் காட்டினார். அதுவும் இரும்பின் ஒரு தோற்றம்தானே. என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. நண்பராலும் என்னைத் திருப்திப்படுத்த முடியவேயில்லை. இவ்வளவையும் வைத்துக் கொண்டு விஷயத்துக்கு வருவோம், இரும்பு என்று ஏதோ ஒரு மூலப்பொருள் இருப்பது உண்மை. இரும்பின் ஒரு தோற்றம் கோடரி என்பது. கோடரி என்று நாம் கூறுவதற்கு ஒரு வரைவிலக்கணம் உண்டு. இவ்வளவு நீளம், அகலம், கனம், ஸுறத்து, குணம் போன்ற கட்டுப்பாடுகளைக் கொண்டுதான் அதைக் கோடரி என்று கூறினோம். அந்த வரைவிலக்கணமும் கட்டுப்பாடும் நீக்கப்படும்போது மண்வெட்டி என்ற பெயர் ஏற்பட்டது. இதற்கும் வரைவிலக்கண அடிப்படையில்தான் மண்வெட்டி என்ற பெயர் சூட்டினோம். ஒவ்வோரு பொருளும் அதனதன் வரைவிலக்கணம் அல்லது கட்டுப்பாடு (ஹுக்கும்) சட்டத்துக்கமைவாய்த்தான் பெயர் பெற்றது. ஹுக்கும் மாறுபடும்போது பொருளின் பெயரும் மாறுபடும், ஆனால் நாம் இரும்பு என்ற சொல்லால் குறிப்பிடப்பட்ட பொருளின் சுயநிலையை எப்போதும் கண்டதில்லை, காணவும் முடியாது. இரும்பு என்னும் இடுகுறிப் பெயரைக் கொண்ட ஏதோ ஒன்று புலன்களுக்கு, அறிவுக்கு எட்டாததாயும், கட்டுப்பாட்டில் அமையும் போது பற்பல தோற்றமுடைய பற்பல பெயரையும் பெற்றுப் புலன்களுக்கும் அறிவுக்கும் எட்டக்கூடியதாயும் தென்பட்டது. புலன்களுக்கமைந்த தோற்றங்கள் “லாஹிர்” வெளிப்படையாயும் (தோற்றுவதாயும்) கண்ணுக்குத் தெரியாமல் அனுமானத்தினால்

அறியக்கூடிய சுயதன்மை (இரும்பின் குன்ஹு) "பாதின்" மறைந்ததாயும் இருக்கிறது. இரும்பின் கோடரி, கத்திபோன்ற ஸுறத்துக்களைக் கொண்டுதான் இந்தச் ஸுறத்துக்களுக்கு மூலகாரணமான ஏதோ ஒன்றுண்டு என்று அனுமானித்தோம். நாம் கண்ட மண்வெட்டி, கோடரி போன்ற தோற்றங்கள் மாறுபவையாயும் எம்மறிவுக்கு அழிவதுபோல் தென்படுபவையாயும் இருக்கின்றன. நாம் இரும்பின் தோற்றம் அழிந்து விட்டதென்று கண்டாலும் இரும்பு இருந்துகொண்டே இருக்கும். இரும்பு இருக்கும் வரையும் அதற்கு நாமறிந்த தோற்றங்கள் இருக்கலாம். தோற்றம் இல்லையென்றால் இரும்பு என்றொரு பொருள் இருக்கிறதென்ற சொல் பொய்யாகும். இரும்பு என்பது விகாரமான தோற்றத்தைப் பெற்றுக் கோடரி கத்தியாய் வெளியாயிருப்பதால் இவ்வுதாரணம் பொருந்தாது என்றும், இது இந்து அத்வைதிகளின் கூற்று என்றும் இஸ்லாத்தை மொட்டையடிக்கும் கூட்டம் கூறுகிறது. இது அவர்களின் அறிவை எடைபோட்டுக் காட்டுகிறது.

நான் திட்டவட்டமாகக் கூறுகிறேன். இரும்பு எப்போதும் மாறுபடுவதோ, விகாரப்படுவதோ, அழிவதோ கிடையாது. ஆச்சரியப்பட வேண்டாம். சிந்தனையைச் செயல்படுத்துங்கள். இரும்பு என்ற சொல்லால் உணர்த்தப்பட்ட பொருள் மனித அறிவுக்கெட்டாததாய் இருக்கிறது, இதைக் "குன்ஹு" சுயநிலைமை என்று கூறுவோம். குறிப்பிடப்பட்ட இனம் தெரியாத ஒன்றுக்குப் பொதுவாக இரும்பு என்றும் தோற்றங்களின் அடிப்படையைக் கொண்டு கத்தி கோடரி என்றும் கூறுகிறோம். இப்போது பாருங்கள் சுயதன்மையில் இருந்து கொண்டிருக்கிற இரும்பின் கோடரி என்ற சூறத்து மாறுபட்டு, அழிந்து, விகாரப்பட்டு (சட்டங்களைக் கடந்து) தான் கத்தியென்ற பெயரைப் பெற்றிருக்கிறது. ஆகவே, மாறுபட்டது விகாரப்பட்டது இரும்பின் தோற்றமேயன்றி இரும்பல்ல.

நாம் கண்ட தோற்றங்களே இரும்பு என்று நம்பி அத் தோற்றங்கள் இரும்பின் தோற்றமென்றும் இரும்பு என்றும் கூறுகிறோம். இங்கே தோற்றங்களுக்கு இரும்பு என்ற பெயரை இரவல் வழக்காக (இஸ்தியாரா)க் கொள்ளுகிறோம். இரும்பு

என்ற சொல்லால் உணர்த்தப்படும் உண்மையை நாம் விளங்கிக்கொள்ளாமையால் இரும்பு என்பதை எல்லாப் பொருட்களுக்கும் பொதுவாயும், கத்தி, கோடரி என்ற பெயர்களைச் சிறப்புப் பெயராகவும் கொண்டிருக்கிறோம். உண்மையை நோக்கினால் அழிந்ததாய்த் தென்பட்டதும் மாறுபாடடைந்ததாய்த் தென்பட்டதும் இரும்பின் வெளித் தோற்றமான (லாஹிர்) ஸுறத்துக்களேயன்றி இரும்பல்ல. உலகிலுள்ள எந்த ஒரு அணுவை வேண்டுமானாலும் நீங்கள் ஆராய்ந்து பாருங்கள். எந்த ஓர் அணுவானாலும் கூட நாமறியாத ஏதோ ஓர் மூலப்பொருளின் ஸுறத்தாகவே இருக்கிறது. இந்த மூலப்பொருள் தான் (சர்வ ஆலங்களுக்கும்) ஒவ்வோர் அணுவுக்கும் ஆதாரமாயும் இருக்கிறது. அந்த மூலப்பொருளை நாம் காணும் தோற்றங்களைக் கொண்டே அனுமான வாயிலாக நிரூபிக்கிறோம். இதைத்தான் "மஹ்ரிபத்துல் அப்ஹால்" என்று கூறப்படுவது. இதன் சாரம் என்னவென்றால் இருப்பதைக் கொண்டு (சர்வ ஆலங்களையும் கொண்டு) அறிவுக்கெட்டாமல் இருப்பதை அனுமானித்து முடிவு கட்டுவது என்பதே.

நாம் காணும் ஒவ்வோரு பொருளுக்கும் எம்மறிவைக் கொண்டு ஒவ்வோரு பெயரை இடுகுறிப் பெயராய், காரணப்பெயராய், தொழிற்பெயராய்ச் சூட்டுகிறோம். றப்பு என்பது இலாஹியான பெயராய் இருப்பதைப்போல, இரும்பு என்ற சொல்லால் உணர்த்தபபடும் மறைந்த மூலப்பொருளும் இலாஹியான நாமத்தில் அடங்கியது தான். நாம் கூறும் கத்தி, கோடரி என்ற பெயர்கள் "கௌனியாய்" (இரும்பு என்ற பெயருக்கு மறு பெயராய்) இருக்கின்றன. சர்வ ஆலங்களிலுமுள்ள சர்வ அணுக்களும், அறிவுக் கெட்டாமல் மறைந்துள்ள றப்பு என்ற நாமத்தின் தோற்றங்களாகவே இருக்கின்றன. நாம் எப்பொருளுக்கு எப்பெயரைக் கூறினாலும் அது றப்பு என்ற நாமத்தினால் உணர்த்தப்படும் உண்மைப் பொருளின் நாமத்துக்கு நாமமான கௌனியாய் இருக்கிறது. குர்ஆனில் இறைநாமங்களை எழுத ஏழு கடல்களை மையாகக் கொண்டாலும் அது முடிந்தபின் இன்னும் ஏழு கடல்களை மையாகக் கொண்டெழுதினாலும் முடியாதென்று கூறப்படுவதன் உண்மை இதுதான்.

இந்தத் தோற்றங்கள் (ஸுறத்துக்கள்) ஆரம்பத்தில் (வெளியாவதற்கு முன்) மனித அறிவுக்கெட்டாமல் இருந்தவைதான். அழிந்த பின்பும் மனித அறிவுக்கெட்டாதவையே. இரும்பு என்ற சொல்லால் குறிப்பிடப்பட்ட ஓரு பொருள் அதன் சுயநிலைமையில் எவ்வித மாறுபாடுமில்லாமல் இருந்துகொண்டு கோடரி கத்தி போன்ற தோற்றங்களில் காட்சியளித்தது. இத் தோற்றங்கள் இரும்பில் இயல்பாய் இருந்தவைதான். இத்தோற்றங்களை அடிப்படையாய் வைத்துக் கொண்டு (ஸுறத், குணம் என்பவற்றையறிந்து கொண்டு) அவற்றிற்கு மூலமான ஹக்கை அனுமான வாயிலாய் அறிகிறோம். குணத்துக்கும் ஸுறத்துக்கும் இரும்பென்றே கூறுகிறோம், ஆனால் நாம் இரும்பைக் கண்டதே இல்லை. ஏதோ ஓரு ஸுறத்தில் மட்டுப்படுத்தித்தான் காண்கிறோம். நாம் கண்ட தோற்றங்களை இரும்பின் ஸுறத்தென்றும் வெளிப்பாடென்றும் தோற்றுவதென்றும் "லாஹிர்" என்றும் இரும்பின் சுயநிலையை நாமறியாத (நிலையை) "பாதின்" மறைவு என்றும் கூறுகிறோம். இப்போது பாருங்கள் ஆதியாய் அந்தமாய் தெரிவதாய் (தோற்றுவதாய்) மறைவாய் இருந்தது இரும்புதான் என்றால் ஆதியும் அந்தமும் லாஹிறும் பாதினும் இரும்புக்குண்டு என்று நாம் கூறுவது ஏன்? இது எம்முடைய அறிவின் ஓரு நிலையின் மருட்சியாகும். நாம் காலம் இடம் என்ற திரைகளில் கட்டுண்டிருப்பதால்தான் இந்த மருட்சி ஏற்பட்டது. உண்மையை நோக்கினால் இரும்புக்கு ஆதியோ அந்தமோ தோற்றமோ மறைவோ கிடையாது. இரும்பு எடுத்துக் கொண்ட தோற்றங்களுக்குத்தான் இப்பண்புகள் உரியவை.

மருண்ட அறிவுடைய மனிதனுக்கு அவனுடைய அறிவுக்கேற்றபடி தௌஹீதை விளக்கி, சிருஷ்டியும் சிருஷ்டி கர்த்தாவும் சொல்லில் வேறுபடினும் பொருளில் ஒன்றே என்பதை உணர்த்துவதானால் சிருஷ்டிக்கும் சிருஷ்டிகர்த்தாவுக்கும் பொருந்தக்கூடிய விளக்கங்களும் சொற்களும் அவசியமாகும். முன்மாதிரியில்லாத ஒன்றை மனிதன் விளங்கமாட்டான். ஆகையால்தான் ஆதி, அந்தம், தோற்றம், மறைவு என்ற ஒன்றுக்கொன்று நேர் முரணான சொற்களைக் கொண்டு இறைவன்

விளக்கம் தருகிறான். பாகுபாடும் முரண்படு தன்மையும் இல்லாத விஷயத்தைப் பகுத்தறிவு அறியாது தொழிற்படாது. இறை திருநாமங்களில் ஒன்றைத்தவிர மற்றெல்லா நாமங்களும் ஒன்றுக்கொன்று முரணானவையே. உதாரணம் "கஹ்ஹார்" அடக்கியாள்பவன் "ஹப்பார்" மன்னிப்பவன். மற்றும் திருநாமங்களையும் எடுத்து நோக்குங்கள்.

இந்த ஒன்றுக்கொன்று முரணான இலாஹியான நாமங்கள் தான் ஒன்றுக்கொன்று முரணான சர்வ ஆலங்களிலுமுள்ள சர்வ அணுக்களாகவும் அமைந்துள்ளன. கத்தி கோடரி போன்ற ஸுறத்துக்களுக்கு இனம்காண முடியாத இரும்பு ஆதாரமாய் இருந்ததைப் போல சர்வ ஆலங்களின் தோற்றங்களிலும் இனம்காண முடியாத றப்பே ஸுறத்தென்ற கட்டுப்பாட்டில் காட்சியளிக்கிறான். ஸுறத்தும் அதில் வெளியாகும் சக்தியும் அவற்றிற்கு ஆதாரமும் அவனே. கோடரி என்ற ஸுறத்தைக் கொண்டு நாம் அதை இரும்பாய்க் கண்டதுபோல சர்வ ஆலங்களின் ஸுறத்தையும் சக்தியையும் அடிப்படையாய்க் கொண்டு அவற்றை இறைவனின் வெளிப்பாடென்று காணுகிறோம். இரும்புக்குக் கோடரி என்ற தோற்றம் லாஹிறாய் இருந்தது போல இறைவனுக்குச் சர்வ ஆலங்களும் லாஹிறாய் இருக்கின்றன. கோடரி என்ற தோற்றத்தில் இரும்பு "பாதினாய்" பிரபஞ்சம் மறைந்திருந்தது போல சர்வ ஆலங்களிலும் சிருட்டி என்ற தோற்றத்தில் இறைவனும் "பாதினாய்" மறைந்தவனாய் இருக்கிறான். கோடரியின் எந்த ஓர் அணுவும் அதன் செய்திகளும் இரும்புக்கு மறைந்ததல்ல. ஏன்? இரும்பு கோடரியை முற்றிலும் சூழ்ந்த (முஹீத்)தாய் இருப்பதால் எதுவும் மறைய முடியாது. இதைப் போலவே இறைவன் சர்வ ஆலங்களையும் சூழ்ந்த (முஹீத்)தாய் இருக்கிறான். அவனுக்கு ஆலத்திலுள்ள எந்த அணுவும் விஷயமும் தெரியாமல் இருக்கவே முடியாது. (முஹீத் என்ற சொல்லுக்கு எமது முதல் நூற்களில் விளக்கமளித்துள்ளேன். அங்கே கண்டு தெளிக.)

குணியும் அதன் குணமும் (ஒன்றே) ஏகமானதே. அதைப் பிரிக்க முடியாது. பிரிந்ததாய்க் காண்பது அறிவீனமே. இறைவன்

குணியாயும் ஆலங்கள் யாவும் அவன் நாமங்களாயும் அவற்றில் வெளியாகும் சக்தி குணமாயும் இருக்கும் போது இறைவன் வேறு சிருட்டி வேறு என்பது அறியாமையல்லவா? இடமும் காலமும் அவனாயிருக்கும் போது அவன் எப்படி மறைய முடியும்?

அவ்வல் ஆகிர் என்ற சொற்கள் ஒன்றுக்கொன்று முரணாயிருப்பினும் ஏதோ இனம் தெரியாத ஒன்றின் இரு நிலைகளுக்கேற்ற பெயர்களாயிருந்தன. "லாஹிர்" பாதின் என்ற சொற்களும் ஒன்றுக் கொன்று முரணாய் இருப்பினும் ஏதோ இனம் தெரியாத ஒன்றுக்கு அதன் இருநிலைமைகளுக்கிடப்பட்ட இரு பெயர்களாகும். இந்த அவ்வல், ஆகிர், லாஹிர், பாதின் ஆகிய நான்கு சொற்களும் இடம்பெறுகிற 57:3ஆம் இலக்க ஆயத்தில் அல்லாஹ், றப்பு, போன்ற இறைவனின் எந்த ஒரு திருநாமமும் பாவிக்கப்படாமல் "ஹு" (அது) என்ற சொல்லே பாவிக்கப்படுகிறது. இந்த "ஹு" என்பது றப்பையும் அப்தையும் ஒன்று சேர்த்துதான் கூறப்பட்டிருக்கிறது. இது போலவே அவ்வல் ஆகிர், லாஹிர், பாதின் என்ற சொற்களும் இறைவனை மட்டுமோ சிருட்டியை மட்டுமோ தனிப்படக் கொள்ளாமல் இரண்டையும் ஒன்றுசேர்த்தே கூறப்பட்டுள்ளது.

ஆகிறாவில் மூ.்மீன்களுக்கு இறைவன் காட்சியளிப்பான் என்பது நமக்குத் தெரியும். நம்மில் மிகப் பெரும்பாலார் இறைவன் (பாதின்) உருவமில்லாதவன் என்றே நம்பியிருக்கிறோம். தோற்றமில்லாதவன் ஆகிறாவில் தோற்றமளிக்கிறான் என்றால் அதை எப்படி நம்புவது? துன்யாவில் தோற்றமில்லாதவன் ஆகிறாவில் தோற்றுகிறானென்றால் ஆகிறாவில் தான் அவன் (லாஹிர்) வெளிப்படையானவன் தோற்றுபவன் என்றாகும். இது பொருந்தாது. ஆகிறாவில் குறிப்பிட்ட ஒவ்வோரு போதுதான் வெளியாய்த் தோற்றமளிக்கிறான். மீதி வேளைகளில் மறைந்தவனாகத்தான் இருக்கிறான். ஆகவே ஆகிறாவிலும் லாஹிறும் பாதினும் உண்டு என்பது தென்படுகிறது. ஆகிறாவுக்கு துன்யாவும் துன்யாவுக்கு ஆகிறாவும் ஜோடியென்றால் துன்யாவிலும்

அவனுக்கு லாஹிர் பாதின் உண்டு என்பது தென்படுகிறதல்லவா? இரண்டையும் ஏற்றுக் கொள்வதே ஈமான்.

அல்லாஹ் என்ற இடுகுறிப் பெயரால் சுட்டப்படும் உஜூது அல்லது ஹக்கு மிகமிகப் பரிசுத்தமானது. அதற்கு லாஹிர் பாதின் அவ்வல், ஆகிர் போன்ற எவ்வித கட்டுப்பாடுமே கிடையாது. பெயரை ஏற்கும் கட்டுப்பாடுகூட அதற்குக் கிடையாது. இவ்வித பரிசுத்தமாயிருந்தும் (றூபூபியத்) றப்பு என்ற மர்த்தபாவில் சிற்சில கட்டுப் பாடுகளுக்கமைந்ததாயும் இருக்கிறது. இப்படி இருப்பதால்தான் ஒரு றப்பு உண்டு என்ற அறிவு மனிதனுக்கு ஏற்படுகிறது, இதற்கு ஆதி அந்தம் தோற்றம் மறைவு அவசியம், இதை ஏற்பதாயும் மறுப்பதாயும் இருப்பது அவனுடைய (உபூதியத்) அப்து என்றவேறார் மர்த்தபாவாகும். அப்துவுடைய அறிவில்தான் லாஹிர், பாதின், அவ்வல், ஆகிர் தென்படுகிறது. விழித்தவனிடத்தில் சர்வ உலகும் லாஹிர்தான். கண்ணை மூடிக்கொண்டவனிடத்தில் சர்வ உலகும் பாதின்தான். இந்த விஷயம் அறிவையும் அது பயன்படுத்தும் ஊடகங்களையும் பொறுத்த ஓர் விஷயம்தான். இதை மறுக்கவேண்டிய மறைக்க வேண்டிய அவசியமே இல்லை. மறுப்பதும் மறைப்பதும் விளங்காமையே.

குர்ஆன்: 15:29
நான் மனிதனை உருவாக்கி, அதில் என்றூஹுவைப் புகுத்தினால், "அவருக்கு நீங்கள் ஸுஜூது செய்யுங்கள்."

இவ்வாயத்தின்படி ஆதம் (அலை) அவர்களுடைய உயிர் இறைவனுடைய உயிர்தான். மனிதன் என்று கூறப்பட்டது உடலையும் உயிரையும் ஒன்று சேர்த்த சொல்லாகும். மனித உடலுக்கு ஆதியும் அந்தமும் உண்டு. லாஹிறும் உண்டு பாதினும் உண்டு. மனிதனின் உயிருக்கு ஆதி அந்தம் லாஹிர் பாதின் எதுவும் கிடையாது. அது இச் சொற்களைக் கடந்ததாய் இருக்கிறது. ஏன்? அது வியாபகமானது, எல்கையற்றது, புத்தியில் அமையாதது.

ஓர் மண்புழு (நாக்குளிப் பாம்பு)வுக்கு உள்ளது ஒரே உயிர் தானே! அந்தப் பாம்பை இரு துண்டாய் வெட்டினால் காலக்கிரமத்தில் இரு துண்டுகளும் பூரண வழர்ச்சியடைந்த இரு பாம்புகளாக நடமாடுகின்றன. உயிரையும் நாம் இரண்டாய் வெட்டி விட்டோமென்று கூறமுடியுமா? இல்லை. உயிர் வியாபகமானது. அவ்வுயிரில்தான் இரு துண்டங்களும் வாசம் செய்கின்றன. அந்த மண்பாம்பு துண்டாடப்படுவதற்கு முன் நான் ஒருவன் (ஒன்று) என்று நம்பியிருந்தது. இரு துண்டுகளாக்கப்பட்ட பின் அது ஒவ்வொன்றும் நான், நான், என்று தனித் தனியாகவே உணர்கின்றன. இன்னும் பல துண்டங்களானால் இன்னும் பல நான்கள் உருவாகியிருக்கும்.

உயிர் அல்லாஹ்வுடையதென்றால் சர்வ ஆலங்களிலுமுள்ள, சர்வ அணுக்களிலும் இடம்பெற்றுள்ள உயிர் (ஜீவன்) அல்லாஹ்வுடைய உயிராகத்தானே இருக்கும். இந்த உயிர் இயங்க, அதனால் அதனிஷ்டப்படி ஏற்படுத்திக் கொண்ட மழ்ஹர் தான் சர்வ ஆலங்களும். மழ்ஹர் வெளிப்படையாயும் (ஜீவன்) உயிர் மறைந்ததாயும் இருக்கிறது. மழ்ஹறையும் உயிரையும் வேறுவேறென்று கொள்வது எமது வஹ்மேயாகும். ஆதலால் சர்வ ஆலங்களும் இறைவனின் ஸுறத்தே என்பதை மறுக்க முடியாது. எந்த எந்த மழ்ஹறை எப்படி எப்படி ஆக்கிக் கொண்டதோ அந்த அந்த மழ்ஹரில் அதனால் விதிக்கப்பட்ட ஹுக்கூமின்படி இயங்குகிறது. பன்றி பன்றிதான், மனிதன் மனிதன்தான். இந்த இரு தோற்றமும் மழ்ஹறே. யாவையும் இயக்குவது ஏகத்துவமான உயிரே. ஆகவே எக் கட்டத்திலும் சட்டங்களை மீறவேண்டிய அவசியமேயில்லை.

(றூஹு என்பதில் மிக நீண்ட விவரங்களுண்டு. துல்லியமான பல ஞான இரகசியங்களுண்டு. நான் அவற்றை விவரிக்காமல் விட்டுவிடுகிறேன்) ஜீவராசிகளின் உயிர் வேறு என்றும் இன்ஸானுடைய உயிர் வேறு என்றும் மருள வேண்டாம். நப்ஸுதான் வெவ்வேறானது, படைக்கப்பட்டது, அழிவுடையது, றூஹு அறிவுக்கப்பாட்பட்டது. இதன் விவரம் இங்கு அவசியமல்ல.

கலக்கல்லாஹு ஆதம அலாஸுறத்திர்றஹ்மான் என்றோர் ஹதீஸ் இருப்பது நம்மெல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். திடமாக ஆதம்(அலை) அவர்களை அல்லாஹ் றஹ்மானுடைய ஸுறத்தில் (தோற்றத்தில்) படைத்தான் என்பதே அதன் அர்த்தம். இந்த ஹதீஸ் உண்மையென்றால் அல்லாஹ் யார்? றஹ்மான் யார்? அல்லாஹ் முன்மாதிரியின்றிச் சிருட்டிப்பவன். இந்த ஹதீஸின் படி றஹ்மான் என்ற முன்மாதிரியைக் கொண்டே ஆதத்தை அவன் படைத்தான் என்பது தென்படுகிறது. மேலும் றஹ்மானுடைய ஸுறத்துத்தான் ஆதம்(அலை) அவர்களுடைய ஸுறத்தென்றால், (லைஸக்கமித்லிஹிஸையுன்) அவனைப் போன்றது இல்லை யென்றால் ஆதம்(அலை) அவர்களுடைய ஸுறத் யாருடையது? றஹ்மானுடையதுதான். அப்படியானால் அது அல்லாஹ்வுடைய தென்றே கூறப்பட்டிருக்கலாமே! அப்படி ஏன் கூறப்படவில்லை?

அல்லாஹ் என்ற சொல்லால் குறிப்பிடப்பட்ட நிலைமை (மர்த்தபாவுக்கும்) றஹ்மான் என்ற மர்த்தபாவுக்கும் மிகமிக வேறுபாடுண்டு. இதைச் சுருக்கமாய்க் கூறினால் அல்லாஹ்வுடைய ஒரு மர்த்தபாதான் றஹ்மான் என்பது. இன்னோரு மர்த்தபாதான் ஆதம்(அலை) என்பது. அனேக நுட்பங்களை நான் இங்குத் தரவில்லை. இறைவனுடைய ஒருசில மர்த்தபாக்களை மனித அறிவுக்கு எத்திவைப்பதே இந்த ஹதீஸின் நோக்கம். ஆகவே ஆதம் (அலை)மும் சர்வமனிதர்களும் றஹ்மானின் ஸுறத்துத்தான். றஹ்மான் அல்லாஹ்தான். இப்போது நோக்கிப் பாருங்கள் உள்ளது அவனேயன்றி இல்லை. தோற்றுவது மறைந்தது ஆதியானது அந்தமானது இவற்றையெல்லாம் கடந்து நிற்பது அவன்தான். இதை மறுக்கவும் மறைக்கவும் அவசியமில்லை. நிரூபணம் செய்து காட்டக் குர்ஆன் ஹதீஸுகளிலும் (பகுத்தறிவு) விஞ்ஞான விளக்கத்திலும் மறுக்க முடியாத பூரண ஆதாரங்களுண்டு. இதை மறுக்க முடியாது. மறைக்கவும் முடியாது.

இன்னொரு நுட்பம். 15:29ஆம் ஆயத்தில் என் றூஹுவைப் புகுத்தினால் என்று கூறப்படுகிறது. வேறு சில ஆயத்துகளில் தஜல்லியானால் என்று கூறப்படுகிறது. றூஹைப்புகுத்தியவன்

தன்னுடைய றூஹைப்புகுத்தியிருந்தால் ஆதம் நிலைபட்டவராயும் அவன் இல்லாது அழிந்தவனாயும் (மவுத்தானவனாயும்) இருக்கும். அல்லது அவனுடைய றூஹில் அவன் நாடிய அளவு புகுத்தினான் என்றால் அதுவும் முடியாது. ஏன்? றூஹைப்பிரிக்க முடியாது. மனித அறிவைக் கடந்த ஒன்றை மனித அறிவு எவ்வகையிலும் தன் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர முடியாது. கற்பனை பண்ணவும் முடியாது. நம்மால் எமது றூஹைப் பிரிக்க, வகுக்க முடியுமா? பிரிக்க வேண்டாம். அது எங்கே குடியிருக்கிறதென்பதையாவது உங்களால் காட்ட முடியுமா? அதைப் பற்றிய ஓர் அணுப்போன்ற விவரத்தையாவது நம்மால் கூறமுடியுமா? முடியாது.

றூஹு என்பது அல்லாஹ்வுடைய அம்றுவிலுள்ளது என்று றசூல்(ஸல்) கூறியுள்ளார்கள். அம்று என்றால் பரம இரகசியம் என்பது பொருள். இதை எவரிடமும் கூறக்கூடாது என்பது பொருளல்ல. தகுதியுடையவரன்றி வேறுயாருக்கும் விவரிக்கும் விவரம் தரக்கூடாது என்பது பொருள். றூஹு புகுத்தப்பட்டது என்று தப்ஸீர்களில் பாவிக்கப்பட்ட தோறணையில்தான் நானும் விளக்கம் தந்தேன். நீங்கள் திணறக் கூடாதென்பதற்காகத்தான் இந்த ஹதீஸிலும் இவைபோன்ற ஆயத்துகளிலும் படைத்தவன், சிருட்டித்தவன் என்பதற்குப் பாவிக்கப்பட்டசொல் “காலிக்” என்பதே. இந்த நூலின் 1ஆம் பாகத்தில் இச் சொல்லின் ஓர் சிறு விளக்கம் தந்துள்ளேன். அங்கே காண்க. அல்லாஹ் என்ற றூஹு அதனிடத்தே அதில் இயல்பாய் அமைந்திருந்த ஸுறத்தில் தஜல்லியானது என்பதே சாரம்.

ஆதம்(அலை) அவர்களில் தஜல்லியானவன் அல்லாஹ் என்பதும் அவர்களின் உடல் என்றஸுறத் றஹ்மான் என்பதும் இது றுபூபியத்தின் இரகஸியம் என்பதை அறிவிப்பதும் ஹதீஸின் நோக்கம். றூஹு படைக்கப்பட்டதா? இல்லையா? என்பதில் உலமாக்களிடத்தில் விவாதமுண்டு. ஆரிபுகளிடத்தில் விவாதம் கிடையாது. சர்வ ஆலங்களும் இன்ஸானுடைய தோற்றமாயும் றஹ்மத்தாயும் இருக்கிறது. நப்ஸு என்பது வேறோர் செய்தி. றூஹு என்பது வேறோர் செய்தி. இவ்விரு சொற்களும் சிற்சில

இடங்களில் ஒரே பொருளையும் கொடுக்கலாம். இவற்றை நல்லாசிரியர்களிடம் விசாரித்து விளங்கவேண்டும்.

இன்னொரு நுட்பம் நாம் தந்த 15:29ஆம் இலக்க ஆயத்தில் தப்ஸீர்களின் கூற்றைப் போல் றூஹைப் புகுத்தியதாகக் கொண்டால் தௌஹீதுக்கு மாற்றமாய் "ஹுலுல் இத்திஹாத்" நுழைந்துவிடும். அதாவது இந்துக்களில் ஒரு சாராரின் தவறான கொள்கையை உறுதிப்படுத்தும். ஆதம் (அலை) அல்லாஹ் அல்லாததென்றும் அதில் அல்லாஹ் நுழைந்தான் என்றுமாகும். இது சுத்த ஷிர்க்காகும். ஆகவே இவ்வாயத்தில் வேறு அந்தரங்கமுண்டு. இன்ஷா அல்லாஹ் இந்த நூலின் 3ஆம் பாகத்தில் இடம்பெறும்.

அக்கால முஸ்ரீக்கீன்கள் றப்பு யார்? றஹ்மான் யார்? இவர் கூறுவதற்கெல்லாம் நாம் தலைசாய்க்க வேண்டுமா? என்றெல்லாம் விவாதம் செய்திருக்கிறார்கள். குர்ஆனிலிருந்தே ஆதாரம் தரமுடியும். நான் விரிவை அஞ்சுகிறேன். இவர்கள் றசூலால் வெளியாக்கப்பட்ட அவ்வல், ஆகிர், லாஹிர், பாதின் போன்ற சொற்களை எவ்வாறு கண்டார்களோ அதேபோலத்தான் இன்றுள்ள பெரும்பான்மை மக்களும் காணுகிறார்கள். ஆச்சரியப்படுகிறார்கள்.

குர்ஆன்: 38:5
என்னே! எல்லா இலாஹுகளையும் ஒரே இலாஹுதான் என்று ஆக்கிவிட்டாரா? (இந்த முஹம்மத்)

அல்லாஹ் என்ற சொல் தாத்து, சிபாத்து, அஸ்மா மூன்றையும் உள்ளடக்கிக் கொண்டது. வேறு பிரித்துக் காட்டாது. றப்பு, றஹ்மான் என்பவை தாத்து, சிபாத்து, அஸ்மா மூன்றையும் தம்மிடையே கொண்டிருந்தாலும் பாமர மனிதனுடைய அறிவில் வேறு பிரித்துக்காட்டக் கூடியவை. தௌஹீது விஷயமாய்த் தரப்பட்ட சொற்கள், வசனங்கள் எவ்வகையிலும் வேறுபிரித்துக் காட்டாமல் சர்வத்தையும் ஏகமாய்க் காட்டி விளக்கம் தருபவை. ஆகவே ஆதம் (அலை) அல்லது இன்ஸான் என்பது சர்வ

ஆலங்களையும் தன் ஸுறத்தாகக் கொண்டு லாஹீர் ஆகவும், றூஹு என்ற குன்ஹுவைக் கொண்டு மறைந்ததாயும் இருக்கிறது. ஆகவே, ஆதம், இன்ஸான், இன்ஸானுன்கபீர், ஆலமுல் இன்ஸான் என்றெல்லாம் கூறப்படுவது எதுவோ அது றப்பின் மழ்ஹறேதான். இதை ஆரிபுகள் பெரிய இன்ஸான் என்றும் முற்கால ஆதிசங்கரர் போன்றவர்கள் விராட் புருடன் என்றும் கூறுகிறார்கள். இது ஆதாரத்தோடுள்ள உண்மையாய் இருப்பதால் எவர் கூறியிருந்தாலும் அது இஸ்லாத்திலுள்ளதே. இதை மறைக்க, மறுக்க, புரட்ட வேண்டிய அவசியமேயில்லை.

மனிதன் தனது சுயநிலைமையை மறந்த மறதியாளனாய் வாழ்கிறான். இம்மனிதன் மறந்துபோன விஷயத்தைத் தன் நினைவுக்குக் கொண்டு வருவதற்காக இறைவனால் உருவாக்கப்பட்டதே மார்க்கம். தீன் என்பது. மறந்துபோன, அறிவு ஈமான்தாரிகளின் தவறிப்போன சொத்தாயிருப்பதால் அதை அவர் எங்கே கண்டாலும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று றசூல்(ஸல்) அவர்கள் அறிவுரை கூறியுள்ளார்கள். இதை ஓரு பிறநாட்டவர் வேறு காலத் தவர் கூறினாரென்றால் அதை நாம் ஏன் மறுக்க வேண்டும்? நாம் கூறிய எமது நிலையை உணர்வதன் பெயர்தான் நினைத்தல், திக்ர், என்பது. மனிதர்கள் இதை இலகுவாய்க் கையாண்டு வெற்றி பெறுவதற்காக நான்கு படித்தரங்களாக இறைவன் வகுத்தளித்துள்ளான். இதன் ஆரம்பப்படிதான் ஷரீயத் என்பது. இதில் கையாளப்படும் தொழுகை ஞாபகத்தை உருவாக்குவதுதான். திக்ர் செய்வதற்காகவே தொழு என்று இறைவன் கூறுவதை நாம் நினைவில் இருத்திச் செயல்படவேண்டும்.

மனிதன் நினைவை இழந்து நிற்பதால் தன்னை ஆறடி உயரம் கொண்ட ஓர் அற்பப் பொருளாய்க் கணிக்கிறான். அதுமட்டுமன்றி அந்த வெளி உடலுக்குள் தான் குடிபுகுந்துள்ளதாயும் நம்புகிறான். இவனுடைய மருட்சியை நீக்குவதே இஸ்லாத்தின் குறிக்கோள். 1,24,000 நபிமாரும் கறாமாத், முஹ்ஜிஸாத்தும் கலிமாவும் இந்த நன்நோக்குக்காகவே தரப்பட்டன.

கலிமாவில் பாவிக்கப்பட்டுள்ள இலாஹு என்ற சொல் சிருட்டியையும் சிருட்டிகர்த்தாவையும் ஒன்றிணைத்துக் கூறப்பட்ட பல பொருட்களுக்கொரு சொல்லான பொதுப் பெயர்ச் சொல்லாகும். இதை எமது முதல் நூலில் தெளிவுபடுத்தியுள்ளேன். இந்தப் பொதுப் பெயர்ச் சொல்லுக்குப் பதிலாய் வணக்கத்துக்குரிய நாயன் என்று தனிப்பட்ட ஒன்றை மட்டும் சுட்டுவதாய்க் கொள்வது சுத்தப் பொய்யும் புரட்டுமாகும். இதை மனதிலிருத்திக் கொண்டு இப்போது குர்ஆனைப் பாருங்கள்.

குர்ஆன்: 7:85
அவனைத் தவிர உங்களுக்கு வேறு இலாஹு இல்லை.
(விக்கிரகமான இலாஹு இருக்கும் போதுதான் இந்த ஆயத்தை அல்லாஹ் அருளினான்)

நாம் விக்கிரகங்களை கேவலமாய் நம்பியிருக்கும் போதும் அந்த இலாஹுகளையும் தன்னையும் ஒன்றுசேர்த்தே இறைவன் கூறுகிறான். நீங்கள் அவற்றைத் திட்டவேண்டாம். உங்களறியாமையால் அல்லாஹ்வையே திட்டுவீர்கள் என்று கூறுகிறான். குர்ஆன் தெளஹீதுக்கு மாற்றமானதல்ல மாற்றம்போல் காண்பது எம் அறிவீனமாகும்.

குர்ஆன்: 76:1,2
ஒவ்வொரு மனிதனுக்கும் (வெளியாவதற்கு) முன்னர் ஒரு காலம் செல்லவில்லையா? அதில் அவன் இன்ன பொருள் என்றும் கூறுவதற்கில்லாத நிலையில் இருந்தான். கலந்த ஒரு இந்திரியத்துளியைக் கொண்டு நாம் தான் நிச்சயமாக மனிதனைச் சிருட்டித்தோம். அவனைச் சோதிக்கும் பொருட்டு; அவனைச் செவியுடையோனாகவும் பார்வையுடையோனாகவும் ஆக்கினோம்.

இந்த ஆயத்தை நோட்டமிடுங்கள். மனிதனின் லாஹிர், பாதின் என்ற இரு நிலைகள் (மர்த்தபாக்கள்) இங்கே விளக்கம் தரப்படுகிறது. இந்திரியத்தைக் கொண்டு மனிதனின் லாஹிறான பௌதீக உடல் சிருட்டிக்கப்படுவதற்கு முன்பே இன்னவஸ்த்து

இன்ன பொருள் என்றில்லாத ஒரு நிலைமை இருந்தது என்பது தென்படுகிறது. அந்த நிலைமை பெயரற்றதாய் இறைவனோடு ஒன்றியிருந்தது, வேறுபாடற்றிருந்தது என்பது தென்படுகிறது. ஆகவே அந்த நிலைமையில் என்ன பெயரை இறைவன் ஏற்படுத்தியிருந்தானோ அந்தப் பெயர் இன்ஸான் என்பது. இது இறைவனின் இலாஹியான திருநாமம்தான். இது இப்போது கருத்துடையதல்ல. இச் சொல்லுக்குக் கருத்து என்ற பொருள் இல்லையானால் இச் சொல்லை அறிய முடியாது. ஆகவே இந்த இலாஹியான நாமத்தின் பொருளாகவே கருத்தாகவே பௌதீக உடல் அமைந்திருக்கிறது. இந்த பௌதீக உடலை நாம் இன்ஸான் என்ற சொல்லால் குறிப்பிடுகிறோம். நாம் கூறும் இந்த இன்ஸான் என்ற நாமம் கௌனியாய் இருக்கிறது. அதாவது இறைவனிடத்தில் நாம் அறியாமல் இருந்த நாமத்தின்(கருத்தை) பொருளைக் கொண்டுதான் அதை நாம் இன்ஸான் என்றழைக்கிறோம். ஆகவே, நாம் கூறும் பெயர் இறைவனின் பெயருக்குப் பெயராய் அமைந்திருக்கிறது.

இப்போது குர்ஆன் ஹதீஸுகளும் உலகிலுள்ள எல்லா மத அறிஞர்களும் ஏகமனதாய் ஏற்றுக்கொண்ட ஓர் உண்மை உறுதியாகிறது. அந்த உண்மை அல்லது தத்துவம்தான் என்ன? இல்லாதது இல்லாததே. இல்லாதது இருக்காது. வராது. இருப்பது மாறுபடுமேயன்றி அழியாது. இதுதான் தத்துவம்.

இஸ்லாத்தில் விதிக்கப்பட்ட மூன்று உஜூதுக்களின் விவரத்தை இங்கே நோக்குங்கள்.

1. வாஜிபுல் உஜூது: (இது என்றும் நிலைபாடாய் இருந்து கொண்டிருக்கும் உண்மைப் பொருள்)

2. மும்தனில் உஜூது: இது முன்கூறிய உண்மைக்கு முற்றிலும் முரணான பொய்யாகும். உண்மையும் பொய்யும் எப்போதும் எங்கேயும் ஒன்றித்திராது. இதைத்தான் சூன்யம் என்பது. இந்தச் சூன்யம் அல்லது இல்லாமை என்பது எப்போதும் இல்லாததுதான். உண்மையுடன்

உண்மையல்லாத பொய்யும் உண்டு என்றால் எப்படி நம்பலாம்? ஆகவே அல்லாஹ் இல்லாமையென்ற சுத்த சூன்யத்திலிருந்தே ஆக்கினான் என்பது பகுத்தறிவு தொழிற்படாத மருட்சியாகும். இல்லாதது என்றும் இல்லாததுதான்.

3. மும்கினுல் உஜூது: இது குணம், அல்லது பண்பு அல்லது ஸிபத்து என்று கூறப்படும் சூறத்து அஸ்மாவாகவும் சக்தி குணமாகவும் இருக்கிறது. இந்தக் குணமும் ஸூறத்தும் சேர்ந்ததே சிருட்டியென்பது. இந்தச் சிருட்டி இல்லாமையைக் கொண்டு உண்டாவதல்ல. மனித அறிவுக்கு எட்டாமல் இருந்த குணம் மனித அறிவுக்கு அமையக் கூடியதாய்க் காட்சியளிப்பதே சிருட்டியென்பது.

ஆகவே, இல்லாதது இல்லாததுதான். அது எப்போதும் எங்கேயும் இருக்க முடியாது, இந்த விவரம் யூகமுமல்ல கண்டு பிடிப்புமல்ல. இன்று நடைமுறையிலுள்ள தௌஹீது கிதாபுகளில் இந்த விவரம் தெளிவாகத் தரப்பட்டிருக்கிறது. இன்றுள்ள ஏறக்குறைய எல்லா மௌலவிகளுமே இதை அறியமாட்டார்கள். ஆனால் மிகப் பெரும்பாலாருக்கு இதை விளங்கிக்கொள்ள அறிவாற்றல் இல்லை. இப்போது குர்ஆனை நோக்குவோம்.

குர்ஆன்: 29:19
ஒன்றுமில்லாதிருந்த சிருட்டிகளை அல்லாஹ் எவ்வாறு ஆரம்பத்தில் வெளியாக்கினான் என்பதை அவர்கள் பார்க்கவில்லையா? பின்னரும் அவற்றை மீளவைப்பான். நிச்சயமாக இது அல்லாஹ்வுக்கு மிக்க சுலபமானதே.

இவ்வாயத்தைக் கொண்டு சில மக்கள் இல்லாமை என்பதே சிருட்டியின் அசல் என்று நினைக்கிறார்கள். விஷயம் அப்படியல்ல இல்லாமையில் இருந்து என்றால் லாஹிரில்லாமல் பாதினில் இருந்தது என்பதே அதன் பொருள். தத்துவ விளக்கம் புரியாத மக்கள்தான் மருட்சியைடைபவர்கள். இல்லாதது என்றும் இல்லாததே, இல்லாதது வரவே வராது. (வெளியாகாது).

குர்ஆன்: 2:28

நீங்கள் அல்லாஹ்வை எவ்வாறு நிராகரிக்கிறீர்கள்? உயிரற்றவர்களாய் இருந்த உங்களை அவனே உயிருள்ள ஜீவனாக்கினான்; பின்னும் உங்களை அவனே மரிக்கச் செய்வான்; பின்னும் உங்களை உயிர்ப்பிப்பான். நீங்கள் அவனிடமே கொண்டுவரப்படுவீர்கள்.

இவ்வாயத்தில் குபிர் என்ற சொல்லுக்கு நிராகரித்தல் என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதுவே நமக்கு இங்கே போதுமானது. ஆனால் குபிர் என்றால் மூடுதல் மறைத்தல் என்பது பொருள். இப்பொருளைக் கொண்டால் நீங்கள் எப்படி அல்லாஹ்வை மறைப்பீர்கள் மூடுவீர்கள் என்பது பொருள். விரும்பியதை ஏற்றுக்கொள்ளுங்கள். இவ்வாயத்திலும் மனிதனின் லாஹிர் பாதின் என்ற இரு நிலைமைகள் விளக்கம் தரப்படுகிறது. உயிரற்ற நிலை ஒன்று உயிருள்ள நிலையொன்று உயிரற்ற நிலையில் இருந்த ஏதோ இனம் தெரியாத ஒன்றுதான் உயிருள்ள நிலைமையைப் பெற்றிருக்கிறது. இனம் காணக்கூடியதாய் வெளிப்பட்டிருக்கிறது. இருந்த ஒன்றுதான் வந்ததேயன்றி இல்லாதது வரவே இல்லை. வரவும் முடியாது.

குர்ஆன்: 16:3

அவன் வானங்களையும், பூமியையும், உண்மையை (ஹக்கை)க் கொண்டு சிருட்டித்தான்; அவர்கள் இணைவைப்பதை விட்டு அவன் மிக மேலானவன்.

(இவ்வாயத்தின்படி வானம் பூமிகள் இல்லாமையில் இருந்து வெளியாகவில்லை என்பதும் தென்படுகிறது)

குர்ஆன்: 21:30

(ஆரம்பத்தில்) ஒன்றாகச் சேர்ந்திருந்த வானங்களையும், பூமியையும் நாமே பிரித்தமைத்தோம் என்பதையும், உயிருள்ள ஒவ்வொன்றையும் நீரிலிருந்து படைத்தோம் என்பதையும் இந்த நிராகரிப்போர் (காபீர்கள்) கவனிக்க வேண்டாமா? (இதை) அவர்கள் நம்பமாட்டார்களா?

சர்வ சிருட்டிக்கும் மூலகாரணம் ஹக்கே என்பதையும் அந்த ஹக்குடன் பாதில் என்ற பொய்கூடக் கூட்டாக, ஜோடியாகச், சமமாக இணையாக இல்லவே இல்லையென்பதையும் நம்பமுடியாதா? ஆராய வேண்டாமா? என்றுதான் இறைவன் கேட்கிறான். இவ்வாயத்தில் பரிணாமத்தின் இரகசியங்களும் உண்டு அவை இங்கு நமக்கவசியமில்லை.

குர்ஆன்: 81:7

நப்ஸுகள் ஒன்றுசேர்க்கப்படும் போது

(பலவாயிருந்த நப்ஸு இறுதியில் ஒன்றாகச் சேர்க்கப்படுவதானால் ஆரம்பத்திலும் ஒன்றாகவே இருந்திருக்கும். பலவாய் நிலையாயுள்ளது ஒன்று சேராது ஆகவே பலவாய்க் காட்சியளிப்பது இருப்பதான ஏதோ ஒன்றின் ஒவ்வோர் (மர்த்தபா) நிலைமையேயாகும்)

ஆரம்பத்தில் இருந்த இனம் தெரியாத ஏதோஒன்று(வாஜிபுல் உஜூது)தான் அதன் கற்பனைப்படி யாவுமாய்த் தோற்றுகிறது. இந்தத் தோற்றம் உள்ள பொருளான ஹக்கின் அஸ்மா ஸிபத்துக்களேயன்றி வெவ்வேறு தனித்தனி உஜூதுகளேயல்ல. காணும் (தோற்றும்) பொருட்கள் வுஜூதை விட்டும் வெவ்வேறு தனித்தனி உஜூதுகள் என்று மனிதன் தன் அறிவினால் உள்ளத்தில் ஆக்கிக் கொண்ட தவறான நம்பிக்கையே ஷிர்க் என்பது. இது வெறும் கற்பனையான மருட்சியினால் ஏற்பட்ட பொய்யாகும். இந்தப் பொய் என்றுமில்லாத ஒன்றே. இதற்கு உண்மை இருப்பு ஆதாரம் கிடைக்கவே கிடையாது. இல்லாதது உள்ளதாகவும் உள்ளது இல்லாததாகவும் எப்படி அமையும்? இதை எப்படி அறிவு ஏற்கும்? இல்லாதது இல்லாததே. அதிலிருந்து எதுவும் வரமுடியாது. இருப்பது அழியாது என்றால் இதை ஏற்கமுடியும். இருப்பது வுஜூதே. அது எப்போதும் அழிவதில்லை. மாறுபாடாய்த் தென்படும் போது அழிவதாய்க் கணிப்பது மருட்சியே.

குர்ஆன்: 21:30

வானம் (என்றும்) பூமி (என்றும்) இல்லாமல் இருந்ததை நாமே பிரித்தமைத்து; நீரைக் கொண்டு ஒவ்வொன்றையும் வாழ்ந்திருக்கச் செய்தோம், அவர்கள் ஈமான் கொள்ளமாட்டார்களா?

இவ்வாயத்தில் நாமே பிரித்தமைத்து என்று இறைவன் கூறுகிறானே! எதைப் பிரித்தமைத்தான்? பிரிப்பதற்கு முன் ஒன்றாயருந்த ஏதோ ஒன்றை இரண்டாய் பிரித்துத்தான் வானம் என்றும் பூமியென்றும் இறைவன் கூறுகிறான். பெயரில்லாமல் இரண்டற்ற ஒன்றாய் இருந்த நிலைமை (மர்த்தபா) எதுவோ அந்த நிலைமை இறைவனுடைய ஹக்குத்தான். ஏனென்றால் அவனையன்றி இலாஹு இல்லையென்று கலிமா கூறுவதும் வேதவசனங்கள் கூறுவதும் உண்மைதான் என்றால் இரண்டற்ற நிலையில் இருந்த இறைவனே வானம் பூமியென்ற வேறுபாட்டோடு காட்சியளிக்கிறான் என்பது புலனாகிறதல்லவா? முன் ஒன்றாய் இருந்தது இப்போது பலவாயிருந்து மீண்டும் ஒன்றாகவே இருக்கும். இதில் ஒன்றும் ஆச்சரியமல்லவே. பலவாய்க் காண்பது மனிதனின் புலனறிவால் ஏற்பட்ட மயக்கமே. உள்ளது ஒன்றேதான்.

இன்னொரு நுட்பம் நீரைக் கொண்டு ஒவ்வொன்றையும் வாழ்ந்திருக்கச் செய்தோம் என்று கூறுகிறான். இறைவன் நீர் என்பதில் இரு கருத்துகள் தொனிக்கின்றன. ஒன்று பௌதீக உலகிலுள்ள நீர். இந்த நீர் லாஹிறான உலகம் வாழ்வதற்கு ஆதாரமாய் இருக்கிறது. மற்றொன்று இறையறிவு என்ற நீர். இந்த நீர் தான் பௌதீக நீராக வெளியாய் இருப்பது. இறையறிவு என்ற நீரைக் கொண்டே சர்வ ஆலங்களும் நிலைப்பட்டிருக்கின்றன. இந்த இறையறிவென்ற நீர் பாதினாயும் பௌதீக நீர் லாஹிறாயும் இருக்கிறது. ஆகவே பௌதீக நீருக்கும் மூலமாய் இருப்பது இறையறிவென்ற நீராக இருப்பதால் அந்த இறையறிவைக் கொண்டே சர்வ ஆலங்களும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன என்பது தென்படுகிறதல்லவா?

குர்ஆன்: 57:22

பூமியிலோ அல்லது உங்களுக்கோ ஏற்படக்கூடிய எந்தக் கஸ்ட (நஷ்ட)மும் அவற்றை நாம் சிருட்டிப்பதற்கு முன்னாகவே (லவ்ஹுல்மஹ்பூள் என்னும்) புத்தகத்தில் (பதியப்பட்டு) இல்லாமல் இல்லை; நிச்சயமாக இது அல்லாஹ்வுக்கு மிக்க சுலபமானதே.

(இவ்வாயத்தில் தஜயுனுல் ஊலா விளக்கப்பட்டுள்ளது. சிருட்டி என்பது தஜயுனுஸ்ஸானியாகும். இல்லாதது சிருட்டியாகாது. வராது)

இன்னோர் நுட்பம் பௌதீக நீரைக் கொண்டே உலகம் வாழ்கிறது என்பது எல்லோரும் அறிந்த ஒரு விஷயம்தானே! இதைப் புதிதாய் மனிதன் ஈமான் கொள்ள வேண்டிய அவசியமில்லையே! ஈமான் கொள்ள மாட்டார்களா? என்று இறைவன் ஏன் கேட்கிறான்? இறைவனுடைய அறிவினாலேயே சர்வ உலகங்களும் நிலைபட்டு வாழ்கின்றன என்பதை ஈமான் கொள்ளமாட்டார்களா? என்று தான் கேட்கிறான் இறைவன்.

குர்ஆன்: 10:31

(நபியே!) நீர் (அவர்களை நோக்கி) "வானத்திலிருந்தும் பூமியில் இருந்தும் உங்களுக்கு ஆகாரம் அளிப்பவன் யார்? (உங்கள்) கேள்விக்கும், பார்வைக்கும் உரியவன் யார்? இறந்தவற்றிலிருந்து உயிருள்ளவற்றையும், உயிருள்ளவற்றிலிருந்து இறந்தவற்றையும் வெளிப்படுத்துபவன் யார்? சகல காரியங்களையும் திட்டமிட்டு நடாத்துபவன் யார்? என்று கேட்பீராக. அதற்கவர்கள் அல்லாஹ்தான் என்று கூறுவார்கள். அவ்வாறாயின் நீங்கள் பயப்பட வேண்டாமா? என்று கேட்பீராக.

இதைப்போல் குர்ஆன் 23:86,87 29:61, 43:9 போன்ற ஆயத்துகளைப் பாருங்கள் இவை முன் தரப்பட்டுள்ளன. இந்த ஆயத்துகளின்படி முஸ்ரீக்குகள் கூட அல்லாஹ் ஒருவனுண்டு என்றும் அவன் சர்வவல்லமையுமுடையவன் என்றும் இறைவனை விசுவாசம் கொண்டுதான் இருந்திருக்கிறார்கள். கடவுள் இல்லை என்பவன் கூட இறைவனை ஒப்புக் கொண்டிருக்கிறான் என்று எமது முதல் நூலில் கூறியுள்ளேன். இப்படிப்பட்ட உலக மக்களை நோக்கி இறைவன் என்ன கூறுகிறான்?

குர்ஆன்: 57:8

(மனிதர்களே!) உங்களுக்கென்ன (நேர்ந்தது) நீங்கள் அல்லாஹ்வை (ஏன்) விசுவாசிப்பதில்லை, (ஈமான் கொள்வதில்லை) உங்கள் இறைவனைத்தான் நீங்கள் விசுவாசிக்குமாறு (ஈமான் கொள்ளுமாறு) உங்களைத் தூதர் அழைக்கிறார் (இறைவன்) உங்களிடம் நிச்சயமாக வாக்குறுதி பெற்றிருக்கிறான். நீங்கள் மூ.ீமின்களாயிருந்தால் (அல்லாஹ்வையே நம்புங்கள்)

இவ்வாயத்தில் இறைவனை ஈமான் கொள்ளும்படி இறைவன் கூறுகிறானே! இது எந்த ஈமான்? அல்லாஹ் ஒருவனேயென்றும் சர்வ சக்தியும் அவனுடையதே என்றும் நம்பியுள்ள மக்கள் இறைவனைப் பற்றி இன்னும் எதை ஈமான் கொள்வது? அல்லாஹ்வையன்றி அவனுடன் இணை துணை ஜோடியில்லாத ஏகன் என்பதை நம்புவதே ஈமானாகும். இது கடினமான ஒரு விஷயம்தான். மேலே தந்த ஆயத்துகள் முஸ்ரிக்கீன்களை நோக்கியே கூறப்பட்டதென்றும் அது முஸ்லீம்களைச் சேராதென்றும் சிலர் குழப்பியடிக்கிறார்கள். கலிமாவை விளங்கித் தெளிவுபெறாத மனிதன் கலிமாவை வாயால் கூறியதால் முஸ்லீம் என்றழைக்கப்பட்டாலும் அவன் கொள்கையில் எல்லோரையும் போன்றவன்தான். முஸ்லீம்தான். ஆனால் மூ.ீ. மீனல்ல. முஸ்லீம் என்றால் வழிப்பட்டவன் என்பது பொருள். இது அச்சத்தினாலும் ஆதரவாலும் ஏற்படலாம். மூ.ீமீன் என்றால் நம்பியவன், நம்பிக்கையில் உறுதியானவன் என்பது பொருள்.

இன்னொரு நுட்பம் கலிமாவுடைய கருத்தும் அதன் தலீல்களின் கருத்தும் வானமோ, பூமியோ மற்றும் எப்பொருளாய் இருப்பினும் அல்லாஹ்வுக்காகவேயன்றி இல்லையென்று ஆணித்தரமாய் வலியுறுத்துவதால் சர்வ உலகங்களும் அவனையன்றி வேறோர் இடத்தில் இருக்க முடியாது. ஏனென்றால் அவனையன்றி ஒன்றுமில்லையென்னும் போது அவனல்லாத காலமோ இடமோ இருக்க முடியாது. அப்படியானால் இறைவன் அவனுடைய அறிவைக் கொண்டு அவனுடைய அறிவிலேயே வெளியாகி இருக்கிறான் என்பதும் வெளியான வெளியாகிற வெளியாகவேண்டிய அத்தனையும் அவனாக அவன் தோற்றமாகவே இருக்கின்றன என்பதும் தென்படுகிறதல்லவா? இதை மனிதன் ஈமான் கொள்ளாமல் திணறுகிறான். ஆகையால்தான் இறைவன் ஈமான்கொள்ள மாட்டார்களா? என்று கேட்கிறான். இன்னும் பல நுட்பங்களுண்டு இவ்வளவே இங்கு போதுமானது.

குர்ஆன்: 6:98

உங்கள் அனைவரையும் ஒரே ஆத்மாவில் இருந்து உற்பத்தி செய்து (தந்தையிடத்தில்) தரித்திருக்கச்செய்து (கர்ப்பத்தில்) ஒப்படைப்பவனும்

அவனே, சிந்தித்து உணரக்கூடிய (கவுமுகளுக்கு) ஜனங்களுக்கு வசனங்களை (ஆயத்துகளை) நிச்சயமாக விபரித்தோம்.

குர்ஆன்: 7:189
ஒரே மனிதரிலிருந்து உங்களைப் படைத்தான், அவருடன் கூடிவாழ்வதற்காக அவருடைய மனைவியை அவரிலிருந்து உற்பத்தி செய்தான்.

இந்த ஆயத்துகளில் இன்ஸானுக்குரிய பாதினான இரு நிலைமை (மர்த்தபா)க்களும் லாஹிறுடைய இரு நிலைமை (மர்த்தபா)களும் விவரம் தரப்பட்டிருக்கின்றன. இவ்வாயத்தில் மிக அபூர்வ நுட்பங்கள் தென்படுகின்றன. அவசியமான ஒன்றை மட்டும் காண்போம். இன்ஸான் மட்டுமல்லாமல் சர்வ சிருட்டிகளும் காலததில் இடத்தில் கட்டுண்டிருப்பதால் ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு நிலையில் மாறுபட்டுக் கொண்டும் வேறுவேறு பெயரைக் கொண்டும் அமைகின்றன என்பது தென்படுகிறது. ஒரு நிலைமையில் இறைவன் என்று இருந்த ஒன்று அதனிடம் இயல்பாயமைந்துள்ள அதன் பண்புகள் (ஸிபத்து அஸ்மாக்கள்) வாயிலாய் ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு வகையாய்த் தன்னிடத்தே தனக்காகத் தன் அறிவைக் கொண்டே காட்சியளிப்பதாயும் தன் அறிவைக் கொண்டே மறைந்த தாயும் தன்னறிவைக் கொண்டே நிலைப்பட்டதாயும் இருக்கிறது. இந்த ஆரம்பமும் முடிவும் இல்லாத ஒன்றையன்றி எதுவும் எப்போதும் இல்லவே இல்லை. இவ்வாயத்திலுள்ள நப்ஸ் என்ற சொல்லுக்கு ஆத்மா என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. நாம் நப்ஸ் என்ற சொல்லையே நோக்குவோம். நப்ஸு என்பது எது? அது ஒரு பௌதீகப் பொருளா? இல்லை, மனம் என்பதுதான் நப்ஸு என்பது. மனம் அல்லது நப்ஸு என்றால் வெளிப்புலன்களை ஊடகமாய்க் கொண்டறிகிற அறிவின் ஒரு நிலைமைக்குரிய பெயராய் இருக்கிறது. ஓர் தந்தையில் இருந்து வெளியாக வேண்டிய அத்தனை குழந்தை களும் தந்தையின் நப்ஸு என்ற (ஓர் மர்த்தபாவில்) அறிவில்தான் அமைந்திருந்தன இருக்கின்றன என்பதே ஆயத்துத்தரும் ஒரு நுண்பொருள். இதுதான் கலிமா தரும் விவரம், ஆயத்துகள் வலியுறுத்தும் உண்மை.

குர்ஆன்: 2:115

நீங்கள் எங்கு திரும்பினாலும் அங்கு அல்லாஹ்வுடைய வஜ்ஹு (முகம்) அங்கு இருக்கிறது.

குர்ஆன்: 43:84

அவனே வானத்திலும் இலாஹாய்ப் பூமியிலும் இலாஹாய் இருக்கிறான். (இலாஹு என்பது பொதுப் பெயர்ச்சொல் என்பதை மறந்துவிடாமல் சிந்தனை செய்யுங்கள்)

குர்ஆன்: 2:186

"நிச்சயமாக நான் சமீபத்திலிருக்கிறேன், என்னை அழைப்பவனுடைய அழைப்புக்கு நான் மறுமொழி சொல்வேன்.

குர்ஆன்: 9:40

திடனாக அல்லாஹ் நம்மோடிருக்கிறான்.

குர்ஆன்: 57:4

நீங்கள் எங்கிருந்தாலும் அவன் உங்களுடன் இருக்கிறான்.

குர்ஆன்: 50:16

நான் இன்ஸானிடத்தில் அவனது பிராண நரம்பைவிடச் சமீபமாய் இருக்கிறேன்.

மேலே தந்த இவ்வாயத்துகளைப் பாருங்கள். இரு பொருட்கள் ஏககாலத்தில் ஒரே இடத்தில் ஒன்றித்திருக்க முடியாதென்பது ஒரு தத்துவம், பொருளாய் இருக்க இடம் அவசியம். இறைவன் வேறு சிருட்டி வேறு என்பது உண்மையானால் உடனிருத்தல் என்பது பொய்யாய் முடியும். ஏன்? சிருட்டியின் ஆறு திசைகளில் ஒரு திசையில்தான் எப்பொருளும் உடனிருக்க முடியும். இது உடனிருத்தலாகாது. ஒட்டியிருத்தல் என்றோ நெருங்கி இருத்தல் என்றோதான் உணரப்படும். உடன் இருத்தல் என்பதன் பொருள் ஒட்டியிருத்தல் என்பதல்ல. லாஹிர் பாதின் என்ற இரு தன்மைகளும் ஒன்றைவிட்டொன்று வேறு என்றில்லாமல் ஏக காலத்தில் ஒன்றாய் இருத்தல் என்பதே அதன் பொருள். இன்ஸான் என்னும் போது லாஹிறான உடலும் பாதினான உயிரும் வேறில்லாமல் ஒன்றாயிருத்தலே உடனிருத்தல் என்பதற்கு

உதாரணமாகும். லாஹிறான உடலின் பாதினான ஆத்மா என்பது உடலின் உட்புறத்தில் அல்லது வெளிப்புறத்தில் ஓரு குறிப்பிட்ட இடத்தில் இருக்கிறதென்று கூற முடியுமா? பௌதீக உடலான லாஹிறும் பாதினான ஆத்மாவும் இரண்டென்றில்லாத ஒன்றாகவே இருக்கிறது என்பதை மறுக்க முடியுமா?

ஆனால் இது தெளிவுபடாத அறிவில் அமைவதில்லை, மனிதன் உடலைக் காணும்போது உயிர் உணரப்படுவதில்லை, உயிர் உணரப்படும் போது உடல் உணரப்படுவதில்லை. இதுபோல மனிதன் விழித்தவனாயும் உறங்குபவனாயும் ஏககாலத்தில் இருக்க முடியாது. விழிப்பின் போது உறக்கம் இல்லை உறங்கும் போது விழிப்பு இல்லை. இது பகுத்தறிவுக்கு இறைவனால் ஏற்படுத்தப்பட்ட ஓரு இயற்கை நியதியாகும். நப்ஸுடைய ஆறாவது மர்த்தபாவான மர்லியாவின் நிலையை மனிதன் அடையும் போது இந்த லாஹிறும் பாதினும் வேறென்றில்லாத ஒன்றாய் இருப்பதை உணரமுடியும். பௌதீகம் என்பது வெறும் நிழலைப் போன்றது இது அனுபவத்தோடொட்டிய ஓரு விஷயம், இந்த உணர்வு பகுததறிவுக்குரியதல்ல, றூஹுக்குரியதாகும்.

பிராண நரம்பைவிடச் சமீபமாய் இருப்பதும் இது போல்தான் மிகத் தொலைவிலுள்ள ஒன்றையும் மிகச் சமீபமாய் உள்ள ஒன்றையும் பகுத்தறிவோ புலன் அறிவோ உணராது, காணாது. சர்வ உலகத்தையும் காணக்கூடிய கண்ணுக்கு கண்ணாகிய தன்னைக் காணமுடியாது. காண்பதானால் ஓர் மழ்ஹர் அவசியமாகும். ஆகவே இறைவன் தன்னைக் காணத் தன் அறிவையே அஸ்மா என்ற மழ்ஹறாக ஆக்கிக் கொண்டிருக்கிறான். இன்ஸான் அவனாக இருந்தாலேயன்றிப் பிராண நரம்பிலும் சமீபமாய் இருக்கிறான் என்ற வசனம் எவ்வகையிலும் ஒத்துவரவே வராது.

குர்ஆன்: 7:7

நாம் மறைவாக இருக்கவில்லை.

இவ்வாயத்தைக் கொண்டு நான் கேட்கிறேன் இந்த ஆயத்து உண்மைதான் இறைவசனம்தான் என்றால் மறையாமல் வெளியாய் இருக்கிற இறைவனை மக்களில் எத்தனைபேர் பார்த்திருக்கறார்கள்?

எல்லோரும்தான் பார்க்கிறார்கள். ஆனால் தாங்கள் பார்ப்பது இறைவன் தான் என்று ஈமான் (நம்பிக்கை) கொள்கிறார்களில்லை, நான் பார்த்தது இறைவனையல்ல, இறைவனல்லாததையே பார்த்தேன் என்று ஈமான் கொண்டிருக்கிறார்கள். ஆனால் குர்ஆன் ஹதீஸுகளை ஆதாரமாய் எடுத்துக்கொண்ட மகான்களான நல்லடியார்கள் இறைவனையன்றி எதையும் எப்போதும் எங்கேயும் பார்ப்பதே இல்லை. சாதாரண மனிதன் இறைவனைக் காணமுடியாத காரணம்தான் என்ன? இந்த மனிதன் இறைவனும் றசூலும் சொன்ன குர்ஆன் ஹதீஸுகளை அடிப்படையாதாரங்களாய் எடுத்துக் கொளளாமல் அவனுடைய பேதபுத்தியென்ற வஹ்மையும் புலனனுபவத்தையுமே அடிப்படையாய் எடுத்துக் கொண்டான்.

குர்ஆன்: 2:165
சர்வ சக்தியும் அல்லாஹ்வுக்கே உரியது.

உலகில் ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு தனிப்பட்ட சக்தியிருப்பதை நாம் காணுகிறோம். உணரும் சக்தி மனிதனிடமுண்டு. எரிக்கும் சக்தி நெருப்புக்கேயன்றி நீருக்கில்லை. மற்றும் பொருட்களையும் எடுத்துப் பாருங்கள் எல்லாச் சக்தியும் அல்லாஹ்வுக்குரியதென்றால் நெருப்பும் நீரும் அவனாகவே இருக்க வேண்டும். அப்படி இல்லை வேறுவேறு தான் என்றால் குர்ஆன் பொய்யாய் முடியும். குர்ஆன் உண்மையென்றால் எம்மறிவில் ஏதோ கோளாறு (ஷிர்க்) இருக்கிறது என்பது அர்த்தம். சர்வ சக்தியும் அல்லாஹ்வுடையதென்றால் சக்தி வெளியாவதற்கு காரணமாயுள்ள அத்தனை நல்ல தீய பொருட்களும் அவனாகவே இருக்க வேண்டும்.

இந்த ஆயத்தைப் போல் சக்தி, தந்திரம், சூழ்ச்சி, உதவி, போன்ற மற்றும் பண்புகளையும் குறிப்பிட்டுக் கூறப்பட்ட ஆயத்துக் களையும் ஹதீஸுகளையும் தெளிந்த மனதோடு கவனித்துப் பாருங்கள். இந்த ஆயத்துக்கள் அத்தனையுமே இறைவனுடன் அவனல்லாத எதுவும் இல்லையென்ற சுத்த சத்தியமான தௌஹீதை விளக்கும் ஆயத்துக்களாகவே இருக்கின்றன.

குர்ஆன்: 2:224

அல்லாஹ் கேட்கிறவனாயும், அறிகிறவனாயும் இருக்கிறான்.

(இவ்வாயத்தின்படி சிருட்டியின் கேள்வி எது? என்பதைச் சிந்தனை செய்யுங்கள்.)

குர்ஆனில் இடம்பெறுகிற சமீஉன் பஸீறுன் போன்ற வசனங்களையும் உங்களுடைய பார்வைக்கும் கேள்விக்கும் சொந்தக்காரன் யார்? என்ற வசனங்களையும் சிந்தனை செய்யுங்கள். என் பார்வை கேள்வி எனக்குடையதாய் இருக்கும் போதும் அவற்றின் சொந்தக்காரன் இறைவனே என்று கூறுவதன் அர்த்தமென்ன? என்பதைச் சிந்தனை செய்யுங்கள

குர்ஆன்: 10:31

உங்களுடைய கேள்விக்கும், பார்வைக்கும் உரிமையாளன் யார்?

குர்ஆன்: 28:30

மூஸா(அலை) நெருப்பினிடம் வந்தபோது, அவ்வெளியின் வலப்பக்கத்திலுள்ள ஒரு மரத்திலிருந்து: "மூஸாவே! திடனாக உங்களைப் படைத்துப் போஷிக்கும் அல்லாஹ் நான்தான்" என்ற சப்தத்தைக் கேட்டார்.

இந்த ஆயத்தைக் கவனியுங்கள் மூஸா(அலை) அவர்களைக் கூப்பிட்டதும் பேசியதும் அந்த மரம்தான், இதில் இரு பிரமாணங்களைக் கொண்டு நோக்கினால், வெளிச்சத்தைப் பிரமாணமான "இபாரத்துன்னஸ்ஸி"னால் அந்த மரம் அல்லாஹ்வை விட்டும் வேறானதல்ல என்றும் கருத்துப் பிரமாணமான "தலாலத்துன்னஸ்ஸி"னால் அந்த மரம் சிருட்டிகளை விட்டும் வேறானதல்ல என்றும் விளக்கமளிக்கிறது. இது எமது யூகமல்ல. விளக்கம் தெரியாத ஒருசிலர் மரத்தின் திசையிலிருந்து கூப்பிடப்பட்டது என்று விளக்கமளிக்கிறார்கள். இது தவறு. இறைவனுடைய வசனம் சிருட்டியாய் இருந்த மூஸா(அலை) அவர்களுடைய செவியில் விழுந்திருக்கிறது. ஒரு சிருட்டியின் செவியில் விழக்கூடிய சொல்லை இன்னொரு சிருட்டிதான் கூறவேண்டும். திரைமறைவிலிருந்து அல்லது அறிவிக்கக்கூடிய

ஒரு மலக்கு மூலமேயன்றி நேருக்கு நேராக எம்மனிதருடனும் இறைவன் பேசுவதில்லையென்று குர்ஆன் கூறுவதை நாம் அறிவோம். ஆகவே, மரம் என்ற திரையில் (மழ்ஹரில்) இருந்து இறைவன் பேசினான் என்பதை நாம் ஏன் மறுக்க வேண்டும்? மனிதனுடைய ஆராய்வில்லாத வஹ்மு என்ற பேதபுத்தி இறைவனையன்றி எதுவுமில்லையென்பதை ஏற்றுக் கொள்ளாமையால்தான் குர்ஆனுக்குத் தன் இஷ்டம்போல வலிந்துரை கொள்ளமுற்படுகிறது. அல்லாஹ் பார்ப்பவன், கேட்பவன் மட்டுமல்லப் பேசுபவனும்தான்.

இவைபோல் குர்ஆனில் தரப்பட்டுள்ள தெளஹீதின் ஆதாரங்களையும் ஹதீஸில் கூறப்பட்டுள்ள ஆதாரங்களையும் தெளிந்த அறிவோடு சிந்தனை செய்யுங்கள். அநேக ஆயத்துக்களை நான் இங்கு கூறவில்லை.

குர்ஆன்: 23:91

அவனுடன் அவனல்லாத யாதொரு இலாஹும் இருப்பதில்லை. அப்படியிருந்தால் அந்த இலாஹுகள் தாங்கள் சிருட்டித்த சிருட்டிகளைக் கொண்டுபோய் ஒருவர் மற்றவர் மீது யுத்தம் புரிய ஆரம்பித்து விடுவார்.

குர்ஆன்: 17:42

(முஸ்ரிக்கீன்கள், காபீர்களான) அவர்கள் சொல்லுவது போல அவனுடன் பல இலாஹுகள் இருந்தால், அந்த இலாஹுகள் அர்ஷையுடைய இலாஹுவின் பக்கம் போக ஒரு வழியைத் தேடியிருப்பார்கள்.

(பல இலட்சம் இலாஹுகள் இருந்த போதும் தான் அல்லாஹ்வுடன் வேறு இலாஹு இல்லையென்று இறைவன் கூறுகிறான்.

குர்ஆன்: 21:22

வானம், பூமியாகிய அவ்விரண்டிலும் அல்லாஹ் அல்லாத இலாஹுகள் இருந்தால், அவ்விரண்டும் கேட்டை அடைந்திருக்கும்.

(இவ்வாயத்தும் முன் ஆயத்தின் கருத்தையே வலியுறுத்துகிறது)

இலாஹு என்ற சொல் பாவிக்கப்பட்டுள்ள இவை போன்ற மற்றும ஆயத்துகளையும் நீங்கள் எடுத்துக் கொண்டு நோக்குங்கள். "இலாஹு என்பது பொதுப் பெயர்ச்சொல் என்பதை மறந்து விடாதீர்கள். க.்.பாவின் உள்ளே மட்டும் 365 விக்கிரகங்களும் உலகம் முழுவதும் பல இலட்சாதி இலட்சம் இலாஹுகளும் இருந்து கொண்டிருக்கும் போதுதான் இந்த ஆயத்துகளை இறைவன் கூறினான் என்பதை நினைவில் இருத்துங்கள். நீங்கள் தெளிந்த அறிவோடு ஆராய்ந்தால் எந்த ஓர் அணுவும் அவனுடன் இல்லவே இல்லை என்பதையும் இவ்வாயத்துகள வலியுருத்திக் கொண்டிருப்பதை அறியலாம். இறைவனுடன் சுத்த சூன்யம் என்ற இணைகூடக் கிடையாது.

இந்த 21:22ஆம் ஆயத்திலும் இதைப் போன்ற சில ஆயத்துகளிலும் மிகப் பெரிய ஒரு தத்துவ விளக்கம் தரப்பட்டிருக்கிறது. தற்கால விஞ்ஞானம் இத்தத்துவத்தைப் பூரண உண்மையென்று ஒப்புக் கொண்டும் நிரூபித்துக் காட்டிக்கொண்டும் இருக்கிறது. ஆனால் குர்ஆன் 1,400 வருடங்களின் முன்பே இத்தத்துவத்தை விளக்கம் தந்துள்ளது.

ஒரு தத்துவ ஞானம்

நாம் இறைவனைப் பற்றி இளமையில் ஈமான் கொண்ட போது அவன் நித்திய ஜீவனாய் நிலையாய் இருப்பவன் என்பதை அறிந்திருக்கிறோம். ஒரு பொருள் அழிவு பெறாமல் மாறுபடாமல் இருப்பதானால் அப்பொருளல்லாத வேறு எதுவும் அதனுடன் இருக்க முடியாது. இருப்பது அவனும் அவன் சக்தியுமாகவே இருக்க வேண்டும். அப்படியல்லாமல் அவனுடன் அவனல்லாதவையும் உண்டு என்றால் அவனல்லாதவற்றின் சக்தி அவனுடைய சக்தியல்லாத வேறொரு சக்தியாக இருக்கும். ஆகவே, இவ்விரு சக்திகளும் ஒன்றையொன்று என்றோ ஒரு வேளையில் தாக்கும். தாக்குண்டால் ஏதோ ஒன்று அழியும், மிகைத்தது மட்டும் மிஞ்சும். தோல்வியடைந்தது நிரப்பமில்லாத கட்டுப்பாட்டுடைய சிருட்டியின் சக்தியாய்த்தான் இருக்கும். சிருட்டியோ இறைவனைவிட்டு வேறல்லாததாய் இருப்பதால் தாக்க முடியாது ஏன்? சிருட்டியில் வெளியாகும் சக்திதான் இறைவனின் சக்தியாயிற்றே. ஆகவே, அது தாக்காது.

சிருட்டி என்பது அல்லாஹ்வைப் போல் தனிப்பட்ட இலாஹுவல்லாமல் இருப்பதால் அதனால் தாக்க முடியவில்லை. ஆனால் சிருட்டி என்பது தனிப்பட்ட இலாஹுவாய், இறைவனைப் போன்ற ஒரு தனி மூலப்பொருளாய் இருந்தால் நிச்சயமாய்த் தாக்கும். வானம் பூமியோ எப்போதும் இருந்தது போலவே இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே அவனுடன் அவனல்லாத வேறு எதுவுமே இருந்ததில்லை. இருந்ததும் இருக்கப் போவதும் இல்லை. எங்கெங்கே எப்போதெப்போது என்ன என்ன உண்டோ அவை அத்தனையும் அவனாகவே இருக்கின்றன. ஆகையால்தான் அவன் என்றும் எவ்வித மாறுபாடும் விகாரமும் அழிவும் இல்லாமல் ஹையுல் கையூமாக இருக்கிறான்.

இப்படியல்லாமல் சிருட்டி வேறுதான் இறைவன் வேறுதான் என்று கொண்டால் அவன் ஹையுல் கையூம் என்று நாம் ஈமான் கொண்டது வெறும் பொய்யாய் முடியும். பொய் மட்டுமல்ல, ஷிர்க் என்பதன் பூரணமாயும் அமையும். இப்போது பாருங்கள் றசூல் (ஸல்) அவர்கள் ஓரு மூ.்.மீன். அபூஜஹீல் ஓரு முஸ்ரீக். மூ.். மீனுடைய கொள்கையென்னும் ஈமானுக்கு முஸ்ரீக்கின் ஈமான் நேர் முரணானது. மூ.்.மீனுடைய கொள்கை தௌஹீது, முஸ்ரீக்கின் கொள்கை ஷிர்க்கு. றசூல்(ஸல்) அவர்கள் லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவைக் கொண்டு அல்லாஹ் தவிர இலாஹு இல்லையென்று கூறினார்கள். முஸ்ரீக்காய் இருந்த அபூஜஹீலும் அவன் கூட்டத்தினரும் நபியின் சொல்லை ஆச்சரியமாய்க் கண்டார்கள். அச்சொல் பொய் என்று கூறினார்கள். என்னே எல்லா இலாஹுவையும் ஒரே இலாஹு என்றா ஆக்கி விட்டார்கள்! இது ஓர் ஆச்சரியமான செய்திதான் என்று கூறினார்கள். இலாஹுகள் அல்லாஹ் அல்லாதவையென்றே நம்பினார்கள். அல்லாஹ்வும் அவனுடைய றசூலும் அக்கூட்டத்தின் எதிர்ப்புக்கு என்ன விடைகொடுத்தார்கள்? இதோ கேளுங்கள்.

குர்ஆன்: 27:64

அல்லாஹ்வுடன் வேறு இலாஹு இருக்கிறதா? ''நீங்கள் உண்மை சொல்பவர்களாய் (ஸாதிக்குகளாய்) இருந்தால், உங்களுடைய ஆதாரங்களைக் கொண்டு வாருங்கள்'' என்று நீர் கூறும்.

குர்ஆன்: 17:39

(நபியே) இவை உம் இறைவனால் உமக்கு வஹி (மூலம்) அறிவிக்கப் பெற்ற ஞானங்களாகும். ஆகவே, அல்லாஹ்வுடன் மற்றோர் இலாஹுவை (ஆண்டவனை இணையை) ஆக்காதீர்; (அவ்வாறு செய்தால்) நிந்திக்கப்பட்டவராகவும் சபிக்கப்பட்ட வராகவும் நரகத்தில் எறியப்படுவீர்.

(பல இலட்சாதி இலட்சம் இலாஹுகள் இருந்தபோதுதான் இவ்வாயத்துக் கூறப்பட்டது).

அந்த இலாஹுகளை ஆண்டவனாக முஸ்ரீக்குகள் ஏற்றிருக்கவில்லை. அவற்றை அல்லாஹ் அல்லாதவையென்றுதான் நம்பியிருந்தார்கள் என்பதை இங்கே நினைவில் கொள்ள வேண்டும்.

குர்ஆன்: 17:56

(நபியே! இணை ஏற்படுத்துவோரை நோக்கி) நீர் கூறும். அல்லாஹ்வையன்றி நீங்கள் அழையுங்கள்; அவை உங்களுடைய யாதொரு கஷ்டத்தை நீக்கிவைக்கவோ தட்டிவிடவோ சக்தியற்றவை. (மனிதர்களின் எண்ணத்திலுள்ள கற்பனையான ஆண்டவன் யார்? என்பதை நோட்டமிடுங்கள்.)

குர்ஆன்: 4:48

நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைப்பதை மன்னிக்கவே மாட்டான். இதனைத் தவிர எதனையும் தான் நாடியோருக்கு மன்னிப்பான். எவர்கள் அல்லாஹ்வுக்கு இணைவைக்கிறார்களோ அவர்கள் நிச்சயமாகப் பெரும் பாவத்தையே கற்பனை பண்ணுகிறார்கள்.

குர்ஆன்: 4:50

(நபியே!) அல்லாஹ்வுக்கு (இணையுண்டென்று) அவர்கள் அபாண்டமான பொய்யை எவ்வாறு கற்பனை செய்கின்றனர் என்பதை நீர் கவனியும்; பகிரங்கமான பாபத்திற்கு இதுவே போதுமானதாக இருக்கிறது.

இவ்வாயத்துக்கள் மூலம் ஷிர்க் என்பது மனிதனின் கற்பனையால் உள்ளத்தில் உருவாகும் உள ஆக்கல் என்பது தென்படுகிறதல்லவா?

27:64ம் ஆயத்தான இது இறைவன் முஸ்ரீக்கீன்களுக்கு விடுத்த ஓர் பகிரங்க சவாலாய் இருக்கிறது. படைத்த இறைவனால் எவ்வித ஆதாரமும் கிடையாதென்று மறுப்புத் தெரிவிக்கப்பட்ட ஓர் விஷயத்தில், அல்லாஹ் வேறுதான் சிருட்டி வேறுதான் என்று கூறுகிற முஸ்ரீக் எந்த ஆதாரத்தைத் தரமுடியும். அவனுடைய மருண்ட புத்திபோல் புத்தியுள்ள முழு மூடர்களின் உருட்டுப் புரட்டுகளைத் தரலாமேயன்றி குர்ஆன் ஹதீஹுகளைக் கொண்டோ பகுத்தறிவு, தத்துவ விளக்கம் போன்ற எந்த ஒரு ஆதாரத்தையும் தரவே முடியாது. ஏன்? ஆதாரம் கிடைக்கவே கிடையாது. ஆகவே, கலிமாவின் உண்மை அல்லது ஈமானின் (கலிமாவின்) உண்மை எல்லாம் இறைவன் என்பதல்ல என்று ஒருவன் கூறினால் அல்லது

எழுதினால் குர்ஆனுடைய விதிப்படி (தீர்ப்பின்படி) இவன் ஓர் முஷ்ரீக்காயும் குர்ஆன் ஹதீஸுகளை ஏற்றுக் கொள்ளாத இஸ்லாத்தைப் பற்றி எள்ளளவு அறிவுமில்லாத அபூஜஹ்லீன் கொள்கையான ஷிர்க் என்ற விசுவாசத்தில் ஊறியுள்ள சித்த சுவாதீனமற்றவனாகவே இருப்பான். இவ்விதமான ஓர் ஜாஹிலின் பேச்சுக்கும் எழுத்துக்கும் ஓர் பட்டதாரி அணிந்துரை வழங்குகிறார் என்றால் இவர் யாராய் இருப்பார்? நிச்சயமாக இவர் இஸ்லாத்தை விட்டு விலகிய ஓர் முர்த்தத்தாகவே இருப்பார். இவ்வகையினரின் கல்வி வஹ்ஹாபிஸ் அடிப்படையில் உருவான இல்யாஸிஸக் கல்வியாகவே இருக்கும். இல்யாஸ் அப்துல்வஹ்ஹாப் போன்றோர் உலமாக்களால் காபீர்களென்றும் முர்த்தத்துக்கள் என்றும் பத்துவா வழங்கப்பட்டவர்கள். இவர்களின் அடிப்படையைக் கொண்ட நாம் கூறும் மௌலவியும் அந்தப் பத்துவாவில் கட்டுண்டவர்தான். புதையுண்டு கிடக்கும் உண்மையை வெளிப்படுத்தி மக்களுக்கு அறிவு விளக்கம் கொடுக்கிற ஒருவரை முர்த்தத் என்று கூறுகிற ஓர் மௌலவி ஜாஹிலியத்துக்கு மௌலவியாய் இருக்கலாமேயன்றி மூ.்மீன்களின் மௌலவியாய் இருக்க முடியாது. இவர்கள் அறபு பாஷையைப் படித்த மௌலவிகளாய் இருக்கலாம். ஆனால், மார்க்க விளக்கமுள்ள அறிஞர்களேயல்ல. இது மதரஸா செட்டி விக்கட்டோடுள்ளதல்ல. றசூல் (ஸல்) அவர்களும் அவர்களுடைய பல இலட்சாதி இலட்சம் ஸஹாபாக்களும் ஆலீம்கள்தான். இவர்களில் எவரும் மதரஸா செட்டிவிக்கட் உடையவர்களல்ல.

அறபு பாஷை மட்டுமிருந்து மார்க்க விளக்கம் பெறமுடியாது. அபூஜஹ்ல் அறபு பாஷையைத் தாய்ப்பாஷையாகக் கொண்டிருந்தவன். அவன் றசூலுக்கு எதிரியாய் இருந்ததால் றசூலைப் பற்றி நம்மைவிட அவன் தெளிவாகவே தெரிந்திருந்தான். குர்ஆனைப் பூரணமாய் அறிந்தே இருந்தான். ஆயினும் எதிர்வாதம் செய்தான். அவனுடைய எதிர்வாதத்துக்கேற்றபடி அப்போதைக்கப்போதே இறைவனும் றசூலும் சொன்ன வார்த்தைகளை அவன் நம்மைவிடத் தெளிவாக அறிந்தவன். ஆனால், அவனுடைய அறிவு அதை ஏற்கவே இல்லை. ஆகவே, பாஷையை அடிப்படையாய்க் கொள்வதில் அர்த்தமே இல்லை.

அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாதவையும் உண்டு என்று கூறுகிற இந்த ஜாஹீல் கூட்டம் என்ன கொள்கையுடையது என்பதை எமது திருக்குர்ஆனின் தீர்ப்பு 1ஆம் பாகத்தில் ஓரளவு தெளிவுபடுத்தியுள்ளேன். அவர்களுடைய முக்கியமான ஒரு கொள்கை இறைவன் பொய் சொல்வான் என்பது. இன்னொரு கொள்கை ஷைத்தானைவிட றசூல் அறிவு குறைந்தவர் என்பது. இன்னொரு கொள்கை ஷரீயத்தைத் தவிர இஸ்லாத்தில் வேறு எந்த நுண்விளக்கமோ தரீக்கத், ஹக்கீகத், மஹ்ரிபத் என்பவையோ கிடையாதென்பது.

குர்ஆன்: 4:168
(நபியே!) எவர்கள் உம்மை நிராகரித்துவிட்டு, அக்கிரமம் செய்கிறார்களோ அவர்களை அல்லாஹ் மன்னிக்கமாட்டான்; அன்றி தரீக்கத்(என்ற) நேர்பாதையில் அவன் அவர்களைச் செலுத்தவும் மாட்டான்.
(தரீக்கத் இல்லையென்பவன் அதை எப்படிக் காணுவான் எப்படி அதில் செல்வான். எப்படி செலுத்தப்படுவான்?)

இவ்விதமாகக் குர்ஆன் ஹதீஸுகளை ஏற்றுக் கொள்ளாத ஜாஹீல்களுக்கும் இஸ்லாத்துக்கும் என்ன தொடர்பிருக்கமுடியும்? குர்ஆனிலுள்ள பல்லாயிரக்கணக்கான ஆயத்துகளை பொய்யென்றும் ஹதீஸுகள் பிழையென்றும் கூறுகிற இஸ்லாத்தின் உண்மையைக் குழிதோண்டிப் புதைக்கிற இந்த ஜாஹில் கூட்டம் அறபு பாஷையை மட்டுமென்ன 50, 100 பாஷைகளில் பாண்டித்திய முடையவனாய் இருப்பினும் அவன் ஓரு ஜாஹீல்தான். குர்ஆன் ஹதீஸுகளை உண்மையாய் விளங்கித் தெளிந்து அவ்வுண்மையை உலகுக்கு எத்திவைத்தவர் எவரோ அவர்தான் ஆலீம்.

மார்க்க விளக்கமில்லாத இவ்வகையினர்தான் எத்தும் கூட்டம் என்றால் எதை எத்துவார்கள்? அபூஜஹீலான முஸ்ரீக்கின் கொள்கையை ஈமானைத்தான் எத்திவைப்பார்கள். மக்களைத் திசை திருப்புவதற்காக மூ.்.மீன் முஸ்லீம்களின் உடலால் செய்யப்படும் வெளித்தொழுகையை மட்டும் கேடயமாய் வைத்துக் கொண்டும்

மக்களை நம்பச் செய்வதற்காக ஆட்டுத் தோலைப் போர்த்துக் கொண்டும் காட்சியளிக்கிறார்கள். இவர்கள் யாராய் இருப்பார்கள்? நிச்சயமாக ஷைத்தானுடைய கூட்டத்தினர்தான். அல்லாஹ் றசூலால் விளக்கித்தரப்பட்ட ஷிறாத் என்ற நேரான பாதையில் இருந்து வழிதவறிய முர்த்தத்துகளாகவே இருக்கிறார்கள். இவர்களுக்கு மார்க்கத்தின் லாஹிறும் தெரியாது பாதினும் தெரியாது. இக் கூட்டத்தின் குர்ஆன் "பராஹீனே காத்திஆ" "தக்வியத்துல் ஈமான்" போன்ற ஷைத்தான்களின் ஏடுகளே.

இவ்வகையினர்தான் தௌஹீது முஸ்லீம்களின் கொள்கையென்றும் அத்வைதம் இந்துக்களின் கொள்கையென்றும் வாதிப்போர். இவர்கள்தான் அறிவிழந்த விலங்குகளாய் இருக்கும்போது இவ்விரு கொள்கையும் ஒன்றே என்பதை எப்படி அறிவார்கள். தத்துவம் என்றால் உண்மை ஹக்கு என்பது பொருள். அத்வைதம் என்பதன் சரியான அர்த்தம் ஹக்கு அல்லது உண்மை ஒன்று என்பதே. சுத்த சத்தியமான தௌஹீதை யார் எப்பாஷையில் எப்போ சொல்லியிருந்தாலும் அது நபிமாரால் தரப்பட்டதுதான். அது முஸ்லீம்கள் மூ.்.மீன்களுடையதுதான். இந்துக்களுக்கோ வேறு எவருக்குமோ தனிப்பட்ட தௌஹீது கிடையாது. தௌஹீதை ஏகத்துவம், அத்வைதம் போன்ற எந்தச் சொல்லைக் கொண்டும் விளக்கலாம். அதில் தவறொன்றும் கிடையாது. மக்களின் கவனத்தைத் திசைதிருப்பவே இந்த உபாயம் கையாளப்படுகிறது. ஏமாளிகள் ஏமாந்து விடுகிறார்கள். உலகின் எந்த மதத்தை நீங்கள் ஆராய்ந்தாலும் அவற்றில் தௌஹீது இடம்பெற்றிருப்பதைக் காணலாம். ஆனால், தௌஹீதை விளக்கும் முறையில்தான் இஸ்லாத்துக்கும் பிற மதங்களுக்குமிடையில் வேறுபாடு இருக்கிறது. இதை எமது முதற்பாகத்தில் விளக்கியுள்ளேன். கொள்கை விளக்கமே தெரியாத மனிதன் இஸ்லாத்தை எப்படி விளக்குவான்?

குர்ஆனில் முரண்பாடுண்டா?

ஒருசில மூடர்கள் இவ்விதமான மருட்சியில் ஊறி வழிதவறிக் கொண்டிருப்பதற்கு மிக முக்கியமான ஒரு காரணம் இருக்கிறது. அக்காரணம் குர்ஆனேதான். ஆச்சரியப்படாதீர்கள். விளக்கம் தருகிறேன். குர்ஆனில் சில ஆயத்துகள் அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாதவையும் உண்டு என்று விளக்கம் தருபவைபோல் தென்படுகின்றன. குர்ஆனை விளங்கும் ஆற்றலில்லாத, முத்திரை பொறிக்கப்பட்ட மக்களுக்கு இந்த ஆயத்துகள் தவறான விளக்கம் தருபவை போல் தென்பட்டாலும் குர்ஆன் அப்படி விளக்கம் தரவேயில்லை. ஒருசில ஆயத்துகளை இங்கே பார்ப்போம்.

குர்ஆன்: 39:64
நீர் கூறும் ''மூடர்களே! (ஜாஹில்களே!) அல்லாஹ் அல்லாதவைகளுக்காக இபாதத்துச் செய்யவா என்னை ஏவுகிறீர்கள்?"

இவ்வாயத்தில் இபாதத் என்ற சொல் பாவிக்கப்பட்டிருக்கிறது இபாதத் என்ற சொல்லை வணக்கம் என்றே பல தப்ஸீர்களில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. நீங்கள் விரும்பிய எதை வேண்டுமானால் எடுத்துக் கொள்ளுங்கள். இப்போது இச்சொல்லில் நமக்கு விவாதமில்லை. அல்லாஹ் அல்லாதவற்றையா என்பதில் தான் இங்கே நமக்குப் பேச்சு. அல்லாஹ்வுக்கு வேறாய் இருப்பதையா என்று கொண்டாலும் அதிலொன்றும் பிழையேயில்லை.

இந்த ஆயத்தைப்போல் குர்ஆன் ஹதீஸ்களில் இடம்பெறுகிற ஆயத்துகள் ஹதீஸ்களையும் எடுத்துக் கொள்ளுங்கள். இவற்றில் இடம் பெறுகிற மின்தூனி (என்னின் வேறு) மின்தூனில் லாஹி (அல்லாஹ்வின் வேறு) மின்தூனிஹி

(அவனின் வேறு) போன்ற வசனங்கள் அல்லாஹ் வுக்கு வேறானவையும் உண்டு என்பது போல் ஓர் மயக்கை உருவாக்குகின்றன. இவ்விதமான ஆயத்துகள் ஹதீஸுகளை உசூலைக் கொண்டு ஆராயும் போது, இது தௌஹீதை வெளிப்படுத்துவதாயும் ஷிர்க் இன்னதென்பதை ஊர்ஜிதம் செய்வதாயும் அமைந்திருக்கின்றன. இவை முஸ்ரிக்கீன்களை நோக்கியே கூறப்பட்டிருக்கின்றன. அந்த முஸ்ரிக்கீன்கள் அவர்களுடைய இலாஹுகளை அல்லாஹ் வை விட்டும் வேறானவையென்றே நம்பியிருந்தவர்கள். அவற்றை அவர்கள் ஒருபோதும் அல்லாஹ்தான் என்று ஏற்றுக் கொள்ளவில்லை. ஏற்றுக் கொள்வதும் இல்லை. இவ்விதமான மக்களை நோக்கித்தான் அல்லாஹ்வுக்கு வேறாய் இருப்பதையா என்னை வணங்கச் சொல்கிறீர்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. உங்களுடைய எண்ணத்தில் அல்லது நினைவில் அல்லாஹ்வுக்கு வேறானதென்று நீங்கள் நம்பியிருக்கிறீர்களே அதையா என்னை வணங்கச் சொல்கிறீர்கள் என்பது ஆயத்தின் கருத்தாய் இருக்கிறது. இதில் உங்கள் எண்ணத்தில் என்ற ஓரு வசனம் மறைந்து தொக்கியிருக்கிறது. மூடர்களே! என்று விளித்துக் கூறப்பட்ட வசனம் இதை நிரூபணம் செய்கிறது. அதாவது இலக்கிய வழக்கு என்றொரு முறையிருக்கிறது. இந்த வழக்கின்படி மூடர்களான அந்த மக்களின் எண்ணத்தில் இருந்த ஷிர்க்கை வெளிப்படுத்தி அவர்களுடைய பாவனையிலேயே நான் அதை வணங்க மாட்டேன் என்றுதான் கூறப்பட்டிருக்கிறது. அதாவது மனோ இச்சையினால் ஏற்பட்ட மருட்சியை நான் வணங்க மாட்டேன் என்பது பொருள்.

ஷிர்க் என்பது உள்ளத்தில் எண்ணத்தினால் ஏற்பட்ட ஓர் உளநோயாகும். இதை அவர்களுடைய பாவனையில் உணர்த்த வேண்டும் என்பதற்காகவே உங்கள் எண்ணத்தில் என்ற வசனதத்தைத் தொக்கியிருக்கும்படி இறைவன் செய்திருக்கிறான். இதைப் போலவே, நான் வணங்கமாட்டேன் என்று வெளிப்படையாய்க் கூறாமல் அல்லாஹ் அல்லாதவற்றையா வணங்கச்சொல்கிறீர்கள் என்ற கேள்விக் குறியோடு வசனம் முடிவு பெற்றிருக்கிறது. இதில் ஷிர்க்கை எப்படி இறைவன் வெளிப்படுத்தினானோ அதே பாணியில்தான் ஈமானையும் இறைவன் தெளிவுபடுத்துகிறான்.

குர்ஆன்: 10:57
மனிதர்களே! உங்களுக்கு இறைவனிடமிருந்து ஒரு உபதேசம் வந்திருக்கிறது. உங்கள் இருதயங்களிலுள்ள நோய்களுக்கு அது ஒரு சஞ்சீவி(மருந்து) ஆகும். விசுவாசம் கொண்டவர்களுக்கு (அது) நேர் வழிகாட்டியாகவும், அருளாகவும் இருக்கிறது.

மனிதனின் கல்பிலுள்ள ஷிர்க்கென்ற உளநோயைத் தீர்க்கும் மருந்துதான் கலிமாவும் குர்ஆனும் என்பதை இப்போதாவது நம்ப முடியாதா?

அப்படியானால் இறைவன் அந்தத் தொக்கி நிற்கும் வசனத்தையும் சேர்த்தே கூறியிருக்கலாமே. ஏன் அவன் அப்படிக் கூறவில்லையென்று ஒரு சந்தேகம் பிறக்கிறது.

குர்ஆன்: 2:26
இதைக் கொண்டு அநேகரை வழி கெடும்படியும் செய்கிறான்: அநேகரை நேர்வழி பெறும்படியும் செய்கிறான்: பாவிகளைத் தவிர இதைக் கொண்டு வழிகெடும்படி அவன் செய்யமாட்டான்.

குர்ஆன்: 2:88
நம்பிக்கை (ஈமான்) கொள்வோர் சிறுபான்மையினரே!

குர்ஆன்: 11:17
பெரும்பான்மையான மனிதர்கள் நம்பிக்கை (ஈமான்) கொள்ளமாட்டார்கள்.

குர்ஆன்: 6:116
இப்புவியில் இருப்போரில் அநேகர் இருக்கின்றனர். அவர்களைப் பின்பற்றுவீரானால் அவர்கள் உம்மை அல்லாஹ்வுடைய பாதையில் இருந்து திருப்பி விடுவார்கள். வெறும் யூகங்களைத் தவிர அவர்கள் பின்பற்றுவதில்லை அன்றி (பொய்யான) கற்பனையில்தான் அவர்கள் மூழ்கியிருக்கிறார்கள்.

அநேகர் குர்ஆன் ஹதீஸுகளைப் பின்பற்றாமல் தங்கள் கற்பனையான யூகங்களைக் கொண்டு ஒரு சில முன்னோரைப் பின்பற்றிச் செல்கிறார்கள் என்பது தெரிகிறது. அதாவது

பெரும்பான்மையோர் ஷிர்க்குடையோராயும் மிகச் சிறுபான்மையோர் மூ.ீன்களாயும் இருக்கிறார்கள். ஆகவே, பெரும் கூட்டத்தைப் பின் பற் ற வேண் டுமென் று றசூல் (ஸல்) அவர்களால் உபதேசிக்கப்பட்டது அறிவுத் தகமையினால் பெரும் கூட்டமான கண்ணியமுள்ள அவ்லியாக்களைக் குறிப்பிடப்பட்டதேயல்லாமல் தொகையினால் பெரும் கூட்டமான ஷிர்க், குபிருள்ள அவாம்களான பெரும் கூட்டத்தைக் குறிப்பிடப்பட்டதல்ல. இவ்விவரத்தை எமது முதல் நூலில் விளக்கியுள்ளேன்.

பாபிகள் என்போர் முஸ்ரிக்கீன்களே. முஸ்ரிக்கீன்கள் மேலும் வழிகெடுவதற்காகவும் மூ.ீன்கள் மேலும் மேலும் ஈமானில் உறுதியடைவதற்காகவும் தான் இவ்வாயத்தில் உங்கள் எண்ணத்தில் என்ற வசனத்தைத் தொக்கி நிற்கும்படி இறைவன் செய்திருக்கிறான். ஆகவே, உங்கள் எண்ணத்தில் அல்லாஹ்வின் வேறாய் இருப்பதையா என்னை வணங்கச் சொல்கிறீர்கள் மூடர்களே! என்பதுதான் ஆயத்தின் உண்மையான விளக்கமாகும். இவ்வித ஆயத்துகளில் அல்லாஹ்வை விட்டும் வேறானவை இல்லையென்பதை வலியுறுத்துவனவாகவே வசன நடைகள் தரப்பட்டிருக்கின்றன. அல்லாஹ்வை விட்டும் வேறானவை உண்டு என்று கூறுவது ஆயத்தின் நோக்கமல்ல. ஆயத்து அப்படிக் கூறவே இல்லை.

அப்படி வேறுபிரித்துக் காட்ட வேண்டும் என்றிருந்தால் "ஹாதிஹி ஆலிஹா மின்தூனில்லா" இந்த இலாஹுகள் அல்லாஹ்வின் வேறானவை.

"ஹாதிஹில் அற்லு மின்தூனில்லா" இப்பூமி அல்லாஹ் அல்ல "ஹாதிஹி மாஸி வல்லாஹ்" பூமி அல்லாஹ் அல்லாதது.

இவ்விதமான வசன நடைகள் குர்ஆன் ஹதீஸுகளில் இடம் பெற்றிருக்கும். இவ்விதமான வசனநடை குர்ஆன் ஹதீஸுகளில் கிடையவே கிடையாது. ஆகவே நாம் காட்டிய ஆயத்தில் அல்லது குர்ஆன் ஹதீஸுகளில் பாவிக்கப்பட்ட

வசனங்கள் எதுவுமே சிருட்டியையும் சிருட்டிகர்த்தாவையும் வேறுபிரித்துக் காட்டவே இல்லை. வேறுபிரித்துக் காட்டுவதாய் நம்புகிற மக்களுக்கு வேறல்ல என்றே அவ்வசனங்கள் விளக்கம் தருகின்றன. இலக்கியங்களில் முதலிடம் குர்ஆன்தான். இதை விளங்குபவர் நிறைய அறிவுத் தெளிவுடையவராய் இருக்க வேண்டும்.

உறுதிப்பட்டு நீங்காமல் நிலைத்திருக்கிற வஹ்மியான நாம ரூபபேதங்கள் இருக்கின்றன. இது உண்மையே என்று கொள்வது சுத்தமான ஈமான்தான். இதனால் தான் ஏவல் விலக்கல் தரப்பட்டிருக்கிறது. ஆனால் வஹ்மியாகிய நாம ரூபபேதங்கள் யாவற்றிற்கும் உண்மை (ஹக்கு) உஜூதே என்றுணர்வது தெளஹீதாய் இருக்கிறது. ஆகவே நாம ரூபபேதங்கள் அல்லாஹ்வை விட்டு வேறானவை என்று நம்புவது மூடத்தனமும் ஷிர்க்குமாய் இருக்கிறது. இதற்கு எவ்வித ஆதாரமும் கிடைக்காது. இன்னும் சில ஆயத்துகளைப் பார்ப்போம்.

குர்ஆன்: 21:98
திட்டமாக நீங்களும் நீங்கள் இபாதத்துச் செய்கிற (அல்லது வணங்குகிற) விக்கிரகங்களும் நரகக்கட்டைகள் தாம்!

குர்ஆன்: 2:98
திடனாக அல்லாஹ் காபிரீன்களுக்குப் பகைவனாய் இருக்கிறான்.

குர்ஆன்: 26:77
சர்வ உலகங்களையும் பரிபாலிப்பவன் தவிர திட்டமாக விக்கிரகங்கள் எனக்குச் சத்துருக்களாய் இருக்கின்றன.

குர்ஆன்: 2:7
அல்லாஹுத்தஆலா அவர்களுடைய கல்புகளின் பேரிலும், அவர் களுடைய கேள்விப் புலன்கள் பேரிலும் முத்திரை பதித்தான்.

இவ்விதமான ஆயத்துகளும் ஹதீஸ்களும் அப்து வேறு றப்பு வேறு என்பதைத் தெளிவாய்ப் பிரித்து விளக்கம் தருவதாக ஒரு சிலர் நினைக்கிறார்கள். இவ்விதமான வசனங்கள்

தெளஹதுக்குீ எள்ளளவும் மாறுபடாமல் ஒவ்வொரு வகையான வெவ்வேறு விஷயங்களை விளக்குகின்றன என்பது இன்றுள்ள பெரும்பாலான மௌலவிமார்கள் கூட அறியாத விஷயம்தான்.

மேலே காட்டியவை போன்ற ஆயத்துகளை இலகுவாய் விளக்குவதற்காக ஓர் உதாரணம் தரவேண்டியதாய் இருக்கிறது. அகமது செய்யதை அடித்தான் என்ற ஒரு வசனத்தை இங்கு எடுத்துக் கொள்வோம். இதில் அஹமதும் ஷெய்யதும் வெவ்வேறு தானே என்று நாம் மருட்சியடைகிறோம். இந்த வசனத்தில் மூன்று கருத்துகள் தென்படுகின்றன.

1ஆவது:அஹமது வேறு செய்யது வேறு, காலத்தினால் இடத்தினால் தோற்றத்தினால் செயலினால் பெயரினால் இருவரும் வெவ்வேறாய் இருப்பதால் இருவரும் வெவ்வேறானவர்களே என்று நம்புகிறோம்.

2ஆவது:இவ்விருவருக்கும் வேறுபாடுகள் அனேகம் இருப்பினும் சிருட்டி என்ற அடிப்படையில், மனிதன் என்ற அடிப்படையில், அடிக்கும் சக்தி என்ற அடிப்படையில் அடியை ஏற்கும் சக்தியென்ற அடிப்படையில் இருவரும் வெவ்வேறல்ல என்றும் நாம் நம்புகிறோம்.

3ஆவது:அடித்தவன் அஹமது அடிபட்டவன் செய்யது என்று இந்த வசனம் விளக்கம் தருவதை நாம் நம்புகிறோம்.

இப்போது உங்கள் பகுத்தறிவைக் கொண்டு நோக்கிப் பாருங்கள். முன்காட்டிய இவ்விரு அபிப்பிராயங்களும் வெறும் கற்பனையாயும் வஹ்மு என்ற பேத புத்தியின் விளைவாகவும் இருக்கின்றன. 3ஆவது கூறப்பட்டது தான் வசனத்தின் கருத்தாக இருக்கிறது. அஹமது வேறு செய்யது வேறு என்பதும் இரண்டும் ஒன்றுதான் என்பதும் எமது கற்பனையால் ஏற்பட்ட மருட்சிதான்.

இந்த வசனத்தைப் பிரித்துக்காட்டும் வசனமாக வஹ்மு ஏற்றுக் கொண்டால் அந்த வஹ்மே வேறல்ல என்றும் உறுதிப்படுத்துகிறது. எந்த அடிப்படையில் வேறு என்று

காணுகிறோமோ அந்த அடிப்படை எங்களுடைய வஹ்மாயிருக்கிறது. அதே போல் எந்த அடிப்படையில் வேறல்ல என்று காணுகிறோமோ அந்த அடிப்படையும் எங்களுடைய வஹ்மேயாகும். ஆனால், வசனத்தின் உண்மையான கருத்தும் வசனம் தரப்பட்ட நோக்கமும் அடித்தவன் அஹமது என்றும் அடிபட்டவன் செய்யது என்றும் விளக்குவதே. இரண்டு பேரையும் வேறாகவும் ஒன்றாகவும் காண்பது எங்களுடைய பேத புத்தியல்லவா? எங்களுடைய வஹ்மு எந்த அடிப்படையைக் கொண்டிருந்ததோ அந்த அடிப்படையிலேயே தீர்ப்பளிக்கிறது. எமம்டம் வஹ்மிருக்கிறதென்பது எமக்குத் தெரியாமல் இருப்பதால் வசனத்தை எங்கள் நோக்கத்திற்கேற்பப் புரட்டிக் கொள்கிறோம்.

இதைப் போலவே நாம் மேற்காட்டிய ஆயத்துகளிலும் வஹ்முடைய மக்கள் மருட்சியடைகிறார்கள். உலமாக்களிலும் தெளிவான அறிவைப்பெறாத ஒருசாரார் இந்த வஹ்மிலேயே மூழ்கியிருப்பதால் அவர்களுடைய வஹ்முக்கேற்றபடியே குர்ஆன் ஹதீஸுகளை விளங்கிக்கொள்கிறார்கள். விளக்கம் தருகிறார்கள்.

அல்லாஹ்வுடைய லஹ்னத்துப் பொய்யர்கள் பேரிலாயிருக்கும். இந்த ஆயத்தில் அல்லாஹ்வும் பொய்யனும் வேறு என்றோ ஒன்றுதான் என்றோ கூறப்படவில்லை. லஹ்னத்துச் செய்பவன் அல்லாஹ் என்றும் லஹ்னத்துப் பெற்றவன் பொய்யன் என்றும்தான் ஆயத்து விளக்கம் தருகிறது. இதைப்போல அல்லாஹ் அவர்கள் கல்புகளின் பேரில் முத்திரை பதித்தான். என்ற வசனமும். முத்திரை பதித்தவன் அல்லாஹ் என்றும் முத்திரையைப் பெற்றவன் மனிதன் என்றும்தான் விளக்கம் தருகிறது. மற்ற ஆயத்துகளையும் இதைப் போல ஆராய்ந்து பாருங்கள், தெளஹீதை உறுதிப்படுத்துவதே குர்ஆனின் நோக்கமென்றால் தெளஹீதுக்கு மாற்றமான எந்த ஒரு வசனமும் குர்ஆனில் இடம்பெற முடியாதல்லவா? விளக்கம் பெறுகிற எம் அறிவு குர்ஆனை விளங்கும் தகுதியற்றிருப்பதால்தான் இவ்வித மருட்சி எமக்கேற்படுகிறது.

குர்ஆன் ஹதீஸுகளில் தௌஹீதை உறுதிப்படுத்தும் முஹ்கமுவைச் சேர்ந்த வசனங்கள் இபாரத், தலாலத், இஸாறத், இஹ்திலாவ் என்ற நான்கு பிரமாணங்களினாலும் ஒரே கருத்தை மட்டும் உறுதிப்படுத்தக் கூடியவையாய் இருக்கின்றன. இதைவிட றஹ்மத், அதாலத்தை விளக்கக்கூடிய வசனங்களே குர்ஆன் ஹதீஸுகளில் மிகப் பெரும்பாலாய்த் தரப்பட்டிருக்கின்றன. இந்த வசனங்கள் மிகமிக அதிகமான, அவரவர் அறிவுக்களவான விளக்கத்தைத் தரக்கூடிய முதஸாபிஹாத்தென்ற பல கருத்களையுடைய வசனங்களாயிருக்கின்றன. இந்த வசனங்கள் வெளிப் படையில் மனித அறிவுக்கு விளங்குவது போல் தென்பட்டாலும் உண்மை அப்படியல்ல. இமாம்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு அபிப்பிராயங்களைக் கொண்டிருந்த காரணம் இதுதான்.

இவ்விதமான ஆயத்துகள் வெளிப்படையில் தௌஹீதுக்கு மாற்றம் போல் தென்பட்டாலும் உண்மையில் அவை தௌஹீதையே உறுதிப்படுத்துகின்றன. இவ்விதமான ஆயத்துகளைத் தெளிந்த அறிவுடைய மக்களிடம் விவரமாய்க் கேட்டறிந்து விளங்க வேண்டும். வாய் வேதாந்தம் வரட்டுப்புத்தி இதற்கு இடம்பாடாகாது.

இப்போது குர்ஆனின் வசனநடையை வேறொறு கோணத்தில் பாருங்கள்.

அவர்கள் தங்கள் நப்ஸுகளின்பேரில் கொடுமை செயகிறார்கள் என்று இறைவன் குர்ஆனில் கூறுகிறான். இதில் தங்கள் நப்ஸு என்றால் தாங்கள் யார்? நப்ஸு யார்? என்னுடைய நப்ஸு என்றால் நான் வேறு நப்ஸு வேறு என்பது பொருளா? நான் தான் நப்ஸு நப்ஸுதான் நான் என்பது பொருளா? நான் தான் நப்ஸு இது ஒரு கருத்து. நான் என்பது நப்ஸல்ல. இது ஒரு கருத்து. இவற்றில் எது சரியானது? இரண்டும் சரியானதே. என்னுடைய நப்ஸு என்னும் போது உடைய என்ற ஒரு சொல் பாவிக்கப்படுகிறது. இந்த உடைய என்ற சொல்லை இலக்கண விவரப்படி தற்கிழமைப் பொருளில் எடுத்துக் கொண்டால் நானே நப்ஸு, நப்ஸே நான் என்பது உண்மைதான். ஆனால் அந்த

உடைய என்ற சொல்லை இலக்கணப்படி பிறிதின்கிழமைப் பொருளில் எடுத்துக் கொண்டால் நான்வேறு என் நப்ஸு வேறு என்பதும் உண்மைதான்.

இப்போது அல்லாஹ்வுடைய றசூல் என்று குர்ஆன் கூறுவதைப் பாருங்கள். இந்த வசனத்திலும் உடைய என்ற உருபுதான் பாவிக்கப்பட்டிருக்கிறது. இந்த உடைய என்பதைப் பிறிதின் கிழமைப் பொருளில் கொண்டால் அல்லாஹ் வேறு றசூல் வேறு என்பது உண்மை உடைய என்ற சொல்லை தற்கிழமைப் பொருளில் கொண்டால் அல்லாஹ்தான் றசூல், றசூல்தான் அல்லாஹ் என்பது உண்மை.

இவ்விரண்டு முரண்படுகருத்தையும் குர்ஆன் தந்து எங்களை ஏன் குழப்ப வேண்டும்? குழப்பம் தருவதை இறைவன் பேச்சாக எப்படி ஏற்பது?

விஷயம் அப்படியல்ல. குர்ஆன் இறைவனின் உண்மையான பேச்சுத்தான். குர்ஆன் யாரையும் குழப்புவதே இல்லை. அதற்காக அது தரப்படவும் இல்லை. எங்களுடைய அறிவு இறை வசனத்தை உணரும் தகுதியற்றதாய் இருப்பதால் எங்களைக் குர்ஆன் குழப்புகிறதென்று கூறுகிறோம். நாம் கலிமாவைக் கொண்டு ஈமான் கொண்டது உண்மையென்றால் குழப்பம் ஏற்பட்டிருக்காது. இவ்விதமான மருட்சிக்குக் காரணம், நாம் கற்றிருக்கும் எம்முடைய இலக்கண விவரத்தை கொண்டு குர்ஆனை எடைபோட முனைவது தான். எம்முடைய இலக்கணம் எம்மாலேயே உருவாக்கப்பட்டதென்பதையும் இறைவன் பேச்சு அதைவிட மேலான உண்மையான இறைவனின் இலக்கணத்துக்கமைவானது என்பதையும் நாம் மறந்துவிடுகிறோம். நாம் பட்டத்தில் ஓர் அல்லாமா என்பது உண்மை. இந்தப் பட்டமும் எமக்கு நாம் ஏற்படுத்திக் கொண்டதுதானே.

இறைவனோ உலக நடைமுறை இலக்கண இலக்கியத்தில் சிக்குண்டவர்கள் ஒளித்திரையில் மாட்டிக் கொண்டவர்கள் என்பதை

அறிந்தவன். ஆகையால்தான் எழுத்து வாசனையற்ற உம்மிகளையே நபிமார் றசூல்மாராக அனுப்பினான். அவர்களிடம் திரை இல்லை. அவர்களின் கொள்கையை உணர்ந்த மக்களும் திரை நீக்கம் செய்யப்பட்டவர்கள். இவ்வகையினர் குர்ஆன் ஹதீஸுகளில் எவ்வித குழப்பமும் அடைவதே இல்லை. இதற்குக் காரணம் அவர்கள் கலிமாவை உண்மையாய் விளங்கிக் கொண்டிருப்பதேயாகும்.

அவர்கள் தங்கள் நப்ஸுகளின் பேரில் கொடுமை செய்பவர்களாய் இருக்கிறார்கள் என்ற வசனத்தில் பல அர்த்தங்கள் இருப்பினும் அவசியமான மூன்றை மட்டும் தருகிறேன். இந்த ஆயத்து அவாம், கவாஸ், கவாஸுல்கவாஸ் ஆகிய மூன்றுவகை மனிதரையும் நோக்கியதாகும்.

அவாம் என்ற மனிதன் என்னுடைய சேர்ட்டு என்பதை எப்படி வேறு என்றுணர்ந்தானோ இதே அடிப்படையில்தான் என்னுடைய நப்ஸு, அல்லாஹ்வுடைய றசூல், என்ற வசனங்களையும் பொருள் கொள்கிறான். இவன் இலக்கணம் தெரியாதவனாயிருப்பின் உடைய என்ற சொல்லை பிறிதின் கிழமைப் பொருளில் அவனையறியாமலே பாவிக்கிறான். இவனுக்குக் குர்ஆன் வழிகாட்டவே காட்டாது. இவனுடைய அறிவில் இவன் கொண்ட கருத்து இவனிடத்தில் சரியானதுதான். ஆனால் இதுதான் பூரண உண்மையென்பது பொருளல்ல. கவாஸுகள் இதற்கு மாறானவர்கள். இவர்கள் ஓரளவு பகுத்தறிவு தொழிற்படுபவர்கள். இவர்கள் அந்த உடைய என்ற உருபுச் சொல்லைத் தற்கிழமைப் பொருளில் பாவிக்கிறார்கள். நான் தான் நப்ஸு என்றும் அல்லாஹ்தான் றசூல் என்றும் காணுகிறார்கள். இவர்களுடைய அறிவில் இது சரிதான். இது ஓரளவு உண்மையை நெருங்கியதுதான். ஆனால் பூரண உண்மையல்ல. இவர்களுக்குக் குர்ஆன் நிச்சயமாக வழிகாட்டும்.

கவாஸுல் கவாஸுகளோ இவ்விரு கூட்டத்தினரும் மருட்சியுடையவர்கள் என்று காணுகிறார்கள். அவாம்கள் இருளென்ற திரையில் சிக்குண்டவர்கள் என்பதை அறிகிறார்கள்.

அவாம்களின் பேச்சை இவர்கள் முற்றிலும் தவறாய்க் காண்பதால் அவாம்களுக்கும் இவர்களுக்கும் எவ் விளக்கத்திலும் ஒற்றுமை நிலவாது. நல்லடியார்களைக் காபீர் முர்த்தத் என்று பட்டம் சூட்டிக் கொலை செய்த கூட்டம் இந்த அவாம்கள்தான். இவர்களில் பெரும் பெரும் பட்டதாரிகளும் இருக்கலாம். ஆயினும், அறிவுத் துறையில் இவ்வகையினர் அவாம்கள்தான். இவ்விஷயத்தை நோக்கினால் இவ்விரு வகையினரும் முரண்படுவது ஏன்? என்பதை நாம் அறிய வேண்டும்.

அல்லாஹ்வுடைய றசூல் என்னும் போது அதில் பாவிக்கப்பட்டுள்ள உடைய என்ற உருபை வஹ்மு என்ற அறிவீனம் பிறிதின் கிழமைப் பொருளில் எடுத்துக் கொண்டுதான் அல்லாஹ் வேறு றசூல் வேறு என்று கூறியது. அறிவீனம் எடுத்துக் கொண்ட உடைய என்ற சொல்லைப் பகுத்தறிவு தற்கிழமைப் பொருளில் கொண்டதால் அல்லாஹ்வும் றசூலும் ஒன்றே என்கிறது. (வஹ்முக்கு) பேதபுத்திக்கு அறிவு மாறுதானே! பேதபுத்தி இருளிலும் பகுத்தறிவு ஒளியிலும் சிக்கியிருந்தன. உடைய என்ற சொல் ஒரு வகையினருக்கு ஒரு பொருளையும் இன்னோர் வகையினருக்கு இன்னோர் பொருளையும் கொடுத்தது போலவே குர்ஆன் வசனங்களும் அவரவர் அறிவுக்கேற்ற விளக்கம் தருகிறது. உண்மையாகவே குர்ஆன் அப்படித் தருவதில்லை. எம்முடைய அறிவின் தகைமைக்கேற்ற பொருளை நாம் எடுத்துக் கொள்கிறோம் என்பதே உண்மை. ஒரு ஆயத்து வெளிப்படையாய் இல்லையென்பதை அதே ஆயத்து ஆம் உண்டு என்றும் விளக்கும். இந்த இரு வகை விளக்கமும் மனித யூகம்தான். இது சரியாயுமிருக்கலாம், பிழையாயும் இருக்கலாம்.

ஆனால், மனிதனுடைய பகுத்தறிவில் ஓர் உயர் பதவி உண்டு. அதை நுண்ணறிவு, விவேகம் என்று கூறப்படும். இந்த அறிவுதான் குர்ஆனுடைய உண்மையை வெளிப்படுத்தும், இந்த நுண்ணறிவுடையோர் தான் முத்தகீன்கள் என்போர். இவர்கள் தான் முத்மஇன்னாவின் தகைமையுடையவர்கள்.

இவர்கள் கொண்ட ஈமானின்படி அல்லாஹ் வையன்றி எதுவுமில்லை என்பதை அனுபவவாயிலாய் அறிந்தவர்கள். மயக்கம் தீர்ந்தவர்கள். குர்ஆனின் எவ்வசனமும் உண்மைக்குப் புறம்பல்ல என்று காண்பதால் மாபெரும் மேதைகளான பட்டம் பெற்ற மக்களின் மொழி பெயர்ப்புகளில் கூடச் சில தவறுகளுண்டு என்பதை அறிகிறார்கள். சமீபத்தில் இன்ஷா அல்லாஹ் ஒரு ஆயத்தை விளக்குவேன் பொறுமையடையவும். இந்த மகான்கள் நப்ஸு என்பது வெறும் சொல்லேயன்றிப் பொருளில்லையென்று காண்கிறார்கள். நப்ஸு என்ற சொல்லால் உணர்த்தப்படுவது என்னுடைய அறிவில் ஏற்பட்டுள்ள ஒரு நிலைமை (மர்த்தபா) என்று காண்கிறார்கள். அறிவை ஷிபத்து அல்லது குணம் என்று கொண்டால் அது லாஹிர் என்றறிகிறார்கள். பாதின் என்று கொண்டால் நான்தான் அறிவு என்றும் நம்புகிறார்கள். இதற்கதிகமாய்க் கூறமுடியாது. ஆகவே, இவர்கள் ஒவ்வோர் ஆயத்துக்கும் (முதஸாபிஹாத்) நாற்பதுக்கும் அதிகமான பொருட்களை அறிகிறார்கள். இவர்கள்தான் மூ.்மீன்களில் நிரப்பம் பெறக்கூடியவர்கள், நாளடைவில் நிச்சயமாக வெற்றி பெறுவார்கள்,

குர்ஆன்: 55:26,27
பூமியிலுள்ள யாவும் அழிந்து போகும். மிக்க கண்ணியமும், பெருமையும் தங்கிய உமதிறைவன் மட்டும் நிலைத்திருப்பான்.

இந்த ஆயத்தின்படி யாவும் அழிந்துவிடும் அல்லாஹ் மட்டுமே மிஞ்சுவான் என்பது வெளிப்படையாய்த் தென்படுகிறது. பூமியும் மிஞ்சும் என்பது தென்படுகிறது. இன்னும் சில ஆயத்துகள் வானம் பூமியாவும் அழிந்துவிடும் என்று கூறுகின்றன.

குர்ஆனின் இந்த வசனம் ஒரு சாராருக்கு மருட்சியை ஊட்டுகிறது. அல்லாஹ் ஹக்கு என்ற உண்மைப் பொருளாய் இருக்கிறான். அவன் அழிவதில்லை. அழியமுடியாது. ஆகவே றப்பு வேறுதான் அப்து வேறுதான் என்கிறார்கள். இது அறிவுத்தெளிவில்லாத குற்றம்தான். அழிவதற்குப் பொருள் வேண்டும். அப் பொருளுடன் வேறு பொருளும் இருக்க வேண்டும். இல்லையானால் அழிவு நடைபெறாது. இது தத்துவ விளக்கம். உலகம் என்பது மனிதனிடத்தில் தான் பௌதீகம் சூட்சுமம் என்று

பலவாய்த் தென்படுகிறது. இது மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட புலன்கள் வாயிலாகப் பௌதீக சூட்சுமமாய்ப் புலன்களைக் கொண்டும் அறிவைக் கொண்டும் அறியக்கூடியதாய் இருக்கிறது. புலன்கள் வேறு வகையாய் அமைந்திருந்தால் இவ்வுலகை நாம் வேறு வகையாய்க் காண்போம். ஆகவே, எமது புலன்களுக்கமைவாய் நாம் உலகைக் காணுகிறோம், அனுபவிக்கிறோம் உண்மையென்ன என்பது, நமக்குத் தெரியாது.

நம் புலன்களைக் கொண்டனுபவிக்கும் உலகு ஒரு பொருள் என்றும் அது அல்லாஹ் அல்லாததென்றும் நம்புகிறோம். சுருக்கமாய்க் கூறினால் அறிவுதான் உலகாய்ச் சடப் பொருளாய்த் தென்படுகிறதல்லாமல் அறிவை விட்டு அது ஓரு தனிப்பொருளல்ல. அறிவு அடங்கிவிடும் போது உலகும் அழிந்து விடும். உதாரணம் ஆழ்ந்த உறக்கம். உறக்கத்தின் போது அறிவு அடங்கிக் கிடப்பதால் அவ்வறிவிடத்தில் உலகம் இல்லை. ஆனால் விழிப்போடிருபபவனுக்கு உலகம் அழிவதில்லை. உறங்கும் போது நம்மிடம் அழிந்து போன உலகம் விழிப்புடையவனிடத்தில் அதே நேரம் இருந்து கொண்டிருக்கின்றது. ஆகவே அழிந்தது அழிவது மனிதனின் பகுத்தறிவிடத்தில்தான்.

சூழல் அறிவை எண்ணத்தை உருவாக்குகிறதென்றும் எண்ணம் அல்லது அறிவே சூழலை உருவாக்குகிறதென்றும் இரு வகைத் தத்துவங்களை மேதைகள் கூறியுள்ளார்கள். இவ்விரண்டு தத்துவங்களும் உண்மையே என்பதை ஆரிபீன்கள் ஏற்றிருக்கிறார்கள். முன் கூறிய இரு தத்துவங்களும் பகுத்தறிவுள்ள மனிதனிடத்தில் அவரவர் அறிவுக்கேற்ற வகையில் சரியாய் அமைகின்றன. இவ்வுண்மையைக் குர்ஆன் ஹதீஸ்கள் ஆமோதிகின்றன. ஆரிபீன்களின் கூற்றே உண்மைக்கு உண்மையாய் இருக்கின்றது.

அதாவது சூழலுக்கும் மனிதனுக்குமுள்ள தடைப்படாத தொடர்பினால்தான் சிந்தனையும் எண்ணமும் உருவாகின்றன என்பது நிச்சயமான உண்மையே. இந்த எண்ணத்தைக் கொண்டே

மனிதன் சூழலை மாற்றிக் கொள்கிறான். இது சிருட்டியைப் பொருத்த வரையில் உண்மைதான். இறைவனைப் பொருத்தவரையில் இத்தத்துவம் தவறாய் இருக்கிறது. கலிமாவின்படி இறைவனையன்றி ஒன்றுமில்லையென்றால் அவனில் அவனுக்காக அவனுடைய (இறாதா, நாட்டம்) எண்ணத்தைக் கொண்டே சிருட்டியும் சிருட்டிக்குரிய சூழலும் உருவாக்கப்பட்டிருக்கிறது. அப்துக்கு றப்பு முரணல்லவா? சிருட்டியிடத்தில் சூழலால் எண்ணம் உருவானது. றப்பிடத்தில் எண்ணத்தினால் சூழல் உருவாக்கப்பட்டது. இதிலொன்றும் அறிவைக் குழப்பவேண்டிய அவசியமில்லை. சிதைவுறாத எண்ணம் சிருட்டிக்குச் சூழல் தரும் எண்ணம்தான்

குர்ஆன்: 81:29
எனினும் உலகங்களின் இறைவனான அல்லாஹ் நாடினாலன்றி நீங்கள் விரும்பமாட்டீர்கள்.

குர்ஆன்: 76:30
எனினும் அல்லாஹ் நாடினாலன்றி நீங்கள் விரும்ப முடியாது.
(ஆகவே எண்ணம், விருப்பம், நிய்யத்து என்பது மனிதனின் கைவசமுள்ளதல்ல).

உலகு (சிஷ்ட்டி) என்பது (நாம் காணும் உலகு) முப்பரிமாணத்திலடங்கியுள்ள நிறமும் தோற்றமுமாய் இருப்பதால் அது அழிவடைகிறதென்றாலும் மாறுபடுகிறதென்றாலும் இது தாத்தின் குணமாய் இருப்பதால் அழிவதற்கு அங்கு வேற்றுப் பொருளில்லை. அழிதல் என்பது தோன்றி மறைதலேயன்றி இல்லாமை அல்லது சூன்யம் ஆவதில்லை.

இறைவனுடைய கண்களோ எப்போதும் உறங்குவதில்லை. அவனுடைய அறிவு எவ்வித மாறுபாடுமற்றதாய் என்றும் இருந்தது போலவே தான் இருக்கிறது. ஆகவே, யாவும் அழிந்துவிடும் என்பதன் உண்மையான அர்த்தம்தான் என்ன? பொருள்தான் இல்லையே! பொருளாகக் கண்டது எம் புலன்களின் மருட்சிதான். இதை "ஹுறூர்" என்று மூ.்மீன்களும் மருட்சி, மாய்கையென்று இந்துக்களும் கூறுவார்கள்.

அழிவதற்குப் பொருள் வேண்டுமென்றால் அழிதல் என்பதன் அர்த்தம். எம்மறிவுக்கு இருப்பதுவாய்க் காட்சி தந்தது பின் எம் அறிவுக் கெட்டாமல் மறைந்து விடுவது என்பதே. இது இறைவனுடைய அறிவையும் வலிமையையும் பொருத்த ஓரு விஷயம். இங்கு ஓரு சந்தேகம்? அறிவு சடப்பொருளாக அல்லது அறிவுக் கெட்டாத ஒன்று ஜடப்பொருளாக வர முடியுமா? என்பது தான் எமது சந்தேகம். இதற்குரிய சரியான விளக்கம் எமது ஈமானின் உண்மையை நீ அறிவாயா என்ற நூலில் சந்தேக நிவர்த்தி (கேள்வி - பதில்) என்ற தலையங்கத்தின் கீழ் தரப்பட்டுள்ளது. அங்குக் கண்டு தெளிக.

கனவைக் காண்பது அறிவுதான். அதே அறிவு அதே அறிவிடத்தில் அதே அறிவைக் கொண்டுண்டான பௌதீக சூட்சுமப் பொருட்களைக் காண்பதும் அனுபவிப்பதும் பொய்யா? அப்போது அது உண்மைதானே. விழிப்படைந்த பின்புதான் நான் கனவு கண்டேன் என்பது தென்படும். மறுமையும் இதே போலத்தான். அறியமுடியாத, சூட்சுமத்தையும் கடந்து இருந்து கொண்டிருக்கிற இறைவன் பௌதீகப் பொருளாய் வரமுடியாதே என்று நம்புவது எமது அறிவீனம்.

ஆக்கல் (படைத்தல்) காத்தல், அழித்தல் ஆகிய இம்மூன்றும் ஆராய்வில்லாத அறிவில் வெவ்வேறு போல் தென்பட்டாலும் உண்மையில் இவை மூன்றும் ஒரே விஷயம்தான். இதைத் திருக்குர்ஆன் தீர்ப்பு 1ஆம் பாகத்தில் விளக்கியுள்ளேன். அங்குக் கண்டு தெளிக.

மனிதன் தான் வாழ்ந்த உலகம் அழிந்துவிட்டதாயும் இப்போது ஓரு புது உலகுக்கு வந்திருப்பதாயும் ஆகிறாவில் அறிகிறான். ஆனால் அவன் வாழ்ந்த துன்யா உண்மையில் அழியவே இல்லை. முன்னிருந்த சூறத்து நிலைமை (மர்த்தபா) மாற்றமடைந்து வேறோர் உலகாகக் காட்சியளிக்கிறது. இங்கே நடந்த விஷயம் மனித அறிவில் இடப்பட்டிருந்த (ஹுரூர்) மருட்சியென்ற திரை நீக்கப்பட்டது மட்டுமே.

குர்ஆன்: 50:22

நிச்சயமாக ''நீ இதனைப்பற்றிக் கவலையற்றிருந்தாய்; உன் (பார்வையை மறைத்திருந்த) திரையை உன்னைவிட்டு நாம் நீக்கி விட்டோம். இன்றைய தினம் உன்னுடைய பார்வை கூர்மையாய் இருக்கிறது''.

ஆகிறாவிலுள்ள மனிதனின் அறிவில்தான் அழிவும் புரட்சியும் ஏற்பட்டதேயன்றி இருப்பது இருப்பதேதான். கணத்துக்குக் கணம் உலகு அழிவதும் ஆவதுமாய் இருப்பதை நாம் உணர்ந்து கொள்வதில்லை. எம்மறிவுக்கிடப்பட்ட திரைதான் காரணம்.

குர்ஆன்: 67:20

இந்தக் காபீர்கள் வெறும் மாய்கையிலன்றி வேறில்லை.

இவ்வாயத்தில் "ஹுறூர்" என்ற சொல்தான் பாவிக்கப்பட்டிருக்கிறது. மாய்கையென்றால் அல்லது ஹுருர் என்றால் என்ன? மாய்கை அல்லது மாயையென்றால் மூலப்பிரகிருதியென்றும் பொய்த் தோற்றம் என்றும் பொருள்படும். பிரகிருதியென்றால், மூலம், சுபாவம், வேறுபாடுறாதது, மூலாதாரம், இயல்பு, காரணம், பகுதி, மூலப்பகுதி முதலிய பொருட்கள் அதற்குண்டு. ஹுருர் என்ற அறபுச் சொல் இவ்வித பொருட்களைக் கொண்டதாக இல்லை. நாம் இங்கே பொய்த் தோற்றம் என்பது வழக்கியல் அடிப்படையில்தான். இதில் மிகமிக நுட்பமான அறிவு பொதிந்துள்ளது. இவ்விடம் அதை விளக்கப் பொருந்தாததால் அதை நான் இங்கு கூறவில்லை. நாம் ஹுறூர் என்ற சொல்லுக்குப் பொய்த் தோற்றம் என்பதையே எடுத்துக் கொள்வோம். மாயம் என்ற தமிழ் சொல் கனவு, தந்திரம் என்ற பொருட்களைக் கொண்டது என்பதையும் நினைவில் இருத்துங்கள். நம்மிடமுள்ள தப்ஸீர் விளக்கங்களைக் கொண்டே நோக்குவோம்.

பொய்த் தோற்றம் என்றால் அது காட்சியளிக்க முடியாதே! பொய்தான் இருக்க முடியாதே! கலிமாவின்படியும் அதன் தலீல்களின்படியும் உள்ளது ஒரேயோர் பொருள் என்றும் அதுவே

(ஹக்கு) உண்மையென்றும் ஈமான் கொண்ட நாம் அந்த உண்மையுடன் பொய்யும் இருக்கிறது என்று கொண்டால் ஹக்கு என்ற உண்மைக்கு பாதில் என்ற பொய் கூட்டாக அல்லது ஜோடியாக அல்லது இணையாக இருக்கிறதென்று கொள்ள வேண்டி ஏற்படுமல்லவா? இது ஷிர்க்காக முடியுமே! வாஜிபுல் உஜூது, மும்தனிஉல்உஜூது, மும்கி னுல்உஜூது ஆகிய இம்மூன்றையும் நீங்கள் மனதில் இருத்திக் கொள்ள வேண்டும். இந்த விவரம் எமது திருக்குர்ஆன் தீர்ப்பு 1ஆம் பாகத்தில் தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

குர்ஆனின் ஆயத்துகளும் ஹதீஸுகளும் இதை (ஷிர்க்கை) வன்மையாய்க் கண்டிப்பதும் மன்னிக்க முடியாது என்றும் வற்புறுத்துவதும் ஏன்?

அல்லாஹ் மட்டும் ஹக்கு என்றும் மற்றெல்லாம் பாதில் என்றும் கூறும்போது பாதில் என்றால் வெறும் பொய் என்றுதான் மனிதரில் மிகப்பெரும்பாலார் நம்பினார்கள். இது அவர்களுடைய அறிவின் தகைமையைப் பொறுத்த ஒரு விஷயம்தான். இதில் ஷிர்க்கிருப்பதை அவர்கள் அறியாமையால்தான் பாதில் என்ற சொல்லுக்குப் பொய்யென்று பொருள் கொண்டிருக்கிறார்கள். பெரும்பாலான அறபு, தமிழ், ஆங்கில தப்ஸீர்களில் இவ்விளக்கம் தான் தரப்பட்டிருக்கிறது. இது கவாஸுகளுக்கும் அவாம்களுக்கும் பொருந்தலாம். ஆனால் ஆரிபுகளிடத்தில் இது செல்லாக் காசுதான். இங்கே நாம் இன்னோர் ஆயத்தையும் நோக்க வேண்டும். இல்லாவிட்டால் உண்மை புலனாகாது.

குர்ஆன்: 22:62

நிச்சயமாக அல்லாஹ்தான் உண்மையானவன்; அவர்கள் ஆண்டவன் என அழைக்கும் அல்லாஹ் அல்லாதவை நிச்சயமாகப் பொய்யானவையாகும். நிச்சயமாக அல்லாஹ்தான் உயர்ந்தவன், மகா பெரியவன்.

இந்த மொழி பெயர்ப்புத்தான் இன்று நம்மிடமுள்ள பெரும் பாலான தப்ஸீர்களில் இடம் பெறுவது. இந்த மொழி பெயர்ப்பில்

எவ்வளவு பெரிய தவறுண்டு என்பதை அந்த ஆசிரியர்கள் உணரவே இல்லை. இதில் அல்லாஹ்வை ஹக்கு என்று கூறப்படுகிறது. அல்லாஹ் அல்லாதவையென்று கருதப்பட்ட விக்கிரகங்கள் பாதில் என்ற சொல்லால் குறிப்பிடப்படுகிறது. நான் கூறுவது பொய்யா? உண்மையா? என்பதைக் கண்டறிய இப்போதே தப்ஸீரைக் கையிலெடுத்துப் பாருங்கள்.

ஹக்கு, பாதில், மின்தூனிஹி என்ற மூன்று சொற்களும் இந்த ஆயத்தில் இடம்பெறுகின்றன. மின்தூனி என்ற சொல்லுக்கு முன்பே விளக்கம் தந்துவிட்டேன். ஹக்கு என்ற சொல் உண்மை என்று பொருள்படும். பாதில் என்றால் பொய்யென்றே தப்ஸீர்களும் அகராதிகளும் விவரம் தருகின்றன. இதில் ஒரு குழப்பம் உண்டு. எப்படியென்றால், அல்லாஹ் உண்மைப்பொருள் என்னும் போது மற்றவை பொய்ப் பொருள் என்று நாம் ஏன் கொள்கிறோம்? உலகம் அல்லாஹ் அல்லாதது என்று நம்பித்தான் ஹக்கு என்ற உண்மைக்கு பாதில் என்பதை எதிர்மறையாக்கிப் பொய்யென்று பொருள் கொள்கிறோம். இங்கே ஓரு கறுப்புக் கண்ணாடியை எம் அறிவில் நாம் மாட்டிக் கொண்டோம் என்பதை உணர முடியாத நாம் எம் அறிவுக்கேற்றபடியே பாதில் என்ற சொல்லுக்குப் பொய்யென்று பொருள் கொண்டிருக்கிறோம். எம்முடைய இந்த மருட்சி இஸ்லாத்தைப் புதைத்து விட்டதென்பதை நாம் உணரவில்லை.

இப்போது பாருங்கள், அல்லாஹ் உண்மைப் பொருள் என்றால் அவனுடன் உண்மையல்லாத பொய்ப் பொருளும் உண்டு என்றாகும். உண்மையுடன் பொய் இருக்க முடியாது. வெவ்வேறாயும் இருக்க முடியாது. ஒன்றாகவும் இருக்க முடியாது. பொய்யுடன் உண்மையும் உண்மையுடன் பொய்யும் எப்படிக் கலக்க முடியும். வெவ்வேறாய் இருப்பதாய்க் கொள்ள முடியாது. இறைவன் நிறைந்தவன் என்பது பிழையாய்விடும். அவன் நீக்கமற நிறைந்தவன். மேலும், சர்வஆலங்களும் பொய்யென்று கொண்டால் நரகம், சுவர்க்கம் யாவும் பொய்யென்று கூறவேண்டி ஏற்படும். மேலும், இவ்வுலகு பொய்தான் என்றால், இவ்வுலகில் உள்ளயாவும்

பொய்தான் என்றால், குர்ஆன் ஹதீஸ்யாவும் பொய்யென்றேயாகும். இவையெல்லாம் உலகிலுள்ளவை தானே. குர்ஆன் ஹதீஸ் பொய்யென்றால் அவற்றால் கூறப்படும் உண்மை பொய்யென்றால் ஈமான் என்பதன் அர்த்தம்தான் என்ன? மேலும் கனவில் கண்ட காட்சியைப் போல்தான் உலகமும் பொய்த் தோற்றமே என்று கொண்டால் வேறோரு தவறு ஏற்படுகிறது. அதாவது கனவில் செய்த தீமைக்கும் நன்மைக்கும் விழிப்பில் நாம் பலனைப் பெறுவதில்லை. அதேபோல பொய்யுலகில் செய்த நன்மை தீமைகளின் பலனை ஆகிறாவில் பெறுவோம் என்று கூறுவது சுத்தப் பொய்யென்றே கூறவேண்டி ஏற்படும். மனிதன் தன் இஷ்டம்போல் நடக்கலாம் என்றாகும்.

இதில் இன்னொரு நுட்பம், பாதில் என்ற சொல்லுக்குப் பொய்யென்று பொருள் கொண்டால் இந்து மக்கள் கூறுவதே சரியென்றாகும். இந்துக்களின் முடிவு சமாதி என்பது. இதன் பொதுச் சுருக்கம் அழிந்து விடுவது. அதாவது என்றும் நிலைபெற்ற ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பது என்பதே பொருள். இஸ்லாத்தில் இது பனாவாதல் என்று கூறப்படும். இதற்கப்பாலும் பல படித்தரங்கள் இஸ்லாத்தில் உண்டு. பாதில் என்பதைப் பொய்யென்று பொருள் கொண்டால் இஸ்லாத்தின் விவரப்படியுள்ள உயர்வான மகாம்களை அடையமுடியாது.

ஓரு சொல்லுக்கு உரிய உண்மைப் பொருளைத் தெளிவாய் விளங்காத குற்றம் மனிதனை எங்கே கொண்டுபோய் விட்டிருக்கிறதென்பதைச் சிந்தியுங்கள். இவ்வித ஆராய்வில்லாத வியாக்கியானங்கள் ஷரீயத்தை உடைத்தெறிந்துவிடும். நாஸ்த்திகவாதத்திற்கு ஆதாரமாயும் அமையும்.

அகராதி அர்த்தங்களை அடிப்படையாய்க் கொண்டுதான் குர்ஆன் ஹதீஸுகளுக்கு மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டிருக்கிறது. இம்மொழிபெயர்புகள் 100வீதமும் சரிதான் என்று கூற முடியாது. அகராதிகள் எம்மால் இயற்றப்பட்டவை. அகராதியைக் குர்ஆன் ஹதிஸுகள் மீறும்போது ஆச்சரியப்பட வேண்டியதில்லை. உண்மையைக் கண்டறிவதானால் ஆராய்ந்துதான் பெறவேண்டும்.

"பாதில்" "ஹுறூர்" ஆகிய இருபதங்களையும் இங்கே பார்ப்போம். பாதில் என்பதற்குக், கனவுக்காட்சி பொய்த் தோற்றமென்பது போல உலகும் பொய்த் தோற்றமே (பாதில்) என்று கூறுவது பாஷை வழக்காக இருக்கிறது. இக்கருத்தினால் உலகை வெறுத்து உண்மையோடு ஒன்றி நிற்க ஆசையேற்படலாம். ஆனால், உண்மை உள்ளத்தில் நிலைகொள்ளாது. ஆயத்தில் பாவிக்கப்பட்ட பாதில் என்பதன் உண்மைக் கருத்து இதுவல்ல. அவர்கள் அல்லாஹ் அல்லாதவையென்றழைக்கும் இவை (பாதில்) இல்லாதவை என்பது பொருள். இதன் வியாக்கியானம் என்னவென்றால், மனிதன் விக்கிரகமான சிருட்டியை அவனுடைய மருட்சியினால் அல்லாஹ் அல்லாதவையென்று காணுகிறான். இந்த எண்ணம் (அல்லாஹ்வுடன் அவனல்லாததும் உண்டு என்ற விசுவாசம்) பொய்யாய் இருக்கிறது. பொய்யென்பது இல்லாதது. இந்த இல்லாமையான எண்ணம் (பாதில்) பொய் என்பதே கருத்து. ஷிர்க் என்பதே பாதில் என்ற சொல்லால் சுட்டப்பட்ட பொய்யாகும்.

குர்ஆன்: 10:30
அவர்கள் பொய்யாகக் கற்பனை செய்துகொண்டிருந்த தெய்வங்கள் யாவும் அவர்களை விட்டு மறைந்துவிடும்.

இதில் கூறப்பட்ட பொய்தான் ஒவ்வோரு பொருளும் அல்லாஹ் அல்லாதவையென்று நம்பிய ஷிர்க்கென்ற பொய் மறைந்துவிடும் என்பது இவர்களின் பொய்க் கற்பனையைத்தான். இதிலிருந்து நாம் அறிவது பொய்யென்பது ஷிர்க்கைக் குறிப்பிட்டதென்பதே.

குர்ஆன்: 4:50
(நபியே!) அல்லாஹ்வுக்கு (இணையுண்டு என்று) அபாண்டமான பொய்யை எவ்வாறு கற்பனை செய்கின்றனர் என்பதை நீர் கவனியும், பகிரங்கமான பாபத்திற்கு இதுவே போதுமான (உதாரணமாக) இருக்கிறது.
(மனிதனால் கற்பனை பண்ணப்பட்ட ஷிர்க்குத்தான் பொய் என்பது)

குர்ஆன்: 47:3

ஏனென்றால் நிச்சயமாக நிராகரிப்போர் பொய்யையே பின்பற்றியிருந்தார்கள்; விசுவாசம் (ஈமான்) கொண்டவர்களோ, நிச்சயமாகத் தங்கள் இறைவனிடமிருந்து வந்த உண்மையையே பின்பற்றயிருந்தார்கள்.

இவ்வாயத்தில் பாதில், ஹக்கு என்ற இரு சொற்களும் இடம் பெறுகின்றன. காபீர் கொண்ட குருட்டு ஈமான் பொய்யானது. மூ்மீன்களின் ஈமான் உண்மையானது. இவ்வாயத்தில் பொய்யென்பதும் உண்மை என்பதும் மனதில் உள்ள எண்ணத்தை (விசுவாசத்தை) நோக்கியே கூறப்பட்டிருப்பதைக் காண்க. பௌதீகப் பொருட்களையல்ல.

அவனுடைய தோன்றி மறையும் ஸிபத்துகளை ஒப்புக் கொள்ளாத மனிதன் இவற்றைத் தனித்தனிப் பொருளாயும் தனித்தனி உஜூதாகவும் கற்பனை பண்ணினான். இவனுடைய கற்பனையான பொய் என்றும் இல்லாத பொய்தான். இந்தப் பொய் அறிவில் அழிய ஹக்குல் எகீன் அவசியமாகும். இது ஏற்பட்டால் யாவும் அழிந்துவிடும் அல்லாஹ் மட்டும் மிஞ்சுவான் என்பது புரிந்துவிடும். இந்த எகீன் ஆகிறாவில் ஏற்படுவதில்லை. அங்குள்ள நரக சுவர்க்கம் உண்மை. ஆகிறாவிலுள்ள மக்கள் ஐயையோ! நாம் மருட்சியிலிருந்தோம் என்பதை ஆகிறாவில் அறிகிறார்கள். இந்த மருட்சியை நோக்கிப் பாவிக்கப்படும் சொற்றான் ஹுறூர் என்பது. இந்த ஆகிறா என்ற உலகு பொய்யென்று கண்டதாகக் கூறமுடியாது. ஏன்? இப்போது ஆகிறாவிலுள்ளயாவும் உண்மையென்று காணுகிறான் அந்த மனிதன். ஆனால் அவர் ஆகிறாவிலும் அல்லாஹ் நாடிய போதேயன்றி இறைவனை எந்த நேரமும் பார்த்துக் கொண்டிருப்பதில்லை. ஆகவே, ஆகிறாவிலும் லாஹிறும் பாதினும் உண்டு. ஆகிறா எப்படி அங்கு உண்மையாய் இருக்கிறதோ அப்படித்தான் துன்யாவும் இருந்தது. இப்போது துன்யா இல்லாதது போல எங்கேயோ காணாமல் போய்விட்டது. ஆகவே துன்யா (சதமானது) நிலையானது என்று நம்பியிருந்த மருட்சிதான் ஆகிறாவில் தென்பட்டது. இந்த ஆகிறா மனிதன்

துன்யா பொய்யானதென்று கண்டாலும்கூட அது தற்காலிக உண்மைதானே. ஆகிறாவும் ஒரு தற்கால உண்மைதான். அது பொய்யேயல்ல.

குர்ஆன்: 67:20
உங்களுக்கு உதவி செய்யக்கூடிய இந்தப் படையினர் றஹ்மானையன்றி வேறுயார்? இந்த நிராகரிப்போர் (காபீர்கள்) வெறும் மாய்கையிலன்றி வேறில்லை.

இவ்வாயத்தில் பிரதானமான இரு விஷயங்கள் அமைந்துள்ளன. அவற்றில் ஒன்று ஹுரூர் என்பது, இது மாய்கையென்று கூறப்படுகிற மருட்சியேயாகும். மற்றொரு விஷயம் வேறொரு இடத்தில் விளக்கப்படும்.

ஆகவே, எல்லாம் அழிந்துவிடும், அல்லாஹ் மட்டும் மிஞ்சுவான் என்பது பொருந்தாது. அல்லாஹ் மட்டும் மிஞ்சுவான் என்ற வசனம் உண்மையாவதானால் அல்லாஹ் அல்லாதவையுமுண்டு என்ற பொய் அழியவேண்டும்.

ஹக்குல் எகீன் இந்த நுட்பங்களுக்கும் அப்பாற்பட்டது. அல்லாஹ்வையன்றி இல்லையென்பது எப்போது அனுபவ அறிவாக (எகீன்) மாற்றமடையுமோ அப்போதுதான் ஆயத்தில் பாவிக்கப்பட்ட "ஹுறூர்" "பாதில;"என்ற சொற்களின் உண்மை புலனாகும். இந்த அறிவு உண்மையின்படி இறை அறிவேயன்றி மனித அறிவாகாது. ஆகவே, பொய்யென்ற ஷிர்க் அழிந்துவிடும் அல்லாஹ் மட்டும் மிஞ்சுவான் என்பதே ஆயத்தின் உண்மையான அர்த்தமாகும். இன்னொரு சிறு சந்தேகம்? அழிந்து விடுவதானால் அழிவதற்கு முன் இருந்திருக்க வேண்டும். இல்லாத ஒன்றுக்கு அழிவு ஏது? இதுதான் சந்தேகம்?

இந்த ஆயத்து ஒரு குறிப்பிட்ட ஒருவரை அல்லது ஒரு கூட்டத்தை மட்டும் நோக்காமல் உலக மக்கள் எல்லோரையும், அவாம், கவாஸ், கவாஸுல்கவாஸுகளான மூன்று வகுப்பாரையும் ஒன்று நோக்கியே கூறப்பட்டதாகும். இறைவன் எப்போது உண்டோ அவன் குணமும் அப்போதுள்ளதே, இதன் ஆரம்பமும் முடிவும். நாமறியாத ஒன்று. ஆகவே எது எது எப்போது எப்படியழிந்தாலும்

முடிந்துவிட்டது என்று கூறமுடியாது. ஆகவே அவனையன்றி எதுவுமில்லையென்று கலிமா கூறுவது உண்மையானால் அழிவதற்கு எதுவும் இல்லை. மனிதனுடைய கல்பில் குடிகொண்டுள்ள மருட்சியென்ற நோயினால் ஏற்பட்ட பொய்யென்ற பாதில் மனித அறிவில் இருப்பதால் அழிந்துவிடும் என்று கூறப்பட்டது. பொய்யை வைத்துக் கொண்டிருந்த மருட்சியழியும் போது பொய், இல்லாமை என்பது உறுதியாகும். (இல்லாதது என்பது தென்படும்). ஆகவே அழிந்தது இருந்துகொண்டிருந்த மருட்சியேயன்றி வேறல்ல பொய்தான் இல்லாததல்லவா? அதற்கு உண்மையுமில்லைப் பொய்யுமில்லை. அது வெறும் கற்பனையே. இதைத்தான் மும்தனி உல் உஜூது என்று கூறப்படுவது. இது என்றுமில்லாததுதான். இதை முதல் நூற்களிலும் விளக்கியுள்ளேன்.

இவ்விஷயம் அறிவில் அமைவதற்காக இன்னும் சிறிது சிந்தனை செய்வோம். அஹமது தன்னை அடித்துவிட்டதாக சுபைர் நீதிபதியிடம் முறையிடுகிறார். நீதிபதி விசாரணையின்பின் சுபைர் கூறியது பொய்யென்ற முடிவுக்கு வருகிறார். சுபைர் செய்த முறைப்பாடு உண்மையில் வெறும் பொய்தான் என்றே நாம் கற்பனை பண்ணிக் கொள்வோம். நீதிபதி பொய்யென்று தீர்ப்புக்கட்டியது எதை? சுபைருடைய கற்பனைக் கூற்றைத்தானே! இந்தக் கற்பனை சுபைருடைய ஏதோ ஒரு சுயநல நோக்குடன் உருவானது. இந்தச் சுயநல நோக்கின்படிதான் இல்லாத (நடைபெறாத) ஒன்றை நடை பெற்றதாய்க் கற்பனை பண்ணிக் கூறப்பட்டது. இந்தக் கற்பனையால் தன் சுயநலனைப் பெறலாம் என்பது சுபைரின் நோக்கம். இந்தக் கற்பனை அறிவில் உருவான ஒரு பெலவீனமே, இந்தக் கற்பனை தான் பொய்யாய் இருக்கிறது. இருக்கிறதுதான் பெயர் பெறுமேயன்றி இல்லாதது பெயர் பெறாது. கற்பனை இருந்தது. அதுதான் பொய்யென்ற பெயரைப் பெற்றது. அடித்தான் என்பது நடைபெறாதது. இல்லாதது. இல்லாதது பெயர் பெறாது. ஆகவே, இருந்தது கற்பனையான பொய்யேதான். அழிவதற்கு இருப்பு வேண்டும். இருந்தது கற்பனைதானே. அது அழிந்துதானே ஆகவேண்டும். பொய் இல்லாதது அழியமுடியாது. இல்லாதது என்றும் இல்லாததே. எல்லாம் அழிந்துவிடும் அல்லாஹ்

மட்டும் மிஞ்சுவான் என்பதன் உண்மைதான் என்ன? அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாதவையும் உண்டு என்று மனிதன் கொண்டிருந்த கற்பனையான பொய் அழிந்துவிடும் அல்லாஹ் மட்டும் மிஞ்சுவான் என்பதுதான் ஆயத்தின் சரியான உண்மையாகும். இருப்பது எதுவோ அது அல்லாஹ் மட்டுமே என்பதுதான் கலிமாவின் சாரம். இருப்பது அவனும் அவன் குணாகுணமுமேயென்றால் அழிவதற்கு என்ன இருக்கிறது? அழிதல் மறைதலேயாகும். இறைவன் அழிவில்லாதவன், அவன் குணா குணங்கள் அழிவடைய முடியாது. இவை தோன்றி மறையலாம். இதைத்தான் லாஹிர், பாதின் என்கிறோம்.

இன்னொரு நுட்பம், அல்லாஹ் வையன்றி ஒன்றும் இல்லையென்றால் எல்லாம் அழிந்துவிடும் என்பது பொருந்தாது. எல்லாம் என்பதற்கு அவனையன்றி வேறு கிடையாதே. ஆகவே, எல்லாம் என்ற சொல்லால் உணர்த்தப்படுவது எதை? இறைவனுடன் அவனல்லாதவையும் உண்டு என்று மனிதன் கொண்டிருந்த கற்பனைகளான யாவும் அழிந்துவிடும் என்பதே. இக்கற்பனை மனதில் தோன்றி மறைந்த (உண்மையில் இல்லாத) ஷிர்க்கென்ற பொய்யேயன்றி அழிவதற்குரிய பொருளல்ல. ஆகவே பாதில் என்பது என்றுமில்லாத ஷிர்க்கென்ற கற்பனையான பொய்யேயாகும். (நுட்பமாய் உணர்க)

ஆதலால் பாதில் என்ற சொல்லுக்கு, தனிப்பட்ட சொல்லான பொய்யென்ற தமிழ்ச் சொல்லை மட்டும் கொள்வது பொருந்தாது. ஷிர்க்கென்ற பொய், அல்லது இணையென்ற பொய்யென்று பொருள் கொள்வதே உசிதமானது. அதாவது பொய்யென்பது இல்லாதிருப்பதாலும் அச்சொல் பொருளை நோக்காமல் அறிவை (ஷிர்க்கை) நோக்கிக் கூறப்பட்டிருப்பதாலும் அதை விளக்கக்கூடிய தொடர் சொட்கள் பாவித்தே பாதில் என்ற சொல்லை விளக்க வேண்டும்.

குர்ஆன்: 21:18

அவ்வாறல்ல! மெய்யை (ஹக்கை) பொய்யின் (பாதில்) மீது எறிகிறோம்; அது (அதனை) உடைத்து விடுகிறது; பின்னர் அது அழிந்தும் விடுகிறது. நீங்கள் கூறுவதன் காரணமாக உங்களுக்குக் கேடுதான்.

இவ்வாயத்தில் குறிப்பிடப்பட்ட பொய்யும் மெய்யும் எவை என்பதை நோக்குங்கள். இதில் கூறப்பட்ட பாதில் என்ற பொய் அல்லாஹ்வுக்கு இணையுண்டு என்று கற்பனை பண்ணிய பொய்தான், இந்தக் குருட்டு விசுவாசம் நிச்சயமாக அழியக்கூடியதே. இதற்கு எவ்வித ஆதாரமுமே கிடையாது. எறியப்படும் உண்மை (ஹக்கு) அல்லாஹ்வையன்றி இலாஹு இல்லையென்று கலிமாக் கூறும் உண்மையாகும். இது அழிவதில்லை. இந்த விசுவாசம் அழிந்ததாக உலக சரித்திரத்தில் எவ்விடத்திலும் கிடையாது.

குர்ஆன்: 34:49
''குல்ஜாஅல்ஹக்குவமாயுப்திஉல் பாதிலுவமாயுஹீத்'' நீர் கூறும்! ''உண்மை வந்துவிட்டது, பொய் புதிதாக ஒன்றையும் செய்யவில்லை; இனிமேலும் செய்யப்போவதே இல்லை.''

குர்ஆன்: 17:81
அன்றி ''சத்தியம் வந்தது; அசத்தியம் மறைந்தது நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும்'' என்று கூறுவீராக.

இதில் கூறப்பட்ட ஹக்கு என்பதற்கு இங்கு அவசியமான பொருள் உண்மை என்பது. இது இருவகை. ஒன்று அல்லாஹவின் குன் ஹுவை நோக்கியது. மற்றொன்று தெளஹீது என்ற உண்மையை (எண்ணத்தை அல்லது அறிவை) நோக்கியது. அல்லாஹ் என்ற ஹக்கே வெளியாகியிருப்பது என்று கொண்டால், பொய்யென்ற பாதில் இல்லாமலிருப்பதால் அதனால் வெளியாக முடியாது என்பது பொருள். இதன்படி இதற்கு முன்பும் பொய்யினால் எதையும் செய்திருக்க முடியாது ஏன்? பொய்தான் இல்லையே. இப்போதும் புதிதாக எதுவும் அதனால் செய்ய முடியாது. இனிமேலும் செய்ய முடியாது. இல்லாதது எதை எப்படிச் செய்யும்? ஹக்கு என்பதைத் தெளஹீது (அல்லது அறிவு அல்லது விசுவாசம்) என்று எடுத்துக் கொண்டால் இறை அறிவுதான் அத்தனையையும் சாதித்தது, சாதித்துக்கொண்டிருப்பது, சாதிக்கப் போவது. பாதில் என்பதை ஷிர்க் (அறிவீனம் - விசுவாசம்) என்று கொண்டால் இது எதையும் எப்போதும் சாதித்ததில்லை, சாதிக்கப்போவதுமில்லை யென்பது பொருள். (நுட்பமாய் உணர்க.) பொய்யில் இருந்து எதுவும் (ஆலங்கள்) தோன்றியிருந்தால் அவை பொய்யென்று

கூறலாம். பொய்தான் இல்லையென்றால் அதிலிருந்து எதுவும் உண்டாக முடியாதென்றால் ஆலங்கள் பாதில் என்பது பொருந்தாது. ஹக்குடன் பொய் இணையாய் இருக்க முடியாது. இதைத் தத்துவ விளக்கமும் ஒப்புக் கொள்ளாது. ஹக்குத்தான் தன்னிடத்தே சர்வ ஆலங்களையும் தெளஹீதென்ற உண்மையைக் கொண்டு நிலைகொள்ளச் செய்திருக்கிறது. ஆகவே ஹுறூர் என்ற சொல்லை மாய்கை மருட்சியென்ற பொருளிலும் பாதில் என்ற சொல்லை ஷிர்க்கென்ற பொருளிலும்தான் இறைவன் பாவித்துள்ளான் என்பது வெளிப்படையாகும். சர்வ ஆலங்களும் றப்புடைய லாஹிர் என்ற பெயரின் தஜல்லியே என்பதை யாரும் மறுக்க முடியாது. லாஹிர் பொய்யல்ல.

குர்ஆன்: 29:52

நீர் கூறும். ''எனக்கும் உங்களுக்குமிடையில் அல்லாஹ்வே போதுமான சாட்சியாக இருக்கிறான்; அவன்தான் வானங்கள், பூமியிலுள்ள யாவையும் நன்கறிகிறான்; ஆகவே, பொய்யை (பாதிலை) நம்பி அல்லாஹ்வை நிராகரித்து விடுகிறார்களோ, அத்தகையோர் முற்றிலும் நஷ்டமடைந்தவர்கள்தாம்.''

வானங்கள் பூமியாவும் பொய்யாய் இருந்தால் அவற்றை இறைவன் முற்றாய் அறிகிறான் என்பது எப்படிப் பொருந்தும்? பொய்யை நம்பி அல்லாஹ்வை நிராகரித்தல் என்றால் இதன் அர்த்தம் என்ன? நஷ்டமடைவோர் காபிரீன்கள் முஸ்ரிக்கீன்களே! இவர்கள் நம்பியிருந்த பொய் எது? இல்லாததை (பொய்யை) நம்புவது எப்படி? இந்த நம்பிக்கை அறிவில் ஏற்பட்ட மருட்சியேயன்றி இல்லை. சிருட்டி அல்லாஹ் அல்லாததென்றும் அவை அல்லாஹவுடன் ஜோடியாய் இணையாய் இருப்பதென்றும் இவர்கள் தங்கள் உள்ளத்தில் கொண்டிருந்த ஷிர்க் என்ற மருட்சியே பாதில் என்ற சொல்லால் குறிப்பிடப்பட்ட பொய்யாகும்.

குர்ஆன்: 7:139

நிச்சயமாக (முஸ்ரிக்குகளான) இவர்களின் மார்க்கம் அழிந்துவிடக்கூடியது: இவர்கள் செய்யும் அமல்கள் யாவும் வீணானவை.

இவ்வாயத்தில் சுட்டிக் காட்டப்பட்ட முஷ்ரிக்குகளின் மார்க்கம் (பாதில்) அழியக்கூடியது. இந்த மார்க்கத்தின் அடிப்படைதான் ஷிர்க் என்பது. இதன் மந்திரம் கலிமத்துல் கபீஸா. அதாவது அல்லாஹ் வேறு சிருட்டி வேறு என்று கூறுவதே இக்கலிமாவின் பொருள். இந்தக் கலிமாவில் முளைத்த மார்க்கம் பிழையானது. இந்த மார்க்கத்தை வழியைத் தந்துவிடாதே என்றுதான் ஒவ்வொரு றக்காஅத்திலும் மனிதன் கேட்கிறான். ஆனால் இம்மனிதன் தொழுகையின்போது நல்லடியார்கள் சென்ற பாதையையும் கேட்கிறான். இந்தப் பாதை (மார்க்கம்) கலிமத்துத் தையிபாவில் முளைத்தெழுந்தது. இது அழிவுபடுவதில்லை. இதில் கையாளப்படும் அமல்களும் பிழைபோவதில்லை. ஆகவே அழிந்துவிடும் (பாதில்) பொய்யான மார்க்கம் மனிதனின் அறிவில் குடிகொண்டுள்ள வெறும் மருட்சியேயாகும். இதுதான் ஷிர்க் என்பது இது வெறும் பொய்யே.

லாஹிர் பாதின் என்பவை மனித அறிவில் வெவ்வேறு போல் தென்பட்டாலும் அவையிரண்டும் ஒரே விஷயத்தை உறுதிப்படுத்தும் ஆதாரங்களே என்பதை நான் முன்பே கூறியிருக்கிறேன். குணி ஹக்கென்றால் அதன் குணம் பாதிலாக முடியாது. உள்ளது எதுவோ அது தாத்துத்தான், வுஜூதுதான். ஆனால் தொடுவதும் இருப்பதாய்க் காண்பதும் தாத்தைத்தானென்று மருளக்கூடாது. தொடுவதும் அறிவதும் அஸ்மா என்ற சூறத்தைத்தான் குணி அதைவிட்டும் வேறானதல்லவாயினும் அது அறிவில் புலனில் அடங்குவதில்லை. இச்சிறு விளக்கத்தின்படி உள்ளது எதுவோ அது உண்மையே, ஹக்கு என்ற சொல்லுக்கு பாதில் என்பது எதிரிடைச் சொல் என்பது சாதாரண விஷயங்களில் (வழக்கில்) சரியாய் இருக்கலாம். இறைவனுடைய விஷயத்தில் இப்படியல்ல. ஹக்கு இறைவனைக் குறிப்பதாய்க் கொள்வது பொய்க்கு எதிர் என்ற பொருளில்தான் ஹக்கு என்ற சொல் பாவிக்கப்பட்டது. இந்த அடிப்படையில் ஹக்கு, உஜூது என்பதற்கு எதிரிடை கிடையாது. உஜூது, மௌஜூது ஆகிய இரு சொற்களும் ஒரே விஷயத்தை உறுதிப்படுத்தும் இரு சொற்களே.

2ஆவது கொள்கை தௌஹீது

உலகில் காலாகாலம் வாழ்ந்த பலமத, பல இனப் பெரியார்களையும் வேதங்களையும் ஆராயும்போது ஒரே கொள்கைதான் தௌஹீது என்றாலும் அதை மனித இனம் நான்குவகையாய் அமைத்துக் கொண்டிருக்கிறது என்பது தென்படுகிறது. தௌஹீதின் அடிப்படையைக் கொண்டுருவான இந்த நான்கு வகை விளக்கங் களும் றசூல் (ஸல்) அவர்களுக்கு முன் நூஹு(அலை) அவர்களுடைய காலத்திலிருந்து இது காலவரையிலும் இருந்துகொண்டு தானிருக்கின்றன.

உலகில் தோன்றிய நபிமார்கள், தௌஹீதில் மக்களால் புகுத்தப்பட்ட மூன்று விதமான தவறான விளக்கங்களை நீக்கி ஒரு உண்மையான கொள்கையை மட்டுமே நிலைப்படுத்தியுள்ளார்கள். இறுதியில் றசூல்(ஸல்) அவர்கள் குர்ஆனைப் பெற்றுத் தந்து உண்மையான வஹ்தத்துல் வுஜூது என்னும் சுத்த சத்தியமான தௌஹீதைப் பூரணமான ஆதாரங்களோடு நிரூபித்துக் காட்டியுளளார்கள். இக் கொள்கைக்குப் பூரணமான ஆதாரம் குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஉ, கியாஸ், அறிவு ஆகியவையே.

நபிமாரால் விளக்கப்பட்ட தௌஹீதில் இடைச் செருகல்கள் எப்படி ஏற்பட்டன? நபிமாரில்லாத சமூகம் இல்லையென்று குர்ஆன் விளக்கம் தருகிறது. ஆரம்பத்தில் வேதங்கள் இறக்கப்படுவதற்கு முன்பு நபிமார்களுக்கு சுஹ்புகள் (ஆகமங்கள்-அல்லது வேதக் கட்டளைகள்) அருளப்பட்டிருக்கின்றன. ஆகவே வேதங்களுக்கு முந்திய மக்கள் ஸுஹுபுகள் வாயிலாகவே தௌஹீதை அறிந்திருக்கிறார்கள். விசேடமாய்க் கூறினால் நூஹு (அலை) அவர்களி லிருந்து மூஸா (அலை) அவர்கள் காலம் வரையிலுமுள்ள பூர்வீக மக்களின் கொள்கையான தௌஹீதும்

நடைமுறைச் சட்டங்களும் சுஹ்புகள் வாயிலாகவே நிலைப்படுத்தப்பட்டிருந்தன. இந்த ஆகமங்களை அடிப்படையாய்க் கொண்டே இப்றாஹீம்(அலை) தம் சமூகத்தவருக்குக் கொள்கை விளக்கம் நடைமுறைச் சட்டங்களை விளக்கியிருக்கிறார்கள். இப்றாஹீம்(அலை) அவர்களுடைய மறைவுக்குப் பின் அவர்களுடைய சமூகத்தினர் பிளவுபட்டு ஒருசாரார் இந்தியாவில் (வடபக்கம்) குடியேறியிருந்திருக்கிறார்கள். இவர்கள் காலக்கிரமத்தில் நடை உடை முதலாம் சகல காரியங்களிலும் படிப்படியாய் மாறுபட்டு, இப்றாஹிமியாக்கள் பிராஹ்மணிகளென்ற பெயரோடும் றஹ்மானை இறைவனாகக் கொண்டிருந்த இவர்கள் றஹ்மானை ராமன் என்றும் கூறி வழிபட்டுக் கொண்டிருந்திருக்கிறார்கள்.

நாளாவட்டத்தில் தம்மிடையே ஏற்பட்ட போட்டி பொறாமைகளின் காரணமாய் ரிக், யஜுர், சாமு, அதர்வணம் போன்ற பல மதங்களை உருவாக்கினார்கள். இவற்றிலிருந்து தற்காலம் சுமார் 12 கிளைகளுக்கு மேல் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஆரம்பத்தில் இவர்களிடமிருந்த ஒரே தௌஹீது படிப்படியாய் மாற்றமடைந்து நான்கு வகையாய்ப் பிரணமித்தது. இவற்றில் கலப்படமில்லாத சுத்தமான தௌஹீதை அவர்கள் அவர்களுடைய பாஷையில் அதவைதம் என்றழைத்தார்கள். இக்கூட்டத்தினர் இந்தியாவில் (ஸிந்து நதிப்பகுதியில்) வாசம் செய்த காரணத்தால் இந்துக்கள் என்றழைக்கப்பட்டார்கள். இக்கொள்கை அந்த இந்துக்களால் உருவாக்கப்பட்டதல்ல. நபிமாரால் தரப்பட்டதுதான். இந்துக்களுக்கென்று ஒரு மதமும் கிடையவே கிடையாது. இந்துக்களுக்கென்று ஒரு கொள்கையும் கிடையாது. மதமும் கொள்கையும் ஆரம்பத்தில் நபிமாரால் தரப் பட்டவைதான். நூஹுர்(அலை) அவர்களும் அவர்களுக்குப் பிந்திய நபிமாரும்தான் இன்றுள்ள உலகுக்குத் தௌஹீதை அறிமுகம் செய்தவர்கள். தற்கால உலகில் தௌஹீது பல மாற்றங்களோடும் இடைச் செருகலோடும் காட்சியளிக்கிறது. ஆகவே தௌஹீது என்பது முஸ்லீம்களுடையதென்றும் அத்வைதம் இந்துக்களுடைய தென்றும் மக்களை மருட்டுவது அறியாமையே. அல்லாஹ் என்பதை ஒருவர்

கடவுள் என்றும் இன்னொருவர் யெகோவா என்றும் இன்னொருவர் கோட் என்றும் கூறுகிறார். இச் சொற்களில் வேறுபாடிருக்கலாம். இச் சொற்களால் உணர்த்தப்படும் பொருள் ஒன்றுதான். இதைப் போலவே ஓர் மூ.்.மீன் தௌஹீது என்று குறிப்பிடுகிற அதே விஷயத்தை ஓர் இந்து அத்வைதம் என்று கூறுகிறார். இதிலொன்றும் தவறே இல்லை.

இதன் சாரம் என்னவென்றால், உலக முடிவுநாள் வரையிலும் வாழவேண்டிய சகல மனிதரும் ஒரே தந்தைக்கும் ஒரே தாய்க்கும் பிறந்த ஒரே வம்ஸத்தினர்தான், இந்த மக்கள் அனைவருக்குமுள்ள கொள்கை ஒன்றேயொன்றுதான். அதன் பெயர் தௌஹீது. இதை விளக்கித் தரும் மூலமந்திரம்தான் கலிமத்துத் தையிபா. இந்தக் கலிமாவைக் கொண்டு செயல்படும் விபரம் (நடைமுறை)தான் காலாகாலம் வேறுபட்டிருக்கிறது. குழந்தை, வாலிபன், வயோதிபன் என்ற தகைமைகள் மனிதனுக்கமைந்திருப்பது போல மனிதனின் அறிவு வளர்ச்சியிலும் பல தகைமைகளுண்டு. ஆரம்ப மனிதரின் அறிவு குழந்தையின் நிலைமையிலிருந்து படிப்படியாய் வளர்ந்து வந்திருக்கிறது. இந்த வளர்ச்சிக்கேற்றபடி ஆரம்பத்தில் கொள்கையும் செயல் விளக்கமான (ஷரீயத்தும்) நடைமுறைகளும் ஸுஹுபுகள் (ஆகமங்கள்) வாயிலாக அருளப்பட்டிருக்கிறது. மனித அறிவு ஓரளவு வளர்ச்சியடைந்தபோது ஸுஹ்புகளால் அறிவிக்கப்பட்ட ஷரீயத் மாற்றப்பட்டு வேறொரு ஷரீயத் தோடும் ஸுஹ்புகளின் கொள்கையோடும் தௌறாத் என்ற ஓரு வேதம் அருளப்பட்டது. மனித அறிவு இன்னும் வளர்ச்சியடைந்த போது ஸபூர் என்ற வேதம் தரப்பட்டது. கொள்கையில் எவ்வித மாற்றமுமில்லாமல் தௌறாத் வேத ஷரீயத் மாற்றப்பட்டு வேறொரு ஷரீயத் தரப்பட்டதுதான் ஸபூர் என்பது? இதன்பின் இஞ்சீல் வேதம் அருளப்பட்டது. இதில் செய்யப்பட்ட மாற்றம் ஷரீயத்தில்தான். மனித இனத்தின் அறிவு பூரணவளர்ச்சியடைந்த நிலையில் அருளப்பட்டதுதான் புர்கான். இதில் முன்கூறிய ஷரீயத்துக்கள் யாவும் மாற்றப்பட்டு இனிமேல் மாற்ற அவசியமில்லாத ஓரு ஷரீயத் தரப்பட்டிருக்கிறது. கொள்கை எப்போதும் நிலையாய் இருந்து கொண்டிருந்த ஒரேயொரு கொள்கைதான். ஆகவே ஒரே

கொள்கையை உறுதிப்படுத்தும் நோக்கமாக வேதங்களும் ஸுஹ்புகளும் தரப்பட்டன. ஆகையால், வேதம் பல பகுதிகளாய் இறக்கப்பட்டிருந்தாலும் உலக மக்களின் வேதம் ஒன்றேயொன்றுதான். கொள்கை ஒன்றுதான். தீன் ஒன்றுதான். இதைவிட முன் உண்டான வேதங்கள் ஒவ்வொரு குறிப்பிடப்பட்ட மக்களுக்காக அருளப்பட்டவை. புர்கான் உலகமக்கள் யாவருக்குமே பொதுவானது. எந்த நாட்டவன் எந்தக் காலத்தவன் எந்த ஓரு நல்லறிவைக் கூறியிருப்பினும் அது ஒரே மதமான தீனுல் இஸ்லாத்திலுள்ளதாகவே இருக்கும். ஆகையால்தான் அறிவு ஈமான்தாரிகளின் தவறிப்போன சொத்தாக இருப்பதால் அதை எங்கே கண்டாலும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.

குர்ஆன்: 87:18,19

நிச்சயமாக இது முன்னுள்ள ஆகமங்(ஸுஹ்பு)களிலும் இப்றாஹீம், மூஸாவுடைய ஆகமங்களிலும் இருக்கிறது.

(குர்ஆனில் இடம்பெறும் ஞானம் கொள்கை என்பவை ஸுஹ்புகளிலுள்ளவையேயன்றி அவற்றை விட்டு வேறானவையல்ல)

எஹுதுகளான (அஹ்லுல் கிதாபிகளான) மக்களின் கொள்கை பழக்கவழக்கம் கலாச்சாரம் போன்ற விஷயங்களில் பிராமணிகளுக்கும் அவர்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டு என்பதைப் பல பெரியார்கள் பல நூற்களில் விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். தற்காலம் நாம் இந்துக்கள் என்று கூறுபவர்கள் சுமார் 5 ஆயிர வருடங்களுக்குட்பட்டவர்கள். இவர்களுக்குப் பல ஆயிர வருடங்களுக்கு முன்பே இஸ்லாமும் தௌஹீதும் இருந்ததுதான். நபிமார் மூலம் கேட்டறிந்த சில தீர்க்கதரிசனங்களை இந்து ரிஷிமார் அவர்களுடைய பாடல்கள் சுலோகங்கள் மூலம் உலகுக்கறிவித் திருக்கிறார்கள். அவற்றில் உண்மையான விஷயங்களுமுண்டு. றசூல் (ஸல்) அவர்களைப் பற்றியும் அவர்கள் தாய் தந்தையரைப் பற்றியும் கலிமாவைப் பற்றியும் அந்த ரிஷிமார் சரியான விளக்கம் தந்து இருக்கிறார்கள். ஓரு சிறு உதாரணம் தருகிறேன்.

மகரிஷி வியாச முனிவரால் எழுதப்பட்ட "பவிஷ்ய" புராணத்தில் ஓர் அன்னிய நாட்டில் ஓர் ஆத்மீகச் சீர்திருத்தவாதி தம் சீடர்களுடன் வருவார். அவர் பெயர் மஹாமத். (மஹ்மூத் அல்லது முஹம்மத்) அவர் பாலைவனத்தைச் சேர்ந்தவராயிருப்பார். என்று பவிஷ்ய புராணம் பாகம் 3 ஸ்லோகம் 3 சூத்திரம் 5, 8ல் கூறுகிறார். இவர் குறிப்பிட்ட மஹாமத் எமது றசூல்(ஸல்) அவர்கள் தான்.

ரிக்வேதம் மந்திரம் 5 ஞாக்தம் 28இல் மஹாமத் என்ற பெயர் மாமஹே என்ற சொல்லால் குறிப்பிடப்படுகிறது. உண்மையாளரும் அறிவாளியும் பலசாலியுமான மாமஹே முழு உலகுக்கும் அருட்கொடையானவர் (றஹ்மத்துன்லில் ஆலமீன்) என்று அந்த வேதம் குறிப்பிடுகிறது. மேலும் சில ஸ்லோகங்களில் மகாமத் என்ற அவதார புருடர் குகையில் இருந்து தவம் புரிவார் என்று கூறுகின்றன. இச்சொல்லில் அவதாரபுருடர் என்பது இடைச் செருகலாகும். வேறு சில ஸ்லோகங்கள், மகாமத்துடையதாயின் பெயர் சுமதி, (சோமதி) என்றும் தந்தை பெயர் விஷ்ணுயிஸ் என்றும் கூறப்படுகிறது. சோமதி அல்லது சுமதியென்றால் அமைதி சாந்தம் உடையவள் என்பது பொருள். றசூலின் தாய் பெயர் ஆமினா. ஆமினா என்றால் அமைதி சாந்தமுடையவர் என்பது பொருள்.

விஷ்ணு என்றால் கடவுள் என்பது பொருள். யிஸ் என்றால் அடிமை அடியார் என்பது பொருள். விஷ்ணுயிஸ் என்றால் கடவுளின் அடிமை (அப்துல்லாஹ்) என்பது பொருள். றசூலின் தந்தையின் பெயர் (அல்லாஹ்வின் அடிமை) அப்துல்லாஹ் என்பது. இவ்வித ஸ்லோகங்கள் அன்னிய பாஸையில் இருப்பதால் இதை முஸ்லீம்களுடையதல்ல என்று நாம் கூறமுடியுமா? ஒரு ஹிந்துவினால் விவரம் தரப்பட்ட றசூலை நாம் ஏற்றுக் கொள்வது பிழையாகுமா?

அதர்வண வேதத்தில் லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமா வெளிப்படையாகவே கூறப்பட்டிருப்பதை நாம் காணலாம், இதோ ஒரு ஸ்லோகத்தைப் பாருங்கள்.

அல்லோ ஜியேஸ்டம் பரமம் பூரணம்
பிரஷ்மாண்டம அல்லாம்
அல்லோ அல்லாம் ஆதல்லா பூகமேகம்
அல்லாஹ் பூகணி வாதகம்
அல்லாஹ் பஞ்ஞென ஹுத ஹிறுத்தவா
அல்லாஹ் சூர்ய சந்த்ர சர்வ நட்சத்திரம்
அல்லாஹ் ரிஷி நாம சர்வதிவ்யாம இந்திராய
பூர்வம் மாயா பரமந்தரீஸா
அல்லாஹ் பிறுத்திவ்ய அந்தரீஸம் விசுவரூபம்
இல்லாம் கபர இல்லாம். இல்லல்லதீ இல்லல்லாஹ் ஓம் அல்லாஹ்
இல்லல்லாஹ் அனாகீஸ்வ ரூபா
அந்தர்வணா சியாமா ஹும் ஹிரிம் ஜனான பகன
ஸித்தான ஜலஸாரன் அதிர்ட்டம்
குருகுரு புடஸ பரஸட ஸமஹானீ ஹும் ஹரீம்
அல்லாஹ் றசூல் மஹாமத கபரஸ்ய அல்லாஹ் அல்லாஹ்
இல்லல்லலேதி இல்லல்லாஹ்.

இதன் பொருள்:-

அல்லாஹ் முழுமையானவன். எல்லாப் பிரபஞ்சங்களும் அவனுடையது. சிவனின் ஸ்தானத்தை அலங்கரிக்கும் மஹாமத் (முஹம்மத் மஹ்மூத்) அல்லாஹ்வுடைய தூதராய் இருக்கிறார். அல்லாஹ் எல்லாப் பூமிகளையும் இயக்கும் இறைவன். பூமியின் பரிபாலகனும் அவனே. இறைவன் ஒருவனேயன்றி வேறில்லை. அரூபியான இறைவனின் ஓங்காரத்தை (இறைவசனத்தை)ப் பாருங்கள். ஓம்ஹரீம் மந்திரங்களடங்கிய அதர்வண வேதத்தை இறக்கிய இறைவனே மக்களையும் பசுக்களையும் ஏனையவற்றையும் படைத்தான். அரூபியான அந்த இறைவனையே துதி செய்யுங்கள். ஓம்ரீம் மந்திர மூலம் அசுரவர்க்கத்தை அழிக்கும் மஹாமத் அல்லாஹ்வின் தூதர், ஏக இறைவனைத் தவிர வேறில்லை.

இந்த ஸ்லோகத்தை அல்லோப நிஷத் என்னும் உபநிடத்தில் காணலாம். இஸ்லாமிய கலைக்களஞ்சியத்திலும் காணலாம். இவைபோல் இன்னும் பல தென்படுகின்றன இவர்கள் குறிப்பிடுகிற அதர்வண வேதம் என்பது திரிபுபடுத்தப்பட்ட ஸபூர் அல்லது தௌறாத்தாக இருக்கலாம்.

இவற்றிலிருந்து நாம் யூகிக்கக்கூடியது என்னவென்றால் உலகில் எத்தனை மதங்கள் இருப்பினும் அவையெல்லாம் ஒரே கொள்கையை நிலைப்படுத்தவே முனைந்திருக்கின்றன. ஆனால் மனிதர்களின் தவறான சிற்சில விளக்கங்களால் அக்கொள்கையும் மதமும் சிதறுண்டு கிடக்கிறது. மதம் ஒன்றே, கொள்கை ஒன்றே, மதம் மக்களறிவுக்கேற்றபடி தௌறாத், ஸபூர், இஞ்சீல் போல் பாகம் பாகமாய்த் தரப்பட்டு புர்கானைக் கொண்டு நிரப்பம் செய்யப்பட்டிருக்கிறது.

குர்ஆன்: 3:23
வேதத்தில் ஒரு பாகம் கொடுக்கப்பட்ட (யூதர்களான) இவர்களை நீர் பார்க்கவில்லையா?
(இவ்வாயத்தின்படி தௌறாத், ஸபூர், இன்ஜீல் என்பவை வேதத்தின் ஒவ்வோர் பாகமாகும்).

குர்ஆன்: 3:19
நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் மார்க்கம் இஸ்லாம்தான்.
(மதம் இஸ்லாம் ஒன்று மட்டும்தான். கொள்கை தௌஹீது மட்டும்தான் மற்றெல்லாம் இடைச்செருகல்களே).

குர்ஆன்: 42:13
(விசுவாசிகளே!) நூஹுக்கு எதனை அவன் உபதேசித்தானே, அதனையே உங்களுக்கும் அவன் மார்க்கமாக்கியிருக்கிறான். ஆகவே, நாம் உமக்கு வஹி மூலம் அறிவிப்பதும் இப்றாஹீம், மூஸா, ஈஸா ஆகியோருக்கு நாம் உபதேசித்ததும் என்னவென்றால்; "(ஏகத்துவக் கொள்கையுடைய) மார்க்கத்தை நிலையாகக் கைக்கொள்ளுங்கள், அதில் பிரிவினை செய்து கொள்ளாதீர்கள்" என்பதே. அவர்களை நீர் அழைக்கும் இது (ஏகத்துவக் கொள்கை) இணைவைப்பவர்களுக்குப் பெரும் பளுவாகத் தோன்றும். அல்லாஹ்தான் விரும்பியவர்களையே தன் வழியில் தெரிந்தெடுத்துக் கொள்கிறான். அவனை நோக்கியவர்களுக்கே தன்னிடம் வரும் வழியையும் அவன் அறிவிக்கிறான்.

தௌஹீதை எப்பாஷையில் விளக்கினாலும் அது தௌஹீதுதான். இந்துக்களுக்கென்று மதமோ கொள்கையோ கிடையாது. இவ்விஷயத்தை எமக்கு எவ்வளவோ முன்பு பல பெரியார்கள் விளக்கியுள்ளனர். அத்வைதம் இந்துக்களுக்குரியதென்றும் தௌஹீது மூ.்.மீன்களுக்குரியதென்றும் மக்களை ஏய்த்துப் பிழைப்பது ஜாஹீலான ஸைத்தான்களின் செயலல்லவா? இந்து சமயத்திரிபு சுமார் 5,000 வருடங்களுக்குட்பட்டது. அதற்கு முந்திய சுஹ்புகள் காலவரையறை கணிக்க முடியாதவை. கொள்கை விளக்கம் எப்பாசையிலிருப்பினும் நாம் கவலைப்பட வேண்டியதில்லை. அது குர்ஆன் ஹதீஸ்களோடும் இஜ்மாஉ, கியாஸ், அறிவு முதலாம் ஆதாரங்களோடும் சரியாய் இருக்கிறதா? என்பதுதான் எமக்குத் தேவை.

இந்த வியாசமுனிவர் இந்தியாவில் வாழ்ந்த ஓர் இந்துதான். றசூல் (ஸல்) அவர்களைப் பற்றி ஓர் இந்துவால் சொல்லப்பட்டிருப்பதால் நாம் அந்த றசூலை ஏற்க முடியாதென்று கூறலாமா? இப்படிக் கூறுகிற எமதறிவை எப்படி வர்ணிப்பது? தௌஹீது சம்பந்தமாயுள்ள நாலுவகை விளக்கங்களையும் இப்போது ஆராய்ந்து பார்ப்போம்.

தௌஹீதில் பலவகையுண்டா?

"லாஇலாஹ இல்லல்லாஹ்" என்ற கலிமத்துத்தையிபா ஷிர்க் (இணைகற்பித்தல்) என்ற ஒரு தவறான கொள்கையை மறுத்து உண்மையை உறுதிப்படுத்துவதற்காகவே இறைவனால் நபிமார் மூலம் அருளப்பட்டது என்பதில் அன்றும் இன்றுமுள்ள உலமாக்களில் எவருக்கும் அபிப்பிராய பேதமே இல்லை. எல்லா உலமாக்களும் இதை ஏகமனதாய் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஷிர்க் என்பதற்கு நேர் முரணானதே தௌஹீது என்பது. ஆனால் கலிமா உணர்த்தும் தௌஹீது எது என்பதில் தான் உலமாக்களிடத்தில் அபிப்பிராயபேதம் இருக்கிறது. இதில் நான்குவகை விபரங்கள் தென்படுகின்றன. இவை ஒவ்வொன்றையும் ஆராய்ந்து பார்ப்போம்.

1ஆவது கொள்கை விளக்கம்

உலமாக்களில் ஒரு கூட்டத்தார் தௌஹீது என்றால் ஏகமாக்கல் என்பதை ஏற்றுக்கொண்டிருந்தாலும் உலூஹியத்தில் ஒருமைப்படுத்தல் என்கிறார்கள். உலூஹியத்தென்ற பதத்தால் உணர்த்தப்படும் இலாஹு என்ற சொல்லுக்கு நாயன் என்று பொருள் கொண்டிருக்கிறார்கள் என்பது வெளிப்படையாய்த் தெரிகிறது.

நாயகத் தன்மையில் ஒருமைப்படுத்தல் என்றால் நாயகன் ஒரேயொருவன்தான் என்றறிவதுவாகும். இப்படியானால் இதுதான் தௌஹீது என்றால் இதற்கு மாறாக நாயகன் ஒருவனே என்றறியாமல் இருப்பதே ஷிர்க்காக இருக்க வேண்டும். குர்ஆன் இதற்கு மாறாகச் சாட்சி கூறுகிறது. அறபு நாட்டு முஸ்ரிக்கீன்கள் எல்லோரும் ஒரே இறைவனை ஏகமனதாய் ஏற்றிருந்தார்கள் என்றும் அவர்கள் முஸ்ரிக்குகள்தான் என்றும் குர்ஆன் கூறுகிறது.

குர்ஆன்: 23:86

''ஏழு வானங்களைப் படைத்தவனும் கனம்தங்கிய அர்ஷைப் படைத்தவனுமாகிய (றப்பு) நாயன் யார்?'' என்று (அந்த முஸ்ரீக்குகளைக்) கேளும், அல்லாஹ்தான் என்று அவர்கள் கூறுவார்கள்.

(குர் ஆனின் 29:61, 29:63, 31:25, 43:9 போன்ற ஆயத்துக்களையும் எடுத்துப் பாருங்கள்)

றசூல்(ஸல்) அவர்கள், முன் எப்போதுமே நபிமார் வராத அறபு நாட்டில் முஸ்ரிக்கீன்கள் மத்தியில் பிறந்து வளர்ந்து நபியானவர்கள். அவர்களுடைய முதல் உபதேசம் முஸ்ரிக்கீன்கள் முன்னிலையில்தான் நடைபெற்றது. அந்த முஸ்ரிக்கீன்கள் எப்போதும் நாயகன் ஒருவனே என்பதை மறுத்ததில்லை. அப்படியானால் இக்கூட்டத்தினர் சொல்வது சரியானால் றசூல் (ஸல்) அச்சமூகத்தில் தோன்றியிருக்க மாட்டார்கள். ஏன்? அந்த மக்கள்தான் ஒரே நாயன் என்று ஏகமாக்கிக் கொண்டிருக்கும்போது அங்கே நபி அவசியமல்லவே, ஷிர்க் எங்குண்டோ அங்குதான் நபிமார் தோன்றி னார்கள். நபிமார் ஒலிமாரின் வேலையே ஷிர்க்குக்கு எதிராய்ப் போராடுவதுதானே.

ஆகவே, இந்த உலமாக்கள் கூறுகிறபடி உலூஹியத்தில் ஒருமைப்படுத்தலே தௌஹீது என்றால் எல்லா முஸ்ரிக்குகளும் தௌஹீதை ஒப்புக் கொண்டவர்களேயாவார்கள். இவர்களை இறைவன் முஸ்ரிக்கீன்கள் என்று கஞ்சா ஞானத்தோடு கூறினான் என்று இவர்கள் நம்புகிறார்கள்போலும்? இக்கூற்றை இந்த உலமாக்கள் குர்ஆனுக்கு மாறாக ஏன் இப்படிக் கூறினார்கள் என்பதை ஆராய்ந்தால் சில உண்மைகள் புலனாகின்றன. அதாவது இவர்களுக்கு ஷிர்க்குடைய விவரமோ தௌஹீதுடைய விஷயமோ தெளிவாய் விளங்காமை ஒன்று. மற்றொன்று அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாதவையும் உண்டு என்றே அவர்கள் நம்பியிருந்திருக்கிறார்கள். ஷிர்க்கின் ஆணிவேரை அறியாத இவர்கள் நாமும் அதில் மாட்டிக்கொண்டே பேசுகிறோம், எழுதுகிறோம் என்பதை எப்படி அறிவார்கள் இவர்கள் வெறும் பின்பற்றல்வாதிகளேதான்.

பல நாயகர் உண்டு என்று நம்பும் மக்களுக்கு இக் கொள்கை சரியாய் இருக்கலாம். ஆனால் இஸ்லாத்திலுள்ளதுமல்ல இஸ்லாத்துக்கு இக்கொள்கை அவசியமுமல்ல. ஏன் என்றால் கலிமா என்பது ஷிர்க்கு எங்கெங்கு எப்படியெப்படியிருப்பினும் ஒரே நொடியில் எரித்துவிடும் விளங்கிக் கொண்டால், இவ்வித உலமாக்களின் கூற்றுப்படி நோக்கினால் மூ.மீனுக்கும் முஸ்ரீக்கிறகும் எவ்வித பேதமும் காணமுடியாது. இரு கூட்டமும் ஒன்றேயென்று தீர்ப்பிட நேரிடும். இது எமது யூகமல்ல, குர்ஆனின் தீர்ப்பாகும். ஆகவே நாம் இக்கொள்கையிலிருந்தும் விடுபட வேண்டும்.

இன்னோர் நுட்பம்; கலிமாவிலுள்ள இலாஹ் என்ற சொல் பொதுப்பெயர்ச் சொல்லாகும். உள்ளது யாவையும் ஒன்று சேர்த்துக் கூறப்பட்ட சொல்லாகும். அதை இறைவன் என்ற ஒன்றுக்கு மட்டும் பாவிப்பது கலிமாவைப் புரட்டுவதாகவே அமையும்.

2ஆவது கொள்கை விளக்கம்:

உலமாக்களில் இன்னொரு கூட்டத்தார் இபாதத்தில் ஒருமைப்படுத்தல் தௌஹீது என்கிறார்கள். இவர்களில் சிலர் மனிதர்களுக்கு ஈமான் விஷயத்தில் இவ்வளவே போதும் என்கிறார்கள். "முஸ்தஹக்கலில் இபாதா" என்பது இவ்வுலமாக்களின் வியாக்கியானம்தான். இதைத் தற்காலமுள்ள ஒருசில உலமாக்கள் இபாதத்து என்ற பதத்துக்கும் வணக்கமென்ற பதத்துக்கும் பேதம் தெரியாத காரணத்தினால் அந்த வியாக்கியானத்தை வணக்கத்துக்குரிய நாயன் என்று மீண்டும் புரட்டிக் கொண்டார்கள். லேபல் பேர்வழிகள் வேறு எதைத்தான் செய்ய முடியும்.

அடிப்படையிலுள்ளோர் இபாதத் அல்லாஹ்வுக்கேயன்றி யில்லையென்ற பொருளோடு கூறியிருக்கலாம். அதை இன்றுள்ள ஒரு கூட்டம், வணக்கத்துக்குப் பாத்திரமான நாயன் அல்லாஹ்வே யென்று கூறுவதால் வணக்கத்துக்குப் பாத்திரமல்லாத (இலாஹ்)

பொருட்களும் அல்லாஹ்வுடன் உண்டு என்ற ஷிர்க்கிலேயே புரட்டி விட்டிருக்கிறார்கள். இவர்களின் கூற்றும் குர்ஆன் ஹதீஸ்களுக்கு நேர் முரணானதே. எப்படியென்றால், முஸ்ரிக்கீன்களான அந்த அரபு நாட்டு மக்கள் அஸீஸ்ம் அலீமுமாகிய அல்லாஹ்வை நெருங்கிச்சேர வேண்டுமென்ற நோக்கத்துக்காகவே விக்கிரகங்களை வணங்கினார்கள் என்று குர்ஆன் சாட்சியம் கூறுகிறது. அவர்கள் அந்த விக்கிரகங்களை அல்லாஹ் தான் என்று எப்போதும் நம்பியதோ கூறியதோ இல்லை என்பதைக் குர்ஆன் நிரூபணம் செய்கிறது?

குர்ஆன்: 39:3
ஆலிஹத்துக்கள் (விக்கிரகங்கள்) எங்களை அல்லாஹ் விடத்தில் நெருங்கிச் சேர்ப்பதற்காகவேயன்றி நாங்கள் வணங்குவதில்லை.

நாம் முன்பு தந்த 23:86, 29:61, 63, 31:25, 43:9 போன்ற ஆயத்துகளையும் இங்கே நோக்குங்கள். இவற்றில்

1ஆவது அல்லாஹ் ஒருவன் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள்
2ஆவது அவனை நெருங்கிச் சேரவே வணங்கினார்கள்.
3ஆவது விக்கிரகங்களை அவர்கள் அல்லாஹ்வாக நம்பவில்லை.

நாம் இங்கே தருவது யூகமா? இல்லை, குர்ஆனின் வசனம்தான். இவ்வித கொள்கையோடுள்ள மக்களை நோக்கியே முஷ்ரிக்கீன்கள் என்ற சொல்லை இறைவன் பாவிக்கிறான். ஆகவே, இந்தக் கூட்டத்தாரின் கூற்றுப்படி பார்த்தால் மூ.்மீனும் முஷ்ரிக்கும் சமமானவர்களேயென்று சொல்ல நேரிடும். இது குர்ஆனுக்கு முற்றும் முரணானது, மெய்தான் இபாதத்துச் செய்வதற்குத் தகுதியானவன் இறைவனே என்று கொண்டிருந்தால் கிட்டத்தட்டத் தெளஹீது போல் தென்படுகிறது என்று நம்பிய ஒரு கூட்டம்தான் அந்த வாக்கியத்தை ஆரம்பத்தில் கூறியிருக்கிறது. பின்வந்தோர் அதையும் புரட்டுச்செய்து வணக்கத்துக்குரிய நாயன் என்று கூக்குரலிடுகிறார்கள். இவையெல்லாம் ஷிர்க்குடைய ஆணி வேரையும் தெளஹீதுடைய கூர்மையையும் அறியாத, குர்ஆனுக்கு முற்றிலும் மாறான புரட்டலே.

முஸ்லீம்கள் மத்தியில் வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத் தவிர என்று கூறுவதே போதுமென்றும் உண்மையைக் கூறினால் பித்தனாவாகிவிடும் என்றும் நம்புகிறார்களா? றசூல்(ஸல்) அவர்களும் முஷ்ரிக்குகள் மத்தியில்தானே அல்லாஹ் தவிர இலாஹ் இல்லையென்று கூறியிருக்கிறார்கள். றசூலால் குறிப்பிடப்பட்ட காலத்தில் (றசூலின் மறைவுக்கு சுமார் 30 ஆண்டுகளின்பின்)தான் இந்தப் புரட்டலும் திருவிளையாடலும் இஸ்லாத்தில் இடம்பெற்றிருக்கிறது. இதைச் செட்டிவிக்கட் காட்டித்தர முடியாது. ஆராய்தல் நிச்சயமாகக் காட்டித்தரலாம்.

குர்ஆன்: 53:30

இவர்களுடைய கல்வி ஞானம் இவ்வளவு தூரம் தான் செல்லுகிறது. (இதற்குமேல் செல்வதில்லை) நிச்சயமாக உமதிறைவன், தன்னுடைய வழியிலிருந்து தவறியவன் யார் என்பதையும், நேரான வழியில் செல்பவன் யாரென்பதையும் அவன் நன்கறிவான்.

ஆகவே குர்ஆன் ஹதீஸ்களை முடிவான ஆதாரமாகக் கொண்ட மக்கள் இக்கொள்கை விளக்கத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. இக்கொள்கை இன்றைய உலகில் குர்ஆனின் ஒருசில வசனங்களை விளங்கிக் கொள்ள முடியாத பாமர மக்களாலேயே பின்பற்றப்படுகிறது.

3ஆவது கொள்கை விளக்கம்

உலமாக்களில் இன்னோர் கூட்டத்தார் எக்காரியத்தில் ஈடுபடுவதனாலும் அல்லாஹ் அல்லாததை அல்லாஹ்வுடன் கூட்டாக்காமல் இருப்பதே தௌஹீது, ஏகமாக்கல் என்று கூறுகிறார்கள். இவர்கள் எடுத்த எடுப்பிலேயே ஒரு பிழைவிட்டு விட்டார்கள், அதாவது அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாததும் உண்டு என்று இவர்கள் நம்பிக்கொண்டதனால்தான் அல்லாஹ் அல்லாததைக் கூட்டாக்க வேண்டாம் என்கிறார்கள். இவர்களும் முஷ்ரிக்குகளின் கொள்கை அடிப்படையில் இருந்து கொண்டுதான் இக்கூற்றை விடுகிறார்கள். இது குர்ஆனுக்கு நேர்முரணாய் இருக்கிறது. சுத்த ஷிர்க்காகவே இருக்கிறது.

குர்ஆன்: 28:74

இறைவன் அவர்களை நோக்கி ''எனக்கு இணையானவைகள் என்று நீங்கள் எண்ணிக் கொண்டிருந்தீர்களே அவைகள் எங்கேயென்று?'' கேட்கும் நாளை அவர்களுக்கு ஞாபகமூட்டும்.

குர்ஆன்: 34:27

''அல்லாஹ்வுக்கு இணையானவையென நீங்கள் அவனுக்குச் சமமாகச் சேர்த்து வைக்கிறீர்களே அவற்றை நீங்கள் எனக்குக் காண்பியுங்கள்! (அவனுக்கு இணையாக அவனுடன் ஒன்றுமே) இல்லை. அவனோ மிகைத்தோனும், ஞானமுடையோனுமாகிய அல்லாஹ்வாகும்'' என்று கூறும்.

ஒரே மூலப்பொருளின் தோற்றமே யாவும் என்பதை ஊன்றி உணராத மனிதன் அவன் காணும் சகல பொருட்களையும் தனித்தனீ உண்மைப் பொருட்களாய் நம்புகிறான். ஆகவே நிலையாய் இருந்து கொண்டிருக்கும் உண்மைப் பொருளுடன் (ஹக்குடன்) அதுவல்லாத உண்மைப் பொருட்களும் (ஹக்குக்களும்) உண்டு என்று கற்பனை பண்ணுகிறான். இதுதான் ஷிர்க் என்பதும் பொய் யென்பதும் இந்தப் பொய்யான கற்பனையை நீக்கி ஹக்கோடு இரண்டற்ற ஒன்றாய் நிலைபாடாய் அமைவதற்கு வழிவகுப்பதே தீனுல் இஸ்லாம் என்பது. இதை மனித அறிவுக்கு எத்திவைக்காமல் மூடிமறைப்பதும், புரட்டுவதும் மனிதகுலத்தை நரகுக்கழைப்பதாகவே முடியும்.

குர்ஆன்: 26:213

ஆதலால் நீர் அல்லாஹ்வுடன் கற்பனையான (ஆண்டவனை) இலாஹுவைக் கூப்பிடாதீர்; அதனால் நீர் வேதனை செய்யப்படுவீர்.

குர்ஆன்: 26:98,99

உங்களை நாம் உலகத்தாரின் இறைவனுக்குச் சமமாக்கி வைத்தோம்; குற்றவாளிகளேயன்றி எங்களை வழிகெடுக்க வில்லை.

இந்த ஆயத்துகளைத் தெளிந்த அறிவோடு நோக்குங்கள். இலாஹுகளை றப்புக்குச் சமமாய்க் கொண்ட குற்றவாளிகள்

ஆகிறாவில் கூறும் வார்த்தைதான் இது. இந்த முஷ்ரீக்குகள் இந்த இலாஹுகள் அல்லாஹ்வுக்குச் சமமானவையென்று எங்கேயும் எப்போதும் கூறியதாக நாம் அறியவில்லை. குர்ஆன் ஹதீஸுகளில் இவர்கள் இப்படிக் கூறினார்கள் என்பதற்கு எவ்வித ஆதாரமும் கிடையாது. ஆனால் அந்த இலாஹுகள் அல்லாஹ்வுக்குச் சமமானவையென்று தங்கள் கொள்கை விளக்கத்தால் (ஈமானால்) ஆக்கியிருக்கிறார்கள். இதற்குக் குர்ஆன் ஹதீஸ்கள் முழுக்க முழுக்க ஆதாரம் தருகின்றன. இந்த ஆக்கல் அவர்களுடைய உள்ளத்தில் குடிகொண்டிருந்த அக ஆக்கலாய் இருக்கிறது. அதாவது அவர்களை அறியாமலே அவர்களுடைய கல்பில் ஏதோ ஓர் ஆக்கல் அமைந்திருக்கின்றது. இது அவர்களுடைய அறிவினால் ஏற்பட்ட வெறும் கற்பனையாய் இருக்கிறது.

குர்ஆன்: 10:30

அவர்கள் பொய்யாகக் கற்பனை செய்து கொண்டிருந்த தெய்வங்கள் யாவும் அவர்களை விட்டு மறைந்துவிடும்.

இவ்வாயத்தில் அத்தெய்வங்கள் அல்லாஹ் அல்லாதவையென்று நம்பியிருந்தது வெறும் பொய்யான கற்பனை என்பது விளக்கப்பட்டுள்ளது.

இந்தக் கற்பனை அல்லாஹ்வுடன் இன்னும் ஏதோவெல்லாம் அல்லாஹ்வைப் போல் சமமாக இருக்கின்றன என்று அவர்களையறியாமலே அவர்களுடைய உள்ளத்தில் ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். இதைத்தான் இறைவன் நபிக்கும் எமக்கும் சேர்த்து அல்லாஹ்வுடன் கற்பனை இலாஹுவை ஆக்க வேண்டாம் அழைக்க வேண்டாம் என்று கூறுகிறான்.

இந்த முஷ்ரீக் அவனுடைய உள்ளத்தில் ஆக்கிக் கொண்ட விசுவாசம் ஈமான்தான் ஷிர்க் என்பது. இதை ஏற்க வேண்டாம் என்பது இறைவன் பேச்சு. இந்த ஷிர்க்கை வேரோடு களைந்தெறிவதே தௌஹீதுக் கலிமா என்பது. முஸ்ரீக் அவனுள்ளத்தில் எதை எப்படி இறைவனுக்குச் சமமாக்கினான் என்பதை நாம் கண்டறிய வேண்டும். இல்லையானால் குர்ஆன்

ஹதீஸுகளால் எத்திவைக்கப்பட்ட ஈமான் எம் கல்பில் நுழையவே முடியாது.

ஹதீஸ்
ஊசியுடைய காதில் ஒட்டகை நுழைவதைவிட இன்சானுடைய கல்பில் ஈமான் நுழைவது கடினம்
(என்று ஓர் ஹதீஸ் தென்படுகிறது. குர்ஆன் ஆயத்துக்கள் அனேகம் இதற்கு ஆதாரம் தரலாம்.)

குர்ஆனின் சில ஆயத்துக்களின்படியும் இந்த ஹதீஸின் படியும் ஈமான் கொள்வது உண்மையாகவே கடினமான ஓர் காரியம் தான்.

குர்ஆன்: 5:41
தூதரே! சிலர் (கு.ப்ரின்) நிராகரிப்பின்பால் விரைந்தோடுவது உமக்குக் கவலையைத் தரவேண்டாம். ஏனென்றால் அவர்கள் தங்கள் வாயினால் மட்டும் ஈமான் கொண்டோம் என்று கூறினார்களே தவிர அவர்களுடைய இருதயங்கள்(அதனை) ஒப்புக்கொள்வதில்லை.

வணக்கத்துக்குப் பாத்திரமானவன் அல்லாஹ்தான் என்று (இபாரத்) வெளிச்சத்தப் பிரமாணத்தினால் நாம் அறிகிறோம். (தலாலத்) கருத்துப் பிரமாணத்தினால் இருப்பவையெல்லாம் அல்லாஹ் அல்லாதவையாதலால் அவற்றை வணங்கவே கூடாது என்றறிகிறோம். ஆகவே எமது அறிவு அல்லாஹ்வும் அல்லாஹவுடன் அல்லாஹ் அல்லாததும் உண்டு என்றெடுத்துக் கொள்கிறது. இது தான் அக ஆக்கல் என்பது.

இந்த நம்பிக்கையுள்ள மனிதன் இலாஹு அல்லாஹ்விடம் நெருங்கிச் சேர உதவும் என்று நம்புகிறான். இந்த இலாஹு நெருங்கிச் சேர்க்கச் சக்தியுடையதாய் நம்புகிறான். ஸபாஅத்துச் செய்யும் சக்தி அதற்குண்டு என்று நம்புகிறான். உலக வஸ்த்துகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான சக்தியைக் கொண்டிருப்பதாய்க் காணுகிறான் நம்புகிறான். இவனுடைய சகல வேலைகளும் இந்த அடிப்படையிலேயே அமைகின்றன. அதாவது இந்த முஸ்ரீக் எவற்றை அல்லாஹ் அல்லாதவையென்று

நம்பினானோ அவற்றை, அல்லாஹ் ஒரு பொருள் என்றும் அல்லாஹ் அல்லாதவை வேறு பொருட்கள் என்றும் நம்பினான். ஆகவே, அவன் உதவி தேடியது ஆதரவு வைத்தது உருவம் கற்பித்தது போன்ற மற்றெல்லாச் செயல்களும் உண்ணல் உறங்கல் கூட அவனுடைய கற்பனையிலுள்ள அல்லாஹ் அல்லாதவற்றிற்குச் செய்த இபாதத்தாக அமலாக அமைந்து விடுகின்றன. இறைவனோ இவனைத் தனக்கு இபாதத்துச் செய்வதற்காகவே சிருட்டித்திருக்கிறான். இவனோ தன் கற்பனையிலுள்ள அல்லாஹ் அல்லாதவற்றிற்கே இபாதத்துச் செய்கிறான்.

இவன் அல்லாஹ் அல்லாதவையென்று காணும் பொருட்கள் சிருட்டிக்கப்பட்டவை என்பது அவனுக்குத் தெரியும். அவை தம்மைத்தாமே ஆக்கிக் கொள்ளவில்லையென்று இவனுக்குத் திட்டமாகத் தெரியும். அப்படியிருந்தும் அப்பொருட்களுக்குச் சக்தியிருப்பதாய் நம்புகிறான். ஆகவே, அல்லாஹ்வுக்கு எப்படி வல்லமையுண்டோ அதே வல்லமை அல்லாஹ் அல்லாதவைக்கும் உண்டு என்று நம்பினான். ஆகவே இவன் தன் கற்பனையால் அல்லாஹ் வைப் போல் மற்றும் பொருட்களையும் சக்தியுடையவையென்று சமமாகினான். சர்வ ஆலங்களும் இறைவனின் லாஹிறான ஸுறத்தாய் இருக்கும் போதும், சர்வ ஆலங்களும் அல்லாஹ் அல்லாதவையென்று நம்பியதால் அவற்றின் ஸுறத்துக்கள் யாவும் இறைவனின் ஸுறத்துக்குச் சமமானவையென்று ஆக்கிக் கொண்டான். விக்கிரக தோற்றமும் இதில் அடங்கும். சக்தியில் சமமாக்கிய இவன் இப்போது ஸுறத்தில் சமமாக்கினான்.

இறைவனுக்குள்ள பார்வை கேள்வி பேச்சு முதலாம் சகல பண்புகளும், அல்லாஹ் அல்லாதவையென்று அவன் நம்பிய சிருட்டிக்கும் உண்டு என்று, பண்பு என்னும் ஸிபத்தில் சமமாக்கினான். எல்லாவற்றையுமே விளக்க முடியாது. இதுபோல முஸ்ரீக்கின் செயல்கள் யாவற்றையும் சீர்தூக்கிப் பாருங்கள். இவன் அஸீஸும் அலீமுமாகிய அல்லாஹ் உண்டு என்று சொன்ன சொல் வெறும் பொய் ஈமானாய் இருக்கிறது. இது ஈமானேயல்ல. இது சிருட்டிக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட ஓர் இயற்கை உணர்வுதான்.

இந்த முஸ்ரிக் எந்த எந்த வேலையைச் செய்தானோ அந்த வேலையைத்தான் ஒரு முஸ்லீமும் செய்கிறான். இவருக்கும் அவனுக்குமுள்ள வேறுபாடு தொழுகை மட்டும்தான். இந்த முஸ்லீம்களை நோக்கித்தான் நீங்கள் கற்பனை இலாஹ்வை அழைக்க வேண்டாம் என்று கூறுகிறான். உண்மை மூ.்.மீன் முஸ்ரிக்கீன்களைப் போலவே அவர்கள் செய்த எல்லாச் செயல்களையும்தான் செய்கிறார். ஆனால் இவருடைய கல்பில் ஷிர்க்கு என்பது அணுவேனும் இருப்பதே இல்லை. நாம் கூறிய இவ்விவரத்தை மக்களுக்கு இலகுவாய் அவர்களுடைய பாணியில் கூறி விளக்குவதற்காகவே இறைவனும் றசூலும் அல்லாஹ் அல்லாதவற்றிடம் உதவி தேட வேண்டாம் என்று கூறினார்கள். இதைத்தவிர அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாததும் உண்டு என்ற பொருளோடு கூறப்படவில்லை. அறியாத மக்கள் இதைப் புரிந்துகொள்வதே இல்லை. இவ்வசனங்களைக் கொண்டு றப்பு அல்லாதவையுமுண்டு என்று அம்மக்கள் மருட்சியடைகிறார்கள். (இதை முன்பே விளக்கியுள்ளேன்)

அல்லாஹ் அல்லாதவையும் உண்டு என்று கொண்டால் மனிதன் மட்டுமல்ல றசூல்மார்கள் கூட ஷிர்க்கில் இருந்து தப்ப முடியாது. ஏன்? அவர்களும் நம்மைப்போல் எல்லாச் சிருட்டிகளோடும் தான் தமது வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறார்கள். உதவி பெற்றிருக்கிறார்கள். ஆனால் இவர்கள் அல்லாஹ்வையன்றி எதையும் காணாதிருப்பதால், கற்பனை இலாஹ்வை ஏற்படுத்திக் கொள்ளாமல் இருப்பதால் எது எது எப்படி எப்படி இருந்தாலும் நடைபெற்றாலும் யாவும் அவன் செயலேயென்று ஈமான் கொண்டிருப்பதால் ஷிர்க் அவர்களிடமில்லை. என் வணக்கம், ஊண், குடிப்பு யாவும் அல்லாஹ்வுக்கே என்ற கருத்துப்பட றசூல்(ஸல்) அவர்களால் கூறப்பட்ட ஹதீஸ்களை இங்கே நீங்கள் நினைவு கொள்ள வேண்டும்.

குர்ஆன்: 6:162

நீர் கூறும்: நிச்சயமாக என்னுடைய தொழுகையும், என் வணக்கங்களும் ,என் ஜீவியமும், என் மரணமும் உலகத்தாரைச் சிருட்டித்துப் போஷித்துப் பரிபக்குவப்படுத்தும் அல்லாஹ்வுக்கே உரித்தானவை.

இவ்வாயத்தின் மூலம் றசூல்(ஸல்) அவர்கள் சுய நிர்ணய உரிமையற்ற பூரண அப்துவாய்(அடிமையாய்) இருந்தார்கள் என்பது புரிகிறதல்லவா? அல்லாஹ்வை விட்டும் நான் வேறானவன் என்று நம்பிய மனிதன் எதையும் அல்லாஹ்வுக்காகச் செய்ய முடியாது. அல்லாஹ்வின் கட்டளைகளுக்காகச் செய்வது வேறு. செயல்கள் அல்லாஹ்வுக்கே உரித்தானவையாய்ச் செய்யப்படுவது வேறு. (நுட்பமாய் உணர்க.)

இவர்கள் தாத்தையன்றி இல்லையென்றும் அந்த தாத்து என்ற அல்லாஹ்வுக்கேயன்றிச் சக்தியில்லையென்றும், மற்றும் சர்வ பண்புகளும் செயல்களும் அல்லாஹ்வுக்கேயன்றி இல்லையென்றும் ஈமான் கொண்டிருப்பதால் தௌஹீதென்னும் ஏகமாக்கல் இவர்களிடத்தில் பூரணமாய் நிரப்பம் பெற்றுவிடுகிறது.

இன்னொரு நுட்பம், சிருட்டி அல்லாஹ் அல்லாததுதான் என்றால் அவை இறைவனைப் போல் ஒரு தனி மூலப்பொருளாய் அல்லது பல மூலப்பொருட்களாய் அல்லது உஜூது என்னும் உண்மைப் பொருட்களாய் இருக்க வேண்டும். அப்படியிருந்தால் குர்ஆன் ஹதீஸுகளின் தீர்ப்புப்படியும் பகுத்துணரும் அறிவின்படியும் வானம் பூமியாவும் அழிந்து இருக்கும். இறைவன் என்ற உஜூதுக்கும் சிருட்டியென்ற உஜூதுகளுக்குமிடையில் யுத்தம் நடைபெற்றிருக்கும். இதுகாலவரை அப்படி நடைபெறவில்லை. இனிமேலும் இப்படி நடைபெறவே பெறாது. அழிபவர்களிடத்தில்தான் அவை அழிவு பெறும். அழியாதவனிடத்தில் அவன் பண்புகள் எப்போதும் அழிய முடியாது. ஆகவே, சிருட்டி அல்லாஹ் அல்லாதது என்று கொண்டால் எமது கற்பனையில் இறைவனான இலாஹுவுடன் அவனல்லாத வேறு ஒரு இலாஹும் உண்டு என்று நாம் எம்மையறியாமலே உள்ளத்தில் இரு இலாஹுகளை எடுத்துக் கொண்டவர்களாவோம். உண்மையாகவே ஷிர்க்கு என்பதன் ஆணிவேர் இந்த மூட நம்பிக்கையாகவே இருக்கிறது. இப்போது குர்ஆனைப் பாருங்கள்.

குர்ஆன்: 4:171
அல்லாஹ் என்பதெல்லாம் ஒரே இலாஹ்தான்.

குர்ஆன்: 16:22
உங்களுடைய இலாஹ் ஒன்றேயொன்றுதான்.

குர்ஆன்: 16:51
அல்லாஹ் கூறுகிறான்; இரு இலாஹ்களை நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டாம்; இலாஹ் ஒன்றேயென்று தான்! ஆகவே நீங்கள் எனக்கே பயப்படுங்கள்.

பல இலட்சாதி இலட்சம் இலாஹ்கள் இருந்து கொண்டிருக்கும் போதும் இரு இலாஹ்களை எடுக்க வேண்டாமென்று இறைவன் ஏன் கூறுகிறான் என்பதை ஆராயுங்கள்.

குர்ஆன்: 27:64
அல்லாஹ்வுடன் வேறு இலாஹ் இருக்கிறதா? ''நீங்கள் உண்மை சொல்பவர்களாய் இருந்தால், உங்களுடைய ஆதாரங்களை (அத்தாட்சிகளை)க் கொண்டுவாருங்கள்'' என்று நீர்கூறும்.

இன்னும் பல ஆயத்துகளைத் தரமுடியும். நான் விரிவை அஞ்சுவதால் இங்கே தரமுடியவில்லை. நீங்களே குர்ஆனைக் கொண்டு கண்டறியுங்கள். அனேக ஹதீஸ்கள் தென்படுகின்றன. ஓர் சிறு ஹதீஸை மட்டும் தருகிறேன்.

ஹதீஸ்:
அல்லாஹ்வேயன்றி மற்றயாவும் பாதில் என்று அறி.

அறிவிப்பவர் : ஸபீது(றலி)

(ஹதீஸ் கிரந்தங்கள் யாவற்றிலும் இந்த ஹதீஸ் இடம் பெற்றுள்ளது).

இந்த ஹதீஸில் பாவிக்கப்பட்டுள்ள சொல் பாதில் என்பதே. பாதில் என்றால் பொய்யென்பது பொருளல்ல என்று நான் முன்பே கூறினேன். இதை ஓரளவு விளக்க வேண்டியது அவசியமாகிறது. மற்ற யாவும் பாதில் என்று கூறப்பட்டிருப்பதால் அல்லாஹ்வுடன் மற்றும் யாவும் இருக்கின்றன என்பது போல் ஒரு மயக்கம் தென்படுகிறது. இது ஒரு றசூலின் சொல் என்பதை முதலில் நாம் மறக்கக் கூடாது. மற்ற யாவும் என்பது மக்களால்

இறைவனல்லாதவையென்று கணிக்கப்பட்ட இறைவனின் ஷிபத்துகளையும் அஸ்மாவையும் குறிப்பிட்டதாகும் இந்த ஹதீஸில் குறிப்பிட்ட அல்லாஹ் என்ற சொல் தாத்தை மட்டும் நோக்கியதாகும். ஆகவே தாத்தைத் தவிர அஸ்மா ஷிபத்தாக வெளியான யாவும் வெறும் மாய்கை (தோன்றி மறையும் கற்பனைத் தோற்றங்களே) என்பதும் அவற்றை உஜூதாய்க் கொள்வது பாதில் (பொய்) என்பதும் ஹதீஸின் உண்மையான விளக்கமாகும். வெளியானது அவனிடத்தில் அவனேயன்றி அவனல்லாத வேறிடத்திலல்ல என்பதை விளங்கிக் கொண்டால் இது இலகுவாய் அறிவில் அமையும். இதை இன்னும் குறுகலாய்க் கூறினால் தாத்தையன்றி இல்லை. இருப்பது தாத்துத் தான் என்பதே பொருள். (நுட்பமாய் உணர்க)

மேலே நான் மிகச் சுருக்கமாய்க் காட்டிய விளக்கத்தின் படியும் குர்ஆனின் தீர்ப்புப் படியும் வணக்கத்துக்குரிய நாயன் அல்லாஹ் தவிர இல்லை, அல்லது முஸ்த்தஹக்கலில் இபாதா, இபாதத்துக்குப் பாத்திரமானவன் என்று கூறுகிற இந்த உலமாக்களின் கொள்கை விளக்கமான தௌஹீதையும் மு.ஃ. மீன்களால் ஏற்றுக் கொள்ளவே முடியாது. இது குர்ஆனுக்கு மாறான ஷிர்க்காய் இருக்கிறது.

முன்கூறிய இந்த மூன்றுவகைக் கூட்டத்தினரின் விவரங்களையும் நோக்கினால் இவர்கள் குர்ஆனை விளங்கித் தெளிவு பெற்றவர்களுமல்ல தீர்ந்த ஆராய்வினால் உண்மையை அறிந்தவர்களுமல்ல. அதாவது இவர்கள் தஹ்கீதுடையவர்களுமல்ல, தக்லீதுடையவர்களுமல்ல. இவர்கள் ஷிர்க்கையும் தௌஹீதையும் அறியாதவர்கள். அவ்லியாக்களான மகான்களைக் காபீர், முர்த்தத் என்றெல்லாம் பட்டம் சூட்டியவர்கள் இவ்வகையினரே. நபிமாரையும் நல்லடியார்களையும் கொலை செய்த விஷமிகளும் இவ்வகையினரே. ஷிர்க்கென்றால் என்ன? என்பதை விளங்கிக் கொள்ளாத குற்றம் தான் இது.

குர்ஆன்: 17:45

(நபியே!) நீர் குர்ஆனை ஓத ஆரம்பித்தால் உமக்கும் மறுமையை நம்பாதவருக்குமிடையில் தடுத்துக் கொள்ளக்கூடிய ஓர் திரையை (நாம்) ஆக்கிவிடுகிறோம்.

குர்ஆன்: 17:46

அன்றி அவர்களுடைய இருதயங்களிலும் அதனை அவர்கள் விளங்கிக் கொள்ள முடியாதவாறு திரையை அமைத்து அவர்களுடைய செவிகளையும் செவிடாக்கி விடுகிறோம்; திருக்குர்ஆனில், உம் இறைவனைப் பற்றியே நீர் கூறிக்கொண்டிருந்தால் அவர்கள் வெறுத்துத் தங்கள் முதுகுப்புறமே (திரும்பிச்) சென்று விடுகின்றனர்.

ஓரு நுட்பம் : கலிமாவிலுள்ள இலாஹ் என்ற சொல் பல பொருட்களுக்கு ஒரு சொல்லான பொதுப் பெயர்ச் சொல்லாகும். அச்சொல் ஓரு குறிப்பிட்ட பொருளை மட்டும் விளக்கும் இடுகுறிப் பெயரல்ல. இலாஹ் என்பதை வணக்கத்துக்குரிய நாயன் என்று கொண்டால் பொதுப்பெயர்ச் சொல்லுக்குத் தனிப்பெயர்ச் சொல் எப்படிப் பொருந்தும்? நாயன், தெய்வம், இறைவன், ஆண்டவன் போன்ற எந்தச் சொல்லையும் இலாஹ் என்ற சொல்லுக்குரிய பொருளாகக் கூறமுடியாது. அப்படிக் கூறினால் கலிமாவினால் உணர்த்தப்படும் உண்மை புலனாகாது. இலாஹ் என்ற சொல்லுக்கு வேறு எப்பாஷையிலும் நேர்பொருள் தரக்கூடிய ஓர் தனிச்சொல் இருப்பதை நான் அறியவில்லை. ஆகவே அச்சொல்லுக்கு வியாக்கியானம் செய்துதான் விளக்கம் தரவேண்டும். வணக்கத்துக்குரிய நாயன் யார்? அல்லாஹ்தானே? அப்படியானால் கலிமா அல்லாஹ் தவிர அல்லாஹ் இல்லையென்றே பொருள்தரும். இரு அல்லாஹ்கள் உண்டு என்று யாரும் கூறவில்லையே!

குர்ஆன்: 16:51

அல்லாஹ் கூறுகிறான்: இரு இலாஹ்களை நீங்கள் எடுத்துக் கொள்ளாதீர்கள்; இலாஹ் ஒன்றேயொன்றுதான்! ஆகவே நீங்கள் எனக்கே பயப்படுங்கள்.

பல்லாயிரம் இலாஹ்கள் இருக்கும் போதும் இரு இலாஹ்களை எடுக்க வேண்டாம் என்று இறைவன் கூறுவதன் நோக்கமென்ன என்று கண்டறியுங்கள்.

றசூல்(ஸல்) அவர்களின் கொள்கை எது?

4ஆவது கொள்கை விளக்கம் உண்மைத் தெளஹீது:

"இ.ஃ.லமு அன்ன தாலிகல் வுஜூத லைஸலஹு ஷக்லுன் வலாஹத்துன் வலாஹஸ்றுன் வமாஅஹாதாளஹற வஜதல்லா பிஷ்ஷக்லிவல்ஹத்தி வலம் யதகைர் அம்மாகான மின்அதமிஸ் ஸக்லி வ அதமில்ஹத்தி பல் ஹுவல்ஆன கமாகான. அலைஹி''. (இதன் அர்த்தம்) நீங்கள் அறிந்து கொள்ளுங்கள் உஜூது என்பது (அல்லாஹ்) அவனுக்கு உருவமில்லை, எல்லையில்லை, காலம் முதலாம் கட்டுப்பாடுகளும் இல்லை எனினும் அவன் அப்படியிருப் பதுடன் (அதேவேளையில்) உருவத்திலும் எல்லையிலும் வெளியாகி யுள்ளான் இப்படி வெளியானாலும் கூட அவன் முன்பு இருந்த நிலையிலிருந்து மாறுபடவேயில்லை. (இருந்தது போலவே இருக்கிறான்.) அவன் எப்போதும் இருந்த நிலைமையில்தான் இருந்து கொண்டிருக்கிறான்.

இதுதான் இஸ்லாத்தில் குர்ஆன் ஹதீஸுகளைக் கொண்டு விளக்கம் தரப்பட்ட மூ.ஃ.மீன்களின் சுத்தமான தெளஹீதாக இருக்கிறது. ஏகமாக்கல் இங்கேதான் சரியாய் அமைகிறது. அல்லாஹ்வுடைய தாத்து ஸிபாத்து அஸ்மா எல்லாம் ஒன்றாய் ஏகமாய் ஏற்கப்பட்டிருக்கிறது. இதுதான் வஹ்தத்துல் வுஜூத் என்ற கொள்கை. இஸ்லாத்தின் ஈமானின் உயிர் இக்கொள்கைதான். இதைக் குர்ஆன் ஹதீஸுகளைக் கொண்டு விளங்கித் தெளியாமல் கல்பில் நுழைப்பதும் மிகமிகக் கடினம்தான். இந்தக் கடினமான வேலைக்காகத்தான் இத்தனை நபிமாரும் றசூல்மாரும் முஹ்ஜிஸாத்துகளும் யுத்தமும் தேவைப்பட்டன. அல்லாஹ் ஒருவன் உண்டு என்று கூற இவ்வளவு கஷ்டப்பட வேண்டியதே இல்லை. நபிமாரும் வேதங்களும் அவசியமல்ல.

ஹதீஸ்:

ஒருவன் (நரக) நெருப்பை நோக்கிச் செல்வதை அல்லாஹ் தடுத்திராவிட்டால் அல்லாஹ்வைத் தவிர இலாஹ¤ இல்லையென்றும் முஹம்மது(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதரென்றும் இருதய பரிசுத்தத்துடனே சாட்சி கூறக்கூடியவன் ஒருவனுமில்லை.

அறிவிப்பவர் : அனஸ்பரிலி

ஆதாரம் : புஹாரி

குர்ஆன்: 7:40

நிச்சயமாக எவர்கள் நம்முடைய வசனங்களைப் பொய்யாக்கிப் புறக்கணிப்பதைப் பெருமையாகக் கொண்டார்களோ அவர்களுக்கு வானத்தின் வாசல்கள் திறக்கப்படமாட்டாது - ஊசியின் காதில் ஒட்டகை நுழையும் வரையில் அவர்கள் சுவனபதியை அடையவே மாட்டார்கள்-. குற்றவாளிகளுக்கு இவ்வாறே நாம் கூலி கொடுப்போம்.

வானத்தின் வாசல் என்பது கல்பின் படித்தரங்கள்தான். இறைவசனத்தை மறுக்கும் குற்றவாளியான நஜீஸ¤டையவர்களின் கல்பில் நல்லறிவும் உண்மையும் வெளியாகவே வெளியாகாது. நஜீஸ் என்பது ஷிர்க்குத்தான். ஷிர்க்குடையவன் எவனும் குர்ஆனின் உண்மையை ஒப்புக்கொள்ளவே மாட்டான். அவன் பல்லாயிர வருட வணக்கத்தில் ஈடுபட்டாலும் வங்காளிகளின் சட்டையுடன் ஒரு முழ நீளத்தாடியுடன் இருந்தாலும் பலநூறு செட்டிவிக்கட்டுகளைக் கொண்டிருந்தாலும் சரியே.

மேலே காட்டிய ஹதீஸில் கலிமாவை மட்டும் கூறாமல் முஹம்மது(ஸல்) அவர்களை றசூலாக ஏற்றுக் கொள்வதும் கடினமே என்று வற்புறுத்தப்பட்டிருப்பதை நோக்குங்கள். றசூலின் வாழ்வு எமக்குத் தெரிந்த ஒன்றுதானே! அதை ஏன் கடினமாய்க் கொள்ள வேண்டும்? ஆம். றசூல்(ஸல்) அவர்களை றசூலாகக் காண்பதும் கடினம்தான். அப்படிக் காணாமையால்தான் அவர்களால் உணர்த்தப்பட்ட உண்மையை மனிதன் ஏற்காமல் மறுக்கிறான். குர்ஆனையும் ஹதீஸையும் உதாசீனம் செய்கிறான். அந்த றசூலின்

கொள்கை விளக்கத்தைக் கூறும் மக்களைக் காபீராய் முர்த்தத்தாய்க் காணுகிறான். ஆகவே இம் மனிதன் அந்த றசூலைத்தான் தகாத வார்த்தைகளால் திட்டுகிறான் என்பதை அவன் அறிவதில்லை. பிர்அவுன் என்பவனும் மூஸா(அலை) அவர்களைக் காபீர் என்றும் நன்றி மறந்தவர் என்றும்தான் கூறினான். இது ஆச்சரியமல்ல. றசூல்(ஸல்) அவர்களை அக்கால முஸ்ரிக்கீன்கள் பைத்தியம் என்றும் வழி கெட்டவர் (முர்த்தத்) என்றும்தான் கூறினார்கள். அந்த றசூலால் தரப்பட்ட லேபலை அணிந்து கொண்ட முஸ்ரீக்குகள் றசூலின் கொள்கையை விளக்கும் மக்களைக் காபீர் என்று கூறுவது ஆச்சரியமா? காபிரீன்கள் முஸ்ரிக்கீன்களால் வேறு எதைத்தான் கூற முடியும்? அவர்களின் கூற்றை நிரூபிக்கும் ஆதாரங்கள் எதுவும்தான் அவர்களிடமில்லையே. அவர்களிடமுள்ள இரண்டே இரண்டு ஆயுதங்களும் ஆதாரமும் என்னவென்றால் ஒன்று முர்த்தத், மற்றொன்று காபீர், ஐயோ பாவம் இவர்களுக்கு மரணம் ஏற்படும் வரையில் மூளை வளர்ச்சி ஏற்படப் போவதும் இல்லை, முத்திரை உடையப் போவதும் இல்லை.

முரண்பட்ட ஆயத்துகள்

இந்த வஹ்தத்துல் வுஜுத் கொள்கையென்றும் ஏகமாக்கல் என்றும் தௌஹீது என்றும் கூறப்படுகிற விஷயத்தில் குர்ஆன் வசனங்கள் சில முரண்பட்ட கருத்தைத் தெரிவிப்பது போல ஒருசில அறிவு குறைந்த மக்கள் காணுகிறார்கள். உண்மை அப்படியல்ல. ஒருசில ஆயத்துகளை இங்கே விளக்குவோம்.

குர்ஆன்: 57:3
ஆதியும், அந்தமும், தோற்றுவதும், மறைந்திருப்பதும் அவனே; அவன் சகலவற்றையும் நன்கறிந்தோன்.
இந்த ஆயத்தில் இறைவனின் ஐந்து நிலைமைகள் விளக்கம் தரப்பட்டிருக்கிறது.

1. ஆதியானவன்
2. அந்தமானவன்
3. தோற்றுபவன் (மனிதப் புலனுக்கெட்டுபவன்)
4. மறைந்தவன் (மனிதப் புலன்களுக்கெட்டாதவன்)
5. எல்லாமறிந்தவன் (அவனறிவில் இல்லாதது இல்லை)

இவ்வைந்து நிலைமை (மர்த்தபா)க்களையும் குர்ஆன் விளக்கம் தருகிறதேயன்றி இது எமது யூகமல்ல என்பதை நீங்கள் நம்பவேண்டும். இல்லையானால் குர்ஆனை மறுக்கும் எவருடனும் எமக்குப் பேச்சே கிடையாது.

குர்ஆனின் 57:3ஆம் ஆயத்திலுள்ள அவ்வல், ஆகிர் என்ற சொற்களுக்கு சிருட்டிக்கு முன்பும் பின்பும் உள்ளவன் என்று சில தப்ஸீர்கள் விளக்கம் தருகின்றன. இதை விவரம் தராமல் தௌஹீதை உள்ளாலுள்ளபடி விளக்குவது மிகக் கடினம்தான். ஆதலால் இதை ஓரளவு விளக்குவோம்.

"அவ்வல்" என்ற சொல்லை ஆதி என்று நாம் கொள்வதை விட சிருட்டிக்கு ஆதியானது என்று கொண்டால் அந்த அவ்வல் (ஆதி)தான் சிருட்டியின் உற்பத்தி ஸ்தானம் என்பது புலனாகிறது. கோடாரிக்கு இரும்பு ஆதியாய் இருந்ததைப்போல, அது சரிதானென்றால் இரும்பிலிருந்து வெளியான கோடரி இரும்பை விட்டு வேறொன்றாய் இருக்க முடியாது. இதைப்போலவே சிருட்டியின் உற்பத்தி ஸ்தானம் அல்லாஹ்தான் என்றால் சிருட்டி அல்லாஹ்வை விட்டும் வேறானதாய் இருக்க முடியாது. "ஆகிர்" என்ற சொல்லை முடிவு இறுதி என்று கொள்ளாமல் சிருட்டியின் முடிவு, இறுதி என்று கொண்டால் சிருட்டி இல்லாதொழியும் இடம் (அஸ்தமிக்கும் ஸ்தானம்) அல்லாஹ்தான் என்பது புலனாகிறது. கோடாரி அழிந்த பிறகு இரும்பு மிஞ்சுவது போல சிருட்டி அழிந்த பிறகு அல்லாஹ் மட்டும் மிஞ்சுவான். உற்பத்தியும் முடிவும் அல்லாஹ்தான் என்றால், லாஹிர் என்பதன் கருத்து, மனித அறிவுக்கும் புலனுக்கும் தென்படுகிற சர்வ சிருட்டிகளுமாகவே இருக்கும். ஆதியையும், அந்தத்தையும் கடந்து சிருட்டி எங்கிருந்தும் வரமுடியாதே! ஆதியாயும் அந்தமாயும் உற்பத்தி ஸ்தானமாயும் அழிந்தொழியும் ஸ்தானமாயும் இருந்த இரும்பைவிடக் கோடரி வேறானது என்றும் எங்கிருந்தோ வந்து இரும்புடன் சேர்ந்து கொண்டதென்றும் கூறமுடியுமா? ஆதலால் தோன்றி மறைகிற சர்வ (பௌதீக சூட்சும) ஆலங்களும் இறைவனின் வெளிப்பாடாகவே இருக்க வேண்டும். கோடரி இரும்பின் வெளிப்பாடாய் இருப்பதைப் போல ஆலங்கள் யாவுக்கும் ஆதியும் அந்தமும் அவனேயென்றால் லாஹிறாய் தோற்றுகிற சர்வஆலங்களும் அவனைவிட்டு எப்படி வேறானவையாய் இருக்க முடியும்? "லாஹிர்" மனித அறிவில் தோற்றுவதானால் அதற்கு எதிரிடை அவசியம் ஏன்? மனித அறிவு உடன்பாடும் எதிர்மறையும் இல்லாத ஒன்றை உணராது. வெளிப்பாடு, தோற்றம் எப்போது உண்டோ அப்போதே மறைவும், தோற்றமின்மையும் உண்டு.

இச்சிறு விளக்கத்தைக் கொண்டு நுட்பமாய் நோக்குங்கள், அவ்வல், ஆகிர், பாதின் என்ற சொற்களை எக்கோணத்தில் நீங்கள் ஆராய்ந்தாலும் சிருட்டி என்பது அல்லாஹ் அல்லாததல்ல

என்ற சுத்த சத்தியமான தௌஹீதையே உறுதிப்படுத்தும். தோற்றுவதான சிருட்டிக்கு ஆதியும் அந்தமும் அல்லாஹ்தான் என்றால் ஆதியந்தமாகிய இவ்விரண்டுக்குமிடைப்பட்டதுதானே சிருட்டி இந்தச் சிருட்டியைத்தானே எக்கோணத்திலும் காணுகிறோம். எங்கே எப்படித் தோன்றினாலும் சிருட்டியைத்தான் லாஹிர் என்கிறோம். தோற்றுவது என்கிறோம். இப்படி வாயால் கூறிக்கொள்கிற நாம், குர்ஆனை ஏற்றுக் கொண்டதாக மார்புதட்டுகிற நாம், சர்வஆலங்களாயும், தோற்றுபவன் இறைவனே யென்றும் அவனையன்றி அவனுடன் வேறெதுவுமே கிடையாதென்றும் கூறுகிற மக்களை மடையர்களாய் காபீர்களாய் முர்த்தத்துகளாய்க் கணிக்கிறோமே! இது ஏன்? உண்மையில் மடையர்கள், முர்த்தத்துகள், காபீர்கள் யார்? குர்ஆன் தரும் உண்மையான அறிவு விளக்கத்தை ஏற்காதவன் எவனோ அவன்தான் காபீர், மடையன், முர்த்தத்.

அவ்வல், ஆகிர், லாஹிர், பாதின், அலீம் ஆகிய ஐந்து சொற்களும் அல்லாஹ்வுடைய இலாஹியான திருநாமங்களாய் இருக்கின்றன. இவை அல்லாஹ்வுக்குடையதாய் இருப்பதால் ஆதி, அந்தம், வெளிப்பாடு, மறைவு, அறிவு என்பவை அவனுக்குடையவை தான். எனினும் அல்லாஹ்வுக்கு ஆதியுண்டு என்றால் அந்தமுண்டு என்றால் அந்த அல்லாஹ் சிருட்டிக்கு முரணானவனாயிருக்க முடியாதே! விஷயம் அப்படியல்ல. இந்த நாமங்கள் றுபூபியத்தோடுள்ளவை. அப்தையும் றப்பையும் ஒன்றுபடுத்திக் காட்டுபவை. சிருட்டிக்குத்தான் ஆதியும் அந்தமும் லாஹிறும் பாதினும் உண்டு. அல்லாஹ் இதைவிட மிகப் பரிசுத்தமானவன். ஆகவே சிருட்டி கர்த்தாவை நோக்கும்போது இந்த நாமங்கள் இலாஹியாயும் சிருட்டியை நோக்கும்போது கௌனியாயும் இருக்கின்றன. அப்தும் றப்பும் ஒரே உஜூதின் இரு நிலைமைகள் (மர்த்தபாக்கள்) என்பதை உணர்த்துகின்றன. அப்தும் றப்பும் உள்ளவரையில் இந்த நாமங்கள் தரிபட்டிருக்கும். அல்லாஹ் என்ற சொல்லால் குறிப்பிடப்பட்ட குன்ஹு என்ற வுஜூத் இதையெல்லாம்விட மிகமிகப் பரிசுத்தமானது. மேற்கூறியபடி ஆதியும் அந்தமும் அவனேயென்றால் நடுப்பகுதியும் அவனேதான்,

நாம் காணும் தோற்றம் யாவும் இந்த நடுப்பகுதியாகும். ஆகவே, முதல் இடைபடையாவும் அவனேயென்றும் சிருட்டி வெளிப்படை (தோற்றுவது) என்றால் அதற்கு முரணான சிருட்டிகர்த்தா மறைந்தவனாய் இருக்கிறானென்றும் சுத்தசத்தியமான தௌஹீது கிட்டிவிடும். அல்லாஹ் தவிர இலாஹு இல்லையென்ற கலிமா ஹக்கைக் காண்பித்துவிடும். குர்ஆனில் எவ்வித புரட்டலும் செய்யவோ மறைக்கவோ அவசியமல்ல. அறிவுக்குக் குர்ஆன் மாறுபடாது என்பதை நம்புங்கள். இந்த ஆயத்தில் பாவிக்கப்பட்ட அவ்வல், ஆகிர், லாஹிர், பாதின், அலீம் ஆகிய இந்த ஐந்து அஸ்மாக்களும் உள்ளதான வுஜூதுக்குரிய நாமங்களே என்பதை மறுக்க முடியாது.

அல்லாஹ் மட்டுமே இருந்து கொண்டிருந்தான். அவனுடன் எதுவுமே இல்லாதிருந்தது என்று றசூல்(ஸல்) அவர்களால் கூறபபட்ட ஹதீஸின்படியும் கலிமா அதன் தலீல்களின் படியும், ஆலங்கள் வெளியாக முன்பும், (ஆலங்களின் ஸுறத்து சிருட்டியறிவில் தென்படு வதற்கு முன்பும்) அவன் இருந்து கொண்டிருந்தான் என்பதை அவ்வலு என்ற பதம் குறிக்கிறது. இந்த ஆலங்கள் வெளியாகித் தோற்றும்போது; ஆலங்கள் என்ற தோற்றத்தில் அவனே வெளியாகி யுள்ளான் என்பதை "லாஹிர்" என்ற சொல் உணர்த்துகிறது. அப்படியானால் வெளியாகு முன் ஆதியாயும் வெளியானபின் சிருட்டி அறிவில் வெளிப்பாடே "ஆகிர்" என்பதாயும் அமைகிறது. இக்கருத்தின்படி சிருட்டி அறிவில் ஆலங்கள் அவ்வலாயும் சிருட்டி என்ற ஆலங்களில் மறைந்துள்ள இறைவன் ஆகிறாகவும் இருக்கிறது. சிருட்டியைக் கொண்டுதானே இறைவனுண்டு என்பதை அறிகிறோம். இக்கருத்தின்படிதான் லாஹிர் முந்தியும் பாதின் பிந்தியும் அமைகிறது. எனவே "ளுஹுர்" என்ற வகையில் இறைவன் பிந்தியவனாயும் "வுஜூது" என்ற வகையில் முந்தியவனாயும் இருக்கிறான. இதை இன்னும் நுட்பமாய் நோக்கினால் ஆகிர் என்பது "லாஹிர்" ஆகவும் "அவ்வல்" என்பது பாதினாயும் இருக்கிறது. இந்த ஆராய்வு ஹக்கென்ற உஜூதிலிருந்து சிருட்டியென்ற கல்கின்பால் நோக்கிய அறிவாகும். இதைப்போல கல்கு என்ற சிருட்டியிலிருந்து ஹக்கென்ற வுஜூதை நோக்கினால்

"ஆகிர்' என்பது பாதினாயும் "லாஹிர்" அவ்வலாயும் இருக்கிறது. இவ்வாராய்வை ஞானவான்களான, அஹ்லுல் கஸ்புகளான அவ்லியாக்கள் "பர்க்" உடைய பார்வையென்றும் ஜம்உ உடைய பார்வையென்றும் கூறுவார்கள். உஜூது என்பது ஒன்றுக்கொன்று முரணான இருதன்மை (அறிவில்) அமையவில்லையென்றால் இறைவன் ஒருவனுண்டு என்பதை எந்த ஒரு மனிதனாலும் அறிய முடியாது. முரண்பாடில்லாத ஒன்றைப் பகுத்தறிவு உணரவே உணராது. இறைவனுக்குள்ள "கஹ்ஹார்" "ஹப்பார்" போன்ற ஒன்றுக்கொன்று முரணான நாமங்களை நுண்ணறிவோடு ஆராய்ந்தால் நாம் கூறிய உண்மை இலகுவாய் அறிவில் பிடிபடலாம்.

ஒரு சிறு நுட்பம் : நாம் முன்கூறிய அவ்வல், ஆகிர், லாஹிர், பாதின், அலீம் என்ற இவ்வைந்து நாமங்களும் சிருட்டிக்கும் சிருட்டி கர்த்தாவுக்கும் பொதுவானவையென்றும் சிருட்டியை நோக்கினால் கௌனியென்றும் சிருட்டிகர்த்தாவை நோக்கினால் இலாஹி என்றும் நாம் கூறினோம். குர்ஆன் ஹதீஸுகளை நுட்பமாய் ஆராய்ந்தால் (ஏற்கும் தன்மை) "காபிலியத்" அற்றிருந்த உஜூதுக்கு இந்த நாமங்கள் அவசியமல்ல. ஆயினும் இந்த நாமங்கள் அல்லாஹ்வுக்குண்டு என்று பகிரங்கமான ஆதாரங்கள் தரப்பட்டிருக்கின்றன. அப்து, றப்பல்லாத வேறுதான் என்றும் அப்து ஓர் பொருள் றப்பு வேறோரு பொருள் என்றும் கொண்டால் ஆதாரங்கள் எல்லாமே பிழையென்றாகும்.

இந்த நாமங்களைச் சிருட்டிக்கு (இன்ஸானுக்கு) மட்டும் என்று கொண்டாலும், றப்புக்கு மட்டும் என்று கொண்டாலும், அப்துக்கும் றப்புக்கும் கூட்டானது என்று கொண்டாலும், அந்த நாமங்களின் வியாக்கியானத்தால் கலிமா உணர்த்தும் தௌஹீதையே உறுதிப்படுத்துகின்றன. நாம் முன்கூறியபடி றப்புக்கு அப்து முரணானதென்ற தத்துவத்தை மனதில் இருத்திக்கொண்டு கீழே தரப்படும் விவரத்தை நோக்குங்கள்.

அவ்வல் (ஆதி) என்ற சொல்லுக்குத் தொடக்கம், ஆரம்பம் என்பது சிருட்டியின் கருத்தென்றால் சிருட்டிகர்த்தாவிடத்தில் அவ்வல் என்பது தொடக்கம், ஆரம்பம் இல்லாதது என்றாகும்.

ஆகிர் என்பதை மனிதன் முடிவு என்று கொண்டால் இறைவனிடத்தில் முடிவு இறுதி இல்லாததென்றாகும். லாஹிர் என்பதை மனிதன் தோற்றுவது என்று கொண்டால் றப்பிடத்தில் தோற்றாதவன் (பாதின்) என்றாகும். பாதின் என்பதை மனிதன் தோற்றாதது, மறைந்தது என்று கொண்டால் இறைவனிடத்தில் தோற்றுவது (லாஹிர்) என்றாகும். ஏனிப்படிக் கூறுகிறோம்? அப்துக்கு றப்பு நேர் முரணானது என்பதனால்தான்.

அப்துக்கும் றப்புக்குமுள்ள வேறுபாட்டை ஒவ்வொரு விஷயத்திலும் ஆராய்வுக்கெடுங்கள். இந்த அடிப்படையை வைத்துக் கொண்டு கலிமாவை நோக்குங்கள். அதன் பொருள் அல்லாஹ் தவிர இலாஹு இல்லையென்பதுதான். இலாஹு என்றால் என்ன? இது ஒரு பொதுப் பெயர்ச்சொல். அப்துகளான சர்வ சிருட்டிகளையும் சிருட்டிகர்த்தாவான றப்புவையும் ஒன்று சேர்த்துச் சொல்லப்பட்டதுதான் இலாஹு என்பது. இதை எவரும் மறுக்க முடியாது. எக்காலத்திலுமுள்ள எல்லா உலமாக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு பகிரங்கமான உண்மைதான் இது. எத்தனை எத்தனையோ மேதைகள் இதை மிகமிகத் தெளிவாய் ஆதாரங்களோடு விளக்கியுள்ளார்கள். லாஇலாஹ என்றால் அப்தும் றப்பும் இல்லை (சிருட்டியும் சிருட்டி கர்த்தாவும் இல்லை) என்பது பொருள். இல்லல்லாஹ் என்றால் அல்லாஹ்வைத் தவிர என்பது பொருள்.

இதன்படி அல்லாஹ்தான் றப்புவாயும் அப்துவாயும் இருக்கிறான் என்பது தென்படுகிறது. அப்படியானால் அல்லாஹ்தான் அப்து என்றால் றப்பு என்பது எது? அல்லாஹ்தான் றப்பு என்றால் அப்து என்பது எது? விடை கூறமுடியாது. ஏன்? அல்லாஹ், றப்பு, அப்து என்ற சொற்களின் உண்மையான அகமியங்களை அறிந்து கொள்ளாமல் விடை கூறமுடியாது. அல்லாஹ் என்பது குணியையும் குணத்தையும் ஒன்றுபடுத்தியுள்ள ஒரு நிலைமை. இச்சொல்லால் உணர்த்தப்படும் பொருள் மனித அறிவைக் கடந்தது. இது இப்படி இருப்பதுடன் மனித அறிவில் அமையக்கூடியதாயும் இருக்கிறது. இது வேறொரு நிலைமை. இந்த நிலைமை ஒன்றுக்கொன்று

முரணபோல் இல்லையானால் பகுத்தறிவில் அமையாது. ஆகவே உள்ள ஒரு பொருள், ஒரு நிலைமையில் ஒன்றுக்கொன்று முரணாய்த் தென்படுவதே அப்து, றப்பு என்பது. பகுத்தறிவு அகிலாய் மாற்றமடையும் போது வேறுபாடற்ற ஒன்று மட்டுமே மிஞ்சியிருக்கும். இப்படி மிஞ்சுவதன் பெயர்தான் அல்லாஹ் என்பது. இதை இன்னும் நீங்கள் ஆராய்ந்து தெளிவு பெறவிரும்பினால் கலிமாவிலுள்ள இலாஹு என்ற சொல்லுக்கு நீங்கள் அறிந்துள்ள எந்தக் கருத்தை வேண்டுமானாலும் (மனிதன், ஜின், மலக்கு, மிருகம், தாவரம் போன்ற அல்லது வேறெந்த கருத்தைக் கொண்டேனும்) அதன் நான்கு பிரமாணங்களுக்கும் அமைவாய்ச் சிந்தித்துப் பாருங்கள். அல்லாஹ் வையன்றி எதுவுமில்லையென்பதையே கலிமா உணர்த்தும்.

இன்னும் எவ்வளவோ நுட்ப விளக்கங்களைத் தரலாம். கவாஸுகளான உங்களுக்கு இவ்வளவே போதுமானது. மனித அறிவுக்கு (புலன்கள் வாயிலாத்)த் தோற்றும் சர்வஆலங்களும் (சிருட்டிகளும்) ஸிபத்-அஸ்மா (குணம்) ஆகவும், குணத்துக்கு நேர்மாறுபோல் மறைந்ததாய் இருக்கும் உஜூது குணியாயும் இருக்கிறது. குணியை விட்டுக் குணம் எப்படிப் பிரியும்? எப்படி வேறாகும்? எம்முடைய அறிவில் உள்ள மருட்சியினால்தான் அப்துக்கு றப்பு நேர்முரணான வெவ்வேறு தனித்தனிப் பொருட்கள் என்று காணுகிறோம். முரண் என்பது உண்மை. ஆனால் வேறு என்பதோ ஷிர்க்காய் இருக்கிறது.

குணிக்கும் குணத்துக்கும் நேர்முரணான வேறுபாடுண்டு என்பது பகுத்தறிவின் தீர்ப்பு. இத் தீர்ப்பு குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஉ, கியாஸ்களின் உறுதியான ஆதாரங்களோடுள்ளதுதான். குணமென்றும், குணியென்றும் வேறுபாடில்லாத வுஜூதிடத்தில் வுஜூதை யன்றிப் பிறிதில்லை. ஆகையால் உள்ளது வுஜூது (தாத்து) மட்டுமே என்று நூர் என்ற அறிவு தீர்ப்புக்கட்டுகிறது. இவ்விரு தீர்ப்புக்கும் ஆதாரம் குர்ஆன் ஹதீஸ் இஜ்மாஉ கியாஸ்தான். பகுத்தறிவு குழந்தை, இது ஆரம்ப ஈமான். நூர் வளர்ச்சியடைந்த பூரணம், இது ஈமானின் முடிவு ஞானம் வேதாந்தம்

என்பதெல்லாம் இவ் விஷயத்தை விளங்கித் தெளிவடைவதே ஆரம்ப ஈமானுக்குப் பூரண ஈமான் முரணானதல்ல. ஆரம்பம் ஷரீயத், முடிவு மஹ்ரிபா.

எல்லாமறிந்தவன் என்பதும் முன்தந்த விவரத்தைப் போல் தான் இருக்கிறது. சிருட்டி ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்குள் மட்டும் அறியுமேயன்றி எல்லாவற்றையும் அறியாது. இறைவன் இதற்கு மாறானவன் எல்லாம் அறிந்தவன். எல்லாம் என்றால் என்ன? சிருட்டியறிந்த வட்டத்துக்குட்பட்டதையும், சிருட்டியினால் அறிய முடியாத வட்டத்துக்கப்பாற்பட்டதையும் இறைவன் ஏககாலத்தில் அறிந்தவனாய் இருக்கிறான். வட்டத்துக்குள் அறிபவனும் வட்டத் தைக் கடந்து அறிபவனும் அவன்தான். இதுதான் எல்லாம் அறிந்தவன் என்பதன் கருத்து. சிருட்டி இல்லையானால் எல்லாம் என்ற சொல் பொருந்தாது. அவனுடன் (வேறு) எல்லாம் கிடையாதே. ஆதலால் "அலீம்" என்ற சொல்லினால் சிருட்டியறிவையும் அவன் அறிவையும் வேறுபடுத்தாமல் அறிந்தவன் (அலீமுன்) என்று உணர்த்தப்பட்டிருக்கிறது. (நுட்பமாய் உணர்க) ஆதலால் எவ்வகையிலும் சிருட்டி அல்லாஹ் அல்லாதது என்று கூறமுடியாது. பெயர் பலவாயினும் பொருள் ஒன்றுதான்.

குர்ஆனில் இடம்பெறுகிற "ஸமீஉன்"(கேட்பவன்) "பஸீறுன்" (பார்ப்பவன்) போன்ற சொற்களையும் ஆராய்ந்து பாருங்கள். சிருட்டி செவியைக் கொண்டு கேட்பதானால் இறைவன் செவியின்றிக் கேட்பவன் சிருட்டி கண்ணைக் கொண்டு பார்ப்பதானால் இறைவன் கண் இன்றியே பார்ப்பவன். இவை போல் சிருட்டிக்குரிய பண்பும் இறைவனுக்குரிய பண்பும் வேறுதான். ஆயினும் "ஸமீஉன்" என்றால் செவியைக் கொண்டு அல்லது செவியின்றிக் கேட்பவன் என்று விவரம் தரப்படவில்லை. ஆகவே, இறைவன் செவியின்றிக் கேட்பதையும் சிருட்டி செவியைக் கொண்டு கேட்பதையும் ஒன்றுபடுத்தித்தான் கேட்பவன் பார்ப்பவன் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆதலால் செவியைக் கொண்டு கேட்பவனும் செவியின்றிக் கேட்பவனும் கண்ணைக்கொண்டு பார்ப்பவனும் கண்ணின்றிப் பார்ப்பவனும் அவனாகவே இருக்கிறான். அல்லாஹ்வை விட வர்ண அழகன் யார் என்று இறைவன் கேட்கிறான்.

குர்ஆன்: 2:138

அல்லாஹ்வுடைய வர்ணத்தை அடைவோம்; அல்லாஹ்வை விட வர்ண அழகன் யார்? நாம் அவனையே இபாதத் செய்வோம்.

இந்த ஆயத்தைப் பல கண்ணோட்டங்களோடு ஆராய்ந்து பாருங்கள். இவ்வாயத்தில் குறிப்பிடப்பட்ட "ஸிப்அத்" என்பதற்கு வர்ணமிடல் சாயம் தோய்த்தல் என்பது பொருள். ஆயினும் இச் சொல்லைக் கொண்டு பித்ரத்தை நாடுவதால் அல்லாஹ்வின் மார்க்கத்தைப் பற்றிக்கொள்ள வேண்டும் என்று அவாம்களுக்கு விளக்கம் தரப்பட்டுள்ளது. நாம் அதை ஏற்றுக்கொள்வோம். ஆயினும் அழகு, வர்ணம் என்பது பௌதீகமாகவோ சூட்சுமமாகவோ இருக்கலாம். அதாவது ஸுறத் (தோற்ற)த்தில்தான் அழகு அமையும். இந்த ஸுறத் (லாஹிர்) சிருட்டியாய் இருக்க வேண்டும். குணமும் சிருட்டிதான். செயல்கள்கூடச் சிருட்டிகள்தான். அப்படியானால் அறிவில் அமையாத ஒன்றின் அழகை எப்படி அறிவது? அழகு என்பது குணம் என்று சிருட்டியின் பகுத்தறிவு தீர்ப்புக் கட்டுகிறது. குணியும் குணமும் வேறில்லாமல் இருக்கும்போது சிருட்டியின் ஸுறத்தின் அழகானாலும் செயலின் அழகானாலும் அது இறைவனின் அழகேதான். சிருட்டிக்கு முரணான றப்பின் அழகு அறிவில் அமையாது. ஆதலால் அல்லாஹ் அழகன் என்பது வட்டத்துக்குள் (எல்கையில்) கட்டுண்ட சிருட்டியையும் எல்லையில் கட்டுண்ணாத இறைவனையும் வேறுபிரிக்காமல் ஸிப்அத் அழகு அழகன் என்று பாவிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் எவ்வளவோ கூறலாம். குர்ஆன் வசனங்கள் எப்படிக் கலிமாவை உறுதிப்படுத்துகின்றன என்பதைக் கண்டறிய மனித முயற்சி மட்டும் போதாது. இறைவனின் வழிகாட்டலே அவசியம். வழிகாட்டலிருந்தால்தான் முயற்சிக்கு ஆர்வம் பிறக்கும்.

குர்ஆன்: 56:85

ஆயினும், நாம் அவனுக்கு உங்களைவிட மிக்க சமீபமாக இருக்கின்றோம். எனினும் நீங்கள் (நம்மைப்) பார்ப்பதில்லை.

இந்த ஆயத்தின்படி இறைவனை நாம் காண்பதில்லை என்பது தென்படுகிறது. இந்த ஆயத்து லாஹிர் தோற்றுபவன்

என்ற உண்மையை மறுப்பதுபோல் தென்படுகிறது. முன் கூறிய 57:3ஆம் இலக்க ஆயத்துக்கு இந்த ஆயத்து மாறானது, முரணானதுபோல் தென்படுகிறது. 57:3ஆம் ஆயத்தில் கூறப்பட்ட பாதின் என்பதை மட்டும் 56:85ஆம் ஆயத்து ஏற்றுக்கொண்டிருப்பது தென்படுகிறது.

குர்ஆன்: 7:7

(அவர்களின் செயலைப்பற்றி) நன்கறிந்து நிச்சயமாக நாம் அவர் களுக்குக் கூறுவோம்; நாம் (எந்த நேரத்திலும் எந்த இடத்திலும்) மறைந்திருக்கவில்லை.

இந்த ஆயத்தில் அல்லாஹ் மறைந்தவனல்ல, எல்லோராலும் புலனறிவு மூலமே அறியக்கூடியவன் என்பது தென்படுகிறது. நாம் முன்பு கூறிய 57:3 இலக்க ஆயத்தில் தரப்பட்ட பாதின் மறைந்தவன் என்ற உண்மை இந்த 7:7ஆம் ஆயத்தினால் மறுக்கபபடுவதுபோல் தென்படுகிறது. இந்த ஆயத்து 57:3ஆம் ஆயத்தில் கூறப்பட்ட லாஹிறை மட்டும் ஏற்றுக்கொண்டிருப்பது தென்படுகிறது.

குர்ஆன்: 42:11

அவனே வானங்களையும், பூமிகளையும் படைத்தவன், உங்களுக்காக உங்களிலிருந்தே (ஜதை) ஜோடிகளையும் கால்நடைகளில் ஜோடிகளையும் படைத்து, அதில் உங்களைப் பரவச் செய்கிறான், அவனுக்கு ஒப்பானது (போன்றது) ஒன்றும் இல்லை; அவன் செவியுறுவோனாயும், உற்று நோக்கினவனாயும்(பார்ப்பவனாயும்) இருக்கிறான். இவ்வாயத்தின்படி 4 விஷயங்கள் விளக்கம் தரப்படுகின்றன.

1ஆவது:வானம் பூமிகளைப் படைத்தவன் இறைவனே

2ஆவது:படைப்புக்கள் யாவும் ஜோடியாய்ப் படைக்கப்பட்டிருக்கினறன. (ஆணுக்குப் பெண், வெள்ளைக்குக் கறுப்பு, நன்மைக்கத் தீமை, பகலுக்கு இரவு, ஆதிக்கு அந்தம், அறிவுக்கு அறியாமைபோல் எல்லா வகையிலும் சிருட்டிகள் மட்டு மன்றி அவற்றில் வெளியாகும் குணங்கள் கூட ஜோடியானவையேதான். இதை மறக்க வேண்டாம்)

3ஆவது: அவனைப்போல் (ஒப்பானது, அல்லது சமமானது) ஒன்றுமில்லை.

4ஆவது: அவன் கேட்பவன், பார்ப்பவன்

நாம் முன்பு தந்த 57:3ஆம் ஆயத்தில் கூறப்பட்ட பாதின் மறைந்தவன் என்ற சொல் இவ்வாயத்தினால் மறுக்கப்படுவது போல் தென்படுகிறது. ஏனென்றால் லைஸக்க மித்லிஹிஸையுன் அவனைப் போன்றது இல்லையென்னும் போது அவன் மறைவாக இருக்க முடியாது. ஒரு பொருளை இன்னொரு பொருள் மறைப்பதானால் மறைக்கப்படும் பொருளின் அளவு அல்லது அதைவிட மறைக்கும் பொருளின் அளவு சமமாய் அல்லது பெரிதாய் இருக்க வேண்டும். இல்லையானால் மறைக்க முடியாது. அது மட்டுமல்லாமல் மறைபடும் பொருளுடன் சமமாகவோ பெரிதாகவோ ஒரு பொருள் இருந்தாலேயன்றி மறைவு ஏற்படாது. அல்லாஹ்வோ(கபீர்) அக்பர் என்று பெயருடையவன். எவ்வகையில் கொண்டாலும் அவனே பெரியவன். அவனையன்றி வேறொரு பெரியது சூறத்திலோ குணத்திலோ வேறு எதிலுமோ கிடையாது. வானம், பூமி யாவும் அவனாலேயே படையுண்ட சிருட்டிகளாயும் அவனுக்குச் சமமற்றவையாயும் இருப்பதால் எந்தச் சிருட்டியும் அவனை மறைக்கவே முடியாது. ஆகவே, அவன் மறையாமல் வெளிப்படையாய் யாவரும் அறியக்கூடியதாய்ப் பார்க்கக் கூடியதாய்தான் இருக்கிறான் என்பது புலனாகிறது.

ஒரு நுட்பம் சிருட்டிகள் யாவும் ஜோடி ஜோடியானவையாய் இருந்தால் சிருட்டிகர்த்தாவான இறைவன் ஜோடி அற்றவனாய்த் தனித்தவனாய்த்தான் இருக்க முடியும். அதாவது றப்பின் தன்மை எதுவோ அதற்கு நேர் முரணான தன்மையுடையதுதான் அப்து என்பது. அப்து றப்பு என்ற சொற்கள் ஒன்றுக்கு மற்றொன்று முற்றும் முரணானவை என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆகவே, றப்பும் அப்தும் உண்டு என்றால் ஜோடியற்ற இறைவன் ஜோடியுடைய சிருட்டியுடன் இருந்து கொண்டிருக்கிறான் என்றால் அவனுடன் ஓர் ஜோடி உண்டு என்றாகும். அதாவது ஜோடியற்ற அவனுடன் ஜோடியுள்ள சிருட்டியும் உண்டாயிருப்பதால் இறைவனுக்குச் சிருட்டி என்ற ஜோடி இருப்பதாய் அமைகின்றதல்லவா? ஜோடியுள்ளது படைக்கப்பட்ட சிருட்டியாய் இருக்குமேயன்றிறப்பாய் இருக்கமுடியாது.

குர்ஆன்: 112:1,2,3,4

நீர் கூறும் அல்லாஹ் ஏகன். அல்லாஹ் தேவையுமற்றவன். அவன் பெறவுமில்லை, பெறப்படவும் இல்லை, தவிர அவனுக்கு ஒப்பாக ஒன்றுமில்லை.

இந்த சூறா குர்ஆனின் மூன்றில் ஒரு பகுதி என்று கூறப்படுகறது. தௌஹீதை விளக்கம் தரும் ஸுறாக்களில் இது மிக முக்கியமானது. இதன்படி அவன் சிருட்டிகளைப் போல் ஜோடியுடைய அல்லது ஒப்பாகக் கூடியவனல்ல. அவன் படைத்தவனேயன்றிப் படையுண்டவனல்ல. இன்னும் கூறினால் ஒன்றுக்கொன்று ஜோடியாவதானால் ஏதோ ஒரு வகையிலேனும் இரண்டும் சமமாக, ஒன்றைப்போல் ஒன்று இருக்க வேண்டும். இறைவனும் சிருட்டியும் வெவ்வேறானால் இறைவனுடன் ஒரு ஜோடி உண்டு என்பதுதானே அதன் அர்த்தம். அது தவிர சிருட்டியும் இறைவனும் எவ்வகையிலும் சமமாக முடியாதிருந்தால் ஜோடியாக முடியாது. அப்படியானால் இல்லாத ஒன்று (பொய்)தான் சிருட்டியாய் வந்திருக்க வேண்டும். இதைப் பகுத்தறிவும் தத்துவ விளக்கமும் ஏற்காது. ஏனென்றால் இல்லாதது எப்போதும் இல்லாததேதான். ஆகவே, இல்லாதது வரவோ(இருக்கவோ) முடியாது. ஆகவே, சிருட்டியென்பது இப்போது நம் அறிவில் தெளிவாய் அமையாவிட்டாலும் இறைவனல்லாததாய் இருக்க முடியாது. இறைவனல்லாதது சிருட்டியென்றால் இறைவனுடன் அதுவல்லாத வேறு ஒன்றும் சோடியாய்ச் சமமாய் இருக்கிறதென்றல்லவா முடியும். இதுதான் ஷிர்க்.

அடுத்தது இந்த ஸுறாவில் இறைவனை ஒருவன் என்றுதான் (அஹது) மொழிபெயர்த்திருக்கிறார்கள். உண்மையான அர்த்தம் ஏகன் என்பதே.

சமது என்றால் தேவையற்றவன் என்பது பொருள். ஏதாவதொரு பெயரைக்கூட அவன் ஏற்கவேண்டிய அவசியம் அவனுக்கில்லை. ஆகவே, அவன் சிருட்டிகளைப் படைக்க வேண்டிய அவசியமே இருக்கக் கூடாது. ஆனால்

சர்வஆலங்களையும் அவனே படைத்தான் என்று குர்ஆன் ஹதீஸுகள் வலியுறுத்துகின்றன. ஆகவே, படைத்தல் என்ற சொல்லில் நாமறியாத ஓர் நுட்பம் இருக்க வேண்டும். அப்படியானால் படையுண்டதாய்க் கூறப்படும் சிருட்டி அவனல்லாததாய் இருக்க முடியாது. ஏன்? அவன்தான் தேவையுடையவன் என்றாகிவிடுவானே! ஆகவே, சிருட்டி என்பது அவனாகவே இருக்க வேண்டும். அவனிலுள்ள ஓர் பங்குதான் சிருட்டி என்று கூறமுடியாது. அவனே சிருட்டியாய் விட்டதால் இப்போது அல்லாஹ் அல்லாஹ்வாக இல்லையென்றும் ஏமாற வேண்டாம். (நுட்பமாய் உணர்க)

இலாஹ் என்பது அப்தையும் றப்பையும் ஒன்றுசேர்த்துக் கூறப்பட்ட பொதுப் பெயர்ச்சொல்தான் என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை. இது குர்ஆனின் தீர்ப்பு என்பதை நான் முன்பே விளக்கியுள்ளேன். கலிமாவையும் அதன் தலீல்களையும் இங்கே நோக்கிப் பாருங்கள். அவனுடன் அவனல்லாத இலாஹ் இல்லையென்றும் அதற்கு ஆதாரம் கிடையாதென்றும் குர்ஆன் சுமார் 1,425 வருடங்களாகச் சவால்விட்டுக் கொண்டிருக்கின்றது. ஆகவே, சிருட்டி என்பது அல்லாஹ்வை விட்டும் வேறான ஜோடியான அல்லது சமமானதாய் இருக்க முடியாது. அப்படி அவனுடன் அவனல்லாததும் உண்டு என்றால் அவன் ஜோடியுடையவனாவான்; ஜோடியுடையது சிருட்டியாய் இருக்குமேயன்றி இறைவனாய் இருக்க முடியாது.

குர்ஆன்: 14:30
அவர்கள் அல்லாஹ்வுடைய பாதையில் இருந்து (மக்களை) திருப்பிவிடும் பொருட்டு இறைவனுக்கு இணையாக்குகின்றனர். (நித்துக்களை உண்டாக்குகின்றனர்) நீர்கூறும். ''நீங்கள் (சிறிது காலம்) சுகமனுபவித்துக் கொள்ளுங்கள்; நிச்சயமாக நீங்கள் சேருமிடம் நரகம்தான் (நெருப்புத்தான்)''

இவ்வாயத்தில் கூறப்பட்ட நித்து அல்லது இணையாக்கல் என்பது என்ன? (எமது முதல் நூலில் இவ்விவரம் ஆதாரங்களோடு தரப்பட்டுள்ளது. இங்கே அவசியத்தினளவு தருகிறேன்)

சாரக்கண்ணன் ஒரு பொருளை இரு பொருளாகக் காண்பதைத்தான் நித்து என்று கூறப்படுவது. அவனுக்கிருந்த நோயுள்ள கண்ணில் ஒரே சூரியனை இரண்டு சூரியன்களாகக் காணுகிறான், உள்ள ஒரே சூரியனுடன் இன்னொரு சூரியன் இருப்பதாக அவனுள்ளத்தில் விசுவாசம் (ஈமான்) கொண்டு விடுகிறான். உள்ளது ஒரே சூரியன்தான் என்று நாம் எவ்வளவு ஆதாரம் காட்டினாலும் கூறினாலும் நம்புகிறானில்லை, தன் கண்ணில் கோளாறுண்டு என்பதையும் அவன் நம்புவதில்லை. இந்தச் சாரக்கண்ணன் ஒரே சூரியனை இரண்டாகக் கண்டதுதான் இஸ்ராக், ஷிர்க், நித்து, இணை, ஜோடி, சமமாக்கல் என்பது. அகஆக்கல் என்ற உளநோய் இதுதான்.

அறிவிலியாகிய முஸ்ரீக் ஹக்கு அல்லது வாஜிபுல் உஜூது என்று கூறப்படுகிற உண்மையான ஒன்றுடன் அதுவல்லாத சிருட்டியும் உண்டு என்று அவன் உள்ளத்தில் நம்புகிறான். இவன் உண்மைப்பொருளுக்கு ஒரு ஜோடியை, சமமானதை, இணையை, துணையை ஏற்படுத்திக் கொள்கிறான். ஷிர்க் என்பதன் ஆணிவேர் இதுவேயாகும். இதை (ஷிர்க்கை) இல்லாமல் வெட்டி வீழ்த்துவதறகாக, உள்ளத்திலுள்ள தவறான கற்பனை இலாஹுவை இல்லாதொழிப்பதற்காக, ஒரே உண்மைப் பொருளை உள்ளாலுள்ளபடி உணர்த்துவதற்காக, உளநோயைத் தீர்க்கவே கலிமா தரப்பட்ட தாகும். இதைக் குர்ஆன் 10:57ஆம் ஆயத்தில் காண்க. இவ்வாயத்து முன்தரப்பட்டுள்ளது. இந்தக் கலிமா லாஇலாஹ என்பதைக் கொண்டு றப்பு, அப்து, சிருட்டி, சிருட்டிகர்த்தா ஆகியவற்றை முற்றாய் மறுக்கின்றது. இல்லல்லாஹ் என்பதைக் கொண்டு ஹக்கான, வுஜூதான உண்மைப் பொருளை மட்டும் தரிப்படுத்துகிறது. இதன் பெயர்தான் தௌஹீது என்பது. வஹ்தத்துல் வுஜூதுக் கொள்கை என்பதும் இதுதான். நபிமார்கள் றசூல்மார்கள் வேதங்கள் யுத்தங்கள் முஹ்ஜிஸாத்துகளெல்லாம் இக்கொள்கையை மக்களிடம் தரிப்படுத்துவதற்காகவே தரப்பட்டவையாகும்.

நாம் முன்பு தந்த ஆயத்துகளின்படியும் இப்போது தந்த ஆயத்துகளின்படியும் எமது அறிவில் ஒரு பெரிய குழப்பம்

ஏற்படுகிறது. அதாவது குர்ஆன் அல்லாஹ் லாஹிறாயும் பாதினாயும் வெளிப்படையாயும் மறைவாயும் இருக்கிறான் என்று விளக்கம் தந்தது. அடுத்த ஆயத்து நம்மை நீங்கள் பார்ப்பதில்லையென்று, லாஹிர் என்ற வெளிப்படை இல்லையென்று மறுக்கிறது, ஆனால் இதற்கடுத்த ஆயத்து நாம் மறைவாக இருக்கவில்லையென்று பாதினை (மறைவை) மறுத்து லாஹிறை மட்டுமே உறுதிப் படுத்துகிறது. குர்ஆனில் இவ்விதமான முரண்பாடு ஏன்?

குர்ஆன் ஹதீஸுகளில் எவ்வித முரண்பாடுமே கிடையாது. குர்ஆன் இறைவனின் பேச்சு. ஹதீஸ் இறைவனுடைய றசூலின் பேச்சு இவற்றில் தவறிருக்க முடியாது. ஆனால் சூரியன் போன்ற பிரகாசமிக்க குர்ஆன் வசனங்கள், வஹ்மு என்ற எமது அறிவுக் கண்ணைக் குருடாக்கி விடுகின்றன. சூரியனைப் பார்க்க முடியாத வெளவாலைப்போல் இருக்கிறது, எமது வஹ்மு என்ற பேதபுத்தி.

அல்லாஹ் மர்த்தபாக்களால் உயர்ந்தவன் என்பது குர்ஆனின் வாதம். மர்த்தபா என்றால் நிலைமை. அல்லது படித்தரம் என்று கொள்வோம். அல்லாஹ் என்ற பெயரைக் கொண்ட வுஜூது தான் இருந்தபடியே இருந்து கொண்டிருக்கிறது. அதில் எவ்வித மாறுபாடும் இல்லை. அந்த வுஜூதுடைய இயற்றன்மை அல்லது பண்பு, அல்லது ஸிபத்து என்பது அந்த வுஜூதைவிட்டு எப்போதும் பிரிவதில்லை. பிரியமுடியாது. இந்த ஸிபத்துத்தான் சர்வஆலங்களுக்கும் அவற்றிலுள்ள சர்வ சிருட்டிக்கும் மூலமாய் இருக்கிறது. இங்கே ஸிபத்தை விட்டுத் தாத்துப் பிரிந்துவிட்டதாக நம்ப வேண்டாம். இந்தச் ஸிபத்து அதனிடத்தில் என்ன என்ன நாமமுண்டோ அந்த நாமத்தின் கருத்தை, அல்லது பொருளைத் தன்னிடத்தே கொண்டுள்ளது. இதைத்தான் சிருட்டி என்று கூறப்படுவது. கருத்து என்பதும் பொருள் என்பதும் ஒன்றே. இந்தச் சிருட்டியான ஸிபத்துத் தாத்தை விட்டும் வேறானதென்று நம்பிக்கொண்ட சிருட்டி இந்த ஸிபத்தையேயன்றிப் பார்ப்பதில்லை. ஆயினும் அவன் அதை இறைவனின் ஸிபத்தாக அல்லாமல் தனிப்பட்ட வேறொரு பொருளாகவே காண்கிறான். இதை எமது முதல் நூலில் சிருட்டியென்றால் என்ன? என்ற தலைப்பில்

விளக்கியுள்ளேன். மனிதன் இப்படிக் காண்கிறானே ஏன்? இவன் உள்ளத்தில் குடிகொண்டுள்ள ஷிர்க் என்ற எண்ணம் (கற்பனை) இருப்பதால் தாத்தையன்றி இல்லை என்பதை உணராது. இந்தச் சிருட்டி தான் தாத்தின் அஸ்மாவும் ஸிபத்துமே என்பதையும் அறிவதில்லை. இங்கே இந்தச் சிருட்டி தானல்லாத எங்கேயோ ஓர் இடத்தில் தாத்து என்ற வுஜூது மறைந்து இருப்பதாய்க் கற்பனை பண்ணுகிறது. தான் தாத்துடன் அல்லது தாத்தே தன் அஸ்மா ஸிபத்துக்கள் வாயிலாகத் தானாகவே தன்னுடன் இரண்டற்ற ஒன்றாக இருக்கிறதென்பதை நம்புவதே இல்லை. ஆகவே, இச்சிருட்டி தன் நிலையைவிட்டு எப்போதும் உண்மையோடு ஒன்றவே முடியாது. நிரந்தர நரகம் என்பதன் பொழிப்பு இதுதான்.

தாத்து என்று நாம் கூறுகிற ஹக்கில் அதன் இயல்பான ஸிபத்தாய் அமைந்துள்ள சக்தி என்ற வலிமை அல்லது விஜ்தான் என்ற இறையறிவுதான் சர்வஆலங்களிலும் சர்வ சிருட்டிகளிலும் வெளியாகும் சக்தி (அறிவு) ஆக இருக்கிறது. அந்த அறிவினிடத்தே இருந்த அஸ்மாக்களின் கருத்தையே பொருளாய் அமைத்துச் சிருட்டியென்ற பெயரில் காட்சியளிக்கிறது. எங்கே? அதனறிவில் தான், இந்தச் சக்தி அல்லது அறிவின் பெயர்தான் "நூர்" என்பது. முதல் முதல் படைக்கப்பட்டது என் நூரே என்றும் நூரைப் படைக்கா விட்டால் ஆலங்கள் படைக்கப்பட்டிருக்கமாட்டா என்றும் றசூலால் கூறப்பட்டது, இவ்விஷயத்தைக் குறிப்பிட்டதே. (ஹதீஸுகள் பிரபலமானவையாய் இருப்பதால் விரிவைப் பயந்து நான் அவற்றை இங்கே தரவில்லை)

இறைவன் அமா என்ற நிலையில் (மர்த்தபாவில்) இருந்த போது அவனில் பொதிந்திருந்த நூரைத் தன்னிடத்தே முற்படுத்தித் தான் சர்வஆலங்களையும் உருவாக்கினான். இந்த ஆலங்களனைததும் அவனிடத்திலுள்ள அவன் நாமமேயன்றிப் பிறிதொன்றங்கில்லவே இல்லை. வெளியான சிருட்டி என்பது ஒரு கட்டுப்பாடுடைய அவனது மர்த்தபாவாய் இருக்கிறது. விஜ்தான் என்ற அவனுடைய சொந்தஅறிவு கட்டுப்பாட்டுநிலையை எப்போது

பெற்றதோ அப்போது அது நூர் என்ற பெயரைப் பெற்றது. அவனிடத்தில் இது புதிதாய் உண்டாவதில்லை. இந்த நூறில் இறுதிவரை வெளியாகி ஆரம்பத்தோடு ஒன்றுசேர்ந்து ஆதியந்தமற்ற நிலையை அடையும் வரையிலுள்ள சர்வ சிருட்டிகளுக்குமுடைய சகல விஷயமும் ஒன்றாய் அடங்கியிருக்கிறது. சிருட்டிக்குரிய தேவைகளை றஹ்மத் என்றும் அறிவை றிஸாலத் என்றும் கூறப்படும். றஹ்மத் என்பதன் மறுபுறம் றிஸாலத் என்பதுதான். காலத்தை முக்காலமாய்ப்பிரித்துக் கொண்ட மக்களுக்காகவே இவ்விளக்கம் தரப்பட்டது.

குர்ஆன்: 21:107
நாம் உம்மை சர்வ ஆலங்களுக்கும் றஹ்மத்தாகவும் - றசூலாகவும் அனுப்பியிருக்கிறோம்.

இவ்வாயத்தில் கூறப்பட்ட றஹ்மத் என்பதும் றிஸாலத் என்பதும் இறைவனுடன் இயற்கையாயுள்ள அறிவைக் குறிப்பிட்டதே. இதை இங்கே விவரித்து விளக்க இடம்பாடாகாது. முடியுமானால் நீங்களே சிந்தித்துத் தெளிவு பெறுங்கள். முடியாவிட்டால் நேரில் கண்டு உரையாடித் தெரிந்து கொள்ளுங்கள்.

இந்தச் சிருட்டிகள் என்ற இறை இயல்பும் றப்பு என்ற இறை இயல்பும் (மர்த்தபா)-அல்லது நிலைமைகள் அவனோடு இயல்பாய் விவரமில்லாமல் இருந்தவைதான். தற்போதுள்ள சிருட்டியாய் வெளியான நாம் எம்மறிவில் காலத்திலும் இடத்திலும் கட்டுண்டு படிப்படியாய் வேறு வேறு நிலைமைகளில் வெளியாவது போல எம்மறிவுக்குத் தென்படுகிறது. தாத்து என்னும் வுஜூதிலேயே காலம் இடம் சிருட்டி எல்லாம் ஏகமாய் ஒன்றாய் இருந்த நிலைமையை "அமா" என்றும் "தஜ்யுனுல் ஊலா" என்றும் கூறப்படும். அஸ்மா ஸிபத்தாகிய சர்வ ஆலங்களும் தாத்தென்ற உஜூதை விட்டு வேறுபட்டிருக்க முடியாது.

ஆகவே, நாம் எதை எங்கே எப்படிக் கண்டாலும் கேட்டாலும் அது ஸிபத்து அஸ்மாக்களைக் கொண்டதே. அது

இறைவனின் ஸுறத்தும் சக்தியும்தான். சர்வ சக்தியும் அல்லாஹ் வுடையதே என்ற வேதவசனத்தை நான் முன்கூறியுள்ளேன், இப்போது ஹுவல் அவ்வலுவல் ஆகிறு என்ற 57:3ஆவது வசனத்தை நோக்குங்கள். இதில் கூறப்பட்டபடி உஜுது மறைந்ததாயும் அதன் அஸ்மா ஸிபத்துக்கள் வெளிப்பட்டவையாயும் இருக்கின்றன.

57:3ஆம் ஆயத்தில் ஓர் நுட்பம், இவ்வாயத்தில் ஹுவ என்ற சொல்லைக் கொண்டு இறைவன் சுட்டப்பட்டானேயன்றி அல்லாஹ் என்ற வசனம் பாவிக்கப்படவில்லை. அல்லாஹ் என்ற இடுகுறிப் பெயர் எங்கே பாவிக்கப்பட்டாலும் அது தாத்து சிபாத்து அஸ்மா மூன்றையும் உள்ளடக்கிய மனிதனின் பகுத்தறிவை மிகைத்த ஓரு நிலையை (மர்த்தபாவை) உணர்த்துவதாய் இருக்கிறது. இறைவன் றப்பு என்ற சொல்லும் அதேபோல மூன்று நிலைமைகளையும் தன்னுள் கொண்டதுதான். ஆயினும் அல்லாஹ் என்ற சொல்லின் நிலையைவிட்டும் வேறொரு நிலை (மர்த்தபா)வாய் இருக்கிறது. இந்த நிலை எல்லா மனிதருடைய அறிவிலும் அமையக்கூடியது. அதாவது அல்லாஹ் என்ற சொல் பிரிப்பதும் இல்லை. ஒன்றுபடுத்துவதுமில்லை. முக்காங்களை நீக்கி நிகழ்காலமே உண்டென்று அறியாத மக்கள் இதை உணர்வது கடினம்தான். றப்பு என்ற சொல் இப்படியல்ல. இதில் பிரிப்பதும் ஒன்றுபடுத்துவதும் உண்டு. றப்பின் மறுதிருநாமங்களும் இதே வகையிலுள்ளவைதான்.

ஆகவே 57:3ஆவது ஆயத்தின் விவரம் றப்பு என்ற மர்த்தபாவின் நிலைமையை மனிதனுக்கு அறிவிப்பதாய் இருக்கிறது. ஆகவே, அவனுக்கு வெளிப்பாடு என்ற வகையில் ஆதியந்தம் லாஹிர் பாதின் உண்டு என்பதும் அவனுடைய குன்ஹு என்ற வுஜுதைக் காணமுடியாதென்பதும் உண்மை. இதை மறுக்க வேண்டிய அவசியமேயில்லை. ஏனென்றால் ஆலங்களாய் நாம் பார்ப்பது சிருட்டியைத்தான். இது இறைவனின் ஸுறத்தே என்பதில் சந்தேகமில்லை. ஆனால், சிருட்டிக்குச் சிருட்டிகர்த்தா மாறானவனல்லவா? ஆகவே, சிருட்டி தோற்றமளிப்பவன் என்றால்

சிருட்டிகர்த்தா தோற்றமளிக்கமாட்டான் என்பது உண்மைதானே! ஆகவே லாஹிறும் பாதினும் உண்டு என்பது உண்மை. இங்கே ஓர் சந்தேகம். லாஹிறுக்கு பாதின் சோடியாய் இணையாய் இருக்கிறதே? ஆகவே றப்பு இணையுடையவன் என்றாகிறதே?

அப்படியல்ல, ஒரே பொருளில் ஒரே குணத்தின் இரு தன்மைகள்தான் லாஹிர், பாதின் என்பது. எமது உடல் லாஹிறாயும் உயிர் பாதினாயும் இருப்பதுபோல இரு முரண்படுதன்மையில்லாத எதையும் மனிதஅறிவு ஏற்காது. பகுப்பதற்கு இரண்டோ பலவோ வேண்டும். ஒன்றை உறுதிப்படுத்த அதன் எதிர்மறையும் நிச்சயமாக அவசியமானது இதுவும் ஓரு தத்துவம்தான். ஒன்றுக்கொன்று முரணான உடன்பாடும் எதிர்மறையும் இல்லாமல் எந்த ஓரு பொருளும் குணமும் கிடையாது. கோபமும் இரக்கமும் ஒன்றேதான். வெவ்வேறு தோற்றத்தில் வெளியாகிறது. இவ்விரண்டும் தன்னிறைவு அல்லது சுயநலம் என்பதையே அடிப்படையாய்க் கொண்டவை.

இதைப்போல அவன் தன்னையறிய அல்லது சிருட்டி தன்னையறிய அல்லது சிருட்டிவாயிலாய்த் தன்னையறிய அல்லது சிருட்டியைத்தான் கண்டறிய விரும்பினான் (எம் விருப்பம்போல் அல்ல) ஒன்றுக்கொன்று முரணாகாத நிலையில் இவ்விஷயம் நடைபெறமுடியாது. ஆகவே, அவனே லாஹிறாயும் பாதினாயும் அவனிடத்தில் அவனுக்காக அவனே இருந்து (வெளியாகிக்) கொண்டிருக்கிறான். இதில் மறுக்கவேண்டியது ஒன்றுமில்லை.

இன்னொரு சந்தேகம், உடன்பாடும் எதிர்மறையும் ஒன்றாய் எப்படி இருக்க முடியும்? மனிதனிடத்தில் இருக்கவே முடியாது. லாஹிறைப் பார்க்கும் போது பாதினும், பாதினை அறியும்போது லாஹிறும் தென்படவேபடாது. இது சிருட்டியின் விஷயம்தானே! சிருட்டிக்குச் சிருட்டிகர்த்தா முரணானவன் என்றால் சிருட்டியிடத்தில் ஒன்றாய் அமையாத லாஹிறும் பாதினும் சிருட்டிகர்த்தாவிடம் அமையுமல்லவா?

இவ்விஷயத்தில் விஞ்ஞான ரீதியான நுட்ப விளக்கங்களை இந்த நூலின் 3ஆம் பாகத்தில் இன்ஷா அல்லாஹ் விவரம் தருவேன். பொறுமையடையவும், சிருட்டி சிருட்டிகர்த்தாவை விட்டும்

வேறானது என்று கொண்டால்தான் சிருட்டிகர்த்தாவுக்கு ஜோடியுண்டென்றாகும். (நுட்பமாய் உணர்க.)

இதன்பின் தந்த 56:85ஆம் ஆயத்தில் நீங்கள் நம்மைப் பார்ப்பதில்லையென்று கூறப்பட்டதும் இந்த குன்ஹு என்ற வுஜூதின் சுயநிலைமையேயாகும். இவ்வித ஆயத்துகள் உலக மக்கள் யாவரையும் நோக்கியதாய் இருக்கின்றன. இதன்பின் தரப்பட்ட 7:7இல் நாம் மறைந்திருக்கவில்லையென்று கூறப்படுவது கவாஸுல் கவாஸுகளான, பூரண ஈமான்தாரிகளான மகான்களுக்குக் குறிப்பாகவும் அவாம்கள் கவாஸுகளுக்குப் பொதுவாகவும் கூறப்பட்டதாகும். இந்த ஆயத்திலும் அல்லாஹ் என்ற வசனம் பாவிக்கப்படவில்லை

.

இந்த மகான்கள் அஸ்மா ஸிபத்துகள் நிச்சயமாக இறைவனுக்குண்டு என்றும் அஸ்மா ஸிபத்துகளை விட்டுவிட்டு வுஜூது எங்கேயும் மறையமுடியாதென்றும் அவனையன்றி அவனுடன் எதுவுமில்லையென்றும் தெளிவாய் அறிந்தவர்கள். ஆகவே சர்வ ஆலங்களையும் சர்வ சிருட்டிகளையும் பார்க்கும் போது றப்பே காட்சியளிக்கிறான். றப்பே பேசுகிறான். றப்பே பார்க்கிறான் என்றும், காட்சியாய் தென்படும் ஸுறத்துக்கள் யாவும் அவனிடமுள்ள இயற்றன்மையே யென்றும் அந்த இயற்றன்மையை அவன் நாடியபடி கற்பனை பண்ணி வெளியாகிறான் என்றும் அறிகிறார்கள். எங்கே? அவனறிவில்தான். ஆகவே, இவர்கள் பாதினை மறுக்கவில்லை. லாஹிறை மட்டும் எடுக்கவுமில்லை. இவர்கள் குர்ஆன் ஹதீஸுகளும் அனுபவமும் ஒன்றாய் இருப்பதை உணர்கிறார்கள். இவர்கள்தான் நபிமார் என்றும் அவ்லியாக்கள் என்றும் ஈமான்தாரிகள் என்றும் அழைக்கப்படுபவர்கள். இவர்களிடத்தில் ஒருவகையினருக்கு லாஹிறை பாதினும் பாதினை லாஹிறும் மறைப்பதில்லை. காரணமென்னவென்றால் இவர்களிடத்தில் இறைவனின் பூரண தஜல்லியிருக்கிறது. இவ்வகையினர் தான் றசூல்(ஸல்) அவர்களும் அவர்களைப் பின்பற்றிய ஷேகு முறப்பிகளும், மற்றும் அவ்லியாக்கள் இப்படியில்லை. இவர்கள்தான் காமீல்களும் ஷிர்ருடைய அடியார்களுமாவார்கள்.

ஹதீஸ் குத்ஸியில், என்னுடைய அடியானுக்கும் எனக்குமிடையில் ஒரு சிர்று(இரகஸியம்) இருக்கிறது. அதைப்பெற்றுக் கொள்ள முகற்றபான மலக்குகளோ முற்சலான நபிமார்களோ இடம்பெற மாட்டார்கள் என்று கூறப்பட்டவர்கள் இந்தச் சுயநிர்ணய உரிமையற்ற பூரண அப்துக்களாய் அமைந்திருக்கிறவர்களே. இவர்கள் குன்ஹு என்ற ஹக்கை, ஹக்கு உணர்த்துவதற்கு வெறும் மழ்ஹறாய் இருக்கிறார்கள். இங்கே ஒரு நுட்பம் உண்டு. இன்ஸானிடத்தில் இது ஒரு குறிப்பிட்ட நேரத்தின் நிலைமையேயன்றி நிரந்தரமாய் நிலைகொண்டதல்ல. மீதி விவரங்கள் இங்கே நமக்கு அவசியமல்ல.

இந்த நிலைமை குர்ஆன் ஹதீஸுகளை மனப்பூர்வமாய் ஏற்றுக் கொண்டவர்களுக்கேயன்றி அமைவதில்லை. இவர்கள் சிருட்டிகளுடன் சிருட்டிகளின் வரைவிலக்கணங்களை மீறாமலே வாழ்வார்கள். இவர்களைக் கொண்டுதான் இறை செயல்கள் சர்வ ஆலங்களிலும் வெளியாகின்றன. இந்தக் கலீபா என்ற நிலைமையைப் பெறுவதே இன்ஸான் சிருட்டிக்கப்பட்ட நோக்கமாகும். இந்த நிலைமையை உருவாக்குவதே இஸ்லாத்தின் நோக்கம். ஆகையால்தான் கலிமாவைக் கொண்டு சாட்சி கூறுவது முதலாவதுவிதியாக அமைக்கப்பட்டிருக்கிறது. "***வமாகலக்கத்துல் ஜின்னவல் இன்ஸ இல்லாலி யஹ் புதூன்***" இன்ஸையும் ஜின்னையும் என் செயல் வெளியாகவே படைத்தேன் என்று குர்ஆன் கூறுவதன் உண்மை இதுதான்.

இவ்வாயத்துக்கு வணங்குவதற்காகப் படைத்தேன் என்பது மருட்சியாளரின் மொழிபெயர்ப்பாகும். என்னையறிவதற்காக என்றும் சிருட்டிகள் என்னை அறிவதற்காகப் படைத்தேன் என்றும் சில தப்ஸீர்கள் மொழிபெயர்ப்புச் செய்திருக்கின்றன. இதையும் நாம் ஏற்கலாம். அறிவதும் அறியப்படுவதும் இபாதத்துத்தான். என்னை அறியப்படுவதற்காக என்பதற்கும் இபாதத்துக்காக என்பதற்குமிடையில் வித்தியாசமிருப்பது போல் தென்படினும் விஷயம் அப்படியல்ல. அறியப்படுவதுதான் உண்மையான இபாதத்தாய் இருக்கிறது. அறிய என்பது அனுபவம் பெற, என்பதாகும். உங்கள் றப்புக்கு இபாதத்துச் செய்யுங்கள் என்பதன் கருத்து உங்களிறைவனை (ஒருமை) ஏகப்படுத்துங்கள் என்பதாகும் என்று சில தப்ஸீர்கள் விபரம் தருகின்றன.

குர்ஆனில் இடம்பெறும் "இபாதத்" என்று கூறப்பட்ட வசனங்கள் அனைத்தும் தௌஹீது என்ற அர்த்தமுடையதாகும் என்று அப்பாஸ்(றலி) அவர்கள் கூறுகிறார்கள். இபாதத்தின் ஆரம்பம் தௌஹீதாய் இருப்பதாலும் இணையென்ற ஷிர்க் இபாதத்தாக முடியாதாகையாலும்தான் இச்சொல்லுக்கு இப்படிப் பொருளுண்டு என்று அப்பாஸ்(றலி) அவர்களே விளக்கமளித்துள்ளார்கள். அறபுத் தப்ஸீர்களைப் பார்க்கக் கல்வியில்லாவிட்டால் உங்களிடமுள்ள "தப்ஸீறுல்ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்" என்ற தப்ஸீரின் 1ஆம் பாகம் 42ஆம் பக்கத்தில் இதைக் காணலாம்.

இந்த இபாதத்தென்ற பதம் இறைவனை நோக்கிச் செய்யப்படும் நல்ல செயல்கள் அத்தனையையும் பொதிந்து கொண்டது தான். ஆயினும் தௌஹீதென்ற உண்மையின் அடிப்படையில் இல்லாத எச்செயலும் எந்த வணக்கமும் இபாதத்தாகாது. ஆகையால் இபாதத் என்பதன் சரியான அர்த்தம் தௌஹீதில் நிலைப்பதே. ஆரம்பம் அறிவாயும் முடிவு அனுபவமாயும் இருக்கிறது.

இப்போது எடுத்துக்கொண்ட விஷயத்துக்கு வருவோம். பார்க்கலாம் என்பது லாஹிறை, பார்க்கமுடியாது என்பது பாதினை. முன்தந்த ஆயத்துகளின்படி இப்போது நோக்குங்கள். பார்க்கலாம் என்னும் போது பார்க்கமுடியாத ஒரு நிலைமையும் உண்டு என்பது தென்படுகிறது. எப்படியென்றால் பார்க்கலாம் என்பது சிருட்டியைத் தானே! அப்படியானால் இறைவன் சிருட்டிக்கு மாறானவனல்லவா? ஆகவே, றப்புப் பார்க்க முடியாதவனாய்த்தானே இருப்பான். பார்க்க முடியாததென்றால் பார்க்கக்கூடியவனாகவும்தானே இருப்பான். முரண்படும் இரு தன்மையில்லாவிட்டால் பார்த்தேன், பார்க்கவில்லை என்ற இரு சொற்களும் பிழையாய்விடும். முரணில்லாதது அறிவில் அமையவே அமையாதல்லவா?

மேலும் வெளியானவன் என்றால் மறைந்திருக்க முடியாதவன் என்றும் மறைந்தவன் என்றால் வெளியாக (காட்சியளிக்க) முடியாதவன் என்றுமாகும். இறைவன்தான் சர்வ வல்லமையுமுடைய வனாயிற்றே.

ஆகவே, நாம் காட்டிய எந்த ஒரு ஆயத்தும் ஒன்றுக்கொன்று முரணானவையேயல்ல. அவ்வல், ஆகிர், லாஹிர், பாத்தின், ஆகிய சொற்கள் ஒன்றுக்கொன்று முரண்போல் தென்பட்டாலும் அவற்றால் உணர்த்தப்படும் விஷயம் ஒரே விஷயம்தான். கோபம், இரக்கம், தண்டனை, மன்னிப்பு போன்றவை சொல்லில் வேறுபடினும் ஒரே விஷயமாயும், ஒரே தன்மையை அறிவு விளங்கிக் கொள்வதற்காக கூறப்பட்டவையாயும் இருப்பதைப்போல, பார்க்கமுடியாது என்பது அதை வேறொரு நிலைமையில் பார்க்க முடியும் என்பதையும் உறுதிப்படுத்துகின்றன. லாஹிறும் பாதினும் உண்டு என்றும் லாஹிறும் பாதினும் இல்லையென்றும் அறிவிக்கின்றன. லாஹிர் என்பது அவன் அவனிடத்திலுள்ள வெளிப்பாட்டை, சர்வ ஆலங்களான சிருட்டியைக் குறிப்பதாய் இருப்பதால் அதற்கு ஆதியும் அந்தமும் உண்டு. ஆகவே, சர்வ ஆலங்களும் அவனாகவே தோற்றமளிக்கின்றன என்பதை எவரும் மறுக்க முடியாது. உலகுக்கு (சிருட்டிக்கு) ஆதியும் அந்தமும் உண்டு. ஆகவே, சிருட்டி அவனாகத்தானே இருக்கவேண்டும்.

இதைப்போல பாதின் என்பது அவனுடைய குன்ஹு என்ற சுயநிலைமையைக் குறிப்பிடுவதால் இதைப் பார்க்க முடியாது. இதற்கு ஆதியும் இல்லை அந்தமும் இல்லை. லாஹிறுமில்லை பாதினுமில்லை. இது சொல்லிலும் அடங்காது, சமது என்ற பெயர் கூட இங்கு இல்லை. இதுதான் தாத்து வுஜூது என்பது. இதுதான் இருப்பதாயும் இல்லாததாயும் மனித அறிவில் தென்படுகிறது. இது அறிவிலுள்ள கோளாறுதான். இக்கோளாறு இல்லையானால் உலக இயக்கம் நடைபெறமுடியாது. இந்த மருட்சி நீங்கி எம் சுய உண்மையில் ஒன்றுவதே கலிமா தரப்பட்ட நோக்கமாகும். நீங்கள் சிந்திக்கும் ஆற்றலுடையவர்களாயிருப்பின் கலிமாவைக் கூறியவன் அதை உணர்ந்து அனுபவத்தில் கொண்டிருப்பவன் இறைவனே என்பதை உங்களால் உணரமுடியும். இந்த ஈமானின் நிரப்பம் இறையறிவுதான். ஆகையால்தான் இறைவனுக்கு மூ.ீ. மீன் என்ற திருநாமம் உண்டு என்று குர்ஆன் விவரம் தருகிறது. இதை விளங்காத மக்கள் ஏதோவெல்லாம் கூறட்டும். குர்ஆன் இறைவன் பேச்சு. உலக இலக்கியங்கள் இலக்கணங்கள்

அதற்கீடாகா, அவ்வளவு மிகமிகத் துல்லியமான நுண்ணறிவுகள் அவ்வசனங்களில் அடங்கியுள்ளன. லாஹிர் பாதின் என்ற விபரம் அறிவில் சரியாய்ப் பிடிபடா விட்டால் கலிமாவைக் கொண்டு ஈமான் கொள்வதும் குர்ஆன் ஹதீஸுகளை ஏற்றுக் கொள்வதும் முடியாத காரியமேயாகும். இதை விளங்கிக் கொள்ள ஆற்றலில்லாத மக்கள் குர்ஆன் ஹதீஸுகளை மறுப்பதையும் புரட்டுவதையும்தான் நாமறிந்திருக்கிறோமே. ஆகவே இது தெளிவாய் விளங்க வேண்டும். என்பதற்காக ஓரு விபரம் இங்கே தருகிறேன்.

இன்ஸான் அல்லது மனிதன் என்ற சொல் உலகமக்கள் எல்லோரையும் ஒன்றுபடுத்திச் சொல்லப்பட்ட ஓரு பொதுப் பெயர்ச் சொல்லாய் இருக்கிறது. நாம் ஓரு மனிதரைச் சுட்டிக்காட்டி அஹமது அதோ வருகிறார் அல்லது இருக்கிறார் என்று கூறுகிறோம். நாம் மனிதர் என்று கூறியது அஹமதுவைத்தான். ஆனால் அவனுடைய பெயர் அஹமது என்பதே. மனிதர் என்றால் எல்லோரையும் சேர்த்துக் கூறப்பட்ட சொல். நாம் இப்போது கண்டது ஒரு மனிதரைத்தான். மனிதர் அல்லது மனிதனைக் கண்டேன் என்னும் போது அது பிழையாய் முடிகிறது. மனிதரில் ஓர் அங்கத்தை (ஒன்றைத்தான்) இச்சொல்லினால் நாம் அறிந்தோம். அஹமது என்ற மனிதரின் உடலை மையமாகக் கொண்டுதான் நாம் அவரை அஹமது என்று கூறினோம். ஆனால் அஹமது என்பது உடலைமட்டுமல்ல, அவருடைய உயிரையும் சேர்த்துத்தான் அஹமது என்று நம்பினோம். அஹமதுடைய உடல்(லாஹிர்) (பௌதீகம்) (வெளிப்படை) ஸுறத் என்கிறோம். உடலை நாம் புலன்களால் கண்டது போல அஹமதின் உயிரைப் புலன்களால் பார்க்க முடியாது. அனுமானத்தினால் (அறிவினால்) அறியமுடியும்.

இன்ஸான் என்ற அல்லது மனிதரென்ற சொல்லின் அர்த்தத்தை அல்லது பொருளைத்தான் அஹமது என்ற பெயரோடு நாம் ஓரு பொருளாகக் கண்டோம். இந்த மனிதனின் என்ற சொல்லுக்குப் பதிலாய் (உவமானத்துக்காக) அல்லாஹ் என்ற சொல்லை வைததுக் கொள்வோம். இந்த அல்லாஹ் என்ற சொல்

பொதுப் பெயர்ச் சொல்லேயல்ல. ஏனென்றால் அவனுடன் இணையெதுவுமில்லை. கூட்டு மொத்தம் வேறு என்பதெல்லாம் அச்சொல்லில் இல்லை. இன்ஸான் என்பது அப்படியல்ல. இது பொதுப் பெயர்ச்சொல்தான்

அல்லாஹ் என்ற சொல்லுக்கு அடுத்தபடியாக அவனுக்கு றப்பு என்றோர் திருநாமம் உண்டு. அஹமது என்பதைப்போல. அல்லாஹ் என்ற சொல்லுக்குள் கட்டுண்டதுதான் றப்பு என்பது. இன்ஸான் என்ற சொல்லில் கட்டுண்டதுதான் அஹமது என்பதைப்போல இங்கே விளங்குவதற்காக இன்ஸான் என்ற சொல்லை அல்லாஹ் என்ற சொல்லைப்போல கற்பனை பண்ணிக் கொள்ள வேண்டும். றப்பு என்பது அஹமது என்ற சொல்லைப் போன்றது என்றும் கற்பனை செய்து கொள்ளுங்கள்.

அஹமதுக்கு எப்படி லாஹிறென்ற உடலும் (ஸுறத்தும்) (வெளிப்படையும்) பாதின் (மறைவு) என்ற உயிரும் ஒன்றாய் இருந்து அஹமதுவைக் காண்பித்ததோ அதேபோல றப்பு என்பவனும் லாஹிர் (வெளிப்படை) (ஸுறத்) தோற்றுபவனாயும் பாதின் (மறைவு) என்ற மறைந்தவனாயும் காட்சியளிக்கிறான். ஆகவே, காட்சியளித்தவனும் மறைந்தவனும் அஹமதாய் இருந்ததைப்போல காட்சியளிப்பவனும் மறைந்தவனும் றப்பாய் இருக்கிறான். அஹமதுவுக்கு இன்ஸான் என்ற பெயரை நாம் இரவலாகப் பாவித்ததுபோல றப்பு என்ற ஓரு நிலைமைக்கு அல்லாஹ் என்ற பெயரை இரவலாய்ப் பாவிக்கிறோம். அல்லாஹ் என்ற சொல்லினால் அஹது, உஹது, வாஹிது என்ற மூன்று நிலைமைகள் ஒன்றுசேர்த்து உணர்த்தப்படுகின்றன. இவை மூன்று என்று நாம் கூறுவது விளங்குவதற்காகவேயன்றி உண்மையில் இவை மூன்றும் ஒன்றேதான்.

இன்ஸான் என்பதை அஹதாகவும் அஹமது என்ற உயிரை உஹதாகவும் கொண்டால் வாஹிது என்பது அஹமதுவின் உடலாய் இருக்கிறது. இன்ஸான் என்ற சொல்லால் உணர்த்தப்பட்ட மக்கள் நம் புலன்களில் அமையாது. எவ்வளவு அழிந்தது. எவ்வளவு இருக்கிறது, எவ்வளவு வரப்போகிறதென்பதை எம்புலன்கள் எட்டா. இதைப்போல அல்லாஹ் என்ற சொல்லினால் உணர்த்தப்பட்ட

லாஹிர் என்ற வெளிப்படையும் ஏகநேரத்தில் பூரணமாய்ப் புலன்களுக்கு எட்டவே எட்டாது. பாதின் என்ற நிலைமையான குன்ஹு-தாத்து என்ற நிலைமை புலன்களுக்கும் எட்டாது எம் அறிவுக்கும் எட்டாது. ஆகையால்தான் இந்த நிலைமையை ஆராய்தல் செய்ய வேண்டாம் என்று தடுக்கப்பட்டுள்ளது. அதில் எத்தனை மர்த்தபாக்கள் என்ன என்ன அஸ்மாக்கள் இருக்கின்றன என்பதை அவனையன்றி எவரும் அறியமுடியாது. அந்த நிலைமைகளில் ஒன்றுதான் றப்பு என்பது. இதை ஒரு காரணப்பெயர் என்று கூறலாம், தொழிற்பெயர், வினைப்பெயர் என்றும் கூறலாம். சிருட்டிகளுக்கு இறைவனாய் இருக்கும் காரணத்தினாலேயே இதை இப்படிக் கூறுகிறோம். சர்வ உலகங்களுக்கும் நம்மிடத்தில் எல்லையில்லா விட்டாலும் அல்லாஹ்விடத்தில் உண்டு. சர்வ உலகங்களும் றப்பின் முழுத்தோற்றமேயன்றி அல்லாஹ்வின் முழுத்தோற்றமல்ல. ஏனென்றால் அச்சொல் எல்கையற்றது. அதைப்பற்றி மனித அறிவு அலட்டிக் கொள்ளவேண்டியதே இல்லை, அது அறிவில் அமையவே அமையாத ஒன்று. றப்பு என்ற சொல் அப்படியல்ல. உலகம் எல்கையுடைய தானால் அந்த எல்கைவரையிலும் றப்பு என்ற நாமம் இருக்க முடியும். உலகங்கள் (சிருட்டிகள்) யாவும் இல்லையானால் றப்பு என்ற நிலைமையும் மறைந்துவிடும். ஆகவே றப்பு என்றசொல் எப்போதுண்டோ அப்போதே அப்து என்ற சொல்லும் அங்குண்டு. ஆகவே, உள்ள ஒரே பொருள்தான் தன் இரு நிலைமைகளை ஒரு நோக்கோடு வெளிப்படுத்தி (வெளியாகி) இருக்கிறது. வெளியாய் உள்ள நிலைமையைச் சிருட்டி அப்து என்கிறோம். மறைந்திருக்கும் நிலைமையை றப்பு என்கிறோம். அஹமதின் வெளிஉடலை லாஹிர் என்றும் உயிரை பாதின் என்றும் கூறுவதைப் போல.

அஹமது என்பதிலும் இதைப்போல்தான் இருக்கிறது. உயிரிருக்கும் வரையிலும் அஹமது என்று கூறுகிறோம். இறந்தபின் அஹமதுவின் பெயர் பிணம். அஹமதுடைய லாஹிர் என்ற உடல் இல்லாதபோது பாதின் என்ற உயிரும் இல்லை, இருப்பினும் அதை அறியமுடியாது. இதைப்போல இறைவனின் லாஹிர் என்ற நிலைமையில்லையானால் பாதின் என்ற நிலையும் இல்லாததாகும்.

இன்னொரு நுட்பம். கலிமாவையும் அதன் தலீல்களையும் நோக்கும் போது அல்லாஹ் வையன்றி இல்லையென்பது

தென்படுகிறது. இருப்பது அல்லாஹ்தான் (வுஜூது-அல்லது தாத்துத்தான்) இந்த வுஜூதுடன் வேறுபொருள் இல்லையானால் லாஹிர், பாதின், அவ்வல், ஆகிர் அல்லாஹ்வுக்கே உரியதானால் இத்தன்மை இறைவனை விட்டு வேறாய்க் கணிக்கப்படுகிற சிருட்டியிடத்தில் இருக்க முடியாது. ஏன்? அல்லாஹ்வுக்குரிய பண்பு சிருட்டியின் பண்புக்கு முரணாய் இருக்க வேண்டுமே! சிருட்டிக்குச் சிருட்டி கர்த்தா முரணானவனல்லவா? இப்போது சிந்தனை செய்து பாருங்கள். சர்வ ஆலங்களிலுமுள்ள சர்வபொருட்களும், அணுவும் கூட லாஹிர், பாதின், அவ்வல்,ஆகிர் என்ற இந்த நான்கு தன்மைகளையும் கொண்டவையாகவே இருக்கின்றன. இதைப் பகுத்தறிவுடைய எந்த மனிதனும் மறுக்க முடியாது. இன்றைய விஞ்ஞானம் கூட பொருளின் தோற்றம் அழிந்துவிட்டால் எல்லையற்ற ஓர் சக்தி மட்டுமே மிஞ்சும் என்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. சக்தி என்பது பாதின். ஸுறத் அல்லது பொருள் என்பது லாஹிர். ஸுறத்தைக் காணலாம். சக்தியைப் பார்க்க முடியாது. அறிவினால் உணரலாம். ஆகவே லாஹிர்,பாதின், அவ்வல், ஆகிர் உடைய எந்த ஓர் அணுவானாலும் அது இறைவனாகவே இருக்க வேண்டும். இறைவனின் பண்பு சிருட்டியென்ற பெயரைப் பெற்றிருந்ததேயன்றி சிருட்டியென்பது றப்பை விட்டு வேறான ஓர் பொருளேயல்ல. இது இறைவனின் அஸ்மா ஸிபத்துகளின் தோன்றிமறையும் தோற்றங்களேயன்றி இறைவனுடன் ஜோடியாய் இணையாயுள்ள வேற்றுப் பொருட்களேயல்ல, இந்த விபரம் பிழையென்றால் குர்ஆன் 57:3ஆம் வசனம் பிழையென்றாகும். குர்ஆன் உண்மையென்றால் நாம் கூறியதே சரியென்றாகும்.

ஆகவே றப்பைப் பார்க்கலாம் என்பது லாஹிறான அஸ்மாக்களையே. அறிவினால் அறியலாம் என்பது ஸிபத்து என்ற குணத்தையே, அறிய முடியாதென்பதும் பார்க்க முடியாதென்பதும் பாதின் என்றும் குன்ஹு என்றும் கூறப்படுகிற சுயதன்மையே.

குர்ஆன்: 53:23

இவையெல்லாம் நீங்களும் உங்கள் மூதாதைகளும் வைத்துக் கொண்ட வெறும் பெயர்களேயன்றி (உண்மையில் அவை) ஒன்றுமில்லை. அதற்காக அல்லாஹ் யாதோர் ஆதாரத்தையும்

இறக்கிவைக்கவில்லை. அவர்கள் (தங்கள்) மனோ இச்சையையும் (வீண்) சந்தேகத்தையும் பின்பற்றுகின்றனரேயன்றி வேறில்லை. நிச்சயமாக அவர்களின் இறைவனிடமிருந்து அவர்களுக்கு நேரான வழிவந்தே இருக்கிறது.

விக்கிரகம் முதலாம் சர்வ சிருட்டிகளும் இறைவனுடைய இலாஹியான நாமங்களின் ஸுறத்துக்களே என்பதும் அவற்றிற்கு நாம் இட்டுக்கொண்ட பெயர்கள் கௌனியான நாமங்களே என்பதும் தென்படுகிறது. இலாஹியான நாமங்களின் ஸுறத்துக்கள் ஒவ்வொன்றும் தனித்தனி மூலப்பொருள் என்ற நம்பிக்கை வீண் சந்தேகத்திலிருந்து பிறந்தது. இது பின்பற்றல் வாயிலாக உலக மக்களைச் சூழ்ந்துகொண்டிருக்கிறது. இந்த மூட நம்பிக்கைக்கு எவ்வித ஆதாரமும் கிடைக்கவே கிடையாது.

சிருட்டியின் பண்புகள் இறைவனின் பண்புகளுக்கு நேர்மாறானதென்று முன்கூறினோம். இந்தச் சிருட்டிகள் என்பவை அல்லாஹ் அல்லாத ஓர் தனி மூலப்பொருளின் தோற்றம் அல்லது பொருள் என்று கணித்த மனிதனுக்குத்தான் அப்படிக் கூறினோம். உண்மையில் சிருட்டி பொருளேயல்ல. அதுவெறும் ஸுறத்து மட்டும்தான். எமது புலன்கள் வாயிலாகத்தான் அவை பொருட்களாய் காட்சியளிக்கின்றன, ஆகவே, பண்புகள் எல்லாமே இறைவனுக்குடையவைதான், சிருட்டியிடத்தில் எவ்விதப்பண்பும் இருக்க முடியாது. சிருட்டி என்பது பொருளல்லாத வெறும் சொல் கற்பனைத் தோற்றம். புலனாட்சியில் கட்டுண்ட வெளிமனத்தால் ஏற்பட்ட வெறும் மருட்சி(வஹ்மு) என்பதே குர்ஆன் ஹதீஸ் பகுத்துணரும் ஆராய்வின் தீர்ப்பாகும். ஆகவே சிருட்டி என்று கணிக்கப்படுவது றப்புக்கு நேர்முரணாகத்தானே தென்படும். ஆகையால்தான் சிருட்டிக்கு சிருட்டிகர்த்தா நேர் முரணானவன் என்று கூறுகிறோம். நான் இங்கே கூறிய நுட்பம் மிருகங்களுக்கொப்பான அறிவிலிகளுக்கல்ல. பகுத்தறிவும் சிந்தனையுமுடைய மனிதருக்கே. ஆகவே நுட்பமாய் உணர்க என்று வேண்டிக் கொள்ளுகிறேன்.

(அர்ஷ்) என்பது எங்கே உள்ளது?

ஏழு வானங்களின் மேலுள்ள அர்ஷில்தான் இறைவன் இருக்கிறான் என்று பல புத்தகங்கள் கிதாபுகள் விரிவுரைகள் வழங்கியிருப்பதை நாம் அனைவரும் அறிவோம்.

குர்ஆன்: 20:4,5,6

உயர்ந்த வானங்களையும், பூமியையும் சிருட்டித்தவனாலேயே (இது) அருளப்பட்டது. றஹ்மான் அர்ஷின்மீது தன் ஆட்சியை நிலைப்படுத்தினான். வானங்களில் இருப்பவையும், பூமியில் இருப்பவையும், இவற்றுக்கு மத்தியில் இருப்பவையும், பூமியில் புதைந்து கிடப்பவையும் அவனுக்கே சொந்தமானவை.

குர்ஆன்: 5:120

வானங்களுடையவும், பூமியுடையவும், இவற்றிலுள்ள யாவற்றினுடையவும் ஆட்சி அல்லாஹ்வுக்குரியதே; அவன் யாவற்றின் மீதும் ஆற்றலுடையோன்.

(இந்த ஆயத்துகள் சில உண்மை விளக்கங்களை எமக்குத் தருகின்றன.)

1ஆவது:வானத்தையும் பூமியையும் சிருட்டித்தவன் எவனோ அவனே றஹ்மான் என்பது தென்படுகிறது.

2ஆவது:அந்த றஹ்மான் அர்ஷின் மீது தன் ஆட்சியை நிலைப்படுத்தினான் என்பது தென்படுகிறது.

3ஆவது:வானங்கள் பூமிகள் அவற்றின் மத்தியில் இருப்பவை பூமியில் புதைந்துள்ளவை வானத்தில் புதைந்து (மறைந்துள்ளவை) யாவும் அந்த றஹ்மானுக்கே சொந்தம் என்பது தென்படுகிறது.

4ஆவது: இந்த றஹ்மானே குர்ஆனை அருளினான் என்பது தென்படுகிறது.

வானத்தையும் பூமியையும் இறைவனான றஹ்மானே படைத்தான் என்பது உலகமக்கள் யாவரும் ஏற்றுக்கொண்ட விஷயம். அவன் அர்ஷில் தன் ஆட்சியை நிலைப்படுத்தினான் என்னும் போது ஓர் சந்தேகம் பிறக்கிறது. அவன் தன் ஆட்சியைச் செலுத்துவதனால் அவனுக்குச் சொந்தமானது எதுவோஅதில்தான் செலுத்தமுடியும். சர்வ உலகங்களும் அவனுக்குச் சொந்தமானதாய் இருப்பதால் சர்வ ஆலங்களிலும் அவனுடைய ஆட்சியே நடைபெறவேண்டும். ஆனால் நாம் உலகில் மனிதனின் ஆட்சியையும் காணக்கூடியதாய் இருக்கிறது. ஒவ்வோரு நாடும் அதன் மக்களும் ஒவ்வொரு வகையான கொள்கையோடு ஆட்சி நடாத்திக்கொண்டிருப்பதை உங்களால் மறுக்க முடியுமா? ஷைத்தான் கூட அவனுடைய ஆட்சியை நடாத்திக் கொண்டிருக்கிறானே அதை உங்களால் மறுக்க முடியுமா? ஆதாரமுண்டா?

முஸ்லீமும் மூ.்மீனும் காபீரும் முஸ்ரிக்கும் கூட இது என் உடல் என் உடை, என் வீடு, என் காணி, என் வாகனம் என்று ஒவ்வொரு மனிதனும் தன்தன் உடமை என்று கூறுகிறார்களே! இதில் மூ.்மீன் யார்? முஸ்ரீக் யார்?

நிலத்தில் ஏதாவது புதைபொருள் கிடைத்துவிட்டால் அவவிடத்து அரசாங்கம் அப்பொருளைத் தனக்குடையதாக்கிக் கொள்கிறது. ஆகவே, யாவும் (அல்லாஹ்வுக்கே) றஹ்மானுக்கே சொந்தமானது என்று குர்ஆன் கூறுவது ஏன்? இறைவனும் எம்மைப் போல் வளவளவென்று அர்த்தமில்லாமல்தான் குர்ஆனை அருளினானா? அர்ஷில் தன் ஆட்சியை நிலைப்படுத்தினான் என்று தான் குர்ஆன் கூறுகிறது. அப்படியானால் அர்ஷ் மட்டும்தான் அவனுக்குச் சொந்தம் என்று ஆகிவிடுமே! எல்லாமவனுடைய தென்றல்லவா கூறுகிறான். உலகு அவனுடையதுதான் என்றால் அவனுடைய ஆட்சி உலகிலும் அல்லவா நிலைபெற்றிருக்க வேண்டும்? சிருட்டி வேறு சிருட்டிகர்த்தா வேறு என்று நம்பிய மனிதன் சிருட்டியாய் இருக்கிற மனிதனின் ஆட்சி அல்லாஹ்வின் ஆட்சிதான் என்பதை எப்படி ஏற்பான்? அல்லாஹ்வின் ஆட்சியே நடைபெறுகிறதென்ற வேதவசனத்தை இவன் ஏற்றுக் கொள்வது எப்படி? ஏற்கவேமாட்டான்.

குர்ஆன்: 4:53

(இவ்வுலகை) ஆட்சிபுரிவதில் இவர்களுக்குச் சொற்பபாகமாவது இருக்கிறதா? அவ்வாறிருந்தால், அவர்கள் மனிதர்களுக்கு ஒரு எள்ளளவும் கொடுக்கமாட்டார்கள்.

இவ்வாயத்தில் அனேக நுட்பங்கள் தென்படுகின்றன. மனிதன் தன் ஆட்சிபண்ணுவதை நாம் காண்கிறோம். மனிதர் ஒருவருக்கொருவர் கொடுப்பதை நாம் காண்கிறோம். அரசாங்கம் மனிதனுக்கு உணவு பணம் முதலாம் உதவிகளைச் செய்வதை நாம் காணுகிறோம். ஆகவே, எந்த ஒரு சிருட்டியும் றப்பை விட்டும் வேறானதல்ல என்பதே உண்மை. அப்படியில்லையென்றால் குர்ஆனை ஒப்புக்கொள்ளவும் இறைபேச்சென்று நம்பவும் முடியாதல்லவா?

குர்ஆன்: 55:24

மலைகளைப் போல் உயர்ந்ததாகச் சமுத்திரத்தில் செல்லும் கப்பல்களும் அவனுக்குடையனவே.

இன்றைய உலகில் அரசாங்கமும் தனிப்பட்ட மனிதர்களும் பலஆயிரம் கப்பல்களை அவர்கள் தங்கள் சொந்தப் பொருளாய்க் கொண்டிருக்கிறார்கள். அப்படியிருந்தும் அவை அல்லாஹ்வுக்கே சொந்தமானவை என்று இறைவன் கூறுவதன் அர்த்தம்தான் என்ன? சிருட்டி என்பது அவனாக இருக்கிறான் என்றில்லாவிட்டால் இந்த ஆயத்தை எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? அப்து றப்பு என்ற சொற்கள் வேறுபடினும் அந்தரங்கம் உள்ளது ஒன்றுமட்டும்தான், ஆதலால் அர்ஷ் வேறானது, வானம் பூமி வேறானது என்று கொண்டால் பூமியில் அவனுடைய ஆட்சி நிலைப்பட்டிருக்காது. குர்ஆன் பொய்யென்றாகும்.

ஆகவே, அர்ஷ் என்பது வானத்துக்குமேல் இருக்க முடியுமா? முடியாது. அர்ஷில்தான் வானம் பூமியாவும் இருக்க வேண்டும். அப்படியானால்தான் குர்ஆனின் கூற்று உண்மையாய் இருக்க முடியும்.

இதைப்போல அந்த றஹ்மானால் கூறப்பட்ட குர்ஆன் ஒரு புத்தகமாக இருக்க முடியாது. ஏன்? குர்ஆனுடைய கூற்றின்படி றஹ்மத் என்பது சிருட்டி எங்கெங்குண்டோ அங்கெல்லாம் அந்த றஹ்மத்தென்ற அருட்கொடையும் இருந்தே ஆகவேண்டும். அப்படியானால் இறைவனால் தரப்பட்ட அருட்கொடையான குர்ஆன் சர்வ உலகையும் தன்னுள் கொண்டதாக எல்கையற்றதாகவே இருக்க வேண்டும். இவ்விதமான இறைவசனத்தை எம் வசனம்போல் நாம் நோக்கலாமா?

விரிவுரை

இப்போது ஆயத்தின் விரிவுரையைக் கவனியுங்கள், படைத்தல் மூன்றுவகையென்றும் அதிலொன்றையே இஸ்லாம் ஏற்றுள்ளது என்றும் இந்த நூலின் முதலாவது பாகத்தில் ஓரளவு விளக்கியுள்ளேன். இறைவன் ஒரு பொருளை உருவாக்க நாடினால் ஆகு (குன்) என்பதுதான் தாமதம். அது உடனே ஆகிவிடும் என்பதை நாம் அறிந்துள்ளோம். குன் என்பதைக் கொண்டு முன்னிலையிலுள்ள பொருளை நோக்கியே கூறினான் என்றால் அவனுடன் முன்னிலையில் உள்ள வேற்றுப் பொருளும் உண்டு என்றாகும். அவனையன்றி ஒன்றுமில்லையென்பது தௌஹீது என்றால் அவனுடன் இன்னும் பல உண்டு என்ற இணைகற்பித்தல் ஏற்படும். மேலும் அவன் தன்னைத் தனக்கு முற்படுத்திக் கூறினான் என்றால் காலத்தினாலும் இடத்தினாலும் பகுக்கப்பட்டவனென்றாவான். இது சிருட்டிக்குப் பொருந்துமேயன்றி இறைவனுக்குப் பொருந்தாது. ஆகவே, எதை நோக்கிக் கூறியிருப்பான்? எதைக்கொண்டு படைத்திருப்பான்?

குர்ஆன்: 41:9
நீர் கூறும்: ''பூமியை இரண்டே நாட்களில் படைத்தவனை நீங்கள் நிராகரித்துவிட்டு அவனுக்கு இணையாக்குகிறீர்களா? அவன் தான் உலகங்களையும் படைத்துப் போஷிப்பவன்.''

குர்ஆன்: 41:12
பின்னர் அவன் அவைகளை இரண்டு நாட்களில் ஏழு வானங்களாகத் திட்டமிட்டு ஒவ்வொரு வானத்துக்கும் அதன் (அதன்) கடமையை அறிவித்தான்.

ஹதீஸ்களின்படியும் குர்ஆனின்படியும் மனிதனுடைய 1,000ம் வருடம் அல்லாஹ்விடத்தில் ஒருநாள் என்று கூறப்படுகிறது. அப்படியானால் பூமியும் வானமும் மனிதக் கணக்கின்படி 4,000ம் வருடங்களில் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இதன்படி குன் என்ற சொல் சொல்லிமுடிவதற்குள்ளாக ஆகிவிடும் என்பதன் உண்மை என்ன? என்பதைச் சிந்தனை செய்யுங்கள்.

குர்ஆன்: 25:59

அவன்தான் வானங்களையும், பூமியையும், இவைகளுக்கடையிலுள்ளவற்றையும் ஆறு நாட்களில் சிருட்டித்தான்; பின்னர் அவன் அர்ஷின் மீது தன் ஆட்சியை நிலைநிறுத்தினான். அவன்தான் றஹ்மான்; இதைப்பற்றித் தெரிந்தோரைக் கேட்டறிந்து கொள்ளும்.

(இவ்வாயத்தில் உள்ள நுட்பங்களை ஆராய்ந்து தெளிவு பெறுங்கள்.)

சிருட்டியைச் சிருட்டி ஆட்சிபண்ணுகிறதென்று கொண்டாலும் அந்த ஆட்சி அல்லாஹ்வுடையதாகவே இருக்கவேண்டும். இல்லையானால் குர்ஆன் தரும் விபரம் சரியாக முடியாது.

இறைவனுடைய வசனம் ஒலி, அட்சரம், பாஷை இல்லாதது. இறைவனையன்றி ஒன்றுமில்லாதிருக்கையில் இவை அவசியமல்ல. சிருட்டி இதற்கு முரணானது. சிருட்டிக்கு ஒரு விஷயம் விளக்கப்பட வேண்டுமானால் ஒலி, அட்சரம், பாஷை அவசியம். இந்த அடிப்படையில்தான் குன்(ஆகு) என்று கூறினான் என்று கூறப்பட்டது. குர்ஆனும் இதோபோல்தான். இறைவசனமான குர்ஆனுக்கு ஒலி, அட்சரம், பாஷை கிடையாது. அதை மனிதர் விளங்க வேண்டுமென்பதற்காக றசூல்(ஸல்) அவர்களுக்கு அரபு பாஷையிலும் முன் நபிமார்களுக்கு அவரவர் பாஷையிலும் வேதம் தரப்பட்டிருக்கிறது. இறைவனின் அறபு வேறு.

அர்ஷிலேயே வானம், பூமி இருக்கிறதென்று நான் முன்பு காட்டியதை மறந்துவிடாதீர்கள். அர்ஷ் என்பது இறைவனுடைய கல்பாய் இருக்கிறது. எமது கல்பைப்போல் அல்ல நான் இங்கே கல்பு என்று கூறுவது மனம் என்ற சொல்லால் குறிப்பிடப்படுவது எதுவோ அதைத்தான். இந்த இறை கல்பு என்பது அவனுடைய

விஜ்தான் என்ற அறிவின் ஓர் நிலைமையாய் இருக்கிறது. இந்த கல்பு என்ற, இறைவனின் அறிவு என்ற அர்ஷில்தான் சகல ஆலங்களும் இருக்கின்றன. இது அவனில் என்றுமுள்ளதே. ஆகவே அவன் அர்ஷில் தன் ஆட்சியை நிலைநாட்டினான் என்னும் ஆயத்து, அர்ஷும் அதிலுள்ள சர்வ ஆலங்களும் அவனுடைய கல்பில் இருந்தவை இருப்பவை இருக்கப்போகிறவை என்பதையே உறுதிப்படுத்துகிறது.

நான் முன்பு கூறியவிவரப்படி அர்ஷில் ஆட்சியை நிலை நாட்டினான் என்றால் அவனுடைய ஆட்சியேயன்றி எங்குமே வேறு ஆட்சியும் ஆட்சியாளரும் இருக்க முடியாது. அப்படி உண்டு என்றால் இறைவன் கூறுவது பொய்யாய் முடியும். ஆகவே குர்ஆன் உண்மைக் கூற்றைத் தருகிறது என்பது உண்மையானால் அக் குர்ஆனை நாம் விசுவாசிக்கிறோம். (ஈமான் கொண்டிருக்கிறோம்) என்றால் சர்வ ஆலங்களும் அவற்றிலுள்ள ஆட்சியும் ஆட்சி பண்ணுவோரும் மறைந்த பொருளும் மறையாத பொருளும் அவனாகவே இருக்கின்றன என்பதை நாம் ஈமான் கொண்டேயாகவேண்டும். இல்லையானால் நாம் குர்ஆனை ஒப்புக்கொண்டவர்களேயல்ல. சர்வஆலங்களும் அர்ஷு என்ற ஏதோ ஒன்றில் அமைந்திலாவிட்டால் அர்ஷில் ஆட்சியை நிலை நாட்டினான் என்பது வெறும் பொய்யாகவே இருக்கும். ஆகவே ஏழு வானங்களின் மேல் அர்ஷு இருக்கிறது என்பது தவறாகும். இப்படி ஏழு வானங்களின் மேல்தான் அர்ஷு இருக்கிறதென்பதற்கு வேறு அந்தரங்கமான கருத்துகள் இருக்கின்றன. அவை இங்கு அவசியமில்லை. வானங்கள் கூட அர்ஷில்தான் இருக்கின்றன. அர்ஷு என்பது சுட்டிக்காட்டிச் சொல்லில் விளக்க முடியாத ஒன்றாகும்.

நாம் வானம் என்று கூறுகிறது எதுவோ அது அவனுடைய நப்ஸின் ஏழு படித்தரங்களாய் இருக்கின்றன. எம் கண்ணுக்குப் புலனாவது வெறும் ஆகாயமேயன்றி பொருளல்ல. பொருள் என்பதும் அவனுடைய கல்பின் மர்த்தபாக்களே. ஒரே நாளில் ஒரே முறையில் இது அறிவில் அமையாது. மனிதன் சிருட்டியான

வானத்தை மற்றும் பொருட்களைப் பார்ப்பதுபோல் பொருளாகவே காண்கிறான். இது சிருட்டியிடத்தில் உண்மைதான். ஆனால் இதன் உண்மை வேறாய் இருக்கிறது. பனாபித் தெளஹீதை எத்திக்கொள்ளாத மனிதன் இதை அறியவும் மாட்டான் நம்பவும் மாட்டான், வானங்கள் ஒவ்வொன்றும் படிப்படியாய் அமைந்திருப்பது என்பது மனிதனின் புலனறிவைப் பொறுத்ததாயும் ஹக்கு அதற்கப்பாற்பட்டதாயும் இருக்கிறது.

குர்ஆன்: 67:16,17

வானத்தில் இருப்பவன் உங்களைப் பூமியில் சொருகிவிட மாட்டான் என்று நீங்கள் அச்சமற்றிருக்கிறீர்களா? அந்நேரத்தில் பூமி அதிர்ந்து நடுநடுங்கும். அல்லது வானத்தில் இருப்பவன் உங்கள் மீது கல்மாரியை வருஷிக்க மாட்டானென்று நீங்கள் அச்சமற்றிருக்கிறீர் களா? அவ்வாறாயின், எச்சரிக்கை எவ்வாறிருக்கும் என்பதை நிச்சயமாக நீங்கள் அறிந்துகொள்வீர்கள்.

இவ்வாயத்துக்களின்படி வானத்தில்தான் இறைவன் இருகிறான் என்பதுபோல் ஒரு சந்தேகம் பிறக்கிறது. விஷயம் அப்படியல்ல. அர்ஷ் என்பது வேறு, வானம் என்பது வேறு. இவையாவும் சிருட்டிகள்தான் உண்மையை(குர்ஆனை) ஏற்காத, சிந்தித்து தெளிவு பெறாத மனிதன் இறைவன் வானத்திலிருப்பதாயும் நம் விஷயங்களை அவன் அறியாதவனாய் இருக்கிறானென்பதாயும் நம்பியிருக்கிறான். இந்த நம்பிக்கை பிழையென்பதை அவர்களறிவுக்கேற்றபடி கிண்டலாக விளக்கம் கொடுக்கிறான் இறைவன். இதைவிட இறைவன் வானத்தில் மட்டுமே இருக்கிறான் என்பது பொருளல்ல.

குர்ஆன்: 43:84

அவனே வானத்திலும் இலாஹுவாய்ப், பூமியிலும் இலாஹுவாய் இருக்கிறான்.

குர்ஆன்: 2:186

நிச்சயமாக நான் சமீபத்திலிருக்கிறேன், என்னை அழைப்பவனுடைய அழைப்புக்கு நான் மறுமொழி கூறுவேன்.

இந்த ஆயத்து கூறுவது உண்மையானால் நம்மில் எவராவது இறைவனின் பேச்சை விடையை நேரிலோ திரைமறைவிலோ இருந்து கேட்டதுண்டா? இல்லையென்றால் குர்ஆன் கூறுவது பொய்தானா? முஸ்ஹபு என்ற புஸ்தகத்தைத் திரையாகக் கொண்டே இறைவன் நம்முடன் இன்னும் உரையாடுகிறான் என்பதை நம்மில் எத்தனைபேர் அறிந்திருக்கிறோம்? சர்வ சிருட்டிகளையும் திரையாய்க் கொண்டே அவன் நாட்டம் (இறாதா) நடைபெறுகிறதென்பதைத்தானும் நம்மில் எத்தனைபேர் அறிந்திருக்கிறோம்? நாம் இதை அறிந்துகொள்ளாத காரணம்தான் என்ன?

இவ்வித பேச்சுகள் இஸ்லாத்தில் இல்லையென்றும் இது இந்துக்களின் அத்வைதம் என்றும் ஒருசில குருட்டுச் ஷைத்தான்கள் கூறும்போது பாமரமக்களும் பகுத்தறிவு தொழிற்படாத பட்டதாகளும் ஏமாந்து விடுகிறார்கள். குர்ஆனின் வசனங்களில் சிலவற்றை இங்கு பாருங்கள்

குர்ஆன்: 9:10
திடனாக அல்லாஹ் நம்மோடிருக்கிறான்.

குர்ஆன்: 5:4
நீங்கள் எங்கிருந்தாலும் அவன் உங்களோடு இருக்கிறான்.

குர்ஆன்: 50:16
நாம் இன்ஸானிடத்தில் அவனது பிராண நரம்பைவிடச் சமீபமாய் இருக்கிறோம்.

இவைபோல் குர்ஆனில் இடம்பெறுகிற ஆயத்துகளையும் ஹதீஸுகளையும் திரட்டிப்பாருங்கள். குர்ஆனின் ஓர் வசனமும் ஹதீஸுகளிலுள்ள எந்த ஓர் வசனமும் அல்லாஹ்வுடன் ஜோடி உண்டு என்பதற்கு ஆதாரமாகாது. குர்ஆன் ஹதீஸுகளில் எதை நீங்கள் எடுப்பினும் அது சுத்தமான தௌஹீது என்ற ஒருமைப்படுத்தலையே உறுதிப்படுத்தும். இதைப் பிழையாய்க் காண்பது அறிவீனம் தான். ஆகவே இறைவன் எங்கேயோ தொலைவில் இருக்கிறான் என்று நம்பிய மக்கள் அவனுடைய

ஞாபகத்தை மனதில் பதிக்க (நெருங்கிச்சேர)வே சிலையை ஏற்படுத்தினார்கள். அவர்களில் எவரும் சிலைகளை அல்லாஹ்வாக ஏற்கவில்லை. றசூல் (ஸல்) அவர்கள் அல்லாஹ் வையன்றி இலாஹ இல்லையென்பதை ஆணித்தரமாய் வற்புறுத்தியும் பெரும்பாலார் இதை ஏற்றுக் கொள்வதாய் இல்லை. சுமார் 11 வருடங்கள் 9 மாதங்களின் பிறகுதான் (ஹிர்புல்பராயிலி) என்ற பக்திமார்க்கத்தை இறை ஏவலோடு ஏற்படுத்தினார்கள். (ஹிர்புன்நவாபிலி) என்ற முக்திமார்க்கத்தை நிலைப்படுத்துவதே இறைநாட்டம். ஆகையால்தான் தியானித்துக் கொண்டிருக்கும் பொருட்டுத் தொழுகையைக் கடைப்பிடியும் என்று இறைவன் குர்ஆன் 20:14ம் ஆயத்தில் கூறுகிறான்.

இதைவிட வரட்டு ஞானிகளின் வாதங்கள் ஆதாரமற்றவையாகும். குர்ஆனிலுள்ள 57:3ம் ஆயத்து குர்ஆனில் இல்லையெனறும் அது இந்துக்களின் எஹது, நஸாறாக்களின் இடைச்செருகல் என்றும் பகிரங்கமாகவே கூறி மக்களை ஏமாற்றுகிற தஜ்ஜால்கள் இஸ்லாத்துக்குயிரூட்டுகிறோம் என்பது வெறும் பொய்யாகும். இவ்வகையான மூடக் கூட்டம் மனிதர்களின் ஈமானைப் புரட்டி அபூஜஹீலின் கொள்கையை நிலைப்படுத்தவே அரும்முயற்சி செய்திருக்கிறார்களென்பதை ஆராய்ந்து நம்புங்கள். இவர்கள் அல்லாஹ் றசூலின் சாபத்தில் சிக்குண்டு முத்திரையிடப்பட்டவர்கள் என்பதைக் கண்டறியுங்கள்.

குர்ஆன்: 4:80
எவன் ஒருவன் றசூலுக்கு வழிப்பட்டானோ. அவன் திடனாக அல்லாஹ்வுக்கே வழிப்பட்டான்.

குர்ஆன்: 8:17
அவர்களை நீங்கள் வெட்டவில்லை என்கினும் அல்லாஹ் அவர்களை வெட்டினான். நீர் மண்ணை எறிந்தபோது அதை நீர் எறியவில்லை, என்கினும் அல்லாஹ்தான் எறிந்தான்.

குர்ஆன்: 2:245
அழகான கடனாக அல்லாஹ்வுக்குக் கடன் கொடுப்பீர்களாகில்.

குர்ஆன்: 48:10

எவர்கள் உம்முடைய கையைப்பிடித்து வாக்குறுதி செய்கிறார்களோ அவர்கள் அல்லாஹ்விடமே பைஅத் (வாக்குறுதி) செய்கிறார்கள் அவர்களுடைய கைக்குமேல் அல்லாஹ்வுடையகைதான் இருக்கிறது.

குர்ஆன்: 67:20

உங்களுக்கு உதவி செய்யக்கூடிய இந்தப் படையினர் றஹ்மானையன்றி வேறுயார்? இந்தக் காபீர்கள் வெறும் மாய்கையிலன்றி வேறில்லை.

இவைபோல் குர்ஆனில் இன்னும்பல ஆயத்துகள் இடம் பெறுகின்றன. இவ்விதமான ஆயத்துகள் தௌஹீதை உறுதிப்படுததும் கலிமாவுக்குரிய வியாக்கியான விளக்கங்களாய் இருக்கின்றன. கலிமாவுக்கு வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத்தவிர என்று பொருள் கொண்டால் நாம் காட்டிய இந்த வேத வசனங்கள் யாவும் பொய்யென்று கூற நேரிடும். குர்ஆன், இறைவேதம் அதில் கற்பனையோ பொய்யோ கிடைக்கவே கிடையாது.

இவ்விதமான ஆயத்துகளுக்கு வியாக்கியானம் செய்த ஒருசிலர் இலக்கிய வழக்கை மட்டும் அடிப்படையாய்க் கொண்டு விளக்கியிருக்கிறார்கள். தப்பர்த்தம் செய்திருக்கிறார்கள். உண்மை அவர்களுக்குத் தெரிந்திருக்கலாம் அல்லது உண்மையைக் கூறினால் மக்கள் வழிதவறிவிடுவார்களென்று நம்பியிருக்கலாம். இது அறியாமையும் மருட்சியுமாகும். மனிதர்களுடைய அறிவுக்கேற்றபடி பேசும்படி அன்பியாக்களாகிய எங்களுக்கு இறைவன் அறிவித்துள்ளான் என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறியிருப்பதால் இவ்வாயத்துக்களின் விபரங்களை மனிதர் விளங்கமுடியாதிருப்பதால் இவற்றை மக்களுக்கு விளக்கக்கூடாது என்று கூறுவோரும் நம்மிடையே உண்டு. ஆதாரங்களோடு நிரூபிக்கக்கூடிய சுத்தமான தௌஹீது எல்லோரிடமும் விளக்கப்பட வேண்டியதே. ஆனால் ஆதாரம் தெளிவாய்த் தரப்பட்ட ஞான விளக்கங்கள் மறைக்கப்பட வேண்டியவையல்ல. ஏன்? அது பூரணமான 5 ஆதாரங்களோடும் நிலைப்பட்டது. அதை எங்கேயும்

எப்போதும் எவரிடமும் வெளிப்படுத்தலாம். ஆகவே நாம் தந்த இந்த ஆயத்துக்களில் தப்பர்த்தம் செய்துள்ளார்களா என்பதை நாம் கண்டறிவோம்.

இவ்வாயத்துக்களிலும் இவைபோன்ற ஆயத்துக்களிலும் இவற்றையொத்த ஹதீஸ்களிலும் அல்லாஹ்வே செய்தான் என்பது ஹகீகத்தை நோக்குவதாலும் எல்லாவினை(செயல்)களின் வினை முதலும் அல்லாஹ்வாய் இருப்பதாலும் இவைகளை அடியான் செய்தான் என்று கூறுவது உபசார வழக்காகும் என்றுதான் ஏறக்குறைய எல்லாத் தப்ஸீர்களும் வியாக்கியானம் தருகின்றன. இவற்றில் சில தப்ஸீர்கள் குர்ஆனில் இடம்பெறும் சில வசனங்கள் அடியானைக் கனப்படுத்துவதற்காகவே வலிந்துரைகொண்டு, அல்லாஹ் செய்தான் செய்கிறான் என்று கூறப்பட்டுள்ளது என்றும் இவ்வாயத்துக்களும் அவ்வினத்தைச் சேர்ந்தவையே என்றும் விபரம் தருகின்றன, இவ்விதமான வியாக்கியானங்கள் தௌஹீதை முற்றாய் விளங்கித் தெளிவுபெறாத மருட்சியினால் ஏற்பட்டவைதான். ஏனென்றால் இவர்களுடைய கூற்று உஸூலுடைய "காஇதா"(சட்டங்களுக்கு) முரணாயும் அகராதிகளின் கருத்துக்கு முரணாயும் இருக்கிறது. அகராதியை குர்ஆன் மீறினாலும் நாம் அதில் கவலைப்படவேண்டியதில்லை. குர்ஆன் சில கட்டங்களில் அகராதியை மீறும் என்பதை நாம் அறிவோம். ஆனால் உஸூலுடைய காஇதாவுக்கும் பிக்ஹு வுக்கும் மாறாய் இருப்பதை நாம் ஆராய்ந்துதான் தெளிவுபெற வேண்டும்.

உஸூலுடைய காஇதாவின்படி ஒருசெயலைச் செய்தவன் எவனோ அவனே அச்செயலின் வினைமுதலாகும். செயலைச் செய்யும் விருப்பின்றி ஓர் செயலில் ஒருவன் ஈடுபடுவானேயானால் அவன் உபசார வழக்கினால் வினைமுதலாயிருப்பினும் அவன் உண்மையான வினைமுதலேயல்ல. இதை இன்றுள்ள உலமாக்கள் யாவரும் அறிவார்கள். இந்த காஇதாவை ஆதாரமாக வைத்துக் கொண்டு பூர்வீக இமாம்கள் ஹனபி, ஸாபி போன்றோர் அனேகமான பிக்ஹுடைய மஸ்அலாக்களைப் பிரித்து விளக்கம் தந்துள்ளார்கள். இவர்கள் (இமாம்கள்) சுத்தமான தௌஹீதின் அடிப்படையில் இருந்து கொண்டுதான் சட்டங்களை வகுத்துள்ளார்கள் என்பது

புலனாகிறது. இமாம்களுடைய சட்ட விளக்கங்கள் சரியானவையே யாயினும் அவைதான் ஞானவிளக்கம் என்பது கருத்தாகாது. அவர் களால் எமக்குத் தரப்பட்டது மார்க்கத்தின் வெளிப்படை மட்டும்தான்.

இந்த இமாம்களுடைய சட்டப்படி ஓர் உதாரணத்தை இங்கே பார்ப்போம். கொலை, களவு, விபச்சாரம் முதலிய குற்றங்களின் போது ஒருவன் தன்சுய இச்சையின்றிச் செய்து அல்லது செய்பவனுடன் கூடிச்செய்திருப்பானேயானால் அக்குற்றத்துக்குரிய தண்டனை அவனைவிட்டு நீங்கிவிடும். அதாவது தன் இச்சையின்றி பலாத்காரப்பட்டுச் செய்யப்படும் செயலுக்கு அச்செயலைச் செய்தவன் வினை முதலாகமாட்டான். இது நிச்சயமாகச் சரியான தீர்ப்பேதான். இதற்குக் குர்ஆன் ஹதீஸுகள் ஆதாரம் தருகின்றன. இந்த அடிப்படை யில் நோக்கினால் றசூல் (ஸல்) அவர்கள் செய்த செயல்கள் (சத்தியத்துக்காகக் கையை நீட்டியது) மண்ணையெறிந்தது யாவும் அல்லாஹ்வின் செயலேதான் என்று நிரூபணமாகிறது. எப்படி?

குர்ஆன் 6:162ஆம் ஆயத்தின்படி, என்னுடைய தொழுகை வணக்கங்களும் என் ஜீவியமும் என் மரணமும் அல்லாஹ்வுக்கே உரித்தானவையென்று கூறும்படி நபிக்கு ஏவப்பட்டிருப்பது தென்படுகறது. உரித்துடைய சொந்தக்காரன் எவனோ அவன்தானே அந்தச் செயல்களுக்கெல்லாம் வினைமுதலாயிருப்பான். ஆகையால் றசூலில் வெளியானது அல்லாஹ்வின் செயல்தான் என்பது உறுதியாகிறது.

மனிதன் செய்யும் செயல்கள் இறைவனின் கட்டளைக்காகவும் அதைமீறி மனோ இச்சைக்காகவும் செய்யப்படுபவையாகும். இது சுயநிர்ணய உரிமையோடு கையாளப்படுவது, இச்செயலைச் செய்தவன் எவனோ வினைமுதல் அவனேதான். ஆகையாற்றான் மனிதன் செய்த செயல்களுக்கமைவாய் அதாபையோ தவாபையோ ஆகிறாவில் பெறுகிறான். அச்செயலுக்கு உரிமையாளன் செய்தவன் மட்டும்தான். இதில் கூட்டுக்கிடையாது. எவருடைய பாவத்தையும்

மற்றெவரும் சுமக்கமுடியாது. றசூல் (ஸல்) அவர்களால் நிகழ்ந்த செயல்கள் இவ்வினமானதல்ல. அவர்கள் சுயநிர்ணய உரிமையற்ற பூரண அப்துவாய் இருப்பதால் அவர்களின் மூலம் வெளியான எச்செயலாயினும் அது அல்லாஹ்வின் செயலேதான். அது எமதறிவுக்குப் பிழையாய்த் தென்பட்டாலும் மனித அறிவோடுள்ள தவறு மறதியாய் இருப்பினும் சரி அது இறைசெயலே. அதிலுள்ள உட் கிருபையை விளங்குமாற்றல் எம்மிடமில்லாதிருப்பதால் அது எமக்குப் பிழையாய்த் தெரியலாம். ஆனால் இறைநாட்டமும் அது தான்.

இவ்விஷயத்தில் மனிதர்களிடத்தில் மிகப்பெரிய ஓரு தர்க்கம் நீண்டகாலமாய் இருந்து கொண்டிருக்கிறது. இதை நாம் தெளிவாய் விளங்கிக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. ஓரு சிறு நுட்பம் தருகிறேன்.

மனிதர்களாகிய நாம் ஒவ்வொரு நாளும் பதினேழுறக்கா அத்துகள் பர்லுத் தொழுகையாகத் தொழுகிறோம். இந்த ஒவ்வொரு நாளிலும் பர்லுத் தொழுகையின் போது அல்ஹம்து ஸுறாவை ஓதிப்பிரார்த்திக்கிறோம். இப்பிரார்த்தனையின் போது சில விஷயங்களைக் கேட்கிறோம். அவற்றில் சில.....

குர்ஆன்: 1:5,6,7
எங்களை நேரான வழியில் நடாத்துவாயாக! எவர்களுக்கு நீ அருள் புரிந்தாயோ அவர்களுடைய வழியில்(நடாத்து). (அவ்வழி) கோபத்துக்குள்ளானவர்களுடையதும்அல்ல; வழிதவறியவர் களுடையதுமல்ல.

இவ்வசனங்களை அவதானித்தால் இந்தப் பிரார்த்தனையைப் புரிந்த மனிதன் நல்ல பாதைக்கும் தீய பாதைக்கும் இடையில் இருந்து கொண்டுதான் நல்ல பாதையை மட்டும் கேட்கிறார் என்பது தென்படுகிறது. இந்தப் பிரார்த்தனையைச் சொல்லித்தந்தும் அது இடம்பெறும் தொழுகையைச் செய்து காட்டியதும் எமது றசூல் (ஸல்) அவர்கள்தான். றசூல் (ஸல்) அவர்கள் மவுத்தாகும் வரையிலும் இதைச் செய்தே

வந்திருக்கிறார்கள். நாம் பாதை தெரியாமல் நடுவில் நின்றுகொண்டு பிரார்த்தனை செய்தோமென்றால் அதை ஒப்புக் கொள்ளலாம். நாம் அறியாதவர்கள். தவறுடையவர்கள். ஆனால் றசூல்(ஸல்) அவர்களும் இப்பிரார்த்தனையை ஏன் கேட்டார்கள்? அவர்கள் நேர் பாதையிலேயே மூழ்கி நேர் பாதைக்கே மனிதர்களை அழைத்துக் கொண்டிருந்தவர்களல்லவா?

குர்ஆன்: 43:43
(நபியே!) வஹிமூலம் உமக்கு அறிவிக்கப்பெற்றதைப் பலமாகப் பிடித்துக்கொள்ளும்; நிச்சயமாக நீர் நேரான பாதையில் இருக்கிறீர்.

குர்ஆன்: 36:4
(நீர்) நேரான வழியில் இருக்கிறீர்.

இவ்வாயத்துகளின்ப்படி றசூல் (ஸல்) அவர்கள் முற்றிலும் நேர்பாதையில் இருந்துகொண்டிருந்த போதும்தானே நேர்பாதையைத் தரும்படி கேட்டிருக்கிறார்கள். நான் இருக்கும் நேர்பாதையில் என்னை ஸ்திரமாக்கிவை என்று அவர்கள் கேட்கவில்லை.

குர்ஆன் தரும் விபரம் எம்மைச் சிந்திக்கத் தூண்டவில்லையா? அரிச்சுவடி மாணவனுக்கு ஆனா, ஆனா, ஆனா என்று வாயால் கூறிக்கொள்வதோடு ஆனாவை விரலாலும் மண்ணில் எழுதிக் காட்டுகிறார் ஆசிரியர். நோக்கம் ஒன்றுக்காகச் சொல் விளக்கமும், செயல் விளக்கமும் கொடுத்து மாணவனுக்குப் பயிற்சயளிக்கிறார் ஆசிரியர். ஆசிரியர் செய்த செயலில் இரு விஷியங்கள் இருக்கின்றன. அவருடைய அறிவு தன் வேலையைச் செய்வதற்கு உடல் என்ற மழ்ஹர் பயன்பட்டது. நாம் இந்த உடலையும் அவருடைய அறிவையும் (அல்லது உயிர் என்று கொள்க) சேர்த்தே ஆசிரியர் என்று கூறினோம். இந்த ஆசிரியர் தனக்காக ஆனாவை எழுதவில்லை. அவர் அதைப் பலவருடங்களின் முன்பே படித்துப் பண்டிதரானவர். ஆசிரியரின் அறிவு வெளியாக உடல் மழ்ஹறாய் இருந்தது போல நூர் என்ற இறையறிவு வெளியாகச் சர்வஆலங்களும் மழ்ஹறாய்

இருக்கிறது. ஆயினும் முஹம்மது என்ற மனிதரில் வெளியான நூர் அல்லாஹ் நாடிய அளவு நிரப்பமானது. ஆகவே, அந்த அறிவு றிஸாலத்தென்ற நூறைச் சேர்ந்தது. இது இறை அறிவுதான். இது இறைவன் நாடிய அளவு முழுமையாய் வெளியானது. ஆகவே, றசூலின் உடல் நூர் வெளியாகும் ஸ்தானமாயும் அறிவு அல்லாஹ்வுடையதாயும் இருக்கிறது. இந்த வெளியாகும் ஸ்தானமான மழ்ஹறென்ற உடல்கூட அந்த நூரில் உள்ளதுதான். ஆகவே இரண்டென்பது அங்கில்லை. இந்தக் கருத்தைக்கொண்டு நோக்கினால் றசூல் (ஸல்) என்று எவரை நாம் குறிப்பிடுகிறோமோ அவர் அல்லாஹ்தானென்பது உண்மையானாலும்கூட அப்படிக் கூறுவது சட்ட அடிப்படையில் கூடாது. ஏன்? றசூல் அல்லாஹ்தான் என்றால் மற்றெல்லாம் அல்லாஹ் அல்ல என்ற குபிர் ஏற்படும். அதாவது அகண்ட பொருளான இறைவனைக் கண்ட பொருளான சிருட்டியில் கட்டுப்படுத்திய குற்றமுண்டாகும். மேலும் சிருட்டிக்கு அல்லாஹ் என்ற பெயரைச் சூட்டிய குற்றமும் உண்டாகும். இதைப் போலவே றசூல் அல்லாஹ் அல்ல என்று கொண்டால் ஷிர்க்கில் தள்ளிவிடும். ஏன்? அல்லாஹ்வுடன் அவனல்லாததுமுண்டு என்ற குற்றமுண்டாகும். ஆகவே றசூல் (ஸல்) அவர்கள் ஓர் பூரண அப்து என்று கூறுவதே சரியாகும்.

அல்லாஹ்தான் றசூல் என்றால் அல்லாஹ் அவதாரம் எடுத்தான் என்று விளங்குவது அறியாமை. இஸ்லாத்தில் அவதார மில்லை.

குர்ஆன்: 5:72

''நிச்சயமாக மர்யமுடைய மகன் மஸீஹை அல்லாஹ்தான்'' என்று கூறியவர்களும் காபீராகி விட்டார்கள்.

இவ்வாயத்தின் மூலம் எந்த ஓரு சிருட்டியையும் அல்லாஹ் என்ற நாமத்தைக் கொண்டழைப்பது குபிராகும். ஏகவியாபகமான ஒன்றைக் கண்டபொருளாய்க் கட்டுப்படுத்துவதே குபிருக்குரிய காரணமாயிருக்கிறது.

எமது திருக்குர்ஆன் தீர்ப்பு 1ஆம் பாகத்தில் இதை ஓரளவு விளக்கியுள்ளேன். றஸூல்(ஸல்) அவர்கள் ஐந்து மர்த்தபாக்களைப்

பெற்றிருந்தார்களென்றும் அவை ஒன்றையொன்று தடுக்காதென்றும் கூறியிருந்தேன். இதை நீங்கள் நுட்பமாய் விளங்கியிருந்தால் மேலதிக ஞானத்தைப் பெற்றிருக்க முடியும். இப்போது இங்கே தரப்படுகிற ஆயத்தை நோக்குங்கள்.

குர்ஆன்: 11:56

நிச்சயமாக நான், என்னுடைய காரியங்கள் யாவற்றையும் என்னையும் உங்களையும் படைத்துப் பாதுகாப்போனாகிய அல்லாஹ்விடம் ஒப்படைத்து விட்டேன்; ஒவ்வோர் ஜீவராசியின் முன்குடுமியையும் அவனே பிடித்துக்கொண்டிருக்கிறான்; நிச்சயமாக என் இறைவன் நேரான பாதையில் இருக்கிறான்.

இவ்வாயத்திலும் இதற்கு முன்தரப்பட்டவற்றிலும் நேரான பாதை என்பதைக் குறிப்பிடப் பாவிக்கப்பட்ட சொல் "ஸிறாத்" என்ற சொல்தான். அல்லாஹ்வுக்கும் ஸிறாத் அவசியமா? றசூல் (ஸல்) இருந்துகொண்டிருந்த ஸிறாத் எது? இந்த உண்மையை நாம் கண்டறிவதானால் ஸிறாத்தையும் அல்லாஹ் றசூலையும் நாம் தெளிவாய் ஆராய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இவவாயத்தில் என் காரியங்களை ஒப்படைத்து விட்டேன் என்பதை விளக்க தவக்கல் என்ற சொல் பாவிக்கப்படுகிறது. தவக்கல் என்பது மூன்று வகையாகும். 1ஆவது பாமர மனிதனுடையது. அல்லாஹ்வை நம்புவதும் கடமையைச் செய்வதும். 2ஆவது தவக்கல் "தஸ்னீம்" என்று கூறப்படும். இது கவாஸுகளை நோக்கியது. முந்தியதை விட உயர்ந்தது. 3ஆவது தவக்கலை தப்வீஸ் என்று கூறப்படும். இது மிக உயர்ந்த படித்தரம். அன்பியாக்கள் அவ்லியாக்களுக்குரியது. அதாவது இந்த நிலையில் இன்ஸானியத்து முற்றாய் அழிந்துவிடும். இதைப் பனாபித் தௌஹீது என்றும் கூறப்படுவதுண்டு. இப்றாஹீம் (அலை) நெருப்புக் குன்றத்தில் வீசப்பட்ட போது இருந்த நிலைமை இதுதான். இந்த நிலையில் இருக்கையில் இயற்கை நியதிகள் கூட மாற்றமடையலாம். கறாமத் முஹ்ஜிஸாத் இவ்வகையைச் சேர்ந்ததே. இப்போது நோட்டமிடுங்கள் றசூலின் தவக்கல் இந்த 3 படித்தரங்களையும் ஒன்றாகவே பெற்றிருந்தது.

ஆகவே, ஸலாத்தின் போதும் மற்றும் காரியங்களின் போதும் றசூல்(ஸல்) அவர்கள் இந்த 3 மர்த்தபாக்களும் ஒன்றாயுள்ள நிலையில்தான் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் மனிதரைப்போல் உண்டு, குடித்து இன்பதுன்பங்களை அனுபவித்தவர்கள். அதே வேளை அவர்களிருதயத்தில் குர்ஆனும் இறக்கப்பட்டிருக்கிறது. முஹ்ஜிஸாத்துக்களும் நடைபெற்றிருக்கின்றன. இந்த நிலை எல்லோருக்கும் கிடைக்கவில்லை. ஆகையால்தான் அவர்களைக் காமீல் என்கிறோம். விவரம் தராமல் குறுகலாய்க் கூறினால் அல்லாஹ்வின் நாட்டம் நிறைவேற மழ்ஹறாய் அப்துவாய் றசூல் (ஸல்) அவர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்கள் அல்லாஹ்வை விட்டும் வேறல்ல என்றால் சிருட்டிகள் யாவும் அல்லாஹ்வின் வேறல்ல என்பதில் ஆட்சேபனை இல்லை. ஏனென்றால் றசூலாக எமக்குத் தென்பட்டதும் ஒரு சிருட்டிதானே. ஆகவே றசூல் (ஸல்) அவர்கள் சத்தப்பிரமாணத்தினால் அல்லாஹ்வுடைய றசூல் அல்லாஹ்வைவிட்டும் வேறல்ல என்றும் கருத்துப்பிரமாணத்தினால் றிஸாலத்தைப் பெற்றிருந்த மனிதர் சிருட்டியை விட்டும் வேறல்ல என்றும் தென்படுகிறது. ஆகவே றசூல்(ஸல்) அவர்களால் எறியப்பட்ட மண் அல்லாஹ்வினால் எறியப்பட்டதுதான். அவர்களுடைய நாவால் வெளியான (ஒரு நிலையிலுள்ள) வசனங்கள் அல்லாஹ்வினால் பேசப்பட்டவைதான். இதை மறுத்துச் சிருட்டியைக் கனப்படுத்தவே அவ்வித ஆயத்துகள் தரப்பட்டன என்று கூறுவதும் வலிந்துரை கொள்ளுவதும் தவறாகும்.

முஹ்கமுவிலுள்ள வசனங்களை வலிந்துரைகொள்ள அனுமதி இல்லை. முதஸாபிஹாத்தில் கை, முகம் போன்ற சொற்கள் இடம்பெற்றால் நமது அறிவுக்கேற்ற பொருள் கொள்வதில் தவறில்லை.

இங்கே பாமர மக்களுக்கு ஒரு சந்தேகம் பிறக்கலாம். றசூல் (ஸல்) அவர்களும் மனிதர்களும் இறைவனை விட்டும் வேறல்ல என்றால் இறைவனை ஏன் தொழவேண்டும்? இதுதான் சந்தேகம். தொழுகை ஆனா எழுதிப்பழகுவதைப் போன்ற ஒரு

பயிற்சிதான். மனிதனையும் ஜின்னையும் இறைவனுடைய (செயல்) இபாதத் வெளியாகத்தான் இறைவன் படைத்துள்ளான் என்பதை இந்த நூலின் முதலாம் பாகத்தில் விளக்கியுள்ளேன். இந்த இபாதத் என்ற சொல்லை ஆரம்பத்திலுள்ள புரட்டல்வாதிகள் வணக்கமென்றும் தொழுகையென்றும் மொழிபெயர்ப்புச் செய்ததால்தான் எமக்கு இச்சந்தேகம் ஏற்படுகிறது. மனிதனைச் சுயநிர்ணய உரிமையற்ற (அனாநிய்யத் அழிந்த) பூரண அடிமையாக்கி வைப்பதுதான் இஸ்லாத்தின் உண்மையான அடிப்படையாகும். இதைச் சாதிப்பதற்குரிய அப்பியாசங்கள்தான் தொழுகை நோன்பு போன்றவை. நடைபழகும் குழந்தைக்குத் தள்ளுவண்டி கொடுப்பது போல மனிதன் பூரண ஈமானைப்பெறுவதற்குரிய முதலாவது பயிற்சிதான் தொழுகை என்பது.

குர்ஆன்: 3:51

நிச்சயமாக அல்லாஹ்தான் என் இறைவனும், உங்கள் இறைவனுமாவான்; ஆகவே அவனுக்கே நீங்கள் இபாதத்துச் செய்யுங்கள்.

குர்ஆன்: 36:61

நீங்கள் எனக்கே இபாத்தும் செய்யவேண்டும். இதுதான் நேரானவழி.

குர்ஆன்: 43:64

நிச்சயமாக அல்லாஹ்தான் என்னுடைய இறைவனும், உங்களுடைய இறைவனுமாவான். ஆதலால், அவனுக்கே நீங்கள் இபாதத்துச் செய்யுங்கள்.

(இது ஈஸா (அலை) அவர்கள் தம் சமூகத்தாருக்கு உபதேசித்ததாகும்.)

குர்ஆன்: 6:161

நிச்சயமாக என்னுடைய இறைவன் என்னை நேரான வழியில் செலுத்திவிட்டான் - (அது) மிக்க உறுதியான மார்க்கம் (தீன்) ஆகும்; (அன்றி) இப்றாஹீமுடைய நேரான மார்க்கமாகும். அவர் இணை ஏற்படுத்துவோரில் இருக்கவில்லையென்று கூறுவீராக.

நாம் மேலே காட்டிய இந்த ஆயத்துகளை நுட்பமாய் நோக்குங்கள். இவற்றில் நேரானபாதையென்பதற்குப் பாவிக்கப்பட்ட

சொல் ஸிறாத் என்பதே. இவற்றில் இபாதத் என்ற சொல்லுக்கு ஒருசில தப்ஸீர்கள்தவிர மிகப் பெரும்பாலானவை வணக்கம் என்றே மொழிபெயர்ப்புச் செய்துள்ளன. ஆகவே தொழுதுகொள்வது தான் நேர்பாதையென்ற முடிவுக்கே பெரும்பாலான மக்கள் பலாதகாரமாய்த் தள்ளப்பட்டுள்ளார்கள். தொழுகையென்பது சுயநிர்ணய உரிமையோடு செய்யப்படக்கூடிய ஓர் இபாதத்தாகும். இது மட்டுமே இபாதத்தென்று கூறுவது தவறு. அப்து என்ற அடிமையில் வெளிப்படும் செயல் எதுவோ அதன் பெயர்தான் இபாதத் என்பது. இது இருவகை. ஒன்று சுயநிர்ணய உரிமையோடு வெளியாவது. இதை இபாதத் என்று கூறினாலும் உண்மையில் இது இபாதத்தல்ல. மனிதன் இறைவனின் பொருத்தத்தை விரும்பி அல்லது சுவர்க்கத்தை விரும்பி அல்லது நரகைப் பயந்துதான் இந்த அமலைச் செய்கிறான். இந்த அமலின் வினைமுதல் செய்தவன்தான். ஆகவே இவன் இவனுடைய சுயநல விருப்புக்காகவே இந்த அமலைக் கையாண்டான். இது பூரணமான இபாதத் என்றாகாது. அப்படியானால் இபாதத் என்பது என்ன? அடிமையில் வெளியாகும் செயல் எதுவோ அதுதான் இபாதத் என்பது. அதன் சரியான விவரம் என்னவென்றால் அல்லாஹ்வுக்கு அடிமையாய் இருப்பவர் சுயநிர்ணய உரிமையற்ற நிலையில் இருக்கும்போது வெளியாகும் செயல்கள் எவையோ அவைதான் இபாதத் என்ற பெயரைப்பெறும். இந்த இபாதத் இன்ஸான் என்ற மழ்ஹரில் வெளியாகும் இறைசெயலேயன்றி சிருட்டியின் செயலல்ல. நான் சிரித்தால் என் கண்ணாடியிலுள்ள என் தோற்றமும் சிரிப்பதைப்போல கண்ணாடியிலுள்ள என் அப்துவுக்கு ஸுறத்துக்கு எவ்வித சுதந்திரமும் இல்லாதிருப்பதால் அதில் வெளியாகும் செயல் என் செயலேயன்றி அதன் செயலல்ல.

இதன் சாரம் என்னவென்றால் நான் அல்லாஹ்வைவிட்டும் வேறல்ல என்ற உணர்வு ஏற்படும்போது நான் என்றுணர்ந்த அனாநிய்யத் மாய்ந்துவிடுகிறது. ஆகவேதான் அங்கே வெளியாகும் செயல் றப்புடைய செயலாய் இபாதத்தாய் அமைகிறது. இந்த நிலைமையை ஒவ்வோர் மனிதனும் பெறும்போதுதான் அல்லாஹ்வுக்காக அவன் இபாதத்துச் செய்தவனாகிறான்.

நாம் தந்த 6:161ஆம் ஆயத்தில் இது இப்றாஹீம் உடைய மார்க்கம் என்றும் அவருடைய மார்க்கமே உறுதியானதென்றும் "ஸிறாத்" நேர்பாதையென்றும் கூறப்பட்டிருக்கிறது. இந்த இப்றாஹீம் (அலை) அவர்களுக்குரிய இலட்சணம் அவர் இணையேற்படுத்துவோரில் உள்ளவரல்ல என்று தெளிவு படுத்தப்பட்டுள்ளது. அப்படியானால் மனிதன் நேர்பாதையில் இருப்பதானால் அவன் இணை ஏற்படுத்தும் ஷிர்க்கிலிருந்து விடுபட்டு அதற்கு மாறான தௌஹீதை (கிலாபத்தை) ஏற்றுக் கொள்ள வேண்டியவனாவான். இல்லையானால் அவனில் வெளியாகும் செயல் அல்லாவுக்காகச் செய்யப்படும் இபாதத்தாகாமல் தன்விருப்பு வெறுப்புக்காகச் செய்யும் இபாதத்தாகவே அமையும். ஆகையால் கலிமாவை விளங்கித் தெளிவுபெறாமல் தௌஹீதை உணர்ந்துகொள்ளாமல் ஒருவன் இஸ்லாத்தின் கடமைகளில் ஈடுபட்டுக்கொண்டிருப்பினும் அவன் நேரானபாதையில், அவன் கேட்டுக்கொண்ட ஸிறாத்தில் இருக்கிறான் என்று கூறமுடியாது. ஸிறாத் என்பது கலிமாவினால் உணர்த்தப்படும் தௌஹீதில் நிலைப்படுவதே. ஆகையால்தான் இஸ்லாத்தின் ஆரம்பமாய்க் கலிமா தரப்பட்டிருக்கிறது. இதை விளங்கிக்கொள்ளாமல், அல்லாஹ்வையன்றி எதுவுமில்லையென்று காணாமல் செய்யப்படும் செயல் தனக்காகச் செய்யப்படும் செயலேயன்றி இறைவனுக்காக இறைவனால் வெளியாகும் செயலாகாது. ஆரம்ப காலத்திலேயே இபாதத் என்ற சொல்லுக்கு வணக்கம் என்று பொருள்விளக்கம் தரப்பட்டதால் ஏற்பட்ட மருட்சி, நாம் தொழுகையை எடுத்துக்கொண்டால் நேரான வழியிலேயே இருந்துகொண்டிருகிறோம் என்று எம்மை நம்பச் செய்துவிட்டது. ஆனால் தொழுயின்போது நேரானவழியைக் கேட்டுக்கொண்டிருந்தோம் என்பதையும் இறக்கும் வரையிலும் இதைச் சிந்திக்காமலே மறந்து விடுகிறோம் என்பதையும் நாம் உணர வேண்டும். விளக்கம் தெரியாத மனிதன் நபிமார்கள் யாவரும் வணக்கத்தைக் கற்பிக்கவே வந்தவர்கள் என்று நம்புகிறான். இது தவறு. எல்லா நபிமார்களுமே மனிதர்களை நேரான பாதையில் அழைத்துச் செல்வதற்காகவே வந்தார்கள்.

இந்த நேரான பாதையென்ற ஸிறாத் கலிமாவினால் உணர்த்தப்படும் தௌஹீதை ஏற்றுக்கொண்ட விசுவாசம் (ஈமான்) ஆக இருக்கிறது.

குர்ஆன்: 23:73
(நபியே!) நிச்சயமாக நீர் அவர்களை நேரானவழிக்கே அழைக்கிறீர்.

இவ்வாயத்தில் நேர்பாதை என்பதற்கு ஸிறாத் என்ற சொல்லே பாவிக்கப்படுகிறது. தொழுகையின்போது கேட்ட பிரார்த்தனையிலும் (அல்ஹம்துஸூறாவில்) நேரான பாதைக்கு ஸிறாத் என்ற தொழுகை நோன்பு போன்றவை மட்டுமே என்பது பொருளல்ல. நேர்பாதையென்பது ஈமானையே, இதை உறுதிப்படுத்தும் உபாயங்கள்தான் இபாதத்துக்கள். இதிலிருந்து நாம் புரியவேண்டியது என்ன?

நபிகள்மார் யாவரும் ஈமானை எத்திவைக்கவே அனுப்பப்பட்டவர்கள். எத்திவைக்கப்படவேண்டியது (ஈமான்) தௌஹீதுதான்.

இந்த 6:161இல் கூறப்பட்ட உறுதியான மார்க்கம்தான் தீனுல் இஸ்லாம் என்பது. இதில் முதற்கடமை கலிமாவைக் கொண்டே ஆரம்பமாகிறது. அல்லாஹ்வையன்றி இலாஹூ இல்லையென்றும் எல்லா இலாஹூவும் அவன் மழ்ஹறேயென்றும் அறிவது. இதுதான் இப்றாஹீம் (அலை) இணை ஏற்படுத்தாத உறுதியான மார்க்கத்தில் இருந்தார்கள் என்பதன் அர்த்தம். இப்படியில்லாமல் அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாதவையும் உண்டு என்ற நம்பிக்கையோடு மதக்கிரிகைகளில் ஈடுபாடுகொள்வது எம்மை நாம் ஏமாற்றிக்கொள்வதாகும். இது உறுதியான மார்க்கமாகாது. உள்ள வழிகள் இரண்டே இரண்டுதான்.

குர்ஆன்: 16:9
(மனிதர்களே!) உங்களுக்கு இருவழிகள் இருக்கின்றன. (ஒன்று) அல்லாஹ்விடம் போய்ச்சேரக்கூடிய நேரானவழி. மற்றும் கோணல் வழிகளும் உண்டு.

இவ்வாயத்தில் இரு நுட்பங்கள் தென்படுகின்றன. நேர்பாதை ஒன்று என்பதும் கோணலான பாதைகள் பல என்பதும் தெனபடுகிறது. வழிகள் இரண்டும் அல்லாஹ் விடம் போய்ச்சேரக் கூடியனவல்ல. ஏனென்றால் அல்லாஹ் விடம் போய்ச்சேரக் கூடிய வழி ஒன்று என்ற ஒருமையில் தான் கூறப்பட்டிருக்கிறது. முரணான கோணல் வழிகள் பல என்று பன்மையில் கூறப்பட்டிருக்கிறது. ஆதலால் இறைவனைப் போய்ச்சேரக்கூடிய நேர்பாதை ஒன்றேயொன்றுதான். இப்பாதையில் இருப்பவரின் வரைவிலக்கணம் இந்த 6:161ம் இலக்க ஆயத்தின்படி அவர் இணையை (ஷிர்க்கை) ஏற்றுக் கொள்ளாதவராக, அல்லாஹ்வையன்றி ஒன்றும் இல்லை என்பதை முழுமனதாய் ஏற்றுக் கொண்டவராய் இருக்கவேண்டும். இவர்களின் ஆரம்ப முத்மஇன்னாவாகும். முடிவு கலிமாவாகும். இவர்கள் தான் இபாதத்துச் செய்பவர்கள். அல்லாஹ்வின் செயல் வெளியாகும் அப்துகள். இவர்கள் தான் அன்பியாக்களையும் வேதங்களையும் ஏற்றுக் கொண்டு செயல்படுகிற சுன்னத்வல்ஜமாஅத்துக் கூட்டத்தினர்.

இதற்கு மாறாக அல்லாஹ்வுடன் அவனல்லாதவையுமுண்டு என்ற ஈமானோடு செயல்படும் கூட்டம் 72 உண்டு. இவர்களின் செயல் முஸ்லீம்களுடையது போலிருப்பினும் அது நிச்சயமாகப் பிரயோசனம் தராது. ஏனென்றால் இந்தவகையினர் செல்லும் பாதைகள் அல்லாஹ்வை நோக்கியவையல்ல. அல்லாஹ்வின் சமூகத்திற்கு நேர்முரணான எதிர்த்திசையிலேயே மேலும் மேலும் செலுத்திக் கொண்டேயிருக்கும். அதாவது அல்லாஹ் வின் சன்னிதானம் தூரப்பட்டுக்கொண்டேயிருக்கும். ஆதலால் மனிதர்கள் ஒவ்வொருவரும் கலிமாவை விளங்கித் தெளிவுபெறக் கடமைப்பட்டவர்களாவார்.

முன்பு 57:3ஆம் இலக்க ஆயத்தை விளக்கம் தரும்போது ஆதி, அந்தம், தோற்றம், மறைவு சிருட்டியைப் பொறுத்ததென்றும் அல்லாஹ் இவ்விலட்சணங்களுக்கு அப்பாற்பட்ட தூயவன் என்றும் கூறினேன். மேலும் இவ்வாயத்துச் சிருட்டியும் சிருட்டிகர்த்தாவும்

நிலைமைகளினால் வெவ்வேறாய்த் தென்பட்டாலும் உள்ளது உஜூது(ஹக்கு) மட்டுமே என்றும் கூறினேன். அவ்வாயத்தில் பாவிக்கப்பட்ட "ஹு" என்றசொல் உயர்திணை அ.்றிணையென்ற பேதமின்றி யாவையும் ஒன்றுசேர்த்துச் சுட்டியதென்பதை நீங்களறவீர்கள், இதன்படி கலிமாவுக்கு ஆதாரமாய்த் தரப்பட்ட தலீல் (ஆதாரம்)களில் ஒன்றான இந்த 57:3ஆம் இலக்க ஆயத்து சிருட்டியையும் சிருட்டிகர்த்தாவையும் ஏகமாக்கி(இரண்டில்லாத ஒன்றாக்கி) விளக்கம் தருகிறதென்பதும் அல்லாஹ்வையன்றி இலாஹு இல்லையென்ற சுத்தசத்தியமான தௌஹீதை உறுதிப்படுத்திவிட்ட தென்பதும் தென்படுகிறது. இது சம்பந்தமாய் இன்னும் குர்ஆனை நோக்கி ஆராய்வோம்.

குர்ஆன்: 112:1,2,3,4
(நபியே!) நீர் கூறும்: அல்லாஹ் - அஹது(ஏகன்) அல்லாஹ் தேவையற்றவன். அவன் பெறவும் இல்லை; பெறப்படவும் இல்லை. அவனுக்கு ஒப்பாகவும் ஒன்றுமில்லை.

இந்த ஸூறா குர்ஆனின் மூன்றிலோர்பகுதி என்பதை நாம் அறிவோம். கலிமாவை உறுதிப்படுத்தும் முக்கிய தலீல் (ஆதாரம்)களில் இதுவும் ஒன்றே. அஹது என்ற சொல்லுக்கு ஒருவன் என்று பெரும்பான்மையான தப்ஸீர்கள் தரும் விவரம் பொருந்தாது. ஒன்று என்பது முன்பின் தொடர்பில்லாமல் நிலைப்படாது. பல இல்லையானால் ஒன்று என்பது எப்படிப் பொருள்படும்? அல்லாஹ்வுடன்தான் எதுவுமில்லையே. அதை ஒன்று என்று எப்படிக் கூறுவது? ஏகம், அல்லது இரண்டோ பலதோ இல்லாத ஒன்று என்றுதான் கூறவேண்டும். இரண்டில்லாத ஒன்று என்பதுகூடப் பாமர மக்களுக்காகத்தான். அஹது என்பதைக் குறியீடுகளால் கட்டுப்படுத்துவது தவறாகும்.

அஹது என்ற சொல்லுக்கு ஏகம் என்பதே (இணையில்லாதது) என்பதே அதன் சரியான அர்த்தமாகும். பாமரமக்கள் விளங்கவேண்டுமென்பதற்காக உண்மையை மறைக்கமுடியாது. இந்த அஹது என்ற சொல்லைக்கொண்டு நாம் விளங்கவேண்டியது என்னவென்றால் இணைதுணையற்றதாய்க் காலமாய்க்கட்டுப் பாடற்றதாய் வரைவிலக்கணத்தைக் கடந்தாய்

மனித அறிவில் அமையாததாய் அறியமுடியாமல் இருப்பது எதுவோ! அதுவே அஹது என்பது, இதை மனித அறிவு ஆராய்ந்து கண்டறிய முடியாதிருப்பதால் அஹதுவை ஆராயவேண்டாமென்று இஸ்லாம் தடையுத்தரவு போடுகிறது.

இந்த இணையில்லாத அஹது சமதாகவும் இருக்கிறது. ஸமது என்றால் தேவையற்றவன் என்பது பொருள். அவனையன்றியொன்றுமில்லாத பூரணனாயிருப்பவன் குறைவுடையவனாகான். தேவையுடையவன், குறையுடையவனாய்ப் ,பூரணமில்லாதவனாய் இருப்பான். இந்த அஹது, ஸமது என்ற நாமங்களால் சுட்டப்பட்ட அல்லாஹ் ஓர் நிலைமையில்தான் இந்த நாமங்களைப் பெற்றான். இது அல்லாஹ்வுடைய றுபூபியத் என்ற ஓர் மர்த்தபாவாகும். இது சிருட்டியில் அமையாது. ஆகவே சிருட்டி இதற்கு முரணாகத்தான் இருக்க வேண்டும். இல்லையானால் சிருட்டியென்றாகாது. இந்தச் சிருட்டிதான் பெறுவதும் பெறப்படுவதும் இந்த சிருட்டிக்கு இணை துணை ஒப்பு உவமை எல்லாமே உண்டு. நாம் முன்புகூறிய அஹது என்ற வசனத்தைக் கொண்டு அவனுக்கு ஒப்பு, உவமை போன்றது கிடையாதென்றும் குர்ஆன் கூறுகிறது. கலிமாவோ அவனையன்றி ஒன்றுமில்லையென்று வற்புறுத்துகிறது. அப்படியானால் பெறுவதும் பெறப்படுவதுமான சிருட்டி எது? சிருட்டி இருந்துகொண்டுதானே இருக்கிறது. ஒருபுறம் அழியலாம். இன்னொருபுறம் உருவாகலாம். ஆகவே அஹதாய் இருந்த அந்த உஜூதுதான் அதன் இன்னோர் மர்த்தபாவில் சிருட்டியென்ற பெயரைப் பெற்றிருக்கிறது. சிருட்டி பெறப்படுவதாலும் பெற்றெடுக்கப்படுவதாலும் அதை அஹதுடைய மர்த்தபாவுடன் சேர்க்க முடியாதே? என்றொரு சந்தேகம் தோன்றலாம். இது விளக்கப்பிசகாகும். ஒன்றாதல் என்பதற்கு இரு பொருள் வேண்டும். உள்ள ஒன்றே ஒரு நிலையில் றப்பாயும் இன்னொரு நிலையில் அப்தாயும் இருக்கிறது. உடலை அப்துவாகவும் உயிரை றப்புவாகவும் வைத்துக்கொண்டு நோக்குங்கள்.

உடல் என்ற அப்து நஜீஸ் உடையதாய்க் குற்றம் குறைவுடையதாய் இருப்பினும் உயிர் பரிசுத்தமானதாகவே தானிருக்கிறது. உடலின் குறைவு உயிரின் நிறைவைப் பாதிக்காது. அப்து, றப்பு என்ற இருநிலைமைகளும் ஒன்றுக்கொன்று

பேதமுள்ளது என்பதையும் அவ்வித பேதமிருப்பினும் ஏகனாய் இருப்பவன் அவனையன்றி இல்லையென்பதையும் இந்த ஸுறா உணர்த்துகிறதல்லவா? கலிமா நிரூபணமாகிறதல்லவா? இன்னும் நுண்விளக்கமுண்டு. நடுத்தர வகுப்பினருக்கு இது போதுமானது. இப்போது றசூலை நோக்குங்கள். மண்ணை எறிந்தது றசூல் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வை விட்டும் வேறல்ல என்று "இபாரத்துன்னஸ்"ஸினால் அறிகிறோம். றசூல் (ஸல்) அவர்கள் சிருட்டியை விட்டும் வேறல்ல என்று "தலாலத்துன்னஸ்"ஸினால் அறிகிறோம். இப்போது நோக்கிப் பாருங்கள், ஒரே உண்மைப்பொருள் அதன் சுயஇருப்பில் இருந்து மாறுபடாமல் இருந்துகொண்டே அதனிடம் இயல்பாயுள்ள அறிவினால் (வலிமையினால்) விதிக்கப்பட்ட சட்டதிட்டங்களுக்கமைவாய் அதனிடத்தே சர்வமுமாய்க் காட்சியளிக்கிறது.

குர்ஆன்: 17:70

ஆதமுடைய சந்ததியை நிச்சயமாக நாம் கண்ணியப்படுத்தினோம்; கரையில், கடலில் நாம்தான் அவர்களைச் சுமந்து செல்கிறோம், நல்ல ஆகாரங்களையும் நாமே அவர்களுக்கு அளிக்கிறோம், நாம் சிருட்டித்த அனேகவற்றின்மீது நாம் அவர்களை மிகமிக மேன்மை யாக்கி வைத்திருக்கிறோம்.

கடலில் கப்பலும், தரையில் குதிரை, கழுதை முதலாம் ஜீவராசிகள், வண்டி, கார் போன்ற வாகனங்களும் தானே எம்மைச் சுமந்து செல்கின்றன. ஆனால் இறைவன் நாமே சுமந்துசெல்கிறோம் என்று கூறுவதன் அர்த்தம் என்ன? நம்மைச் சுமந்த வாகனம் இறைவன்தான் என்றால் எல்லாச் சிருட்டிகளும் இறைவனேதான் என்றாகிறது. உயிருள்ளதோ இல்லாததோ வாகனம் சிருட்டிதானே! அப்படியானால் சிருட்டியென்ற அடிப்படையில் எல்லாச் சிருட்டிகளும் ஒன்றுதான். சத்தப்பிரமாணமான "இபாரத்துன்னஸ்" என்ற பிரமாணத்தினால் வாகனம் றப்பை விட்டு வேறல்ல என்றும் "தலாலத்துன்னஸ்" என்ற கருத்துப் பிரமாணத்தினால் வாகனம் சிருட்டியைவிட்டு வேறல்ல என்று இவ்வாயத்து நிரூபித்துக் கட்டுகிறதல்லவா?

வானத்தில் பறக்கும் பறவையை நாமே தாங்கிப்பிடித்துக் கொண்டிருக்கிறோம் என்று இறைவன் குர்ஆனில் கூறுகிறான்.

குர்ஆன்: 67:19
இறக்கைகளை விரித்துக்கொண்டும் மடித்துக்கொண்டும், இவர்களுக்கு மேல் (பறக்கும்) பட்சிகளை இவர்கள் கவனிக்கவில்லையா? றஹ்மானைத் தவிர அவைகளைப் பிடித்துக் கொண்டிருக்கவில்லை.

இதன்படி காற்று அல்லாஹ்வைவிட்டும் வேறு என்று நாம் கொள்ளமுடியாது. இவ்வாயத்துக்கள் ஒவ்வொன்றும் மிக நீண்ட விளக்கம் தரவேண்டியவையாகும். ஆயினும் இங்கே அவசியமானவற்றை மட்டும் நோக்குவோம்.

காற்று அல்லாஹ் வைவிட்டும் வேறல்ல என்று இபாரத்துன்னஸ்ஸினாலும் (சத்தப்பிரமாணத்தாலும்) காற்று சிருட்டியை விட்டு வேறல்ல என்ற தலாலத்துன்னஸ் (கருத்துப்பிரமாணத்தினாலும்) பெற்றுக்கொள்ளுகிறோம். பௌதீகம் சூட்சுமத்தை விட்டும் வேறல்ல என்று இஸாரத்துன்னஸ்ஸினாலும், பௌதீக சூட்சுமத்துக்கப்பா லுள்ளதும் பௌதீகசூட்சுமத்தை விட்டு வேறல்ல என்பதை இஹ்திலாவுன்னஸ்ஸினாலும் பெற்றுக் கொண்டோம். ஆகவே அவனையன்றி ஒன்றுமே இல்லையென்றும் இருப்பது அவன்மட்டுமே என்றும் அவனுடன் ஒப்பு, உவமை, இணை, துணை, ஜோடி கிடைக்கவே கிடையாதென்றும் சுத்தமான தௌஹீது நிரூபணமாய் விட்டது. சிருட்டி சிருட்டிதான். அதன் சட்டங்களை அது மீறமுடியாது. மீற வேண்டிய அவசியமும் இல்லை. இதைப்போலவே அல்லாஹ் அல்லாஹ்தான். அப்து றப்பாவதோ றப்பு அப்தாவதோ கிடையாது. தௌஹீதை வெளிப்படுத்தும்போது அப்து றப்பாயும் றப்பு அப்தாயும் மாறிவிடுமே என்று நினைப்பது வஹ்முவென்ற மருட்சியாகும். உள்ள ஒன்றே பலவாய்ப், பலதகைமையாய், அதனிடத்தே நிலையாய் ,அழிவின்றி இருந்துகொண்டிருக்கிறதென்பதே தௌஹீது. நாய், பன்றி, ஏவல், விலகல் சிருட்டியைப் பொறுத்த ஓர் விஷயம். இது தீனுடைய வெளிப்படை(உடல்) நாம் கூறிய தௌஹீது என்பது உட்படை(உயிர்) இவ்விரண்டும் ஒன்றித்ததே தீனுல் இஸ்லாம்

என்பது. இதைவிட வரட்டுவாதம் செய்வதும் குர்ஆனின் உயிரை மூடிமறைப்பதும் அறியாமையே.

குர்ஆனின் ஓர் ஆயத்து இன்னோர் ஆயத்தை உறுதிப்படுத்தும் என்பதை நாம் உணரவேண்டும். இப்படி ஒன்றையொன்றோடு பொருத்தி உண்மையை விளக்குபவர் எவரோ அவர்தான் கல்வியுடைய ஆலிமாவார். இவ்வித ஆலிம்கள் நம்மிடையே மிகமிகக் குறைவுதான். இந்தக் கல்வி கலாசாலைக் கல்விதான் என்று முடிவுகட்டுவது தவறு. கல்வியறிவில்லாமல் குர்ஆனுக்கு விரிவுரை வழங்கக்கூடாதென்று றசூல் (ஸல்) அவர்களும் கல்வியில்லாமல் மனிதர்களுக்குப் பத்வாக்கொடுப்பவரை வானும் புவியும் ல.ஃனத்துச் செய்கின்றன என்று அலி (றலி) அவர்களும் கூறிய கல்வி ஆராய்தலால் ஏற்பட்ட கல்வியறிவேயன்றிக் கலாசாலைக் கல்வி அறிவல்ல. ஸஹாபாக்களான, அபூபக்கர் (றலி), உமர் (றலி), உதுமான் (றலி), அலி(றலி) போன்றோர் கலாசாலைச் செட்டிவிக்கட் இல்லாதவர்களே. இவர்கள் எத்தனை எத்தனையோ விஷயங்களைத் தீர்ப்புக்கட்டிப் பத்துவா வழங்கித் தண்டனையும் அழித்துள்ளார்கள்.

ஆகவே உலமாக்கள் கூறுவதை ஒப்புக்கொள்ளலாம் என்றும் அப்படியில்லாதோர் கூறுவது பிழையென்றும் கணிப்பது அறியாமையே. நாம் கனவில் எம்மைக் காண்பது அறிவைக்கொண்டே, இதைப்போல அவன் அறிவில் அவனை நிதர்சனமாய்க் காண்கிறான் அறிகிறான். சிருட்டியென்ற மயக்கில் மாட்டிக்கொண்ட மனிதன் தன் சுயநிலையை மறந்து தூங்கிக்கொண்டும் தூக்கத்தில் காணும் காட்சியில் மருண்டுகொண்டுமிருக்கிறான். இந்தத் தூக்கமும் கனவும் கலைந்து விழிப்புநிலையைப் பெற்றுத் தன் சொந்த நிலைமையில் தரிபட உதவும் மந்திரம்தான் கலிமா என்பது. இக்கலிமாவின் உண்மையையும் அதன் தலீல்களையும் மறைப்பதும் புரட்டுவதும் மனிதகுலத்தை நரகுக்கழைத்துச் செல்வதாகவே முடியும்.

இஸ்லாத்தின் லேபலில் இல்யாஸிஸம்

இவ்விடத்தில் ஒரு நிகழ்சியை நான் கூறிக்காட்டவேண்டியது அவசியமாய் இருக்கிறது. இற்றைக்குச் சில நாட்களின் முன் ஒருசிலர் என்னுடைய வீட்டில் என்னைச் சந்தித்து உரையாடினார்கள். அவர்களில் ஒருவர் ஓர் ஆசிரியர். தற்கால வழக்கிலுள்ள தப்லீக்கின் ஓர் அமீர் இவ்வாசிரியர் என்பது எனக்குத் தெரியவந்தது. உங்கள் வரவின் காரணமென்ன என்று வினவினேன். அவ்வாசிரியர் நீங்கள் மக்களைத் தொழவேண்டாம் என்று கூறுகிறீர்களாமே! ஏன்? என்று கேட்டார். நான் அப்படி எங்கேயும் எப்போதும் கூறவே இல்லையென்றேன். அப்படியானால் நீங்கள் ஏன் பள்ளிக்கு வருவதில்லையென்று கேட்டார். நான் பல காரணங்களை முன்னிட்டு அங்கு வருவதில்லையென்றேன். நீங்கள் தொழுகிறீர்களா? என்று கேட்டார். நான் ஆம் என்றேன். இமாம் ஜமாஅத்தாகவேயன்றித் தொழுவது இஸ்லாத்துக்கு விரோதமான செயல் என்றார்.

உங்களுக்கு இஸ்லாத்தில் ஷரீயத், தரீக்கத் என்ற படித்தரங்கள் உண்டு என்பது தெரியுமா? என்று நான் அவரைக் கேடடேன். இஸ்லாத்தில் ஷரியத்தேயன்றி வேறு எதுவுமே கிடையாது என்று கூறினார். உடனே இவர் யார் என்பதை நான் ஓரளவு உணர்ந்து கொண்டேன், இவருடைய கண்ணில், செவியில், இருதயத்தில் முத்திரையிடப்பட்டிருப்பதை நான் அறிந்துகொண்டேன். ஆயினும் இவருடைய திரையை நீக்குவதற்காக நரகவாதிகளின் உடை, ஊண், குடிப்பு முதலிய விஷயங்களை இவருள்ளத்தில் பதியக்கூடிய வகையில் உரையாடினேன், அவருடைய ஸஹாக்கள் முன்னிலையிலேயே, இன்று நானறியாமலிருந்த ஒன்றை உங்கள் வாயிலாய் அறிந்து கொண்டேன் என்று கூறினார். நானும் சந்தோஷமாகவே அனுப்பிவைத்தேன்.

சில நாட்களின்பின் இவருடைய பிரச்சாரக் கெசட் ஒன்றைக் கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இவரால் எழுதப்பட்ட ஈமானின்(கலிமாவின்) உண்மை எல்லாம் இறைவன் என்பதல்ல என்ற ஒரு நூலையும் வாசிக்கக் கிடைத்தது. இல்லாமையைக் கொண்டே சிருட்டி உருவானது. (இல்லாமையில் இருந்து என்ற வசனத்தில் இருந்து என்ற சொல்லை இவர் மறந்தேவிட்டார்) இவரின் அடிப்படைக் கொள்கை அல்லாஹ்வேறுதான் சிருட்டி வேறுதான் என்பதே. அல்லாஹ் வையன்றி வணக்கத்துக்குப் பாத்திரமான நாயன் யாருமில்லையென்பதே கலிமாவின் பொருள் என்றும் அவ்லியாக்கள் சித்து புருஷர்களே என்றும் இவர்கள் இஸ்லாத்துக்குப் புறம்பானவர்கள் என்றும் கூறுகிறார். மேலும் அல்லாஹ்வை வணங்குவதே தௌஹீது. வணங்காமல் இருப்பதே ஷிர்க்கு என்றும் இந்து அத்வைதிகளிடத்தில் வெளியானதும் முன்கால அவ்லியாக்களில் வெளியானதும் சித்தேயன்றி வேறில்லையென்றும் இது மனோ இச்சையைத் தெய்வமாக எடுத்துக்கொண்டவர்களின் செயல் என்றும் விளக்கம் கூறுகிறார். இந்துக்களின் ஞானவிளக்கமான அத்வைதம் தான் இஸ்லாத்தில் நுழைக்கப்பட்டதென்றும் அதை நுழைத்தோர் (அவ்லியாக்கள்) காபீர்கள் என்றும் கூறுகிறார், இவ்விதமாய் முத்திரையிடப்பட்ட மக்களுக்கு ஷிர்க், தௌஹீதின் விவரமோ அச்சொற்களின் கருத்துகளோ இவர்களுக்குத் தெரியாது. குர்ஆன் ஹதீஸ்களின் வாசனைகூட இவர்களிடம் இல்லவே இல்லை.

இவ்வித மருட்சியுடைய மனிதனுக்கு, சித்து, கறாமாத், முஹ்ஜிஸாத், ஹிப்நாடிஸம், மெஸ்மரைஸம், வாசிலாத்து, ஸிஹ்று என்பவை எல்லாமே ஒன்றா வெவ்வேறா என்பதுகூட விளங்காத விஷயம்தான். இன்னொரு குர்ஆன், ஹதீஸ்களையோ, நல்லறிஞர்களின் நல்லுபதேசங்களையோ வாசிக்க, கேட்க, விளங்க முடியாதபடி கல்பில் முத்திரையிடப்பட்டவர்கள். இவர்களுக்கு முஷ்ரீக்கான அபூஜஹ்லின் கொள்கை சரியாயும் றசூலின் கொள்கை பிழையாயும் தெரிவது ஆச்சரியமேயல்ல. இக்கூட்டம் கலிமாவைத்தான் ஏற்காவிடிலும் றசூல் (ஸல்) அவர்கள் தங்கள் மனோ இச்சையைத் தெய்வமாகக்கொண்டு தங்கள் யூகப்படியே

குர்ஆனைக் கூறினார்களென்றல்லவா சொல்லாமல் சொல்லுகிறார்கள். நபிமாரின் முஹ்ஜிஸாத்தையோ அவ்லியாக்களின் கறாமாத்தையோ இக்கூட்டம் ஏற்றுக் கொள்ளவில்லையென்பது வெளிப்படை. இல்யாஸினாலும் அவர் கூட்டத்தினாலும் உருவாக்கப்பட்ட தஜ்ஜாலின் கொள்கையில் ஊறிக்கொண்டிருக்கிற இந்த வழிகெட்ட கூட்டம் நபிமாரைப்பற்றி, வேதங்களைப்பற்றி, ஈமான்கொண்டிருக்கிறோம் என்பது சுத்தப் பொய்யாகும்.

ஆதம் (அலை) அவர்கள் காலத்திலும் கலிமாவுக்கு வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத்தவிர என்பதே பொருள் என்று இந்த மூடர்கள் நம்புகிறார்களா? இதை விளங்கிக் கொள்ள அவர்களுக்கு அறிவுண்டா? மூளைவழர்ச்சியற்ற வர்களுக்குச் சிந்தனையறிவு எப்படி ஏற்படும்?

ஆதம்(அலை) அவர்களின் சமூகத்தவர்கள் எவரும் பல (ஆண்டவர்கள்) நாயன்கள் உண்டு என்று கூறியதும் வணங்கியதும் உண்டா? இல்லையே. அல்லாஹ்வையன்றி அவர்கள் எந்த ஓரு வேறு நாயனையும் ஏற்படுத்தாமல் அறியாமல் இருக்கும்போதும் வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத்தவிர என்று கலிமாவுக்குப் பொருள் கொண்டிருப்பார்களா? இதைச் சிந்தத்துத் தெளிவுபெறும் ஆற்றல் இக்கூட்டத்திடம்தான் இல்லையே. ஆராய்ந்து உண்மையைக் கண்டறியப் பகுத்தறிவும் சிந்தனையும் அவசியம். கால்நடைகளுக்கு இத்தன்மை இருக்கவே இருக்காது தான்.

அல்லாஹ் தவிர இலாஹு இல்லையென்றால் எல்லாம் இறைவனல்ல என்று கூறுகிற இந்த குருட்டு ஜாஹீல்கள் குர்ஆனை மறுத்து நிற்கிறார்கள் என்பது அவர்களைச் சுற்றியுள்ள இளவட்டங்களுக்கு எப்படித் தெரியும். இவரும் இவரின் வழிகாட்டிகளும் அபூஜஹீலின் கொள்கை விளக்கத்தைப் பிரச்சாரம் செய்கிறார்கள் என்பதும் இவர்கள் றசூலின் கொள்கையை ஷிர்க்காய்க் கண்டிருக்கிறார்கள் என்பதும் மக்கள் அறியாத விஷயமே. இவர்கள் ஆதாரமற்ற வரட்டுவாதங்களையே மக்களிடம் நுழைத்து இஸ்லாத்தையும் அதன் கொள்கையையும் குழிதோண்டிப் புதைக்கிறார்கள் என்பதும் பெரும்பாலும் மக்களுக்குத் தெரியாது.

குர்ஆன்: 14:28,29

அல்லாஹ்வின் அருளை(குர்ஆனை)க் குபிரைக்கொண்டு மாற்றித் தங்கள் மக்களையும் அழிவுக்கிடங்கில் இறக்கிவிட்டவர்களை (நபியே!) நீர் பார்க்கவில்லையா? அவர்கள் நரகத்தைத்தான் வந்தடைவார்கள் - (அது) தங்குமிடங் களில் மிகக்கெட்டது.

இவர்களைச் சூழ்ந்துள்ள இளவட்டங்களில் ஒருசாரார் அல்லாஹ்வினால் றசூலினால் அறிவிக்கப்பட்ட இஸ்லாத்தின் உண்மையை அறியத் தாகம் கொண்டுள்ளார்கள் என்பதை நான் அறிந்தேன். ஆகவே, எமக்குப்பின் வரக்கூடிய குழந்தைகளாவது உண்மையை அறியவேண்டுமே என்பதற்காகத்தான் திருக்குர்ஆன் தீர்ப்பு என்ற தலைப்பில் சிறுசிறு புத்தகங்கள் எழுதிவெளியிட முன்வந்தேன்.

சகோதரர்களே!

மனிதர்களில் ஓரு காலம்வரும் அப்போது இஸ்லாத்தின் நாமமேயன்றி அதன் உண்மை இராது. குர்ஆனில் அதன் எழுத்தேயல்லாது அதன் உண்மையான அர்த்தம் இராது. அவர்களின் (மஸ்ஜித்) பள்ளிவாயில்கள் நேர்வழியின்றிக் கெட்டுப்போய் இருக்கும். அவர்களின் உலமாக்கள் வானத்தின் கீழ் மிகக்கெட்ட ஜந்துக்களாய் இருப்பார்கள் என்று றசூலுல்லாஹ்வினால் கூறப்பட்ட ஓர் ஹதீஸ் கிரந்தங்களில் இடம்பெறுகிறது. இந்த ஹதீஸில் குறிப்பிடப்பட்ட உலமாக்கள் என்பது ஜாஹீலான முஸ்ரீக்கின் கொள்கைக்கு வழிகாட்டும் அறிஞர்களைக் குறிப்பிடுமேயன்றித் தௌஹீதை, குர்ஆன் ஹதீஸை ஏற்றுக்கொண்ட உலமாக்களைக் குறிப்பிடாது. அல்லாஹ் றசூலை ஏற்றுக்கொண்ட உலமாக்கள் எல்லோரும் மேன்மக்களே.

பொய்பரவிவிடும் என்பதன் அர்த்தம்தான் என்ன? இன்றைய உலகில் உண்மையான தௌஹீது நிரம்பியிருக்கிறதா? அல்லது அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாததும் உண்டு என்னும் ஷிர்க் நிரம்பியிருக்கிறதா? பொய்யென்னும் ஷிர்க்குத்தான் நிரம்பியிருக்கிறது.

இந்தக் கால்நடைகளுக்கொப்பான அறிவிலிகளுக்கு இந்து மதத்தத்துவங்கள் தெரியுமா? தெரிந்திருந்தால் இல்லாதது இருப்பதாகாது என்பதையாவது அறிந்திருப்பார்கள். இஸ்லாத்தின் தத்துவ விளக்கங்களையும் அதன்படி அவ்லியாக்கள் கையாண்ட நடைமுறைகளையும் இவர்கள் அறிந்திருந்தால் அவ்லியாக்கள் மூச்சுப்பிடித்தவர்கள் என்றும் இந்துக்களின் ஹடயோகம், சித்துயோகங்களைக் கையாண்டவர்கள் என்றும் கூறுவார்களா? இந்துக்கள் கையாண்ட முறைகள் ஆபத்தான பூர்வீக முறைகளென்றும் றசூல்(ஸல்) அவர்களால் அந்தப் பூர்வீக முறைகளெல்லாம் நீக்கப்பட்டுக் கலிமாவை முறாக்கபா செய்து வெற்றி பெறும்பாதை விளக்கித்தரப்பட்டுள்ளதென்றும் இம்முறையே அவ்லியாக்கள் கையாண்டு வெற்றிபெற்ற வழியென்றும் எமது ஈமானின் உண்மையை நீ அறிவாயா என்ற முதல் நூலில் அஸ்ஸூலுக் (இறைவழி நடைமுறை) என்ற தலையங்கத்தின் கீழ் நான் விளக்கியுள்ளேனே! இதை இந்த ஜாஹில் கூட்டம் வாசிக்கவில்லையா? வாசித்தும் விளங்கிக்கொள்ளவில்லையா? அல்லது பாமர மக்களிடையே தங்கள் அமீர்பதவியைக் காப்பாற்றித் தங்களை அறிவுமேதைகளாய்க் காட்டிக்கொள்ள முனைகிறார்களா?

இவ்விதமான இருளில் தவிக்கும் இந்த ஷைத்தான்கள் இந்த இருபத்தோராம் நூற்றாண்டிலும் தங்களை மேதைகளாய்க் கணிப்பதும் மற்ற மக்களைக் கால்நடைகளாய்க் காண்பதும் ஆச்சாயம்தான். தெரியாத, அறியாத, விளங்காத விஷயத்தில் தலையிட்டு ஆப்புப்பிடுங்கிய மந்திகளாய் மாறுவது ஏன்? இதுதான் ரியா என்ற மேலெண்ணத்தின் வரட்டுக்கௌரவத்தின் விளைவு. அவ்லியாக்களின் பாதரட்சையில் ஒட்டியுள்ள தூசியளவேனும் இவர்களிடத்தில் அறிவு வெளிச்சம் கிடைக்கவே கிடையாது. இக்கூட்டம் வேதாந்தம் சித்தாந்தமெல்லாம் இந்துக்களுடையதென்று கூறுகிறார்களே! இந்துக்களுடைய மதங்களையாவது இவர்கள் ஆராய்ந்தறிந்ததுண்டா? இந்துக்களின் கொள்கையையும் இஸ்லாத்தின் கொள்கையையும் இவர்கள் பகுத்துப் பார்த்ததுண்டா? பகுப்பதற்குத்தான் இவர்களிடம் பகுத்தறிவு கிடையாதே. வஹ்ஹாபிஸத்தில் முளைத்தெழுந்த இல்யாஸிஸத்தை

இஸ்லாமென்ற பெயரில் தொழுகையென்ற லேபலில் மக்களிடையே புகுத்தித் திணிக்கிறார்கள். இவர்கள் விஷயத்தில் உலமாக்கள் கண்ணை மூடிக்கொண்டிருப்பது எதிர்காலச் சந்ததியினருக்கு வீழ்ச்சியாகவே அமையும்.

இவ்விதமான தஜ்ஜால் கூட்டத்தின் ஸ்தாபகர்களான அப்துல் வஹ்ஹாப் நஜ்தி, இல்யாஸ் போன்றோரின் அடிப்படைக் கொள்கைகளையறியாத பாமரமக்கள் இவர்களின் இபாதத்துகளைக் கண்டு ஏமாறுகிறார்கள். இவர்களுடைய கொள்கை விளக்க நூற்களைப் பார்வையிடுவோர் இவர்கள் எக்கூட்டத்தினர் என்பதை அறியமுடியும். ஆனால் இவர்களுடைய அடிப்படை நூற்களை, மனிதர்கள் கையில் கிடைத்துவிடாமல் தடைப்படுத்துவதற்காக எவ்வளவோ அரும் முயற்சி செய்து மூடிமறைத்துப் பொய்யை மெய்போல் ரூபம் செய்து குழப்பிவிடுகிறார்கள்.

இந்த அறிவிலிக் கூட்டம்தானா இஸ்லாத்துக்கு உயிரூட்டுவது, இல்லை. இஸ்லாத்தை மொட்டையடித்து முஸ்லீம்களை மூடர்களாக்கி மார்க்கத்தை தாறுமாறாக்கும் பித்அத்வாதிகள்தான் இந்தக் கூட்டம். இவ்விதமான குருட்டுச் ஷைத்தானின் பேச்சுக்கு, எழுத்துக்குப் பக்கவாத்தியம் வாசிக்கிறார் ஒரு பட்டதாரி மௌலவியென்றால், அந்த மௌலவி ஜாஹிலின் நூலுக்கு முகவுரை வழங்கியிருக்கிறார் என்றால் இவரின் பட்டம் வட்டத்தை (சூன்யத்தை)த்தானே காட்டு கிறது. சூனியத்தில் எதுதான் இருக்கும்?

குர்ஆன்: 53:28

(வேதத்தை) இதைப்பற்றி அவர்களுக்கு யாதொரு ஞானமும் கிடையாது; (ஆதாரமற்ற வீண்) கற்பனைகளைத் தவிர அவர்கள் பின்பற்றுவதில்லை; கற்பனை உண்மைக்கு முரணானயாதொன்றை யும் உறுதிப்படுத்தாது.

குர்ஆன்: 42:35

நம்முடைய அத்தாட்சிகளில் (ஆயத்துகளில்) (வீணாக)த் தர்க்கிப்போர் - தப்பித்துக்கொள்ள எந்த வழியுமில்லை என்பதை அவர்கள் அறிந்துகொள்ளட்டும்.

நாம் குறிப்பிடும் மௌலவி மதீனாப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருப்பாரா? இவரிடமுள்ள கல்வி வஹ்ஹாபிஸம்தான். றசூலின் கொள்கை விளக்கம் இவரிடம் கிடைக்கவே கிடையாது.

ஹதீஸ்:
முஸ்லீம்களின் ஊர்களில் இறுதியாகக் கெட்டுப்போகும் ஊர் மதீனாதான் என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறினர்

அறிவிப்பவர் : அபூஹுறைறா(றலி)
ஆதாரம் : திர்மிதி

பொதிசுமந்த கழுதைக்கூட்டம் பாமரமக்களை மேய்க்கலாம். உணர்ச்சிவசப்படுத்தலாம். அடாத செயல்களுக்குத் தூண்டிவிடலாம். ஆனால் அறிவுள்ள மனிதர்களை மேய்க்க முடியாது. குர்ஆனை மறுப்பவன் மறைப்பவன் எவனோ அவன் மார்க்க விளக்கம்பெற்ற மௌலவியாய் ஆலிமாய் இருக்க முடியாது. குர்ஆனின் விளக்கம் தரப்பட்டால் சிங்கத்தைக் கண்டு மரணபயத்தினால் வெருண்டோடுகிற காட்டுக் கழுதைகளுக்கொப்பானதே இந்த அறிவிலிக்கூட்டம்.

அவ்வல், ஆகிர், லாஹிர், பாதின் இறைவனே என்று விபரம் தருகிற, 57:3ம் ஆயத்தை மறுத்துத் தோற்றுபவன் இறைவனேயல்ல என்று கூறுகிற இந்தப் பேர்வழி எதைப் படித்துப் பட்டம் பெற்றாரோ நானறியேன்.

இவ்விதமான, வஹ்ஹாபிஸத்தில் முளைத்தெழுந்த இல்யாஸிஸக் கூட்டத்தினரைப் பற்றிய ஹதீஸ்களில் மூன்றை மட்டும் இங்கே தருகிறேன்.

ஹதீஸ்:
றசூல்(ஸல்) அவர்கள் திருவுளமானார்கள், இஸ்ரவேலர்கள் 72 கூட்டமாய்ப் பிரிந்தார்கள். என்னுடைய உம்மத்துக்கள் 73 கூட்டங்களாகப் பிரிவார்கள். (இவர்களில்) ஒரு கூட்டத்தினரைத் தவிர மற்றெல்லாக் கூட்டத்தினரும் நரகவாதிகளாவார்கள் என்றுகூற றசூலல்லாஹ் அந்த ஒரு கூட்டத்தார் எவர் என்று ஸஹாபாக்கள் கேட்டதற்கு நானும் என்னுடைய ஸஹாபாக்களும் எந்தக்கொள்கையில்

இருக்கிறோமோ அந்தக் கொள்கையையுடையவர்கள் என்று றசூல்(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர் : இப்னு உமர்(றலி)

ஆதாரம் : அபூதாவுது, இப்னுமாஜா

(இதைப்போன்ற ஓர் ஹதீஸ் அபூஹுறைறா(றலி) அவர்களாலும் றிவாயத்துச் செய்யப்பட்டுள்ளது.)

ஹதீஸ்:

றசூல்(ஸல்) திருவுமளமானார்கள் கடைசிக் காலத்தில் ஆற்றல் அனுபவமில்லாத மடையர்கள் வருவார்கள், அவர்கள் (தங்கள் எண்ணத்தில் நபியுடைய) ஹதீதை ஆதாரமாய் எடுத்துக் கொண்டதாக நினைத்துப் பேசுவார்கள். அவர்கள் வில்லை விட்டு அம்பு புறப்பட்டது போல இஸ்லாம் மார்க்கத்தை விட்டுப் புறப்பட்டு விடுவார்கள்.

அறிவிப்பவர் : அபூஸயீதுல்குத்ரி(றலி)
ஆதாரம் : புஹாரி

ஹதீஸ்:

றசூல்(ஸல்) திருவுளமானார்கள் (ஒரு கூட்டம்வரும்) அவர்களின் தொழுகைக்கு முன்னால் உங்கள் தொழுகையும் அவர்களின் நோன்பிற்கு முன்னால் உங்கள் நோன்பையும் அவர்களின் அமல்களுக்கு முன்னால் உங்கள் அமல்களையும் அற்பமாகக் காண்பீர்கள். (அதாவது அவர்கள் உங்களைவிடவும் அதிகமாக அமல் செய்வது போல் தென்படும்) அவர்கள் வில்லை விட்டு அம்பு புறப்படுவதுபோல இஸ்லாம் மார்க்கத்தைவிட்டும் வெளியேறி விடுவார்கள்.

அறிவிப்பவர் : அபூஸயீதுல் குத்ரி(றலி)
ஆதாரம் : புஹாரி

இன்னும் பல ஹதீஸுகள் தென்படுகின்றன. சுன்னத்வல் ஜமாஅத்துக்கூட்டம் யார் என்பதைக் கண்டறிவது தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ்ஜி போன்ற கடமைகள் அமல்களைக் கொண்டல்ல என்பதையும் கொள்கையைக் கொண்டே அக்கூட்டததைக் கண்டறிய வேண்டும் என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். இன்று கெண்டைக்காலவரை நீண்ட வங்காளிகளின் சட்டையுடனும் தஸ்பீஹுமணி மிஸ்வாக்குக் குச்சியுடனும் காட்சிதரும் தப்லீக் என்பது குர்ஆன் ஹதீஸுகளின்படி

வழி கெட்ட பித்அத்வாதி களான ஜாஹில் கூட்டமேயாகும். இதை இப்போது தெளிந்த மனதோடும் ஆதாரங்களோடும் நோக்குவோம்.

அல்லாஹ் =1
சிருஷ்டி =0
1+0=1

என்று முதலில் கூறிவிட்டு பின்பு அல்லாஹ் வேறுதான் சிருஷ்டி வேறுதான் ஆகவே இரண்டும் ஒன்றல்ல என்று கூறுகிற சித்த சுவாதீனமற்ற ஒரு தஜ்ஜாலின் வரட்டு வாதத்திற்கு முன்னுரை வழங்கிய இந்தப்பட்டதாரி குர்ஆன் ஹதீஸுகளின் தீர்ப்புப்படி ஓரு காபீரென்றே தீர்ப்புக் கட்டவேண்டியிருக்கிறது. இஸ்லாத்தின் குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஉ, கியாஸ், அறிவு ஆகிய 5 பிரமாணங்களின் படியும், இந்த ஈமானின் உண்மை எல்லாம் இறைவன் என்பதல்ல என்ற நூலை எழுதிய ஆசிரியரும் அவருக்கு முகவுரை அணிந்துரை வழங்கியவர்களும் அதைச் சரிகண்டவர்களும் எக்கூட்டத்தைச் சேர்ந்தோர் என்பதை நாம் கண்டறிவோம்.

மூலப்பிரமாணங்களின் முடிவு

1ஆவது: அனுமானப் பிரமாணம்

இலங்கை ஜம்இயத்துல் உலமா சபையினரால் காத்தான் குடியைச் சேர்ந்த றவூப் என்பவருக்கு வழங்கப்பட்ட "ஏகத்துவத்தில் ஊடுருவல்" என்ற பத்துவா நூலுக்கு ஆதாரமாய்க் கொண்டிருந்த து.ஃபத்துல் முர்ஸலா, புத்துஹாத்துல் மக்கியா போன்ற நூற்களெல் லாம் ரத்துச்செய்யப்பட்டவையென்று அந்த நூலாசிரியர் கூற அதை ஏற்றுக்கொண்ட அந்தப் பட்டதாரியும் அணிந்துரை வழங்கிய கவமணியும் அந்த நூலுக்கு ஒத்தாசை வழங்கி அதை ஏற்றுக்கொண்ட கூட்டமும் அதை முழுமனதாய் ஏற்றிருக்கிறார்கள், நாம் ஜம்இயத் துல் உலமாசபையினரைச் சுன்னத்வல் ஜமாஅத்துக் கூட்டமென்று நம்பியுள்ளோம், இவர்களுக்கு மாறாய் இயங்கும் கூட்டம் சுன்னத் வல் ஜமாஅத்தாருக்கு மாறான பித்அத் வாதிகளென்றும் முாத்தத்துகளென்றும் எம் அறிவுக்குத் தென்படவில்லையா? ஆகவே ஈமானின் உண்மை எல்லாம் இறைவன் என்பதல்ல என்ற நூலை எழுதியவரும் அவரைச் சரிகண்ட கூட்டமும் சுத்தமான காபீர்களும் முர்த்தத்துகளுமே என்பது பகுத்தறிவின் தீர்ப்பாகும். காண்பதைக் கேட்பதைவிட அனுமானப் பிரமாணம் பெலமானது.

2ஆவது: கியாஸ் என்ற பிரமாணம்

றசூல் (ஸல்) அவர்கள் அல்லாஹ் தவிர இலாஹ் இல்லை (லாஇலாஹ இல்லல்லாஹ்) என்று கூறி அதற்கு ஆதாரமாய்த் தந்த 57:3ஆம் ஆயத்தையும் றஸூலால் கூறப்பட்ட ஹதீஸ்களையும் ஒதுக்கித்தள்ளிவிட்டுக் கலிமாவுக்கு வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத்தவிர என்று அந்த நூலாசிரியரும் அவரின் கூட்டமும் நம்பியிருக்கிறது. குர்ஆன் ஹதீஸ்களின்படி அல்லாஹ்வையன்றி ஒன்றுமில்லையென்று றசூல் (ஸல்) அவர்கள்

கூற முஷ்ரீக்குகள் ஆச்சரியப்பட்டு எல்லா இலாஹுவையும் ஒரே இலாஹுவென்று ஆக்கிவிட்டாரா இந்த முஹம்மது என்று கூறியிருக்கிறார்கள். அதாவது றசூல் (ஸல்) அவர்கள் தௌஹீதைத் தான் எத்திவைத்தார்கள். இதற்கு மாறாக இந்தக் கூட்டம் அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாத சிருட்டியும் உண்டு என்ற ஷிர்க்கையே எத்திவைக்கிறார்கள். ஆகவே இக்கூட்டம் றசூல் (ஸல்) அவர்களை ஓர் முர்ஸலாக, கமாலுடையவர்களாக ஏற்கவில்லையென்றும் அவர்களுடைய நடைமுறையான "கியாஸை" (ஒப்புவமை காணுதலை) இக்கூட்டம் ஏற்கவில்லையென்பதும் தென்படுகிறது. குர்ஆன் 13:43ஆம் ஆயத்து றசூலை மறுப்பவன் (கியாஸை ஏற்காதவன்) சுத்தமான காபீரும் முர்த்தத்தும்தான் என்று அறிவிக்கிறது. இதன்படி ஈமானின் உண்மை எல்லாம் இறைவன் என்பதல்ல என்ற நூலை எழுதியவரும் அவரைச் சரிகண்டவர்களும் முகவுரை அணிந்துரை வழங்கியோரும் காபீர்களும் முர்த்தத்துகளுமேயாவர். இது கியாஸின் தீர்ப்பேயன்றி எமது யூகமல்ல. எமது யூகம் அனுமானத்தால் அறிவதே.

3ஆவது: இஜ்மாஉ ஏகோபித்த அபிப்பிராயம் என்ற பிரமாணம்.

அப்துல் வஹ்ஹாப் நஜ்தி இல்யாஸ் போன்றோரும் அவர்களைப் பின்பற்றியோரும் காபீர்களும் முர்த்தத்துக்களும் தானென்று, இந்தியாவின் பலபாகங்களிலுமுள்ள 268 உலமாக்கள் ஒன்றுசேர்ந்து வழங்கிய "அஸ்ஸவாரீமுல் ஹிந்தியா" என்ற மார்க்கத் தீர்ப்பின் (பத்துவா) படியும் மக்கா மதீனாவைச் சேர்ந்த கனம் தங்கிய 34 உலமாக்களால் வழங்கப்பட்ட "ஹுஸாமுல் ஹறமைன்" என்ற மார்க்கத் தீர்ப்பின் (பத்துவா) படியும், ஈமானின் உண்மை எல்லாம் இறைவன் என்பதல்ல என்ற நூலை எழுதியவரும் அவருக்கு முன்னுரை அணிந்துரை வழங்கி ஆமோதித்தோரும் சுத்தமான காபீர்கள் முர்த்தத்துகளே என்பதும் தென்படுகிறது. ஏனெனில் இவர்கள் அப்துல் வஹ்ஹாப் நஜ்தியையும் இல்யாஸையுமே பின்பற்றியிருக்கிறார்கள், இது எமது யூகமல்ல. இஜ்மாஉவின் தீர்பபாகும்.

4ஆவது: ஹதீஸ் என்ற பிரமாணம்

ஹதீஸ்:

எவரும் நம்மார்க்கத்தில் இல்லாததை இருப்பதாய்க் கூறினால் உண்டாக்கினால் அது மறுக்கப்படவேண்டிய 'பித்அத்'தாகும். என்று றசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஆயிஸா(றலி)
ஆதாரம் : புஹாரி, முஸ்லீம்

அல்லாஹ்வுக்கு இணை, துணை, ஜோடி, சமம், நிகர், ஒப்பு, உவமை கிடையாதென்று குர்ஆன் ஹதீஸுகள் இஜ்மாஉ, கியாஸ் முதலாம் பிரமாணங்கள் உறுதிப்படுத்தும் போதும் அல்லாஹ்வுடன் அவனல்லாதவையும் ஜோடியாய், இணையாய், சமமாய் உண்டு என்று கூறுகிற கூட்டம் எழுதுகிற கூட்டம் சுத்தமான பித்அத்வாதிகளான காபிரீன்கள் முர்த்தத்துகளே என்பது நிரூபணமாகிறது. இது ஹதீஸ் என்ற பிரமாணத்தின் தீர்ப்பாகும். இது எமது யூகமல்ல.

குர்ஆன்: 2:42

நீங்கள் மெய்யை(ஹக்கை)ப் பொய்யுடன்(பாதிலுடன்) குழப்பவோ, உண்மையை அறிந்துகொண்டு(அதை) மறைக்கவோ வேண்டாம்.

5ஆவது: குர்ஆன் என்ற இறுதிப்பிரமாணம்

குர்ஆன்:

காபீர்களைத் தவிர நம்முடைய வசனங்களை நிராகரிக்க மாட்டார்கள்.

குர்ஆன்: 40:4

காபீர்களைத் தவிர(மற்றெவரும்) அல்லாஹ்வுடைய ஆயத்துகளை வசனங்களைப் பற்றி (வீணாக)த் தர்க்கிக்க மாட்டார்கள்.

குர்ஆன்: 14:28,29

அல்லாஹ்வின் அருளை(குர்ஆனை)க் குபிரைக் கொண்டு மாற்றித் தங்கள் மக்களையும் அழிவுக்கிடங்கில் தள்ளிவிட்டவர்களை நீர் பார்க்கவில்லையா? அவர்கள் நரகத்தையே வந்தடைவார்கள். (அது) தங்குமிடங்களில் மிகக்கெட்டது.

குர்ஆன்: 39:59

''மெய்யாகவே என்னுடைய வசனங்கள் உன்னிடம் வந்தன; அவற்றைப் பொய்யாக்கினாய்; காபீராகவே இருந்தாய்''.

(இது ஆகிறாவில் இறைவன் கூறும் கூற்று)

குர்ஆன்: 43:36

எவன் றஹ்மானுடைய நல்லுபதேசத்திலிருந்து கண்ணை மூடிக் கொள்கிறானோ, அவனுக்கு நாம் ஒரு ஷைத்தானைச் சாட்டி விடுகிறோம்; அவன் அவனுக்கு இணைபிரியாத தோழனாகிவிடுகிறான்.

இன்னும் அனேக ஆயத்துகளைத் தரமுடியும். ஷைத்தானைத் தோழமைகொண்ட காபீர்கள் முர்த்தத்துகளான அறிவிலிக் கூட்டம் உறுதியான ஆதாரங்களைக் கொண்டு நிரூபிக்கப்பட்ட தௌஹீதைத் தங்கள் வஹ்ஹாபிஸ, இல்யாஸிஸ வாதங்களுக்க மைவாய்ப் புரட்டி மொட்டையடித்துக் கூறிக்கொண்டிருப்பது சுத்தமான பித்அத்தல்லவா? இது பித்அத்ஸையிஆவைச் சேர்ந்ததாயிருக்கிறது. ஆகவே ஈமானின் உண்மை எல்லாம் இறைவனென்பதல்ல, என்ற நூலை எழுதிய ஆசிரியரை "ளால்லுன் முளில்லுன் முப்தினுன்" வழிகெட்டவன், வழிகெடுப்பவன், விஷமம் செய்பவன், என்று கூறுவதில் எவ்வித தவறுமில்லை. இவரும், இவருக்கு முகவுரை அணிந்துரை வழங்கியவர்களும், இவர்களை ஆமோதிப்பவர்களும் இறுதிப் பிரமாணமான திருக்குர்ஆன் தீர்ப்பின்படி காபீர்களாயும் முர்த்தத்துக்களாயும் இருக்கிறார்கள் என்பது நிச்சயமான உண்மை.

இந்த ஜாஹில் கூட்டம் ஞானம் என்பது இஸ்லாத்தில் இல்லையென்றும் அது இந்துக்களுடையதென்றும் அது முஸ்லீம்கள் போல் நடித்த சூபிகள் என்ற காபீர்களால் இஸ்லாத்தில் புகுத்தப்பட்டதென்றும் பிரசாரம் செய்கிறார்கள், எழுதுகிறார்கள். இவர்கள்தான் குர்ஆனை ஏற்றுக்கொண்டவர்களல்லவே! இவர்கள் தங்கள் பகுத்தறிவை எங்கே பறக்கவிட்டார்களோ நாமறியோம்.

குர்ஆன்: 4:113

அல்லாஹ் இவ்வேதத்தையும் ஞானத்தையும் உம்மீது அருட்செய்து; நீர் அறியாதிருந்ததையும் உமக்குக் கற்பித்திருக்கிறான்.

குர்ஆன்: 3:164

அன்றி அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும்(றசூல்) கற்றுக் கொடுக்கிறார்.

குர்ஆன்: 36:2

முற்றிலும் ஞானம் நிறைந்த இந்தக் குர்ஆன்மீது சத்தியமாக!

ஞானப்பொக்கிஷம் குர்ஆன்தான் என்பதைப் பகுத்தறிவு தொழிற்படாத பட்டதாரிகள் கவிமணிகள் எப்படி அறிவார்கள்?

நாம் சுருக்கமாய்க் காட்டிய எமது ஆராய்வின்படி நாம் குறிப்பிட்ட ஈமானின் உண்மை எல்லாம் இறைவனென்பதல்ல என்ற நூலாசிரியரும் அவருக்கு முகவுரை வழங்கிய பட்டதாரிகள் ஆதரவாளர்கள் யாவரும், குர்ஆன்(1) ஹதீஸ்(2) இஜ்மாஉ(3) கியாஸ்(4) அறிவு(5) ஆகிய ஐந்து உறுதியான பிரமாணங்களினபடியும் காபீர்களாய் முர்த்தத்துகளாய் இருக்கிறார்கள் என்பது நிரூபணமாய்விட்டது.

பொதுமக்களான வாசகநேயர்களே! இவ்வித ஜாஹீல் கூட்டத்தை இனம்கண்டுதெளிந்து ஈமானை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே எனது ஆராய்வைக் கூறியுள்ளேன். இவர்களுக்கு என் சொந்த அபிப்பிராயப்படி நான் தீர்ப்புக் கூறவில்லை. இது இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்ட இறுதிப் பிரமாணமான திருக்குர்ஆனின் தீர்ப்பேயாகும். எவருடனும் எனக்குக் கோபமில்லை. என் கோபமெல்லாம் அறிவீனமான ஷிர்க்குடன்தான். கபடத்தனமான குபிருடன்தான்.

குர்ஆன்: 4:59

(விசுவாசிகளே!) உங்களுக்குள் யாதொரு விஷயத்தில் பிணக்கு ஏற்பட்டால், அதனை அல்லாஹ்விடமும், தூதரிடமும் ஒப்படைத்து விடுங்கள். நீங்கள் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் விசுவாசங்கொண்டவர்களாய் இருந்தால் இதுதான் நன்மையாகவும், அழகான முடிவாகவும் இருக்கும்.

குர்ஆன்: 6:149

நீர் கூறும்: பூரணமான, மறுக்கமுடியாத ஆதாரம் அல்லாஹ்வுடையதே டையதே. (குர்ஆனே)

ஆகவே, எமது இறுதி ஆதாரங்கள் குர்ஆன் ஹதீஸுகளே. மூ.்.மீனாயிருக்கிற எவரும் குர்ஆன் தீர்ப்பை மறுக்க முடியாது.

குர்ஆன்: 16:64

அன்றி(நபியே!) இவர்கள் எவ்விஷயத்தில் தர்க்கித்துக் கொண்டார்களேர் அதனை நீர் தெளிவாக்குவதற்காகவே குர்ஆனை உம்மீது நாம் இறக்கிவைத்தோம்; அன்றி விசுவாசமுடைய மக்களுக்கு நேர்வழியாகவும், ஓர் அருளாகவும் இருக்கிறது.

ஈமானின் (கலிமாவின்) உண்மை எல்லாம் இறைவன் என்ப தல்ல என்ற நூலை எழுதிய நண்பர் அரூபியான ஒன்று எப்படி ரூபியாய் வரமுடியும் என்று கேட்கிறார். இவர் தத்துவ நூற்களைக் காணாமல் வாசிக்காமல் இருக்கலாம். சிந்தித்து தெளிவுபெற முடியாதவராயும் இருக்கலாம். இவரிடம் சிந்திக்கக் கூடிய அறிவுதான் இல்லையே. எமது "ஈமானின் உண்மையை நீ அறிவாயா" என்ற முதல் நூலில் சந்தேக நிவர்த்தி (கேள்வி - பதில்) என்ற தலையங்கத்தின் கீழ் விளக்கியுள்ளேன்! இதை அவர் வாசிக்கவில்லைப் போலும். அந்த நூலாசிரியருக்குப் பக்கவாத்தியம் வாசிக்கிற இன்னொருவர் அவ்லியாக்கள் காட்டில் துறவிகளாய் வாழ்ந்தவர்கள் என்றும் மாடமாளிகைகளில் வாழ்வோரை அவ்லியாக்களாய் ஏற்க முடியாதென்றும் நம்காலத்தில் அவ்லியாக்கள் கிடையாதென்றும் கூறுகிறார். இவருடைய உள்ளம் எமக்கு நன்றாய்ப் புரிகிறது, யாரையோ ஒருவரை இவர் ஒலியுல்லாஹ் என்று கேள்விப்பட்டுள்ளார். அதை இவருடைய உள்ளம் ஏற்றுக்கொள்ளவில்லை. விஷயம் இவ்வளவுதான்.

றசூல்(ஸல்) அவர்களுடைய ஸஹாபாப் பெருமக்கள் எல் லோரும் நல்லடியார்களான அவ்லியாக்கள்தான். இவர்கள் பிரம்மச் சாரிகளாகத் துறவிகளாகக் காட்டில் வாழ்ந்ததுண்டா? றசூல்(ஸல்) அவர்களுடைய ஸஹாபாக்களில் ஒருசிலர் சீமான்களாக இருந்திருக்கிறார்கள் என்பதை இவர் மறுப்பாரா? ஒருசில நபிமார், சுலைமான் (அலை) போன்றோர் சக்கரவர்த்திகளாகவே வாழ்ந்தார்கள் என் பதை இவர் படிக்கவில்லையா? ஒருசாரார் காட்டில் துறவிகளாய் வாழ்ந்த காரணம் என்ன? என்பதைக்

கண்டறியக்கூடிய அறிவு இவரிடமுண்டா? றசூல் (ஸல்) அவர்களோ அவர்களின் ஸஹாபாக்களோ மஜ்தூபுகளாக வாழ்ந்தார்களென்பதை இவர் நிரூபித்துக் காட்டுவாரா? றசூலும் தோழர்களும் அவ்லியாக்களல்லவென்று இவரால் வாதிடமுடியுமா? இல்லறத்திலேயே துறவறமுண்டு என்பதை இவர் அறிவாரா? கஞ்சா, அபின் போதையில் மூழ்கிய ஒருசாராரின் பாடல்களைக் கொண்டு அவ்லியாக்கள் இப்படித் தானிருப்பார்களென்று இவர்கள் கற்பனை பண்ணியிருக்கிறார்கள். அவ்லியாக்களைப் பற்றிக் கூறப்படுகிற அபத்தமான பேச்சுக்களுக்கெல்லாம் காரணம் அறிவீனமும் ரியா என்ற மேலெண்ணமுமே.

அபூஜஹ்லின் ஜாஹிலியாக் காலத்திலுள்ள பழைய கல்விக்கு அதிகாரியாய் இருந்த ஒருவரும் அறிவிலிகளின் வரட்டு வாதத்துக்குத் தபேலா வாசிக்கிறார் என்றால், றசூல்(ஸல்) அவர்களால் தரப்பட்ட புதுக்கல்வியான தீனுல் இஸ்லாத்தின் கல்வி அவருக்கு கிடைக்கவில்லை என்பது பொருள். கலிமாவினால் உணர்த்தப்படும் தௌஹீது குர்ஆன் ஹதீஸுகளுடன் எப்படித் தொடர்பு கொண்டுள்ளது என்பதைக் கண்டறிய தீனுல் இஸ்லாத்தின் புதுக்கல்வி அவசியம். ஜாஹில் கூட்டத்துக்கு இக்கல்வி எப்படிக் கிடைக்கும்? புலவர் மணிகளுக்குத்தானும் இக்கல்வி விடையாதே!

குர்ஆன்: 26:224,245,226
கவிஞர்களையும் வழிகெட்டவர்கள்தாம் பின்பற்றுகிறார்கள், நிச்சயமாக, அவர்கள் ஒவ்வொரு திடலிலும் தட்டழிந்து திரிகிறார்கள் என்பதை நீர் பார்க்கவில்லையா? நிச்சயமாக, அவர்கள் செய்யாத காரியங்களைச் (செய்ததாக)க் கூறுகிறார்கள்.

பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்து பொய்யிலேயே வாழ்ந்துகொண்டு திடலுக்குத் திடல் தட்டழிந்து திரியும் புலவர் மணிகள் தஜ்ஜாலின் ஒலிக்குத் தாளம் வாசிப்பதில் நமக்கென்றும் கவலையே கிடையாது. இவர்களிடத்தில் தீனுல் இஸ்லாத்தின் புதுக்கல்வியில்லாத குற்றம்தான் அது.

இஸ்லாம் என்ற லேபலுடனும் தொழுகையென்ற கேடயததுடனும் நடமாடும் லஹ்னத்துக்குள்ளான இந்த வழிகெட்ட கூட்டத்தை விட்டும் இறைவன் நம் அனைவரையும் காப்பானாக.

பத்துவா (மார்க்கத் தீர்ப்பு)

வழிகெட்ட கூட்டங்களை இனம்காட்டித்தந்து பல மார்க்கத் தீர்ப்புக்களை (பத்துவாக்களை) எமது முன்னோரான பல பெரியார்கள் எமக்கு எழுதித்தந்துள்ளார்கள். அந்த பத்துவாக்களில் ஒன்றைமட்டும் இங்கே தருகிறேன். இன்ஸா அல்லாஹ் எமது நூலின் அடுத்த பாகங்களில் படிப்படியாய் தரலாமென்று நம்புகிறேன்.

"பத்துவா"



இதன் சாரம் :

ஹம்து ஸலவாத் ஸலாமுக்குப்பின் கூறுகிறேன். இந்தக் கூட்டத்தினர் குலாம் அஹமது காதியானி, றஸீது அஹமத், இவரைப் பின்பற்றிய கலீல் அஹமது அம்பேட்டி, அஸ்றபு அலி போன்றவர்களும் (அவர்களைப் போன்றோர் பின்பற்றியவர்களும்) காபீர்களே என்பதில் கொஞ்சமும் சந்தேகமே இல்லை. எவ்வகையிலும் இவர்களைக் காபீர் என்பதில் சந்தேகிப்பவன்கூடக் காபீர் என்பதில் சந்தேகமில்லை. இவர்களில் சிலர் தீனை (மார்க்கத்தை)ப் புறமாக வீசிவிட்டார்கள். சிலர் மார்க்கத்தில் மிக முக்கியமானவையும் எல்லா முஸ்லீம்களாலும் ஒப்புக்

கொள்ளப்பட்டவையுமான விஷயங்களை மறுப்பதையும் இன்னொருவர் றசூல் (ஸல்) அவர்கள் இறுதி நபியென்பதை மறுத்துத்தானும் நபியென்று தாவாச் செய்வதையும் இன்னொருவர் தன்னை ஈஸா (அலை) என்று வாதிப்பதையும் இன்னொருவர் தன்னை மஹ்தியென்று கூறுவதையும் காண்பாய். இவர்கள் யாவரிலும் வெளிக்கு அற்பமானவர்களாகவும் அந்தரங்கத்தில் கடுமையானவர்களாகவும் இருப்பவர்கள் வஹ்ஹாபிஸக் கூட்டங்களாகும். அல்லாஹ் அவர்களைச் சபிப்பானாக (லஹ்னத்துச் செய்வானாக) நரகத்தை அவர்கள் ஒதுங்குந்தலமாக ஆக்குவானாக. இவர்கள் பொதுமக்களை ஏமாற்றுகிறார்கள். தாங்கள்தான் றசூல் (ஸல்) அவர்களுடைய சுன்னத்தைப் பின்பற்றுகிறவர்களென்றும் ஏனையோர் இமாம்கள் நல்லோர் யாவரும் அவர்களைப் பின்பற்றிய யாவரும் பித்அத்துக்காரர்களென்றும் மார்க்கத்துக்குப் புறம்பானவர்கள், மார்க்கத்தை விட்டு விட்டவர்களென்றும் கூறுகிறார்கள். முன்னோர்களான (ஸலபுஸ்ஸாலிஹீன்களான) அந்த நல்லடியார்கள் றசூல்(ஸல்) அவர்களைப் பின்பற்றி நடக்கவில்லையென்று கூறினால் வேறு யார் தான் றசூல் (ஸல்) அவர்களைப் பின்பற்றி அவ்வழியில் செல்கிறவர்களென்பதை நான் அறியவேண்டும். இப்படிக்கு:- ஸெய்யது இஸ்மாயில் இப்னுஸெய்யிது கலீல், (மக்கா மதீனா முனவ்வறா) உலமாக்கள் 35 பேருக்கும் தலைவராயிருந்து அவர்கள் இப்பத்துவாவை வழங்கியிருக்கிறார்கள்.

இந்த பத்துவாவில் குறிப்பிடப்பட்ட றஸீது அஹமது கொங்கோஹீ கலீல் அஹமது அம்பேட்டி, அஸ்றப் அலிதானவி, ஆகிய இவர்கள்தான் தப்லிக்ஜமாஅத்தின் ஸ்தாபகர் இல்யாஸின் ஆசிரியர்கள் இவர்களுடன்தான் இல்யாஸ் தன் ஆயுள் முழுமையையும் கழித்தவர். இந்த ஆசிரியர்கள் தன் உயிரிலும் உடலிலும் குடி கொண்டவர்கள் என்று இந்த இல்யாஸ் அவருடைய நூலில் கூறியுள்ளார். இல்யாஸ் ஔர்உன்கீதீனித.்.வது (இல்யாஸும் அவரின் மார்க்க அழைப்பும்) என்ற நூலைப் பார்வையிடுங்கள். அந்நூலில் நாம் இங்கே கூறாத பற்பல மார்க்க முரணான செய்திகளைக் காணலாம். மேலும் இந்த இல்யாஸ் கூறுகிறார், அஸ்றப் அலி தானவி மிகவும் பெரிய வேலையைச்

செய்திருக்கிறார்களா கையால் தப்லீக்கின் முறை என்னுடையதாகவும் போதனை அவர்களுடையதாகவும் இருக்க வேண்டும் என்பதே என் விருப்பம். ஆதலால் இவ்விதத்தில் அஸ்றப் அலிதானவியின் போதனை உலகெங்கும் பிரஸ்தாபமாக வேண்டும் என்று (இல்யாஸ்) கூறியிருக்கிறார். இவ்விஷயத்தை நீங்கள் தெளிவாய் அறியவேண்டுமானால் மல்பூளாத் இல்யாஸின் வார்த்தைகள் என்ற நூலைப் பார்வையிடுங்கள். தப்லீக் என்பது வஹ்ஹாபிஸத்தைப் பரப்பக் கையாளப்படும் ஓரு லேபலேதான்.

இல்யாஸ் அஸ்றப் அலிதானவியையும் அவரின் சகாக்களையும் பின்பற்றியவர்களென்றும் அஸ்றப் அலிதானவி போன்றோர் அப்துல்வஹ்ஹாப் நஜ்தியைப் பின்பற்றியவர்களென்றும் இவர்கள் யாவரும் காபீர்களும் முர்த்தத்துகளுமேயென்றும் நாம் காட்டிய பத்துவாவின்படி நிரூபணமாகிறது. இங்கே தந்துள்ள பத்துவா "ஹுஸாமுல்ஹறமைன்" பத்துவாக்களில் ஒன்றுமட்டும்தான் இது மக்காமதீனாக்களிலுள்ள 35 உலமாக்களால் ஹிஜ்ரி 1328ல் அசசிட்டு வெளியிடப்பட்டதாகும். மேலும் இந்தியாவிலுள்ள 268 உலமாக்கள் ஹிஜ்ரி 1345ல் "அஸ்ஸவாரிமுல்ஹிந்தியா"என்று ஓரு பத்துவாநூலை வெளியிட்டு அதில் நாம் முன்புகூறிய கூட்டத்தினர் காபீர்களும் முர்த்தத்துகளும்தான் என்று தீர்ப்புக்கூறியுள்ளார்கள். மேலும் நுஸ்றத்தேஆஸ்மானி என்ற நூலில் மேற்காட்டிய கூட்டத்தினர் காபீர்களும் முர்த்தத்துகளும்தான் என்று தெளிவான விபரம் தரப்பட்டுள்ளது. மேலும் "முபல்லிகேவஹ்ஹாபியயாகீஜாரி" (வஹ்ஹாபிஸப் பிரசாரக்கருத்துக்கு ஒப்பாரி) என்ற பெயரோடு 94 உலமாக்கள் ஒன்றுகூடி ஒப்பமிட்டு ஹிஜ்ரி 1349ல் வெளியிடப்பட்ட ஓர் பத்துவாகிதாபு இருக்கிறது. இதிலும் இக்கூட்டத்தினர் காபீர்களும் முர்த்தத்துகளுமே என்று தீர்ப்புச் செய்யப்பட்டிருக்கிறது. விரும்புவோர் இந்த நூற்களை வாசித்து விளங்கித் தெளிவு பெறுங்கள். இவ்வித நூற்களைப் பெறவிரும்பினால்: இக்பால் அகமது றஜ்விகுதுபுகானா பஜார் சந்தல்காண். பறேஸி U.P என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். முன்பு நான் தந்துள்ள விலாசத்திலும் பெறலாம்.

நாம் முன்பு விளக்கிய விவரங்களின்படியும் குர்ஆனுடைய இறுதித் தீர்ப்பின்படியும் ஈமானின்(கலிமாவின்) உண்மை எல்லாம் இறைவன் என்பதல்ல என்ற நூலை எழுதிய மருதமுனையைச் சேர்ந்த ஆசிரியர் சலாஹுத்தீன் என்பவரும் அவருக்கு முன்னுரை வழங்கிய மருதமுனை மௌலவி A. அபூஉபைதா என்பவரும், இவர்களையும் இவர்களின் நூலையும் உண்மையென்று ஒப்புக் கொண்ட மற்றோரும் நிச்சயமாகக் காபீர்கள் என்றும் முர்த்ததுக்க ளென்றும் நிரூபணமாய்விட்டது. இந்த முடிவு என்னுடையதல்ல. வியாக்கியானம்தான் என்னுடையது. தீர்ப்பு மக்காமதீனா முனவ்வறா சுன்னத்வல்ஜமாஅத் உலமாப் பெருமக்களான 35 அறிஞர்களுடைய தீர்ப்பாகும். அல்லாஹ் றசூலுக்கு மாறாய்த் தீனைப்புரட்டி மக்களை வழிகேட்டில் ஆக்கிக்கொண்டிருக்கிற இந்த முர்த்தத்துகளுக்கு அலலாஹ் றசூலினதும் நல்லடியார்களினதும் சாபம் உண்டாவதாக. இக்கூட்டத்தைவிட்டும் மூ.்.மீன்களை இறைவன் காப்பாற்றுவானாக. ஆமீன்.

ஹதீஸ்:

கடைசிக்காலத்தில் பொய்யர்களும் ஏமாற்றுக்காரர்களும் வருவார்கள். நீங்கள் உங்கள் மூதாதைகளும் கேட்டிராத சங்கதிகளையெல்லாம் உங்களிடம் கூறுவார்கள். (மூ.்.மீன்களே) அவர்களை விட்டும் நீங்கள் தூரமாகி இருங்கள். அவர்களை உங்களிடம் வரவிடாதீர்கள் இப்படியிருப்பீர்களேயானால் அவர்கள் உங்களை வழிகெடுக்கவோ உங்களைப் பித்னாவில் போடவோ முடியாது. என்று றசூல் (ஸல்) அவர்கள் கூறினர்.

அறிவிப்பவர் : அபூஹுறைறாறலி)

ஆதாரம் : முஸ்லீம்

இதைப்போன்ற இன்னும் பல ஹதீஸ்கள் இருக்கின்றன. இன்றுள்ள தப்லீக் உண்மையாகவே இஸ்லாமென்ற லேபலோடும் தொழுகையென்ற வேஷத்தோடும் பித்அத்தான வஹ்ஹாபிஸ, இல்யாஸிஸக் கொள்கையை மக்களிடையே புகுத்தும் இயக்கமாகும். இக்கூட்டம் சுன்னத்வல்ஜமாஅத்தினரின் கொள்கையை முற்றாய் மறுக்கும் கூட்டமாகும். ஆகவே அறிவுடைய மக்கள் இவர்களைப் பின்பற்றாமலும் இவர்களைப்

பள்ளிவாயல்களில் நுழையவிடாமலும் தடுத்து நிறுத்திப் பாமரமக்களைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பொதுமக்களிலுள்ள அறிஞர்கள் இம்முயற்சியைக் கைக்கொள்ளாவிடில் இன்னும் ஒருசில வருடங்களுக்குள் மக்களில் பெரும்பாலார் லாஇலாஹ இல்லல்லாஹ் இல்யாஸ் றசூலுல்லாஹ் என்று கலிமாக் கூறவேண்டியநிலை நிச்சயமாக ஏற்படலாம். இந்த வழிகெட்ட கூட்டம் அத்வைதம் இந்துக்களின் கொள்கையென்று முன்பு ஊளையிட்டது. 1 + 0 = 2 ஆகுமா. மனோ இச்சை வேதமாகுமா? என்ற நூலை எனது மாணவர் ஏ.ஜி.ஹமீத் எழுதிய பின்பு அவர்காட்டிய ஆதாரங்களை இவர்களால் மறுக்க முடியாதிருந்ததால் இப்போது அத்வைதம் என்ற சொல்லை விட்டு விட்டு வஹ்தத்துல் வுஜூதுக்கொள்கை கிறிஸ்தவர்களால் உருவாக்கப்பட்டு இஸ்லாத்தில் நுழைக்கப்பட்டதென்று கொத்துவா பிரசங்கம் செய்கிறார்கள். இவர்களின் கூற்றுக்கு ஆதாரம் கேட்டால் மேலும் கீழும் விழிக்கிறார்கள். இக்கூட்டம் எந்த மதத்தை எந்தச் சமூகததைச் சேர்ந்தவர்கள் என்பதை வாசகநேயர்களே தீர்ப்புச் செய்யுங்கள். இக்கூட்டம் குப்புற வீழ்ந்தபிறகும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று கூறுகிறதே! வெட்கம்தான் எங்கேபோய் மறைந்து கொண்டதோ நாமறியோம். சுன்னத்வல்ஜமாஅத்துக் கூட்டம் தாங்களே என்று கூறுகிற இவர்களுக்கு சுன்னத்வல் ஜமா அத்தென்றால் என்ன? அதன் கொள்கை என்ன? என்பதே தெரியாது. மக்களை ஏமாற்றவே இப்படிக் கூறுகிறார்கள்.

ஹதீஸ்:

இறுதிக்காலத்தில் ஆற்றல் அனுபவமில்லாத மடையர்கள் வருவார்கள். வெளித்தோற்றத்தில் வெளியரங்கமான தொழுகை, நோன்பு முதலாம் அமல்களில் மிகப்பேணுதலாய் இருப்பார்கள். ஆனால், அவர்கள் கெட்ட கொள்கையுடையவர்களாகவும் பிசகான நம்பிக்கை (ஈமான்) கொண்டவர்களாகவும் இருப்பார்கள் என்று றசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஸயீதுல் குத்ரிரலி)
ஆதாரம் : புஹாரி

இப்னுமாஜாவில் நல்லோர்களுடைய வார்த்தைகளைச் சொல்லிக் காட்டுவார்கள் என்ற வசனம் இந்த ஹதீஸில்

மேலதிகமாகக் கூறப்பட்டிருக்கிறது. இன்று அமுலிலுள்ள தப்லீக் ஜமா அத்தினர் முஹ்தஸிலாக்களினதும் காரிஜியாக்களினதும் லாஹிரி யாக்களினதும் கொள்கைகளை ஒன்றுதிரட்டித் தங்கள் இஷ்டம்போல அவசியத்துக்கேற்றபடி, மக்களை மடையர்களாக்கி வழிகெடுப்பதற் காகக் கையாளுகிறார்கள். உலமாக்களிலும் ஒரு கூட்டம் இந்த தஜ்ஜால்களின் வாலில் தொங்கிக்கொண்டிருக்கும் போது பாமர மக்கள் என்னசெய்வார்கள்? இவ்வித வழிகெட்ட கூட்டத்தைவிட்டு விலகியிருப்பதே நல்லது.

குர்ஆன்: 16:108

இத்தகையோரின் இருதயங்கள், மீதும் செவிகளின் மீதும், கண்களின் மீதும் அல்லாஹ் முத்திரையிட்டுவிட்டான். இவர்கள்தான் (தங்களின் இம்மை மறுமைகளின் தீயமுடிவை) உணர்ந்து கொள்ளாதவர்கள்.

குர்ஆன்: 41:26

(இந்த) காபீர்கள் (மக்களை நோக்கி) ''நீங்கள் இந்தக் குர்ஆனை (உங்கள் செவியாலும் கேட்காதீர்கள்) அதில் குழப்பம் உண்டு பண்ணுங்கள், அதனால் நீங்கள் ஜெயித்துவிடுவீர்கள்'' என்றும் கூறுகின்றனர்.

தப்லீக்கின் வாலில் தொங்கிக்கொண்டு ஊஞ்சலாடுகிற ஒருசில அரைகுறை மௌலவி லேபல்கள் குர்ஆனைப் பாராதீர்கள் கேளாதீர்கள் விளங்கமாட்டீர்கள் வழிகெட்டுவிடுவீர்களென்றுதானே அச்சமுறுத்துகிறார்கள். எல்லா மக்களும் குர்ஆனை வாசித்து விளங்கிக்கொண்டால் இவர்கள் மக்களை மாடாய் மேய்க்கும் தொழில் பறிபோய்விடுமல்லவா?

இவர்களின் உளறலை நோக்கினால் றசூலுடைய உம்மத்திலுள்ள முஸ்லீம்கள் தங்கள் வேதநூலையே புரட்டிப் பாராத சிந்தனையற்ற மூடர்களாய் வாழவேண்டுமென்றே இவர்கள் விரும்புகிறார்களென்பது தென்படுகிறது. இப்படி ஏன் விரும்புகிறார்கள்? தங்கள் கௌரவத்தை பாதுகாக்கத்தான். இன்னோர் தங்கள் மனோ இச்சையைத் தெய்வமாய் எடுத்துக் கொண்டவர்கள், இவர்கள் இஸ்லாத்தை

உயிர்ப்பிக்கிறார்களா? இஸ்லாத்தை அழித்துக் கொணடிருக்கிறார்களா? இஸ்லாத்தின் லேபலைப் போட்டுக் கொண்டு, குழந்தைகளை ஏமாற்ற இனிப்புப் பண்டத்தைப் பயன்படுத்துவதுபோல, பாமர முஸ்லீம்களை ஏமாற்றத் தொழுகையையும் தாடி, தலைப் பாகை, தஸ்பீஹ் மணி, மிஸ்வாக்குக் குச்சி போன்றவற்றையும் பயன்படுத்துகிறார்கள்.

குர்ஆன்: 4:82

(இந்த) குர்ஆனை அவர்கள் ஆராய்ந்து பார்க்கமாட்டார்களா? (இது) அல்லாஹ் அல்லாதவரிடமிருந்து வந்திருந்தால், இதில் அனேக முரண்பாடுகளை அவர்கள் காண்பார்கள்.

நிச்சயமாக குர்ஆனை ஆராய்ந்து பார்க்கவேண்டும். ஒரு ஆயத்து இன்னோர் ஆயத்தை உறுதிப்படுத்துவதையும் தெளஹீதுக்கு மாற்றமான ஒரு சிறுவசனம்கூடக் குர்ஆனில் கிடைக்கவே கிடையாதென்பதையும் நாம் உணரவேண்டும்.

குர்ஆன்: 44:57,58

(நபியே! இக்குர்ஆன்) உமது இறைவனின் அருளாகும். இது மகத்தான பெரும் பாக்கியமாகும். அவர்கள்(ஆராய்ந்து) நல்லுணர்ச்சி பெறும் பொருட்டே (இவ்வேதத்தை) நாம் உம்முடைய மொழியில் எழிதாக்கி வைத்தோம்.

ஹதீஸ்:

காலங்களில் சிறந்தது என்னுடைய காலமும் பிறகு என்காலத்தை அடுத்தவர்களின் காலமும் பிறகு அவர்களை அடுத்தவர்களின் காலமும் ஆகும். அதன்பின் பொய்பரவிவிடும் என்று றசூல்(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர் : உமர்(றலி)
ஆதாரம் : திர்மிதி

ஹதீஸ்:

என் சமூகத்தவரின் கிலாபத் (ஆட்சி) முப்பது ஆண்டுகள் இருகும். அதன்பின் அரசுரிமையாகிவிடும் என்று றசூல் (ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஸ.ஃபீனா(றலி)

ஆதாரம் : அபூதாவூத், திர்மிதி.

ஹதீஸ்:

இந்த மார்க்கம் 12 கலீபாக்கள் வரையிலும் மிகைத்தும் ஆற்றல் வாய்ந்ததாகவும் இருக்கும். அவர்கள் அனைவரும் குறைஷீகளாகவே இருப்பார்கள் என்று றசூல் (ஸல்) அவர்கள் கூற அதன்பின் என்ன நடக்கும்? என்று கேட்க வி'மமும், குழப்பமும் ஏற்பட்டுவிடும் என்று கூறினார்கள்

அறிவிப்பவர் : ஜாபிர் இப்னு ஸமூரா(றலி)
ஆதாரம் : புஹாரி, முஸ்லீம், அபூதாவுத், திர்மிதி

ஹதீஸ்:

நபி(ஸல்) அவர்களுடைய காலத்தில் இருந்த அமல்களில் நான் இப்போது ஒன்றையேனும் காணவில்லையே என்று அனஸ் (றலி) அவர்கள் கூறினார்கள், தொழுகை இருக்கிறதல்லவா? என்று அவர்களிடம் கேட்கப்பட்டபோது அதிலும் நீங்கள் எவ்வளவோ மாற்றங்களைச் செய்துவிடவில்லையா? என்று தாங்கள் மறுகேள்வி விடுத்ததாகக் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அனஸ்(றலி) அவர்களே
ஆதாரம் : திர்மிதி

ஹதீஸ்:

இஸ்லாத்தின் திரிகை (மேன்மை) 35 அல்லது 37 ஆண்டுகள் சுற்றிக் கொண்டிருக்கும், பின்னர் அவர்கள் அழிந்தால் முன் அழிந்தவர்களுடைய வழி இருக்கிறது. அவர்களிடம் அவர்களின் மார்க்கம் நிலைபெற்றிருக்குமானால் 70 ஆண்டுகள் நிலைபெறறிருக்கும் என்று றசூல் (ஸல்) அவர்கள் கூறினர். இஸ்லாத்தின் ஆரம்பகாலத்திலிருந்தா அல்லது ஹிஜ்ரியில் இருந்தா என்று நான் வினவினேன். ஆரம்பகாலத்திலிருந்துதான் என்று அவர்கள் கூறினர்.

அறிவிப்பவர் : இப்னுமஸ்வூத்(றலி)
ஆதாரம் : அபூதாவுத்

இன்னும் பல ஹதீஸ்களைத் தரமுடியும். இவற்றிலிருந்து நாம் அறிவது றசூலின் மறைவுக்குப் பின் சுமார் 30 வருடங்களில் இருந்து இன்றுவரை மார்க்கம் குர்ஆன் ஹதீஸுகளுக்கு மாறாகப் படிப்படியாய்ப் புரட்டப்பட்டுக்கொண்டே இருக்கிறது. இந்தப் புரட்டல்வாதிகளில் மிகக்கடினமான ஷைத்தான்கள்தான் இன்று இஸ்லாத்தின் லேபலில் உலவும் வஹ்ஹாபிஸ, இல்யாஸிஸக் கூட்டங்கள்.

குர்ஆன்: 10:39

என்கினும் அவர்களுக்குத் தெரியாததும் அதன் தாவீல் (விளக்கம், ஆதாரம்) அவர்களுக்குக் கிடைக்காததுமான சங்கதிகளைப் பொய்யென்று அவர்கள் கூறுவார்கள்.

குர்ஆன்: 8:22

நிச்சயமாக மிருகங்களில் அல்லாஹ்விடத்தில் மிகக் கேவலமானது (உண்மையைக் கேட்டு) அறிந்துகொள்ள முடியாத செவிடர்களும், (அறிந்தும் சொல்லமுடியாத) ஊமையர்களும்தான்.

இவ்வாயத்தின்படி எந்த ஒரு மார்க்க அறிவையும் (நல்லோரிடம் கற்றுக் கேட்டு விளங்கியறியாமல் "ஈமானின் உண்மை (கலிமாவின் உண்மை) எல்லாம் இறைவன் என்பதல்ல" என்ற நூலை எழுதிய ஆசிரியர் சலாஹுத்தீனும் அவருக்கு முன்னுரை வழங்கிய அபூஉபைதா என்பவரும் இந்த பித்அத் வேலைக்கு ஊக்கமூட்டிய ஜாஹிலியாக்காலப் பழைய கல்விக்கு அதிகாரியான பளீல் மகுலா என்பவரும் இவர்களுக்குப் பிரசாரகர்களாய் நின்று குர்ஆன் ஹதீஸுகளுக்கு மாறாய் ஊளையிட்ட ஹாபிஸ் இப்றா லெப்வை, பச்சோந்தி பிஸ்றுல்ஹாபியும் இவர்களை உண்மை கண்டவர்களும் மிகக் கேவலமான மிருகங்களாய் இருக்கிறார்கள். மிகக் கேவலமான மிருகம் எது? பன்றிதான். அடுத்தது கழுதை.

குர்ஆன் ஹதீஸுகளை ஏற்காதவன், ஆராய்ந்து விளங்கியறியாதவன் இஸ்லாத்துக்கு உயிரூட்டுவதாய் கூறி மக்களை மாடாய் மேய்ப்பவன் மனித உருவில் காட்சியளித்தாலும் உண்மையில் அவன் பன்றி கழுதை போன்ற கேவலமான மிருகமேதான். அறிவீனமும் அறிவும் போரிட்டால் அறிவு வெற்றிபெறும் என்பது நிச்சயம். அப்படியிருந்தும் அறிவீனம் பலாத்காரம் பிரயோகிக்க அடக்கு முறையைக் கையாளமுயன்றால் அவ்வறிவுக்குரியவன் மிருகமில்லாமல் வேறு எதுவாயிருக்க முடியும்? நிச்சயமாக மனிதனாய் இருக்க முடியாது. நாகரீகம் தெரியாத மிருகம் போன்ற காட்டு மிராண்டிகளால் அறிவுப் போராட்டம் நடாத்த முடியாதுதான். மொட்டையடித்து, மூடிமறைத்து, இருட்டடிப்புச் செய்வதே தொழிலாய்க் கொள்பவன் மிருகம்

மட்டுமல்ல, ஷைத்தானின் உற்ற தோழனாயும் இருப்பான். இவ்விதக் கூட்டம் இஸ்லாத்தை லேபலாய் கொண்டு மக்களை இருளில் தள்ளிவிடுவது மனிதர்களால் மன்னிக்கப்பட முடியாத குற்றமல்லவா? இஸ்லாத்துக்கும் இக்கூட்டத்துக்கும் எவ்வித தொடர்புமே கிடையாது.

குர்ஆன்: 6:123
அன்றி இவ்வாறே ஒவ்வோர் ஊரிலும் ஆங்காங்கேயுள்ள பாபிகளை நாம் தலைவர்களாக ஆக்கியிருக்கிறோம். அங்கு அவர்கள் விஷமம் செய்துகொண்டேயிருப்பார்கள், எனினும் அவர்கள் தங்களுக்கேயன்றிச் சதிசெய்துவிட முடியாது. (இதை) அவர்கள் உணர்ந்து கொள்ள மாட்டார்கள்.

இவ்விதமான மூடர்களால் எழுதப்பட்ட ஈமானின் (கலிமாவின்) உண்மை எல்லாம் இறைவனென்பதல்ல, என்ற நூலைப் பார்வையிடுகிற ஆராய்வு செய்கிற மக்கள், அதிலும் பிறமத ஆராய்ச்சியாளர்கள் இஸ்லாத்தைப்பற்றி அதன் கொள்கை விளக்கத்தைப் பற்றி என்னமுடிவுக்கு வருவார்களென்பதை பகுத்தறிவுடைய நாம் சிந்திக்க வேண்டும். இவ்விதமான நூற்களும் விளக்கங்களும் தான் இஸ்லாத்தின் புனிதத்தன்மையை மாசுபடுத்துகின்றனவென்பதை இந்த முர்த்தத்துக் கூட்டம் எப்படி உணரும்? உணர்வதற்குத்தான் அவர்களிடம் பகுத்தறிவு தொழிற்படுவதில்லையே. தலைக்குள் களிமண்ணை வைத்துக் கொண்டிருக்கிற, பன்றி கழுதைகளுக்கு ஒப்பான கால்நடைகளுக்கும் புனித இஸ்லாத்துக்கும் எவ்வித தொடர்புமே கிடையாது.

இது எனது தீர்ப்பல்ல, எமது இமாமும் நீதிபதியுமான குர்ஆனின் தீர்ப்பாகும். குர்ஆனின் 8:22ஆம் ஆயத்தை மீண்டும் வாசித்துப் பாருங்கள்.

இல்யாஸின் தவறான கொள்கை விளக்கத்தை நோட்டீஸ் மூலம் ஓர் கூட்டம் வெளியிட்டபோது அந்த நோட்டீஸின் தலையங்கத்தை மறைத்துவிட்டு, இக்கொள்கைதான் அப்துல்லாஹ்ப் பயில்வானின் கொள்கையென்று மக்கள் முன்னிலையில் பள்ளிவாசலுக்குள்ளிருந்து விளக்கம் தந்த ஜாஹீல்கள் பன்றி கழுதைகளான கெட்ட ஜந்துக்களே என்பதை நீங்கள்

நம்பவில்லையா? உண்மையைச் சொன்னால் மக்கள் இவர்களைத் தண்டித்திருப்பார்கள். அல்லது இவர்களைச் சமூகத்திலிருந்து ஒதுக்குவார்கள். ஆதலால்தான் அல்லாஹ் றசூலையும் ,நல்லடியார்களையும், மக்களையும் அற்பமாய் மதித்துத் தங்கள் வரட்டுக் கௌரவத்தைப் போலி வேஷத்தைக் காப்பாற்றுவதற்காக இந்தப் படுபொய்யான புரட்டலை அல்லாஹ்வுடைய பள்ளிவாசலுக்குள்ளிருந்தே பிரச்சாரம் செய்தார்கள். இவர்களுடைய நாவுக்கு இறைதண்டனை நிச்சயமாகக் கிடைக்கும். இவர்களை இமாம்களாக, மனிதர்களாக, முஸ்லிம்களாக, வணக்கவாளிகளாக நாம் கொள்ளலாமா? இவர்களுக்குப் பின்னால் நின்று தொழலாமா?

ஹதீஸ்:

கடைசி நாளையில் வருகிற தஜ்ஜாலைவிட வேறுசில தஜ்ஜால்களுக்கு நான் மிகப்பயப்படுகிறேன் என்று றசூல் (ஸல்) அவர்கள் கூற, அவர்கள் யாரென்று ஸஹாபாக்கள் வினவ வழிகேட்டில் ஜனங்களைத் தள்ளிவிடுகிற வழிகாட்டிகள் (இமாம்கள்) என்று பதில் கூறினார்கள்.

தொழுகை நடாத்தும் சறுக்கிய இமாம்களில் ஒருவர்தான் இல்யாஸின் கொள்கையை பயில்வானின் கொள்கையாய் மக்களுக்கு விளக்கம் தந்தவர் புரட்டிக்காட்டியவர்.

ஹதீஸ்:

மனிதர்களில் ஓருகாலம் வரும். அப்போது இஸ்லாத்தின் நாமமேயல்லாது அதன் சத்தியம் (உண்மை) இராது. குர்ஆனில் எழுத்தேயல்லாது அதன் உண்மையான அர்த்தம் இராது. அவர்களின் மஸ்ஜித் (பள்ளிவாசல்கள்) நேர்வழியின்றிக் கெட்டுப்போயிருக்கும். அவர்களின் உலமாக்கள் வானத்தின்கீழ் மிகக்கெட்ட ஜந்துக்களாய் இருப்பார்கள்.

(ஜந்துக்கள் என்பதில் கேவலமான விஷமுள்ள சிருட்டிகள் யாவும் அடங்கும்) இவ்விதமான மிருகக்கூட்டங்கள் மனிதராய் இருப்பது முடியாது. அவர்களுடைய பிறப்புரிமை அவர்களை விட்டுப் பிரிய முடியாதே.

மையித்துக்குத் தல்கீன் ஓதுவது உயிரோடிருக்கும் மனிதனுக்கு அறிவூட்டுவதற்காகத்தான். அந்தத் தல்கீனில் உன்னுடைய இமாம் குர்ஆன்தான் என்று வலியுறுத்தப்படுகிறது, இதைக்கேட்டு மனப்பாடமிட்டுக்கொண்ட மனிதன் அப்துல் வஹ்ஹாப் நஜ்தி, இல்யாஸ் போன்ற வழிகெட்ட மனிதர்களை இமாமாகக் கொள்வது முறையாகுமா? குர்ஆன்தான் எமது இமாம். ஹதீஸ்கள்தான் குர்ஆனின் விளக்கம். இவற்றைவிட இவற்றிற்கு மாறாய்க் கூறுகிற எந்த ஒரு மனிதனையும் இமாமாக்கிக் கொள்வது, நண்டு வேண்டாம் கையைவிடு என்று சொல்லும் நிலைக்கு ஆளாக்கும் என்பதை நாம் ஒவ்வோர் மனிதரும் உணரவேண்டும்.

இம்மையிலும் மறுமையிலும் கலிமாவைக் கொண்டு வெற்றி பெற வேண்டும் என்று நாம் விரும்பினால் முதலில் எம்மிடமுள்ள சில இருள்திரைகளை நீக்கிக்கொள்ள வேண்டும். எமது முதல் நூலில் இந்த விவரம் தந்துள்ளேன். உலகமக்கள் யாவருக்கும் பொதுமறையே குர்ஆன் என்பதை நாம் நம்பவேண்டும். உலகிலுள்ள எல்லா மதங்களுடையவும் நோக்கம் தௌஹீதை உறுதிப்படுத்துவதும் மக்களைச் சீராய் வாழவைப்பதுமே என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். ஆகையால் இன, மத, தேச, சமூகத்து வேஷங்களில் மாட்டிக்கொண்டு உண்மையைக் கண்டறிய முடியாது. உலகின் நாலாபக்கங்களிலுமுள்ள எல்லா இன, மத மக்களிடையேயும் நல்ல மனிதர்களும் தெளிந்த அறிவுடையவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்கள் கலிமாவைக் கூறாத காரணத்தினால் இவர்களின் பேச்சை எழுத்தை ஏற்காமல் மறுப்பது அறிவுடமையாகாது. கலிமாவை நாவினால் கூறுவது ஈமானாகாது. ஈமான் உள்ளத்திலுள்ளது.

குர்ஆன்: 3:110

நன்மையான காரியத்தை ஏவி, பாவத்திலிருந்து விலக்கி மெய்யாகவே அல்லாஹ்வை விசுவாசிக்கிற நீங்கள்தான், மனிதர்களில் தோன்றிய சமுதாயத்தினரிலெல்லாம் மிக்க மேன்மையானவர்கள். (இவ்வாறே) வேதத்தையுடையவர்களும் விசுவாசித்தால், அது அவர்களுக்குத்தான் மிக்க நன்று - மூ.மீன்களும் அவர்களிலிருந்த போதிலும் அவர்களில் பெரும்பாலார் பாபிகளாகவே இருக்கின்றனர்.

இவ்வாயத்தில் பல நுட்பங்கள் தென்படுகின்றன. நன்மை எது? பாவம் எது? என்பதை நான் முன்பே விளக்கியுள்ளேன். நன்மையென்பது தௌஹீதில் நிலைப்படுவதே. பாவம் என்பது ஷிர்க்கில் மூழ்குவதாகும். அல்லாஹ்வை விசுவாசித்தல் என்பதில் ஈமான் கொள்ள வேண்டிய ஆறு விஷயங்களும் அடங்கியுள்ளன. இவ்வகையினர்தான் நல்லடியார்களான பெரியார்கள், மூ.்மீன்கள் இந்த மூ.்மீன்கள் அஹ்லுல்கிதாபிகளான மக்களிடையேயும் இருகின்றார்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது. இவர்களுடைய சிற்சில நடைமுறைகள் சமூக கலாச்சாரப் பழக்கங்கள் வேறுபட்டிருப்பினும் நாம் அதைப் பொருட்படுத்த வேண்டிய அவசியமில்லை. அவர்களால் உணர்த்தப்படும் விஷயம் குர்ஆன் ஹதீஸ் முதலாம் ஆதாரங்களோடு ஒத்திருந்தால் அதை நாம் ஏற்றுக்கொள்வதில் எவ்வித தவறுமே கிடையாது. ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்களை இமாம்கள் கூறியிருப்பினும் எல்லோரும் சரியான ஆதாரங்களோடுதான் கூறினார்கள். ஆகவே உலக மக்களில் ஒவ்வோர் கூட்டத்தினர் ஒவ்வோர் இமாமைப் பின்பற்றுகிறார்கள். இதிலொன்றும் தவறே கிடையாது. ஆதாரத்தோடுள்ள எந்த ஓர் விஷயத்தையும், எமது நிலைமைக்கேற்ற விபரத்தையும், எவர் கூறினாலும் துவேஷ உணர்வோடு அதை மறுக்க மறைக்க முற்படக்கூடாது. மக்களிடம் மூடலாம், மறைக்கலாம், இருட்டடிப்புச் செய்யலாம். ஆனால் எம்மோடு எம் பிராண நரம்பிலும் சமீபமாய் இருக்கிற இறைவனை ஏமாற்ற முடியாது. மறைக்கப் புரட்ட முடியாது. இதை உணர்ந்து கொள்ளாதவன் இறைவனை விசுவாசிக்காத ஈமான் கொள்ளாத சுத்தமான காபீரும் பித்அத் வாதியுமாகவே இருப்பான். தௌஹதீதென்ற நன்மையை மூடிமறைத்து, ஷிர்க்கென்ற தீமையைப் பிரசாரம் செய்து மக்களை வழிகெடுப்பவன், இறைவனால் மேன்மைப் படுத்தப்பட்ட சமூகமான முஸ்லீம்களில் உள்ளவனாய் இருக்க முடியாது. இவ்விதமானவன் நிச்சயமாக ஷைத்தானுடைய கையாளாகவே இருப்பான். இவன் மக்களை வழிகெடுக்கும் நோக்காகவே இஸ்லாம் என்ற லேபலைப் போட்டுக்கொண்டிருக்கிறான்.

முற்றிலும் ஞானமே நிறைந்துள்ள இறைவேதமான குர்ஆனை தன் வாழ்நாளில் ஒருமுறையேனும் முற்றாய் வாசித்துப் பாராத, அல்லது வாசித்தும் விளங்கிக்கொள்ள முடியாத ஒருவன், ஞானம் இந்துமதத்திலுள்ளதேயன்றி இஸ்லாத்தில் உள்ளதல்ல என்று கூறினால் இவனை நாம் ஓரு முஸ்லீமாக மூ.்மீனாக ஏற்க முடியுமா? இவன் பள்ளிவாசலில் நுழைய இஸ்லாத்தைப் போதிக்கத் தகுதியுடையவன்தானா? அறிவுடைய சமுதாயம் இவ்வின மக்களுக்கு கலிமாச் சொல்லிக்கொடுத்து இஸ்லாத்தில் ஆக்கியபிறகுதான் அல்லாஹ்வுடைய பள்ளியில் நுழைய அனுமதியளிக்க வேண்டும். ஏனென்றால் குர்ஆனைப் புரட்டி இஸ்லாத்தை அழித்தொழிப்பதே இவர்களின் நோக்கம். இது மிகமிகப் பாரதூரமான ஓரு விஷமச் செயலாகும். பித்னா செய்வது பித்னா செய்ய மக்களைத் தூண்டுவது கொலையைவிடக் கொடிய பாபமாகும்.

குர்ஆன்: 2:217
விஷமம் (பித்னா) கொலையைவிட மிகக்கொடியது.

மதவிஷயத்தில் மட்டுமல்லாமல் பிற விஷயங்களில் கூடத் தான்தோன்றித்தனமாகச் சட்டங்களை நுழைப்பதும் பலாத்கார அடக்குமுறைகளைக் கையாள்வதும் மனித சமுதாயத்திலுள்ள நல்ல மனிதர்களைக்கூட மிருகமாய் மாற்றும் என்பதை இந்த வழிகெட்ட கூட்டம் இனிமேலாவது உணர்ந்துகொள்வது நல்லது. வெற்றி தோல்வி கணிப்பது ஓரு விஷயம். உண்மையைக் கண்டறிவதும் உண்மையோடு ஒன்றிக்கொள்வதும் வேறொரு விஷயம். ஓரு உண்மையான மூ.்மீன் பத்துக் காபீர்களை வெற்றிகொள்வார் என்பது குர்ஆனின் உபதேசம், சரித்திரம் உணர்த்தும் உண்மை.

குர்ஆன்: 23:88,89
சகல பொருட்களின் அதிகாரம் யார் கையில் இருக்கிறது? யாராலும் இரட்சிக்கப்படாத (ஆனால் யாவரையும்) இரட்சிக்கக் கூடியவன் யார்? நீங்கள் அறிந்திருந்தால் (கூறுங்கள்) எனக் கூறும் அதற்கவர்கள் (சகல அதிகாரமும்) அல்லாஹ்வுடயதுதான் என்று கூறுவார்கள். (அவ்வாறாயின்) நீங்கள் உங்களறிவை எங்கு இழந்துவிட்டீர்கள்? என்று கேளும்.

அல்லாஹ்வையும் அல்லாஹ்வின் அதிகாரத்தையும் அறிந்து கொள்ளாமல் தௌஹீதை பலாத்காரத்தினால் மூடிமறைத்துப் புரட்டிவிட நினைக்கிற, பகுத்தறிவை இழந்துவிட்ட, தலைக்குள் மூளைக்குப் பதிலாய்க் களிமண்ணை வைத்துக்கொண்டிருக்கிற நாகரீகம் தெரியாத பொதிசுமந்த கழுதைகள் அறிவுப் போராட்டம் செய்யமுடியாது. அறிவிடத்தில் அறிவீனமும் தொழிற்படாது. ஆயுதத்தை உருவாக்கியதே அறிவுதானே. ஆகவே ஆயுதம் அறிவை மீறமுடியாது. மனோஇச்சையைத் தெய்வமாகக் கொண்டவனுக்கு எவராலும் பாதுகாப்பளிக்கவும் முடியாது.

குர்ஆன்: 25:43
(நபியே!) தன் (சரீர இச்சையை) மனோ இச்சையைத் தன்னுடைய தெய்வமாக எவன் எடுத்துக்கொண்டானோ அவனை நீர் பார்த்தீரா? நீர் அவனுக்குப் பாதுகாப்பாளராய் இருப்பீரா?

குர்ஆன்: 25:52
ஆகவே, (நபியே!) நீர் இந்த நிராகரிப்போருக்கு வழிப்படாதீர்; அன்றி (குர்ஆன்ஆகிய) இதனை (ஆதாரமாய்)க் கொண்டு நீர் அவர்களுடன் பலமாகத் தர்க்கம் செய்யும்.

மருதமுனை M.I.M.சலாஹுத்தீன், மௌலவி A.அபூஉபைதா, T.M.S.M.பளீல்மௌலா(னா), நற்பிட்டிமுனை ஹாபீஸ், I.L.இப்றாலெப்பை, அக்கரைப்பற்று A.R.A.பிஸ்றுல் ஹாபி போன்ற வழிகெட்டவர்களின் சொந்தச் சொத்தல்ல இஸ்லாம் என்பது. உலகமக்களின் பொதுசொத்து இஸ்லாமும் குர்ஆன் ஹதீஸுகளும்.

ஆழமறியாமல் காலைவிடுவதும் ஆப்பைப்பிடுங்கி வாலை மாட்டிக் கொள்வதும் மீசையுள்ள ஆண்களுக்கு இந்த 21வது நூற்றாண்டில் பொருந்தாது. மானம்மதிப்புக்கடையில் வாங்கிக் கொள்ளக்கூடியதல்ல.

றசூல்(ஸல்) அவர்களுடைய நுபுவ்வத் என்ற பேரொளியைச் சஹாபாக்கள் நேரடியாய்ப் பெற்றுக்கொண்டவர்கள், பின்பு வந்த இறைநேசர்களான அவ்லியாக்கள் ஸஹாபாப் பெருமக்களிடமிருந்தே

அந்தப் பேரொளியைப் பெற்றிருக்கிறார்கள். நாம் அந்த ஒலிமார்களிலிருந்தே அந்தப் பேரொளியைப் பெறுகிறோம். ஈமானுடைய, இஸ்லாத்துடைய லாஹிர் விளக்கங்களை எத்திவைப்பவர்கள் புனிதமான உலமாக்கள். இவ்வுலமாக்களால் வெளிப்படுத்திக் காட்டப்படாத சில அகமியங்களை அவசியமானபோது விளக்கிக் காட்டி ஈமானை உறுதிப்படுத்தும் உபாயங்களைக் கையாள்வதும் இஸ்லாத்தில் நுழைக்கப்படும் பித்அத்துகளை வெட்டிவீழ்த்தி இஸ்லாத்துக்கு உயிரூட்டுவதும் அவ்லியாக்களின் வேலை. இவ்வித நல்லடியார்கள் எக்காலத்திலும் இருந்துகொண்டேயிருக்கிறார்கள். இவர்களில் ஒருசிலரால் எழுதப்பட்டவைதான் புத்துஹாத்துல் மக்கியா, புஸுஸுல்ஹிகம், இன்ஸான்காமீல், கலிமத்துல்ஹக்கி, துர்பத்துல்முர்ஸலா போன்ற நூற்கள். இந்த நூற்களின் ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் சிறந்த அறிஞர்களான அவ்லியாக்கள்தான். இவ்வித நூற்கள் சுன்னத்துவல் ஜமாஅத்தினரால் சனது நூற்களாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வித நூற்களைக் கண்ணினாலேயே கண்டுகொள்ளாமல் இருக்கும் போதும் இவற்றை இந்து ஞானத்தில் இருந்து திருடபபட்டவையென்றும் இவற்றை எழுதியவர்கள் காபீர்களேயென்றும் வாதிடுகிற கூட்டம் உண்மையாகவே இஸ்லாத்திலுள்ளதல்ல. இக்கூட்டம் அல்லாஹ் றசூலுடையவும் நல்லடியார்களுடையவும் சாபத்துக்குள்ளான முத்திரையிடப்பட்ட கூட்டமாகும். இவர்களிலுள்ளவர்கள்தான் றசூலையும் அவர்களைப் பின்பற்றிய நல்லடியார்களையும் பைத்தியக்காரர்கள் என்று கூறியவர்கள்.

குர்ஆன்: 37:35,36

''அலலாஹ் தவிர இலாஹு இல்லை''யென்று அவர்களுக்குக் கூறப்பட்டால், நிச்சயமாக அவர்கள் கர்வம்கொண்டு என்னே! நாங்கள் பைத்தியம் கொண்ட கவிவாணருக்காக எங்களுடைய இலாஹுகளை மெய்யாகவே விட்டுவிடுவோமா? என்று அவர்கள் கூறுகின்றனர்.

இவ்வாயத்து அல்லாஹ் தவிர இலாஹு இல்லையென்று கூறிய றசூலை மக்கள் பைத்தியம் என்றும் கவிவாணரென்றும் கூறினார்கள் என்பதை அறிவிக்கிறது. றசூலின்பின் வந்த

நல்லடியார்களும் மக்களால் இப்படித்தான் கூறப்பட்டார்கள். இப்போது சலாவுத்தீன், அபூஉபைதா, பளீல்மௌலா, ஹாபீஸ் இப்றாலெவ்வை போன்றோர் இதே வசனங்களைத்தானே கூறுகிறார்கள். அப்படியாயானால் இவர்கள் அபூஜஹ்லீன் கூட்டத்தினரென்பதில் ஆட்சேபனை உண்டா?

குர்ஆன்: 7:184
அவர்களுடைய தோழருக்கு(றசூல்) (ஸல்) அவர்களுக்கு எவ்வித பைத்தியமும் இல்லையென்பதை, அவர்கள் சிந்தித்து உணர்ந்து கொள்ள வேண்டாமா?

இவ்வாயத்தின்படி றசூல் (ஸல்) அவர்களுக்கோ அவர்களைப் பின்பற்றிக் கூறும் நல்லடியார்களுக்கோ பைத்தியமில்லையென்று இறைவன் சாட்சியம் கூறுகிறான். அப்படியானால் தௌஹீதை, அல்லாஹ் தவிர இலாஹ் இல்லையென்று கூறும் கூட்டம் பைத்தியக் கூட்டமாய் இருக்க முடியாது. இதற்கு மாறாக இவர்களைப் பைத்தியமாகக் காணும் சலாவுத்தீன், அபூஉபைதா, ஹாபீஸ், இப்றாலெவ்வை, பளீல் மவுலா போன்றோர்தான் சித்தசுவாதீன மற்ற பைத்தியக்காரர்களாய் இருக்கிறார்கள். இதைச் சிந்தித்து உணர அவர்களிடம்தான் நிதானமான பகுத்தறிவு கிடையாதே. மிருகங்களிடத்தில் பகுத்தறிவு முறையாய்த் தொழிற்பட முடியாதுதான். குர்ஆன் ஹதீஸ்களை (அல்லாஹ் றசூலை) மறுப்பவன் நல்லடியார்களை எதிர்ப்பவன் பகுத்தறிவு தொழிற்படாதவன் தோற்றத்தில் மனிதனாயிருப்பினும் அவனுடைய கல்பு பன்றியாக, கழுதையாக, குரங்காக மாற்றப்பட்டே இருக்கும். றசூலின் உம்மத்துக்களின் தோற்றத்தை மாற்றாமல் உள்ளத்தையே இறைவன் மாற்றுகிறான். இது றசூலின் உம்மத்துக்கு மட்டும் கொடுக்கப்பட்ட ஓர் விசேடம். முந்திய நபிமார்களின் உம்மத்துக்கள் மிருகங்களாகவே மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

எனது உம்மத்துகளில் நாற்பதுபேர் இப்றாஹீம் (அலை) அவர்களின் இதயத்தை உடையவர்களாக எந்த ஸமானிலும் இருந்து வருவார்கள். இறைவன் இவர்களைக் கொண்டு மக்களின் உடல், உள்ளப்பிணிகளை நீக்குவான். இவர்களுக்காகவே

மழையைப் பொழிய வைப்பான். இவர்களைக் கொண்டுதான் உலகமக்களுக்கு உதவிபுரியப்படும் என்று றசூல் (ஸல்) அவர்கள் அறிவிக்கிறார்கள். இதை தப்றானி என்ற கிதாபில் காணலாம். இவ்விதக் அவ்லியாக்களை ஏற்றுக்கொள்ளாமல் மறுக்கும் கூட்டம், வஹி, றிஸாலத், நுபுத்துவம், விலாயத், இல்ஹாமத், இல்முல்லத்துன்னீ, கஸ்பு, றூயா, மனாம் போன்ற இஸ்லாத்திலுள்ள அடிப்படை உண்மைகளை மறுப்பவர்கள் மட்டுமல்லாமல் பகுத்தறிவைக்கூட மறுப்பவர்களாய் இருக்கிறார்கள். தஜ்ஜாலின் கூட்டமாய் இருக்கிறார்கள். ஆகவே, இக்கூட்டத்தினர் பன்றி, கழுதைகளுக்கொப்பான கால்நடைகளே என்பதில் எள்ளளவும் சந்தேகமே கிடையாது. இவ்வித கால்நடைகளின் வெளி வேஷங்களையும் உட்கோலங்களையும் மக்களுக்குத் தெளிவாய் விளக்கிக்காட்டி மக்களை நேரான வழியில் செலுத்துவது ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள படித்தவர்கள், பட்டதாரிகளின் கடமையாகும். எவர், தான் படித்தறிந்த உண்மையின்படி அமல் செய்கிறாரோ அவர் அறியாததைப் படித்துக் கொடுப்பது இறைவனின் செயலாகும் என்பது றசூல் (ஸல்) அவர்களுடைய பொன்மொழி.

இந்த விவரங்களை வாசித்துக்கொண்டிருக்கிற நீங்கள் என்னிடத்தில் இப்போது ஒரு கேள்வி கேட்கிறீர்கள் என்பதை நானறிவேன். நீங்கள் தந்த விவரங்களில் மிகமிகக் கடினமான சொற்களைப் பாவித்து மிகக்கடினமான முறையில் இக்கூட்டத்தைத் தாக்கியுள்ளீர்களே! நல்ல மனிதர்கள் இவ்விதமாய் மக்களைக் கடிந்துகொள்வது சரியல்லவே! என்றுதான் என்னைக் கேட்கிறீர்கள். நியாயமான கேள்விதான். இதோ விடைதருகிறேன்.

எந்த ஒரு மனிதரையும் நான் என் சொந்தக் குரோதம் கொண்டு தாக்கவில்லை. நான் இந்த நூலை எழுதியதும் இதில் ஒரு பகிரங்க சவால்விட்டு ஓரிலட்ச ரூபாய் சன்மானம் தருவதாய்க் கூறியதும் என் கௌரவத்தைப் பாதுகாக்கவோ பழிதீர்க்கவோ அல்ல, என்பெயர் அப்துல்லாஹ். இந்த நாமத்தைப் பற்றி எள்ளளவும் அறியாத என் தாய்தந்தையர் எனக்கு இந்த நாமத்தைச்

சூட்டியிருந்தார்கள். எனது 28ஆவது வயது வரையிலும் இந்த நாமத்தை நான்கூட உணர்ந்துகொள்ளவில்லை. எவரும் எனக்கு உணர்த்தவும் இல்லை. எனது 28ஆவது வயதில் இறைவனின் அருட் கொடையைக் கொண்டு இந்த நாமம் எனக்குரியதே என்பதை நான் அறிந்தேன். 35ஆம் வயதில் தெளிவு பெற்றேன். அதன்பின் நிச்சயமாக என் இறைவனின் பூரண அடிமையாக (அல்லாஹ்வின் அப்து, அப்துல்லாஹ்)வாக என் வாழ்வை நடாத்துகிறேன். எவருடனும் எனக்குப் பகைமை கிடையாது. எல்லோரும் அவன் சிருட்டிகளே என்பதை நான் அறிவேன். எனக்கிடப்பட்ட என் எஜமானின் ஏவலைச் செய்திருக்கிறேன்.

இறைவன் ஜமாலி, ஜலாலி என்ற இரு தன்மைகளைக் கொண்டவன். ஜமாலி என்பது குளிர்ந்த குணம், இரக்கம் என்பது. ஜலாலியென்பது அக்கினியென்ற கோபாக்கினியாகும். றசூல் (ஸல்) அவர்கள் அவசியத்துக்கேற்றபடி குளிர்ந்த நீரினாலும் அக்கினியனாலுமே ஞானஸ்நானம் செய்திருக்கிறார்கள். நான் அந்த றசூலின் அடிக்குமேல் அடிவைத்துச் சென்று கொண்டிருப்பவன். என் ஆசிரியருடைய பண்பின் சாயலாவது என்னிடமிருக்க வேண்டுமல்லவா? ஆதலால் நான் கூறிய கடினபதங்கள் வசனநடைகள் அக்கினியினால் செய்யப்படும் ஞானஸ்னானமேயாகும். இது எனக்குரியதல்ல, நான் அடிமை. நல்லடியார்களை விரோதிப்பவர் எவரோ அவர் அல்லாஹ்வுடன் யுத்தம் செய்ய ஆயத்தமாகட்டும் என்று இறைவன் கூறியுள்ளான். நபிமாரை, நல்லடியார்களை மக்கள் கொலை செய்தபோது, இம்ஸைக்குள்ளாக்கிய போதெல்லாம் அம்மக்கள் இறைவனுடைய கோபாக்கினியினால்தான் ஞானஸ்நானம் செய்யப்பட்டார்கள். இந்த நூலில் நான் கூறிய இந்த வழிகெட்ட கூட்டமும் இந்த நல்லடியார்களைக் கொலைசெய்த கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்தானென்பது இறைவன் அறிந்த ஓரு விஷயம்தான். இந்தக் கூட்டத்தோடு பள்ளி வாசலில் ஓருமுறை நான் உரையாடும்போது நபிமார் வலிமார்களைக் கொலை செய்த கூட்டத்தில் உள்ளவர்களா? நீங்கள் என்றுகூட நான் அவர்களிடம் கேட்டதுண்டு. நீங்கள் மௌலவிகள் என்பதை நான்

ஏற்றுக்கொள்ளவே இல்லையென்றும் அவர்கள் முன்பே கூறினேன். இதை அவர்களால் மறுக்க முடியாது. ஒலிப்பதிவுநாடாவை நான் வைத்திருக்கிறேன்.

இந்த பித்அத்வாதிகளான அறிவிலிகளால் கொலை செய்யபபட்ட நபிமார் வலிமார்களின் சார்பாகவும், அல்லாஹ் றசூலின் சார்பாகவும் இறந்துபோன தீனை அதன் ஆணிவேரான ஈமானை உயிர்ப்பிக்கும் நோக்காகவே என் இறைவனின் ஏவலை நான் செய்திருக்கிறேன். நான் செய்திருப்பது நல்லடியார்களும் அல்லாஹ் றசூலும் தந்த விஷயங்களை வியாக்கியானம் செய்து தெளிவுபடுத்தியது மட்டும்தான். உண்மையை வெளிப்படுத்தும்போது ஒரு சிலருடைய உள்ளம் பாதிக்கப்படலாம். அது இறை தண்டனையாகவே இருக்கும்.

எமது முன்னோர் காபீர்களோடும் முஷ்ரிக்கீன்களோடும் ஆயுதப்போராட்டம் நடத்தினார்கள். எமது காலம், இடம் ஆயுதப் போராட்டத்துக்குரியதல்ல. ஆதலால் நான் எனது பேனையை வாளாயுதமாக்கிக் கொண்டு குபிருடனும் ஷிர்க்குடனும் அவற்றைப் பிரச்சாரம் செய்யும் தஜ்ஜால்களுடனும் ஷைத்தான்களுடனும் ஜிஹாது செய்திருக்கிறேன். என் ஜிஹாது உடலுக்கு உடல் செய்வதல்ல. வாளோடுவாள் துப்பாக்கியோடு துப்பாக்கி மோதுவதல்ல. ஷிர்க்கோடு குபிரோடு தெளஹீது மோதும்போது ஷிர்க்குடைய குபிருடைய உள்ளம் நிச்சயமாகத் தாக்கப்படத்தான் செய்யும். வேதனை உருவாகத்தான் செய்யும்.

குர்ஆன்: 5:105

மூ.:மீன்களே! நீங்கள் (தவறான வழியில் செல்லாமல்) உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்; நீங்கள் நேரான வழியில் சென்றால், வழிதவறிய எவனுடைய தீங்கும் உங்களைப் பாதிக்காது.

ஹதீஸ்:

என்னுடைய உம்மத்தில் ஒரு கூட்டம் சத்தியத்தின்பேரில் எப்போதும் ஜிஹாது செய்து கொண்டேயிருப்பார்கள், தங்கள் எதிரிகளிடம் வெற்றி பெற்றுக்கொண்டேயிருப்பார்கள். இறுதியாகக் கடைசியிலுள்ளவர்கள் தஜ்ஜாலை எதிர்த்துப் போராடுவார்கள்.

ஹதீஸ்:

இந்த மார்க்கம் கியாமத்து நாள்வரையில் நிலைபெற்றிருக்கும் முஸ்லீம்களில் ஓர் கூட்டம் உண்மையான மார்க்கத்துக்காக யுத்தம் செய்துகொண்டே இருப்பர்.

ஹதீஸ்:

மூ.ீன்களுக்குத் தீமை விளைவிப்போரும் அவர்களுக்கெதிராகச் சதிசெய்பவரும் சபிக்கப்பட்டவராவர் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினர்.

அறிவிப்பவர் : அபூபக்கர்(றலி)

ஆதாரம் : திர்மிதி

ஹதீஸ்:

இந்தக் குர்ஆனில் முழுக்க முழுக்கக் கவனம் செலுத்திவாருங்கள் ஏனெனில் எவனுடைய கையில் முஹம்மது (ஸல்) அவர்களுடைய உயிர் இருக்கிறதோ அவன்மீது ஆணையாக ஒட்டகம் தன்னைக் கட்டும் கயிற்றை விட்டும் ஓடுவதைவிட விரைவாக இது மனிதர்களுடைய இருதயங்களை விட்டும் ஓடிவிடும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினர்.

குர்ஆன்: 7:146

நியாயமின்றி பூமியில் கர்வம் கொண்டலைபவர்கள் என்னுடைய கட்டளைகளைப் புறக்கணிக்கும்படி செய்துவிடுவேன்; ஆகவே அவர்கள் அத்தாட்சிகள் யாவையும் (கண்ணால்) கண்டபோதிலும் அவற்றை நம்பவேமாட்டார்கள்; அவ்வாறே நேரானவழியை அவர்கள் கண்டபோதிலும் அதனை (தாங்கள்) செல்லும் வழியாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள் - எனினும் தவறான வழியைக் கண்டாலோ அதனையே (தங்கள்) செல்லும்வழியாக எடுத்துக் கொள்வார்கள்; நிச்சயமாக அவர்கள் நம்முடையவசனங்களைப்பொய்யாக்கி அவற்றைப் புறக்கணித்துப் பாராமுகமாயிருந்ததே இதற்குரிய காரணமாகும்.

ஆதலால் எவரும் என்னைக் கோபிக்கவேண்டாம். சிருட்டியின் கோபம் இறைவனோடிருக்கும், என்னைப் பாதிப்பதில்லை. நான் என்னிறைவனோடிருக்கிறேன். நான் அச்சப்படவேண்டியதல்லை. அல்லாஹ்வின் அடியார்கள் சர்வாதிகாரக் கொடுங்கோல் அரசர்களிடத்திலுமகூட உண்மையைக்

கூறத் தயங்கியதில்லை. நான் அறிந்த உண்மைகளை உங்களுக்கு எத்திவைக்கிறேன், அவ்வளவுதான். என்னைக் குற்றம்காணும் மக்கள் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யலாம். நான் நீதிமன்றத்தில் மிகமிகத் தெளிவான முறையில் உண்மையை இன்ஷா அல்லாஹ் என்னாலியன்றவரை நிரூபித்துக் காட்டுவேன். என் வாதத்துக்கு ஆதாரமும் கொடுப்பேன். இன்ஷா அல்லாஹ்.

உண்மை கசப்பானதுதான், ஆயினும் நோயுள்ளோர் நோயிலிருந்து விடுபடுவதானால் உண்மையென்ற கசப்பான (கைப்பான) மருந்தை அருந்தியே ஆகவேண்டும்.

குர்ஆன்: 4:76
ஈமான் கொண்டவர்களே! அவர்கள் அல்லாஹ்வின் பாதையில் யுத்தம் செய்கிறார்கள்; இன்னும் காபீரானார்களே அவர்கள் ஷைத்தானுடைய பாதையில் யுத்தம் செய்கிறார்கள். ஆதலால் ஷைத்தானுடைய காரியஸ்த்தர்களை நீங்கள் வெட்டுங்கள். நிச்சயமாக ஷைத்தானுடைய சதி மிகப் பலவீனமானதாயிருக்கிறது.
(என்னைப் பொருத்தவரையில் நான் பேனையினால் யுத்தம் செய்கிறேன். அவ்வளவுதான்)

அகில இலங்கை தரீக்கத்துல் முப்லிஹீன் வழங்கும் மார்க்கத் தீர்ப்பு

"பத்துவா"

மருதமுனையைச் சேர்ந்த M.I.M.சலாஹுத்தீன் ஆசிரியர் என்பவரால் எழுதப்பட்ட ஈமானின் (கலிமாவின்) உண்மை எல்லாம் இறைவன் என்பதல்ல, என்ற நூலை நான் வாசித்த போது இவரின் கொள்கை இஸ்லாத்துக்கு நேர் விரோதமானது என்பதைக் கண்டேன். இவரும் இவருக்கு அணிந்துரை முகவுரை வழங்கியோரும் இவரின் கொள்கையை மக்களிடையே திணிக்க முயல்வோரும் செய்த செய்யும் தவறுகளில்,

1. அல்லாஹ்வுடன் அவனல்லாதவையும் உண்டு என்று இவர்கள் கூறுகிறார்கள். அல்லாஹ்வுடன் அவனல்லாதவை இல்லை என்பதே இஸ்லாத்தின் கொள்கை. சுன்னத்வல் ஜமாஅத்தார் கலிமாவுக்குக் கொண்ட பொருள் அல்லாஹ் தவிர இலாஹ் இல்லையென்பது. சலாஹுத்தீனும் அவர் சகாக்களும் கலிமாவுக்குக் கூறும் பொருள் அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாத சிருட்டிகளும் உண்டு என்பது (அல்லாஹ் வேறு சிருட்டி வேறு என்பது) முஸ்லீம்கள் அல்லாஹ்வுக்கு இணை, துணை ஜோடி, சமம், நிகர், ஒப்பு, இல்லை என்பவர்கள். சஹ்லாத்தீன் அல்லாஹ்வுக்கு இணை, துணை, சமம், ஒப்பு, நிகர் உண்டு என்று கூறுகிறார்.

2. சலாஹுத்தீனும் அவர் கூட்டத்தினரும் குர்ஆனின் முஹ்கமுவான சுமார் 200க்கும் அதிகமான ஆயத்துகளை மறுத்தவர்களாகிறார்கள். ஹதீஸ்களையும் மறுப்பவர்களாய் இருககிறார்கள்.

3. அல்லாஹ் இல்லாமையிலிருந்தே படைத்தான் என்று இவர்கள் வாதிடுவதால் அல்லாஹ்வுடன் இல்லாமையும் உண்டு என்ற இணையேற்படுதலை உண்டாக்குகிறார்கள். இவர்களுக்கு இஸ்லாத்தின் தத்துவ விளக்கம் எள்ளளவும் தெரியாதென்பதை அவர்களின் நூலிலும் பேச்சிலும் நிரூபித்திருக்கிறார்கள்.

4. இவர்கள் குர்ஆன் ஹதீஸுகளுக்கு மாறாக மக்களை பித்அத் பிரசாரத்துக்கும் அடாவடித்தனமான செயல்களுக்கும் தூண்டுகிறார்கள்.

5. சுன்னத் வல் ஜமாஅத்தினரால் அங்கீகரிக்கப்பட்ட அவ்லியாக்கள் அனைவரும் காபீர்களென்றும் வழிகெட்ட முர்த்தத்துக்கள் என்றும் கூறுகிறார்கள். இவர்களால் எழுதப்பட்ட ஞான இரகஸியங்கள் யாவும் இந்துக்களுடையதென்றும் குர்ஆனில் ஞானம் என்பதே கிடையாதென்றும் விசேடமாய் குர்ஆனில் உள்ள 57:3 போன்ற ஆயத்துகள் கிறிஸ்தவர்களால் ஈரானியர்களால் புகுத்தப்பட்டவையென்றும் மக்கள் குர்ஆனையோ தப்ஸீர்களையோ பார்க்க வாசிக்கக் கூடாதென்றும் வழிகெட்டுவிடுவீர்கள் என்றும் கூறுகிறார்கள்.

6. இஜ்மாஉ, கியாஸ், அறிவு முதலாம் பிரமாணங்களை மறுக்கிறார்கள். குர்ஆன் பகுத்தறிவுக்கு ஒத்துவராதாகையால் குர்ஆனை அறிவைக்கொண்டு ஆராய்வதும் இஸ்லாத்தில் கேள்வி கேட்பதும் ஹறாம் என்றும் கூறி மனிதனின் சிந்தனா சக்தியைப் பறிக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் மக்கள் நல்லறிஞர்களிடம் சென்று விளக்கம் கேட்டறிவது ஹறாம் என்று கூறுகிற இவர்கள் மனித அறிவுக்கு விலங்கிடுகிறார்கள்.

7. இஸ்லாத்தின் லேபலில் வஹ்ஹாபிஸம் இல்யாஸிஸம் போன்ற துர்க் கொள்கை விளக்கங்களை மக்களிடையே திணிக்கிறார்கள்.

ஆதலால் இஸ்லாத்தையே கேடயமாய்க் கொண்டு இஸ்லாத்தை அழித்தொழிக்க முயலும் இக்கூட்டத்தினரை இனம் காட்டித்தர வேண்டியது என் கடமையாகிறது. இன்னொரு விஷம் கலந்த இனிப்புப் பண்டத்தைக் கொடுத்துக் குழந்தைகளைக் கொல்லும் கொலைக்கூட்டத்துகு ஒப்பாயிருக்கிறார்கள். உண்மையைப் பொய்யாயும் பொய்யை உண்மையாயும் காட்டிக் குழந்தைகளுக்கொப்பான பாமர மக்களின் அறிவை வளர விடாமல் கொன்றொழிக்கும் கொலைஞர்களே இக்கூட்டத்தினர் என்பது நிரூபணமாகியிருப்பதால்,

மருதமுனை ஆசிரியர் M.I.M.சலாஹுத்தீன் என்பவரும் மருதமுனை ஜம்இய்யத்துல் உலமா சபை உறுப்பினர்களான A.A.M.முகையதீன் (ஜமாலி) A.M.ஹஸன் (ஸர்க்கி) A.அபுஉபைதா, B.A.(மதீனா) என்பவரும் இவர்களுக்கு முக்கிய பிரசாரகர்களாயமைந்திருந்த மருதமுனை I.M.S.M.பளீல் மவுலா(னா) அக்கரைப்பற்றைச் சேர்ந்த A.R.A.பிஸ்றுல் ஹாபி நற்பிட்டிமுனை யைச்சேர்ந்த ஹாபிஸ், I.L.இப்றாலெவ்வை ஆகியவர்களும் இவர்களை உண்மைகண்டவர்களும், இஸ்லாத்தின் லேபலில் வாழும் சுத்தமான காபீர்கள், முர்த்தத்துக்களே என்றும் சுத்தமான விஷமிகளே என்றும் நானிருந்துகொண்டிருக்கிற இஸ்லாத்தின் 5 மூலப்பிரமாணங்களின் படியும் தீர்ப்புச் செய்கிறேன்.

இப்படிக்கு
M.S.M.அப்துல்லாஹ்
ஸ்தாபகரும் ஆயுட்காலத் தலைவரும்
அகில இலங்கை தரீக்கத்துல் முப்லிஹீன்

குர்ஆன்: 16:104,105
நிச்சயமாக எவர்கள் அல்லாஹ்வுடைய வசனங்களை (மனமுரணாக) விசுவாசிக்கவில்லையோ, அவர்களை அல்லாஹ் நேரான வழியில் செலுத்தமாட்டான்; (இது) பொய்யென்று கற்பனை செய்வோரெல்லாம் அல்லாஹ்வுடைய வசனங்களை நம்பாதவர்கள்தாம்; இவர்கள்தாம் பொய்யர்கள்.

நல்லறிவு விளக்கம் தரக்கூடிய மக்களை முறியடிக்காமல் தம் பிரசாரத்தை நடாத்த முடியாதென்பதை அறிந்த இவர்கள், இவர்களுடைய கொள்கைக்கு எதிரானவர்களுக்கு வழிகெட்டவர் முர்த்தத் என்ற பட்டங்களை சூட்டி உண்மையை மறைக்க முயல்கிறார்கள்.

பைத்தியத்துக்கு வைத்தியம் அவசியம்

தௌஹீதுக்கு எதிர்மறை வஹ்தத்துல்வுஜுத் என்ற நூலை எழுதிய நண்பர் உஸ்மான் சாஹிப் என்பவர் அவருடைய நூல் 62ஆம் பக்கத்தில் ஆண்டவனுக்கு உருவமுண்டு என்றும் (உருவம்) இல்லையென்றும் நம்பவேண்டும். இது வஹ்தத்துல்வுஜுத் பிரகடனம். இது ஓர் அர்த்தமற்ற பகுத்தறிவு ஏற்றுக்கொள்ள முடியாத பிதற்றலாகும் என்றெழுதியுள்ளார். இவருடைய அபார கண்டுபிடிப்புக்கு அணிந்துரை வழங்கிய சாய்ந்தமருது மௌலவி ஆ.டீ.ஆதம்பாவா (கபூரி), மருதமுனை ஏ.யு.றசூல் (பாரி), மதிப்புரை வழங்கிய கல்முனைக்குடி மௌலானா, மௌலவி ஷெய்யித் அஹ்மத் காபீர்(ஜிப்ரி), சிறப்புரை வழங்கிய காத்தான்குடி மு.அப்துல்லாஹ் ஆகிய அமாவாசைகளும், நண்பர் உஸ்மான் சாஹிபின் கண்டுபிடிப்பை முழுமனதாய் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இக்கூட்டத்தினரின் அறிவு, இறைவனுக்கு உருவமுண்டு, உருவமில்லை என்பதை ஏற்காதுதான். ஏனெனில் அவர்கள் இவர்களிடமுள்ள வஹ்மு என்ற மூடபுத்தியைத்தான் பகுத்தறி வென்று நம்பியிருக்கிறார்கள். ஐயோ! பாவம். இவர்களுக்கும் இன்னும் மூளை வளர்ச்சி ஏற்படவில்லை. வஹ்தத்துல்வுஜுத், தௌஹீது என்ற சொற்களை நாவினால் கூறவும் தகுதியிலலாதவர்கள்.

நான் என்று கூறும்போது உருவமுள்ள பௌதீக உடலையும் உருவமில்லாத சூட்சும உயிரையும் ஒன்று சேர்த்துத்தானே நான், நான் என்று இக்கூட்டமும் பிறரும் கூறுகிறார்கள். உலகிலுள்ள எல்லா மனிதர்களும் மற்றும் ஜீவராசிகளும்கூட ஏககாலத்தில் உருவமும் உருவமின்மையும் ஒன்றாய் ஏகமாய் அமைந்திருப்பதை இக்கூட்டத்தின் அறிவு

காணவில்லையா? இந்த உலக்கைக் கொழுந்துகள் உருவமும் உருவமின்மையும் (உடன்பாடும், எதிர்மறையும்) ஒன்று சேர்ந்தில்லாவிட்டால் பொருள் பொருளாய் இராது என்ற தத்துவார்த்த உண்மையை இந்த வஹ்முடைய கூட்டம் அறியுமா? இவர்கள் தங்களிடம் உடலும் உயிரும் இல்லை, உடல் மட்டும்தான் உண்டு என்று நம்பியிருந்தால் இவர்களுடைய அறிவை பகுத்தறிவு என்று கூறலாமா? லாஹிறையும் பாதினையும் ஏற்கும் பகுத்தறிவு இவர்களிடம்தானில்லையே.

குர்ஆனின் முஹ்கமுவான 57:3 போன்ற சுமார் 500 ஆயத்துகளை இக்கூட்டம் மென்றுவிழுங்கி ஏப்பமிட்டுவிட்டதா? ஏறக்குறைய 13,000 ஸஹாபாக்கள் மூலம் பெற்ற ஹதீஸுகளை இவர்கள் எங்கே விட்டுவிட்டார்கள், இவர்கள் கண்ணை மூடிக்கொண்டு பூனை பாலைக்குடிப்பது போல குர்ஆன் ஹதீஸுகளை எதிர்த்து இஸ்லாத்தில் குளறுபடி செய்ய முற்படுகிறார்களே! இவர்கள் எக்கூட்டத்திலுள்ளவர்கள்? நிச்சயமாக இவர்கள் அபூஜஹீலின் கூட்டத்திலுள்ளவர்கள் தான். அபூஜஹீலின் கூட்டம்தான் இறைவன் அரூபியென்றும் உருவமுடைய சிருட்டி அவனல்லாத ரூபி என்றும் கூறினார்கள். இஸ்லாமும் அதன் ஆதாரங்களும் பகுத்தறிவு தொழிற்படாத மிருகங்களுக்கு, வைத்தியம் செய்யவேண்டிய பைத்தியங்களுக்கு அவர்களுடைய மயக்க புத்திக்குப் புறம்பானது தான், இஸ்லாத்தை ஆராய்தல், விளக்குதல், பகுத்தறிவுள்ள ஆண்களின் தொழில், குருட்டு ஷைத்தான்களுக்கு இஸ்லாம் விரோதமானதுதான். இவர்களின் அறிவுக்கு குர்ஆன் முரண்தான்.

தௌஹீதுக்கு எதிர்மறை வஹ்தத்துல்வுஜூத் என்பதை மிகத் தெளிவாய்க் கண்டறிந்த இக்கால்நடைகள் சாதித்த சாதனை மிக அபாரமானதுதான். இன்னோருக்கு தௌஹீது, வஹ்தத்துல் வுஜூது, ஏகத்துவம், அத்வைதம், துவிதம், விசிட்டாத்வைதம், ஒரே இறைக் கொள்கை போன்ற கொள்கைகளில் இஸ்லாத்தின் கொள்கை எது என்பதே இதுகாலவரையிலும் தெரியாதென்பது புரிகிறது. தௌஹீது, வஹ்தத்துல் வுஜூத். அத்வைதம், ஏகத்துவம் என்பவை ஒரே கொள்கையின் மறுபெயர்களென்றும் ஒரே இறைக் கொள்கையை முஷ்ரீக்கின் கொள்கையென்றும் தெரிந்து கொள்ள

இக்கூட்டத்தாரிடம் சிந்திக்கும் ஆற்றலுள்ள பகுத்தறிவு கிடையாதே. ஒருமைக்கும், ஏகத்துவத்துக்கும் இவர்களுக்கு வேறுபாடு தெரியாது.

கிருஷ்ணன், அருச்சுனன் போன்றோரும் இஸ்லாமிய மூலக் கொள்கையான தௌஹீதையே மக்களின் முன் சமர்ப்பித்துள்ளனர் என்பதற்கு பகவத்கீதையிலும் மற்றும் பல ஹிந்துமத நூற்களிலும் சான்றுகள் உள்ளனவென்று உஸ்மான் சாஹிப் அவருடைய நூலில் (xix) பக்கத்தில் கூறுகிறார். மேலும் இவர்கள் உத்தமமான நற்குண மும் நன்னடத்தையும் இறை திருப்திக்கேற்றபடி வாழும் இயல்பும் கொண்ட உயர் பெருமக்களாவர் என்று கூறுகிறார். ஆனால் இந்த இந்துக்கள் கூறிய அத்வைதம் இஸ்லாத்திலுள்ளதல்ல வென்றும் வஹ்தத்துல் வுஜூது இந்துக்களின் கொள்கையென்றும் ஒரே இறைவனை ஒப்புக்கொள்வதே இஸ்லாத்தின் கொள்கை யென்றும் கூறுகிறாரே! உண்மையில் இவரும் இவரை உண்மை கண்டோரும் சித்தசுவாதீனமுடையவர்களா? சித்தசுவாதீனமற்ற வர்களா? இவர்களின் வாதம் விதண்டாவாதமா? கஞ்சாவாதமா? நிச்சயமாக ஆரிபுகளின் வாதம் கஞ்சாவாதமுமல்ல விதண்டாவாதமுமல்ல. குர்ஆனின் தர்க்கவாதம்தான்.

இவர்கள் தங்கள் வாதங்களை நிரூபிக்க எடுத்துக் கொள்ளும் குர்ஆன் ஹதீஸுகள் இவர்களுக்கு மாறாகவே சாட்சி கூறுகின்றன என்பதைக் கூடக் கண்டறிய, சிந்திக்க இவர்களிடம் பகுத்தறிவு கிடையாது. இவ்வித மந்தைக்கூட்டம்தானா ஆரிபுகளின் அறிவை எடைபோடுவது? குர்ஆனை விளங்குவது? ஒருவன் முஸ்லீமாவதானால் முதலில் அவன் கலிமாவைக் கூறி விளங்கி மனித அறிவுடையவனாய் மாறவேண்டும். முஸ்லீம் என்ற போர்வையில் நடமாடும் பிராணிகளுக்கு இஸ்லாம் கைக்கெட்டாகனிதான், மிருகக்கூட்டம் இஸ்லாத்துக்கு விளக்கம் தருவது முடியாதது. அறிவுடைய மனிதன் வெட்கப்பட வேண்டிய ஒரு காரியம் இவ்வித நூற்களை வெளியிடுவது. தங்களறிவைத் தாங்களே எடைபோடும் ஆற்றல் அவர்களிடமில்லை.

மேலும் நண்பர் உஸ்மான் சாஹிப் அவருடைய நூலில் 64ஆம் பக்கத்தில் மின்னல் உருவம் இல்லாத ஒன்று என்றும்,

இதை நமது கண்களால் பார்த்துத்தான் அறிய முடியுமே தவிர, உணர்வால் தெரிந்துகொள்ள முடியாதென்றும் கூறுகிறார். மேலும், இவ்வாறே உருவமில்லாத சுரூபியான அல்லாஹ்வை மறுமை நாளில் நல்லடியார்கள் கண்டுகளிப்பார்கள் என்று கூறுகிறார், உருவமில்லாத சுரூபி என்றால் இதன் பொருள் என்ன? சுரூபம் என்றால் ஜடமல்லாதது என்றும் உருவம் என்றால் ஜடம் என்றும் இவர் நம்புகிறாரா? ஜடம் என்பது மருட்சி என்ற உண்மையை இவர் அறிவாரா? ஜடம் இல்லாத ஸுறத்தைக் கண் பாராது என்பது இவருக்குத் தெரியுமா? மின்னல் ஒளிக்கு உருவமில்லையென்றும் அதைக் கண்களால்தான் பார்க்க முடியுமென்றும் கூறுகிற இந்த நண்பர் இந்தக் கல்வியை எந்த கொலீஜில் கற்றுக்கொண்டாரோ தெரியவில்லை. இவருடைய நூலுக்கு அணிந்துரை முகவுரை வழங்கிய B.A.பட்டதாரிகள் மௌலவி மௌலானாக்கள்தானும் எந்த நாட்டிலுள்ள எந்தக் கலாசாலையில் கல்விகற்றுப் பட்டம் பெற்றிருக்கிறார்களோ அதுவும் நமக்குத் தெரியாத ஓர் விஷயம்தான்.

மின்னலுக்கு உருவமில்லையென்றும் உருவமற்ற மின்னலைக் கண்ணைக்கொண்டேயன்றிப் பார்க்க முடியாதென்றும், எந்த ஓரு நாட்டிலுள்ள எந்த ஓரு பாடசாலை, கொலீஜ், மத்ரஸாக்களிலும் நிச்சயமாகப் படித்துக் கொடுத்திருக்க மாட்டார்கள். இவ்விதக் கல்வி கிட்டுவதானால் இலங்கையிலோ வெளிநாடுகளிலோ உள்ள பைத்தியங்களுக்கு வைத்தியம் செய்யும் மனநோய் ஆஸ்பத்திரிகளிலிருந்துதான் இக்கூட்டத்தினருக்கு இக்கல்வி கிடைத்திருக்க வேண்டும். இக்கூட்டம் பொருள் முதல்வாதத்தை அடிப்படையாய்க் கொண்டவர்களா? என்று சிந்தனை செய்தால் அதுவும் இவர்கள் அறியாத ஓர் விஷயம்தான். இப்படியொரு வாதமுண்டென்பது கூட இவர்களறியாத விஷயமே.

அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அறபு, இஸ்லாமியத்துறை விரிவுரையாளர் அல்ஆலிம் மௌலவி M.B. ஆதம்பாவா B.A(Hons) கபூரி அவர்கள் உஸ்மான்சாஹிப் அவருடைய கையெழுத்துப் பிரதியை நேரில் வாசித்துக் காட்டியதாய்க் கூறியுள்ளார்கள். கல்முனை உவெஸ்லி உயர்கல்லூரி அறபு, ஆசிரிய சங்க முன்னாள் காரியதரிசியான

மருதமுனை S.V.A. றசூல்(பாரி) என்பவர் உஸ்மான்சாஹிபுவின் நூலுக்கு அணிந்துரை வழங்கி, எல்லா மக்களும் இந்த நூலைப் படிப்பதுடன் மக்களிடம் பரப்பவேண்டும் என்று கூறுகிறார்.

கல்முனைக்குடி மௌலானா மௌலவி ஷெய்யத் அஹமத் கபீர் (ஜிப்ரி) மதிப்புரை வழங்கியதோடு இஸ்லாமியச் சோலையில் இரண்டொரு களைகள் தென்படுவதாய் அறிந்து களைக்கொல்லி மருந்துபோல உஸ்மான் சாஹிப் இந்த நூலைத் தந்துள்ளார் என்று கூறுகிறார்.

மேலும் அத்வைதக் கருத்துக்களுக்குத் தரமான ஒரு மறுப்பாகத் தகுதிவாய்ந்த படைப்பாக இந்த நூலை (உஸ்மான் சாஹிப்பின் நூலை) நான் காண்கிறேன் என்று கூறுகிறார். சித்த சுவாதீனமற்ற இரவல் மூளைகள் வேறு எப்படித்தான் கூறமுடியும்?

நான் மருதமுனையில் வாழும் M.S.M.அப்துல்லாஹ் பயில்வான் கேட்கிறேன். இந்த மூன்று பைத்தியங்களும் தங்களை மேதைகளாய்க் காட்டிக்கொள்ள முன்வந்திருக்கிறார்களே! இவர்களுடைய அறிவைப் பைத்தியக்காரரின் அறிவாக நீங்கள் காணவில்லையா? இவர்களுக்கு இறைவன் வெட்கம், நாணம் போன்றவற்றைக் கொடுக்கவில்லை போலும். மெய்தான் சித்தசுவாதீனமற்ற பைத்தியங்களுக்கு வெட்கம் நாணம் இருக்க முடியாதுதான். உஸ்மான்சாஹிப்பின் நூலுக்கு அணிந்துரை வழங்கிய பொலநறுவை முஸ்லீம் மகாவித்தியாலய ஆசிரியர் U.K.M.அப்துல்லாஹ் என்பவரைப்பற்றி நான் எதுவும் கூறவேண்டிய தில்லை. ஏனெனில் உஸ்மான் சாஹிப்பின் நூல் அறிவுச்சோலை யென்று இவர் காண்பது (அங்கொடை) முல்லோரியாவிலுள்ள மனநோய் ஆஸ்பத்திரிதான் என்றால் இதில் நமக்கென்ன கவலை. வெளவால்களுக்குச் சூரியப்பிரகாசத்தைப் பார்க்கக்கூடிய கண் இல்லையே. வெளவாலின் தொழில் வாயால் உண்டு வாயால் கழிப்பதே. இவ்விதமான சித்தசுவாதீனமற்ற, தங்களின் பேச்சை எழுத்தைத் தாங்களே உணர்ந்துகொள்ள முடியாத அறிவிலிக் கூட்டம், இஸ்லாத்தின் தௌஹீதுக்கு விளக்கமளிக்க முற்பட்டால்,

மக்களை இவர்கள் இஸ்லாத்தின் பெயரால் எங்கே அழைத்துச் செல்லுகிறார்கள்? என்பதை அறிவுள்ள வாலிப உள்ளங்களாவது ஓரளவு சிந்திக்க வேண்டாமா? இவ்வித மூடர்கள் தங்களை அறிஞர்களாய்க் காட்டிக்கொள்ள முயல்வது வெட்கமல்லவா?

இவ்வித ஜாஹில் கூட்டங்கள் சுமார் 1400 வருடங்களாக இஸ்லாத்தைக் குழிதோண்டிப் புதைத்துக்கொண்டேயிருந்தால் உண்மையான இஸ்லாத்தின் கொள்கையை விளக்க முற்படும் மக்களைக் கொன்றொழிக்க, முயன்றுகொண்டேயிருந்தால், இஸ்லாத்தில் அறிஞர்கள் சிந்தனையாளர்கள் தோன்றக்கூடாதென்பதே இவர்களின் குறிக்கோள் போலிருக்கிறது. விறகு உடைக்கிற சாதாரண மனிதனுக்குள்ள அளவு பகுத்தறிவாவது இந்த அறபு மேதைகளிடமில்லையேயென்று கைசேதப்படவேண்டியதாய் இருக்கிறது. இன்னோரிடம் கல்விகற்று வெளியேறும் மாணவர்கள் சமூக மக்களுக்கு எவ்விதமான இஸ்லாத்தைப் போதனை செய்யமுடியும்? இஸ்லாம் என்ற பெயரில் ஜாஹிலியத்தை ஷிர்க்கைத்தான் போதனை செய்ய முடியும். இன்றுள்ள பெரும்பாலான இஸ்லாமிய மக்களின் நிலைமை இப்படித்தானிருக்கிறது. உருவமில்லாத மின்னலை கண்ணால் பார்க்கலாம் என்றால் இது அறிவுடைய மனிதனின் பேச்சா? பைத்தியக்காரக் கும்பலின் பேச்சா? உருவமில்லாத பொருளைக் கண் எப்படிக் காணும்? இவர்களுடைய பகுத்தறிவை எங்கே பறக்க விட்டு விட்டார்கள்?

சிருட்டிகளான தாங்களே ரூபமும் அரூபமுமாய் (உடலும் உயிருமாய்) இரண்டில்லாத ஒன்றாய் ஏகமாய் இருக்கிறோம் என்பதை ஏற்றுக்கொள்ளாமல் மறந்துபோன இவர்கள் இறைவன் லாஹிறும், பாதினும் (தோற்றம், தோற்றமின்மை) ஆகிய இரு பண்புகளுடையவன் என்பதை எப்படி ஏற்றுக்கொள்வார்கள்? இவர்கள் மனிதர்களாயிருந்தால்தானே ஏற்பார்கள், இவர்களுடைய மறதிக்குக் காரணம் கஞ்சா, அபின் போதையாய் இருக்கலாம். அல்லது மூளை வளர்ச்சியில்லாததால் ஏற்பட்ட ஹுரூர் மருட்சியென்ற வஹ்மாயிருக்கலாம். ஆதலால் இவர்களின் வாதம் தர்க்கவாதமேயல்ல. மருட்சியான விதண்டாவாதம்தான்.

அறிவுக்கிடமளிக்காதவன் குர்ஆன் ஹதீஸுகளுக்கு எப்படி இடமளிப்பான். தனக்கே லாஹிறும் பாதினும் உண்டென்றறியாதவன் இறைவனைப் பற்றி எதை எப்படி அறிவான். அவனிடம் அறிவு என்பது ஏது?

ஆரீபீன்களான மேதைகளின் விளக்கம் கஞ்சா, அபின் மயக்கால், வஹ்மால், ஹுரூரால் ஏற்பட்டதல்ல. இறைவேதமான குர்ஆன், ஹதீஸுகளின் சரியான உறுதியான தர்க்கவாதம்தான் அவர்களுடைய வாதம். பகுத்தறிவு தொழிற்படாத இக்கால்நடைகள் ஆரிபுகளை வழிகெட்டவர்கள் முர்த்தத்துகள் என்று கூறினால், அது அந்த ஆரிபுகள் குர்ஆன் ஹதீஸுகளையும் அறிவையும் ஒப்புக்கொண்ட வழிகாட்டும் மூ.்மீன்கள் என்பதற்கு ஆதாரமாகும். உளநோயென்பது ஷிர்க்கே என்பதை இக்கூட்டம் இன்னும் அறியவல்லை. ஷிர்க்கென்றால் என்ன? என்பதும் இவர்களுக்குத் தெரியாது.

குர்ஆன்: 6:122

மரித்தோராய் இருந்தவர்களில் எவனை நாம் உயிர்ப்பித்து, மனிதர்களுக்கிடையில் நடமாடுவதற்குரிய (நூரையும்) பிரகாசத்தையும் கொடுத்திருக்கிறோமோ அவன், இருள்களில் சிக்கி அவற்றிலிருந்து வெளிப்பட முடியாமல் இருப்பவனுக்குச் சமமாவானா? இவ்வாறே நிராகரிப்போருக்கு அவர்களுடைய (தீய) செயல்கள் அழகாக்கப்பட்டு விட்டன.

மரித்தோராயிருந்து உயிர்பெற்ற நூர் என்ற அறிவுப் பிரகாசத்தை தௌஹீதைப் பெற்றுக்கொண்டவர்கள்தான் ஆரிபுகள். அறிவு வெளிச்சமில்லாத இருளில் (ஷிர்க்கில்) தவிப்பவர்களான அறிவிலிகள்தான் ஆரிபுகளை வழிகெட்டவர்களாய்க் கணித்தவர்கள். கொலை செய்தவர்கள். இவர்களால் எந்த ஒரு மனிதன் தவறான வழியில் செல்கிறானென்று கூறப்படுகிறதோ அவன் உண்மையான நூர் உடைய மூ.்மீனாகவே இருப்பான். நேர்பாதையில் செல்பவனாகவே இருப்பான்.

குர்ஆன்: 8:22

நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் மிக்க கேவலமான (மிருகங்கள்) கால்நடைகள் அறிவில்லாத செவிடர்களும், ஊமையர்களும்தான்.

குர்ஆன்: 38:29

(நபியே!) அவர்கள் இதன் (குர்ஆனின்) வசனங்களைக் கவனித்து ஆராய்வதற்காகவும், அறிவுடையோர் நல்லுணர்ச்சி பெறுவதறகாகவும், மிக்க பாக்கியம் பெற்ற இவ்வேதத்தை நாமே உம்மீது அருள்புரிந்தோம்.

குர்ஆன்: 54:17

(மனிதர்கள்) நல்லுணர்ச்சி பெறும் பொருட்டே இந்த குர்ஆனை நிச்சயமாக நாம் மிக்க எளிதாக்கியிருக்கிறோம். ஆகவே (இதனைக் கொண்டு) நல்லுணர்ச்சி பெறுவோருண்டா?

இந்தக் கால்நடைகளுக்கொப்பான கூட்டம் ஆப்பைப் பிடுங்கும் போது வாலை மாட்டிக்கொள்வது மனவருத்தமான ஓரு விஷயம் தான். முகம் குப்புறக்கிடக்க, நீச்சலடித்துப் பயிற்சிபெறும் குழந்தைகளைப் போலிருக்கிறது. அறிவுத்துறையில் இக்கூட்டத்தின் வாதப் பிரதிவாதங்கள். இன்னோருக்கு அறிவு பிரயோசனம் செய்யாது. அல்லாஹ்வுடைய லலாலத் இவர்களை ஆட்டிப்படைக்கும்போது யார் எதைத்தான் செய்ய முடியும். பேங்குகளின் இரும்புப் பூட்டுக்களைக்கூட மனிதன் உடைத்தெறிந்து விடுகிறான். ஆனால் இக்கூட்டத்தினரின் கல்பிலுள்ள பூட்டுகளை அல்லாஹ்வையன்றி எவராலும் உடைக்க முடியாது. றியா என்பது இறைவனுடைய மரணப் பூட்டுகளிலொன்று என்பதை இன்னோர் அறிந்துகொள்ள வேண்டுமே! வஹ்தத்துல் வுஜூத் (தௌஹீது) கொள்கையுடையோர் இஸ்லாத்தில் நுழைந்த களைகள், அறக்கொட்டிப் பூச்சிகள் என்று இக்கூட்டம் கூறுவது அறியாமை. காலாகாலம் தோன்றிய நல்லடியார்கள் இஸ்லாத்தில் நுழைந்துள்ள களைகளை விஷக்கிருமிகளை நீக்குவதற்காகவே கலிமா என்ற கிருமிநாசினியைத் தெளிக்க முற்பட்டபோதெல்லாம் ஒருசில ஜாஹில் கூட்டங்கள் அதைத் தடைசெய்தே வந்திருக்கின்றன. இன்று நம்மிடையேயுள்ள பிரச்சனையும் இதுதான். இஸ்லாம் என்ற பயிர் பிரயோசனம் செய்வதானால் கலிமத்துத்தையிபா என்ற கிருமிநாசினி தெளிக்கப்பட்டே ஆகவேண்டும். இது வேதத்தில் இறைவன் கூறும் அறிவுரை.

மனிதன் வானமண்டலத்திலுள்ள பிற கிரகங்களில் குடியேறி வாழ முயற்சி செய்துகொண்டிருக்கிற, அறிவு வளர்ச்சியடைந்த இந்த விஞ்ஞானக் காலத்திலும், உருவமில்லாத ஒளியை (மினனலை)க் கண்ணால்தான் பார்க்கவேண்டும் என்று கூறித் தங்களுக்கேற்பட்ட பைத்தியத்தை மற்ற மக்களிடமும் திணிக்க முற்படுவோர், இஸ்லாத்துக்கு மட்டுமல்ல, உலகிலுள்ள மனிதகுலம் அத்தனையையும் சாவட்டைகளாக மாற்றும் களைகளும் அறக்கெட்டிகளுமேயன்றி வேறென்ன? மனிதன் அணுவைப் பிளந்து வெற்றிகண்ட இக்காலத்திலும் இஸ்லாத்தின் பெயரால் இவ்வித மருண்ட வார்த்தைகளைக் கூறி மக்களை வழிகெடுப்பதும் நூலெழுதுவதும் வெட்கப்பட வேண்டிய ஒரு விஷயமல்லவா? இவ்வித நூற்களை வாசிக்கும் பிற மத மக்கள் இஸ்லாத்தை எப்படி எடைபோடுவார்கள் என்பதை வாலிப உள்ளங்களாவது சிந்தனை செய்யுங்கள்.

பகுத்தறிவு தொழிற்படும் வாசக நேயர்களான நீங்கள், இவ்விதமான இருளில் தட்டழியும் கூட்டத்தினரை இஸ்லாத்தில் முளைத்த களைகளாக, அறக்கொட்டி போன்ற நச்சுக் கிருமிகளாகக் காணுகிறீர்களா? இல்லையா? தோட்டச் சொந்தக்காரர்களைக் கொன்றொழித்த நச்சுக் கிருமிகள் இவ்வகையினர்தான். இக்கூட்டத்தினர் தெளித்துக் கொண்டிருக்கிற நச்சுக் கருத்துகள்; கிருமிநாசினியென்ற போலிப் பெயரிலுள்ள வஹ்ஹாபிஸம், இல்யாஸிஸம் போன்ற கொள்கை விளக்கங்களே.

றசூல் (ஸல்) அவர்களும் அவர்களுடைய ஸஹாபாக்களும் கொண்டிருந்த கொள்கை லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவினால் உறுதிப்படுத்தப்பட்ட சுத்த சத்தியமான தௌஹீது, ஏகத்துவம், ஏகவல்லமை என்றெல்லாம் பலவாறாய்க் கூறப்படுகிற ஒரேயொரு கொள்கைதான். இன்னோர் கூறும் கலிமாவின் பொருள் அல்லாஹ்வின் வேறான இலாஹ் இல்லை என்பதே. இக்கொள்கைக்கு எவர் எப்பெயரைக் கூறினாலும் உள்ளது ஒரே கொள்கைதான். இக்கொள்கைதான் உஸ்மான் சாஹிப் கூறிய கிருஷ்ணர் அருச்சுனன் போன்றோரின் (இந்துக்களின்) அத்வைதம்

என்பது. இவர்களுக்கும் மூ.்.மீன்களுக்குமிடையில் கொள்கையை விளக்கும் முறையில்தான் வேறுபாடு தென்படுகிறதென்று நான் முன்பே கூறியுள்ளேன். நாம் கூறிய தௌஹீது, வஹ்தத்துல் வுஜூத், அத்வைதம் என்ற கொள்கைக்கு வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத் தவிர என்ற கொள்கை முற்றிலும் நேர்மாறானதுதான். முஷ்ரிக்குகளின் கொள்கை அல்லாஹ்வின் வேறான இலாஹுகள் அவனுடன் உண்டு என்பதே. இந்த இரு விவரங்களையும் ஒன்றோடொன்றை ஒப்பிட்டு நோக்கும் அறிவுடைய மக்களுக்கு இஸ்லாத்தின் கொள்கைக்கும் முஷ்ரீக்கின் கொள்கைக்குமிடையிலுள்ள வேறுபாடும் உண்மையும் புலனாகும்.

1. அல்லாஹ்வின் வேறான இலாஹு இல்லை. இது மூ.். மீனுடைய கொள்கை. இதன் பெயர் தௌஹீது, அத்வைதம் என்பது. வஹ்தத்துல் வுஜூத் என்பதும் இதுவே.

2. அல்லாஹ்வின் வேறான இலாஹுகள் உண்டு. இது முஷ்ாக்கினீ கொள்கை. இதன் பெயர் ஷிர்க், துவிதம் என்பது இதுதான்.

இவ்விரு கொள்கைக்குமுள்ள வேறுபாட்டையும் அதனால் ஏற்படும் நன்மை தீமைகளையும் விளக்கி மனிதகுலத்தை ஆடகொள்ளும் நோக்கமாகவே ஸுஹ்புகள் வேதங்கள் நபிமார் றசூல்மார்களை இறைவன் அருளினான். இக்கொள்கையை விளக்குவது தௌஹீது (அத்வைதம் வஹ்தத்துல் வுஜூத் கொள்கை) இதில் வெற்றிபெற வழிவகுப்பவை அமல்கள். இவ்வளவையாவது உஸ்மான் சாஹிப் புரிந்துகொண்டிருந்தால் தௌஹீதுக்கு எதிர்மறை வஹ்தத்துல் வுஜூத் என்ற நூலை எழுதியே இருக்கமாட்டார். இஸ்லாத்தின் கொள்கை எது என்பது இவருக்கோ இவரின் கூட்டத்துக்கோ தெரியவே தெரியாது.

மேலும், இப்போதாவது அவர் கொள்கை விளக்கத்தைப் புரிந்துகொண்டால், எவருக்கும் தெரியாமலே அவர் தௌபாச் செய்யவும் இஸ்லாத்தையும் அதன் கொள்கையையும் ஏற்றுக் கொள்ளவும் முடியும். அல்லாஹ் நாடாமல் அவரால் முடியாது

தான். நண்பரைப் போன்றோர் முதலில் பித்தமிகைப்பு நீங்கக்கூடிய வைத்தியம் செய்தபின் மார்க்கத்தை ஆராய்வு செய்வதே உசிதம். இல்லையானால் நோய் இன்னுமதிகரிக்கலாம். இந்த நோய்க்கு அங்கொடையில் வைத்தியம் பெறலாம்.

ஹதீஸ்:
(கருத்தை விட்டுவிட்டு) சொல்லழகில் மூழ்குபவர் நாசமாகட்டும் என்று றசூல்(ஸல்) அவர்கள் மூன்றுமுறை கூறினார்கள்.

அறிவிப்பவர் : மஸ்ஊத்(றலி)

ஆதாரம் : முஸ்லீம், அபூதாவூத்

ஹதீஸ்:
மனிதர்களில் ஒரு காலம் வரும் அப்போது இஸ்லாமின் நாமமேயன்றி அதன் உண்மை இராது. குர்ஆனில் அதன் எழுத்துகளே அல்லாது அதன் உண்மையான அர்த்தம்(கருத்து) இராது. அவர்களின் மஸ்ஜித் (பள்ளிவாயல்கள்) நேர்வழியின்றிக் கெட்டுப்போய் இருக்கும். அவர்களின் உலமாக்கள் வானத்தின் கீழ்மிகக் கெட்ட ஜந்துகளாய் இருப்பார்கள்.

கெட்ட ஜந்துகள், பாம்பு, தேள், அறக்கொட்டி போன்றவைதான். இன்றுள்ள கிழக்கு மாகாண அரைகுறை மௌலவிகள் சிலர் எம்போன்றோரைக் கொன்றொழிக்க முற்படுவது ஏன்? அவர்கள் விஷஜந்துகளாய் இருப்பதே. நான் அவர்களுக்குச் செய்த அநீதிதான் என்ன? கலிமாவுக்கு அல்லாஹ் தவிர இலாஹ் இல்லையென்று கூறியதும் இதை நிரூபிக்கும் குர்ஆன் ஹதீஸ்களின் ஆதாரங்களை மக்களுக்கு விளக்கிக் காட்டியதும்தான். இவ்விளக்கம் அந்த மக்களின் முகமூடியைக் கிழித்து ஜப்பாவையும் கழட்டி நிர்வாணமாக்கி விட்டது. அவர்களுடைய நிஜரூபத்தை மக்கள் அறிந்து கொண்டார்கள். பொய் ஆடையணிந்துதான் செல்ல வேணடும். இவர்களின் ஆடை மௌலவி செட்டிவிக்கட். என் வாதம் பொய்க்கு மாறான உண்மையாகையால் ஆடையணியாமலே சென்று கொண்டிருக்கிறது. அவ்வளவுதான்.

ஒருசிலர் தம் வரட்டுக் கௌரவத்தைப் பாதுகாப்பதற்காக இஸ்லாத்தின் லேபலில் மௌலவியென்ற போர்வையில், உலக மக்கள் யாவருக்கும் உரிமையான எவரும் குறைகாண முடியாத தீனுல் இஸ்லாத்தை மூடிமறைக்க முற்படுவதும், பகுத்தறிவுக்கே

விரோதமாய் நூலெழுத முற்பட்டுத் தங்களுடைய பைத்தியக்காரத் தனத்தை உலகறியச் செய்வதும் முஸ்லீம் சமூகத்துக்கு மிகப் பெரிய அவமானமாகும். ஆராய்ந்து தெளிவுபட்டு உண்மையை உலகுக்கு வெளிப்படுத்தப் பேசுவது எழுதுவது வரவேற்கப்பட வேண்டிய ஓர் அபார சாதனைதான். இவ்விதப் பணிக்கு இம்மையிலும் மறுமையிலும் பலனுண்டு, மனிதனை உண்மையின் அடிப்படையில் சிந்தனையைத் தூண்டும் நூற்கள் எவரால் எழுதப்பட்டிருப்பினும் அது வரவேற்கக் கூடியதுதான். ஆனால் மனித குலத்தின் சிந்தனைக்கு விலங்கிட்டு எழுதப்பட்ட நூற்கள் யாவும் ஒதுக்கப்பட வேண்டியவையே. இஸ்லாத்தின் (கலிமாவின்) முதல் வேலை சிந்தனையைத் தூண்டுவதுதானே.

நண்பர் உஸ்மான்சாஹிப் அவர்களின் நூலில் மிக முக்கிய மான இன்னும் ஓரு குளறுபடி இருக்கிறது.

எவனொருவன் றசூலுக்கு வழிப்பட்டானோ அவன் திடனாக அல்லாஹ்வுக்கே வழிப்பட்டான் 4:80 - நீர் மண்ணையெறிந்த போது அதை நீர் எறியவில்லை, என்கினும் அல்லாஹ்தான் எறிந்தான் 8:17 போன்ற ஆயத்துகளுக்கு உஸ்மான் சாஹிப் மட்டுமல்லாமல் இன்னும் பலர் அவர்களுடைய வாதத்துக்கமைவாய்ப் பொருள் கொள்கிறார்கள். இது தவறு. ஏனென்றால் கலிமாவின் தலீல்களாய்த் தரப்பட்டஆயத்துகள் அத்தனையும் ஒரே கருத்துடைய முஹ்கமுவைச் சேர்ந்தவையே. இவ்வாயத்துகளுக்கு அவரவர் இஷ்டம் போல பொருள்கூற முடியாது. அப்படிக் கூறுவது குர்ஆனை மறுப்பதாகும். முஹ்கமுவின் கருத்து எல்லோராலும் தெளிவாய் விளங்கக்கூடியது. அதற்கு வலிந்துரை அவசியமில்லை. விளங்கியும் ஏற்காமலிருக்கலாம். அது வேறொரு விஷயம். இந்த ஆயத்துகளிலுள்ள உண்மையென்ன? என்பதை எமது முதல் நூலான ஈமானின் உண்மையை நீ அறிவாயா? முதலாம் பதிப்பு என்ற நூலில் ஷிர்க் (இணை ஏற்படுத்துதல்) என்பதன் விவரம் என்ன? என்ற கல்வியைக் கொண்டே நிரூபித்துக் காட்டியுள்ளேன். அங்குக் கண்டு தெளிக.

குர்ஆன்: 10:39

என்கினும்; அவர்களுக்குத் தெரியாததும் அதன் தாவீல் (ஆதாரம்-விளக்கம்) அவர்களுக்குக் கிடைக்காததுமான சங்கதியைப் பொய்யென்றே, அவர்கள் கூறுவார்கள்.

குர்ஆன்: 2:78

அன்றி கல்வி அறிவில்லாதவர்களும் அவர்களில் உண்டு. வேதத்தைப்பற்றிக் (கேள்விப்பட்டுள்ள) வீண் நம்பிக்கை (ஈமானை) களைத் தவிர (உண்மையை) அவர்கள் அறியவே மாட்டார்கள். அவர்கள் வீண் சந்தேகத்தில் (ஆழ்ந்து) கிடப்போரைத் தவிர வேறில்லை.

குர்ஆன்: 8:21

செவியுறாது செவியுற்றோம், என்று வாயால் கூறியவர்களைப் போல் நீங்களும் ஆகிவிட வேண்டாம்.

குர்ஆன்: 39:22

எவனுடைய இருதயத்தை இஸ்லாத்தைப் பெற்றுக்கொள்ள அல்லாஹ் விசாலப்படுத்தினானோ அவன் இறைவனின் பிரகாசத்தில் (நூரில்) இருக்கிறான்.

குர்ஆன்: 17:36

நீர் அறியாத யாதோரு விஷயத்தையும் நீர் பின்பற்றாதீர். ஏனென்றால் நிச்சயமாக செவி, கண், இருதயம் ஆகிய இவை ஒவ்வொன்றுமே கேள்வி கேட்கப்படும்.

ஹதீஸ்:

அறிவு ஈமான்தாரிகளின் தவறிப்போன (மறந்துபோன) ஒரு பொருளாகும். எனவே அவர் அதனை எங்கே கண்டாலும் அது அவருக்கே உரிமையுள்ளதாகும்.

அறிவிப்பவர் : அபூஹுறைரா(ரலி)

ஆதாரம் : திர்மிதி

குர்ஆன்: 37:35,36

''அல்லாஹ் தவிர இலாஹு இல்லையென்று'' அவர்களுக்குக் கூறப்பட்டால், நிச்சயமாக அவர்கள் கர்வம் கொண்டு என்னே! நாங்கள் பைத்தியம் கொண்ட ஒரு கவிவாணருக்காக; எங்களுடைய இலாஹுகளை மெய்யாகவே விட்டுவிடுவோமா?

இஸ்லாத்தின் கொள்கையை அறிய முற்படும் மக்களுக்கு இந்த ஆயத்துகளே வழிகாட்டப் போதுமானவையாகும். முஸ்ரீகுகள் றசூல் கூறிய கலிமாவை ஏன் மறுத்தார்கள்? இலாஹு என்பதற்கு அவர்கள் கொண்டிருந்த கருத்தென்ன? றசூல் (ஸல்) அவர்கள் இலாஹு என்ற சொல்லைக் கலிமாவில் எந்த நோக்கோடு கூறினார்கள்? என்பதை யார் சிந்தனைக்கெடுக்கிறார்களோ அவர்கள் நிச்சயமாக உண்மையைப் புரிந்துகொள்ள முடியும்.

குர்ஆன்: 18:54

மனிதர்களுக்கு இந்தக் குர்ஆனில் ஒவ்வோர் உதாரணத்தையும் விவரித்திருக்கிறோம். என்கினும் மனிதனோ அதிகமாக(வீண்) தர்க்கம் செய்பவனாகவே இருக்கிறான்.

பித்த மயக்கம் தெளிவதானால், உள்ளத்திலுள்ள உளநோய் குணமாகி மனிதனாவதானால், நிச்சயமாகக் கலிமத்துதையிபா விளக்கும் உண்மையைப் பொறுமையோடு விளங்கியே ஆகவேண்டும். குர்ஆன் ஹதீஸுகள் கலிமா என்ற மருந்தைக் கையாளும் முறைகளை விளக்குவதற்காகவே தரப்பட்டவை. அவற்றின் சட்டங்களுக்கமைவாய் அக்கலிமாவைக் கடைப்பிடித்தால் நிச்சயமாக அந்த உளநோய் தீர்ந்துவிடும். அதன்பின் அல்லாஹ்வுடன் அவனல்லாத இலாஹு இல்லையென்ற சுத்த சத்தியமான தௌஹீது கிட்டிவிடும். மனிதன் பிறப்பது இதில் முதிர்ச்சிபெற்றுப் பேரின்பநிலையில் நிலைப்பதற்காகத்தான்.

குர்ஆன்: 10:57

மனிதர்களே! உங்களிறைவனிடமிருந்து நிச்சயமாக ஒரு நல்லுபதேசம் வந்திருக்கிறது. (உங்கள்) இருதயங்களிலுள்ள நோய்களுக்கு அது ஒரு சஞ்சீவியாகும், மேலும்(அது) ஈமான் கொண்டவர்களுக்கு நேர்வழிகாட்டியாகவும், ஓர் அருளாகவும் இருக்கிறது.

குர்ஆன்: 10:17

அல்லாஹ்வின் மீது பொய் சொல்பவனைவிட அல்லது அவனுடைய வசனங்களைப் பொய்யாக்குபவனைவிட அக்கிரமக்காரன் யார்? நிச்சயமாகக் குற்றவாளிகள் சித்தியடையவே மாட்டார்கள்.

தொகுப்பு:

நண்பர் உஸ்மான்சாஹிப் அவருடைய தௌஹீதுக்கு எதிர் மறை வஹ்தத்துல்வுஜூத் என்ற நூலில் 74ஆம் பக்கத்தில் இறைவனுக்கு உருவம் (லாஹிர்) உண்டு என்றும் இல்லையென்றும் (பாதின் உண்டு என்றும்) நம்பவேண்டும் என்பது ஓர் அத்வைதவாதம் என்கிறார். இந்த நம்பிக்கைக்கு அறிவு இடம் தருமா? பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டுமே! கற்பனைக் கதை சொன்னாலும் கருத்துடையதாய் இருக்கக் கூடாதா? என்று வினவுகிறார். மின்னலுக்கு உருவமில்லையென்றும் அதைக் கண்ணால்தான் பார்க்க முடியும் என்றும் கற்பனையாய்ப் பொய்கூறுகிற இவரைப் பார்த்துப் பொய்சொன்னாலும் பொருந்தச் சொல்லக்கூடாதா? கற்பனையாய்க் கூறினாலும் கருத்துடையதாய் இருக்கக் கூடாதா? என்று அத்வைதிகள் கேட்பார்களல்லவா? உஸ்மான் சாஹிப் என்னதில் தருவாரோ? குர்ஆனின் 57:3 போன்ற பல நூற்றுக்கணக்கான ஆயத்துகள் வெளிப்படையாயும் சையிக்கினையாயும் அல்லாஹ்வுக்கு லாஹிர் (தோற்றம்) பாதின் (தோற்றமின்மை) ஆகிய இரு பண்புகளுமுண்டு என்று ஆணித்தரமாய் வலியுறுத்தும்போதும் அதை மறுத்து நிற்கும் உஸ்மான்சாஹிப் குர்ஆனை ஒப்புக்கொண்ட ஒரு முஸ்லீமா? மூ.மீனா? குர்ஆனை மறுக்கும் காபீரா?

மேலும், உருவம் என்ற உடலும் அரூபம் (உருவமின்மை) என்ற உயிரும் ஏகமாய் இரண்டில்லாத ஒன்றாய், தானே உஸ்மான்சாஹிபாய் இருக்கிறேனென்பதை அறிந்துகொள்ள முடியாத அந்த நண்பருடைய அறிவு லாஹிறையும் பாதினையும் எப்படி ஒப்புக் கொள்ளும்? அவரிடம்தான் அறிவே கிடையாதே. இவருடைய நூலில் 7ஆம் பக்கம் உலக்கைக் கொழுந்து என்றால் புத்திக்குறைவுள்ளவர் என்று விளக்கியுள்ளார். இவருடைய இக்கூற்றின்படி இவரே முழு வளர்ச்சிபெற்ற ஓர் உலக்கைக் கொழுந்தாய் இருக்கிறார் என்பது நிரூபணமாகிறது. எப்படியென்றால் மின்னலுக்கு உருவமில்லையென்றும் உருவமற்ற மின்னலைக் கண்ணால்தான் பார்க்கலாம் என்றும் இவருடைய நூலில் 64ஆம் பக்கம் கூறியுள்ளார். விறகுடைத்து வாழும் பாமர மனிதனுக்குள்ள

அறிவுகூட இந்த உஸ்மான்சாஹிபுக்கும் அவரைச் சரிகண்ட மௌலவிகள் (லேபல்) களுக்கும் கிடையாதென்பது தெரிகிறது. ஆதலால் உஸ்மான் சாஹிபின் கூற்றுப்படி அவரையும் அவரைச் சரிகண்டோரையும் நாம் உலக்கைக் கொழுந்துகள் என்று கூறுவதில் தவறு கிடையாது. நினைவாற்றலில்லாத விட்டில் பூச்சியின் அறிவுடைய உஸ்மான் சாஹிப் உள்ளமையென்ற வுஜூதில் இருந்துதான் அனைத்தும் உண்டாகின்றன என்றும் அதம் என்னும் இல்லாமையில் இருந்து எதுவும் உண்டாகமுடியாதென்றும் கூறுவது அத்வைதிகளின் நம்பிக்கையென்று கூறுகிறார். கிருஷ்ணன் அருச்சுனன் போன்றோர் இஸ்லாத்தின் தௌஹீதையே உலகுக்கு உணர்த்தினார்களென்றுகூறிய இவர், இந்துக்களின் கொள்கை அத்வைதம் என்றும் அது இஸ்லாத்திலுள்ளதல்ல என்று கூறுகிறாரே! இவருடைய அறிவு விட்டில் பூச்சியின் அறிவா? இல்லையா? கிருஷ்ணன் போன்றோர் இந்துக்களல்லவென்று இவர் மறுக்கிறாரா? தௌஹீதை உலகுக்கு அறிமுகம் செய்த கிருஷ்ணன் அறபி என்று நண்பர் கருதுகிறாரா? இவருடைய நூல் கஞ்சா நிஸானில் உருவானதா? கல்வி ஞானத்தில் உருவானதா? இவரை ஒரு முஸ்லீமாய்க் கொள்ள முடியுமா?

மேலும், இல்லாத ஒன்றை இருப்பதாய் நம்புவதும் இருக்கிற ஒன்றை இல்லாததாய் நம்புவதும் ஒரு மனநோய் என்று உஸ்மான் சாஹிப் கூறுகிறார். ஆம் இது நிச்சயமான உண்மை. இது ஒரு தத்துவம் என்பதை அவர் படித்திராவிட்டாலும் பேச்சில், எழுத்திலாவது ஒத்துக்கொண்டாரே! அதற்காக நாம் பெருமைப் படலாம். இந்த வகையில் உஸ்மான் சாஹிப் தானே ஒரு மனநோயாளி என்பதை ஒத்துக்கொண்டவராகிறார். எப்படியென்றால், அல்லாஹ்வுடன் ஜோடி, இணை என்ற வகையில் எதுவுமே (சுத்த சூன்யம், இல்லாமைகூடக்) கிடைக்கவே கிடையாதென்று குர்ஆன் ஹதீஸ் களும் தத்துவ விளக்கமுடைய அறிவும் நிரூபணம் செய்திருக்கும் போதும், அல்லாஹ், அதம் என்ற இல்லாமையிலிருந்தே படைத்தான் என்று இவர் கூறுவதால், அல்லாஹ்வுடன் அதம் என்ற இல்லாமையும் உண்டு என்ற கொள்கையுடைய சுத்தமான முஸ்ரீக்காக இருக்கிறார். அதம்

என்ற சொல்லின் பொருள் இவரறியாத ஒன்று. சிருட்டி அதம் என்ற இல்லாமையிலிருந்து வந்த இல்லாமையாக இருந்தால் இல்லாத ஒன்றை இருப்பதாயும் இருப்பதை இல்லாததாயும் நம்புகிறவன் மனநோயாளியென்றால் இந்த உஸ்மான் சாஹிப் பூரணமான ஒரு மனநோயாளிதான் என்பதை நமக்கு நிரூபித்துவிட்டாரல்லவா?

இல்லாததை இருப்பதாயும் இருப்பதை இல்லாததாயும் நம்புவதே ஷிர்க் என்பதை இவரும் இவருக்கு அணிந்துரை மதிபபுரை வழங்கிய கல்விமான்களும் அறியவில்லை. இவர்கள் தங்களை மனநோயாளிகள் என்று காட்டிக்கொள்வதில் பெருமையடைகிறார்கள் போலும். இவ்வித மனநோயாளிகளுக்கும் தௌஹீதுக்கும் ஒத்துவராது. மேலும் அல்லாஹ்வுடைய குத்ரத்தைப் பொருத்தவரை, இருக்கிற ஒன்றிலிருந்துதான் இன்னொன்றை உருவாக்கவேண்டிய அவசியமில்லையென்றும் இல்லாத வற்றையெல்லாம் இல்லாமையிலிருந்து படைக்கும் ஆற்றல் இறைவனுக்குண்டு என்றும் உஸ்மான் சாஹிப் கூறுகிறார். இவர் முன்கூறிய தத்துவத்தை இப்போது மறந்துவிட்டார். இந்த விட்டில் பூச்சி அல்லாஹ்வின் வல்லமைக்கு வரைவிலக்கணமும் வகுக்கிறார். இவரும் இவருடைய கூட்டத்தினரும் குர்ஆனை மறுப்பதாலும் முஸ்ரீக்கின் கொள்கையை நிரூபிக்க முனைவதாலும் தத்துவ விளக்கத்தையும் பகுத்தறிவையும் மறுப்பதாலும் நிச்சயமாக இவர்கள் இஸ்லாத்துக்குப் புறம்பான "முர்த்தத்" வழிகெட்டவர்களேயாவர்.

குர்ஆன்: 40:4

(நபியே!) காபீர்களைத் தவிர அல்லாஹ்வுடைய (ஆயத்) வசனங்களைப்பற்றி (வீணாக)த் தர்க்கிக்கமாட்டார்கள். அவர்கள் பல நகரங்களிலும் (ஆடம்பரமாய்) சுற்றித்திரிவது உம்மை மயக்க வேண்டாம்.

நீங்கள் வாசித்துக்கொண்டிருக்கிற இந்த நூலின் ஆரம்பத்தில் நாம் விளக்கியுள்ள, வாஜிபுல்வுஜூத், மும்தனிஉல்வுஜூத், மும்கினுல் உஜூத், என்ற இம்மூன்று தத்துவார்த்த உண்மைகளையும் உஸ்மான் சாஹிபும் அவரைச்

சரிகண்ட மௌலவிகளும் இதுகாலவரையில் அறிந்துகொள்ளாத குற்றம்தான். இந்த விதண்டா வாதத்துக்குக் காரணமாகும். தற்கால வழக்கிலுள்ள தௌஹீதுக் கிதாபுகளையாவது இந்த வழிகெட்ட கூட்டம் வாசிக்கவும் இல்லை. விளங்கித் தெளிவுபடவும் இல்லை. இவ்வித மூடர்கள் தங்களை உலமாக்களாய்க் காட்டிக்கொள்வதும் பெரும் பெரும் பட்டம் பதவிகளைத் தங்கள் பெயரோடு இணைத்துக் கொள்வதும் ஓநாய்க் கூட்டம் ஆட்டின் தோலைப் போர்த்துக்கொண்டதுபோல் அமையும். இஸ்லாத்தின் கொள்கையை மூடிமறைக்க, இருட்டடிப்புச் செய்ய, புரட்ட முற்படுவது அல்லாஹ்வுடன் யுத்தம் செய்ய முற்படுவதாகும். இது குர்ஆனின் இறுதித் தீர்ப்பாகும். அன்பியாக்கள், அவ்லியாக்கள் இறைவனின் பிரதிநிதிகள் என்பதை நாம் மறக்கக் கூடாது.

தௌஹீதுக்கு மாறானது ஏக இறைக்கொள்கை, ஒரே இறைக்கொள்கை, ஒரே நாயன் கொள்கை, போன்றவைதான். இவை அபூஜஹீல் காலத்து மக்களின் கொள்கையே. இஸ்லாத்தின் கொள்கை இதற்கு முற்றிலும் மாறானது. வஹ்தத்துல்வுஜூத், வஹ்தத்துஸ்ஸுஹூத், ஏகத்துவம், அத்வைதம் என்பவை சுத்தமான தௌஹீதேயன்றித் தௌஹீதுக்கு எதிர்மறையான தனித்தனிக் கொள்கைகளேயல்லவென்பதை உஸ்மான் சாஹிபும் அவர் நண்பர் களும் இனிமேலாவது விளங்கித் தெளிவுபடுவார்களா?

குர்ஆன்: 12:103
நீர் எவ்வளவுதான் விரும்பியபோதிலும் மனிதர்களில் பெரும்பாலார் ஈமான் கொள்ளவே மாட்டார்கள்.

இஸ்லாத்தின் கொள்கை விளக்கமே தெரியாமலிருக்கும் போதும் தௌஹீதுக்கு எதிர்மறை வஹ்தத்துல்வுஜூத் என்று நூலெழுதவும் அதற்கு அணிந்துரை, மதிப்புரை வழங்கவும் துணிந்த கூட்டத்தினர் சக்குச்சந்தேகமில்லாத மனநோயாளிகள் என்பது நிரூபணமாகிறதல்லவா? இக்கூட்டத்தினருக்கு ஏகத்துவத்துக்கும் ஒருமைக்கும் பேதம் தெரியாது. குர்ஆனில் முஹ்கமு, முதஸாபிஹத் போன்றவை உண்டு என்பதுகூடத் தெரியாது. ஆகவே இஸ்லாத்தின் ஏகத்துவக் கொள்கை இவர்கள் அறியாத ஒரு விஷயமே.

ஹதீஸ்:

நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு மூன்று காரியங்களை விட்டும் அபயமளித்திருக்கிறான். 1. நீங்கள் அனைவரும் அழிந்துவிட உங்களின் நபி உங்களைச் சபியாதிருத்தல். 2.பொய்யர்கள் மெய்யர்களை (உண்மை கூறுபவர்களை) வெற்றிகொள்ள அல்லாஹ் விடமாட்டான். 3. வழிகேட்டில் நீங்கள் அனைவரும் ஒன்றுசேர மாட்டீர்கள் என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்,

அறிவிப்பவர் : அபூமாலிக்கில் அஸ்அரீ(றலி)
ஆதாரம் : புஹாரி

ஹதீஸ்:

அமானிதம் பாழாக்கப்படின் நீங்கள் மறுமையை எதிர்பாருங்கள் என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள். எவ்விதம் அமானிதம் பாழாக்கப்படும் என்று வினவப்பட்டபோது, தகுதியற்றோருக்கு அதிகாரம் நல்கப்படுங்கால் என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுறைறா(றலி)
ஆதாரம் : புஹாரி

இஸ்லாம் எவரிடம் அமானிதமாய்த் தரப்பட்டது? உலமாக்களிடதிதில்தான். இந்த அமானிதத்தைப் பாதுகாக்க வேண்டியவர்கள். அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாதவையும் உண்டு என்று கூறினால் எழுதினால் இவர்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தும் தகுதியுடையோர்தானா?

குர்ஆனின் உறுதியான ஆதாரங்களின் படியும் ஹதீஸுகளினபடியும் சிந்தித்து ஆராயும் பகுத்தறிவின் படியும், நீங்காமல் நிலை பெற்றிருக்கிற வஹ்மியாகிய நாமரூபபேதாபேதங்கள் (சர்வ சிருட்டி யும்) உண்டு என்றும் அவை காலத்தால், இடத்தால் குண சுபாவங்களால் ஒன்றைவிட்டு மற்றொன்று வேறுபட்டிருக்கின்றன என்றும் நம்பி, அதனதன் ஹுக்கூமின்படி நடந்துகொள்ள வேண்டியது ஒவ்வொரு மனிதனதும் கடமையாயும் இஸ்லாத்தில் பூரணமாய் அனுமதிக்கப்பட்ட சுத்த ஈமானாயும் இருக்கிறது. நாய் நாய்தான், பன்றி பன்றிதான், அல்லாஹ் அல்லாஹ்தான். ஒன்று மற்றொன்றாவதே இல்லை. இவையாவும் ஒன்றேயென்று எந்த ஓர் மூ.ீனும் கூறுவதில்லை. இப்படிக் கூறுவதாய் விளங்கிக் கொள்வது விளங்குபவரின் அறிவீனமே. இவ்வித பேதா பேதங்கள் யாவுக்கும் உண்மை

(ஹக்கு) வுஜூதாக இருக்கிறதென்றறிவதே தௌஹீதாக இருக்கிறது. எப்படியென்றால் "கஹ்ஹார்" அடக்கியாள்பவன் "ஹப்பார்" பெரும் தன்மையாய் மன்னிப்பவன் "லார்ரு" நஷ்டம் கொடுப்பவன் "நாபிஉ" இலாபம் கொடுப்பவன் போன்ற திருநாமங்கள் ஒன்றுக்கு மற்றொன்று நேர்விரோதமாயிருப்பினும் இப்பண்புகளெல்லாம், உள்ளதாய் இருக்கிற ஏகமான (இரண்டில்லாத ஒன்றாயுள்ள) வுஜூதுக்கே உரியதாய் இருக்கின்றன, என்பதை விளங்கித் தெளிவதே தௌஹீதாயிருக்கிறது. ஞானம், வேதாந்தம், அத்வைதம் வஹ்தத்துல் வுஜூது ஏகத்துவம் என்றெல்லாம் கூறப்படுவது இஸ்லாத்தின் தௌஹீதைக் குறிப்பிட்டவைதான். அல்லாஹ்வைக் கடவுள், கோட், யெகோவா, பரமன் என்று கூறுவதுபோல உலகில் தோன்றிய உண்மையான மதங்கள் விளக்கிய தௌஹீது இதுதான். கிருஷ்ணன் அருச்சுனன் போன்ற இந்துக்களால் இஸ்லாத்தின் தௌஹீது உலகுக்குச் சமர்ப்பிக்கப்படடது என்று உஸ்மான் சாஹிப் கூறுகிற கொள்கை இந்த தௌஹீது என்ற அத்வைதக் கொள்கைதான். இதை உஸ்மான் சாஹிப் கொஞ்சமேனும் சிந்தித்ததுண்டா?

ஹதீஸ்:

(கருத்தைவிட்டு) சொல்லழகில் மூழ்குபவர் நாசமாகட்டும் என்று றசூல்(ஸல்) அவர்கள் மூன்றுமுறை கூறினார்.

அறிவிப்பவர் : இப்னுமஸ்வூத்(றலி)
ஆதாரம் : முஸ்லீம், அபூதாவூத

இப்போதாவது உஸ்மான்சாஹிபும் அவருக்கு அணிந்துரை மதிப்புரை, சிறப்புரை வழங்கிய பட்டதாரிகளும் உண்மையை ஏற்றுக்கொள்ளும் அளவாவது பித்தம் தெளிவார்களா? அவசியமானால் இவ்வகைக் கூட்டத்தினருக்குக் குர்ஆன் ஹதீஸுகளிலிருந்தே பித்தமயக்கம் தீர்க்கக்கூடிய மருந்தைப் புகட்ட முடியும், இன்ஷா அல்லாஹ்.

ஹதீஸ்:

எவனுக்கு அல்லாஹ் நன்மை செய்ய (றஹ்மத் செய்ய) நாடுகிறானோ அவனுக்கு மார்க்கத்தைச் சரியான முறையில் அறிந்து கொள்ளக்கூடிய

சக்தியை அல்லாஹ் கொடுக்கிறான், என்று நபிகள்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அனஸ்(ரலி)
ஆதாரம் : புஹாரி

குர்ஆன்: 7:40
நிச்சயமாக எவர்கள் நம்முடைய வசனங்களைப் பொய்யாக்கி அதைப் புறக்கணிப்பதைப் பெருமையாய்க் கொண்டார்களோ அவர்களுக்கு வானத்தின் வாசல்கள் திறக்கப்படமாட்டா. ஊசியுடைய காதில் ஒட்டகை நுழையும் வரையிலும் அவர்கள் சுவனபதியை அடையமாட்டார்கள், குற்றவாளிகளை நாம் இவ்வாறே தண்டிப்போம்.

குர்ஆன்: 14:27
ஈமான் கொண்டவர்களை இம்மையிலும் மறுமையிலும்(கலிமா என்னும்) உறுதியான வாக்கைக் கொண்டு அல்லாஹ் அவர்களை உறுதிப்படுத்துகிறான், அக்கிரமக்காரர்களைத் தவறான வழியில் விட்டுவிடுகிறான்; அல்லாஹ் நாடியதைச் செய்கிறான்.

குர்ஆன்: 22:24
கலிமத்துத்தையிபா அவர்களுக்குக் கற்பிக்கப்பட்டுப் புகழுக்குரிய இறைவனின் பாதையிலும் (ஸிறாத்திலும்) அவர்கள் (இம்மையிலே) செலுத்தப்படுவார்கள்.

ஹதீஸ்:
என் சமூகத்தினரில் ஒரு கூட்டத்தினர் உண்மைக்காக எப்பொழுதும் போர் புரிந்துகொண்டும் தங்களின் விரோதிகளை மிகைத்துக் கொண்டுமிருப்பார்கள். அத்தகையவரில் கடைசி கூட்டத்தினர் மஸீஹ் தஜ்ஜாலைக் கொன்றொழிக்கும்வரை என்று நபிகள்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவன் : இம்ரான் இப்னுஹுஸைன்(ரலி)
ஆதாரம் : அபூதாவூத்

ஹதீஸ்:
ஏறக்குறைய முப்பது பொய்யர்களான தஜ்ஜால்கள் ஏற்படாதவரை உலக முடிவுநாள் ஏற்படாது. அவர்கள் அனைவரும் நிச்சயமாகத்

தாம் அல்லாஹ்வுடைய தூதர்தாம் என்றெண்ணுவார்கள் என்று நபூல் (ஸல்) அவர்கள் கூறினர்.

அறிவிப்பவர் : அபூஹுறைறா(றலி)
ஆதாரம் : அபூதாவூத் திர்மிதி

குர்ஆன் :5:41
தூதரே! சிலர் (கு.ப்ரின்பால்) நிராகரிப்பின்பால் விரைந்தோடுவது உமக்குக் கவலையைத் தரவேண்டாம். ஏனென்றால் அவர்கள் வாயினால் மட்டும் ஈமான் கொண்டோமென்று கூறினார்களே தவிர அவர்களுடைய இருதயங்கள் (அதனை) ஒப்புக்கொள்வதில்லை.

தௌஹீதென்ற வஹ்தத்துல் வுஜூத் (அத்வைதம்) கொள்கையை ஏற்றுக்கொண்ட எவரும் இறைவன் அவதாரம் எடுக்கிறான் என்றோ மறுபிறவி உண்டென்றோ இறைவன் தூணிலுமிருப்பான் துரும்பிலுமிருப்பான் என்றோ கூறுவதில்லை. உஸ்மான் சாஹிப் போன்றோர் சித்தசுவாதீனமற்றிருப்பதால் வஹ்தத்துல்வுஜூத் (அத்வைத) தௌஹீதுவாதிகளின் பேச்சைப் புரிந்துகொள்ளாமல் இப்படியெல்லாம் கற்பனை பண்ணுகிறார்கள். அல்லாஹ்வுடன் அவனல்லாத எதுவும் ஜோடியாய்ச் சமமாய் இணையாய், துணையாய், நிகராய், ஒப்பாய் இல்லை என்பதே இஸ்லாத்தின் தௌஹீது என்பது. இதன் சாரம் உள்ளதாய், ஏகமாய், லாஹிறாய், பாதினாய், அவ்வலாய், ஆகிறாய், நிலையாய் இருந்துகொண்டிருப்பவன் அல்லாஹ் என்ற வுஜூது மட்டும் என்பதே தோன்றி மறையும் சர்வ ஆலங்களும் "ஹுளூர்" என்ற மயக்குக் காட்சியே என்பதை உஸ்மான் சாஹிபும் அவர் நண்பர்களும் உணர்வார்களா? "தஜல்லி" என்றால் அல்லாஹ் எங்கிருந்தோ இறங்கிவந்து ஒன்றில் குடியேறுகிறானென்று நண்பர் கருதுகிறார் போலும், நண்பரே! ஆழமறியாமல் காலைவிடுவது பிழையென்பதைப் பித்தம் தெளிந்த பிறகாவது ஒப்புக்கொள்ளுங்கள்.

நண்பர் உஸ்மான் சாஹிபுடைய தௌஹீதுக்கு எதிர்மறை வஹ்தத்துல்வுஜூத் என்ற நூலுக்கு அணிந்துரை வழங்கிய M.B.ஆதம்பாவா என்பவர் தம்பெயருக்கு முன் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை அரபு-இஸ்லாமியத்துறை விரிவுரையாளர் அல்-ஆலீம் மௌலவி B.A.(Hons) கயூரி என்ற ஓர் லேபலைப் போட்டுக் கொண்டிருந்தும் மின்னலுக்கு உருவமில்லையென்றும் அதைக் கண்ணால்தான் காணமுடியும்

என்றும் ஒத்துக் கொண்டிருக்கிறாரே! இந்த 21ஆம் நூற்றாண்டில், மனிதன் பிற கிரகங்களில் வாசம் செய்ய முற்படுகிற இவ்வேளையில், நண்பர் தம்மை இவ்வளவு நீண்ட பட்டங்களுடன் காட்டிக்கொள்வதற்கு வெட்கம் வருவதில்லையா? மருதமுனை S.V.A.றசூல்(பாரி) என்பவருக்குத், தம்மைக் கல்முனை உவெஸ்லி உயர்கல்லூரி அரபு ஆசிரியரும், அரபு ஆசிரியசங்க முன்னாள் காரியதரிசியும் என்று காட்டிக் கொள்வதற்கு நாணம் வருவதில்லையா? மதிப்புரை வழங்கிய சிறப்புரை வழங்கியவர்களுக்கு வெட்கம் நாணம் இருக்க முடியாதுதான். பைத்தியங்களுக்கு வெட்கம் ஏது? நாணம் ஏது?

குர்ஆன்: 40:35

(இறைவனிடமிருந்து) தங்களுக்குக் கிடைத்த யாதோர் ஆதாரமுமின்றியே, அல்லாஹ்வுடைய வசனங்களைப் பற்றி (வீணாகத்) தர்க்கிப்பது அல்லாஹ்விடத்திலும் மூ.ீமின்களிடத்திலும் மிக்க அருவருப்பானது; இவ்வாறே, பெருமையும் கர்வமும் கொண்ட ஒவ்வோர் இருதயத்திலும் அல்லாஹ் முத்திரையிட்டுவிடுகிறான்.

உஸ்மான் சாஹிபும் அவரை உண்மைகண்ட பட்டதாரிகள், மௌலவிகள், ஆசிரியர்களும் கலிமத்துத்தையிபாவை விளங்கித் தெளிவு பெற்றபின் இஸ்லாத்தின் கொள்கை விளக்கத்தை எழுதும்படி, பேசும்படி நான் ஆலோசனை கூறுகிறேன். இந்த விஞ்ஞான யுகத்தில் இவ்வித அறிவிலிகள், மனநோயாளர்கள் பெரும்பெரும் பட்டம் பதவிகளை இணைத்துத் தங்களைக் காட்டிக் கொள்வது இஸ்லாமியச் சமூகத்திற்கு அவமானமாகும், பிறமத ஆராய்வாளர்கள் இஸ்லாத்தை எள்ளிநகையாடுவதற்கு, உஸ்மான் சாஹிபும் அவருடைய சகாக்களையும் போன்ற பகுத்தறிவை இழந்து விட்ட பட்டதாரிகளும், ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்ட ஓநாய்க் கூட்டங்களுமே காரணமாகும்.

கலிமாவின் கருப்பொருள்

அப்துவாகிய சிருட்டி, றப்புவாகிய அல்லாஹ் ஆகிய இரணடும் ஒன்று என்று கூறுபவன் முஸ்ரிக்காய் இருப்பது போலவே அப்து வேறு றப்பு வேறு என்று கூறுபவனும் முஸ்ரீக்கேதான். இதைப் போல, சிருட்டி சிருட்டிகர்த்தாவாய் (அப்து, றப்புவாய்) ஆகிவிட்டதென்று கூறுபவனும் முஸ்ரீக்குத்தான். மேலும், மண் பானையாய் விகாரப்பட்டது போல, (றப்பு) அல்லாஹ்வும் மாறுபட்டுததான் சிருட்டியானான் என்பவனும் முஸ்ரீக்குத்தான சிருட்டி மாறுபட்டு அல்லாஹ் ஆகிவிடுவான் என்பவனும் முஸ்ரீக்குதான். இவ்வித மருண்டவாதங்களெல்லாம், கலிமாவை உள்ளாலுள்ளபடி விளங்கிக் கொள்ள ஆற்றலில்லாமையால் ஏற்பட்ட வாதங்களே. இவ்வித வாதங்கள் மனிதனின் தெளிவற்ற சுயசிந்தனையினாலும் பிறமத இடைச்செருகல்களினாலும் இஸ்லாத்தில் நுழைக்கப்பட்டவையாகும். இஸ்லாத்தின் கொள்கை இவ்வித மருண்டவாதங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டது. மேலே காட்டிய துவித சித்தாந்தக் கொள்கைகள் இஸ்லாத்திலுள்ளவையேயல்ல.

இஸ்லாத்தின் கொள்கை அல்லாஹ்வுடன் இணையாய், சமமாய், நிகராய், ஜோடியாய், ஒப்பாய் எதுவுமே இல்லாதிருப்பதால், நிலையாய்த் தரிபாடாய் இருந்துகொண்டிருப்பது அல்லாஹ்வும் அவனுடைய அஸ்மா, ஸிபத்துகளுமேயன்றி அவனுடன் எதுவும் எப்போதும்(சுத்த சூன்யம், இல்லாமைகூட) இல்லவே இல்லை. அவன் தனித்தவன். ஒன்று மற்றொன்றாய், அல்லாஹ் சிருட்டியாய், அல்லது சிருட்டி அல்லாஹ்வாய் மாறுவது இல்லை. உள்ளது அல்லாஹ் மட்டும்தான். கலிமாவில் பாவிக்கப்படும் இலாஹு என்ற சொல் அப்தையும் றப்பையும் ஒன்றுநோக்கிக் கூறப்பட்ட ஓரு பொதுப்பெயர்ச் சொல்லாய் இருப்பதால் கலிமாவின் உண்மையான பொருள், அல்லாஹ்வையன்றி அப்தும் றப்பும் இல்லையென்பதே. இருப்பது அல்லாஹ் மட்டுமே என்பதே. அதன் சாரம், நாய், பன்றி, மலஜலம் போன்ற அசூசிப் பொருட்களும்

இருந்துகொண்டிருப்பதாய் அறிகிற மனிதன் இந்தக் கலிமாவின் உண்மையை மறுக்கத்தான் செய்வான். ஆகையால்தான் இக்கொள்கையை மனித அறிவுக்கு விளக்கம் தந்து வெற்றிப்பாதையில் அழைத்துச் செல்வதற்காகவே 1,24,000 நபிமார்களும் முஹ்ஜிஸாத், கறாமாத்து, யுத்தம் போன்றவையும் அவசியமாயின. இறைவன் ஒருவனுண்டு என்று தெளிவுபடுத்த இவ்வளவு நபிமாரும் அவசியமேயல்ல. மக்களால் உணரமுடியாதிருந்த ஏதோ ஓர் உண்மையை உலகுக்குணர்த்தவே அந்த நபிமாரும் அவர்களைப் பின்பற்றிய நல்லடியார்களும் தோன்றினார்கள், தோன்றிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் உணர வேண்டும். ஆதலால் உலக மக்களனைவரும் விசேடமாய் முஸ்லீம்கள் யாவரும் கலிமாவைத் தெளிவாய் விளங்கித் தெளிவுபெற்றுத் தங்கள் வாழ்வின் குறிக்கோளைப் பெறவேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறேன்.

தௌஹீது என்பது ஏகத்துவம் என்பதேயன்றி ஒரே நாயன் கொள்கையல்ல. தைமியா என்பவருடைய காலத்தில் தோன்றிய இஸ்லாத்துக்கு விரோதமான ஓரு கொள்கைதான், இற்றைக்கு சுமார் 100 வருடங்களின் முன் வஹ்ஹாபிஸம் என்ற பெயரோடு வெளிவந்தது. இக்கொள்கையை நல்லறிஞர்கள் யாவரும் எதிர்த்துக் கொண்டிருந்தபோதும் இராணுவத்தினுதவியினால் இது உலகில் வேரூன்றியது. அக்கொள்கை சுமார் ஐம்பது வருடங்களுக்குள்ளாகப் பல பிரிவுகளாகப் பிரிந்து, புற்றுநோய் போல் உலகெல்லாம் பரவிக்கொண்டிருக்கிறது. இவற்றிலொன்றுதான் இன்றுள்ள இல்யாஸியத் தப்லீக்ஜமாஅத், தலைச்சன் ஆடு எவ்வழியில் செல்கிறதோ அவ்வழியே செல்லும் செம்மறியாட்டுக் கூட்டத்தைப்போல அறிவு குறைந்த பாமர மக்கள் இந்தத் தப்லீக்கைப் பின்பற்றுகிறார்கள். மக்களுக்கு இதைத் தெளிவாய் விளக்கித் தரக்கூடிய உலமாக்கள் நம்மிடையே மிகமிகக் குறைவுதான். 99வீதமான மௌலவிகள் வஹ்ஹாபிஸத்தின் துர்நாற்றக் கல்வியில் (கலிமத்துல்கபீஸா) உற்பத்தியாகி வெளிவந்திருக்கும் போது நாம் கூறும் உண்மையை ஒப்புக்கொள்வார்களா? ஒப்புக்கொள்ளவே மாட்டார்கள். ஆகவே நாம் ஒவ்வொருவரும் ஆராய்ந்து தெளிவுபட வேண்டியவர்களே.

தௌஹீதினால் ஏற்படும் நன்மை தீமைகள்

இப்போது ஷிர்க்கினால் ஏற்படும் தீமையென்ன என்பதையும் தௌஹீதினால் ஏற்படும் நன்மையென்ன என்பதையும் மிகச் சுருக்கமாய்க் காண்போம். ஒரு சிருட்டியின் உரிமையில் இன்னொரு சிருட்டி தலையிடுவது அல்லது சுதந்திரத்தில் தலையிடுவதுதான் தீமையென்றும் அநீதியென்றும் மதங்களும் அரசாங்கங்களும் தீர்ப்புக் கட்டியுள்ளன. ஒவ்வொரு மனிதனும் தன்னைவிட்டும் மற்ற மனிதன் வேறானவன், சர்வ சிருட்டிகளும் தன்னைவிட்டும் வேறானவையென்று காணுகிறான். நம்புகிறான். மனிதன் செய்யும் ஒவ்வொரு நல்ல, தீய செயலையும் அவனுடைய சுயதிருப்தி (சுயநலத்து)க்காகவே செய்கிறான். இந்தச் சுயநலம் புலனாட்சியில் கட்டுண்ட வெளிமனத்தின் திருப்தியில்தான் முடிவடைகிறது. ஆரம்பமும் அதுதான். ஆகவே மனிதனுடைய செயலுக்கு மூலகாரணமாயிருப்பது மனோஇச்சையென்ற நோய்தான். இந்த மனோஇச்சை வெற்றியடைவதாயின் போட்டி பொறாமை அநீதி எல்லாமே அவசியமாகும். இத் தீயகுணங்கள் மனோஇச்சையின் ஒவ்வொரு வெளிப்பாடாக அமைந்திருக்கின்றன. இந்த மனிதன் தன் சுயதிருப்திக்காக தன்னிறைவுக்காக எவ்வளவு முயற்சித்தாலும் கூட அந்த மனோஇச்சையைக் கட்டுப்படுத்தவும் முடிவுக்குக் கொண்டு வரவும் அவனால் முடிவதில்லை. ஏன்? அவனுடைய புலன்களென்னும் ஊடகங்கள் வாயிலாய் ஒன்றைவிட மற்றொன்று நல்லதாய்க் காண்கிறான். ஆதலால் இவனுடைய உள்ளம் நல்ல நீரும் தீய நீரும் வந்து கலந்துகொண்டிருக்கிற ஓரு கேணிக்கு ஒப்பாய்விடுகிறது. இந்தக் கேணியில் எப்போதும் சுத்த நீர் இருக்க முடியாது. இந்தக் கேணிக்கொப்பான உள்ளமோ இயல்பான சுத்த நீர் போன்ற இறையறிவு ஊறவேண்டுமானால் கேணியை நிரப்பும் வாய்க்கால்களுக்கொப்பான புலன்கள் என்ற வாய்க்கால்களைக்

கட்டியே ஆக வேண்டும். கேணி நீரை வெளியேற்றிவிட்டு கேணியை முறைப்படி அகழ்ந்தால் கேணியில் ஜலம் ஊறுவது நிச்சயம்தான். இந்த அடிப்படையைக் கொண்டுதான் இஸ்லாம் அதன் ஆரம்பத்தில் ஒவ்வொரு புலனையும் ஏவல்விலகல்களுக்கமைவாய்ப் பழக்கக் கட்டளையிடுகிறது. இது பாமரமக்களின் ஆரம்பப் பயிற்சி தான். இதில் ஓர் அபாயம் இருக்கிறது. இந்தப் புலன்கள் என்ற வாய்க்கால்கள் வாயிலாய் ஓயாது நல்ல தீய நீர் வந்துகொண்டிருபபதால் எமது கட்டுப்பாட்டை அவை என்றோ ஒருநாள் உடைத்து விடும். ஆகவே கட்டுடையாமல் பாதுகாக்க ஒரேயொரு வழிபுலன்கள் என்ற வாய்க்கால்களைக் கடலென்ற இறையறிவோடு திருப்பிவிடுவதுதான். இதுதான் நல்லடியார்களின் வழி. இஸ்லாத்தின் இரண்டாம் படித்தரமான தரீக்கத் என்பது இதுவே. இவர்கள் லாஇலாஹ என்ற சொல்லைக் கொண்டு சர்வத்தையும் தன்னையும் கூட அறிவில் அழித்துக் கொண்டு இல்லல்லாஹ் என்ற சொல்லைக் கொண்டு அல்லாஹ்வை மட்டுமே தரிப்படுத்துகிறார்கள். அவனேயன்றி இல்லையென்றும் சர்வமும் அவன் திட்டமேயென்றும் அவனிஸ்டத்துக்கு மாறான எவ்வல்லமையும் கிடைக்கவே கிடையாதென்றும் உறுதி கொள்கிறார்கள். உலகிலுள்ள சர்வதீமைகளுக்கும் முக்கிய காரணம் ஆசைதான். இந்த ஆசை ஏன் பிறக்கிறது? சிருட்டிகள் யாவும் தன்னைவிட்டு வேறானதென்று காண்பதால்தான். இச்சிருடடிகள் யாவும் வெறும் மருட்சியென்றறியும்போது ஆசை தன்னாலேயே அடங்கிவிடும். லாஇலாஹ என்பதைக் கொண்டு எதுவும் இல்லையென்றுணரும்போது ஆசைப்படும் பொருள் கிடையாது. இவ்வறிவு வலுப்பெறப்பெற ஆசையும் படிப்படியாய்க் குறைந்தே விடும். இருப்பதாய்க் காண்பது அல்லாஹ்வைத்தான் என்றறியும் போது அங்கு ஏற்படும் ஆசை அல்லாஹ்வைப் பொறுத்த ஆசையாகவே இருக்கும். அதாவது அல்லாஹ் வுடன் வேறென்றிலலாத ஏகமாய் அமைந்துவிடுவதே அவருடைய ஆசையாய் அமைகிறது. இது வெளிநோக்கில் ஆசையென்று பெயர் பெற்றாலும் உண்மையில் அது ஆசையேயல்ல. இதை இந்த நூலில் சிறிது விளக்கியுள்ளேன்.

இப்படி ஈமான்கொண்ட ஒருவர் யாருக்கு எப்படி என்ன தீமையைச் செய்வார்? இவரிடத்தில் பொறாமை, அளவுக்கதிகமான ஆசையேற்பட முடியாது. ஏனென்றால் இவர் எக்கட்டத்திலும் இறைவனால் விதிக்கப்பட்ட சட்டங்களை மீறமுடியாது. எவருடைய சுதந்திரத்திலும் தலையிட முடியாது. அல்லாஹ்தான் சுதந்திர மானவன் என்றறிந்து கொண்டவர் அவனுக்கு மாறுசெய்ய முடியாது. இன்னோரின் மறதியினால், அல்லது அறியாமையினால் ஏதோ சில தவறுகள் நிகழலாம். ஆயினும் அவர் அவ்விதத் தவறுகளில் நிலைப்படமாட்டார்.

நான் என்றுணரும் பிறிதொன்றில்லையவனையன்றி என்ற அவருடைய ஈமான் நிரப்பமடையும்போது பூரண மனுஷத்தன்மை அவரிடம் ஒப்படைக்கப்படுகிறது. இன்னோர்தான் இறைகலீபா, இவர் தான் இன்ஸான்.

தான் விரும்புகிற ஒன்றைத் தன் சகோதரனுக்கும் விரும்பாதவன் விசுவாசியாகமாட்டான் என்றோர் ஹதீஸ் இருப்பது நம் எல்லோருக்கும் தெரியும்.

ஹதீஸ்:

உங்களில் எவரும் தாம் விரும்புகிறதை தமது சகோதரனுக்கும் விரும்பாதவரை (மு.ம்.மீன்) விசுவாசியாகமாட்டார் என்று றசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்

அறிவிப்பவர் : அனஸ்(றலி)
ஆதாரம் : புஹாரி, முஸ்லீம், திர்மிதி, ஸிஜுழிஜூ

நான் விரும்பும் பொருள் எனது மனைவிதான் என்றால் இதை என் சகோதரனுக்கும் நான் கொடுக்க முடியுமா? இதை எம்மனிதரும் அனுமதிப்பாரா? அப்படியல்லாமல் கொடுக்கக் கூடியதைத்தான் கொடுக்க வேண்டும் என்று ஹதீஸ் கூறுவதாகக் கொள்ள முடியுமா? இது ஓர் ஆரம்ப முஸ்லீமுடைய விஷயத்தில் சரியாய் இருக்கலாம். ஆனால் இதை என்னால் ஏற்கமுடியாது. ஏனென்றால் இது எல்லோருக்கும் பொருந்தக்கூடியதல்ல. ஒரு சாராருக்கு இது பொருந்தலாம். ஹதீஸ் எல்லா வகுப்பு மக்களுக்கும் பொதுவானது. இந்த ஹதீஸ் காமீலான ஒரு றசூலின் சொல்.

ஆகவே இந்த ஹதீஸில் இன்னும் நாமறியாத ஏதோ ஓர் உண்மை இருக்கவேண்டும். இந்த ஹதீஸில் மனிதனாகமாட்டான் என்று கூறப்படாமல் (மூ.்மீன்) விசுவாசியாகமாட்டான் என்றே கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்த ஹதீஸ் உலகமாக்கள் யாவருக்கும் பொதுவானதென்றாலும் மூ.்மீன்களுக்கு மட்டும் குறிப்பானது என்று தெரிகிறது.

ஓரு மனிதன் விரும்புவது எது? தன்னிறைவு, அல்லது சுயதிருப்தி இந்தத் தன்னிறைவு துன்யாவோடுள்ளதாயும் தீமை நிறைந்ததாயும் ஷிர்க்கிலிருந்து பிறப்பதாயும் இருப்பதால் மூ.்மீன் இத்தன்னிறைவைப் பெறுவதும் விரும்புவதும் பொருந்தாது. அப்படியானால் மூ.்மீன் விரும்புவது எது? நான் அல்லாஹ்வை விட்டும் வேறான ஓரு தனிப்பொருள் என்று நம்பியிருந்த அனாநியயத்தை மாய்த்தழிப்பதே அந்த மூ.்மீன் விரும்புவதாய் இருக்கிறது. இறை திருப்தியைப் பெற்று அல்லாஹ்வுடன் ஐக்கியமாய்விடுவதே அந்த மூ.்மீனுடைய தன்னிறைவாய் இருக்கிறது. இதுதான் தௌஹீது என்ற தன்னிறைவு. இந்த மூ.்மீன் முழுமைபெற்ற மனிதராய் இருப்பதால் உலகமக்கள் யாவரும் தன் சகோதரர்களே என்பதை அறிவார். தான் விரும்புகிற அதே விஷயத்தை, சாந்தியை, தன்நிறைவை தன் சகோதரர்களுக்கும் விரும்புகிறார். அதாவது அறியாமையில் ஊறிக்கொண்டிருக்கிற தன் சகோதரர்களுக்கு தான் விரும்புகிற தௌஹீதை எத்திவைக்கிறார். இந்த மூ.்மீன் முஸ்லீம்களுக்கு மட்டுமல்ல உலக மக்கள் எல்லோருக்கும் தான் எத்திவைக்கிறார். இவர்களில் முதலிடம் பெறுவோர் அன்பியாக்களான மூ.்மீன்கள், இரண்டாம் வகுப்பார் அன்பியாக்களைப் பின்பற்றிய அவ்லியாக்களான மூ.்மீன்கள்.

விஷயம் இப்படியிருக்கும்போது ஓரு மூ.்மீனை அவருடைய கைகளைப் பிடித்து இழுத்து அல்லது பலாத்காரமாய்த் தொழுகைகாக மட்டும் அழைப்பதை எத்திவைத்தல், இஸ்லாத்துக்கு உயிரூட்டல் என்று கூறலாமா? தான் விரும்புகிற ஒன்றைத் தன் சகோதரனுக்கும் விரும்புகிற மூ.்மீன்

தௌஹீதைத்தான் எத்திவைப்பார். யாரிடத்தில்? உலகமக்கள் எல்லோரிடத்திலும்தான். இவ்விதமான மூ.்.மீன்களைக் கண்டுகொண்ட ஜாஹீல் கூட்டங்கள் அவர்களை இஸ்லாத்தின் விரோதிகள் என்று கூறித், தங்களின் துன்யாவோடுள்ள சுயதிருப்தியைப் பூர்த்தியாக்கிக் கொள்ளவே மக்களைத் தவறான வழியில் இழுத்துச் செல்லுகிறார்கள். இன்னோர் தங்கள் அறிவீனத்தால் தாங்களே நேரான பாதையில் செல்வதாகவும் தங்களுக்கு வழிகாட்டிய ஷைத்தான்களை அவ்லியாக்களாகவும் நம்பியிருக்கிறார்கள்.

தௌஹீதைப் பெற்றுக்கொண்ட ஒவ்வொரு மனிதனும் இம்மையிலேயே சாந்தியைப் பெற்றுக்கொள்கிறானென்றால் அம் மனிதனின் ஆகிறா வாழ்வை நாம் விவரிக்கவேண்டிய அவசியமல்லை. இஸ்லாம் அறிவுள்ள மக்களுக்குச் சாந்திதரும் பாதைதான் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

அறிவு என்பது என்ன?

றசூல் (ஸல்) அவர்களிடத்தில் ஒரு கேள்வி கேட்டு றசூலை மடக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு ஒருவர் ஒரு கேள்வியை றசூல் (ஸல்) அவர்களிடம் வினவினார்!

கேள்வி: நபியே மனிதனுடைய மலம் என்ன சுவையுடையதாய் இருக்கும்?

பதில்: றசூல் (ஸல்) அவர்கள் இனிக்கும், அதனால்தான் அதில் கொசு மொய்க்கிறது என்று கூறினார்கள்.

இந்த நிகழ்சியில் அறிவு என்பது என்ன? என்ற கேள்விக்கு றசூல் (ஸல்) அவர்கள் தெளிவான விளக்கம் தந்திருக்கிறார்கள்.

மலம் இனிக்கும் என்பது றசூல் (ஸல்) அவர்களுடைய வாழ்க்கையில் அனுபவித்தறியாத ஒன்று. சிலசமயம் குழந்தையாய் இருந்தபோது அவ்வனுபவத்தைப் பெற்றிருந்தாலும்கூட அந்த அனுபவம் றசூலின் வாழ்வில் நிலைகொண்டிருக்க முடியாது. ஏனென்றால் குழந்தைகளுக்கு மிகமிக அறிவில்லாத சிறுபிராயத்தில் ஒன்றிரண்டு முறை இந்த அனுபவம் கிட்டியிருந்தாலும் அது அனுபவமாகாது. அப்படியானால் றசூலுல்லாஹ் மலம் இனிக்கும் என்பதை எப்படி அறிந்திருப்பார்கள்? அல்லாஹ்தான் மலக்குகள் மூலம் வஹி அறிவித்தான் என்று கூறமுடியாது? ஏன்? நான் மார்க்க விஷயமாய் ஏதாவதொன்றைக் கூறினால் அது இறையறிவாய் இருப்பதால் அதை ஏற்றுக்கொள்ளுங்கள் என்றும் துன்யா விஷயமாய் நான் எதையும் கூறினால் அதை உங்கள் ஆலோசனைப்படி செய்யுங்கள். நானும் ஒரு மனிதனே என்று றசூல் (ஸல்) அவர்களே கூறியிருக்கிறார்கள். மலத்தின் சுவையைக் கேட்பதும் கூறுவதும் மார்க்க விஷயமல்ல. ஆகவே, அது இறையறிவிப்பு அல்ல எனபதும் அது மனித அறிவின் கூற்றே என்பதும் தென்படுகிறது.

மலம் இனிக்கும் என்ற இந்த அறிவை றசூல்(ஸல்) அவர்கள் தங்கள் அனுமான அறிவைக் கொண்டே கூறியிருக்கறார்கள். அதற்குக் காரணம் கொசு மொய்ப்பது என்றும் கூறியிருக்கிறார்கள். இனிப்பைத்தான் கொசு அதிகமாக உவக்கும் என்பது அவர்களுடைய வாழ்க்கையில் கண்ட அனுபவம். இந்த அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டுதான் மலம் இனிக்கும் என்று கூறினார்கள். இந்தக் கூற்று அனுபவத்தை அடிப்படையாய்க் கொண்டு உண்டான அனுமான அறிவாகும். இங்கே இரண்டு அறிவுகள் எமது அனுமானத்துக்குத் தென்படுகின்றன.

1. அனுபவத்தில் புலனாட்சி மூலம் கண்டறியும் அறிவைத்தான் நாம் அனுபவ அறிவு என்று கூறுகிறோம். உண்மையில் இது வெளிமனத்தின் அனுபவமேயன்றி உள்மனத்தின் அனுபவமல்ல. இந்த அறிவு புலனாட்சியில் கட்டுண்ட வெளிமனதுடைய அறிவாக இருப்பதால் இது உண்மையில் அறிவேயல்ல. இந்த அறிவில் மனிதனும் மிருகமும் சமமாய்த்தான் இருக்கிறார்கள்.

2. மனிதனுக்கும் மிருகத்துக்கும் பொதுவான அனுபவ அறிவை அடிப்படையாய் வைத்துக்கொண்டு அதைவிட உயர்ந்த ஓர் அறிவை றசூல் (ஸல்) அவர்கள் எடுத்துக் கொண்டு தான் மலம் இனிக்கும் என்று கூறினார்கள். இந்த அறிவின் பெயர்தான் அனுமான அறிவு, பகுத்துணரும் அறிவு, விவேகம், நுண்ணறிவென்றெல்லாம் கூறப்படுவது. இது மற்றும் எந்த ஜீவராசிக்குமே கிடையாது. இந்த அறிவின் பெயர்தான் (ஐனுல் எகீன்) பிரத்தியட்ச ஈமான் என்பது. முன்கூறிய மிருகத்துக்கும் மனிதனுக்கும் பொதுவான புலன்களால் அறியும் அறிவுதான் இல்முல் எகீன் என்பது. இது நூற்கேள்வியறிவால் ஏற்படும் ஈமானாகும். (மிருகங்களுக்கும் ஓரளவு அனுமான அறிவு உண்டு)

மிகக் கீழ்தரத்திலுள்ள நூற்கேள்வியறிவுகளினால் ஏற்பட்ட (ஈமான்) விசுவாசமாவது ஒருவனிடம் இருந்தால்தான் அனுமான மென்ற ஐனுல் எகீன் (பிரத்தியட்ச உண்மை)யென்னும் இரண்டாவது ஈமானைப் பெறமுடியும், இவ்விடம் (அனுமானிக்கும் ஆற்றல்)தான் பகுத்தறிவின் ஆரம்பம். இப்போது பாருங்கள். குர்ஆன், ஹதீஸ் மற்றும் அவற்றிற்கமைவான மற்றும் நூல்களையும்

பார்த்துக் கேட்டு அறிந்த அறிவு இல்லாத ஒருவன் அவற்றின் அந்தரங்க நுட்பங்களை எப்படி அனுமானித்துக் கண்டறிவான்? அறியவே மாட்டான். ஆகவே, இவன் புத்தகம், கிதாபு, குர்ஆன், ஹதீஸ்களை ஒப்புக் கொண்டவனுமல்ல. அனுமானித்து உண்மையைக் கண்டவனுமல்ல. இவனைத் தான் இறைவன் புத்தகம் சுமந்த கழுதை என்று கூறுகிறான். அந்தக் கழுதை நான் அதிகமான பாரத்தை (சுமையை)த் தாங்கியவன் என்ற இறுமாப்பில் உளல்கிறதேயன்றி அக்கழுதை சுமந்துள்ள புத்தகங்களையாவது விசுவாசித்திருக்குமா? இப்படிப்பட்ட ஒரு கழுதை இஸ்லாத்துக்கு உயிரூட்டுவதென்றால் நீங்கள் அதை நம்புகிறீர்களா? இந்த விதமான பாரம்தூக்கிகள் இடி மின்னலில் அகப்பட்ட மனிதர்களுக்கொப்பானவர்கள் என்று இறைவன் கூறுவதை இன்று எம்வாழ்வில் காணுகிறோமல்லவா? இவ்வித மருட்சியில் ஊறித்தான் எதைக் கூறுகிறேன் என்பதை எள்ளளவும் சிந்தித்து உணரமுடியாத மனிதர்களின் ஊளை எதைக் காட்டுகிறது? அனுமான அறிவாவது உள்ள மனிதர்கள் இவர்களுடைய கையிருப்புகளை நிச்சயமாக அறிந்து கொள்கிறார்கள்.

குர்ஆன்: 25:44

அவர்களில் பெரும்பாலார் கேட்கிறார்கள் என்றோ: அல்லது அதனை உணர்ந்து(ஆராய்ந்து) பார்க்கிறார்களென்றோ நீர் எண்ணிக்கொண்டீரா? அவர்கள் மிருகங்களேயன்றி வேறில்லை. பின்னும்; மிகவும் வழிகெட்டவர்களாகவும் இருக்கிறார்கள்.

குர்ஆன்: 38:29

நாம் உமக்கு அருட்செய்திருக்கும் இவ்வேதம் மிக்க பாக்கியமுடையது . அறிவுடையோர் இதன் வசனங்களை ஆராய்ந்து, சிந்தித்து நல்லுணர்ச்சி பெறுவார்களாக.

குர்ஆனின் சுமார் 340 இடங்களில் இறைவன் சிந்திக்கும்படி, ஆராயும்படி கூறுவது இந்த அனுமான அறிவைப் பயன்படுத்தி உண்மையோடு ஒன்றி விசுவாசம் கொள்ளுங்கள் என்பதே.

ஹதீஸ்:

ஒரு நூற்றி எண்பது ஆண்டுகள் கழிந்த பின் என் சமூகத்தினர் தனித்திருப்பதையும் மலைகளின் உச்சியில் மறைந்திருப்பதையும் நான் அவர்களுக்கு ஆகுமானதாக (ஹலால்) செய்திருக்கிறேன் என்று றசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்

அறிவிப்பவர் : ஈஸா இப்னுவாகிதி(றலி)
ஆதாரம் : ரஜீன்

இந்த ஹதீஸில் குறிப்பிடப்பட்ட 180 வருடங்களுக்குப் பின்னால் இஸ்லாத்தின் மிகமுக்கிய அங்கங்கள் புதைக்கப்பட்டு விட்டன என்பதை ஆராய்வில்லாத மனிதன் அறியவே மாட்டான்.

தொழுவது தௌஹீது தொழாமல் இருப்பது ஷிர்க்கென்று இந்த மருண்ட கூட்டம் ஏன் கூறுகிறது? இல்லையானால் மக்களை மேய்க்க முடியாதே.

இவ்விதமான ஒரு ஜாஹில் குர்ஆனின் 72:16ஆம் ஆயத்தை மறுத்து ஷரீயத்தைத் தவிர வேறு தரீக்கத் என்று ஒரு வழி கிடையாதென்று ஊளையிடும் போது ஒருசில மௌலவிகளும் அதை ஆமோதிக்கிறார்கள் என்றால் அந்த மௌலவிகள் ஓதிய குர்ஆன் எதுவாக இருக்கும்? அது உண்மையான குர்ஆனுக்கு மாறான இல்யாஸுடைய குர்ஆனாகத்தான் இருக்கும்.

வணக்கங்களில் சிறந்தது இஸ்லாமென்றும் இஸ்லாத்தில் சிறந்தது ஈமான் என்றும் றசூல் (ஸல்) அவர்களால் கூறப்பட்ட ஹதீஸுகளும் தொழுகை முதலாம் சகல இபாதத்துக்களும் தௌஹீதென்ற ஏகத்துவ ஈமானை நிலைப்படுத்துவதற்காகவே யென்று றசூல்(ஸல்) அவர்களால் கூறப்பட்ட பல ஹதீஸுகளும் எமது முதல் நூலில் தரப்பட்டுள்ளன. விரும்பியோர் அங்கு காண்க.

றசூல்(ஸல்) அவர்களுடைய பொய் பரவிடும் என்ற ஹதீஸினால் குறிப்பிடப்பட்ட தீர்க்கதரிசனம் உண்மையே என்பதை நாம் நம்பலாமல்லவா? அபூஜஹீலின் கொள்கையை விளக்குகிற இந்த லேபல் பேர்வழி எதை இப்போது கூறுகிறாரோ, அவ்லியாக்கள் தந்த விளக்கங்களின் போதும் இதே கூற்றைத்தான் அந்த நேரத்தில் இருந்த ஷைத்தான்களும் கூறினார்கள்.

அவ்லியாக்கள் மூச்சுப்பிடிப்பதோ சித்துக்காக யோகம் செய்வதோ இல்லையென்றும் அவ்லியாக்கள் வெற்றிபெற்ற முறை இன்னதென்றும் இற்றைக்குச் சுமார் 10 வருடங்களின் முன்பே எமது ஈமானின் உண்மையை நீ அறிவாயா என்ற நூலில் மிகத் தெளிவாய் ஆதாரங்களோடு நான் விளக்கியிருந்தும் இதுகாலவரையிலும் அந்த நூலைப் பாராமலே வீண்வாதம் பேசுகிற மக்களை நாம் எதுவும் கூறுவதறகில்லை.

இவ்விதமான ஜாஹீல்கள் தங்கள் வழிகாட்டிகளான ஷைத்தான்களை அவ்லியாக்களாக எடுத்துக் கொண்டது மட்டுமல்லாமல் தாங்கள் நேரான வழியில் சென்று கொண்டிருப்பதாயும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள் என்று இறைவன் 1,400 வருடங்களாகக் கூறிக்கொண்டிருக்கிறான். இஸ்லாத்தின் தத்துவவிளக்கம் எது? பிறமதத் தத்துவ விளக்கம் எது? என்பதையே இதுகாலவரையில் அறியாமலிருக்கும் போது இஸ்லாத்தையும் தொழுகையையும் லேபலாய் எடுத்துக்கொண்டு விஷயம் விளங்காத மக்களை வழிகெடுப்பதன் நோக்கம்தான் என்ன? இவ்வித ஷைத்தான்கள் மனோ இச்சையை இறைவனாக ஏற்றுக்கொண்டவனை நீர் பார்த்தீரா என்ற இறைவசனத்துக்குக் கொடுக்கும் வியாக்கியானத்தைக் கண்டு வியப்படைய வேண்டியதாய் இருக்கிறது. குர்ஆன் எப்படி புரட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது தெளிவாகவே தென்படுகிறது. இந்த ஷைத்தான் எமது முதல் நூலைப் புரடடிப் பார்த்திருந்தால் அதன் உண்மை விளக்கத்தையும் ஷிர்க் என்பது என்ன என்பதையும் அறிந்திருக்க முடியும். அவ்லியாக்கள் அனாநிய்யத்தென்ற, மனிதனின் மனோ இச்சையை மாய்த்தழிக்கவே போராடி இறந்து உயிர் பெற்றவர்கள் என்பதை அறிவிலிகள் எப்படி அறிவார்கள்?

இதுவரை பொய் ஒன்றையும் சாதிக்கவில்லையென்றும் இனிமேலும் சாதிக்க முடியாதென்றும் வேதம் விளக்கம் தருகிறது. மேலும் பொய்யுடைய தலையில் உண்மையை வீசுகிறேன். அந்த உண்மை பொய்யின் தலையைச் சுக்குநூறாய் உடைத்து விடுகிறது என்றும் இறைவன் விபரம் தந்துள்ளான் அல்லவா? ஆகவேதான் இந்த ஜாஹில் இப்போது ஆப்புப்பிடிங்கிய குரங்காக மாறியிருக்கிறார்.

குர்ஆன்: 2:78

அன்றி (வேத அறிவுபெறாத) அறிவிலிகளும் அவர்களிலுண்டு. வேதத்தைப் பற்றிக் கேள்விப்பட்டுள்ள வீண் நம்பிக்கைகளைத் தவிர அவர்கள் அறியவே மாட்டார்கள். அவர்கள் வீண் சந்தேகத்தில் ஆழ்ந்து கிடப்போரைத் தவிர வேறில்லை.

குர்ஆன்: 8:21

''செவியுறாது செவியுற்றோம்'' என்று வாயால் கூறியவர்களைப் போல நீங்களும் ஆகிவிட வேண்டாம்.

குர்ஆன்: 29:69

யார் நம்மில் பாடுபட்டார்களோ; அவர்களுக்கு நாம் நம்முடைய வழிகளைக் காட்டுவோம்.

குர்ஆன்: 10:39

என்கினும் அவர்களுக்குத் தெரியாததும் அதன் தாவீல் (ஆதாரம்) அவர்களுக்குக் கிடையாததுமான சங்கதியைப் பொய்யென்று அவர்கள் கூறுவார்கள்.

குர்ஆன்: 39:22

எவனுடைய இருதயத்தை இஸ்லாத்தைப் பெற்றுக்கொள்ள அல்லாஹ் விசாலப்படுத்தினானோ அவன் தன் இறைவனின் பிரகாசத்தில் (நூறி) இருக்கிறான்.

குர்ஆன்: 4:61

''அல்லாஹ் இறக்கியதன்பாலும் (குர்ஆன்), றசூலின் பாலும் நீங்கள் வாருங்கள்'' என்று கூறப்பட்டால், அந்த முனா.ிபிக்கீன்கள் (நயவஞ்சகர்கள்) உம்மை விட்டு முற்றிலும் விலகிவிடுவதையே நீர் காண்பீர்.

இந்த ஜாஹீல்களும் குர்ஆனையோ ஹதீஸையோ ஏற்றுக் கொள்வதே இல்லை. தப்லீக் என்ற லேபலில் உள்ள ஒவ்வொருவரும் முத்திரையிடப்பட்டிருப்பதால் குர்ஆன் ஹதீஸுகளைக் கொண்டு பேசமுற்பட்டால் தொழுகைக்கு நேரமாய் விட்டது என்று கூறிக் கொண்டே விலகிச் சென்று விடுகிறார்கள். வேதத்தின்படி இவர்கள் முனாபிக்கீன்களே என்பது நிரூபணமாய் விட்டது.

ஹதீஸ்:

நான் உங்களிடம் இரண்டு பொருளை விட்டுச் செல்கிறேன். அவ்விரண்டையும் நீங்கள் பற்றிப் பிடித்துக் கொண்டால் நீங்கள் வழிதவற மாட்டீர்கள். அவற்றில் முதலாவது இறைவேதம் (குர்ஆன்) இரண்டாவது நபிகூலின் வழிமுறை என்று நபிகூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : இமாம்மாலிக்(றலி)
ஆதாரம் : முஅத்தா

புத்துஹாத்துல் மக்கியா, புஸுஸுல்ஹிகம், இன்ஸான் காமீல் துர்பதுல் முர்ஸலா, கலிமத்துல் ஹக்கி போன்ற அவ்லியாக்களின் கிதாபுகள் பொய்யானவையென்றும் இவை ஹிந்துக்களின் கொள்கையென்றும் கூறுகிற இவர் இந்த கிதாபுகளைத் தன் வாழ்நாளில் எங்கேயாவது ஒரு முறையேனும் பார்த்திருப்பாரா? அந்த நூற்களின் ஒரு பந்தியையேனும் விளங்கிக் கொள்ளக்கூடிய அறிவு இவரிடமுண்டா? மலைகளைப் பார்த்து நாய் குரைப்பது போலல்லவா இருக்கிறது இவருடைய பேச்சு.

இவ்வித ஜாஹீல்களின் தலையில் களிமண்ணேயன்றி மூளை இருக்க முடியாதுதான். இருந்திருந்தால் அவ்லியாக்களான மேதைகள் குர்ஆன் ஹதீஸுகளையே ஆதாரமாய்க் கொண்டவர்கள் என்றறிந்திருப்பார்களே! அச்சம் தீர்ந்த நல்லடியார்களான பொறியோர்கள் ஒவ்வொரு ஸமானிலும் இருந்து கொண்டிருப்பார்களென்று குர்ஆன் ஹதீஸுகள் தரும் விளக்கத்தை இவ்வின மக்கள் ஏன் மறுக்கிறார்கள்? இவர்கள் தொழுகையை மட்டும் மக்களை மேய்ப்பதற்குக் கேடயமாகக் கொண்டிருக்கிறார்களேயன்றி மார்க்க விளக்கம் இவர்களுக்குத் தெரியவே தெரியாது. இவர்களுக்குத்தான் மார்க்கம் அவசியமல்லவே. அவர்களுக்கு வேண்டியது அமீர் பதவிதானே! பாம்பென்றால் கடிக்கமாட்டோமா என்று (மண்புழு) நாக்குளிப் புழு கூறுவது போல் இருக்கிறது இந்த ஜாஹீல்களின் பேச்சு, மேலெண்ணம் பெருமை குர்ஆனை விளங்கவிடாது.

குர்ஆன்: 40:35

(இறைவனிடமிருந்து) தங்களுக்கு வந்த யாதோர் ஆதாரமுமின்றியே, அல்லாஹ்வுடைய வசனங்களைப் பற்றி (வீணாகத்) தர்க்கிப்பது அல்லாஹ்விடத்திலும் விசுவாசம் கொண்டவர்களிடத்திலும் மிக்க அருவருப்பானது; இவ்வாறே, பெருமையும் கர்வமும் கொண்ட ஒவ்வோர் இருதயத்திலும் அல்லாஹ் முத்திரையிட்டு விடுகிறான்.

குர்ஆன்: 40:56

நிச்சயமாக எவர்கள் தங்களிடம் வந்த அல்லாஹ்வுடைய வசனங்களைப் பற்றி எந்த ஆதாரமுமின்றித் தர்க்கிக்கின்றார்களோ, அவர்களுடைய இருதயங்களில் பெருமைதான் உண்டு; அதை அவர்கள் அடையவும் மாட்டார்கள்; ஆகவே, நீர் அல்லாஹ்விடமே பாதுகாவல் தேடும். நிச்சயமாக அவன் கேட்பவனாயும், பார்ப்பவனாயும் இருக்கிறான்.

குர்ஆன்: 42:35

நம்முடைய ஆயத்துகளில் (வீண்) தர்க்கம் செய்வோர் (நம்முடைய வேதனையிலிருந்து) தப்ப எந்த வழியுமில்லை என்பதை அவர்கள் அறிந்து கொள்ளட்டும்.

குர்ஆன் ஹதீஸுகளுக்கு எதிராய் அல்லாஹ்வுடன் அலலாஹ் அல்லாதவையும் உண்டு அல்லது சிருட்டி கர்த்தாவை விட்டும் வேறானது அல்லது அல்லாஹ் என்ற ஹக்கு என்ற உண்மைக்குப் பொய் என்ற அசத்தியம் சோடியாய் இருக்கிறதென்று எவன் கூறுகிறானோ அவன் நிச்சயமாக இணை ஏற்படுத்தும் முஸ்ரீக் என்பதில் எவ்விதச் சந்தேகமுமேயில்லை. இது குர்ஆனின் தீர்ப்பாகும். எவ்வளவோ ஆதாரங்கள் தந்து நிரூபிக்கலாம். ஒருசில ஆதாரங்களையே இந்த நூலில் நான் தந்துள்ளேன். அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாதவையும் உண்டு என்று நம்புவதே ஷிர்க் என்பதை இந்த மூடர்கள் விளங்கிக் கொள்ளாத விஷயமே.

குர்ஆன்: 6:149

நீர் கூறும் (மறுக்க முடியாத) பூரண ஆதாரம் அல்லாஹ்வுடையதே; (குர்ஆனே) அவன் நாடியிருந்தால் உங்கள் யாவரையும் நேரான வழியில் செலுத்தியிருப்பான்.

இவ்விதமான ஓர் அறிவிலிக் கூட்டம் தங்களின் (இல்யாஸனால் உருவாக்கப்பட்ட) கொள்கையை மக்களிடையே நுழைப்பதற்காகச் சில தந்திரோபாயங்களைக் கையாளுகிறார்கள். எவருடைய பேச்சும் எழுத்தும் இக்கூட்டத்துக்கு விரோதமாய் இருந்தால் அவற்றைத் தடைப்படுத்தி அவ்விவரங்களை மக்களிடம் புரட்டிக்கூறி, மொட்டையடித்து, இருட்டடிப்புச் செய்து மக்களை உணர்ச்சிவசப் படுத்தித் தகாத செயல்களில் ஈடுபடத்

தூண்டிவிடுகிறார்கள். இக்கூட்டத்தின் சரியான உண்மையை விளக்கிக்காட்டிப் பல பாஷைகளில் எழுதப்பட்ட அபூர்வமான நூற்களை மிகச் சிறந்த மேதைகளான பல உலமாக்கள் உலகின் நாலாபக்கங்களிலிருந்தும் வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள். இவ்வித நூற்கள் இறக்குமதி செய்யப்பட்டால் இக்கூட்டத்தினர் அவற்றை மொத்தமாகவோ சில்லறையாகவோ வாங்கி உடனே எரித்துவிடுகிறார்கள். நோட்டீசுகள் வெளியானாலும் அவற்றைக் காடையர்களைக் கொண்டு பலாத்காரமாய்ப் பறித்து எரித்துவிடுகிறார்கள். ஆகவே பொதுமக்களுக்கு இக்கூட்டத்தைப் பற்றிய எவ்வித உண்மையுமே தெரியாது.

ஹதீஸ்:

ஒருமுறை நபி (ஸல்) அவர்கள் இறைவா! எங்களின் ஸாமுக்கும் யமனுக்கும் அபிவிருத்தியை அருள்வாயாக என்று பிரார்த்திக்க அங்கிருந்த நஜ்துவாசிகளில் ஒருவர் இறைதூதரே எங்களின் நஜ்துக்கும் என்று கேட்க நபிகளார் மீண்டும் இறைவா! எங்களின் ஸாமுக்கும் யமனுக்கும் அபிவிருத்தியை அருள்வாயாக என்று பிரார்த்திக்க (நஜ்துவாசி) இறைதூதரே! எங்களின் நஜ்துக்கும் என்று கேட்க றசூல்(ஸல்) அவர்கள் தங்கள் தோழர்களை நோக்கி நஜ்துதேசம் அதிர்ச்சிதரும் சம்பவங்களும் (பித்னா) குழப்பங்களும் உற்பத்தியாகும் ஸ்தலமாகும் எனத் தம்விரலை நஜ்து தேசத்தின் கீழ்ப்பக்கம் நீட்டிச் சொன்னார்கள்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் இப்னு உமர்(றலி)
ஆதாரம் : புஹாரி

ஹதீஸ்:

இறுதிக்காலத்தில் ஒரு கூட்டம் வெளியாகும். அவர்கள் உலகின் மார்க்கத்தைத் தாறுமாறாக்குவார்கள். அவர்கள் மனிதர்களை வஞ்சிப்பதற்காக ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொள்வார்கள். (அதாவது இவர்களின் நடை உடை பாவனை சாதுவான ஆட்டைப் போல் தோன்றும்) அவர்களுடைய நாவு (பேச்சு) தேனைப்பார்க்கினும் இனிமையாக இருக்கும். அவர்களின் இருதயங்கள் ஓநாயின் இருதயமாய் இருக்கும்.

அறிவிப்பவர் : அபூஹுறைறா(றலி)
ஆதாரம் : கன்சுல்உம்மால் பாகம் 7 பக்கம் 124

ஹதீஸ்:

நபிகள் (ஸல்) அவர்கள் அன்னை ஹப்ஸா (றலி) அவர்களின் இல்லக்கதவருகே நின்றுகொண்டு அங்கிருந்தவாறே தமது புனிதமிகு கரத்தை கிழக்குத் திசைப்பக்கம் சுட்டிக்காட்டி பித்னாக் (குழப்பங்)

களின் இடம் இதுதான். இங்கிருந்துதான் ஷைத்தானின் கொம்பு வெளியாகும் என்று கூறினர்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் இப்னு உமர்(றலி)
ஆதாரம் : முஸ்லீம்

ஹதீஸ்:
சிலபேர் கிழக்குத் திசையிலிருந்து வெளிவருவார்கள். அவர்கள் குர்ஆனை ஓதுவார்கள், ஆனால் குர்ஆன் அவர்கள் தொண்டைக் குழிக்குக்கீழ் இறங்காது. அவர்களின் ஒரு ஜமாஅத் முடிந்துவிட்டால் பின்னர் அங்கிருந்து உடனே மறு ஜமாஅத் உதயமாகும். இவர்களின் கடைசிக்கூட்டம் தஜ்ஜாலுடன் சேர்ந்துகொள்ளும்.
(அல்லாமா ஜைனீதஹ்லான்(றலி) அவர்கள் தமது அத்துரருஸ்ஸனிய்யா என்ற நூலில் இந்த ஹதீஸைக் கூறியுள்ளார்கள்)

ஹதீஸ்:
என் உம்மத்தில் இறுதிக் காலத்தில் புழுபூச்சிகளைப் போல் பல பிரிவுகள் உண்டாகும். உங்களில் எவர் அக்காலத்தை அடைவாரோ அவர் அவர்களை விட்டு விலகியிருக்க துஆக் கேட்டு இறைஞ்சுங்களென நபிமார்கள் நவின்றனர். (ஹஜ்ரத் அபூநயீம் அப்துல் லாஹ் (றஹ்) அவர்கள் இமாம் பாஹில் (றலி) அவர்களைக் கொண்டு இந்த ஹதீஸைத் தமது ஹுல்யா என்ற நூலில் அறிவிக்கிறார்கள்.

ஆதாரம் : ஹுல்யா

இவைபோல் சுமார் 20 ஹதீஸுகள் தென்படுகின்றன. நஜ்தில் பிறந்தவர் வஹ்ஹாபிஸத்தை உருவாக்கிய அப்துல் வஹ்ஹாப் என்பவர். இவருடைய கொள்கையின் அடிப்படையில் உருவானதுதான் தற்போது எம்மிடையே உலாவும் தப்லீக் என்பது. இதன் ஸ்தாபகர் மௌலவி இல்யாஸ் என்பவர், இக்கூட்டத்தினர் சுன்னத்வல் ஜமாஅத்துக் கூட்டத்தினரான பல பெரியார்களான உலமாக்களால் காபீர்கள் என்று பத்துவாச் செய்யப்பட்டிருக்கறார்கள். இந்தியாவின் பல பாகங்களிலுமுள்ள கனம்தங்கிய 268 உலமாக்கள் அஸ்ஸவாரிமுல்ஹிந்தியா என்ற மார்க்கத் தீர்ப்பு (பத்துவாவில்) மேற் கூறப்பட்டவர்கள் காபீர்கள் என்றும் முர்த்தத்துகள் என்றும் தீர்ப்பளித்துள்ளார்கள். இதைப்போல் மக்கா மதீனாவிலுள்ள பாரவான்களான உலமாக்களும் இவர்களைக் காபீர்களென்று தீர்ப்பளித்துள்ளார்கள். ஹுஸாமுல்ஹறமைன் என்ற நூலில் இதைக் காணலாம்.

மேலும் இவ்வகைக் கூட்டத்தினரின் சரியான அடிப்படை உண்மைகளை அறியவேண்டுமானால் கீழே தரப்படுகிற நூற்களைப் பார்வையிடுங்கள்.

1. அத்துரருஸ்ஸனியய்யா 2. அஸ்அதுல்லம்ஆத் 3. ஹுல்யா 4. மிஸ்காத் 5. இப்ரீஸ் 6. புஹாரி 7. ஹாஸிய்யா இப்னு அப்துல் வஹ்ஹாப் நஜ்தி 8. முஸ்லீம்.

தமிழ் நூற்களைப் பார்வையிட வேண்டுமானால் "உஸ்மான் அஹ்மத்காதிரி, செயலாளர் அஹ்துல் சுன்னத்வல் ஜமாத்" 21/438 வரகப்பையர்சந்து, தெற்குவீதி, தஞ்சாவூர், என்ற விலாசத்தோடு தொடர்புகொண்டு வேண்டிய நூற்களைப் பெற்றுத் தெளிவுபெறுங்கள். இந்தியாவில் ஸுன்னத்துவல் ஜமாஅத்துக் கூட்டத்தினரின் இன்னும் பல ஸ்தாபனங்கள் இவ்வுண்மைகளை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கின்றன. விரும்புவோர் அவர்களுடன் தொடர்புகொண்டு உண்மையை அறியுங்கள். குர்ஆனை மறுப்பவன் எவனோ அவன் வழிகெட்டவனே.

குர்ஆன் 4:61

''அல்லாஹ் இறக்கியதன்பாலும் (குர்ஆன்), றசூலின் பாலும்(ஹதீஸ்) நீங்கள் வாருங்கள்" என்று கூறப்பட்டால், அந்த முனாஃபீக்குகள் (நயவஞ்சகர்கள்) உம்மைவிட்டும் முற்றிலும் விலகிவிடுவதையே நீர் காண்பீர்.

இக்கூட்டத்தினர் விவாதத்தின்போது குர்ஆன் ஹதீஸுகளை ஏற்கிறார்களே இல்லை. அவர்களுக்கு மாறான ஆயத்தைக் கண்டால் உடனே அது மன்ஸுக் (மாற்றப்பட்டது) என்கிறார்கள். ஹதீஸைக் கண்டால் லஈப் (பெலவீனமானது) அல்லது இடைச்செருகல் என்கிறார்கள். 57:3ஆம் வேதவசனம் குர்ஆனிலுள்ளதல்லவென்றும் அது கிறிஸ்தவர்களால் புகுத்தப்பட்டதென்றும் இக்கூட்டத்திலுள்ள ஒரு மௌலவி ஒரு சாராருக்கு விளக்கமளித்ததை என் காதாரவே நான் கேட்டேன். இவ்வகையினர்தானா இஸ்லாத்துக்கு உயிரூட்டுவோர்?

ஹதீஸ்:

எவர் நம்முடைய தொழுகையைப் போல் தொழுவரும் எமது கிப்லாவை தொழுகையில் நோக்குபவரும் எம்மால் அறுக்கப்பட்டவற்றின் இறைச்சியை

உண்பவருமாக உள்ளாரோ அவர் முஸ்லீம் தான் என்று நபிகூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அனஸ்(றலி)
ஆதாரம் : நஸாயி

இந்த ஹதீஸின்படி இக்கூட்டத்தினர் முஸ்லீம்களே என்பதும் முன்கூறிய 4:61ஆம் ஆயத்தின்படி இவர்கள் முனாபிக்குகள் என்பதும் குர்ஆனை இவர்கள் மறுப்பதால் 30.89ஆம் ஆயத்தின் படியும் இதைப் போல் வேறும் பல ஆயத்துகளின்படியும் இக்கூட்டத்தினர் காபிரீன்களே என்பதும் தென்படுகிறது. மேலும் குர்ஆனின் 2:78ஆம் ஆயத்தின் விதிப்படி இக்கூட்டம் வீண் சந்தேகத்தில் மூழ்கியுள்ள அறிவிலிகளே என்பது தென்படுகிறது.

ஹதீஸ்:
நபிகளார் நவின்றதை நான் செவியேற்றுள்ளேன். இறுதிக்காலத்தில் சிறுவர்களும் அறிவிலிகளும் இணைந்த கூட்டம் ஒன்று வெளியாகும் வெளித்தோற்றத்தில் நல்லதையே கூறுவார்கள், ஆனால் ஈமான் அவர்களுடைய தொண்டைக்குழிக்குக் கீழ் இறங்காது. இலக்கை நோக்கிப் பாயும் அம்பைப்போல் அவர்கள் தீனை(மார்க்கத்தை) விட்டும் வெளியேறிவிடுவார்கள்.

அறிவிப்பவர் : அலி(றலி)
ஆதாரம் : புஹாரி

(இந்த ஹதீஸ் முன்பும் தரப்பட்டுள்ளது) இவைபோன்ற ஹதீஸுகள் இக்கூட்டத்தினர் முர்த்தத்துக்களே என்பதை உணர்த்து கின்றன. இக்கூட்டத்தின் த.்லீம் வாசித்தல், இஜ்திமா நடாத்துதல் போன்ற விஷயங்களைத் தெளிவாய் விளக்கித்தரும் பல ஹதீஸுகள் தென்படுகின்றன. இன்ஷா அல்லாஹ் சமயம் வாய்க்கும்போது அவற்றைத் தருகிறேன்.

முஸ்லீம்களின் தோற்றத்தில் காட்சியளிக்கும் தப்லீக்ஜமாஅத் என்ற தஜ்ஜாலின் கூட்டத்தினரின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று அல்லாஹ் பொய்சொல்வான் என்பது. வஹ்ஹாபிகளின் தலைவர் முகம்மது இஸ்மாயில் திஹ்லவியால் எழுதப்பட்ட ஏக்ரோசி என்ற நூலில் 145ஆம் பக்கம் கூறியுள்ளார்.

அல்லாஹ் பொய் சொல்லமாட்டான் என்றால் நாங்கள் அதை நம்பமாட்டோம், ஏக்ரோசி, தக்வியத்துல் ஈமான் 22ஆம் பக்கம் இதைக் காணலாம். நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடத்தில் செருப்புத் தைக்கிற சக்கிலியனைவிடக்

குறைந்தவர்கள் என்று கூறுகின்றார். தக்வியத்துல் ஈமான் 14ஆம் பக்கத்திலிருந்து 19ஆம் பக்கம் வரையிலும் இதைக் காணலாம்.

நாயகம் அவர்கள் மறைவான சங்கதிகளில் ஒன்றையாவது அறிவார்கள் என்று நம்புவது ஷிர்க்காகும் என்று கூறுகின்றார். தக்வியத்துல் ஈமான், இவைபோல் சுமார் 19 விஷயங்களை எமது திருக்குர்ஆன் தீர்ப்பு 1ஆம் பாகத்தில் விளக்கியுள்ளேன்.

குர்ஆனின் ஹதீஸின் உண்மைக்கும் மூ.்.மீன்களின் கொள்கையான இஹ்திகாதுக்கும் மாறான அடிப்படையில் இருந்து கொண்டுதான் இறந்துபோன இஸ்லாத்துக்கு உயிரூட்டுகிறோம் என்று மக்களை மேய்க்கிறார்கள்.

இந்த அறிவிலிகளின் ஜமாஅத்திலுள்ள எந்த ஒரு பட்டதாரியானாலும் கூடக் குர்ஆன் ஹதீஸ்களை ஒப்புக்கொள்ளமாட்டார். காரணம் இவர்கள் அல்லாஹ் றசூலினதும் மூ.்.மீன்களான அவ்லியாக்களினதும் சாபத்துக்குள்ளாகி முத்திரை பொறிக்கப் பட்டவர்களாயிருப்பதே. இக்கூட்டத்திலுள்ள பெரிய புள்ளிகளை நான் பல முறை பலவாறாக ஆராய்ந்தபோது இவர்களில் எவருமே பகுத்தறிவு தொழிற்படக் கூடிய சிந்தனையாளர்களாக நான் காணவே இல்லை. இவர்கள் பள்ளிவாசல்களைச் சமையலறையாகவும் படுக்கையறையாகவும் பயன்படுத்துவதையும் மார்க்க விரோதப் பிரச்சாரத்தைச் செய்வதையும் கண்ணாரக் கண்டுகொண்டும் ஒருசில உலமாக்கள் ஒத்துழைத்துச் சங்கு ஊதுகிறார்கள். இந்த உலமாக்கள் வானத்தின் கீழ் மிகக்கெட்ட ஜந்துக்கள்தான்.

குர்ஆன்: 2:8

''அல்லாஹ்வையும், இறுதி நாளையும் விசுவாசம் கொண்டிருக்கிறோம்''என்று கூறுபவர்களும் மனிதரில் சிலருண்டு; ஆனால் அவர்கள் ஈமான் கொண்டவர்களல்ல.

குர்ஆன்: 2:10

அவர்களுடைய இருதயங்களில் நோய் ஒன்றுண்டு (உளநோய்) அவர்களுக்கு அல்லாஹ் அந்த நோயை அதிகப்படுத்தியும் விட்டான்; அவர்கள் பொய் சொல்வதனால் மிக்க துன்புறுத்தும் வேதனையும் அவர்களுக்குண்டு.

(இவர்களிடத்திலுள்ள உளநோயின் பெயர்தான் ஷிர்க் என்பது) இதற்குரிய மருந்து கலிமாதான். கலிமாவை விசுவாசிக்காதவன் இந்த நோயில் இருந்து விடுபடவேமாட்டான்.

குர்ஆன்: 2:9

அவர்கள் அல்லாஹ்வையும், மூ.ஃமீன்களையும் வஞ்சிக்கின்றனர்; ஆனால் அவர்கள் தங்களையேயன்றி வஞ்சிக்க முடியாது; அவர்கள் (அதை) உணர்ந்துகொள்ள மாட்டார்கள்.

(பகுத்தறிவு தொழிற்படாத ஜாஹீல்கள் எப்படி உணருவார்கள்?)

குர்ஆன்: 30:58

மனிதர்களுக்கு வேண்டிய உதாரணங்கள் யாவையும் இந்தக் குர்ஆனில் நிச்சயமாக நாம் கூறியே இருக்கிறோம்; எந்த ஆயத்தை நீர் அவர்களிடம் கொண்டுவந்த போதிலும்: ''நீரும் உம்மைச் சேர்ந்தோரும் பொய்யர்களேயன்றி வேறில்லையென்று'' இந்தக் காபிரீன்கள் கூறுவார்கள்.

இந்த ஆயத்தை நோக்கிப் பாருங்கள். குர்ஆன் ஆயத்தை மறுப்பவன், றசூலை(ஹதீஸை) மறுப்பவன், றசூலில் ஸஹாபாக்கள் மற்றும் அவ்லியாக்களான மூ.ஃமீன்களைப் பொய்யர்கள் என்று கூறுபவன் சக்குச் சந்தேகமில்லாத காபீரல்லவா? இவன் றசூலின் இறந்துபோன மார்க்கத்தை உயிர்ப்பிக்கிறேன் என்பது உண்மையா? அபூஜஹ்லான முஸ்ரீக்கின் மார்க்கத்தை உயிர்ப்பிக்கிறான் என்பது உண்மையா? திருட்டுக் கூட்டம் இராணுவ உடையைப் பயன்படுத்துவது போல இவனும் றசூலுடைய தொழுகையின் உடலசைப்பை மட்டும் கேடயமாகக் கொண்டிருக்கிறான். மார்க்கத்தின்பால் எத்தி வைக்கிறேன் என்று இவன் கூறுவது சுத்தப்பொய். இவனுக்கு மார்க்கம் தெரியவே தெரியாது.

திருக்குர்ஆனின் பகிரங்கச் சவால்

குர்ஆன், ஹதீஸுகள், இஜ்மாஉ, கியாஸ், அறிவு ஆகிய ஆதாரங்களுக்கு விரோதமாய் அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாதவையும் இணையாய், ஜோடியாய், துணையாய், சமமாய், ஒப்பாய் உண்டென்று பேசுகிற எழுதுகிற மக்களை நோக்கி அல்லாஹ் றசூலின் சார்பாகவும் (குர்ஆன் ஹதீஸ் சார்பாகவும்) மதியிழந்த மனிதர்களால் கொலை செய்யப்பட்ட, இம்ஸிக்கப்பட்ட, நல்லடியார்களான நபிமார் ஒலிமார்களின் சார்பாகவும் நான் கேட்கிறேன், குர்ஆனைக் கொண்டே சவால்விடுகிறேன்.

குர்ஆன்: 43:84
அவனே வானத்திலும் இலாஹுவாய்ப், பூமியிலும் இலாஹுவாய் இருக்கிறான்.

குர்ஆன்: 34:27
''அல்லாஹ்வுக்கு இணையாய் (சமமானவை)யென நீங்கள் அவனுக்குச் சமமாகச் சேர்த்து வைக்கிறீர்களே! அவற்றை நீங்கள் எனக்குக் காண்பியுங்கள்! (அவனுக்கு இணையாக அவனுடன் ஒன்றுமே) இல்லை. அவனோ மிகைத்தோனும்; ஞானமுடையோனுமாகிய அல்லாஹ்வாகும்''என்று கூறும்.

குர்ஆன்: 21:30
(ஆரம்பத்தில்) ஒன்றாகச் சேர்ந்திருந்த வானங்களையும், பூமிகளையும் நாமே பிரித்தமைத்தோம் என்பதையும், உயிருள்ள ஒவ்வொன்றையும் நீரிலிருந்து படைத்தோம் என்பதையும், இந்தக் காபீர்கள் கவனிக்க வேண்டாமா? அவர்கள் நம்பமாட்டார்களா?

வானங்கள் பூமிகள் அவற்றிலுள்ள சர்வமும் ஆரம்பத்தில் பிரிவற்ற நிலையில் அஹது என்ற நிலையில் இருந்தவைதான்,

இப்போதும் அப்படித்தான் இருக்கின்றன. அஹது, உஹது, வாஹிது ஆகிய மூன்றும் சொல்லில் வேறுபடினும் விஷயம் ஒன்றேதான். காலம் இடம் என்ற இரு கடினமான திரைகளில் அறிவு சிக்குண்டிருப்பதால் இதை இலகுவாய் உணரமுடிவதே இல்லை. இந்த அறிவு தோன்றி மறையும் தோற்றங்களைப் பொருளாகவும் தனித் தனி உஜூதாகவும் காணுகிறது. சர்வ உலகும் உஜூதைவிட்டு (அல்லாஹ்வை விட்டு) வேறானது என்று கற்பனை பண்ணுகிறது. இக் கற்பனைக்கு எவ்வித ஆதாரமும் எங்கேயும் எப்போதும் கிடைக்கவே கிடையாது.

குர்ஆன்: 41:6
ஆகவே! நீர் கூறும் மெய்யாகவே நான் உங்களைப்போன்ற ஒரு மனிதன்தான்; உங்களுடைய இலாஹு ஒன்றே ஒன்று என்றுதான்; எனக்கு வஹிமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆதலால் அவனளவிலேயே நீங்கள் உறுதியாக நில்லுங்கள், அவனிடம் நீங்கள் மன்னிப்பையும் கேளுங்கள், (அவனுக்கு) இணை ஏற்படுத்துவோருக்குக் கேடுதான்.

குர்ஆன்: 27:64
அல்லாஹ்வுடன் வேறு இலாஹு இருகிறதா? நீங்கள் உண்மை சொல்பவர்களாய் இருந்தால் உங்களுடைய ஆதாரங்களைக் கொண்டு வாருங்கள்.

இவ்வாயத்தில் கூறியபடி அல்லாஹ்வுடன் அல்லாஹ் அலலாதவையும் உண்டு என்று கூறுவோர் எழுதுவோர் குர்ஆன் ஹதீஸுகளைக் கொண்டோ பகுத்தறிவைக் கொண்டோ தர்க்கவியல்; தத்துவவியல், விஞ்ஞானம், கணிதவியல், பௌதீகவியல், உயிரியல், உளவியல் போன்ற மற்றும் எத்தகைய கல்வியைக் கொண்டேனும் எழுத்துமூலம் நிரூபித்துக்காட்டினால் நான் அன்பளிப்பாக ஒருலட்ச ரூபாய் சன்மானமளிக்க இதோ முன்வந்திருக்கிறேன். நீங்கள் ஆண்மக்களாய் இருந்தால் குர்ஆனுக்கு மாறாக உங்கள் அறிவைப் பயன்படுத்தி ஒரு நூல் எழுதி வெளியிடுங்கள். உலக நாடுகளிலுள்ள எல்லா

மதங்களையும் சேர்ந்த கல்விமான்கள் யாவருக்கும் உங்கள் நூலையும் எமது நூலையும் அனுப்பி அவர்கள் தரும் தீர்ப்பை நாம் ஏகமனதாக ஏற்றுக்கொள்வோம்.

உங்கள் கொள்கையை நிரூபிக்க முடியும் என்று கண்டால் நான் கூறிய எந்தக் கல்வியைக் கொண்டேனும் எழுத்து மூலம் நிரூபித்துக் காட்டுங்கள். இதைவிடப் பாமரமக்களிடம் பொய்யான, அடாத, தகாத வார்த்தைகளைக் கூறி இஸ்லாத்தைக் குழப்பி தஜ்ஜாலின் கொள்கைகளைப் பரப்ப முற்படாதீர்கள். நல்லோரைத் தூற்றாதீர்கள். குற்றம்கூறிப் புறம்பேசுபவர்க்கெல்லாம் கேடுதான் என்பதை மறவாதீர்கள். இஸ்லாம் என்ற பெயரையும் தொழுகை என்ற கடமையையும் கேடயமாக லேபலாக வைத்துக்கொண்டு வழிகெட்ட வஹ்ஹாபிஸத்தையோ அதில் பிறந்த இல்யாஸிஸத்தையோ பாமரமக்களிடத்தில் திணித்து வழிகெடுக்காதீர்கள். இதன் முடிவு அல்லாஹ்விடத்தில் மிகக்கடினமாகவே அமையும்.

போட்டியில் பங்குகொள்பவர்களுக்கு நிபந்தனை

குர்ஆனில் இடம்பெறுகிற, (நாம் இந்த நூலில் காட்டியவை போன்ற) தெளஹீதை உறுதிப்படுத்தும் ஆயத்துகளையும் அவறறின் சாட்சியமாய் (விளக்கமாய்) உள்ள ஹதீஸுகளையும் (பகுத்தறிவு) அனுமான அறிவையும் மறுத்து அவற்றிற்கு மாறாய் மூலப் பொருளான உஜூதுடன் (அல்லாஹ்வுடன்) அவனல்லாதவையும், சுத்த சூன்யமாயினும் உண்டென்று நிரூபித்துக் காட்ட முற்படுகிற அன்பர்கள் கீழேதரப்படுகிற நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டால் உங்கள் முயற்சிக்கு முன்வாருங்கள்.

1. நிரூபணம் செய்ய முற்படுபவர் முஸ்லீமாக இருந்து இஸ்லாத்தின் அடிப்படையில் வாதாடுவதானால் குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஉ, கியாஸ் ஆகிய பிரமாணங்களைக் கொண்டே நிரூபணம் செய்ய வேண்டும்.

2. இஜ்மாஉ என்ற வகையில் அந்த இமாம் எழுதியது இந்த இமாம் கூறியது என்று கூறிக்கொண்டு நீங்கள் காட்டும் கிதாபுகள், புத்தகங்களை நான் இஜ்மாஉ என்று ஏற்க மாட்டேன். நான் இஜ்மாஉ என்று ஏற்றுக்கொள்ளக்கூடியது எதுவென்றால், முஸ்லீம் ஆயினும் வேற்று மதங்களிலுள்ள ஆராச்சியாளர்களாயினும் குர்ஆன் ஹதீஸ் அறிவு ஆகிய முப்பிரமாணங்களுக்கும் அமைவாய் (சரியாய்) எழுதப்பட்ட எந்தப் பாஷையில், எந்தக் காலத்தில் எந்த நாட்டிலுள்ளதாயினும் வசனநடையில் அல்லது கவிதைநடையில் (பைத்து) உள்ள எல்லாக் கிதாபுகளையும் புத்தகங்களையும் நான் இஜ்மாஉ என்று முழுமனதாய் ஏற்றுக்கொள்வேன். ஏனிப்படிச் சொல்கிறேனென்றால் எவர் எப்பாஷையில் எப்போ கூறியிருந்தாலும் அது குர்ஆன் ஹதீஸ்

அறிவு ஆகிய முப்பிரமாணங்களை ஒத்திருந்தால் இதுதான் இஜ்மாஉ என்பதை நான் ஆராய்ந்து தெளிந்திருக்கிறேன்.

குர்ஆன்தான் எமது இறுதிப்பிரமாணம். இதை உறுதி செய்வதற்குரிய விளக்கம்தான் ஹதீஸ். குர்ஆன் ஹதீஸுகளை ஆதாரமாய்க் கொண்டு யூகித்தறியும் முடிவுதான் இஜ்மாஉ என்பது. இமாம்கள் இந்த அடிப்படையில்தான் மத்ஹபுக்களை வகுத்திருக்கிறார்கள். இந்த மத்ஹபுகள் உலக முஸ்லீம்கள் யாவராலும் ஏகமனதாய் ஏற்றுக்கொள்ளப்படாமல் ஒவ்வொரு பகுதியில் வாழும் ஒவ்வொரு கூட்டத்தினரால்தான் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறதென்பதையும் இம் மதுஹபுகளில் கூறப்படும் சிற்சில விஷயங்களில் ஒரு மத்ஹபுக்கு மற்றொரு மத்ஹபு முரணாய் அமைந்திருப்பதையும் முதலில் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த இமாம்களையோ அவர்களால் எழுதப்பட்ட மத்ஹபுகளையோ மனிதர்கள் சிந்திப்பதும் பிழைகாண்பதும் இல்லை. இந்த இமாம்களில் ஒருவர் ஹறாம் என்று கூறுவதை இன்னொரு இமாம் ஹலால் என்று கூறுகிறார். இவர்களுடைய கிதாபுகளிலிருந்து பல நூற்றுக்கணக்கான ஆதாரங்களைத் தரலாம். உதாரணம்: உடும்பை உண்பது ஹறாம் என்று ஓர் இமாமும் ஹலால் என்று இன்னோர் இமாமும் கூறினால் இவர்களில் மூ∴மீன் யார்? காபீர் யார்? எதை நாம் ஒப்புக்கொள்வது? ஆனால் ஹனபி மனிதனிடத்தில், ஸாபி மனிதன் உடும்பை உண்பது ஹலால் என்று கூறினால் உடனே ஹனபி மனிதன் ஸாபி மனிதனை முர்த்தத், காபீர் என்றும் மார்க்கத்தை விட்டுவிலகிய வேற்றுமதத்தவர் என்றும் இவர் இஸ்லாத்தில் பித்அத்தை நுழைக்கிறார் என்றும் கூறுகிறார். மார்க்கத் தீர்ப்பு (பத்வா) வழங்குகிறார்.

அப்படியானால் இஸ்லாம் என்பது என்ன? இஸ்லாத்தின் கொள்கை என்ன? ஒரு மதுஹபு மனிதன், அல்லாஹ்வையன்றி இலாஹு இல்லையென்பதே கலிமாவின் பொருள் என்று கூறினால்

அதே மத்ஹபின் வேறொரு மனிதன் அல்லாஹ் வேறுதான் இலாஹு வேறுதான் என்று கூறுகிறார். ஒருவர் அல்லாஹ்வுடன் இணையாய் ஒன்றுமில்லையென்றால் மற்றவர் அல்லாஹ்வுடன் சிருட்டி அல்லது சுத்த சூன்யம் உண்டு என்கிறார். இவ்விஷயங்களில் உண்மையைக் கண்டுகொள்ளத் துடிக்கும் பகுத்தறிவுவாதி எந்த அடிப்படையில் உண்மையைக் கணிப்பது? மார்க்கத்தைப் பகுத்தறிவுள்ள மனிதனுக்கு இறைவன் ஏன் அனுப்பினான்? அவன் வேதத்தை ஆராயும்படி கூறியுள்ளானே! பகுத்தறிவுக்கெட்டாத ஒன்றை எப்படி ஆராய்வது என்று அந்த உலமாக்களைக் கேட்டால் இஸ்லாத்தில் கேள்வி கேட்பவன் ஷைத்தான் என்று விடைதருகிறார்கள். இவ்வித உலமாக்கள் உண்மையான மூ.்மீன்கள் முஸ்லீம்கள்தானா? இவர்களை எடைபோடுவதும் இவர்கள் எக்கூட்டத்தினர் என்று கணிப்பதும் பெரும் சிரமமான காரியம்தான்.

இன்றைய உலகில் நடைமுறையிலுள்ள பெரும்பாலான கிதாபுகள் புத்தகங்கள் மூலம் எமக்குக் கிடைத்துள்ள செய்திகள் யாவும் இஸ்லாத்தின் அடிப்படையிலுள்ள ஏகோபித்த அபிப்பிராயம் (இஜ்மாஉ) என்றும், இஸ்லாத்தின் உண்மையான அடிப்படை விளக்கமென்றும் மறுப்பில்லாத விளக்கமென்றும் ஏற்கமுடியாது. பகுத்தறிவு ஆராய்வு இந்த இருட்டடிப்புக்குத் திரிபுபடுத்தலுக்கு இடம் தரவேதராது. இவ்வித மேதைகளின் அபிப்பிராயங்களைக் கட்சியபிப்பிராயம் என்று கொள்ளலாமேயன்றி இஜ்மாஉ என்று கொள்ள முடியாது. அப்படியானால் உண்மையைக் காண்பது எப்படி? இஜ்மாஉ என்றால் என்ன என்று என்னை நீங்கள் கேட்டால் இன்ஷா அல்லாஹ் நான் பதில் கூறுவேன்.

குர்ஆனை எவர் விளங்கித் தெளிவுபெற்று விடுகிறாரோ அவர் ஹதீஸ், இஜ்மாஉ, கியாஸ் அத்தனையையும் ஏற்றுக்கொண்டவராகிறார். எப்படியென்றால் இஸ்லாம் என்ற போர்வையில் எத்தனையோ மூடத்தனமான கூட்டங்கள் இருந்துகொண்டு ஒன்றுக்கொன்று முரணான கருத்துகளைக் கூறுவதை, எழுதுவதைக் கொண்டு இவர்கள் யார் என்பதை

நாம் அறிந்துகொள்ள இலகுவான ஒரு வழியை எமது வேதம் (குர்ஆன்) விளக்கித் தந்திருக்கிறது. இதை நம்மில் பலர் அறிந்துகொள்ளவில்லை. காரணமென்ன? மதம் என்ற பெயரில் சில அறிவீனர்கள் இன்னும் மக்களுக்கு ஒரு விலங்கை அடிக்கடி போட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த விலங்கு என்ன தெரியுமா? குர்ஆனைப் பாராதே! அதை உலமாக்களேயன்றி விளங்கிக்கொள்ள முடியாது. அதிலும் தமிழ் தப்ஸீர் என்றால் கையிலும் தூக்கிவிடாதீர்கள் என்று கூறுகிற குழையடி மந்திரம்தான் அந்த விலங்கு. இந்த விலங்கிலிருந்து விடுபட்டு எமது பகுத்தறிவைப் பயன்படுத்தி இனிமேலாவது ஆராய முடியாதா?

இவ்வுலகில் தோன்றிய நபிமார் றசூல்மார்கள் யாவரும் முஸ்லீம்கள் மூ.மீன்களேதான் என்பதை நாம் மறுக்கமுடியுமா? குர்ஆன் ஹதீஸ்கள் இவ்வுண்மையை ஆணித்தரமாய் வலியுறுத்தியிருக்கின்றன. இந்த நபிமார்கள் றசூல்மார்கள் ஈமான் விஷயத்தில் எந்த அபிப்பிராயத்தை ஏகமனதாய் ஒப்புக்கொண்டு கூறியுள்ளார்களோ அது பூரணமான ஆதாரமுடைய "இஜ்மாஉ"வாகவே இருக்கும். இதுதான் முஸ்லீம்கள் மூ.மீன்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய இஜ்மாஉவாக இருக்கும். இதைக் கண்டறிவது எப்படி? கண்டறிவதற்கு குர்ஆன் வழிதந்திருக்கிறது. இப்போது குர்ஆனைப் புரட்டிப்பாருங்கள்.

குர்ஆன்: 7:59

திடமாக நூஹு நபியை நாம் அவருடைய ஜனங்களிடம் அனுப்பனோம்; அவர் என் சனங்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு இபாதத்துச் செய்யுங்கள், அவனல்லாத யாதொரு இலாஹும் இல்லை; உங்களுக்கு மகத்தான ஒரு நாளின் வேதனைக்குப் பயப்படுகிறேன் என்று கூறினார்.

குர்ஆன்: 7:65

ஆதுக்கூட்டத்தாரிடம் அவர்களின் சகோதரரான ஹூது நபியை அனுப்பினோம்; அவர் ''என் சனங்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு இபாதத்துச் செய்யுங்கள்; உங்களுக்கு அவனல்லாத யாதொரு இலாஹும் இல்லையென்று கூறினார்.

குர்ஆன்: 7:73

ஸமூதுக்கூட்டத்தாரிடம், அவர்களின் சகோதரரான ஸாலிஹு நபியை அனுப்பினோம்; அவர் ''என் சனங்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு இபாதத்துச் செய்யுங்கள்; உங்களுக்கு அவனல்லாத யாதொரு இலாஹும் இல்லையென்று'' கூறினார்.

குர்ஆன்: 7:85

மத்யன் கூட்டத்தாரிடம் அவர்களின் சகோதரர் ஷுஜபு நபியை அனுப்பினோம்; ''அவர் என் சனங்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு இபாதத்துச் செய்யுங்கள்; உங்களுக்கு அவனல்லாத யாதொரு இலாஹும் இல்லையென்று'' கூறினார்.

மேலே தந்த ஆயத்துகள் குர்ஆனிலுள்ளவையென்பதை உங்களால் மறுக்க முடியுமா? இன்ன இன்ன நபிமார்கள் இப்படி இப்படிக் கூறினார்கள் என்பதையும் இந்த நபிமாரின் (இஜ்மாஉ) ஏகோபித்த அபிப்பிராயம் இதுதான் என்பதையும் இந்த ஆயத்துகள் விளக்கம் தரவில்லையா? இந்த அபிப்பிராயம் மூ.ீன்கள் முஸலீம்களான் நபிமாருடையதாயும் இருக்கிறது. இந்த அபிப்பிராயமே சரியென்று ஏற்றுக்கொண்ட இறைவனே எமக்குச் சாட்சி கூறுகி றானல்லவா? சரிதான் றசூல்(ஸல்) அவர்களும் இதை ஆமோதித்ததுண்டா?

குர்ஆன்: 21:25

உமக்கு முன்னர் நாம் அனுப்பிய தூதர்களுக்கெல்லாம் நிச்சயமாக என்னைத்தவிர வேறு இலாஹு இல்லை; எனக்கே இபாதத்துச் செய்யுங்கள், என்று நாம் வஹி அறிவிக்காமல் இல்லை.

குர்ஆன்: 41:43

உமக்கு முன்வந்த றசூல்மார்களுக்குக் கூறப்பட்டது எதுவோ, அதனையேயன்றி உமக்குக் கூறப்படவில்லை.

இவ்வித ஆயத்துகள் மூலம் முற்கால றசூல்மார்கள் நபிமார்கள் எதை மக்களிடம் கூறினார்களோ அதைத்தான் எங்கள் றசூல்(ஸல்) அவர்களும் கூறியிருக்கிறார்கள் என்பதில் குர்ஆனை

ஏற்றுக்கொண்ட எமக்கு எவ்விதக் குழப்பமும் கிடையவே கிடையாது. ஏனென்றால் எமது இறுதி ஆதாரம் குர்ஆன்தான். நபிமார் தங்கள் சுய இஷ்டத்துக்குக் கலிமாவை மக்களுக்குக் கூறவில்லை. இபாதத்துச் செய்யும்படி கூறவில்லை. இறை ஏவலோடுதான் கூறியிருக்கிறார்கள். அப்படியானால் குர்ஆனை ஒப்புக்கொண்டவர் ˙இறைஏவலையும் மூ.˙மீன் முஸ்லீம்களான நபிமாரின் ஏகோபித்த இஜ்மாஉ என்பதையும் முழுமனதாய் ஏற்றுக்கொண்டவராவர். இதை விட வேறு எந்த இஜ்மாஉவும் ஏற்றுக்கொள்ள முடியாதவைதான். ஏன்? அவ்லியாக்களிலும் பல படித்தரங்களுண்டு. எல்லோரும் குத்புகளோ ஸேகுமுறப்பிகளோ அல்ல. அன்னோர் கூறியிருந்தால் அது நபிமாருடைய இஜ்மாஉவையே ஒத்திருக்கும். ஆயினும் அதை எதிரி மறுக்கும்போது நம்மால் எதிரியைத் திருப்திப்படுத்த முடியாது. ஏனென்றால் நாம் கூறுபவர் ஓரு குத்பு என்பதை எல்லோரும் ஏற்க மாட்டார்கள். நிரூபித்துக் காட்டவும் முடியாது. இது அறிபவர் அறியவேண்டிய ஓரு விஷயம். குத்புமார்களின் இஜ்மாஉவை உலகமக்கள் யாவரும் ஏற்றுக்கொண்டதாய் உலக சரித்திரத்தில் கிடையாது. காரணம்: முஸ்லீம்கள் ஒரே அடிப்படையில் இல்லை. ஆதலால்தான் பல மதுஹப்கள் தோன்றியிருக்கின்றன. இந்த மதுஹப்களின் விவாதமெல்லாம் இஸ்லாத்தின் வெளியுடலான ஷரீயத்தில்தான். இந்த வெளியுடல் கிரிகைகளிலேயே இஜ்மாஉ மாறுபட்டுக் கிடக்கிறதென்றால் இஸ்லாத்தின் உயிரான ஈமானுடைய விஷயத்தில் எந்த இஜ்மாஉவை நாம் கையாளலாம்? ஆதலால் குர்ஆனே எல்லாப் பிரமாணங்களையும் தன்னுள் அடக்கிக் கொணடதாய் இருக்கிறது. நாம் நபிமார்களின் இஜ்மாஉவைக் குர்ஆனைக் கொண்டு பெற்றுக்கொள்வதே சரியாகும்.

மேலே நாம் காட்டிய ஆயத்துகளை அறிவுக் கண்ணோடு நோக்குங்கள். நபிமார் யாவரும் அல்லாஹ் அல்லாத இலாஹ் இல்லையென்றே கூறிவந்திருக்கிறார்கள். எல்லா இலாஹ்ம் அல்லாஹ்தான் என்று கூறியிருக்கிறார்கள். இந்த இறை ஏவலின்படி கூறிய இஜ்மாஉவை நாம் மறுத்து அல்லாஹ்வுடன் அவனல்லாத இலாஹ்ம் உண்டு என்று கூறுபவர் எழுதுபவரின் சொல்லை

எழுத்தை எப்படி இஜ்மாஉ என்று கொள்ள முடியும்? இலாஹு என்பதைக் குர்ஆன் பொதுப்பெயர்ச்சொல் என்று ஆணித்தரமாய் நிரூபித்துக் காட்டியிருக்கும்போதும் அச்சொல்லுக்கு வலிந்துரை கொண்டு வணக்கத்துக்குரிய நாயன் என்று புரட்டிய மக்களின் இஜ்மாஉவை, இஜ்மாஉ என்று எப்படிக் கூறுவது? இபாதத் என்ற சொல்லுக்கு அதன் இயல்பான கருத்தை மூடிமறைத்து வணக்கம் என்று பொருள் கொண்டோரின் கூற்றை இஜ்மாஉ என்று எப்படிக் கூறலாம்? இபாதத் என்ற சொல் குர்ஆனில் எங்கெங்கு பாவிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் ஒருமைப்படுத்தல், ஏகமாக்கல், தௌஹீது செய்தல் என்பதே அதன் பொருள் என்று அப்பாஸ் (றலி) போன்றோர் விளக்கம் தந்திருந்தும் அதையெல்லாம் மூடிமறைத்துவிட்ட கூட்டத்தினரின் அபிப்பிராயத்தை இஜ்மாஉ என்று என்னால் ஏற்கவே முடியாது. ஆகையால்தான் குர்ஆன் ஹதீஸுகளைவிட எந்த இமாமுடைய எந்தஓர் நூலையும் ஆதாரம் காட்டத் தூக்கவேண்டாம் என்று கூறுகிறேன். ஹதீஸ்கள்கூட ஏற்கமுடியாதவையென்று நீங்கள் கூறினால் அதைக்கூட நான் விட்டுக்கொடுக்கலாம். ஆனால் பகுத் தறிவு (அனுமான அறிவு) குர்ஆன் ஆகிய இரண்டுமே என்னுடைய ஆதாரங்களாகும். ஆதலால் மீண்டும் கூறுகிறேன் முஸ்லீமாயிருந்து, இஸ்லாத்தின் அடிப்படையிலேயே அல்லாஹ் வுடன் அல்லாஹ் அல்லாதவையுமுண்டென்று நிரூபிக்க முற்படுவோர் குர்ஆன் ஹதீஸுகளையன்றி எந்த ஓர் கிதாபையும் ஆதாரம் காட்ட வேண்டாம் என்று கூறுகிறேன்.

இமாம்களும் அவர்களைத் தொடர்ந்த மிகப்பலரும் சாதாரண ஷரீயத்தின் விஷயத்தில்கூட அபிப்பிராய பேதங்களைக் கொண்டிருக்கிறார்களென்பது நம்மெல்லோருக்கும் வெளிப்படையாய்த் தெரிந்த ஓரு விஷயம்தான். இவர்கள் தங்களறிவுக்கேற்ற சட்டங்களை இயற்ற, ஹறாம் ஹலால் கணிக்க, அபிப்பிராயம் தெரிவிக்க, எழுத, பேச உரிமையுடையவர்களென்றால் என் உரிமை ஏன் இல்லாமல் போகவேண்டும். என்போன்றோர் கூறும் முடிவை பித்அத் என்று கூறினால் இமாம்களும் பித்அத்வாதிகளென்றல்லவா கூறவேண்டும். இப்படி ஓர் இமாமை நாம் கூறினால் நம்மை

முர்த்தத் என்று கூறுகிற ஒருசில அமாவாசை ஆலிம்கள் ஷியாத் தலைவருக்கு மரணத் தொழுகை நடாத்துகிறார்களென்றால் இந்த ஆலிம்களை நாம் அமாவாசை ஆலீம்கள் என்பது பிழையாகாது. ஆகவே சாதாரண பொதுவிஷயங்களில்கூட உண்மை தெரியாமல் உளறிக்கொட்டுகிற அமாவாசைகளின் இஜ்மாஉ அபிப்பிராயம் மார்க்க விளக்கம் போன்றவை எமக்கு வழிகாட்டாது. ஷரீயத்தின் விஷயத் திலேயே தெளிவுகாண முடியாமல் திணறிக் கொண்டிருப்போர் ஈமானுடைய விஷயத்தில் (தௌஹீதுடைய விஷயத்தில்) சமீபத்திலும் நெருங்க முடியாது.

நான் சவால்விட்டழைப்பது இவ்வித சாதாரண ஒரு விஷயத்துக்காக அல்ல. இஸ்லாத்தின் உயிரான தௌஹீதுக் கலிமாவின் உண்மை விவரத்தைப் பகுத்தறிவு ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் சரியான ஆதாரங்களுடன் நிரூபித்துக்காட்டவே நான் முயற்சி செய்கிறேன். இமாம்களுடைய இஜ்மாஉ என்பது சுமார் 1,200 வருடங்களுக்குட்பட்டவைதான். நான் எடுத்துக்கொண்ட விஷயம் 1,200 ஆண்டுகளுக்கு முன்னுள்ள விஷயமாகும். ஆதலால் இமாம்களின் இஜ்மாஉவுக்கும் எனது ஆராய்வின் முடிவுக்குமிடையில் முரண்பாடுகள் நிறையத் தென்படலாம். இமாம்களுடைய கூற்றே இஜ்மாஉ என்று நீங்கள் கூறினால் நானும் என் கட்சியைச் சேர்ந்தோரும் கூறுவதே இஜ்மாஉ என்று நான் பிடிவாதம் செய்யலாமல்லவா?

நீங்கள் காட்டும் கிதாபுகளை இஜ்மாஉ என்று கொண்டால் நான் காட்டும் கிதாபுகளையும் இஜ்மாஉ என்று கொள்ளவேண்டி ஏற்படும். ஆனால் நான் காட்டும் நூற்களிலுள்ள இஜ்மாஉவை நீங்களும் நீங்கள் காட்டும் ஆதார நூற்களிலுள்ள இஜ்மாஉவை நானும் மறுக்கலாம். இறுதிவரை எமக்கு முடிவு கிடைக்காமல் போகலாம். ஆகவே, நீங்களும் எந்தக் கிதாபையும் தூக்கி ஆதாரம் காட்டவேண்டாம். நானும் எந்தக் கிதாபையும் ஆதாரம் காட்டமாடடேன். ஆகவே, நம் இரு பகுதியினரும் குர்ஆன் ஹதீஸ் அனுமானம் என்ற பகுத்தறிவு ஆகிய 3 பிரமாணங்களை மட்டுமே ஆதாரமாய்க் கொள்வோம். எனக்கென்று ஓர் மதுஹபு இல்லை.

குர்ஆன், ஹதீஸ் அறிவு ஆகியவற்றை ஒத்துக்கூறும் எந்த மதுஹபுவிலுள்ள எந்த ஒரு விஷயத்தையும் நான் மனப்பூர்வமாய் ஏற்றுக்கொள்வேன். என்னுடைய இறுதிப்பிரமாணம் குர்ஆன் மட்டுமே. அதை உறுதிப்படுத்த நான் எடுத்துக் கொண்ட

1. சாட்சியம் ஹதீஸ்

2. சாட்சியம் வஹ்மில்லாத தெளிவான பகுத்தறிவு (உலக அறிஞர்களாலும் மதங்களாலும் நிரூபித்துக்காட்டிய தத்துவ விளக்கங்களை ஏற்றுக்கொண்ட அனுமான அறிவையே நான் பகுத்தறிவென்று கூறுகிறேன்.)

3. முஸ்லீம்களல்லாத, பிறமதத்தவர்களாய் இருந்தால் அல்லது பகுத்தறிவுவாதிகளாய் இருந்தால், இன்றைய விஞ்ஞானம் உண்மையென்று ஏற்றுக்கொண்ட தத்துவங்களின் அடிப்படையைக் கொண்டு உங்களுக்கு விரும்பிய எந்த ஒரு கல்வியைக் கொண்டேனும் நிரூபித்துக் காட்டுங்கள்.

4. நீங்கள் எழுதுகிற நூலையும் நான் அதை மறுத்தெழுதும் நூலை அல்லது இந்த நூலையே எமது நாட்டின் அரசாங்க உதவியோடு உலகநாடுகள் சகலதிலுமுள்ள பல்கலைக் கழகங்கள் தத்துவமேதைகள் சகலருக்கும் அனுப்பிவைப்போம். அவர்களின் தனித்தனியான அபிப்பிராயங்களை அரசாங்கம் பெற்றுக்கொண்டு அந்த அபிப்பிராயங்களை அரசாங்கம் விரும்புகிற ஒரு நீதிமன்றத்தில் கொடுத்து அதை அவர்கள் (நீதிபதிகள்) ஆராய்ந்து ஒரு தீர்ப்பை வழங்கினால் அதை நாம் மனப்பூர்வமாய் ஏற்றுக் கொள்வோம்.

5. நாம் இருபகுதியினரும் அரசாங்க அதிபர் மூலமாக எமது விவகாரங்களை விளக்கி ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டு முயற்சியில் ஈடுபாடு கொள்வோம். நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டால், நிபந்தனைகளில் ஏதாவது மாற்றம் செய்ய வேண்டுமென்றால், அல்லது வேறுவகையான நிபந்தனை மேற்கொள்ள வேண்டுமென்றால் என்னுடன் நேரில் உரையாடி முடிவுகட்டுங்கள்.

நிரூபணம் காண்பது எப்படி?

ஒரு விஷயத்தில் உண்மையைக் கண்டறிவதானாலும், பிறருக்கு அதை நிரூபித்துக் காட்டுவதனாலும் அதற்கு இருவழிகள் தான் இருக்கின்றன. ஒன்று : பிரத்தியட்சப் பிரமாணத்தைக் கொண்டு அறிதல் அல்லது நிரூபித்தல். அடுத்தது, அனுமானப்பிரமாணத்தைக் கொண்டறிதல், நிரூபித்தல் ஆகிய இவ்விரு வழிகளும்தான் உலகம் (மனிதன்) தோன்றிய காலம்முதல் இதுகாலவரையிலும் சகல மனிதர்களாலும் கையாளப்படுகிறது. இப்படி நிரூபணம் செய்யும் முறைப்படிதான் உலகிலுள்ள கார்ல்மாக்ஸ் லெனின் போன்றோரின் பொருள்முதல்வாதம் போன்ற பல கொள்கைகளும் கருத்து முதல்வாதம் போன்ற மதக் கொள்கைகளும் தோன்றியிருக்கின்றன. இந்தக் கண்டுபிடிப்பு என்னுடைய 35 வருட அயரா முயற்சியின், ஆராய்வின் முடிவாகும். நான் கண்டறிந்த இஸ்லாம் இவ்விரு வழிகளையும் ஒன்றிணைந்து ஷரீயத் என்ற பெயரோடு ஒரு ஆரம்ப வகுப்பையும் இவ்விரண்டு வழிகளுக்குமப்பாற்பட்ட தரீக்கத், ஹகீகத் என்ற உயர்வகுப்புக்கள் இரண்டையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

உலமாக்கள் யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதும் ஷரீயத் ஏற்றுக்கொண்டதுமான பிரத்தியட்சம், அனுமானம் ஆகிய இரு நிரூபண முறைகளையும், பொருள்முதல்வாதம், கருத்துமுதல் வாதம், ஒருமைவாதம், இருமை (பன்மை)வாதம் போன்ற கொள்ளைகளையும் கொண்டே நாம் இங்கு சில விஷயங்களை விளக்குவோம்.

பிரத்தியட்சப் பிரமாணம் என்றால் என்ன?

மனிதன் தன்னுடைய புலன்களை ஊடகமாய்க் கொண்டறியும் அறிவினால், பிரத்தியட்சமாய்க் காண்பது, கேட்பது, சுவைப்பது, முகர்வது, ஸ்பரிஸத்தால் அறிவது போன்றவை இதிலடங்கும். நிரூபணம் செய்வதும் இதே போலத்தான். ஒருவருக்கு ஒன்றை நிரூபிக்க வேண்டுமானால் அவருடைய ஐந்து புலன்களைக் கொண்டும் நாம் காட்டுவதை அவர் அறியவேண்டும். பொருள்வாதம் ,முதல்வாதம் என்பது இதுதான். கார்ல்மாக்ஸ், லெனின் போன்றோரின் கொள்கையின் அடிப்படை இதுதான். இதை இஸ்லாம் சில கட்டுப்பாடுகளுக்கமைவாய் அனுமதித்திருக்கிறது. கார்ல்மாக்ஸ், லெனின் போன்றோரின் கூற்று இஸ்லாத்தைக் கடந்ததாயும் கட்டுப்பாடுகளை மீறியதாயும் சில தீயவிளைவுகளைத் தரக்கூடியதாயும் இருக்கிறது. ஆனால் இஸ்லாமல்லாத பிறமதங்களும்கூடப் பிரத்தியட்சப் பிரமாணத்துக்குச் சில கட்டுப்பாடுகளை விதித்திருப்பது மெச்சக்கூடிய விஷயம்தான். ஆயினும் உலமாக்கள் மதங்களின் கட்டுப்பாடுகளை மீறிக்கொண்டிருக்கிற காரணத்தினால் மதங்கள் செயலிழந்துவிட்டன. பிரத்தியட்சப் பிரமாணத்தையே இறுதி முடிவாய்க் கொள்ளுவது பகுத்தறிவை மீறிய செயலாகும். நல்ல பொருளைத் தீயபொருளாயும் தீய பொருளை நல்ல பொருளாயும் எமது புலன்கள் எமக்குக் காட்டக்கூடும். இது அன்றாட வாழ்வில் மனிதன் காணும் அனுபவம். இது புலன்களுக்கு இயற்கை கொடுத்த இயல்பு. ஆறடி உயரம் கொண்ட ஒரு மனிதனை ஒரு மைல் தூரத்தில் காணும்போது நேரில் கண்ட அதே ஆறடி உயரம் தென்படாது. கண்ணினால் காணமுடியாத ஒன்றைப் பூதக் கண்ணாடி காட்டிவிடுகிறது. இதிலிருந்து நாம் அறிவதுதான் என்ன? நமது புலன்கள் ஒவ்வொன்றுமே ஒவ்வோர் வகையான கட்டுப்பாட்டில் கட்டுண்டிருக்கின்றன. கண்பார்வைக்கு ஒரு குறிப்பிட்ட தூர

அளவுண்டு. அந்த அளவைக் கடந்த தூரத்திலுள்ளதையும் கண்ணுக்கெட்டாத சமீபத்திலுள்ளதையும் அறியக் கண் ஊடகமாகாது. மற்றும் புலன்களும் இதுபோல்தான். ஆதலால் பிரதியட்சப் பிரமாணம் சரியான ஆதாரமாகாது. கடவுளைக் காட்டு, நரக சுவர்க்கத்தைக் காட்டு என்பவை போன்ற கேள்விகளெல்லாம் மூடத்தனமான கேள்விகள்தான் ஏனென்றால் இவை எமது புலன்களுக்கு எட்டாதவையாகையால் இவற்றை அனுமான வாயிலாய் நம்பவேண்டுமென்பதே மதங்களின் கூற்று, இது மூடநம்பிக்கையென்று வாதிட முடியாது. இந்த மதங்களின் கட்டளையை மீறிய சிதறிய சிந்தனையுடைய மனிதன்தான் இந்தக் கேள்விகளைக் கேட்கிறான். இக் கேள்விகளுக்குக்கூட இஸ்லாம் தெளிவான விளக்கம் தந்து மூட புத்தியை நீக்கிவிடுகிறது.

உலக மதங்களில் சில உருவாக்கப்பட்டவையாயும் சிற்சில கலாச்சார வழக்கு நிறைந்தவையாயும் இருப்பினும் அம் மதங்களை உருவாக்கிய அறிஞர்கள் ஓரளவு அனுபவஸ்த்தர்கள்தான். இவர்கள் பிரத்தியட்சப் பிரமாணம் பிழை என்பதை உணர்ந்து அனுமானப் பிரமாணமே சரியானதென்று நம்பித்தான் கடவுள் ஒருவருண்டு என்று தீர்ப்புக்கட்டினார்கள். இது பிழையல்ல. இருப்பதைக் கொண்டு இல்லாததை யூகித்தறிந்தார்கள். இவ்வித மக்களிலுள்ளவர்கள்தான் ஒருமை, இருமைவாதிகள், பொருள்முதல்வாதிகள், கருத்து முதலவாதிகள், கூர்ப்புக்கொள்கை, சார்புக்கொள்கைகளெல்லாம். இந்த விதமான கடவுட் கொள்கையிலும் பிரத்தியட்ச, அனுமானப் பிரமாணங்களிலும் சிற்சில தவறுகளுண்டு என்பதைக் கண்டறிந்த அல்லாஹ்வும் றசூலும் மிகமிகத் தெளிவான ஓரு கொள்கை விளக்கத்தையும் செயல்முறையையும் கொண்ட ஓரு வழியை மக்களுக்கு விளக்கியிருக்கிறார்கள். இந்த வழியின் எல்லா அம்சங்களையும் பொதிந்துகொண்ட தனிப் பெயர் தீனுல் இஸ்லாம் என்பது. சுருக்கமாய்க் கூறினால் சாந்தியளிக்கும் இயற்கைவழி என்று கூறலாம். இதை நாம் கீழே விவரிப்போம். நாம் கூறிய பிரத்தியட்சப் பிரமாணத்தையும் பொருள்முதல்வாதத்தையும் இன்றைய விஞ்ஞானம் ஏற்றுக்கொள்ளவில்லை. விஞ்ஞானம் இஸ்லாத்தின் ஆரம்ப படித்தரம் தான். இஸ்லாம் விளக்கும் கொள்கையை நடைமுறையை விஞ்ஞான உலகம் மிகச் சமீபகாலத்தில் அறிவு ரீதியாய் ஒப்புக் கொள்ளலாம் என்பது எனது நம்பிக்கை.

அனுமானப் பிரமாணம் என்றால் என்ன?

மனிதன் தன் சொந்த அனுபவத்தில் கண்டறிந்த உண்மைகளை அடிப்படையாய் வைத்துக்கொண்டு யூகித்து அறிவதே அனுமானப் பிரமாணம் என்று கூறப்படுவது. இருப்பதைக் கொண்டு இல்லாதிருப்பதை யூகித்தல் என்றாலும் பொருந்தும். பகுத்தறிவுக்குரிய கடைசி எல்லை இந்த வட்டம்தான். விஞ்ஞானம் இன்று ஏற்றுக்கொண்டுள்ள உண்மை இதுதான். இஸ்லாத்தின் ஆரம்பமும் இதுதான். இதை இஸ்லாம் மஹ்ரிபத்துல் அப்ஹால் என்று கூறு கிறது. சர்வ உலகங்களையும் நுட்பமாய் நோக்கி ஆராய்ந்தால் சர்வவல்லமையுமுள்ள, இனம் காணமுடியாத, அறிவுடைய, நித்தியமாய் இருந்தகொண்டிருக்கிற ஏதோ உண்டு என்று மனிதன் யூகிக்கிறான். ஆனால் அந்த அறிவும் சக்தியுமுடையது ஒன்றா? பலவா? என்று ஒரு வாதம் மனிதனிடம் உருவாகிறது. இதுதான் ஒருமை வாதம், பன்மை அல்லது இருமை வாதம் என்பது. இஸ்லாமோ இந்த அனுமானப் பிரமாணத்தின் ஆரம்பத்திலும் கூட இவ்வித மருட்சி வாதங்கள் எதுவும் இஸ்லாத்தில் நுழைய முடியாமல் கொள்கை விளக்க ஆரம்பத்திலேயே அணைகட்டியிருக்கிறது.

நாம் எடுத்துக்கொண்ட அனுமானப் பிரமாண விஷயத்திலும் தெளிவு போதாது என்று கண்ட இஸ்லாம் மிகமிகத் தெளிவான ஒரு பிரமாணத்தை உலகுக்குத் தந்திருக்கிறது. இந்த அனுமானம் சரி என்பதை உலக மதங்களும் இஸ்லாமும் ஏற்றிருந்தும் இஸ்லாம் இன்னொரு பிரமாணத்தை ஏன் தரவேண்டும்! அதில் ஒரு நுட்பமுண்டு. மனிதன் தன் வாழ்வில் கண்டறிந்த அனுபவத்தை அடிப்படையாய்க் கொண்டுதான் அனுமானிக்கிறான். ஒருவன் ஒன்றை மரமாய்க் காணும்போது காதல் பித்தன். அதேமரத்தை தன்

காதலியாய்க் காணுகிறான். இது அறிவின் தகைமையைப் பொறுத்த ஒரு விஷயம். புலன்கள் அறியும் ஆற்றலுக்குரிய கருவிகளேயன்றி அறிவாகாது. மனித அறிவின் எந்தப் படித்தரத்தில் மனிதன் நிலை கொண்டிருக்கிறானோ அவனுடைய அனுபவத்துக்கு இன்னொருவரின் அனுபவம் வேறாய் இருக்கலாம். ஆதலால் ஒவ்வொரு மனிதரின் அல்லது கூட்டத்தாரின் அனுமானமே சரியென்று தீர்ப்புக்கட்ட முடியாது. எந்த அடிப்படையை நாம் எடுத்துக்கொண்டோமோ அதற்கமைவான உண்மை மட்டும்தான் எம்முடைய அனுமானத்தில் அமையும். அதுவே முடிவானது. உண்மையென்று கூறமுடியாது. கண்ணாரக் காண்பதும் பொய் காதாரக் கேட்பதும் பொய் தீரவிசாரித்தறிவதே உண்மையென்று ஒரு சாரார் கூறுவது இந்த அனுமானப் பிரமாணத்தைத்தான். இஸ்லாம் இதை ஏற்றிருந்தும் இந்த அனுமானப் பிரமாணத்தை உண்மையின் அடிப்படையில் உறுதி கொள்ள இரு கட்டுபபாடுகளைத் தந்திருக்கிறது. அவை "மன்கூல்" "மஹ்கூல்" என்று கூறப்படும். இதிலொன்று யுக்தியென்றும் மற்றொன்று சுருதியென்றும் பொருள்படும். யுக்தி என்றால் அனுமான அறிவு என்பது பொருள். இந்த அனுமானம் மனித அறிவின் எல்லையை தத்துவ விளக்கத்தைக் கடக்காமல் இருக்க வேண்டும். இல்லையானால் யுக்தி பிரயோசனம் செய்யாது. ஒரு பொருள் அழியாமல் நிலையாய் இருப்பதானால் இடைத்தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய எந்த ஒரு பொருளும் அதனுடன் இருக்க முடியாது. இது மனித அறிவின் உண்மையான தீர்ப்பு. ஆகையால்தான் இதை ஒரு தத்துவம் என்று (மதப்பற்றுடையோரும் மதப்பற்றற்றோரும்) அகில உலக மக்கள் யாவரும் ஏற்றிருக்கிறார்கள். இன்றைய உலகு அதை உதறிவிட்டு மனம்போனபோக்கில் யூகிப்பதும் நிரூபிக்க முற்படுவதும் அறியாமையாகும். ஆதலால் மார்க்க ஆராய்வு செய்யும் மக்கள் முதலில் சரியான உண்மைத் தத்துவங்களை விளங்கியறிய வேண்டும். தத்துவங்களுகக்மைவாகவே அனுமானத்தைக் கொண்டு நிரூபணம் செய்ய வேண்டும். இப்படித் தத்துவ விளக்கங்களுக்கமைவான அனுமான அறிவின் தீர்ப்பை உறுதி செய்வதும் அதற்கு மேலுள்ள படித்தரங்களை விளக்குவதும்தான் ஸுருதியென்ற குர்ஆன் (ஜல்ஸலத்துல் ஜர்ஸ்) ஹதீஸ் (ஸல்ஸலத்துல் பீல்) முதலாம் ஆதாரங்களாகும். ஆகையால்தான்

இறுதி முடிவான தீர்ப்புக் குர்ஆனின் தீர்ப்புத்தான் என்று இறைவன் அறிவிக்கிறான். சரியான அடிப்படையிலுள்ள பகுத்தறிவுக்கு குர்ஆனின் முஹ்கமுவான ஆயத்துகள் அணுவும் பிசகாமலே இருக்கின்றன. குர்ஆனுக்கு, புர்கான் என்றொரு பெயருண்டு. பிரித்தறிவிப்பது என்பதே அதன் பொருள். எனவே திரையிடப்படாத பகுத்தறிவுக்கு, குர்ஆன் நூறு வீதமும் சரியாகவே இருக்கும்.

இன்றைய உலகின் ஒரு பகுதி பொருள்முதல் வாதத்திலும் இன்னொரு பகுதி கருத்துமுதல் வாதத்திலும் மூழ்கியிருக்கிறது. இவர்களின் எல்லா விவரங்களையும் இங்கே விவரிக்க முடியாதாயினும் அடிப்படைகளை மட்டுமாவது எடுத்துக் காட்டுகிறேன்.

பொருள்முதல்வாதம்:

இதன் அடிப்படை என்னவென்றால், புலன்களால் உணரப்படும் பொருட்கள் (பௌதீகம்) மட்டுமே உண்மை. அதற்கப்பால் சூட்சுமம் என்றொன்று கிடையாது என்பதே. இந்த அடிப்படையில் உருவானதுதான் கார்ல்மாக்ஸ், லெனின் போன்றோரின் கொள்கைகள். இவர்கள் மிகமிகப் பெரிய அறிஞர்களாயிருந்தும் தத்துவங்களை மீறிக் கருத்துமுதல்வாதத்தை அடிப்படையாய்க் கொண்டு தான் தங்கள் விவாதங்களை ஆரம்பித்திருக்கிறார்கள். எப்படியென்றால் உடன்பாடும் எதிர்மறையும் ஒன்றிக்காவிட்டால் பொருள் பொருளாய் இராது, தென்படாது என்பது தத்துவம். இத்தத்துவம் பொருளுக்கு மட்டுமல்ல குணத்துக்கும் கூடப் பொருந்தும். மிகமிகச் சிறிய ஒரு பொருளாயிருப்பினும் அது பல கோடாகோடி அணுக்கள் சேர்ந்த ஒரு திரட்சியே என்பதை மறுக்க முடியாது. இந்த அணுக்கள் ஒன்றுசேர்ந்த பொருளாய் அமைய ஏதோ ஒரு சக்தி (அல்லது ஒரு அணுவுடன் மற்ற அணுக்கள் ஒவ்வொன்றையும் நிலையாய்த் தரிபடுத்தி வைத்திருக்கக் கூடிய ஏதோஓர் பண்பு, அல்லது வலிமை இருந்தே ஆகவேண்டும். இல்லையானால் அணுக்கூட இருக்க முடியாது. இந்த வலிமையை நாம் புலன்களால் காண்பதே இல்லை. இந்த வலிமையால் உரு அமைக்கப்பட்ட பொருளை நாம் காணுகிறோம். இதைப் பொருள் என்று கூறுகிறோம். உடன்பாடும் எதிர்மறையுமின்றிப் பொருளில்லை என்ற தத்துவத்தை நாம்

அறிந்திருந்தால், நாம் பொருளைக் காணும்போது கருத்தின் ஒரு தோற்றமே பொருள் என்றும் கருத்தும் பொருளும் ஒன்றையொன்று முந்தியதல்ல என்றும் ஏதோ இனம்காண முடியாத ஏதோ ஏகமாயுள்ள பொருள் பௌதீகம் சூட்சுமம் என்ற பாகுபாட்டுடன் காட்சியளிக்கிறது என்றும் உண்மையில் அவை இரண்டில்லாத ஒன்றேயென்றும் எமது புலன்கள் வாயிலாய்ப் பொருளாய்க் காண்கிறோம் என்றும் நாம் உணர்ந்து கொள்ள முடியும். பொருள் முதல்வாதி பொருள்தான் உண்மையென்று கூறும்போது, கூறியவன் தன்னை மறந்து தன் உயிரை, நான் என்ற உணர்வை மறந்து விட்டுத்தான் பொருளைக்கண்டிருப்பாரா? அந்த நான் என்ற உணர்வோடு அல்லது அவ்வுணர்வைக் கொண்டே கண்டிருப்பாரா? நான் என்பது கருத்து முதல்வாதத்தைச் சேர்ந்ததா? பொருள் முதலவாதத்தைச் சேர்ந்ததா? நான் இருக்கிறேன் என்றுணர்வது அறிவேயன்றிப் பௌதீகப் பொருளான உடலல்ல. அறிவு சூட்சுமம். அறிவில்தான் உடலிருந்து கொண்டிருக்கிறதேயன்றி உடலில் அறிவு இருப்பதாய் நம்புவது விளக்கமின்மை. அறிவில் அறிவாய் (சூட்சுமமாய்) இருந்த கற்பனைதான் புலன்கள் வாயிலாய்ப் பௌதீகப் பொருளாய்க் காட்சியளிக்கிறதென்பதை உணர்ந்து கொண்டால் பிரச்சினையே கிடையாது. உடலைக் கொண்டேயன்றி அறிவு இயங்காதே என்று நினைப்பது தவறு. உடலை பௌதீகப் பொருளாயக் காட்டுவது அறிவேயன்றி வேறு எது? பௌதீகம் என்றும் சூட்சுமம் என்றும் கூறுவது புலனறிவில் சிக்குண்ட மூடபுத்தியாகும். உள்ளது அறிவு மட்டுமே, அறிவு ஏற்படுத்திக் கொண்ட (கட்டுப்பாடு) எண்ணம் உறுதியானதாய் இருந்தால், அந்த எண்ணமே பௌதீகப் பொருளாய்க் காட்சியளிக்கும். ஆரிபுகள் இதை முற்றாய் அறிவார்கள். மெஸ்மரிஸம், ஹிப்நாடிஸம், வாசிலாத்துப் போன்ற கலைகளில் பாண்டித்தியமுடையவர்களுக்கு உண்மை புரியலாம். கனவின் விவரமே ஆதாரத்துக்குப் போதுமானதாகும். கருத்தும் பொருளும் ஒன்றேயன்றி வேறில்லை. சூட்சுமமும் பௌதீகமும் ஒரு உண்மையின் இரு பிரிவுகளேயன்றி வேறானவையல்ல. முரண்படும் இரு தன்மையில்லாத எப்பொருளும் மனிதப் புலன்களில் அமையாது. உஜூது என்பது எதிர்மறையற்றிருப்பதால் தான் அதை ஆராயவேண்டாமென்றும் அது பகுத்தறிவில் அடங்காதென்றும் தடைவிதிக்கப்பட்டது. ஏன்? அது அறிவில் புலன் வாயிலாய் உணர முடியாதது.

இன்னொரு நுட்பம் : பொருளைக் காணும் நாம் காலத்தையும் இடத்தையும் கொண்டேயன்றிப் பொருளைப் பார்க்க முடியாது. இடம் ஆகாயம் என்பதில் கட்டுண்டிருக்கிறது. நமக்கும் நாம் பார்க்கும் பொருளுக்கும் (ஆகாயம்) இடைவெளி இல்லையானால் பொருளைப் பார்க்க முடியாது. ஆகாயத்தை முதலிலும் பொருளைப் பிறகும்தான் காணுகிறோம். ஆனாலும் எமது அறிவீனம் நாம் இடத்தை (ஆகாயத்தை)ப் பார்த்த நினைவையே கொள்வதில்லை. அப்படி நினைவு கொள்வதானாலும் பொருளைப் பார்த்த பிறகுதான் நினைவு கொள்கிறோம். இருட்டில் நின்றுகொண்டிருக்கிற ஒருவனிடம் ஒரு பொருளைச் சுட்டிக்காட்டி இது என்ன? என்று கேட்டால் எனக்குத் தெரியாது என்கிறான். ஏன்? அவன் பொருளைக் காண வெளிச்சம் (ஒளி) இல்லை. ஆனால் பகலில் ஒரு பொருளை காட்டி இது என்ன என்று கேட்டால் நாம் காட்டிய பொருளை அடையாளம் கண்டு அதன் பெயரைக் கூறுகிறான். ஏன்? வெளிச்சத்தைக் கொண்டு இடத்தையும் பொருளையும் அறிந்து கொண்டான், இவன் பொருளையும் வெளிச்சத்தையும் ஒன்றாய்த்தான் பார்த்தான். என்றாலும் கேள்விக்குரிய பொருளில் இவனுடைய கவனம் சென்றதேயன்றி வெளிச்சத்தில் செல்வதே இல்லை. இது மருட்சிதான். பார்வைக்கு ஒரு வேக அளவுண்டு. இந்த அடிப்படையைக் கொண்டால் முந்தியது வெளிச்சமாயும் பிந்தியது பொருளாயும் இருக்கிறது. பொருளைக் கொண்டுதான் வெளிச்சத்தை உணர்ந்தோம் என்றால் பொருள் முந்தியதாயும் வெளிச்சம் பிந்தியதாயும் இருக்கிறது. உடலுக்காக உயிரா? உயிருக்காக உடலா? என்பதும் உயிர் முந்தியதா? உடல் பிந்தியதா? என்பதும் இதைப்போன்றது தான். இவையெல்லாம் தத்துவ உண்மைகளோடு ஒருமுகப்படுத்தப்படாத சிதறிய சிந்தனைகளேதான்.

இவற்றை ஆராய்வுசெய்தால் பொருள்முதல்வாதிகள் தனனிறைவு பெறும் நோக்காகவே இக்கொள்கையை வெளிப்படுத்தியுள்ளார்கள் என்பது தென்படுகிறது. இவர்கள் தங்கள் அறிவைப் பயன்படுத்தி உலோகாதய விஷயங்களில் வெற்றிபெறவே முனைந்திருக்கிறார்கள். அவர்களுடைய இன்னொரு பெரிய தவறு உலக சிருட்டிகளை (மனிதர்களை) எல்லா வகையிலும் சமப்படுத்த நினைப்பது. இது எவராலுமே முடியாத ஒன்று. ஏனென்றால் சிருட்டி உலகில் ஒன்றைப்போல் இன்னொன்று

அணுவேனும் இல்லவே இல்லை. ஒன்றுக்கொன்று அணுப்பிரமாணமேனும் வித்தியாசமுடையதாகவே இருக்கும். இல்லையானால் ஆக்கம் அழிவு நிகழாது. சிருட்டியென்றாகாது. இந்த தத்துவத்தை உணராமல் எல்லோரையும் எல்லா விஷயங்களிலும் சமப்படுத்த நினைப்பது இயற்கைக்கும் அறிவுக்கும் விரோதமானது. சிற்சில விஷயங்களில் சமப்படுத்தலாம். ஆயினும் எல்லா விஷயங்களிலும் எக்காலத்திலும் சமப்படுத்த முடியாது. இன்றைய உலகிலுள்ள, மனித அறிவுக்கும் இயற்கைக்கு முரணான நடைமுறைகள் யாவுக்கும் மூலகாரணம் இவ்வித பொருள்முதல்வாதம்தான். இவர்களைச் சிலர் நாத்தீகர்கள் என்று கூறுகின்றனர். இது தவறு. இவர்களுக்கு நாத்திகவாதத்தைப் பற்றி எதுவுமே தெரியாதென்று நான் கூறுவேன். நாத்திகவாதம் உண்மையைக் கண்டறியத் துடிக்கும் மக்களின் வாதம். இதற்கு விளக்கம் தரப்பட்டால் நாத்தீகம் மறைந்துவிடும். நாத்தீகம் அறிவின் இறுதி எல்லையிலுள்ளது. ஆயினும் அதுவும் மருட்சிவாதம்தான். பொருள்முதல்வாதம் அறிவின் ஆரம்பப் படித்தரம் அதுவும் மருட்சியோடு கலந்து கிடக்கிறது.

அடுத்தது கருத்துமுதல்வாதத்தை நோக்கினால் இதுவும் மனிதனைத் தவறான வழியிலேயே செலுத்திக் கொண்டிருக்கிறது. இந்த வாதம் ஏற்படுத்திய விளைவுதான், உலக மக்கள் யாவரும் ஒரே தாய் ஒரே தந்தைக்குப் பிறந்து பெருக்கமடைந்து ஒரே உலகில் வாழும் ஒரே குடும்பத்தினராய் இருந்தும் ஒருவரையொருவர் வெறுத்தொதுக்கும் அறிவையும், பாகுபாடுகளையும், மதப்போராட்டங்களையும் உருவாக்கியிருக்கிறது. ஒருமைவாதம் இருமைவாதமெல்லாம் இப்பகுதியில் அடங்கும். மனிதர்களால் உருவாக்கப்பட்ட சில்லறை மதங்களெல்லாமே இதில் அடங்கும். இவற்றின் தீய விளைவுகள் அனேகம். விவரிக்க இங்கு அவகாசமில்லை. இந்தக் கருத்து முதல் வாதம் "ரியா" மேலெண்ணம் கொண்ட ஒரு சாராராலும் உலக இன்பங்களைப் பெறும் நோக்குடைய ஒரு சிலராலும், பொதுவாய்க் கூறினால் மதங்களைக் கேடயமாய்க் கொண்டுள்ள ஒருசில மக்களாலேயே அவர்களுடைய சுயதிருப்திக்காக இக்கோட்பாடு பரப்பப்பட்டிருப்பது தென்படுகிறது. முதலாளித்தவத்தை உருவாக்கியது இந்தக் கருத்துமுதல்வாதமேயென்று கூறினால்

பிழையாகாது. ஆரம்ப அமைப்பாளர்கள் சிற்சில நன்னோக்கங்களுடன் இக்கொள்கைகளை வகுத்திருந்தாலும் இன்றைய உலகின் (மனிதர்களின்) அறிவு வளர்ச்சிக்கு விலங்கிட்டிருக்கின்றன என்பதை நான் அனுபவவாயிலாய் அறிந்திருக்கிறேன்.

நல்லடியார்களைத் தவிர மதச்சார்புடைய எந்த ஒரு மனிதனும் அவன் ஒப்புக்கொண்டுள்ள மதத்தின் பெயரால் புகுத்தப்பட்ட சட்டம் என்ற தளையில் சிக்குண்டவனாகவே இருக்கிறான். இச் சட்டங்கள் இயல்பான மனச்சாட்சியை மீறினாலும் கூட அதை இன்றைய உலகில் பெரும்பாலார் பொருட்படுத்தவே இல்லை. ஆனால் நான் அறிந்துள்ள இஸ்லாம் உலகிலுள்ள மற்றெல்லாக் கொள்கைகள் கோட்பாடுகளிலிருந்தும் வேறுபடுகிறது. இந்த இஸ்லாத்தின் மூலமந்திரம் உலகிலுள்ள, எல்லா வகையான கோட்பாடுகளையும் மீறி, சுயசிந்தனையாளர்கள் எவரும் விவரம் தராத ஓர் இயற்கையான உண்மையை நிலைப்படுத்துகிறது. இந்த மந்திரம் தான் "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்பது. இதில் இஸ்லாத்தின் கொள்கை விளக்கமும் செயல் விவரமும் ஒருங்கே அமையப் பெற்றுள்ளன.

இதன் உண்மையான கருத்து அல்லாஹ் தவிர இலாஹு இல்லையென்பது. இலாஹு என்பது பௌதீக சூட்சும சிருட்டிகளையும் அவற்றை உற்பத்தி செய்த சிருட்டி கர்த்தாவான றப்பையும் ஒன்றுசேர்த்துக் கொண்ட பொதுப்பெயர்ச் சொல்லாயிருக்கிறது. இதன்படி அல்லாஹ் தவிர றப்பும் அப்தும் இல்லை என்பது, அப்தும் றப்பும் அல்லாஹ்வின் வேறல்ல, அல்லது அல்லாஹ் மட்டுமே இலாஹுவாய் இருப்பது, அல்லது எல்லா இலாஹும் அல்லாஹ்தான் என்றுணர்த்துகிறது. அல்லாஹ் தவிர இலாஹு இல்லையென்பதை உள்ளத்தில் இருத்துவதற்காக அதே மருந்தை நாம் வெவ்வேறு வசன நடைகளால் கூறினாலும் உணர்த்தப்படும் உண்மை ஒன்றேயொன்றுதான். இதை ஆராய எவ்வித இலக்கண இலக்கிய அறிவும் அவசியமே இல்லை. இது பாமர மக்கள் முன்னிலையில் தான் நபிமாரால் கூறப்பட்டிருக்கிறது. இந்தக் கலிமாவின் பொருளை எல்லா மக்களுக்குமே நபிமார்

தெளிவாய் விளக்கியிருந்திருக்கிறார்கள். இன்றுள்ள மனிதருக்கும் இது தெளிவாய் விளங்கவே செய்கிறது. ஆனால் பெரும்பாலார் அன்றும் இன்றும் அப்பொருளை ஏற்க மறுத்திருக்கிறார்கள். கலிமாவும் அதன் உண்மையும் தற்போது புரண்டுகிடப்பதால் அதன் சரியான உண்மையைக் கண்டறிவதற்காக எமக்கு இலக்கண இலக்கியமும் பிற கல்விகளும் அவசிய மாகின்றனவேயன்றிக் கலிமாவின் கருத்தைக் கண்டறிய அந்தக் கல்விகள் அவசியமேயல்ல.

இந்தக் கலிமாவை நோக்கினால் இதைப் பொருள்முதல்வாதமென்றோ கருத்துமுதல்வாதமென்றோ ஒருமை வாதம் இருமை (பன்மை) வாதமென்றோ கூறமுடியாது. ஒவ்வோர்க் கண்ணோட்டத்தில் ஒவ்வொரு வாதத்துக்கும் கலிமா இடமளிப்பதுபோல் தென்பட்டாலும் அது அப்படிக் கூறவே இல்லை. எல்லா வாதங்களுக்கும் கலிமா இடமளிப்பதுபோல் தென்படுவது வஹ்மு என்ற பேதபுத்தியாகும். "லாஇலாஹ" என்னும் போது இலாஹ" இல்லை என்பதே அதன் பொருள். இலாஹ" என்பது பௌதீக சூட்சுமங்களையும், சூட்சுமத்திலும் சூட்சுமமான றப்பையும் நோக்கியதாயும் லா என்ற எதிர்மறைச் சொல் (அவை) பௌதீக சூட்சும, காரண வஸ்த்துக்கள் யாவையும் ஒரே நொடியில் இல்லையென்று மறுப்பதாயும் இருக்கிறது. அதேவேளை அல்லாஹ்வை மட்டும் தரிப்படுத்துகிறது. நாம் அல்லாஹ்வைப்பற்றி அனுமான வாயிலாய்த்தான் அறிந்திருந்தோம். ஆனால் கலிமா பிரத்தியட்சப் பிரமாண வாயிலாகவும் எமக்கு நிரூபணம் செய்கிறது. எல்லா இலாஹ"ம் அல்லாஹ்தான் என்றுணர்த்துகிறது. அதாவது நாம் எமது பஞ்ச புலன்களாலும் காணுகிற அனுபவிக்கிற சகல பௌதீகப் பொருட் களும் அனுமானப் பிரமாணத்தாலறிந்த சூட்சும, (மலக்கு ஜின்) காரணப்பொருளும் (றப்பும்) அல்லாஹ்தான் என்றுணர்த்துகிறது. இதற்கு ஓரு வரையறையும் இஸ்லாம் விதித்துள்ளது. நாம் எல்லாப் பொருட்களையும் ஒன்றுபடுத்தி அல்லாஹ்வே எல்லாமாய் இருக்கிறான் என்பதை இஸ்லாம் அனுமதிக்கிறது. ஆனால் குறிப்பிட்ட எந்த ஓர் பௌதீக சூட்சுமப் பொருளையும் அல்லாஹ் என்று கூறக் கூடாதென்றும் எந்த ஓரு

சிருட்டிப் பொருளின் மீதும் இந்த அல்லாஹ் என்ற நாமத்தைப் பிரயோகிக்கக்கூடாதென்றும் இஸ்லாம் தடை விதித்திருக்கிறது. இது மனித சிந்தனைக்கு ஓர் விருந்தாகவே அமைந்திருக்கிறது. அடுத்ததாக இல்லல்லாஹ் என்னும்போது (அல்லாஹ் தவிர என்னும் போது) அல்லாஹ்வே பௌதீகம் சூட்சும காரணங்களாய் இருக்கிறான் என்பது தென்படுகிறது. இவ்விடத்தில் ஒருமை வாதம், இருமை வாதம் ஏற்பட முடியாது. ஏன்? அல்லாஹ் என்ற சொல் ஒருமை பன்மையையோ, இடத்தையோ, காலத்தையோ தனிப்பட்ட பௌதீக, சூட்சும காரணப்பொருட்களையோ பிரித்துக்காட்டவில்லை. இதை இலகுவாய் விளக்குவதற்காக முதலில் ஓர் சிறு நுட்பம் தருகிறேன். நுட்பமாய் உணரும்படி வேண்டிக்கொள்கிறேன்.

"லாஇலாஹ" என்ற சொல் நமக்குணர்த்தும் உண்மை ஒன்றுமே இல்லையென்பதே. இலாஹ" என்ற சொல் எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்து நிற்பதால் (பொதுப்பெயர்ச் சொல்லாய் இருப்பதால்) ஒன்றுமில்லை என்பதே அதன் பொருள். ஒன்றுமே இல்லையென்றால் எங்கே இல்லை? இடம்தானும் இல்லையே! ஆகையால் இக்கேள்வி எழ முடியாது. எப்போது இல்லை? ஒன்றுமேயில்லையென்பதில் காலமும் கட்டுண்டிருப்பதால் இக்கேள்வியும் எழ முடியாது. சரிதான். அப்படியானால் எங்கும் எப்போதும் இல்லாத நான் "லாஇலாஹ" என்ற வசனத்தை எப்படிக் கூறமுடியும்? ஒன்றுமே இல்லையென்னும்போது "லாஇலாஹ" என்ற வசனத்தைக் கூறுவதற்கு நான் எப்படி இருக்க முடியும்? சிந்தனை தூண்டப்படவில்லையா? நான் இருந்து கொண்டிருக்கும் போதும் ஒன்றுமில்லையென்று கூறுவதன் அர்த்தம் என்ன?

எமது அறிவுக்கு ஓர் எல்லை கணிக்காமல் நாம் இதைச் சரிவர உணர முடியாது. எமது முதல் நூற்களில் கூறியதுபோல, எமது புலன்களை அறிவினால் ஓரளவு அடக்கிக் கொண்டு மேல், கீழ், முன், பின், வலம், இடம் ஆகிய ஆறு திசைகளிலும் அறவைச் செலுத்தினால் கோடாகோடி வருடம், ஒளி வேகத்தை விடப் பலகோடி மடங்கு கூடிய வேகத்தில் அறிவைச் செலுத்தி எல்லா உலகங்களையும் கடந்து நின்றால் இனம் தெரியாத ஒரு

சுத்தசூன்யம் மட்டுமே மிஞ்சும். அதைச் சூன்யம் என்றும் இருள், அல்லது ஒளியென்றும் கூறமுடியாது. அங்கு ஒப்பிட்டு நோக்கக் கூடிய எதுவுமே இல்லாதிருப்பதால் மனிதனுடைய பகுத்துணரும் அறிவு இதற்கு மேல் வேலை செய்யாது. தொழிற்படாது. இந்த எல்லையற்ற வட்டம்தான் எமது பகுத்தறிவின் எல்லை. இந்த வட்டத்துக்குள் இருந்துதான் லாஇலாஹ (ஒன்றுமே கிடையாது) என்று நாம் கூறினோம். இது சுத்தப் பொய்போல் தென்படுகிறது. எப்படி? நாம் எம்முடைய அறிவின் வட்டத்துக்குள் நின்றுதானே ஒன்றுமில்லையென்று கூறினோம். இந்த அறிவின் வட்டத்துக்குள் நின்றுகொண்டிருக்கும் போது நான் இருக்கிறேன் என்ற எம்முடைய தன்னுணர்வு முழுப்படியாய் இருந்துகொண்டிருக்கும் போதும்தான் ஒன்றுமில்லையென்று கூறினோம். ஒன்றுமில்லையென்று கூறப்படும் அச்சொல் உண்மையானதாக இருந்தால் ஒன்றுமில்லாதபோதும் இருந்துகொண்டு இருப்பவனான எவனோ ஒருவனால்தான் அந்த வசனத்தைக் கூறமுடியும். கூறியிருக்க முடியும். இல்லாதவை எதை எப்படிக் கூற முடியும்? இதுதான் இஸ்லாத்தில் றுபூபியத் என்ற ஸ்த்தானமாய் இருக்கிறது. குர்ஆனின் 57:3ஆம் வசனம் இவ்வுண்மையை உணர்த்துவதற்காகத் தரப்பட்ட மறுக்க முடியாத ஆதாரமாகும். இதன் கருத்து ஆதியும் அவனே. அந்தமும் அவனே. தோற்றுவதும் அவனே. மறைந்திருப்பதும் அவனே. அவன் எல்லாம் அறிந்தவன். இந்த ஆயத்தைச் சரியாய்ப் புரிந்துகொண்ட ஒரு மனிதன் உலக மக்களால் உருவாக்கப்பட்ட மௌட்டீக வாதங்களில் ஈடுபாடு கொள்ளவேமாட்டான். அக்கொள்கைகள் எதுவுமே அவருக்கு அவசியமாகாது.

மனித அறிவின் கேள்வி

குர்ஆன் கூறுவது உண்மையா? பகுத்தறிவும் குர்ஆனும் ஒன்றையொன்று மீறுமா? ஒத்திருக்குமா? வேதம் (குர்ஆன்) பகுத்தறிவுக்கப்பாற்பட்டதென்று ஒரு சிலர் கூறுவது சரியா? இதில் எது உண்மை? குர்ஆனே இறுதிப்பிரமாணமென்று வேதம் கூறுவதை நம்பலாமா? போன்ற சந்தேக வினாக்களுக்குப் பரிசுத்த குர்ஆன் என்ன விளக்கம் தருகிறதென்று பார்ப்போம்.

குர்ஆனின் விடையும் விளக்கமும்

நாம் முன்பு காட்டிய குர்ஆன் 57:3ஐ மட்டும் எடுத்துக் கொள்வோம். இவ்வாயத்தில் ஆதி, அந்தம், தோற்றம், மறைவு, அறிவு ஆகிய 5 விஷயங்கள் தரப்பட்டுள்ளன என்றும் அவையாவும் இறைவனின் பண்பேயென்றும் தோற்றம் (சிருட்டி) அவனே என்றும் தோற்றும் சிருட்டியில் மறைந்தவன் அவனேயென்றும் அவன் என்றுமிருந்தபடியேயிருக்கச் சர்வமாயும் அவனிடத்தே அவனுக்காகக் காட்சியளிக்கிறான் என்றும் கூறி முன்பே நான் விளக்கியுள்ளேன். இதன்படி நான்கூறிய விஷயத்தின் சாரம் என்னவென்றால்: உஜூது என்ற மூலப்பொருளையும் அதன் பண்பு (ஸிபத்-அஸ்மா)களையும் தவிர ஒன்றுமே இல்லை என்பதுதான். குறுகலாய்க் கூறினால் லாஇலாஹ இல்லல்லாஹ் அல்லாஹ் தவிர இலாஹு (சிருட்டியும் சிருட்டிகர்த்தாவும்) இல்லை. எல்லா இலாஹும் அவனே என்பது தான் சாரம். இது குர்ஆனுடைய விளக்கம்தான். ஆயினும் இதை மாபெரும் பட்டதாரிகள் கூட மறுக்கிறார்களே! இது ஏன்? சிருட்டியென்றால் என்ன? என்பதைப் புரிந்து கொள்ளாமையே காரணம்.

மனிதர்களில் மிகப்பெரும்பாலார் வஹ்மு என்ற பேதபுத்தியில் மூழ்கியிருந்துகொண்டு தங்களை அறிஞர்களாய் எடை போடுகிறார்கள். இவர்களுடைய வஹ்மு என்ற பேதபுத்தி

உண்மையான அறிவினால் தீர்ப்புக்கட்டப்பட்ட தத்துவ விளக்கங்களை மீறியிருக்கிறது. ஆகையால்தான் இவர்கள் குர்ஆனை மறுப்பவர்களாய் மாறுகிறார்கள். இதை ஓரளவு சிந்தனை செய்வோம். ஒரு பொருள் அழிந்தொழியாமல் நிலைப்பட்டிருப்பதானால் அதனுடன் மோதி இடைத்தாக்கத்தை உண்டாக்கக்கூடிய எந்த ஒரு பொருளும் அதனுடனிருக்க முடியாது. இது மனித அறிவின் இறுதியான தீர்ப்பு. ஆகையால்தான் இதை ஒரு தத்துவம் (உண்மை) என்று மதப்பற்றுடையோரும் மதப்பற்றில்லாதோரும் விஞ்ஞானிகள் முதல் உலக அறிஞர்கள் யாவரும் இந்தத் தத்துவவிளக்கத்தை ஒருமுகமாய் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இதன்படி நோக்கினால் இருப்பது எதுவோ அது இணையற்ற தனித்ததாய்த்தானே இருக்கும். இருப்பது எதுவோ அதை விட்டு அதன் பண்புகள் எப்படி வேறாகும்? குணியை விட்டுக் குணம் பிரியாதென்பது ஒரு தத்துவமல்லவா? இந்த அடிப்படையில் உள்ளது (தோற்றுவது) (லாஹிர்) வெளிப்படையென்றால் (அதன் குணம் ஸிபத் என்றால்) அதில் மறைந்திருப்பது உஜூது, தாத்து என்றாகிறது. (குணி என்றாகிறது) ஏன்? குணத்தைக் கொண்டேயன்றிக் குணியை உணர முடியாதென்பது தத்துவம். ஆகவே குணி மறைந்ததாயும் குணம் தென்படுவதாயும் (பாதின் லாஹிர்) இருப்பதால் சர்வஆலங்களும் குணமே என்பதும் அல்லாஹ் என்ற குணி மறைந்திருப்பது என்பதும் நிரூபணமாகிறது.

ஆகவே உள்ளதான பொருள் லாஹிறாயும் பாதினாயும் காட்சியளிக்கிறதென்று குர்ஆன் தரும் உண்மையைப் பகுத்தறிவு மறுக்க முடியுமா? முடியாது. இந்த உள்ளதான பொருள் ஒன்று என்ற இலக்கத்தில் கூடக் கட்டுண்ணாத ஏகம் என்பதை அறிவனால் மறுக்க முடியுமா? தோற்றும் சிருட்டிக்கு ஆதியாயும் அந்தமாயுமுள்ளதே, சிருட்டியென்ற ஸுறத்திலும் காட்சியளிக்கிறதென்பதை, தத்துவத்தை ஏற்றுக்கொண்ட அறிவு மறுக்குமா? இதேபோல நாம் தந்த தத்துவ அடிப்படையை ஆதாரமாய்க் கொண்டு குர்ஆன் ஹதீஸுகளை ஆராய்ந்தால் உங்கள் தெளிவான அறிவும் குர்ஆனும் ஒன்றே என்பதை உங்களால் உணரமுடியும். குர்ஆனுக்கு புர்க்கான் என்பது ஒரு

பெயர். பிரித்தறிவிப்பது என்பதே பொருள். பிரித்தறிவிப்பது பகுத்தறிவுதானே! அதுதான் உண்மையான நீதிபதி. இறுதி ஆதாரம் அதுதான். இதை முன்பே கூறியுள்ளேன். இதிலிருந்து நாம் புரிந்துகொள்வதுதான் என்ன? குர்ஆனை மறுப்பவன் மறைப்பவன் எவனோ அவன் மனிதனாயிருப்பினும் உண்மையில் அவன் மிருகமே என்பதுதான். இது தத்துவ விளக்கம் பெற்ற அறிவும் வேதமும் கொடுக்கும் தீர்ப்பாகும்.

எமது அறிவின் எல்லையைக் கணிப்பதற்காக ஓரு பேப்பரில் ஓரு வட்டமான கோட்டை வரைந்து கொள்வோம். இந்த வட்டத்துக்கப்பால் உள்ளதை எமது அறிவு பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதால் அதை நாம் சூன்யம் என்றும் வைத்துக் கொள்வோம். இந்தச் சூன்யம் என்பது வட்டத்துக்குள்ளும் வெளியிலும்தான் இருந்துகொண்டிருக்கிறது. உண்மையை நோக்கினால் அந்த எல்லை தெரியாத சூன்யத்தில்தான் நாம் ஓரு வட்டத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதாவது எமது அறிவு வட்டம் சூன்யத்தில் தான் இருக்கிறது. இந்த வட்டத்துக்குள் நீங்கள் விரும்பிய அளவு பல புள்ளிகளை இட்டுக்கொள்ளுங்கள். இந்தப் புள்ளிகள் எமது அறிவின் வட்டத்துக்குட்பட்ட உலகம் (சர்வஆலம்)களும் என்று வைத்துக்கொள்ளுங்கள். இந்த நிரப்பமான சுத்தசூன்யத்தைப் பற்றி, இடம், காலம் போன்ற எந்த ஓரு செய்தியும் எமதறிவுக்குத் தெரியாது. இந்த சுத்தசூன்யம் என்று எம்மால் கணிக்கப்படுவது எதுவோ அதுதான் உஜூது, தாத்து, என்பது. எமதறிவின் எல்லையை இது மீறியிருப்பதால் இதை நாம் சுத்தசூன்யம் என்று கூறினாலும் உண்மையில் அது சூன்யமே அல்ல. இது ஒன்று என்ற எண்ணிக்கையில் கட்டுண்ணாது. அதை அனுமான வாயிலாய்த்தான் நாம் அறிய வேண்டும். இந்த உஜூது நித்தியமாய் நிலையாய்ப் பிறிதொன்றின் தேவையில்லாததாய், சமதாய் இருந்து கொண்டிருக்கிறது. இதைத்தான் நாம் குணி, மூலப்பொருள், தாத்து, வுஜூது, ஹக்கு என்றெல்லாம் கூறுகிறோம். இதன் இடுகுறிப் பெயர்தான் "அல்லாஹ்" என்பது. எமது அறிவு வட்டத்துக்குள் இருக்கும் (சுத்த சூன்யம் போன்ற) அந்த அல்லாஹ்வுக்கு, வட்டத்துக்குள் இருக்கும் சர்வ உலகங்களையும்

பரிபாலிக்கும் தன்மை (படைத்தல், அழித்தல், காத்தல்) இருப்பதால், இந்த வட்டத்துக்குள் உள்ள நாம் அதை றப்பு என்று கூறுகிறோம். றப்பு என்றால் நாயகன், எஜமான், ஆளுமையுடையோன் என்பவை பொருள். அல்லாஹ் என்பது இவ்வெல்லைக்குட்பட்டதாயும் அதைக் கடந்ததாயும் (வரைவிலக்கணத்தைக் கடந்ததாயும) இருக்கிறது.

இந்த அல்லாஹ் அல்லது றப்பு என்ற குணி அதன் குணத்தை (ஸிபத் அஸ்மா)வை விட்டு வேறெங்கும் ஒளித்துக் கொள்ள முடியாது. ஏன்? குணியும் குணமும் எமதறிவில் (மூட புத்தியில்) வேறுவேறு என்று கருதினாலும் உண்மையில் அவ்விரு சொற்களாலும் உணர்த்தப்படும் பொருள் ஒன்றேதான். குணியை விட்டுக் குணமும் குணத்தை விட்டுக் குணியும் பிரியாதென்பது நாமறிந்த தத்துவம். குணிக்கு நிலைக்களன் குணமென்றும், குணத்தின் நிலைக்களன் குணியென்றும் தத்துவம் விவரிப்பதையும் நாமறிவோம். இந்தத் தத்துவங்கள் தெளிந்த அறிவினாலும் வேதவசனங்களாலும் தரப்பட்ட இறுதித் தீர்ப்பு என்பதை நாம் மறக்கக்கூடாது. இந்த உஜூது நித்திய ஜீவனுடையது, சர்வ வல்லமையுமுடையது என்பது நாமறிந்த உண்மை. இங்கே இறைவனைப் பற்றி எமக்குத் தரப்பட்டுள்ள வேத விளக்கங்களை (பண்புகளை) நாம் மீண்டும் ஒரு முறை ஞாபகம் செய்து கொள்வது நல்லது.

இப்போது எமது அறிவு வட்டத்துக்குள் இருந்து கொண்டிருக்கிற சர்வ உலகங்களையும் நோக்குவோம். இவ்வுலகங்களிலுள்ள சர்வ ஜீவராசிகளும் தங்களைத் தாங்களே நான் இருந்துகொண்டிருக்கிறேன் என்பதை அறிந்து கொண்டிருக்கின்றன. அதாவது ஒவ்வோர் அணுவும்கூட நான், நான் என்ற தனித்தனி உணர்வோடு தான் இருந்து கொண்டிருக்கின்றன. இது எவராலும் மறுக்க முடியாத ஒரு உண்மைதானே. இயங்கும் பொருள் இயங்காப் பொருள் யாவும் இவ்வுணர்வுடையவைதான். இப்பொருட்கள் தம்மைத் தாமே சிருட்டித்துக் கொண்டவையல்ல.

நாம் முன்பு சுத்தசூன்யம் என்று நம்பிய உஜூதே இருப்பது, அறிவுடையது, ஜீவனுடையது, பார்வை கேள்வியுடையது, என்றால் அந்த வுஜூதில் இருந்து கொண்டிருக்கிற சர்வஆலங்களிலுமுள்ள ஒவ்வொரு அணுவும் உணரும் உணர்வு, ஜீவன், பார்வை, கேள்வி முதலாம் பண்புகள் எவருடையவை? சிருட்டிகளுடையவைதான் என்று கூறமுடியுமா? சிருட்டி உஜூதல்லாத வேறு வுஜூது என்று கூறமுடியுமா? இறைவன் தன் ஜீவனில் கொஞ்சம் கொஞ்சமாய்க் கிள்ளியெடுத்துச் சிருட்டிகளுக்குக் கொடுத்துள்ளான் என்று கூற முடியுமா? குயவன் பானையைப் படைத்தது போலவே இறைவனும் சிருட்டியைப் படைத்தான் என்று கூற முடியுமா? இந்த ஒவ்வோர் அணுவும் கொண்டுள்ள தன்னுணர்வு வுஜூதுக்குடையதாய் இருக்குமா? அவனல்லாத (வுஜூதல்லாத) பிறவற்றிற்கிருக்குமா? நாம் அறிவுக்கு இட்டுக்கொண்ட வட்டத்துக்குள், வுஜூதல்லாத ஒன்று எங்கிருந்தோ வந்து குடியேறி விட்டதாய்க் கூறமுடியுமா? நான் என்றுணரும் உணர்வு ஒன்றாயிருக்குமா? வெவ்வேறாய் இருக்குமா? இக்கேள்விகளுக்கெல்லாம், உஜூதாகிய அல்லாஹ்வேயன்றி இல்லாதிருப்பதால் சர்வமும் அவனேயென்றும் அவன் பண்பேயென்றும் நாம் விடை கூறினாலும், அதை இலகுவாய் ஒப்புக்கொள்ள முடிவதில்லை, ஒவ்வொரு சிருட்டியும் வெவ்வேறாய்த் தனித்தனியாய் உணர்வதை, வெவ்வேறாய், ஒன்றுக்கொன்று முரணாய் இருப்பதை நாம் நிதர்சனமாகவே காணுகிறோம்.

எம்முடைய இஸ்லாம், எம்முடைய வேதம் லாஇலாஹ இல்லல்லாஹ் என்பதைக் கொண்டு உள்ளது. அவன் மட்டுமேயென்றும் அவனையன்றிப் பிறிதில்லையென்றும் கூறுகிறது. இஸ்லாத்தின் அடிப்படையே இந்தப் புரட்சி மந்திரம்தான். இதை இன்றைய உலக மக்களில் 90%மான மக்கள் ஏற்கவே இல்லை. பெரும் பெரும் கல்விமான்களிலும் மிகப்பலர் இதை ஆராயவும் இல்லை. அவர்களுடைய அறிவு இதை ஏற்றுக்கொள்ளவும் இல்லை.

ஆனால் குணியை விட்டுக் குணமும் குணத்தை விட்டுக் குணியும் பிரியாது, வேறுபடாது என்ற தத்துவத்தை ஏற்றுக்கொண்ட அறிவு புரட்சிக்கலிமாவை ஒப்புக்கொள்ள முன்வருகிறது. சுத்த சூன்யம் போல் அறிவில் அமையாதிருந்த உஜூது என்ற ஹக்கு

(குணி) இருந்தபடியே இருந்துகொண்டிருக்க அதனறிவிடத்தில் அதன் குணமும் அஸ்மாவுமே சர்வமுமாய்த் (தோற்றுவதாய்) இருக்கிறது. இந்தத் தோற்றத்தினால் மறைபட்டதுபோல், அறிவினால் யூகிக்கப்படுவதாய் இருப்பது (சூன்யம் போல் உள்ள) குணியென்ற வுஜூதுதான். குணம் (அஸ்மா என்ற தோற்றம்) மாறுவதும் மறைவதும் இயல்பென்றும் குணி மாறுவதோ மறைவதோ இல்லையென்றும் தத்துவம் எமக்குத் தீர்ப்புச் செய்திருக்கிறது. வட்டத்துக்கு முன்னும் வட்டத்தின் பின்னும் (சர்வ சிருட்டிகளின் ஆதியாயும் அந்தமாயும்) இருந்தது இருப்பது வுஜூதுதான். இந்த வுஜூதின் குணம்தான் எமது அறிவு வட்டத்துக்குள் இருந்து கொண்டிருக்கிற சர்வ உலகங்களுமாகும். இப்போது குர்ஆனின் 57:3ஆம் ஆயத்தை, அறிவு தீர்ப்புக்கட்டிய தத்துவ விளக்கமும், தத்துவத்தை ஆயத்தும் நிரூபணம் செய்கின்றன. அறிவும் குர்ஆனும் ஒத்திருக்கின்றன. பிற தீர்ப்பு எதுவும் எமக்கு அவசியமே அல்ல. ஆகவே குர்ஆனே இறுதிப் பிரமாணம் என்பது எமக்கு நிரூபணமாய் விட்டது.

நாம் முன்பு கூறியது, தத்துவத்தை ஏற்றுக்கொண்ட உலக மக்களின் பகுத்தறிவும்(ஸ்ருதி) குர்ஆன் ஹதீஸுகளும் ஒத்துக் கொண்ட உண்மையான தீர்ப்பு என்பதை நாம் மறக்கக் கூடாது. அந்த உண்மையான தீர்ப்பை இப்போது எமது அறிவு மறுப்பது ஏன்? இதற்குப் பல காரணங்களுண்டு. ஒன்றை மட்டும் நான் விளக்குகிறேன். நான் விளக்காதவற்றைக் கலிமத்துத்தையிபாவே விளக்கம்தரும்.

கலிமாவினால் உணர்த்தப்பட்ட அல்லாஹ்வையன்றி இல்லை அல்லது இருப்பது அவன் மட்டுமே என்ற சுத்த சத்தியமான உண்மையைப் பற்றிக்கொள்ளும் ஆற்றல் எமதறிவில் இல்லை. எமது அறிவை நாம் பகுத்தறிவென்று நம்பியிருக்கிறோம். இது பகுத்தறிவேயல்ல. இதன் பெயர்தான் பேதபுத்தி, சபலபுத்தி, மயக்கு, ஹுரூர், வஹ்மு என்றெல்லாம் கூறப்படுவது. இந்த அறிவு உண்மையான உயிருடையதல்ல. இது ஒரு போலியறிவுதான். இவ்வறிவுக்கு வேறொரு போலி நம்பிக்கை காரணமாய் இருக்கிறது. இந்தப் போலி நம்பிக்கைதான் அனாநிய்யத் என்பது. உண்மையான உஜூது வேறு நான் வேறு

என்று நம்பியிருக்கும் நம்பிக்கை. இந்த நம்பிக்கை சுத்தப் பொய்யாகும். ஏனென்றால் உள்ளது ஒன்று மட்டுமே என்பதை தத்துவ அறிவும் (ஸ்ருதி) வேதமும் தெளிவுபடுத்தியிருக்கும் போதும் அதை மறந்து நான் வேறு அது வேறு என்ற பொய்யில் ஊறித் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. இதனால் இதற்கேற்படக் கூடிய தீமை மிகமிகப் பெரியது. கடினமானது. இந்த நம்பிக்கைதான் ஷிர்க் என்பது. இது மன்னிக்கப்படமாட்டாதென்பதன் அர்த்தம் என்ன? இந்த நம்பிக்கை அழியாத வரையிலும் உஜூது என்ற அல்லாஹ்வின் ஒன்றுதலை மனிதன் பெறமுடியாது. நிரந்தர நகரம் என்பதன் இரகஸியம் இதுதான். இப்போது விஷயத்துக்கு வருவோம்.

நாம் காட்டிய அறிவின் வட்டத்துக்குள் இருந்து கொண்டிருக்கிற மனிதன் அல்லாஹ் தவிர (இலாஹ) ஒன்றுமில்லையென்று கூற முடியுமா? முடியாது. அப்படியானால் மனிதன் கூறுகிறானே! இந்தக் கூற்று நாவிலிருந்து வெளியானதேயன்றி உள்ளத்திலிருந்து வெளியானதல்ல. நாவினால் கூறியவரை முஸ்லீம் என்று சட்டம் அனுமதித்தாலும் அவர் மூ்மீனல்ல. நாவினால் கூறியவர் எப்போது அக்கூற்றை ஒப்புக்கொள்கிறாரோ அப்போதுதான் அவர் மூ்மீனாகிறார். நான் என்றுணர்வது வுஜூதேயன்றி பிறிதொரு நான் என்பவரில்லையென்று எப்போது அவர் அறிந்து கொண்டாரோ அப்போது, இவ்வளவு காலமும் நான் அல்லாஹ் அல்லாத நானென்று நம்பியிருந்தேனே என்ற நினைவுகூட இல்லாத நிலைமையில் ஆகிவிடுவார். இவரின் பெயர்தான் அப்து என்பது. இந்த அப்து என்பது (இவ்விடத்தில்) உடலையும் அவ்வுடலறிவையும் நோக்கியது. இந்த அப்துவில் இப்போ இயங்கும் உயிராய் (அறிவாய்) இருப்பதன் பெயர் றப்பு. இந்த அடிமையில் எச்செயல் வெளியாகுமோ அச்செயல் றப்புடையதே. அப்படியானால் அப்து வேறு றப்பு வேறுதானே என்று என்னை வினவுகிறீர்கள். இல்லை. அப்து என்பது மழ்ஹர். மழ்ஹர் பொருளல்ல. பொருளாய்க் காண்பது மருட்சி (ஹுரூர்)

அப்து என்ற உடல் லாஹிர் (தோற்றுவது). அப்துவின் உயிர் பாதின் (மறைந்தது). இந்த அப்துக்கு முன்னும், அப்துக்குப்

பின்னும் அப்தின் போது அப்தாயும் அந்த அப்தின் றப்பாயும் இருந்ததுதான் ஜீவன், உயிர் (அறிவு) என்பது. முன்பிருந்த உடல் கொண்டிருந்த அறிவுதான் இப்போது தன்னைத்தானே றப்பு என்று நம்புகிறது. இங்கே நடந்தது அறிவுப்புரட்சிதான். முன்பிருந்த சபலபுத்தி இப்போது இறந்து தெளிந்த புத்தியாய் மாறியிருக்கிறது. இங்கே கருத்துமுதல்வாத விளக்கம் நான் தரவில்லை. பொறுமையடையுங்கள். சமீபத்தில் விளங்கிக் கொள்வீர்கள். இந்த ஜீவனும் உடலும் வெவ்வேறானவை போல் தென்படினும் உண்மை அப்படியல்ல. றப்பு தனக்கு வேண்டிய சகல பூரணத்தன்மையுமுள்ளது. அரூபியானது. சகல உலகங்களும் ஒன்றுசேர்ந்த அப்து ரூபியானது. றப்பின் உடல் (லாஹிர்) நாம் காணும் சர்வ உலகாகவும், நாம் கண்டுகொள்ள முடியாமல் தேடிஅலைகிற றப்பு, உலகங்களின் (உயிர்) ஜீவனாகவும் இருக்கிறான். இதை நாம் பார்ப்பதில்லை. இந்த உயிரின் பெயர்கள் எண்ணிலடக்க முடியாத அதிகத்திலுமதிகம். அந்த நாமங்களில் ஒன்றுதான் நூர் என்பது. நூர் என்றால் அறிவு என்பதே பொருள். இந்த நிரப்பமான அறிவு அதனிடத்தேயுள்ள அனைத்தையும் பொதுவாயும், வெவ்வேறாயும் தானாயும் தானல்லாததாயும் அறிந்து கொண்டேயிருக்கிறது. இந்த அறிவு, தான் வகுத்த சட்டப்படி ஒரு நிலைமையில் றப்பென்ற பெயரையும் ஒரு நிலைமையில் அப்தென்ற பெயரையும் ஒரு நிலைமையில் லாஹிரையும் ஓர் நிலைமையில் பாதினையும் பெற்றிருக்கிறது. இது தனித்தனியாயும் ஒன்றாயும் ஏககாலத்தில் அறிந்து கொண்டிருக்கிறது. இதற்கு எதிரிடை இல்லை, இதன் இறாதா (நாட்டம்) தடைப்படாது. இந்த நிலைமையின் நாமம் றப்பு என்பது. இந்த அறிவுக்கு எல்லை கணிக்க அதையன்றி எதுவுமே இல்லை. உள்ளது அது மட்டும்தான். இந்த அறிவுக்கு நாம் கூறமுடியாத வேறொரு நிலையும் உண்டு. இப்போது அதன் பெயர் அல்லாஹ். அதையன்றி அதனுடன் எதுதான் இருக்க முடியும்? இருக்கவே முடியாது. இந்த உண்மையை, இறந்து கொண்டிருக்கிற மையித்துக்களுக்கு உயிராகப் புகுத்தி அவர்களை ஜீவனுள்ளவர்களாக ஆக்க வேண்டுமென்பதற்காகவே றஹ்மானாகிய (காருண்யக் கடலான) அல்லாஹ் "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்ற மணக்கும்,

உயிரூட்டும் கலிமாவை மக்களுக்கு உபதேசிக்கும்படி 1,24,000 நபிமார்களை அனுப்பினான். வேதங்களை அனுப்பினான். பகுத்தறிவை அருட்கொடைகளிலொன்றாகத் தந்தான். கலிமாவின் பொருட் சுருக்கம்:- அல்லாஹ்வையன்றி இல்லை இருப்பது அவனே என்பதுதான்.

நாம் கூறிய இதன் பெயர்களில் ஒன்றுதான் தௌஹீது, என்பது. ஞானம், ஏகத்துவம் என்பதெல்லாம் இதுதான். இதை விளக்குவதே வேதங்களின், றசூல்மார்களின், நல்லடியார்களின் கடமை. இந்த நல்லறிவின் முழுமைபெற்ற பெயர்தான் எகீன், ஈமான், விசுவாசம் என்றெல்லாம் கூறப்படுவது, இறை ஐக்கியம் அல்லது "லிகா" என்பவற்றின் சாரமும் இதுவே. இது இஸ்லாத்தில் தரப்பட்ட பூரண ஞானத்தில், எல்லோராலும் விளங்கிக்கொள்ளக் கூடிய நடுப்பகுதியாகும். இதற்குமேல் விளக்கமளிக்க முற்படுவது தடைப்படுத்தப்பட வேண்டியது. இந்த இறுதிநிலை அனுபவத்தோடுள்ளது. இந்த நடுப்பகுதியைப் புரிந்துகொள்ளாத மனிதன் அப்து, றப்பு என்ற சொற்களால் உணர்த்தப்படும் உண்மையை உணர்ந்து கொள்ளவே முடியாது. கலிமாவினால் விளக்கப்பட வேண்டிய ஞானம் எப்போதும் எல்லோரிடமும் விளக்கப்படவேண்டியது. இதற்கு ஆதாரங்கள் உண்டு. இதன் மேற்படித்தரத்திற்கு ஆதாரம் தரப்படவில்லை. இதற்குரிய ஆதாரம் அனுபவம் மட்டும்தான்.

நாம் எடுத்துக் கொண்ட விஷயத்துக்கு அவசியமானதை மட்டும் இங்கு கூறுவோம். குர்ஆனின் விளக்கப்படி முஹ்கமுவான ஒரு வசனத்துக்கு நான்கு பிரமாணங்களுடன் பொருள்கொள்ள வேண்டும் என்று ஒரு நிபந்தனையை நான் முன்பு கூறியுள்ளேன். இந்த அடிப்படைச் சட்டத்தைக் கடக்காத அளவுதான் எம்மால் பேசமுடியும். மேலதிக விவரம் பெற விரும்புவோர் நல்லடியார்களைக் கண்டறிந்து நல்லுபதேசங்கள் மூலம் விளங்கியறிந்து தெளிவுபெற வேண்டும். கலிமாவைச் சொற்பிரமாணமான "இபாரத்துன்னஸ்" ஐக் கொண்டு நோக்கினால் அல்லாஹ்தவிர ஒன்றுமே இல்லையென்பது வெளிப்படையான

விஷயம்தான். ஆயினும் "இலாஹு" ஒன்றுமில்லையென்று கூறிய மனிதன் தானும் பிற சிருட்டிகளும் இருப்பதைக் காணுகிறான். ஆதலால் இம்மனிதன் இருப்பதான இலாஹு (சர்வ சிருட்டியும்) அல்லாஹ் அல்லாததல்ல, அல்லாஹ்வின் வேறல்ல, அல்லாஹதான் என்று கருத்துப்பிரமாணமான தலாத்துன்னஸ்ஸைக் கொண்டு அறிகிறான். இதுதான் இஸ்லாத்தின் ஆரம்பம். கலிமாவைக் கூறியதன் கருத்து இதுதான். இந்தப் பத்துவயதுப் பாலகன் (இஸ்லாத்தில் நுழையும் குழந்தை) கலிமாவைக் கொண்டு, அதனால் தரிப்படுத்தப்பட்ட அல்லாஹ்வின் 5 சிறப்பியல்புகளை அறிந்துகொள்கிறது. அவனையன்றி ஒன்றுமே இல்லையென்றால் நாம் காணும் பௌதீகமாய்த் தோற்றுவதும் காணமுடியாத (புலன்களில் எட்டாத) சூட்சுமமாய்த் தோற்றாமல் இருப்பவனும் அவனேயென்று அறிந்துகொள்கிறான். அதாவது லாஹிறையும் பாதினையும் அறிகிறான். இதேபோலத் தோன்றி மறையும் யாவும் அவன் நாமமே என்றும் அதில் வெளியாகும் சக்தி அவனுடைய ஸிபத்தே என்றும் இவற்றைவிட்டு நீங்கமுடியாத வுஜூது ஆதியாய் அந்தமாய் நிலையாய் உள்ளதென்பதையும் சர்வத்தையும் அறிந்தது என்பதையும் காலக்கிரமத்தில் மனிதக் குழந்தை அறிந்து கொள்கிறது, இப்படி வளர்க்கப்பட்ட ஒரு குழந்தை தனக்கும் பிறருக்கும் இயன்றவரையிலும் தீவினை ஏற்படாத வாழ்வை மேற்கொள்ளும் என்பதில் சந்தேகம் வேண்டியதில்லை. இவ்விவரம் இலகுவாய் மனதில் அமையமுடியாதிருப்பதால் இதை விளக்கித்தரவேண்டியது அல்லாஹ் றசூலின் கடமையாகிறது.

மனித அறிவு முரண்பாடற்ற எவ்விஷயத்திலும் தொழிற்படாதென்று கண்டறப்பு ஒன்றுக்கொன்று முரண்படு தன்மைகளைக் கொண்டே விளக்கியுள்ளான்.

உருவத்தில் மட்டுப்படுத்துவதும் உருவமின்மையில் மட்டுப்படுத்துவதும் இரண்டும் ஒரே விஷயம்தான். இதில் ஒன்றை மட்டும் ஏற்பது குபிராயும் இரண்டையும் ஏற்பது ஆரம்ப ஈமானாயும் இருக்கிறது. இறைவன் தோற்றம் மட்டுமுடையவனென்றும் முன் பாதினாய் இருந்து இப்போது லாஹிறாய் மாறியுள்ளானென்றும்

எவன் நம்புகிறானோ அவன் சுத்தமான காபீர்தான். இதில் பல குற்றங்களமைகின்றன. பாதினை மறுத்து லாஹிரை ஒப்புக் கொண்டவன் குர்ஆனை மறுப்பவனாகிறான். குர்ஆனை மறுப்பவன் காபீரே தான். இதைப்போலவே லாஹிறை மறுத்து பாதினை ஏற்பவனும் குர்ஆனை மறுப்பவனும் காபீர்தான். லாஹிர், பாதின் இரண்டையும் ஏற்பவர் எவரோ அவர் குர்ஆனை ஒப்புக்கொண்ட மூ.்மீனாவார். இந்த இரு தன்மைகளையும் ஒன்றிணைத்து அப்து பௌதீகமாயும; றப்பு சூட்சுமமாயும் இருக்கிறான் என்ற அடிப்படையில்தான் இஸ்லாத்தின் ஹுர்புல்பராயிலியென்ற ஷரீயத் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த ஷரீயத்தில் இவ்வித கட்டுப்பாடுகளை ஏன் இறைவன் தந்தான்?

மனித அறிவு படிப்படியாய்க் கடக்காமல் திடீரெனத் தன் னிறைவு பெறாது. எமக்குள்ள அறிவு அதன் பூரணமற்ற நிலையில் ஒரு சிருட்டிதான். சிருட்டியறிவு ஏறுவதும் இறங்குவதுமாயுள்ளது. ஏறிக்கொண்டு அல்லது வளர்ந்துகொண்டிருக்குமறிவு தடைப்படாமல் மேலேறுவதானால் அதை ஒருமுகப்படுத்த வேண்டியது அவசியமா கிறது. துப்பாக்கியின் சன்னம் காற்றினால் உந்தப்பட்டுக் குறிப்பிட்ட தூரத்தையடைகிறதென்பதை நாம் அறிவோம். ஆயினும் அக்காற்று ஒருமுகப்படுத்தப்படாமல் சன்னத்தைக் குறிப்பிட்ட இடத்துக்குச் சேர்க்காது காற்றை ஒருமுகப்படுத்தத் துப்பாக்கியில் காற்று வெளியேறும் பகுதி கட்டுப்பாட்டுக்குள் அமைக்கப்பட்டிருக்கிறது. இதைப்போல அறிவை ஒருமுகப்படுத்தி உண்மையில் ஊறிவிடுவதற் காகவே இஸ்லாத்தின் ஆரம்பநிலையில் சிற்சில சரியான நீதியான கட்டுப்பாடுகளுடன் தத்துவார்த்த உண்மைகளை அடிப்படையாய்க் கொண்டு அமைக்கப்படடுள்ளது. இது குருட்டு நம்பிக்கையுமல்ல திணிப்புமல்ல. இக்கட்டுப்பாடுகளைக் கொண்டவைதான் இஸ்லாத்தில் விதிக்கப்பட்ட தொழுகை முதலாம் கட்டாய கடமைகளாகும். இவற்றின் உண்மை நோக்கம் "இக்லாஸ்" ஒருவழிப்பட்ட எண்ணத்தை உருவாக்குவதும், உள்ளத்துக்கு (அறிவுக்கு) உண்மையோடொன்றும் பயிற்சியை அளிப்பதுமே. இதுதான் பக்தி, ஷரீயத் என்பது. இது மனிதகுலத்தின் ஆரம்ப படித்தரமேயன்றி முடிவான படித்தரமல்ல. இந்த ஆரம்பப் படித்தரம்

ஒருமை, பன்மை, பொருள் முதல்வாதம், கருத்துமுதல் வாதங்கள் யாவையும் வீசியெறிந்து விட்டுத் தனக்கென்று ஒரு தனிவழியைக் கொண்டிருக்கிறது. இஸ்லாத்தின் ஆரம்பப் படித்தரமான ஷரீயத்தை உண்மையான தத்துவ அடிப்படையில் மனிதன் புரிந்துகொண்டால் எவ்வித தவறான வழியிலும் ஈடுபடாமல் அவனால் வாழமுடியும். எவ்வித வீண் விவாதங்களும் மனிதனுக்கு அவசியமாகாது.

நாம் முன்புகூறிய ஒருமைவாதிகள், இருமைவாதிகள், கருத்துமுதல்வாதிகள், பொருள்முதல்வாதிகள் யாவரையும் ஓர் கண்ணோட்டத்தில் நோக்கினால் இவர்களை நான் திரிபுவாதிகளென்றே கூறுவேன். ஏனென்றால் இவர்கள் தங்கள் குறிக்கோளான தன்னிறைவைப் பெற மதத்தையும், மௌட்டீகக் கோட்பாடுகளையும் கேடயமாய்க் கொண்டு எல்லா உண்மைகளையும் அவரவர் நோக்குக்கேற்றபடி திரிபுபடுத்தியிருக்கிறார்கள். நல்லடியார்களான மக்கள் எடுத்துக்கொண்ட தத்துவத்துக்கமைவான இயற்கை மதம் மட்டுமே என்றும் உயிருடையதாய் இருக்கிறது. மற்றெல்லா மதங்களும், கொள்கைகளும் ஓநாய்களை ஆட்டுக்குட்டிகளாய்க் காட்டும் போர்வைகளாக இருக்கின்றன. மதம் மதமாகவே மாறுபாடடைந்து விட்டது.

இஸ்லாம் இறைவன் ஒருவனுண்டு என்று கூற அவசியம் இல்லை, இது உயிரினத்தின் இயல்பான ஒரு நம்பிக்கை. இதை மனிதனுக்கு விளக்க 1,24,000 நபிமாரும் 4 வேதங்களும் அவசியமல்ல. இஸ்லாம் கூறுவது அல்லாஹ் வையன்றி இல்லையென்பதே. இக்கொள்கைக்கு ஆரிபுகள் கொடுத்த பெயர் "வஹ்தத்துல் உஜூத்" என்பது. இருப்பது அல்லாஹ்தான் என்பதற்குச் சாதாரண மனிதன் கொண்ட பொருள் என்னவென்றால் சுட்டிக்காட்டப்படுவது எதுவோ அது அல்லாஹ்தான் என்பதே. இக்கொள்கைக்கு ஆரிபுகள் கொடுத்த பெயர்தான் வஹ்தத்துஸ்ஸுஹூத் என்பது. இந்த இரண்டும் உண்மையில் ஒன்றேதான். இது இலகுவாய் மனதில் பிடிபடுவதில்லை. மனிதன் புலனாட்சியில் கட்டுண்டவன், அவனுடைய புலன்கள்

உள்ளவரையிலும் ஏதோவெல்லாம் இருப்பதாய் அவன் காண்பதால் இருப்பவையாவும் அல்லாஹ்தான் என்று நம்புகிறான். இப்படி நம்பினாலும் நானும் அல்லாஹ்தான் என்று கூற உணர அவனால் முடிவதில்லை. இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. இக்காரணங்களை நீக்காவிடில் உண்மை உணரப்பட முடியாததாய்விடும், இக்காரணங்கள் மனித அறிவில் இலகுவாய்ப் பிடிபடக் கூடியவையாயும் இல்லை. ஆகவே தான் வஹ்தத்துஸ்ஸுஹூதை ஆரம்பமாய்க் கொண்டிருக்கிறது இஸ்லாம். இந்த முதல் வகுப்பில் பல பயிற்சி நெறிகளைக் கொண்டு மனிதன் தன் சொந்த நிலையைப் பெற முயல்கிறான். படிப்படியாய் உண்மையை நெருங்குகிறான். சில மனிதர்கள் மேலோட்டமாய் இஸ்லாத்தை நோக்கிவிட்டு இஸ்லாமும் இந்துக்களின் துவிதசித்தாந்தமும் ஒன்றுதான் என்று கூறலாம். அது தவறு. இன்றைய மெளலவிமார்களில் மிகப் பெரும் பாலார் கூடபபக்தியென்பது துவிதசித்தாந்தமேயென்றும் அதுவே இஸ்லாத்தின் கொள்கையென்றும் கூறுகிறார்கள். இது இஸ்லாத்தின் கொள்கையல்ல. இதுதான் இந்துக்களில் ஓர் சாராரின் கொள்கை.

மூ∴மீனின் கொள்கை அல்லாஹ் வையன்றி இல்லையென்பது. இக்கொள்கையை அனுபவத்தில் உணரச் செய்வதே அவனுடைய அமல்களின் (இபாதத்துக்களின்) நோக்கம். இம் மனிதரிடத்தில் இருமையோ ஒருமையோ கிடையாது. செயலில், ஆரம்ப மனிதனிடத்தில் ஒருமை பன்மை தென்படலாம். ஆனால் கொள்கையில் ஒருமை பன்மை கிடையாது. ஏன்? அல்லாஹ் மட்டும்தான் உண்டு என்றால் அவன் ஒருவன்தானே என்று அம் மனிதர் ஏமாற மாட்டார். ஒருவன் என்ற இலக்கத்தில் கட்டுண்ணாதவன் அல்லாஹ் என்பதை அவர் அறிவார். றப்பு ஒருவனே என்பதை அவரால் ஏற்க முடியும். ஏன்? றப்பு ஒன்றுக்கு அதிகமாய் இருக்கமுடியாதென்பதை அவர் அறிவார். அப்படியானால் அல்லாஹ் வேறு றப்பு வேறென்று கூறுகிறீர்களா? என்று என்னை நீங்கள் கேட்கலாம். இல்லை. றப்பு என்பது அல்லாஹ்வின் ஒரு மர்த்தபாவுக்கு இடப்பட்ட பெயர்ச் சொல். இச் சொல்லால் உணர்த்தப்படும் (றப்பை) இறைவனை மனித

அறிவு பிரத்தியட்சப் பிரமாணத்தினாலோ அனுமானப் பிரமாணத்தினாலோ ஓரளவு அறியமுடியும். பகுத்தறிவினால், முழுமையாய் இல்லாவிட்டாலும் ஓரளவாவது அறியமுடியும். அல்லாஹ் என்ற சொல்லால் சுட்டப்படும் நிலைமை இப்படியல்ல. இந்த நிலைமை அவனுடைய அறிவுக்கு மட்டும் சொந்தமானது. சிருட்டியறிவில் எவ்வகையிலும் அமையாது. அப்படியானாலும் இரண்டும் வேறு வேறுதானேயென்று உங்களறிவு கேட்கிறது. இரண்டோ ஒன்றோ கிடையாது. உள்ளது ஏகமானது. அதற்கு இலக்கமில்லை. அது அப்படியிருந்துகொண்டும் எவ்வித மாறுபாடும் கெட்டழிதலுமில்லாமலே அல்லாஹ்வாயும் றப்பாயும் அப்தாயும் இருக்கிறது. இதில் முன்பின் ஒருமை, பன்மை எதுவுமே கிடையாது. வேற்றுமை, ஒற்றுமை எதுவுமே கிடையாது. உள்ளது அது மட்டுமே. இதன் வியாபகமும் மனித அறிவில் அமையாது. மத்திபமும் (சென்டரும்) மனித அறிவில் அமையாது உள்ளது நிகழ்காலம் மட்டுமே என்பதை உயராத வரையில் இவ்வுண்மை பிடிபடாது.

இந்த மதிப்பீடுகளைக் கடந்த ஹக்கு அல்லது உஜூது ஜோடியற்றதாய், இணைதுணை, ஒப்பு, உவமையற்றதாய் அது மட்டுமே தனித்ததாய் இருக்கிறதென்பதை மனிதனால் தத்துவரீதியாய் நிரூபணம் செய்து காட்ட முடியும். ஒருசில பிரதியட்சப் பிரமாணத்தினாலும் நிரூபணம் செய்து காட்ட முடியும். ஆனால், ஹக்கை அனுமானத்தைக் கொண்டேயன்றி நிரூபிக்க முடியாது. ஹக்கு அல்லது உஜூது ஒன்றேயென்று கூறுவது பாஷைவழக்கேயன்றி இலக்கத்தில் மட்டுப்படுத்தப்பட்டதென்பது பொருளல்ல. இவ் விஷயத்தில் சைவ சித்தாந்தம், துவித சித்தாந்தம், விசிட்டாத்வைதம் போன்ற சகல கோட்பாடுகளையும் விட்டு இஸ்லாம் தனித்து நிற்கிறதென்பதைப் பல கண்ணோட்டங்களோடு நோக்கித் தெளிவுபெற வேண்டும்.

இன்ஸான் அல்லது மனிதன் என்னும்போது உயிரையும் உடலையும் ஒன்றுபடுத்தியே மனிதன் என்று கூறுகிறோம். இந்த மனிதன் உயிர் என்ற நோக்கில் அரூபியாயும் உடல் என்ற நோக்கில் ரூபியாயும் (பௌதீகமாயும்) இருக்கிறான். பௌதீகம்

என்பது புலனறிவினால் ஏற்பட்ட மருட்சியே, வெறும் ஸுறத் மட்டுமே, உடல் லாஹிறாயும் (தோற்றுவதாயும்) உயிர் பாதினாயும் (தோற்றாததாயும்) இருக்கும்போதும் இரண்டு நிலைகளையும் ஒன்றுபடுத்தியே மனிதன் என்று கூறுகிறோம். இம்மனிதனின் லாஹிறான பௌதீக உடலைப் பிரத்தியட்சப் பிரமாணத்தைக் கொண்டு நிரூபணம் செய்ய முடியும். தோற்றாமல் இருக்கும் உயிரை (பாதினை) அனுமானப் பிரமாணத்தைக் கொண்டு நிரூபணம் செய்யலாம். இதைப்போலவே இன்ஸான் என்பதற்குப் பதிலாய் றப்பு என்ற நாமத்தை எடுத்துக் கொண்டால், சர்வ ஆலங்களும் அவனுடைய பௌதீக உடல்தான் என்பதைப் பிரத்தியட்சமாய் (அறிவுக்கமைவாய்) நிரூபணம் செய்ய முடியும். றப்பு அவ்வுடலைவிட்டு வேறென்றில்லாமல் மறைந்து (பாதினாய்) இருக்கிறான் என்பதை அனுமானப் பிரமாணத்தினால் நிரூபிக்க முடியும். இவ்வகையில் இஸ்லாத்துக்குள்ள தனிச்சிறப்பு வேறெந்த மதத்துக்கும் கொள்கைக்கும் கிடைக்கவே கிடையாது. பௌதீகம் சூட்சுமம் என்பவையெல்லாம் ஒன்றைவிட்டொன்று வேறில்லாதவையென்பதையும், அவை புலன்களால் ஏற்பட்ட மயக்கம் (ஹுரூர்) என்பதையும் புரிந்துகொண்டால் நாம் காட்டிய உண்மையை மறுப்பதற்கு எவ்வித அவசியமும் இருக்காது.

பிற மதங்களும் பிற் கொள்கைகளும் இறைவனை அனுமானத்தினால் நிரூபிக்கலாமேயன்றிப் பிரத்தியட்சத்தைக் கொண்டு நிரூபிக்க முடியாதென்றே தீர்ப்புக்கட்டியிருக்கின்றன. இஸ்லாம் அவற்றையெல்லாம் உதறி வீசிவிட்டுப் பிரத்தியட்சத்தாலும் அனுமானத்தாலும் நிரூபிக்லாம் என்று விளக்குவதுமல்லாமல், நிலையாயுள்ள உஜூதையன்றி இல்லை, ஏகமானது (இரண்டில்லாத ஒன்று) என்பதையும் அவ்விரு பிரமாணங்களைக் கொண்டே நிரூபிக்கலாம் என்பதையும் தெளிவாய் விளக்கியிருக்கிறது. அது மட்டுமல்ல சொல்விளக்கத்தினால் மட்டுமல்லச் செயல் விளக்கத்தினாலும் நிரூபிக்கலாம் என்று விளக்கமளிக்கிறது. (ஐஸ்) பனிக்கட்டியையும் தண்ணீரையும் சிந்தனைக்கெடுத்தால் இதைப் புரிந்துகொள்ளலாம். இவ்வித பாக்கியம் பெற்ற உறுதியான, தெளிவான, இயற்கையான

இஸ்லாத்தின் கொள்கையை விளங்கித் தெளிவுபெற வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கட்டாய கடமை (பர்லு) ஆகும். இவ்விதம் ஈமானைப் புரிந்துகொண்டு செயற்பட்டாலேயன்றி வெற்றிபெற முடியாது. குர்ஆன் ஹதீஸுகளை மறுக்கும் அறிவுடன் செயல்படும் எந்த ஓர் அமலும் பிரயோசனம் தரவேதராது.

குர்ஆன்: 47:8

எவர்கள்(இவ்வேதத்தை) நிராகரிக்கிறார்களோ, அவர்களுக்குக் கேடுதான்; அவர்களுடைய அமல்களையெல்லாம் பயனற்றதாக்கிவிடுவான்.

குர்ஆன்: 47:9

ஏனெனில் அல்லாஹ் இறக்கிவைத்ததை மெய்யாகவே அவர்கள் வெறுத்து (நிராகரித்து) விட்டார்கள். ஆதலால் அவர்களுடைய கிரிகை (அமல்)களையெல்லாம் (அல்லாஹ்) அழித்து விடுவான்.

குர்ஆன்: 18:105

இத்தகையோர் தாம் தங்களிறைவனின் வசனங்களையும், அவனைச் சந்திப்போம் என்பதையும் நிராகரித்துவிட்டவர்கள். அவர்களுடைய அமல்கள் யாவும் அழிந்துவிட்டன; அவர்களுக்காக மறுமை நாளில் எடைக்கோலையும் நாம் நாட்டமாட்டோம்.

இன்றைய உலகமக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விஞ்ஞானத்தையும் இஸ்லாத்தையும் ஒப்பிட்டு நோக்கினால் இரண்டுக்குமுள்ள ஒரு ஒற்றுமையும் ஒரு முரண்பாடும் தென்படுகிறது. விஞ்ஞானம் ஈர்ப்புக் கொள்கை, சார்புக்கொள்கைகளை அடிப்படையாய்க் கொண்டே பௌதீக உலகில் அபார சாதனைகளைச் சாதித்துக் கொண்டிருக்கிறது. உலக இயக்கத்துக்குரிய உண்மை சார்புக் கொள்கையோடுள்ள உண்மைதான் என்பதை இஸ்லாம் அதன் ஆரம்ப ஷரீயத்திலேயே ஏற்றுக்கொண்டிருக்கிறது. சார்புக்கொள்கை அடிப்படையில்தான் ஏவல், விலகல்கள் நமக்களிக்கப்பட்டிருக்கின்றன. கலிமாவின் கருத்துப் பிரமாணமாக இருப்பது அல்லாஹ்தான் (காட்சியளிக்கும் பௌதீகமும் அல்லாஹ்தான்) என்று "தலாலத் துன்னஸ்" ஸை எடுத்துக் கொண்ட ஆரம்ப மூ∴மீன் (ஸுஹுதுக் கொள்கையிலுள்ளவர்) சார்புக் கொள்கையை முற்றிலும் ஏற்றுக்

கொண்டே வாழ்கிறார். இவர் ஒரு சிருட்டிதான். இந்தச் சிருட்டியான சார்புக்கொள்கையை ஏற்றுக்கொண்ட மனிதன் தன் மதக் கடமைகளை முறைப்படி கையாளும்போது அவருடைய அறிவில் ஒரு மாற்றம் ஏற்படுகிறது. இந்த மாற்றம் இறுதிநிலையில் சார்புக் கொள்கை "ஹுரூர்" வெறும் மயக்கு என்பதை அம்மனிதர் அறிகிறார். சார்புக்கொள்கை சிருட்டியுடையதாய் இருப்பதால் இதற்கு மாறானதே தௌஹீதின் ஹக்கு (உண்மை) என்பதை அறிகிறார். இறை செயல் யாவும் மனிதனால் வகுக்கப்பட்ட சர்வ கொள்கைகள் சட்டங்கள் யாவையும் மீறியதென்றும் காரணகாரியப் பொருத்தத்துக்கு அப்பாற்பட்டதென்றும் அறிகிறார். இந்த அறிவை அவருக்கு ஊட்டியது "லாஇலாஹ" என்ற வசனம்தான். இப்போது தெளிவுபடச் செய்தது "இல்லல்லாஹ்" என்ற வசனம்தான்.

இதன் சாரம் என்னவென்றால் இஸ்லாம் சார்புக் கொள்கையென்ற விதையில் முளைத்து மரமாகிக் கனிகொடுக்கும் நிலைமையில் (ஹகீகத்தில்) விதையும் மரமும் பழமும் வெறும் மயக்கே என்று கண்டு அதன் குறிக்கோளான இறை ஐக்கியத்தில் மூழ்கவைக்கிறது. சார்புக்கொள்கையில் ஊறிய மனிதனை (மனிதனின் அறிவை) இறை அறிவில் அழித்துவிடுகிறது. இதுதான் தௌஹீது என்பது. ஞானம் என்பது, இவ்வித அறிவையும் சார்புக் கொள்கையின் அறிவையும் ஒன்றுபடுத்தி மனிதனை மனிதனாய் வாழவைப்பதே கலிமாவின் நோக்கம். இதை விளங்காமல் கூறியவன் மனித அறிவின் கீழ் நிலையிலுள்ளவன். இதை விளங்கி ஏற்றுக்கொண்டவன் உண்மையான மூ.்மீனாய் முஸ்லீமாய் இருக்கிறார். இவரும் தெளிவில்லாதவர்தான். ஏன்? இவர் ஒரு சிருட்டியாய் இருக்கிறார். இறைவனோ சிருட்டிக்கு முரணாய் இருப்பதால் தெளிவுபட்ட அறிவுள்ளவன் இறைவன் மட்டுமே. சிருட்டி சிருட்டிகர்த்தாவாகிவிட்டாரென்பது கருத்தல்ல. இது மருட்சி. இதிலிருந்து நாம் அறிவது என்னவென்றால் சர்வ மனிதராலும், சர்வ மதங்களாலும் தெளிவாய் விளக்கப்படாத ஓர் உயர் ஸ்தானத்தை மனிதன் தன் சொந்த அனுபவத்தில் கண்டறிய வழிவகுத்துக் கொடுத்தது லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமா தான். இந்த அறிவை ஈமானை, விசுவாத்தை அடிப்படையாய்க்

கொண்டு முளைத்தது இஸ்லாம் மட்டும்தான். இஸ்லாத்தின் பூரணத்தன்மைக்கு இந்த ஓர் ஆதாரம் மட்டுமே போதுமானது. இந்தப் பூரணத்தன்மையைப் பெற்றுக்கொள்வதற்குரிய பயிற்சி நெறிகள் அமல்கள் என்பவை. ஆரம்பமும் முடிவுமாயுள்ள ஒரே வேதம் இஸ்லாம் மட்டுமே. அதன் கொள்கை ஏகத்துவக் கொள்கைதான். இக்கொள்கையின் அணுகுமுறைகளான செயல்கள் தான் காலாகாலம் மாற்றப்பட்டிருக்கின்றன.

உள்ளது உஜூது மட்டுமேயென்றால் அதற்குரிய குணமான அறிவு ஒன்றே ஒன்றுதான். குணமும் குணியும் ஒன்றே என்பதால் அறிவைக் குணியென்றோ குணமென்றோ நாம் வசதிக்கேற்றபடி கூறினாலும் உள்ளது ஏகமாயுள்ளது மட்டுமே. இந்த அறிவின் (மர்த்தபா) நிலைமைகளைச் சிருட்டியால் அறியவே முடியாது. கல்வியறிவு, தத்துவவிளக்கம் எவையும் இந்த விவரத்தில் மையித்துக்களேதான். அனுபவம் மட்டும்தான் இதை ஓரளவு உணர்த்தலாம். அந்த அனுபவம் அல்லாஹ்வுக்குடையதேயன்றிச் சிருட்டிக்குடையதல்ல. எமக்குள்ள அனுமான அறிவின்படி இறை அறிவை எட்டுப் படித்தரங்களாய் வகுக்கலாம். இந்த முழு அறிவின் பெயர் "விஜ்தான்". இதில் ஓரு படித்தரம் "நூர்". இதைப் பூரணமனிதனால் உணர அறிய முடியும். இது இஸ்லாத்தின் நடுப்பகுதிதான். நம் அறிவு வட்டம் என்பதன் இறுதி எல்லை இந்த நூர்தான். ஆரம்பமும் இதுவே. இன்னும் தாழ்விலுள்ளதின் பெயர் அகில். இன்னும் தாழ்விலுள்ளது நுண்ணறிவு அல்லது விவேகம். இதுதான் பகுத்தறிவு அனுமான அறிவு என்பது. விஞ்ஞானமும் இஸ்லாமும் ஆரம்பிக்கும் இடம் இதுதான். இதன்கீழ் உள்ளது வஹ்மு என்ற பேதபுத்தி. இதில் விலங்கினமும் மனித, ஜின் இனமும் கூட்டானவை. இதிலும் தாழ்பதவியுடையது, தாவரம், ஊர்வன, மண், கல் முதலாம் தாதுப்பொருள்களுக்குரியது. இதை இயல்பூக்கம் என்றும் கூறலாம். இதிலும் இரு பிரிவுண்டு. சிருட்டி எந்த நிலையில் உருவாக்கப்பட்டதோ அது விஜ்தான் என்ற அறிவின் ஏதோ ஓரு நிலைமையாகவே இருக்கும். இன்ஸான் இந்த எட்டுநிலைகளையும் ஒருங்கே பெற்றுக்கொண்ட பிரதிநிதியாய் (கலீபாவாய்) இருக்கிறான். இவன் விரும்பும் எப்படித்தரத்திலும்

நிலைப்படலாம். ஒவ்வொரு படித்தரத்திலும் உடன்பாடும் எதிர்மறையும் உண்டு. பூரணத்தன்மையில் (விஜ்தானில்) எதிர்மறை கிடைக்கவே கிடையாது. இந்த நிலைமையை ஒவ்வொருவரும் மறந்து விட்டோம். இம்மறதி எமது எதிரிடை (ஷைத்தான் என்று கூறுவோம்) இம்மறதியை நீக்கி எம் சுயநிலையில் தரிப்படுத்துவதற்குரியதுதான் கலிமா என்ற புரட்சி மந்திரமும் இஸ்லாம் என்ற பாதையுமாகும். ஊன்றித் தெளிந்து வெற்றிபெறுக.

இஸ்லாத்தின் கொள்கை துவித சித்தாந்தமா?

அல்லாஹ் றசூலினால் ஒப்புக்கொள்ளப்பட்ட தீனுல் இஸ்லாத்தின் கொள்கை துவிதமா? (ஷிர்க்கா?) அல்லது அத்வைதமா? (தௌஹீதா?) என்ற கேள்வியை வைத்துக்கொண்டு பல அறிஞர்கள் பலவாறாக ஆராய்வு செய்து பெரும்பாலார் இஸ்லாம் துவித சித்தாந்தமேயென்று கூறுகிறார்கள். விவேகானந்தா போன்றவர்கள், இஸ்லாத்தின் உடலும் வேதாந்த (ஞான) மூளையும் கொண்ட மதமே மனிதனுக்கு வழிகாட்டக் கூடியதென்றும் இஸ்லாம் துவிதக் கோட்பாடுடையதேயென்றும் கூறியுள்ளார். இக்கூற்று உண்மைக்கு முற்றிலும்முரணானதாகும். இவ்விதம் கூறியவர்கள் அறிவு குறைந்தவர்களென்று நாம் கூறமுடியாது. இவர்கள் இஸ்லாத்தின் ஷரீயத் சார்பாய் எழுதப்பட்ட சாதாரண நூல்களை அடிப்படையாய் வைத்து ஆராய்ந்துதான் இப்படிக் கூறியிருக்கிறார்கள். ஆதலால் நான் இவ்வகையினரைக் குறைகூறாமல் இவர்களால் ஆராயப்பட்ட நூற்களை எழுதிய மக்களையே குறைகாணுகிறேன். வேதாந்த (ஞான) மூளையும் இஸ்லாமிய உடலும் கொண்ட வேதம் வழிகாட்டுமென்று கூறிய இந்த விவேகானந்தாவுக்கு அவர் குறிப்பிட்டுக் கூறும் வேதம் இஸ்லாம்தான் என்று விளக்கிக்காட்டி விவரம் தரக்கூடிய ஓர் மூ.்.மீன், முஸ்லீம் இல்லாதிருந்தது வியப்புக்குரிய விஷயம்தான். முஸ்லீம்களின் மேலோட்டமான மத நம்பிக்கையை இவ்விஷயம் எடுத்துக்காட்டுகிறது.

இன்னும் சிலர் இஸ்லாம் என்பது ஓர் இனவாதக்கட்சியேயன்றி வழிகாட்டக்கூடிய மதமல்ல என்றுகூடக் கூறியுள்ளார்கள். இவ்வகையான மருட்சி வாதங்களுக்கெல்லாம் காரணம், இஸ்லாமிய சமூகப் பெரிய புள்ளிகளில் பலர், இஸ்லாத்தைத் தெளிவாய் ஆராய்ந்து விளங்கித் தெளிவுபெறாமல், தங்களுடைய நூற் கேள்வியறிவுகளுக்கமைவாய் இஸ்லாத்தை

விளக்க முற்பட்டமைதான். இங்கர்சால், வில்லியம் மூர் போன்ற சிறந்த சிந்தனையாளர்கள் பலர் இஸ்லாத்தின் ஜென்மவிரோதிகளாய் மாற்றமடைந்ததும், இஸ்லாத்தில் வெளிவந்த கொள்கைவிளக்க நூற்களின் விளைவுதான். என்னறிவுக்கெட்டியவரையில் நான் ஆராய்ந்தபோது மக்களுக்கு வழிகாட்டக்கூடிய வேதாந்த (ஞான) மூளையும் இஸ்லாமிய உடலும் கொண்ட பூரண மதம் (விவேகானந்தா ஆசைப்பட்ட மதம்) உலக மக்களுக்கு எக்காலமும் பொருத்தமான மதம் தீனுல் இஸ்லாம்தான் என்பதை கண்டேன். வேதம்+அந்தம் = வேதாந்தம். (ஞானம்) வேதத்தின் அந்தம் புர்க்கான்தான். ஞானத்தின் உறைவிடம் அந்தப் புர்க்கான்தான். புர்க்கானின் (வேதத்தின்) அடிப்படை தௌஹீதுக் கலிமாவென்ற ஏகத்துவ மந்திரம்தானே! இதில் துவிதமோ திரித்துவமோ கிடைக்கவே கிடையாது. இஸ்லாம் சுத்தமான ஏகத்துவ (அத்வைத)க் கொள்கையுடையது. துவிதக் கொள்கையுடையதல்ல.

குர்ஆன்: 16:64

அன்றி (நபியே!) இவர்கள் எவ்விஷயத்தில் தர்க்கித்துக் கொண்டார்களோ அதனை நீர் தெளிவாக்குவதற்காகவே இவ் வேதத்தை உம்மீது நாம் இறக்கிவைத்தோம். அன்றி விசுவாசமுடைய மக்களுக்கு (இது) நேரான வழியாகவும் அருளாகவும் இருக்கிறது. (எவ்வித விவாதத்துக்கும் உண்மையான முடிவைக் குர்ஆனிலிருந்து பெறலாம் என்பது நிச்சயம்)

ஒருசில நல்லடியார்களான (சூபிகள்) அறிஞர்கள் இதை ஓரளவு விளக்கிக் காட்டியுள்ளார்கள். இவ்வித கல்வி பெரும்பாலான மக்களால் அறியப்படாத ஒன்றாயிருப்பதால் சிற்சில சிறு உதாரணங்கள்வாயிலாய் இதை ஓரளவு விளக்கவிரும்புகிறேன்.

உலக மக்களில் எவருக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளம் (மனம்) அல்லது அறிவு இருப்பதாய் நாம் அறியவில்லை. உள்ளம், மனம், அறிவு என்பவை சூட்சுமமானவையென்பதும் நாமறிந்த விஷயம்தான். என் புலன்கள் வாயிலாய் ஓர் அழகியைக்

கண்டபோது அவளை விபச்சாரம் செய்ய விரும்புகிறேன். அதேவேளை இச்செயலில் ஈடுபட்டால் இன்ன இன்ன நஷ்டம் கஷ்டங்கள் ஏற்படலாம் என்று என்னறிவு ஆலோசனை கூறுகிறது. ஆதலால் நான் அந்தத் தீய காரியத்திலிருந்தும் விலகிக்கொள்ள வேண்டும் என்றும் என் மனம் (அறிவு) வற்புறுத்துகிறது. ஆகவே, எனக்கேற்பட்ட தவறான ஆசையிலிருந்தும் விடுபட, ஆசையுடன் போராடுகிறேன். வெற்றியும் பெறுகிறேன். சிலவேளை தோல்வியும் அடைகிறேன். இவ்வளவையும் வைத்துக்கொண்டே சிந்தனை செய்வோம்.

எனக்கு ஆசையூட்டிய மனம், அல்லது அறிவு அல்லது நான் என்பது யார்? இந்த ஆசை தீமைக்கு வழிகாட்டியதால் இந்த மனதுக்கு அல்லது அறிவுக்கு அல்லது எனக்கு ஷைத்தான் (கன்னாஸ்) என்று பெயர் வைப்போம். இந்தத் தீய ஆசையால் வர இருந்த கஷ்ட நஷ்டங்களை எடுத்துக்காட்டி அவ்வாசையை விட்டுவிடும்படி ஆலோசனை கூறிய மனத்தை அல்லது அறிவை அல்லது என்னை யார் என்றழைப்போம்? இவருக்கு மனச்சாட்சி (லவ்வாமா) அல்லது இறை வேதம் (அல்லது றப்பு) என்று பெயர் கூறுவோம். இந்தக் கூற்று சட்டத்தை அடிப்படையாய்க் கொண்டு கணிக்கப்பட்டதுதான். இப்போது மனச்சாட்சிப்படி அல்லது றப்பின் வேத ஆலோசனைப்படி அத்தீய விருப்பத்திலிருந்து விடுபட்ட மனம். அல்லது அறிவு. அல்லது நான் என்பது யார்? இவருக்கு இறை ஏவலை ஏற்றுக்கொண்ட இன்ஸான் என்று பெயர் கூறுவோம். இதுவும் சட்ட அடிப்படையின் தீர்ப்புத்தான்.

இப்போது சிந்தனை செய்துபாருங்கள். எனக்குள்ளது ஒரு மனம், ஒரேயோர் அறிவு, ஒரேயோரு நான் மட்டும்தான். இம்மூன்று நிலைமைகளையும் ஏகமாய்ப் பெற்றிருந்த அறிவு, அல்லது மனம், அல்லது நான் ஒன்றேயொன்றுதான். எனக்கு நான் ஒரு கண்ணோட்டத்தில் எதிரியான ஷைத்தானாகவும் இன்னொரு கண்ணோட்டத்தில் ஆலோசனை தந்த வேதமாய் அல்லது றப்பாயும் இன்னொரு கண்ணோட்டத்தில் இறை ஏவலை ஏற்றுத் தீவினையிலிருந்து விடுபட்ட முஸ்லீமாயும் மூ∴மீனாயும்

தென்பட்டேன். என்னிடம் மூவர் கிடையவே கிடையாது. என்னிடமில்லாதது என் அறிவில், மனதில்வர, இருக்க முடியாது. மனத்தில் நடந்த ஏவல், விலகல், யுத்தம், சமாதானம், வெற்றி, தோல்வி யாவும் என் செயலேயன்றி இல்லை. இதை நீங்கள் மறுக்க முடியுமா? இவ்வித இயக்கமற்ற மனமுடைய அறிவுடைய ஒருவரை உங்களால் காட்டமுடியுமா? இந்த மனதில் அல்லது அறிவில் நிகழ்ந்தவை ஒன்றுக்கொன்று நேர் விரோதமாய், முரணாய் இருந்து, பல மனமும் பல அறிவும் போல் தென்பட்டாலும், உள்ளதாய் இருந்த உஜூது மனம் அல்லது அறிவு மட்டுமே என்பதில் எவருக்கும் சந்தேகமில்லை. மனதில் இடம்பெற்ற இந்த நிகழ்சியில், ஓரறிவை இன்னோரறிவு எதிர்த்த போதும் அவ்வறிவு வேறுவேறென்ற துவித உணர்வோடு இயங்கவேயில்லை. உள்ளதாயிருந்த ஒரே மனம், ஒரே அறிவுதான், இயக்கத்தின் போது பலபடித்தரங்களில் பலதினுசாய் வேலை செய்ததென்பதை பகுத்தறிவு மறுக்க முடியாது.

நாம் கூறிய இச்சிறு விவரம் சூட்சுமமானதுதான். இது எங்களுடைய "பாதின்" மறைந்த பகுதியாகும். அறிவினால் (அனுமான வாயிலாய்) இதை நாம் அறிந்துகொண்டோம். எமது உடலோ சூட்சுமமான மனதுக்கு எதிரிடையான பௌதீகம். இன்ஸான் இந்தப் பௌதீகம் (லாஹிர்), சூட்சும் (பாதின்) ஆகிய இரு தன்மைகளையும் வேறுபாடின்றி ஒருங்கே பெற்றுக்கொண்டவன். இவனுக்கு வழிகாட்டும் மதம் (வேதம்) இவ்விரு தன்மைகளையும் ஒன்றிணைத்து வழிகாட்டாவிட்டால் அது மதமென்றோ வேதமென்றோ பெயர் பெறாது. ஆதலால்தான் இறைவன் மனம் அல்லது அறிவு என்ற சூட்சுமத்தையும் உடல் என்ற பௌதீகத்தையும் ஒன்றுபடுத்தியே வேதவசனங்களை அருளியிருக்கிறான். அமல்களை ஒழுங்கு படுத்தியிருக்கிறான். உடலின் கை, முகம் முதலாம் அங்கங்களைக் கழுவிச் சுத்தம்செய்வது பௌதீகத் தொடர்புடையது பரிசுத்தமாகவே இப்படிச் செய்கிறேன் என்று நம்புவது (நிய்யத்து வைப்பது) சூட்சுமமான மனதின் அல்லது அறிவின் செயலாய் இருக்கிறது. இப்படிப் பௌதீகத்தையும் சூட்சுமத்தையும் ஒன்று சேர்த்து இறைவனால் உருவாக்கப்பட்ட ஓர் இயற்கை வழிதான் இஸ்லாம் என்பது.

இதன் உடல் வெளி அமல்களாயும் இதன் உயிர் ஈமான் என்ற அறிவாயுமிருக்கிறது.

நாம் முன்பு கூறிய மனோ நிகழ்சியில் ஷைத்தான், றப்பு, முஸ்லீம் அல்லது மூ.ஃமீன் என்ற அப்து ஆகிய மூன்று நிலைமைகளுக்கும் ஆதாரமாய் இருந்ததும் வெவ்வேறு பெயர்களில் காட்சியளித்ததும் நான் என்ற அறிவு அல்லது மனமே என்பதிலும் அது ஒன்றேயென்பதிலும் (ஏகம் என்பதிலும்) எமது அறிவு குழப்பமடைவதில்லை. ஆனால்,

உலகைப் படைத்த இறைவனும் அவனுக்கு (அல்லது எமக்கு) விரோதியாய்த் தென்பட்ட ஷைத்தானும் ஒரே பொருளின் (உஜூதின்) இரு பண்புகளே என்பதை எம்மறிவு ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. தொழுகையில் ஈடுபாடு கொள்ளும் அப்துவான நானும் என் முன்னிலையிலுள்ள (கற்பனை) இறைவனும் வேறுவேறு என்றே நம்பிவிடுகிறோம். மனதில் வெளியான உடன்பாடும் எதிர்மறையும் ஒரே உஜூதின் இரு நிலைமை என்பதை உறுதியாய் அறிந்து கொண்ட நாம் (சூட்சுமத்தை ஒப்புக்கொண்ட நாம்) பௌதீக விஷயத்தில் (லாஹிறில்) இவ்வுண்மையை ஒப்புக்கொள்வதில்லை. இது எம்முடைய மருட்சியென்ற ஹுரூர் ஆகவும் வஹ்மு என்ற பேதபுத்தியாகவும் இருக்கிறது. இதற்குரிய மிகமுக்கிய காரணங்கள், புலனாட்சியில் கட்டுண்டு காலத்தாலும், இடத்தாலும் வேறுபட்டிருப்பதாய் மயக்கமடைந்திருப்பதே.

தீனுல் இஸ்லாம் அதன் ஆரம்பத்திலேயே இந்த மூட புத்தியை, மருட்சியைக் கலிமத்துத்தையிபாவைக் கொண்டு நீக்கி விடுகிறது. லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவே இஸ்லாத்தின், ஈமானின் அடிப்படையென்பதை நீங்களறிவீர்கள். அல்லாஹ்வையன்றி எதுவும் இல்லையென்பது அதன் பொருள். என் மனதில் வெளியான ஷைத்தானோ றப்போ அப்துவோ என்னையன்றி வேறல்ல என்று கூறுவது போல, அப்தும் றப்பும் இல்லை அல்லாஹ்வாகிய என்னையன்றியென்றுதான் கலிமா விவரம் தருகிறது. என்னையன்றி என்ற வசனம் கலிமாவில்

தொக்கியிருப்பதை, ஞானத்தின் வாசல்திறந்த ஆரிபுகள் அறிவார் கள். பாமரமக்களறியமாட்டார்கள்.

குர்ஆன்: 20:14

''நிச்சயமாக நான்தான் அல்லாஹ்! என்னைத் தவிர வேறு இலாஹு இல்லை; எனக்கே, நீர் இபாதத்துச் செய்யும். என்னைத் தியானித்துக் கொண்டிருக்கும் பொருட்டுத் தொழுகையைக் கடைப்பிடியும்.

இவ்வாயத்தைத் தெளிவாய்ச் சிந்தனை செய்தால் மனிதன் நாவினால் கலிமாவைக் கூறுவது ஒலிப்பதிவு நாடாவின் வேலை தான். கலிமாவை உண்மையாய்க் கூறுபவன் இறைவன் மட்டும் தான். ஆகையால்தான் இறைவனுக்கு மூ.ீமீன் (விசுவாசி) என்று ஒரு பெயருண்டு.

முஹ்யித்தீன் இப்னு அறபி (றலி) போன்ற பல பெரியார்கள் இவ்வுண்மையை உணர்த்திய போதெல்லாம், இது சுத்தமான் நாத்திகவாதம் என்றுகூடச் சில லேபல் பட்டதாரிகள் கூறியதுண்டு. ஒரு முஸ்லீம் நாவினால்கூறி அதன் கருத்தை அறியும்போது அவரையறியாமலே அவருடைய கல்பில் ஒரு கேள்வியும், பதிலைக் கண்டுபிடிக்கும் சிந்தனையும்தான் முதல் முதலில் உருவாகின்றன. அல்லாஹ்வையன்றி ஒன்றுமேயில்லையென்றால் நான் யார்? என்பது தான் அந்தக் கேள்வி. இதற்கு விடை கண்டறிவதுதான் ஈமான், விசுவாசம் என்பது. இதற்குரிய விடை இறைவன் தன் சொந்த அனுபவத்தில் கண்டறிபவனாய் இருந்துகொண்டிருக்கும் அவனுடைய சொந்த அனுபவமே. நான் மறைபொருளான புதையலாய் இருந்தேன். அறியப்பட நாடினேன் என்ற ஹதீஸை இங்கே நினைவு கொள்ளவேண்டும்.

ஹதீஸ்:

எவருடைய இறுதிமொழி லாஇலாஹ இல்லல்லாஹ் என்று அமைகிறதோ அவர் சுவனம் செல்வார். என்று றசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : முஆதிப்னு ஜபல் (றலி)

ஆதாரம் : அபூதாவூத்

குர்ஆன்: 2:21

ஓ மனிதர்களே! உங்களையும் உங்கள் முன்னோரையும் படைத்த உங்கள் இறைவனை இபாதத்துச் செய்யுங்கள்; நிச்சயமாய்க் கார்மானம் பெறலாம்.

இவ்வாயத்தில் இபாதத் என்ற சொல் பாவிக்கப்படுகிறது. இபாதத் என்றால் வணக்கம் என்றே பெரும்பாலான தப்ஸீர்கள் விளக்கம் தருகின்றன. ஆனால் அப்பாஸ் (றலி) அவர்கள், குர்ஆனில் இபாதத்தென்ற சொல் ஒருமைப்படுத்தல் (ஏகமாக்கல்) என்ற கருத்திலேயே பாவிக்கப்பட்டுள்ளதென்று கூறுகிறார்கள். ஷிர்க் கென்ற இணையேற்படுத்தல் இபாதத்தாகாதாகையாலும் எல்லா இபாதத்துக்களுக்கும் ஆணிவேர் தௌஹீதாயிருப்பதாலும்தான் இபாதத்தென்ற சொல்லுக்கு ஏகமாக்கல், ஒருமைப்படுத்தல் என்று கூறியிருக்கிறார்கள். ஒரு மூ.்மீன் இபாதத் செய்கிறாரென்றால் ஒருமைப் படுத்துகிறார் என்பது பொருளேயன்றி இருமை (துவித) படுத்துகிறார் என்பது பொருளல்ல.

ஓரு முஸ்லீம் 1ஆம் பர்லான, கலிமாவை வாயினால் கூறுவதுடன் 2ஆம் பர்லான விளங்கியறிவதிலும் 3ஆம் பர்லான கல்பில் பதிப்பதிலும் ஈடுபாடுகொள்கிறார். இது அவருடைய கொள்கை விளக்கமாகும். இது மனதின், அறிவின் செயல்தான். சூட்சுமம்தான். இதன்பின் அந்த முஸ்லீம் கல்பில் பதிந்த உண்மையை நழுவ விடாமல் பாதுகாப்பதற்காகவே 4ஆம் பர்லாக தொழுகை, திக்கிர் முதலாம் அமல்களில் ஈடுபாடுகொள்கிறார். இவர் ஓர் ஆரம்ப மூ.்மீனாயும் முஸ்லீமாயும் இருக்கிறார். இவர் கலிமாவைக் கூறி விளங்குவதற்கு முன் அல்லாஹ் வேறு, சிருட்டி அல்லாஹ் அல்லாத வேறு என்று நம்பியிருந்தவர். துவிதத்தில் நிலைப்பட்டிருந்தவர். இவர் தன் மூடபுத்தியினால் கொண்டிருந்த விசுவாசத்தை முறித்துத்தான் கலிமாவைக் கொண்டு முஸ்லீமாய் மூ.்மீனாய் ஏற்கப்பட்டிருக்கிறார்.இவருடைய உள்ளத்தில் ஒன்றுக்கொன்று முரணான விஷயங்கள் இடம்பெற்ற போதும் அவையாவும் ஒரே மனதின், ஒரே அறிவின் செயலேயென்று அறிந்திருந்ததுபோல, சர்வ உலகங்களையும் அவற்றின்

வேறுபாடுகளையும் செயல்களையும் இறைவனின் செயலேயென்று காணுகிறார். சூட்சும உலகான உள்ளத்தின் செயல்யாவும் ஒரே ஆத்துமாவின் செயலே என்று கண்ட அவர் வல்லாஹுஅலாகுல்லிஷையின்கதீர் என்ற வேதவசனம் உண்மையென்று அறிகிறார். மனதில் ஏவல் விலகல், (அதாலத்) நீதி நிர்வாகம் நடைபெற்றதுபோல பௌதீக உலகிலும் ஏவல் விலகல், அதாலத் என்ற நீதி நிர்வாகம் நடப்பதையும் யாவுக்கும் உஜுதே மூலகாரணம் என்பதையும் அறிகிறார். இவரிடம் ஒருமை, பன்மை, துவிதம், திரித்துவம் முதலாம் சகல கொள்கைகளும் கலிமாவைக்கொண்டு பறிக்கப்பட்ட பின்புதான் இவர் முஸ்லீமாய் மு.ீனாய் ஏற்றுக்கொள்ளப்பட்டார். இவரிடம் துவிதசித்தாந்தம் கிடைக்கவே கிடையாது. அல்லாஹ் வையன்றிப் பிறிதொன்றில்லையென்றறிந்த ஒருவரிடம் துவிதம் திரித்துவம் எப்படி நுழையும்?

அப்படியானால் ஹுர்புல்பராயிலி என்று கூறப்படுகிற ஷரீயத்தின் பாதை பக்திமார்க்கமல்லவென்று கூறுகிறீர்களா? என்று நீங்கள் என்னை வினவலாம். குர்ஆன் ஹதீஸுகளில் பக்தியைப் பற்றி எவ்வளவோ கூறப்பட்டுள்ளதே! என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். மிக நீண்டகாலத்துக்கு முன்பே மூடப்பட்ட ஓர் உண்மையை இலகுவாய் விளக்கமுடியாதுதான். ஆயினும் ஓரளவு விளக்குவோம். கலிமாவைக் கூறி அதை விளங்கிக்கொண்ட மனிதாிடத்தில் பக்தியென்பதொன்று கிடையாது. இந்தப் பக்தியென்பது (இறைவனோடு அன்புகொள்ளுதல்) அறிவு தெளிவடைந்து உறுதி பெறாததால் ஏற்பட்ட ஒரு மயக்காகும். றசூல் (ஸல்) அவர்கள் சுமார் 12 வருடங்கள் அரும்பாடுபட்டும் ஒருசிலபேர்களைத் தவிர மற்றொரு றசூல் (ஸல்) அவர்களுடைய கொள்கை விளக்கத்தைச் சரியாய்ப் புாிந்துகொள்ளவில்லை. இறுதியில் இறை ஏவலோடு சுமார் 12 வருடங்களின் பின்புதான் தொழுகையைக் கொண்டுவந்தார்கள். இதைத்தான் பெரும்பாலார் பக்தி மார்க்கம் என்று கூறுகிறார்கள். இப்படி அறிவு குறைந்த மக்கள் கூறுவதில் எமக்கொன்றும் ஆட்சேபணை கிடையாது. ஆனால் ஷரீயத்தில் விதிக்கப்பட்ட ஹுர்புல்பராயிலி (பர்லான

அமல்களைக் கொண்டு இறைவனை நெருங்கும் பாதை) என்பது பக்தி என்ற பொருளுடையதல்ல. நெருங்குவதற்குரிய ஒழுங்கு, ஒழுக்கம், நடைமுறை, அணுகுமுறையென்பது அதன் பொருளேயன்றிப் பிற மதவாதிகள் கூறுவதுபோல் அன்பு, ஆசையென்ற பொருளுடையதல்ல.

பக்தியென்ற அன்பு, ஆசை பிறக்க இருபொருட்கள் அவசியம். இஸ்லாம் அதன் அடிப்படை மூலமந்திரத்தைக் கொண்டு உள்ளது. இரண்டில்லாத ஒன்றேயென்று தீர்ப்புக்கட்டியிருக்கிறது. இரு பொருள் இல்லாதபோது பக்தி (அன்பு, ஆசை) இல்லாததாய் விட்டது. நப்ஸு அம்மாறா ஆட்டம் கண்டுவிட்டது. ஆயினும் இது இலகுவாய் நீங்கமுடியாததாய் இருப்பதால் ஷரீயத் இந்த நிலைமையில் ஆரம்பம் செய்கிறது. ஆதலால் இஸ்லாத்தில் பிறமத மக்களின் பக்தி கிடையாது. எமது மருண்ட அறிவைத் தெளிவுபடுத்தி உறுதியடையச் செய்வதற்காகக் கையாளும் முறைகளை அடிப்படையாய்க் கொண்டுதான், நாம் விளங்கிக்கொள்ளாமல் பக்தியென்று கூறுகிறோம். பக்தியென்பது துவித சித்தாந்தமேயன்றி, ஏகத்துவக் கொள்கையைக் கொண்ட இஸ்லாத்திலுள்ளதல்ல. கலிமாவை உணராத ஒரு காபீர் அல்லது முஸ்ரீக் அனாநிய்யத்துடையவனாய் (அல்லாஹ்வுடன் நானும் உண்டு என்ற நம்பிக்கையுடையவனாய்) இருக்கிறான். இவனுடைய நம்பிக்கை வெறும் கற்பனையால் உருவான பாதில் பொய்யாய் (ஷிர்க்காய்) இருக்கிறது. கலிமாவைக் கூறி உணர்ந்த ஒரு முஸ்லீம், மூ.்மீன் உள்ளது ஒரேயொரு நான் என்றும், அந்த நான் அல்லாஹ்வினால் உணரப்படும் உணர்வேயென்றும் உணர்கிறார். தான் அல்லாஹ்வுடன் கூட்டாய், இணையாய் ஜோடியாய் இல்லாதிருப்பதால் தன்னை அல்லாஹ்வை விட்டும் வேறொரு நானாகக் கருதுவது "ஷிர்க்" என்றும் இது மன்னிக்கப்படாத பாவம் என்றும் காணுகிறார்.

இந்த முஸ்லீம், மூ.்மீன் கையாளும் அமல்கள் யாவும், தன்னிடம் குடிகொண்டுள்ள அனாநிய்யத்தை அழித்து (ஷிர்க்கை எதிர்த்து) இறைவனால் உணரப்படும் நான் மட்டுமே தன்னில்

நிலை கொள்ள உதவி செய்கின்றன. ஒரு மூ.மீன் முஸ்லீம் பர்லான நபிலான அமல்களால் பெறும் பயன் அனாநிய்யத்தை அழிப்பதே. இம்முயற்சி காலக்கிரமத்தில் விதிக்கப்பட்ட பர்லு, நபில் போன்ற அமல்கள் யாவும் அனாநிய்யத்தை அழிப்பதற்காகவே தரப்பட்டுள்ளன. காபீர், முஸ்ரீக், படர்க்கையில் கற்பனையாய் நம்பியிருந்த இறைவனை ஒரு முஸ்லீம் அவருடைய முதலாம் படித்தரமன ஷரீயத்தில் முன்நிலையிலும் 2ஆம் படித்தரமான தரீக்கத்தில் தன்மையிலும் ஆக்கிக் கொள்ளுகிறார். இதுவும் கற்பனையான பயிற்சிதான். 3ஆம் படித்தரம் இங்கு நமக்கவசியமல்ல. இந்த முஸ்லீம் தற்போது கையாளும் அமல்கள், நான் அல்லாஹ் அல்லாதவன் அவனைவிட்டு வேறானவன் என்ற அனாநிய்யத்தை, ஷிர்க்கை, அழிப்பதற்குரிய பயிற்சிகளேயாகும். ஏனென்றால் அனாநிய்யத் என்பது மனித அறிவில் ஊன்றிப் பதிக்கப்பட்ட ஒன்றாகும். இது இல்லையானால் உலக விவகாரங்கள் எதுவுமே நடைபெறாது. இதைப் பல பயிற்சிகள் மூலம் படிப்படியாய்த்தான் அழிக்கவேண்டியதாயிருக்கிறது. ஒரு முஸ்லீம், மூ.மீனுடைய அமல்களை வெளி நோக்கில் பார்க்கும்போது அது பக்திதான் என்று நாம் மருண்டு விடுகிறோம். உண்மை இதுவல்ல. அறிவுத் தெளிவை, உறுதியை, தன் கொள்கையை மனம் (அறிவு) பூரணமாய் ஏற்றுக்கொள்ளக் கையாளப்படும் உபாயங்கள்தான் ஹுர்புல்பராயிலி என்ற ஷரீயத்தாகும். இல்லாத ஒன்றைக் கற்பனைபண்ணி கையிலுள்ள வெண்ணெயை மறந்து நெய்க்கலைவதுபோலுள்ள பக்தியல்ல இஸ்லாத்தின் பக்தி, இஸ்லாத்தின் பக்திக்குப் பொருள் அணுகுமுறை என்பதே.

ஆரம்ப மூ.மீனுடைய கொள்கை பூரண வெற்றிபெறும் வரையிலும் கையாளப்படும் அமல்கள் மருண்ட அறிவில் துவிதம் போல் தென்படினும் அது துவிதத்தை நீக்குவதற்காக கையாளப்படும் உபாயம்தான். பகுத்தறிவு தனிமையில் இனிமை பெறாது. தௌஹீது தனிமையில் பூரணமடைவது. ஆதலால் உலகவாழ்வை வீசி எறிந்துவிடாமல் அத்துடன் ஆகிறா வாழ்வையும் ஒன்றிணைக்க வேண்டுமென்பதே இஸ்லாத்தின்

குறிக்கோளாகும். நாவினால் கலிமாவைக் கூறுவது ஆரம்பம். அதில் (அனுபவத்தில்) நிலை பெற்றிருப்பது அதன் முடிவு.

முஸ்ரீக், காபீர், எங்கும் எப்போதும் காணமுடியாத ஒரு கற்பனை இறைவனைக் கல்பில் இருத்திக் கொண்டு செயல்படுகிறான். இவர்களின் நோக்கம் இறைவனும் நானும் ஒன்றாய்விட வேண்டும். அல்லது அன்பைப்பெற வேண்டும் என்பதே. இவர்கள் அனாநிய்யத்தை, துவிதத்தை மேலும் மேலும் வலுப்பெறச் செய்கிறார்கள். இவர்கள் இறக்கும் வரையிலும் இறந்தபின்பும் கூட முக்திமான்களாய் (பூரணம் பெற்றோராய்) ஆகமுடியாது. இவர்களில் பல வகுப்பார் இருப்பினும் இவர்கள் ஒருபோதும் ஷிர்க்கிலிருந்து விடுபட முடியாது. இதைத்தான் பக்தியென்பது. மனிதர்களை ஓரளவு அமைதியான சமூகமாய் வாழவைக்க மனிதர்களால் கையாளப்பட்ட உபாயம்தான் இது. ஆனால் ஒரு முஸ்லீம் மூ.்.மீன் கையாளும் பக்தி இதற்கு முரணானது. தான் கலிமாவை விளங்கிக் கொண்டாலும் கூட அனாநிய்யத்தை மாய்த்தொழிப்பது மிகமிகக் கடினமாய் இருப்பதால், அமல்கள் மூலம் படிப்படியாய் ஏகாக்கிரசித்ததை (இக்லாஸை) உருவாக்கித் தன்னிடமுள்ள துவித உணர்வை அழித்து உண்மையான சொந்த அனுபவத்தில் மூழ்கிவிட முனைகிறார். இதன் பெயர் முக்தி என்பது. பக்தியின் எதிர்ச் சொல்லாகவே இஸ்லாம் முக்தி என்ற சொல்லுக்கு விளக்கம் தருகிறது. இது நாஸ்த்தீகவாதமல்ல.

அல்லாஹ்வையன்றி இல்லை என்றறிந்த மனிதன் தன்னை (நான் என்றுணரும் உணர்வை)த் தன்னிடமிருப்பதாய்க் கண்டாலும், அவ்வுணர்வு நிறைவுடைய சமதாய் இருப்பதாக அவரால் நம்ப முடிவதில்லை. அல்லாஹ் வையன்றி இல்லையென்றால் இருப்பவனாகிய அவனே நான் என்றுணர்பவன் என்பதை மனித அறிவு திடீரென ஏற்றுக்கொள்வதில்லை. இந்த அறிவு முதிர்ச்சியடையாதிருப்பதால், இந்த அறிவை முதிர்ச்சிபெறச் செய்வதற்காகவே அமல்கள் 4 படித்தரங்களாய்த் தரப்பட்டிருக்கின்றன. அவரவர் அறிவுக்கேற்ற, படித்தரத்தில் நின்று செயல்பட்டு வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்பதே இஸ்லாத்தின் நோக்கம். அமல்களில் (பயிற்சியில்) ஈடுபாடுகொள்ளும் ஒருவர்

அச்சம் ஆதரவுடையவராய் இருப்பதால் இவர் துவிதவாதியென்று தீர்ப்புக் கட்டுவது அறியாமைதான்.

கட்சிப்பாடற்ற உண்மையான பகுத்தறிவைக் கொண்டு நோக்கினால் மனதில் அதாலத் என்ற நீதி நிர்வாகம் அறிவு அல்லது மனம் என்ற ஒரே உஜூதில் எப்படி நிகழ்ந்ததோ அதே போலத்தான் பௌதீக உலகின் நீதி நிர்வாகமும் நிகழ்கிறது. மனதில் நடந்த சூட்சும நிகழ்சியில் மனமென்ற அல்லது அறிவென்ற வுஜூதே ஏகமாய் இருந்தது என்பதை ஒப்புக்கொண்ட மனிதன், பௌதீக உலகை வேறுவேறாயும் வுஜூதைவிட்டு வேறாயும் காண்பது அவனுடைய புலனாட்சியின் மயக்கம்தான். ஆகையால் லாஹிறையும் பாதினையும் (தோற்றத்தையும் மறைவையும்) ஒன்றுபடுத்தித்தான் இஸ்லாம் விளக்கம் தந்ததேயல்லாமல் பௌதீக உலகுக்கு மட்டுமோ சூட்சும உலகுக்கு மட்டுமோ தரப்படவில்லை. இஸ்லாத்தின் நோக்கம் அப்தை றப்பாக்குவதோ றப்பை அப்தாக்குவதோ அல்ல. உள்ளதான ஹக்கு வுஜூது என்பது அப்து. றப்பு என்ற பெயர்களில் வெவ்வேறாய் மருண்டபுத்தியில் தென்படுகிற மருட்சியை நீக்கி நான் யார்? என்ற கேள்விக்கு அனுபவவாயிலாய் விடை கண்டறிய, அறிவு ரீதியான விளக்கம் தருவது ஈமானாயும் அந்த அறிவு நிறைவுபெற்று உறுதியடைந்து வெற்றிபெற உதவுவது அமலாகவும் இருக்கிறது. இந்த அமல்கள் மனித அறிவுக்கேற்ற 4 படித்தரங்களைக் கொண்டிருக்கிறது. ஈமான் அறிவுரீதியானது. சூட்சுமமானது. அமல் உடல்ரீதியானது. இது பௌதீகம், இவ்விரண்டும் ஒன்றுசேர்ந்ததே இஸ்லாம். அமல் இஸ்லாத்தின் உடலாயும் ஈமான் என்ற ஞானம்(வேதாந்தம்) உயிராயும் (மூளையாயும்) இருக்கிறது. இந்த உண்மையை விவேகானந்தா போன்றோர் தெளிவாய் விளங்கியிருந்தால் அவர் ஆசைப்பட்ட குறைவில்லாத மதம் தீனுல் இஸ்லாமே என்பதை ஒப்புக்கொண்டிருப்பார். ஆகவே இஸ்லாம் (முத்தக்கீன்கள்) பயபக்தியுடையோர் என்று கூறுவது ஒழுங்கு, ஒழுக்கம் நடைமுறை, அணுகுமுறையுடையோர் என்பதைத்தான். தக்வா என்ற சொல் பக்தியென்ற பொருளுடையதல்ல. பக்தியுடையோரின் அடையாளம் அமல், விசுவாசம் எவை என்பதைக் குர்ஆன் 2:2,3,4,5ஆம் ஆயத்துகளில் கண்டு தெளிவுபெறுங்கள். மூ.்.மீன் முஸ்லீம்களின்

பக்தியென்ற அணுகுமுறைக்கும், காபீர் முஸ்ரீக்கின் பக்தியென்ற அன்புக்கும் ஆசையே அடிப்படையாய்இருப்பினும்,முஸ்லீம்மு.்.மீனின் ஆசை ஒரு வகையாயும் காபீர், முஸ்ரீக்கின் ஆசை வேறுவகையாயும் இருக்கிறது. ஆதலால் முஸ்லீமின் பக்தியை ஆசையின் விளைவென்று கூறமுடியாது.

இறைவன் தன்னை அறியப்பட நாடினான் என்றால் ஆசைப்பட்டான் என்பது பொருளல்ல. இதற்கு இறாதா என்று கூறப்படும். இதை விளங்கிக்கொள்வதற்காக ஆசை, விருப்பம் என்று நாம் கூறினாலும் மனிதனுக்குள்ள ஆசை விருப்பம் போன்றதல்ல. இறைவன் புதிதாய் அவ்வாசையை ஏற்படுத்திக் கொள்வதில்லை. அது அவனோடென்றுமுள்ள நாட்டம்தான். கலிமாவைக்கூறி விளங்கிய ஒரு மு.்.மீனின் ஆசையாயுள்ளது இந்த இறாதாதான். நான் யார் என்பதை அறிவதே அவரின் இறாதா. ஆகவே இஸ்லாம் ஆசையை அடிப்படையாய்க் கொண்டதல்ல. ஆசையில்லாதபோது பக்தியென்ற சொல் செயலிழந்துவிடும். கலிமாவை எப்போது ஒருவர் புரிந்துகொண்டாரோ அப்போதே அப்தும் றப்பும் இல்லாமல் ஆகிவிட்டது. அல்லாஹ் மட்டுமே உண்டு என்றாகிவிட்டது. இங்கே ஆசை ஏது? ஆசைப்படும் பொருள் ஏது? ஆசைப்படும் சிருட்டி ஏது? மு.்.மீனின் ஆசைக்குப் பெயர் “இறாதா” அல்லாஹ்தான் மு.்.மீன், இந்த நாமம் இலாஹி, இந்த நாமத்தை இஸ்தியாரா இரவலாகச் சிருட்டியின் பேரில் பாவிக்கப்படுகிறது. சிருட்டியின் பேரில் பாவிக்கப்படும் மு.்.மீன் என்ற சொல் கௌனியாய்ப் பாவிக்கப்பட்டிருக்கிறது. அவ்வளவுதான். ஒரு மு.்.மீன் கோடீஸ் வரனாய் வாழ்வதும் கோமணக் குண்டியனாய் வாழ்வதும் அவரிடத்தில் சமமே. அதனால் அவர் எவ்விதத் தாக்கத்துக்குள்ளும் ஆகாமல் சலனமற்ற மனோபக்குவமுடைய வராகவே வாழமுடியும். உலகவாழ்வின் குறிக்கோள் இதுதான்.

அப்படியானால் முஸ்லீம் பெரியார்களில் பலர் பக்திகொண்ட ஹாஸிக்கீன்களாய்க் காடுமலைகளில் அலைந்து கடும் தவம் செய்திருக்கிறார்களே ஏன்? குர்ஆனிலும் ஹதீஸ்களிலும்

பக்தியையும் அச்சம் ஆதரவுகளையும் மிக வற்புறுத்திக் கூறப்படுவது ஏன்? என்றொரு கேள்வி பிறக்கிறது. இஸ்லாத்தின் ஆரம்பத்தை ஓரளவு புரிந்துகொள்ளாவிட்டால் இக்கேள்விக்குரிய விடையை இலகுவாய் விளங்கிக்கொள்ள முடியாது. ஆகவே இங்கே மிகச்சுருக்கமாய்த் தரப்படுகிற விவரத்தைப் பல கண்ணோட்டங்களோடு விளங்கித் தெளிவுபெறுக.

அனுபவமற்ற மனிதன் மாபெரும் அறிஞனாய் இருப்பினும் ஒரே நாளில் அல்லது சில நாட்களில் கலிமாவின் உண்மையோடு ஒன்றிவிட முடியாது. அனாநிய்யத் என்பது ஒருநாளில் அல்லது சில நாட்களில் அழியக்கூடியதல்ல. மனிதனுடைய பழக்கவழக்கம், நூலறிவு, புலன்களின் அனுபவம் போன்றவை மனத்துடைய (அறிவுடைய) திரைகளாக அமைந்திருக்கின்றன. இப்படிப் பல திரைகள் என்னறிவுக்குண்டு என்பதுகூட மனிதனுக்கு இலகுவாய்ப் பிடிபடுவதில்லை. மனிதன் பல வருடம் கலிமாவை நாவினால் கூறிக்கொண்டிருந்தாலும் அதன் (ஹக்கு) உண்மை கல்பில் தரிபடுவதில்லை. இந்த உண்மையைக் கல்பில் தரிபடவேண்டுமென்பதற்காகத்தான் அமல்கள் தரப்பட்டன. கலிமாவை விளங்கியறிந்து அதில் ஊறி விடும் நோக்காக அமல்கள் கையாளப்பட்டால் ஒரு சில வருடங்களில் உண்மையைக் கல்பு ஏற்றுக்கொள்ளும் என்பது உண்மை. ஆயினும் மிகப்பெரும்பாலார் கலிமாவை விளங்கித் தெளிவுபெற்று உண்மையில் நிலைப்படும் நோக்கோடு அமல் செய்வதில்லை. கலிமாவை எவ்வித ஆராய்வுமின்றி நாவினால் கூறிக்கொண்டதோடு மட்டும் அமலில் ஈடுபாடு கொள்வதால், அழித்தொழிக்க வேண்டிய அனாநிய்யத் உறுதியடைவதாயும் துவிதம் வலுப்பெறுவதாயும் உண்மை தூரப்படுவதாயும் அமைந்து விடுகிறது. ஆதலால் கலிமாவினால் புகட்டப்படும் உண்மை அனுபவத்தில் அமைவதில்லை. உண்மை தன்னை விட்டும்வேறானதென்ற பழைய மூடப்பக்தியே உருவாகிவிடுகிறது. இன்றைய உலகிலுள்ள பக்திமான்களில் மிகப்பெரும்பாலார் இவ்வகையினர்தான். இன்றைய முஸ்லீம்களின் நிலைமை மற்றும் சமூக மக்களைவிட இவ்விஷயத்தில் பயங்கரமாகவே உருவெடுத்திருக்கிறது. இவ்வித பக்திமான்களின் நூற்களும்

உபதேசங்களும்தான் இஸ்லாம் துவித சித்தாந்தம் என்றும் பக்திமார்க்கம் என்றும் கூறுபவை.

இவ்வித பக்திமான்களின் கொள்கைக்கும் இஸ்லாத்துக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது. இன்னொரு கலிமாவைக் கூறியருப்பதாலும் முஸ்லீம்களின் அமல்களைக் கையாளுவதினாலும் இவர்கள் சட்டப்படி முஸ்லீம்களேயன்றி உண்மையான ஈமானுடைய முஸ்லீம்களல்ல. இவர்கள் இஸ்லாத்தின் சட்டவரையறைக்குள் கட்டுண்டிருப்பதால் இந்த முஸ்லீம்களை வழிப்பட்டவர்கள், பயபக்தியுடையவர்கள் என்று கூறுகிறோம். ஆனால் இஸ்லாம் இந்த அடிப்படையைக் கொண்டதல்ல. இஸ்லாம் விளக்கும் பக்தி என்பது வேறொரு விஷயமாயிருக்கிறது.

குர்ஆன்: 49:14

நாட்டுப்புறத்து அறபிகளில் பலர் ''தாங்களும் ஈமான்தாரிகள் (மூ.: மீன்கள்) தான்" என்று கூறுகின்றனர், நீர் கூறும், நீங்கள் உங்களை ஈமான்தாரிகள் (மூ.:மீன்கள்) எனக் கூறாதீர்கள்; ஏனென்றால், ஈமான் உங்களுடைய இருதயத்தில் நுழையவே இல்லை; ஆயினும் முஸ்லீம்கள் (வழிப்பட்டவர்கள்) என்று கூறிக் கொள்ளுங்கள். எனினும் நீங்கள் மெய்யாகவே அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் வழிப்பட்டு நடப்பீர்களாகில், உங்களுடைய நன்மைகளில் எதையும் அவன் உங்களுக்குக் குறைத்துவிட மாட்டான்; நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்போனும் கிருபையுடையோனுமாய் இருக்கிறான்.

இவ்வாயத்தில் குறிப்படப்பட்ட மக்கள் கலிமாவை நாவினால் கூறித்தான் முஸ்லீம்களானவர்கள். ஆயினும் ஈமானுடையோரல்ல. இவர்களுக்கு ஈமானைக் கல்பில் நுழைப்பதற்காகத்தான் பர்லு, நபில் கடமைகள் தரப்பட்டிருக்கின்றன. இவர்களுடைய கொள்கை தெளஹீதாயும் (ஏகமாக்குதலாயும்) செயல் துவிதமாயும் அமைகின்றன. இந்த அடிப்படையில் வேறு மதங்களுக்கும் இஸ்லாத்துக்கும் வேறுபாடு தென்படவில்லை. இந்த நிலையிலுள்ளவர்களை இந்துக்கள் விசிட்டாத்வைதிகள் என்று கூறுகின்றனர். ஆனால்

பிறமதக் கோட்பாடுகளுக்கும் இஸ்லாத்துக்குமிடையில் வேறுபாடு இருந்தே ஆகவேண்டும். இல்லையானால் இஸ்லாம் அவசியமல்லாதென்றாகும். இஸ்லாம் குறைவுள்ள மனித அறிவினால் உருவாக்கப்பட்டதல்ல. நிறையறிவுடைய இறைவனால் உருவாக்கப் பட்டது. முஸ்ரிக்கீன்கள், காபிரீன்கள் யாவரும் கையாள்வது பக்திமார்க்கமென்றால் இஸ்லாம் 1,24,000 நபிமாரைக் கொண்டு புத்துயிரளித்துக் கொண்டிருக்கவும் காலாகாலம் அவ்லியாக்களைக் கொண்டு தெளிவுபடுத்தவும் வேண்டியதில்லை. இஸ்லாமும் பிற மதங்களும் சமம்தானென்றால் இஸ்லாம் என்பதொன்று அவசியமில்லாததாய்விடும். இறைவனும் றசூலும் வீண் விளையாட்டுக்காரரென்றாகி விடும். விக்கிரக வணக்கத்தை ஒழிக்கவே இஸ்லாம் தரப்பட்டதென்று வாதிடமுடியாது. இதற்கு ஆதாரமில்லை. ஏனென்றால் லாஹிறும் பாதினும் இறைவனே என்னும் போது, லாஹிரை மட்டும் எடுத்தவன் குற்றவாளியென்றால் பாதினை மட்டும் எடுத்தவனும் குற்றவாளிதானே. வாள் கொண்டு யுத்தப் பிரகடனம் றசூலால் செய்யப்பட்டது லாஇலாஹ இல்லலலாஹ் என்ற கலிமாவை நாவினால் கூறி அதை உணரச் செய்வதற்காகவேயன்றி விக்கிரக வணக்கத்தை மட்டும் நீக்குவதற்காக அல்ல.

ஹதீஸ்:

மக்கள் அல்லாஹ்தவிர இலாஹ இல்லை. திட்டமாக முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வுடைய தூதுவர் என்று சாட்சிகூறி தொழுகையைக் கடைப்பிடித்தொழுகி சக்காத்தும் கொடுத்துவராத வரையில் அவர்களுடன் ஜிஹாது செய்யுமாறு இறைவன் எனக்கு ஆணையிட்டுள்ளான். இவ்விதம் அவர்கள் செய்துவந்தால் அவர்களுடைய உயிரையும் பொருள்களையும் என்னைவிட்டும் காத்துக் கொண்டவர்களாவர். இஸ்லாத்தின் கடமைகளைத் தவிர அவர்களுடைய கணக்கு அல்லாஹ்விடமிருக்கிறதென்று றசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் இப்னு உமர்(றலி)
ஆதாரம் : புஹாரி, முஸ்லீம்

இந்த ஹதீஸைக் கொண்டு கலிமாவை உறுதிகொள்வதற்காகவே, அமல்கள் தரப்பட்டிருக்கின்றன என்பது தென்படுகிறது.

ஹதீஸ்:

நடுநிலைமையைக் கொண்டு இரை முன்னிலையை எப்திக் காலையிலும் மாலையிலும் இரவின் பிற்பகுதியிலும் இபாதத்தில் பெரும்பாலும் ஈடுபடுங்கள். மார்க்கப்பிரசாரமும் செய்யுங்கள், மேலும் அறிந்து கொள்ளுங்கள், எவருடைய வணக்கமும் அவரைச் சுவர்க்கம் சேர்த்துவிடாது என்று கூறினார்கள். அப்போது நாயகமே! தாங்கள்! என்று மக்கள் வினவினார்கள். அதற்கு றசூல் (ஸல்) அவர்கள் முடியாது. அல்லாஹ்வுடைய மன்னிப்பும் கிருபையும் என்னை அடைந்தாலொழிய என்னுடைய வணக்கமும் என்னைச் சுவர்க்கம் சேர்ந்துவிடாதென்று கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுறைறா(றலி)
ஆதாரம் : புஹாரி

பாவம் என்பது ஷிர்க்குத்தான். பாவம் மன்னிக்கப்படுதல் என்பது ஷிர்க்கிலிருந்து விடுபடுவதே. அமல்கள் தௌஹீதில் உறுதிப்படுவதற்காகத்தான். அமல் வேறு விஷயம். ஈமான் வேறு ஒரு விஷயம். ஆகவே, பிறமதங்களுக்கும் இஸ்லாத்துக்கும் வேறுபாடுண்டு. அந்த வேறுபாடுதான் என்ன?

பிற மதங்கள் பக்தியை வளர்க்க முயல்கின்றன. இஸ்லாம் பக்தியை முக்தியாய் மாற்ற முயல்கிறது. இதற்குக் காரணம் அடிப்படை மந்திரமான கலிமாவேதான். ஆகவே ஒரு முஸ்லீம் கொண்ட பக்தி என்ற சொல்லுக்கு, சைவசித்தாந்திகள் கொள்ளும் கருத்துப் பொருந்தாது. இவ்வகையினரின் நன்மை தீமைகளுக்குக் கூலியுண்டு. ஆயினும் இவர்கள் முக்திமான்களல்ல.

குர்ஆன்: 4:136

ஈமான் கொண்டவர்களே! (மூ.்மீன்களே!) நீங்கள் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் அவன் தன் தூதர் மீது அருளியதையும், இதற்கு முன்னர் அவன் அருளியவேதங்களையும், ஈமான் கொள்ளுங்கள்; அல்லாஹ்வையும், அவனுடைய தூதர்களையும் இறுதி நாளையும் எவன் நிராகரிக்கிறானோ; அவன் நிச்சயமாக வெகு தூரமான வழிகேட்டிலேயே இருக்கிறான்.

இவ்விஷயத்தில் ஈமான்கொண்ட மக்களை நோக்கி மூ.். மீன்களே! என்று கூப்பிட்டுத்தான் மேலும் ஈமான்கொள்ளுங்கள் என்று இறைவன் கூறுகிறானே! இது ஏன்? கலிமாவை நாவினால் கூறினால் நாம் ஈமானில் முழுமைபெற்றுவிட்டோம் என்பது

பொருளள்ள. இதைப்போலவே தொழுகை முதலாம் கடமைகளை நாம் எடுத்துக்கொண்டால் இஸ்லாத்தில் முழுமைபெற்றுவிட்டோம் என்பதும் பொருளல்ல. ஆரம்ப படித்தரமான ஷரீயத்தில் உள்ள மக்களை நோக்கித்தான் இந்த ஆயத்துகள் தரப்பட்டன என்பதையும் இதற்கப்பாலுள்ள படித்தரங்களிலும் ஏறிச்சென்றால் தான் இஸ்லாத்திலும் ஈமானிலும் முழுமைபெற முடியும் என்பதையும் இவ்வாயத்துக்கள் விளக்கம் தருகின்றன.

குர்ஆன்: 2:208
ஈமான்கொண்டவர்களே! நீங்கள் இஸ்லாத்தில் முற்றிலும் நுழைந்து விடுங்கள்; தவிர ஷைத்தானின் அடிச்சுவட்டைப் பின்பற்றாதீர்கள்; அவன் உங்களுக்குப் பகிரங்கமான விரோதி.

மூ.்.மீன்கள் இஸ்லாத்தில் முற்றிலும் நுழைதல் என்பதன் அர்த்தமென்ன? இந்த மூ.்.மீன்கள் கலிமாவை நாவினால் கூறியதால் மூ.்.மீன்கள் என்றழைக்கப்படுகிறார்கள். இவர்களுடைய ஈமான் நிலைப்பட இஸ்லாத்தின் 4 படித்தரங்களிலுமுள்ள அமல்களைப் படிப்படியாய்க் கையாண்டு இஸ்லாத்தில் முற்றிலும் நுழையவேண்டியவர்களாய் இருக்கிறார்கள்.

குர்ஆன்: 29:45
வஹிமூலம் உமக்கு அளிக்கப்பட்ட இவ்வேதத்தை நீர் ஓதித், தொழுகையைக் கடைப்பிடித்துவாரும்; ஏனென்றால் நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும் பாவங்களிலிருந்தும் விலக்கிவிடும். அல்லாஹ்வைத் (திக்ரு) தியானம் செய்வதோ மிகப்பெரிய காரியம்; அன்றி நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கு அறிவான்.

இந்த ஆயத்தைச் சரியாய்ப் புரிந்துகொண்டால் அமல்கள் யாவும் மனிதனை நல்லொழுக்கமுடையவனாய் மாற்றி அவனுடைய விசுவாசம் உறுதியடையச் செய்வதற்காகத் தரப்பட்ட பயிற்சிகளே என்பதை விளங்கிக் கொள்ளமுடியும்.

குர்ஆன்: 84:19

நீங்கள் நிச்சயமாய்ப் படிப்படியாய்க் கடக்கவேண்டியதாய் இருக்கிறது.

ஒருவர் இஸ்லாத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன் (கலிமாவைக் கூறுவதற்குமுன்) அல்லாஹ் வேறு சிருட்டி அல்லாஹ் அல்லாத வேறு என்று நம்பியிருந்தவர். அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாததும் உண்டு என்று நம்பியிருந்தவர். இவருடைய வஹ்மினால் ஏற்பட்ட விசுவாசத்தை ஈமானை மறுத்துக் கலிமாவைக் கூறியதால் தான் இவரைச் சட்டம் முஸ்லீமாயும் மூ.்மீனாயும் அனுமதிக்கிறது. இவர் கலிமாவைக் கொண்டு இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள முன்பு விக்கிரக வணக்கம் செய்துகொண்டிருந்த போதும் (அஸீஸும் அலீமுமாகிய) இறைவனை நெருங்கிச்சேர முயற்சி மேற்கொண்டவர். இவர் அப்போது பக்திமான்தான். இறைவனை அடைய ஆசைப்பட்டவர். தெய்வத்தையடைய இவர் கொண்டிருந்த பாதையின் (மதத்தின்) பெயர்தான் பக்திமார்க்கம் என்பது. இந்த பக்தியென்ற சொல்லின் கருத்து அன்பு செலுத்துதல், தொண்டு செய்தல் என்பதே. ஆனால் இஸ்லாத்தில் பக்தியென்ற சொல் இப்பொருளில் பாவிக்கப்படுவதில்லை. பக்தியென்பதற்கு இஸ்லாம் தரும் பொருள் ஒழுங்கு, ஒழுக்கம், நடைமுறை, அணுகுமுறைப் பயிற்சி என்பதே. காபீர் இல்லாத ஒன்றைக் கற்பனையில் இருத்திக்கொண்டு அதை ஆசைப்படுகிறான். மூ.்மீன் இல்லாததை மறக்க ஆசைப்படுகிறார்.

குர்ஆன்: 9:40

திடனாக அல்லாஹ் நம்மோடிருக்கிறான்.

குர்ஆன்: 57:4

நீங்கள் எங்கிருந்தாலும் அவன் உங்களோடிருக்கிறான்.

குர்ஆன்: 50:16

நாம் இன்ஸானிடத்தில் அவனது பிராண நரம்பிலும் சமீபமாய் இருக்கிறோம்.

(இன்ஸான் அவனாக இருந்தாலேயன்றி வேறெவ்வகையிலும் இவ்வாயத்துகள் ஒத்துவராது.)

இவை போன்ற மற்றும் ஆயத்துகள் ஹதீஸுகளையும் எடுத்துக்கொள்ளுங்கள். நான் விரிவைப் பயப்படுகிறேன். இவ்வாயத்துகளில் உடனிருக்கிறான் என்று கூறப்படுகிறது. உடனிருத்தல் என்றால் என்ன? ஒட்டியிருத்தல், சமீபமாய் இருத்தல், அண்மையிலிருந்தல், பாலணுவும் நீரணுவும் போல் கலந்திருத்தல் என்பது பொருளல்ல. உடனிருத்தல் என்பதற்குக் குர்ஆன் தரும் விவரம் இதுவல்ல. இப்படிப் பொருள் கொள்வது இஸ்லாத்தைப் புரிந்து கொள்ளாத குற்றமாகும். நான் உயிருடன் இருக்கிறேன். நான் என் நப்ஸுடன் இருக்கிறேன். நான் அறிவுடன் இருக்கிறேன், போன்ற வசனங்களை ஆராய்ந்து பாருங்கள். நான்தானே உயிர். உயிருடன் இருக்கிறேன் என்றால் அதன் அர்த்தம் என்ன? நானே உயிராய், உயிரே நானாய் இருக்கிறேன் என்பதுதான். நான் நப்ஸுடன் இருக்கிறேனென்றால் நானே நப்ஸாய், நப்ஸே நானாய் இருக்கிறேன் என்பதுதான் அர்த்தம். நான் அறிவுடன் இருக்கிறேன் என்றால் அறிவு நானாக, நானே அறிவாக இருக்கிறேன் என்பதுதான் அர்த்தம். அறிவைக் குணம் என்று கொண்டாலும் பறவாயில்லை. குணத்தை விட்டுக் குணி வேறுபடாது பிரியாது என்பது தத்துவம் அறிவுதான் நான். நான்தான் அறிவு. இதில் பாவிக்கப்பட்ட உடன் என்ற சொல் வேறு என்ற பொருளில் பாவிக்கப்படவில்லை. இவ்வாயத்துக்களில் பாவிக்கப்பட்ட உடன், உடைய என்ற சொல் தற்கிழமைப் பொருளில் பாவிக்கப்பட்டிருக்கிறது.

திடமாக அல்லாஹ் நம்மோடிருக்கிறான் என்றால் அவனே நாமாக இருக்கிறான் என்பதுதான் பொருள். தௌஹீதுக் கலிமாவைப் புரிந்துகொள்ளாத மனிதன் இதை மறுக்கிறான். இப்போது குர்ஆனைப் பாருங்கள்.

குர்ஆன்: 4:126
வானங்களிலும் பூமியிலுமுள்ள யாவும் அல்லாஹ்வுக்குரியனவே. அல்லாஹ் யாவற்றையும் சூழ்ந்தவனாக இருக்கிறான்.

இவ்வாயத்தில் அல்லாஹ் யாவற்றையும் சூழ்ந்தவனாக இருக்கிறான் என்பது, நீரைக் கிணற்றுச்சுவர் சூழ்ந்திருப்பது போல,

அல்லது உலகை வானம் சூழ்ந்திருப்பதுபோல என்பது பொருளல்ல. இப்படியானால் நீருள்ள இடத்தில் கிணற்றின் சுவரும் சுவருள்ள இடத்தில் நீரும் இல்லையென்றாகும், இதைப்போல சிருட்டியை இறைவன் சூழ்ந்தவனாய் இருக்கிறான் என்றால் சிருட்டியுள்ள இடத்தில் இறைவனும் இறைவனுள்ள இடத்தில் சிருட்டியும் இல்லையென்றாகும். அல்லாஹ் எங்கும் வியாபகமானவன், நிறை பூரணமானவன், சமது என்பதை நாம் அறிவோம். ஒரு பொருள் ஒரே நேரத்தில் இரு இடங்களிலும், இரு பொருட்கள் ஒரே நேரத்தில் ஒன்றாயும் இருக்க முடியாதென்பது நாமறிந்த தத்துவம். ஆகவே யாவற்றையும் இறைவன் சூழ்ந்தவனாயிருக்கிறான் என்று குர்ஆன் கூறுவது வேறோர் வகையான சூழ்தலாய் இருக்கிறது. அது எப்படியென்றால் மனிதனுக்குரிய பார்வை, கேள்வி, ஸ்கந்தம், சுவை, ஸ்பரிஸம் ஆகிய ஐந்து முக்கிய பண்புகளையும் மனிதன் சூழ்ந்தவனாய் இருக்கிறான். இந்த ஐந்து பண்புகளும் அழிந்து விட்டாலும் மனிதன் இருக்கவே செய்வான். பண்புகள் அழிந்தாலும் இன்ஸான் அழிவதே இல்லை. ஆகவே இன்ஸான் அவன் பண்புகளை முற்றாய்ச் சூழ்ந்திருப்பது போலவே யாவற்றையும் இறைவன் சூழ்ந்தவனாய் இருக்கிறான். உடலை உயிர் சூழ்ந்திருப்பது போல என்றும் கூறலாம். நிராகரிப்போரை நரகம் சூழ்ந்திருப்பதும் இவ்வித சூழல்தான். 9:49ஆம் ஆயத்தைப் பார்க்கவும். பண்பு (ஸிபத்து குணம்) குணியை விட்டு எப்போதும் நீங்காதென்பதும், குணியும் குணமும் ஒன்றே என்பதும் நாமறிந்த தத்துவமல்லவா? ஆகவே சிருட்டி கர்த்தாவை விட்டும் வேறானதென்பது மருட்சியல்லவா?

உண்மைப் பொருளான உஜூதுவின் பண்புகள் (ஸிபத்துகள்) தான் சிருட்டியென்ற பெயரைப் பெற்றிருக்கின்றன என்பதும் இவை எமது புலனுக்கமைவாய்க் காட்சியளிக்கின்றன என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும். ஆகவே, பண்பு என்ற சிருட்டி அல்லாஹ் அல்லாத தனி உஜூது என்று காண்பது (விசுவாசிப்பது) அறியாமையே. இந்த ஷிர்க்கென்ற அறியாமை எம்மை நாம் யாரென்று கண்டறிய முடியாத திரையாய் அமைந்துவிடுகிறது.

குர்ஆன்: 57:3

ஆதியும் அவனே; அந்தமும் அவனே; தோற்றுவதும் அவனே; மறைந்திருப்பவனும் அவனே; அவன் சகலவற்றையும் நன்கறிந்தோன்.

நாம் முன்கூறிய "முஹீத்"சூழ்தலையும் இவ்வாயத்தையும் ஒப்பிட்டு நோக்குக.

குர்ஆன்: 26:213

ஆதலால் நீர் அல்லாஹ்வுடன் வேறொரு கற்பனையான இறைவனை (இலாஹுவை) ஆக்கிக்கொள்ளாதீர், அதனால் நீர் வேதனை செய்யப்படுவீர்.

இவ்வாயத்தில் கூறப்பட்ட கற்பனையான இறைவன் (இலாஹு) யார்? விக்கிரகமான இலாஹு என்று கூறமுடியாது. அந்த விக்கிரகமான இலாஹுகள் கற்பனையானவையல்ல. உணமையாகவே புலனறிவால் பார்க்கக்கூடியவையாய்த்தான் இருந்தன. அவை கற்பனை இலாஹுகளல்ல. அவை அல்லாஹ் அல்லாதவையென்று நம்புவதே கற்பனை இலாஹுவை உண்டாக்குவதாய் அமைகிறது. அல்லாஹ் வையன்றி ஒன்றுமில்லையென்று கலிமா தரும் விவரம் உண்மையானதென்றால் ஒவ்வொரு ஜீவனும் தான் உண்டு என்றுணரும் உணர்வுயாவும். அல்லாஹ்வுடைய உணர்வாகத்தானே இருக்கும். ஒவ்வோர் அணுப்போன்ற சிருட்டியும் நான் நான் என்று உணர்ந்துகொண்டுதான் இருக்கிறது. இவ்வுணர்வு அல்லாஹ்வுக்குத்தானென்றால், இவ்வுணர்வுடைய ஒரு சிருட்டி (மனிதன்) தானல்லாத வேறிடத்திலிருப்பதாய் நம்பியுள்ள ஒரு கற்பனை இறைவனைத்தான் அவன் விசுவாசம் (ஈமான்) கொண்டிருக்கிறான், (நுட்பமாய் உணர்க) இது குர்ஆனின் கூற்றேயன்றி நாத்திகவாதமல்ல. றசூல் (ஸல்) அவர்களைவிட சிறந்த ஒரு மூ∴மீன் உண்டா? அவர்கள் யாராவதொரு கற்பனை இறைவனை எடுத்துக்கொண்டிருப்பார்களா? இறைவன் இவ்வாயத்தை தந்த நோக்கமென்ன? என்பதை ஆராயுங்கள்.

கலிமா என்ன உண்மையைத் தருகிறதென்பதை உணர்ந்து கொள்ளாத ஒவ்வோர் மனிதனும் தன் கற்பனையிலுள்ள ஒரு கற்பனை இறைவனை (இலாஹுவை)த்தான் ஈமான் கொண்டிருகிறான். இக்கற்பனையினால் வேதனை தரப்படும் என்பதே ஆயத்தின் அச்சுறுத்தல். நம்முடன்தான்

இறைவனிருக்கிறான். இவனை நாம் எங்கும் தேடவேண்டியதில்லை. அவனையன்றி இல்லையென்னும் போது அவனை எங்கே தேடுவது? யார்தேடுவது? யார் பக்தி கொள்வது. ஆகவே, குர்ஆன் ஹதீஸ்கள் கற்பனையிலுள்ள இறைவனை மறக்கும்படியும் தன்னை யாரென்று கண்டறிந்து முக்தியடையும்படியும்தான் கூறுகின்றன.

ஓரு குழந்தை மலத்தை உடலில் புரட்டிக்கொண்ட போது தாய் அந்த நஜீஸ்டன்தான் குழந்தையைத் தூக்கிக் கழுவிச் சுத்தம் செய்கிறாள். அவளுடைய நோக்கம் குழந்தையைச் சுத்தப் படுத்துவதுதான். ஆதலால்தான் நஜீஸோடும் தூக்கிக்கொண்டாள். இதைப்போல காருண்யக் கடலான இறைவன் ஷிர்க் என்ற நஜீஸில் மூழ்கிய மனிதனைக் கழுவிச் சுத்தம்செய்யும் நோக்கோடுதான் கலிமாவையும் அமல்களையும் அருளினான். கலிமாவை நாவினால் கூறியவுடன் அவனை இஸ்லாம் ஏற்றுக்கொள்கிறது. நஜீஸைக் கழுவும் வேலைக்கு உதவியாகவே அமல்களைத் தந்திருக்கிறான். கலிமத்துத்தையிபா என்றால் மணக்கும் கலிமா என்பது பொருள். ஷிர்க்கென்பது மலத்துக்கொப்பான நஜீஸாய் இருப்பதால் அதைக் "கபீஸா" துர்நாற்றம் என்று குர்ஆன் கூறுகிறது. ஆகவே இஸ்லாத்தின் ஆரம்ப மனிதனுக்கு இஸ்லாம் பக்திமார்க்கம் போல் தென்படினும் உண்மையில் அது முக்தி மார்க்கமேயன்றிப் பக்திமார்க்கமல்ல. கலிமாவைக் கொண்டேயன்றி ஷிர்க்கிலிருந்து விடுபட முடியாது. பாவம் மன்னிக்கப்படுதல் என்பது ஷிர்க்கிலிருந்து விடுபடுவதுதான்.

இப்போது முஸ்ரீக்கை நோக்கிப் பாருங்கள். நாங்கள் அஸீஸ்ம் அலீமுமாகிய அல்லாஹ்வை நெருங்கிச் சேரவே இலாஹ்களான விக்கிரகங்களை வணங்குகிறோம் என்றுதான் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

குர்ஆன்: 39:3

ஆலிஹத்துக்கள் (விக்கிரகங்கள்) அல்லாஹ்விடத்தில் நெருங்கிச் சேர்ப்பதற்காகவேயன்றி நாங்கள் வணங்குவதில்லை.

இந்த முஸ்ரீக்குகள் தாங்களும் விக்கிரகமும் (பௌதீக உலகும்) அல்லாஹ் அல்லாத வேறோர் இடத்தில் மறைவாய் இருப்பதாக ஓர் கற்பனை இறைவனை விசுவாசம் கொண்டிருந்திருக்கிறார்கள். அப்படியானால் ஓர் மூ.்மீன், முஸ்லீம்

இந்த முஸ்ரீக்கின் நம்பிக்கைக்கு நேர்மாறாகவே இருப்பார். மூ.மீன் அல்லாஹ் எங்கும் உள்ளவன் என்பதை அறிவார். அவர் அறிவை, நோக்கை ஒருமுகப்படுத்தும் நோக்காகத் தொழுகையில் அல்லாஹ்வை கற்பனையில் முற்படுத்துகிறார். இது நஜீஸ்தான் துவிதம்தான். ஆயினும் இஸ்லாம் இதை அனுமதிக்கிறது, மலத்தில் புரண்டு கொண்ட குழந்தையைத் தாய் ஏற்றதுபோல ஷரீயத்தும் இம் மனிதரை ஏற்றுக்கொண்டது. இந்த மூ.மீன் தன் இரண்டாம் படித்தரமான தரீக்கத்தில் கற்பனையைத் தூக்கிவீசிவிட்டுத் தன்னுடன் இறைவனை, இறைவனுடன் தன்னை ஆக்கிக் கொள்ளுகிறார். நஜீஸில் இருந்து விடுபடுகிறார். இது துவிதமே யல்ல.

நான் இப்படி விவரம் தருவதனால் நானே இறைவனென்று கூறுகிறேனென்றோ உங்களையும் அப்படிக் கூறும்படி தூண்டுகிறேனென்றோ நீங்கள் கருதவேண்டாம், நான் அப்படிக்கூறவுமில்லைப் பிறரைக்கூறும்படி கூறவுமில்லை. கொஞ்சம் செவிதாழ்த்துங்கள். உண்மையை உணர்ந்துகொள்வீர்கள். மன்ஸுர் இப்னுகல் லாஜ் (றஹ்) அவர்கள் அனல்ஹக்கு நான் உண்மைப்பொருள் என்றுதான் கூறினார்கள். இவர்களின் கூற்று இஸ்லாத்துக்கு முரணானதென்றும் இவர் காபீர் முர்த்தத் என்றும் பத்துவா வழங்கி அவர்களைச் சித்திரவதை செய்துகொன்றார்கள். இந்தப் பத்துவாவை வழங்கியவர்கள் அப்போதிருந்த ஒருசில உலமாக்கள்தான். என்னறிவுக்கெட்டியவரையில் இந்தப் பத்துவாவை வழங்கிய கூட்டத்தார் இஸ்லாத்தைப் பற்றி எள்ளளவும் அறிந்துகொள்ளாத, குர்ஆனை மறுத்த கூட்டம்தான் என்று காணுகிறேன். சுத்தமான காபீர்களாய் இருக்கிறார்கள். மன்ஸுர்இப்னுகல்லாஜ் (றஹ்) அவர்கள் சுத்தசத்தியமான இஸ்லாத்தையும் அதன் கொள்கையையும் (குர்ஆன் ஹதீஸுகளை) பூரணமாய் ஒப்புக்கொண்ட சுத்தமான மூ.மீன் முஸ்லீம் என்பது தென்படுகிறது. எப்படியென்றால்.

குர்ஆன்: 20:14

நிச்சயமாக நான்தான் அல்லாஹ், என்னைத் தவிர வேறு இலாஹுஇல்லை; எனக்கே நீர் இபாதத்துச் செய்யும்; என்னைத் தியானிக்கும் பொருட்டுத் தொழுகையைக் கடைப்பிடியும்.

கல்லாஜ் (றஹ்) அவர்களுக்குப் பத்துவா வழங்கிய கூட்டம் இந்த ஆயத்தைக் காணவில்லையா? இதை ஒருவர் ஓதினால் இக்கூட்டம் அவரை வழிகெட்ட முர்த்தத் என்று கூறுவார்களா? அவர்களுடைய காலத்தில் இந்த ஆயத்தைப் பிறர் காதில்படக்கூடியதாய் எவரும் ஓதியிருக்கமாட்டார்களா? அப்படி ஓதியவர்களையெல்லாம் இந்த மிருகக் கூட்டம் வெட்டியதுண்டா? இல்லையென்றால் மன்ஸுர் இப்னுகல்லாஜ் (றஹ்) என்ற அந்த மாபெரும் மேதையை ஏன் வெட்டிக்கொன்றார்கள்? இந்த அறிவிலிக் கூட்டம் அந்த மகானுடைய பேச்சை விளங்கிக் கொள்ள முடியாத செவிடர்களாயும் பொறாமையென்ற தீயில் மூழ்கியவர்களாயும் இருந்துகொண்டுதான் இந்த மாபெரும் துரோகத்தைச் செய்தார்கள்.

இந்த வழிகெட்ட கூட்டம் தாங்கள் றசூலை ஈமான் கொண்டோம் என்று கூறியது சுத்தமான பொய். ஏனென்றால் இந்த ஆயத்தை இறைவனிடமிருந்து பெற்றுக்கொண்ட றசூல் (ஸல்) அவர்கள் தான் தமது தோழர்களுக்குத் தங்கள் நாவினால் கூறி மனப்பாடமிடும்படியும் எழுதும்படியும் கட்டளையிட்டவர்கள். நான்தான் அல்லாஹ் என்ற சொல்லை நாவினால் வெளிப்படையாய்க் கூறிய றசூலை இக்கூட்டம் எப்படி ஒப்புக்கொண்டிருக்க முடியும்? அனல் ஹக்கு என்று சொன்னவரை வழிகெட்டவராய்க் கண்ட மக்கள், பட்டம் கொடுத்த மக்கள், சித்திரவதை செய்துகொன்ற மக்கள், அந்த றசூலை ஏன் விட்டுவிட்டார்கள்? பட்டம் கொடுத்திருக்க வேண்டுமே! கொன்றொழித்திருக்க வேண்டுமே! அப்படி அவர்கள் செய்யவில்லை. அபூஜஹ்ல்தான் பத்துவா வழங்கினான். கொன்றொழிக்க முயன்றான். சரிதான் இப்போது நாம் அந்த ஆயத்தைக் கூறினால் அல்லது விளக்கினால் இப்போதும் நம்மை வழிகெட்டவரென்றும் சல்மான் ருஸ்த்தியென்றும் வெட்டிக் கொலை செய்ய வேண்டுமென்றும் பத்துவா வழங்க வேண்டுமென்றும் கூறுகிறார்களே இது ஏன்? இவர்கள் யார்? இவர்கள் இந்து சமயத்தையோ, பிறமதங்களையோ, இஸ்லாத்தையோ விளங்கிக் கொண்டவர்கள்தானா? இல்லை.

குர்ஆன்: 28:30

அவர் அதனிடம் வந்தபோது மிக்க பாக்கியம் பெற்ற அச்சமவெளியிலுள்ள ஓடையின் வலப்பக்கத்திலுள்ள ஒரு மரத்திலிருந்து, மூஸாவே! நிச்சயமாக உலகங்களைச் சிருட்டித்துப் போஷிக்கும் (றப்பில் ஆலமீன் ஆகிய) அல்லாஹ் நான்தான் என்ற சப்தத்தைக் கேட்டார்.

இந்த ஆயத்தை சுயமூளையோடு சிந்தனை செய்து பாருங்கள். இந்தக் கூப்பிடுதலை, மூஸாவே! என்று கூப்பிட்டதும் அச் சொல்லைக் கூறியதும் அந்த மரம்தான். மரத்தில் இருந்து என்றால் தூணிலும், துரும்பிலும் இறைவனுண்டு என்று இந்துக்கள் கூறுவது போல் மரத்திலிருந்து இறைவன் பேசினான் என்பது பொருளல்ல. மரம் அவனை விட்டு வேறல்ல என்பதே பொருள். பேசியது மரம்தான். குர்ஆனின் "இபாரத்துன்னஸ்" என்ற வெளிச்சத்தப் பிரமாணத்தினால் அம்மரம் அல்லாஹ்வின் வேறல்ல என்றும், கருத்துப் பிரமாணமான "தலாலத்துன்னஸ்" ஸினால் அம்மரம் சிருட்டிகளின் வேறல்ல என்றும் இந்த ஆயத்து விவரம் தருகிறது. ஆயினும் சில தப்ஸீர்கள் இவ் விஷயத்தை இருட்டடிப்புச் செய்து அம்மரத்தின் திசையிலிருந்து கூப்பிடப்பட்டதென்று கூறுகின்றன. இது சுத்தப்பொய்யாகும். இறைவன் கூறிய இவ்வசனம் சிருட்டியாய் இருந்த மூஸா (அலை) அவர்களுடைய செவியில்தான் விழுந்தது. சிருட்டியின் செவியில் அச்சொல் விழுவதற்கு ஒலி வேண்டும். இறைவனுடைய பேச்சுக்கு ஒலி கிடையாது. ஒலி சிருட்டியின் பேச்சுக்குத்தான் உண்டு. ஆகவே மூஸா(அலை) என்ற சிருட்டியின் செவியில் விழுந்த சொல்லை (ஒலியை) சிருட்டியான மரம்தான் கூறியிருக்கும்.

குர்ஆன்: 42:51

அல்லாஹ் பேசுவதற்குரிய தகுதி மனிதரில் ஒருவருக்கும் இல்லை; எனினும் வஹியின் மூலமாகவோ அல்லது திரையிலிருந்தோ அல்லது தான் விரும்பியதைத் தன் அனுமதியின் மீது வஹியை அறிவிக்கக்கூடிய ஒரு தூதரை அனுப்பி வைத்தோ (பேசுகிறான்) நிச்சயமாக அவன் மேலானவனும் ஞானமுடையோனுமாவான்.

இவ்வாயத்தின்படி இறைவசனம் வெளியாவதற்கு ஒரு (மழ்ஹர்) திரை அவசியமாகிறது. இந்தத் திரைதான் மூஸா (அலை) அவர்களைக் கூப்பிட்ட மரம். அந்த இறைவசனத்தை மரம் என்ற திரையிலிருந்து மூஸா(அலை) என்ற திரையிலுள்ள சிருட்டியே கேட்டார் என்பதில் எவரும் ஆட்சேபிக்க வேண்டியதில்லை. இறைவன்பேசுபவன், கேட்பவன், பஸீருன், சமீஉன். அல்லாஹ்வையன்றி இல்லையென்பதை நிரூபிப்பதே இவ்வாயத்துக்களின் நோக்கமாகும். இச் சொல்லைக் கூறிய மரம் ஓர் சிருட்டிதானே! அதுவும் மரம் அ.்றிணைப் பொருளல்லவா? இந்தப் பேச்சைக் கேட்ட மூஸா (அலை) அவர்கள் இது ஷைத்தானான முர்த்தத்தின் பேச்சு என்று நம்பினார்களா? அவர்கள் வேதம் கொடுக்கப்பட்ட உலுல் அஸ்மிகளில் ஒருவரல்லவா? இவ்வித சொல்லைச் சொன்ன மரத்தை மூஸா (அலை) அவர்கள், இது ஷைத்தானுடைய உறைவிடமென்று நம்பி வெட்டிவீழ்த்தினார்களா? நான்தான் அல்லாஹ் என்று கூறிய அ.்றிணைப் பொருளான மரத்தை, அல்லாஹ்வின் பேச்சு வெளியாவதற்குரிய ஓர் மழ்ஹர் என்றுதான் மூஸா(அலை) அவர்கள் நம்பினார்கள். அப்படியானால் அனல்ஹக்கென்று கூறிய ஓர் உயர்திணைப் பொருளான மனிதனின் கூற்றை குபிராக, ஷிர்க்காக, கண்ட மக்கள் அம்மனிதரைக் கொன்றழித்த மக்கள் உலமாக்களாக, மார்க்க விளக்கம் பெற்ற மனிதர்களாக, பகுத்தறிவு தொழிற்படும் மக்களாக இருந்திருப்பார்களா? குர்ஆனில் இடம்பெறுகிற 57:3, 21:22, 7:85, 23:91, 43:84, 17:42, 21:99, 4:126, 2:115, 4:171, 2:224, 42:11, 2:186, 9:40, 47:4, 50:16, 6:162, 4:80, 8:17, 2:245, 48:10 போன்ற ஆயத்துகளை ஆராய்ந்து பாருங்கள், இவ்வாயத்துகள் தௌஹீதை உறுதிப்படுத்தும் தலீல் (ஆதாரம்)களாய் இருக்கின்றன. இவ்வித ஆயத்துக்கள் பெரும்பாலும் இருட்டடிப்புச் செய்யப்பட்டிருக்கின்றன. தௌஹீதை ஏற்றுக்கொள்ளாத சிலர்தான் இவ்வாயத்துக்களை இருட்டடிப்புச் செய்திருக்கிறார்கள். இக்கூட்டத்தினர் றசூல் (ஸல்) அவர்களுடைய கொள்கையான ஏகத்துவக் கொள்கையை (தௌஹீதை) உணர்ந்தவர்களென்பதை என்னால் ஒப்புக்கொள்ள முடியாது. தௌஹீதை வெளிப்படுத்திய மனிதர்களை மூடர்களாய்

வழிகெட்டவர்களாய்க் கண்ட போலிகள் பொறாமையின் விளைவாகவே மதத்தின் பெயரைக் கொண்டு பல படு கொலைகளைச் செய்திருக்கிறார்கள்.

இந்தக் கூட்டத்தின் கல்பில் நரகநெருப்பு எரிந்துகொண்டிருக்கிறது. மதம் என்ற, ஆட்டின் தோலைப் போர்த்துக்கொண்ட ஓநாய்க்கூட்டமே இந்த வேஷதாரிகள். இஸ்லாத்தின் பாதுகாவலர்களல்ல இவர்கள், றசூலைக் கொன்றொழிக்கமுயன்ற அபூஜஹ்லின் கையாட்கள் இவர்கள். ஷைத்தானின் கூலிப்படையினர் இவர்கள். இவர்களுக்கும் இஸ்லாத்துக்கும் எவ்விதச் சம்பந்தமுமே கிடையாது. காபிரீன்கள் கொண்ட அளவாவது பக்தியென்பது இவர்களிடமிருந்திருந்தால் இந்த துரோகத்தைச் செய்திருக்கமாட்டார்கள். ஷரீயத்தை அறிந்திருந்தால் 6:52ஆம் ஆயத்தின் விதிப்படி ஒரு தரீக்கத்வாதியின் விஷயத்தில் தலையிட இவர்கள் முன்வந்திருக்க மாட்டார்கள். இந்த ஆயத்தில் றசூலைக் கூடத் தரீக்கத்வாதிகளில் தலையிடவேண்டாம் என்று அல்லாஹ் கூறுகிறான். நீரும் அக்கிரமக்காரர்களில் ஒருவராகிவிடுவீர் என்று கூறுகிறான். பிக்ஹுடைய சட்டமாவது இவர்களுக்குத் தெரியுமா? தெரிந்திருந்தால் ஒரு ஹராமான மஜ்தூபுடைய விஷயத்தில் தலையிட்டிருக்க மாட்டார்கள். இக்கூட்டம் முக்திமான்களாய், தௌஹீதுவாதிகளாய் இருந்தால் மன்ஸுர் இப்னு கால்லாஜ்(றஹ்) அவர்களை ஒரு மேதையாகக் கண்டிருப்பார்கள். இதிலிருந்து நாம் புரிவதுதான் என்ன? நரகநெரும்பும் ஈமானும் ஒரு இடத்தில் வாசம் செய்யமுடியாது என்பதே.

இந்த அபூஜஹ்ல் கூட்டத்தினரின் வாரிசுகள் இப்போதும் இருக்கிறார்கள். மருதமுனை ஜம்இய்யதுல் உலமாசபையிலுள்ள ஒரு சிலரும் இக்கூட்டத்தினர்தான். இவர்களோடு நான் ஒருமுறை உரையாடும் போது குர்ஆனை இவர்கள் மறுத்துப்புரட்ட முற்பட்டார்கள். அன்பியாக்கள் அவ்லியாக்களைக் கொன்ற கூட்டத்தலுள்ளவர்கள்தா நீங்கள்? லாஹிர்உடைய உலமாக்களா? பாதினுடைய உலமாக்களா? இஸ்லாத்துக்கும் உங்களுக்கும்

தொடர்புண்டா? என்றுகூட நான் கேட்டதுண்டு. இவ்விதமான இரவல் மூளைக்கூட்டம் இஸ்லாத்தைப் படிப்படியாய் மூடிக்கொண்டுதான் இருக்கிறது. ஆயினும் இறுதிநாள் வரையிலும் இறைவன் உண்மையை வெளிப்படுத்திக்கொண்டுதான் இருப்பான். இரவல் மூளைக்கூட்டம் அடிக்கடி மண்கவ்விக்கொண்டும் திடல் திடலாய்த் தட்டலைந்து கொண்டும்தான் இருக்கிறது.

மூ∴மீன்களில் ஒருசாரார் பிரம்மச்சாரிகளாகவும் துறவிகளாகவும் காடுமலைகளில் ஏன் அலைந்தார்கள் என்பதை நோக்குவோம். இவர்கள் கலிமாவை விளங்கியறிந்திருந்தாலும் அவ்வுண்மையைத் திடீரென ஏற்றுக்கொள்ளும் மனோபக்குவமில்லாதவர்களாய் இருந்ததால், அம்மனோபக்குவத்தை உருவாக்கும் நோக்கமாகவே பசித்துத் தனித்து விழித்துக் காடுமலைகளில் அலைந்தார்களேயல்லாமல் இறைவனைத் தேடி அவர்கள் அலையவில்லை. இவர்களை அறிவுகுறைந்த மக்கள் பக்திமான்கள் ஹாஸிக்கீன்களென்று கூறினாலும். இவர்கள் பிறசமயப் பக்திமான்கள் ஹாஸிக்கீன்கள் போன்றவர்களல்ல. இவர்களுடைய பக்தி உண்மையில் தங்களை நிலைப்படுத்துவதே. இறைவனைக் காலத்தில் இடத்தில் கட்டுண்டவனாய்க் கணிப்பது குபிர் என்பதை இவர்கள் அறிவார்கள். இவர்களுடைய அறிவிலுள்ள மயக்கைத் தீர்த்து அறிவுத்தெளிவை (ஈமானை)ப் பெறுவதே இவர்களுடைய பக்தியாகும். இவர்களின் பக்திக்கு அணுகுமுறை, ஒழுங்கு என்பதே கருத்தல்லாமல் ஆசை, அன்பு என்பது பொருளல்ல. இவர்கள் அவ்லியாக்கள்தான். ஆயினும் நிரப்பம் பெறாதவர்கள். இன்னோர் தங்கள் உள்ளத்தைப் பக்குவப் படுத்துவது மட்டுமல்லாமல் இறைகுணங்கள் தங்களில் அமைய வேண்டுமென்பதற்காகப மிக அரும்பாடுபட்டவர்கள். இவர்களில் இன்னொரு வகுப்புண்டு. இவர்களில் பெரும்பாலார் காடுமேடுகளில் அலையாமல் இருந்தவர்கள். சரியான மனோ உறுதியுடைய இவர்களுடைய விஷயம் இங்கே நமக்கவசியமில்லை. இவர்களுடைய விஷயம் சாதாரண மனிதருடைய அறிவில் அமையக்கூடிய தல்ல.

றசூல் (ஸல்) அவர்களால் கூறப்பட்ட ஓர் ஹதீஸ், இருதய பரிசுத்தத்துடன் 40நாள் "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்ற கலிமாவை தியானம் செய்தால் 41ஆம் நாள் அவருடைய நாவில் இருந்து புறப்படுவது அல்லாஹ்வின் பேச்சாக இருக்குமென்று விவரம் தருகிறது. இது உண்மையிலும் உண்மையே. இந்த நாற்பது நாட்களும் வேறு எவ்வித பராக்குமில்லாமல் பசி, தனிமை, விழிப்பு முதலாம் கட்டுப்பாடுகளுடன் கலிமாவை முறாகபா செய்துகொண்டிருந்தால் அறிவிலுள்ள மருட்சியென்ற திரைகள் நீங்கிவிடுகின்றன. அங்கே மருட்சியில்லாத (திரையில்லாத) அறிவு வெளியாகிறது. இதுதான் கல்வத் என்பது. இது மனிதர்கள் யாவராலும் கையாளக்கூடிய ஒரு விஷயமல்ல, இவ்விஷயத்தை இலகுவாக்கித் தரப்பட்டவைதான் ஷரீயத்திலுள்ள அமல்கள். ஒரு நாளைக்கு 5 வேளையாவது இறை ஞாபத்தை உருவாக்கிப் படிப்படியாய் மனிதனை உயர் நிலைக்குக் கொண்டுபோக வேண்டும் என்பதுதான் நோக்கம். நான் யார்? என்ற கேள்விக்குச் செயல் விளக்கம் தந்து அனுபவம் பெறச் செய்வதே இஸ்லாத்தின் உண்மையான நோக்கம் என்பதை நம்மில் மிகப்பலர் அறிந்து கொள்ளவில்லை. ஒருசாரார் காட்டில் தங்கியிருந்து தவம் செய்த காரணம், மனத்தைப் பரிசுத்தமான நிலைமையில் அமைத்து, அதன் வாயிலாய்த் தன்னை உணர்ந்து கொள்வதற்காகத்தான். இதைத்தான் இறை ஐக்கியம் என்பது. இறைவனும் மனிதரும் ஒன்றாய் விட்டனவென்பது பொருளல்ல. மதுபானத்தில் மயங்கிய ஓர் அரசன், தன்னைத் தன் நிலைமையை மறந்துவிட்டதுபோல, அரசனாயிருந்த இன்ஸான் வஹ்மு என்ற போதையில் மூழ்கியதால் தன்னை மறந்த நிலையில் வாழ்கிறான். இந்த வஹ்மிலிருந்து விடுபடுவதற்காகக் கையாளப்படும் செயல்கள் தான் தொழுகை, திக்கிர் முதலாம் அமல்கள். இவ்வமல்களின் உண்மை நோக்கம் அறிவுத்தெளிவு (ஹக்குல் எகீன்) ஏற்பட வேண்டுமென்பதாகும். அறிவிலேற்பட்ட மருட்சியை நீக்கிப், பல என்ற நம்பிக்கையை அகற்றி உள்ளது உஜூது மட்டுமே என்றும் நான் உஜூதை விட்டு வேறல்ல என்றுமுணரச் செய்வதே இஸ்லாம் என்பது. இது வெளிநோக்கில் பக்தியென்று தென்பட்டாலும் பெயர்பெற்றாலும், உண்மையில் இஸ்லாம் முக்திமார்க்கமேயன்றித் துவித

சித்தாந்தமல்ல. முஸ்ரீக் அல்லது காபீருடைய பக்திக்கும் இஸ்லாததின் பக்திக்கும் வேறுபாடில்லையென்றால் இஸ்லாம் அவசியமற்ற மதமென்றாகுமல்லவா? விஷயம் அப்படியல்ல மூட பக்தியில் சிக்குண்ட மனித குலத்தை முக்தியின்பால் செலுத்துவதே இஸ்லாம் என்றால் அதில் துவிதம் நுழைய முடியாது. ஒரு கண்ணோட்டத்தில் "லாஇலாஹ" என்பது நாத்திகமாயும் இல்லல்லாஹ் என்பது ஆத்திகமாயும் இருக்கிறது. ஆகவே, இஸ்லாம் மனிதக் கற்பனையில் ஆத்திகம் போலும், நாத்திகம் போலும் தென்பட்டாலும் உண்மையை ஆராய்ந்து பார்த்தால் இஸ்லாத்தில் ஆத்திகமோ, நாத்திகமோ கிடையாது. ஆத்திகம் நாத்திகம் ஒருமை பன்மை எல்லாம் மனித அறிவின் ஒவ்வொரு படித்தரத்திலுள்ள வெறும் மருட்சிதான். இஸ்லாத்தின் அடிப்படை, இவ்வித வாதப்பிரதி வாதங்களையெல்லாம் செல்லாக் காசாக மாற்றி அழித்துவிடுகிறது. வுஜூதையன்றி இல்லையென்னும் போது சிருட்டியறிவு தலைகாட்ட முடியுமா?

பிறமதவாதிகளில் ஒருசாரார், இஸ்லாம் விளக்கும் உண்மைத் தௌஹீதை, ஏகத்துவத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார்களென்பது உண்மையானாலும் கூடக் கலிமாகூறாமலும் இஸ்லாத்தின் கடமைகளில் ஈடுபாடுகொள்ளாமலும் இருக்கிறார்களே! இவர்களை நாம் எவ்வகுப்பில் எந்த மதத்தில் சேர்ப்பது?

கலிமாவை நாவினால் கூறி முஸ்லீமாவது சட்டத்துக்கமைவான ஒன்று. இஸ்லாத்தின் தொழுகை முதலாம் கடமைகளில் ஈடுபாடு கொள்வதும் சட்டத்துக்கமைவானதே. இச்சட்டங்களின் உண்மையான அடிப்படை முறாக்கபா செய்யத்தூண்டுவதுதான். இந்த முறாக்கபா மனித அறிவுக்கேற்றபடி 4 படித்தரங்களைக் கொண்டதாய் இருக்கிறது. இந்த முறாக்கபாவினால் ஏற்படுவதுதான் ஈமான் என்பது. இதற்குக் கலிமாவை நாவினால் கூறவேண்டுமென்பது அவசியமல்ல. கலிமாவை நாவினால் கூறவேண்டுமென்று சட்டம் இயற்றப்பட பல காரணங்களுண்டு. இது ஷரீயத்தோடுள்ள விஷயமாகையால் நான் இதை விவரிக்கவில்லை. கலிமாவை நாவினால் கூறுவது

ஆரம்ப பர்லேயன்றி முக்கிய பர்லாகாது. முக்கிய பர்லு விளங்கியறிவதும் கல்பில் பதிப்பதும்தான். ஆகவே ஒருவர் தன் சுயசிந்தனையினால்தான் தௌஹீதைப் பெற்றுக் கொண்டவராயிருப்பினும்கூட அவர் ஓரு மூ.்மீன்தான். இவரைத் தற்கால சட்டம் ஓரு முஸ்லீமல்ல என்று மறுக்கலாம். ஆனால் எந்தச் சட்டமும் இவரை ஓரு மூ.்மீன் என்பதை மறுக்க முடியாது. ஈமானின் உண்மை இறைவனால் அறியப்படக்கூடியது.

குர்ஆன்: 2:62

(முஸ்லீம்களிலுள்ள) மூ.்மீன்களாயினும், யூதர்களாயினும், கிறிஸ்தவர்களாயினும், ஸாபியீன்களாயினும், எவர்கள் அல்லாஹ்வையும், இறுதிநாளையும், உண்மையாகவே விசுவாசித்து நற்கருமத்தைச் செய்கிறார்களோ அவர்களுக்கு அவர்களுடைய கூலி அவர்களுடைய இறைவனிடத்தில் நிச்சயமாக உண்டு; மேலும், அவர்களுக்கு எவ்விதப் பயமுமில்லை; அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்,

இந்த ஆயத்து மாற்றப்பட்ட "மன்ஸுக்" கைச் சேர்ந்ததல்ல. இந்த ஆயத்தில், வழக்கிலுள்ள சில பிக்ஹுச் சட்டங்களை மீறிய சில உண்மைகள் புதைந்துள்ளன. இதை வாசகநேயர்களான நீங்களே விளங்கித் தெளிவு பெறுவதே நல்லது. ஈமானுக்காகவே இஸ்லாம் என்பதைப் புரிந்து கொண்டால் ஆயத்து இலகுவாய் விளங்கிவிடும். ஈமான் சூட்சுமமானது. இதை அறியக்கூடியவன் இறைவன் மட்டும்தான். இஸ்லாம் வெளிப்படையானது. இஸ்லாம் இனவாரியாய், மதவாரியாய் மக்களைப் பிரித்து ஒதுக்குவதல்ல. மக்களை இஸ்லாம் இரண்டு வகையாய் விளக்கமளிக்கிறது. ஒன்று முஸ்ரீக், மற்றொன்று மூ.்மீன். மூ.்மீன் அங்கீகரிக்கப்பட்டவராயும் முஸ்ரீக் அங்கீகரிக்கப்படாதவராயும் இருக்கிறார். மூ.்மீனின் வெளி அமல்கள் உலகோடொட்டிய வாழ்க்கை அம்ஷங்களில் ஒன்றுதான் இந்த அமல் ஈமானை உறுதிப்படுத்துமானால் அது ஏற்றுக்கொள்ளப் பட்டதாயும் ஈமானைப் பறிக்குமானால் தவிர்க்கப்படவேண்டியதாயும் இருக்கிறது. உலக மக்கள் யாவரும் ஒரே தாய்தந்தையின் பிள்ளைகளான ஓரு குடும்பத்தினர்தான் என்பதை இஸ்லாம் வற்புறுத்திக் கூறிக்கொண்டிருக்கும் போது ஈமானுடையவர் யாராய்

இருப்பினும் அவர் ஒரு முஸ்லீம்தான். நடைமுறைகளில் வேறுபடினும் நாம் அதைப் பொருட்படுத்துவேண்டியதில்லை. நாம் தந்த இந்த 2:62ஆம் ஆயத்தை மீண்டும் பாருங்கள். அல்லாஹ்வையும் இறுதி நாளையும் ஈமான் கொண்டவர்கள் என்றுதான் இறைவன் கூறினானேயன்றி றசூல் (ஸல்) அவர்களையும் அத்துடன் இணைத்துக் கூறவில்லை. முஹம்மதுரசூலுல்லாஹ் என்பது கலிமாவிலுள்ள உபவாக்கியமேயன்றி அதுவே தௌஹீதுக் கலிமா என்பதல்ல. இதில் நுட்பமுண்டு. அமல்கள் இன்றியும் ஈமான் பிரயோசனம் செய்யும் என்பதுதான் சுன்னத்வல் ஜமாஅத்தாரின் கொள்கை. எமது கொள்கையும் இதுவே. ஆதாரம் குர்ஆன் ஹதீஸ்கள். இதைப் போல ஈமானற்ற இஸ்லாம் (அமல்கள்) பிரயோசனம் தராதென்பதும் உண்மைதான். உலக மக்கள் யாவரிலும் மூ.்மீன்களுண்டு. ஆனால் படித்தரங்கள் வெவ்வேறாய் இருக்கலாம்.

குர்ஆன்: 12:108
(நபியே!) நீர் கூறும் ''இதுவே எனது வழி; நான் அல்லாஹ்வின் பக்கம் அழைக்கிறேன்; தெளிவான ஆதாரத்தின் மீதே நானும் என்னைப் பின்பற்றியவர்களும் இருக்கிறோம்; (இணை, துணைகளை விட்டு அல்லாஹ் மிகப் பரிசுத்தமானவன். ஆகவே, அவனுக்கு இணை ஏற்படுத்துவோரில் நானும் ஒருவனல்ல.

இவ்வாயத்தின்படி அல்லாஹ்வுக்கு எவன் இணை ஏற்படுத்தாமல் இருக்கிறானோ அவன் எந்த நாட்டவனாயிருப்பினும் எந்த இனத்தவனாயிருப்பினும் அவன் றசூல் (ஸல்) அவர்களை மனப்பூர்வமாய் ஏற்றுக்கொண்டவனாயும் அவன் றசூலைப் பின்பற்றிய நல்லடியார்களிலுள்ள மூ.்மீனாயும் இருக்கிறான் என்பதையும் மறுக்க முடியுமா? தொப்பியணிதல் ஜிப்பா அணிதல் கலாச்சாரமேயன்றி மதமல்ல. நாம் தந்த 2:62ஆம் ஆயத்தில் அச்சமற்றவர்கள் துக்கமற்றவர்கள் என்று இறைவன் கூறுகிறான், அச்சமற்றவர்கள் வெற்றி பெற்ற நல்லடியார்களே. மூ.்மீன்கள் யாவரும் முஸ்லீம்கள்தான். முஸ்லீம்கள் யாவரும் மூ.்மீன்கள் தானென்று கூற முடியாது. முஸ்லீம் பௌதீகப் புலன்களிலமையலாம். ஈமான் புலன்களில் அமையாது.

ஹதீஸ்:

நபூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள் இஸ்ரவேலர்கள் 72 கூட்டங்களாய்ப் பிரிந்தார்கள். என்னுடைய உம்மத்துக்கள் 73 கூட்டமாய்ப் பிரிவார்கள். ஒரு கூட்டத்தினரைத் தவிர மற்றெல்லாக் கூட்டத்தினரும் நரகவாதிகளாவர். (உடனே ஸஹாபாக்கள்) அகக்கூட்டத்தினர் எவர்? என்று கேட்டபோது நானும் என்னுடைய ஸஹாபாக்களும் எந்தக் கொள்கையில் இருக்கிறோமோ அக்கொள்கையையுடையவர்கள் என்று நபூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இந்த ஹதீஸை இமாம் திர்மிதி (றலி) அவர்களும் அபூதாவூத் இபுனுமாஜா, அஹ்மதிப்னுஹன்பல் (றலி) போன்றோரும் தங்களுடைய கிரந்தங்களிலும, மிஸ்காத்தின் விரிவுரையான "மிர்க்காத்" என்ற நூலில் அதன் ஆசிரியர் முல்லா அலீகாரி போன்றோரும் மிகத் தெளிவாய் விளக்கம் தந்துள்ளார்கள். நபூல்(ஸல்) அவர்களும் அவர்களின் தோழர்களும் ஏற்றுக் கொண்டிருந்த தௌஹீதுக் கலிமாவினால் உறுதிப்படுத்தப்பட்ட ஏகத்துவக் கொள்கையை ஏற்றுக்கொண்டவர்கள் எவர்களோ அவர்களே சுன்னத்வல் ஜமாஅத் கூட்டத்தினராவார்கள். இக் கொள்கையை நிலைப்படுத்த உபயோகிக்கப்படும் நல்ல செயல்கள் யாவும் இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டவைதான். கொள்கை குறிக்கோளையடையச் செய்யுமேயன்றி விஷமமும் மருட்சியும் பிரயோசனப்படாது.

உண்மையான இஸ்லாம் என்பது (ஸுபிஸம்) ஏகத்துவக் கொள்கையுடையதேயன்றி உலூஹியத்தில் ஒருமைப்படுத்தல் (ஒரே தெய்வக் கொள்கை) என்பதல்ல. இவ்வுண்மையை ஒருசில நல்லடியார்கள் கூறிய காலங்களிலெல்லாம், தைமியா, அப்துல் வஹ்ஹாப், நஜ்த், இல்யாஸ் போன்றோர் இஸ்லாத்தின் கொள்கை தெரியாத காரணத்தினால் மூடிமறைத்துப் புரட்டி இருட்டடிப்புச் செய்து, இஸ்லாம் பக்திமார்க்கமே என்று மக்களை மருட்டியிருகிறார்கள். எத்தனையோ பக்திமார்க்கங்கள் இருக்கும்போதும் இஸ்லாம் என்றோர் பக்திமார்க்கம் அவசியமல்லவே! இதை உணரக்கூடிய மக்கள் மிகக் குறைவுதான்.

ஸுபிஸம் என்ற போர்வையிலும் சில கரடிகள் வாழ்கின்றன, சில குள்ள நரிக்கூட்டமும் வாழ்ந்துகொண்டிருக்கின்றன என்பதை நானறிவேன். கலிமாவுக்கு பொருள் தெரியாத லேபல் ஸுபிகள் கூட இன்றைய உலகிலுண்டு. நான் விளக்கிய ஸுபிஸம், இஸ்லாம், குர்ஆன், ஹதீஸுகளினாலும் றசூல் (ஸல்) அவர்களாலும் ஸஹாபாக்களாலும் விளக்கப்பட்ட சுத்த சத்தியமான (தௌஹீது) ஏகத்துவக் கொள்கையை அடிப்படையாய்க்கொண்ட தீனுல் இஸ்லாமாகும். இதுதான் சுன்னத்வல் ஜமாஅத்தார் கொண்டிருந்த இஸ்லாம், இறைவன் ஏற்றுக்கொண்ட தீனுல் இஸ்லாம் இதுதான்.

பிறமதத்திலுள்ள ஒருசில பக்திமான்களுக்கும் சிற்சில அற்புத நிகழ்ச்சிகள் நடைபெற்றிருப்பதாக நாம் அறிந்திருக்கிறோம். அவர்கள் நானும் இறைவனும் இருக்கிறோம் என்ற துவித உணர்வோடுதானே அற்புதங்களைச் செய்திருக்கிறார்கள், அப்படியானால் மூ∴மீனில் வெளியான கறாமாத், முஹ்ஜிஸாத்துக்கும், பிறமதப் பக்திமான்களில் வெளியான அற்புதத்திற்கும் வேறுபாடு என்ன? என்றொரு கேள்வி பிறக்கிறது. அற்புதம் என்று மக்களால் கூறப்படும் சித்துவுக்கும் கறாமாத் முஹ்ஜிஸாத்துக்கும் மிகமிக வேறுபாடுண்டு. எந்த ஒருவருக்கு அற்புதம் (சித்து) வெளியாகுமோ அவர் மனோவட்டத்துக்குள் கட்டுண்ட எல்லைமட்டிலும் அவருடைய அற்புத நிகழ்ச்சிகளைக் கையாளக்கூடும். இது மனிதனின் மனதில் (அறிவின்) வலிமைதான். இதற்கு எல்லையுண்டு. காரணக்காரியப் பொருத்தமுண்டு. இவ்வித நிகழ்ச்சிகள் மனோவலிமையினாலும் உண்டாகலாம், தெய்வ அனுக்கிரகத்தினாலும் உண்டாகலாம். மனோவலிமையால் உண்டாவதுதான் ஹிப்நாடிஸம், வாஸிலாத் போன்றவை தெய்வ அனுக்கிரகத்தினால் உண்டாவது, பக்தியினால் கிடைப்பதல்ல. நெருப்பிலிடப்பட்ட இரும்பு. தானே நெருப்பாயும் இரும்பாயும் வேறென்றில்லாதிருப்பதுபோல அனாநிய்யத் அழியும் போது படிப்படியாய் இந்த நிகழ்ச்சிகள் உருவாகலாம். இப்படிப்படவைதான் கறாமாத் முஹ்ஜிஸாத் என்பவை. இதன் சரியான உண்மை, இந்த நிகழ்ச்சிகள் மனிதனால் செய்யப்படுபவையல்ல, மனிதனை மழ்ஹறாய் கொண்டு இறைவனே செய்கிறான். மனிதனுக்கு இதில் பங்கில்லை. இந்த நிகழ்ச்சிகள் காரணகாரியத்தோடும்

இருக்கலாம். காரணகாரியத்தோடுள்ளவை, கறாமாத் என்று கூறப்படும். துன்யாவில் சிற்சில காரணங்கள் தென்பட்டாலும் அக்காரணங்களைக் கடந்து கலாகத்ர் ஹுக்கும் போன்றவற்றைக் கூட மீறி நிற்கும் செயல்கள் முஹ்ஜிஸாத் என்று கூறப்படும். இது மூ.்.மீன்களின் விஷயம். பிறமத பக்தர்களிலும் இவ்வித நிகழ்ச்சிகள் நடைபெற்றால், அவரை நாம் பிறமத பக்தர் என்று கூறினாலும் உண்மையில் அவர் அனாநிய்யத்தை மாய்த்தழிக்க முயலும் மூ.்.மீனாகவே இருப்பார். இதைச் சாதாரண மனிதன் அறிந்துகொள்ளவே மாட்டான். சித்துக்கு பயிற்சி அவசியம், கறாமாத், முஹ்ஜிஸாத்துக்களுக்கு எவ்வித பயிற்சியும் கிடையாது. நல்லடியார்களில் பலருக்குத், தமக்குக் கறாமாத் உண்டு என்பதுகூடத் தெரியாது.

ஹதீஸ்:
இருதய அடக்கமும் அவயவ சாட்டாங்கமுமேயன்றி மற்றப்படி யாதோர் தொழுகை (வணக்கம்) கிடையாது.

ஹதீஸ்:
தொழுகை, ஹஜ்ஜு, தவாபு, முதலான மற்றும் எல்லா (வணக்கங்களையும்) அமல்களையும் பர்லாக, சுன்னத்தாக ஆக்கிக் கற்பிக்கப்பட்டதெல்லாம் அல்லாஹ்வைப் பற்றிய ஞாபகம் நிலைப்படுவதற்காகவே.

இன்னும் பல ஹதீஸுகளைத் தரலாம். இவற்றிலிருந்து நாம் புரிந்துகொள்வது, கொள்கையைக் கல்பில் பதிப்பதற்குரிய பயிற்சி நெறிகள் (அணுகுமுறைகள்)தான் அமல், இபாதத், வணக்கம், திக்கிர் போன்றவையென்பதே.

குர்ஆன்: 96:19
(உமதிறைவனுக்கு சிரம் பணிந்து) ஸுஜூது செய்து அணுகுவீராக.

ஸுஜூது என்பதற்கு அந்தரங்கமுமுண்டு, ஷரீயத் தரீக்கத் விபரம் மட்டுமே இங்கு சுருக்கமாய்த் தரப்படுகிறது. ஏழு உறுப்புகள் நிலத்தில் படும்படி செய்யப்படும் (உடலால் செய்யப்படும்) ஸுஜூதுக்குச் சிர வணக்கம் என்றும், உள்ளத்தால் இறைவன்

பாதத்தில் செய்யப்படும் ஸுஜூதுக்கு சரணடைதல் என்றும் கூறுகிறோம். இதற்கப்பாலும் ஸுஜூது உண்டு. இந்த எல்லாவிதமான ஸுஜூதுகளும் இறைவனை நெருங்கிச் சேர (அணுக) உதவியாய்க் கையாளப்படும் அணுகுமுறைப் பயிற்சிகளேயாகும். இதை அறிஞர்கள் இலகுவாய் உணர்வார்கள். இவ்வித பயிற்சிகளையே பக்தி மார்க்கமென்று அறியாத மக்கள் மருட்சியடைகிறார்கள். கலிமாவைச் சரிவர விளங்கிக்கொண்டால், இஸ்லாத்தில் விதிக்கப்பட்டுள்ள அமல்கள் யாவும் அணுகுமுறைப் பயிற்சிகளே என்பதைப் புரிந்து கொள்ளலாம். இஸ்லாத்தின் நோக்கம் பக்தி என்ற தளையில் மருண்டுகொண்டிருக்கும் மனிதனை முக்தியில் சேர்ப்பதே பக்தியென்பது துவித சித்தாந்தமேயன்றித் தெளஹீதாகாது.

"லாஇலாஹ இல்லல்லாஹ்" என்ற கலிமாவுக்கு அல்லாஹ் தவிர இலாஹு இல்லை(அல்லாஹ்வையன்றி இல்லை, இருப்பது அல்லாஹ் மட்டுமே) என்று நாம் பொருள் கூறினால் இதைக் கேட்டுக்கொண்டிருந்த மனிதன் உடனே ஒரு கேள்வி கேட்கிறான். நாயும் பன்றியும் மலமும் ஜலமும் நானும் நீங்களும் அல்லாஹ்தானா? என்பதே, கலிமாவைக் காதினால் கேட்டவுடன் பிறந்த கேள்வி. இக்கேள்வி ஏன் பிறக்கிறது? இப்படியோர் கேள்வி கேட்க வேண்டிய அவசியம் கலிமாவைக் கேட்பதற்கு முன் அம்மனிதனுக்கிருந்ததில்லை. ஏன்? அவனுடைய சிந்தனா சக்தி, யூகம், உறங்கிக்கொண்டிருந்தது. கலிமாவைக் காதால் கேட்டபோது சிந்தனா சக்தி, யூகம், அனுமானம் உறக்கத்திலிருந்து விழிப்படைகிறது. தொழிற்படுகிறது. கேள்விக்கு விடை கண்டறிய முயல்கிறது. அறியாததை அறிந்து கொள்ளத் துடிப்பது இருதயத்துக்குரிய இயற்றன்மையாகும். இதற்காகவே மனிதன் பிறந்திருக்கிறான். கேள்விகளுக்கு விடை கிடைத்துவிட்டால் அந்தச் சிந்தனா சக்தி மேலும் மேலும் வலுப்பெற்றுக் கலிமாவினால் உணர்த்தப்படும் அனுபவமாய் அமைந்து விடுகிறது. இங்கே பக்தியென்பதே கிடையாது. நடைபெற்றது அறிவு வளர்ச்சியேயன்றி வேறில்லை. கேள்விகளுக்கு விடை கிடைத்தவன் இறந்தவனாயிருந்து உயிர் பெற்றவனாகிறான். ஐயாமுல்

ஜாஹிலியாக்காலம் என்பது அபூஜஹ்லின் காலம் என்பது மட்டுமல்ல, கலிமாவின் உண்மையை உணராத மனிதனும் ஜாஹிலியாக் காலத்தவன்தான். எப்போது கலிமாவை உணர்ந்துகொள்கிறாரோ அப்போது அவர் நூர் என்ற அறிவுப் பிரகாசத்தில் (றசூலுடைய காலத்தில்) வாழ்ந்தவர் போலாகிறார். இவர் இந்த நிலைக்குத் தள்ளப்படுவது கலிமா என்ற மருந்தினால்தான். இவருடைய தூக்கம் கலைந்ததும் கலிமாவினால் தான். இக்கலிமாவை விளக்கி இவருடைய கேள்விக்கு விடை கிடையாதிருந்தால் இவர் இறக்கும்வரையிலும் பக்தியென்ற தளையில் மாட்டிக்கொண்டு உறங்குபவரேயாவார். இவருடைய ஈமானற்ற மூட பக்தியின் செயல்கள் உடல் வேதனையேயன்றிப் பிரயோசனம் தராது.

இஸ்லாம் கொள்கை விளக்கத்தைத் தந்தபோதே தூங்கிக் கிடந்த சிந்தனையை விழிப்படையச் செய்துவிடுகிறதென்பதை எவரும் மறுக்க முடியாது. இந்தச் சிந்தனை சிதறாமல் ஒருமுகப் படுத்தப்பட்டு பக்தியென்ற தளையை நீக்கி, அறிவை உண்மையாக உறுதியடையச் செய்வதற்காகவே உள்ளத்தையும் உடலையும் ஒன்றிணைத்த அணுகுமுறைப் பயிற்சிகள், அமலாகத்தரப்பட்டிருகின்றன். இஸ்லாத்தின் நோக்கம், மனிதனுக்குள்ள வஹ்மு என்ற பேதபுத்தியை நீக்கி அறிவு வெளிச்சத்தைத் தந்து நான் யார்? என்ற கேள்விக்குரிய விடையை அனுபவவாயிலாய் விழங்குவதேயாகும். ஆகவே இஸ்லாம் பக்தி முக்தி என்ற இரு தன்மைகளோடிருப்பினும் இஸ்லாம் என்பது பக்திமார்க்கமோ முக்திமார்க்கமோவல்ல. இஸ்லாம் இவ்விதக் கட்டுப்பாடுகளைக் விட்டும் மிகமிகத் தூய்மையானது. இஸ்லாம் ஒரு தனிவழியே. இஸ்லாம் மனித சிந்தனையைத் தூண்டுவதேயன்றி, மனித அறிவை இயங்காமல் தடைப்படுத்துவதல்ல. இன்றைய உலகில் இஸ்லாம் என்றால் சிந்தனையைத் தடைப்படுத்தும் வழி என்பதே பொருள் என்று கொள்ள வேண்டி இருக்கிறது. ஆயினும் முக்தி என்ற சொல் பூரணம் என்ற பொருளைத் தருவதால் இஸ்லாத்தை முக்திமார்க்கம் என்று நாம் கூறுவதில் தவறில்லை. கலிமாவைத் துவித சித்தாந்த மந்திரமாய் (அல்லாஹ் வேறு சிருட்டி வேறு என்று) கொண்ட

வஹ்முடைய மக்களுக்கு இஸ்லாம் பக்தியை வளர்ப்பதுபோல் தென்படினும், உண்மையில் இஸ்லாம் பக்தியென்ற மருட்சியிலிருந்தும் விடுவிப்பதேயன்றி வேறில்லை. அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாத நானும் இருக்கிறேன் என்று நம்புவதே அனாநிய்யத் என்பது. இது சுத்தமான ஷிர்க் ஆகும்.

குபிர், மற்றும் விஷயங்களெல்லாம் இதன் கிளைகளே. இந்த ஷிர்க்கென்ற நஜீஸில் இருந்தும் மனிதனை விடுவித்து, இறை குணங்கள் வெளியாக உதவி செய்வதே அமல் இபாதத் தரப்பட்ட நோக்கமென்றால், அனாநிய்யத்தை (கற்பனையான மருட்சியை) அறிவிலிருந்து நீக்குவதே இஸ்லாத்தின் குறிக்கோளாயிருக்கிறது. இதை உணர முடியாத அறிவு குறைந்த மக்கள் இஸ்லாம் பக்திமார்க்கமென்று மருண்டு கொண்டிருந்தாலும் உண்மையில் இஸ்லாம் பக்தி மார்க்கமேயல்ல. இவ்வுண்மையைக் கூறும்போது இதை நாத்திக வாதமாய்க் கணிக்கும் சில அறிஞர்களும் நம்மிடையேயுண்டு. இஸ்லாம் நாத்திகவாதமுமல்ல, ஆத்திகவாதமுமல்ல. இஸ்லாம் ஓர் தனிவழி. இடைச்செருகல்கள் எதுவுமே அவசியமில்லாத ஓர் இயற்கை வழிதான் இஸ்லாம். ஆயினும் இஸ்லாத்தின் பூரண உண்மையை அறிந்துகொள்ளாத ஒரு சில மக்கள் தொழுகையே இஸ்லாம் என்று கூறக்கூடிய அளவுக்குத் திரிபுபடுத்திவிட்டிருக்கிறார்கள். இன்றைய சமூகத்தில் இவ்வுண்மை கூறப்படும் போது மாபெரும் புரட்சியொன்று உருவாகலாம் என்பது உண்மை. காரணம்? பெரும்பாலான மக்கள் ஆராய்வில்லாமல் வெறும் பின்பற்றலில் மதத்தைக் கடைப்பிடிப்பதே. குளக்கரையில் மேய்ந்துகொண்டிருக்கிற பசுமாடுகளில் ஒன்று வாலைத் தூக்கித் துள்ளிக் குதித்து ஓடத்தொடங்கினால் எல்லா மாடுகளுமே ஓட ஆரம்பிக்கின்றன. நாம் ஏன் ஓடுகிறோமென்பதுகூட அந்தக் கால்நடைகளுக்குத் தெரியாது. இது ஒத்துணர்வினால் நிகழ்வதேயன்றிச் சுயசிந்தனையினால் நிகழ்வதில்லை. மத விஷயத்தில் உண்மையை மறுக்கும் பெரும்பாலான மக்கள் இந்த நிலையில் தான் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

குர்ஆன்: 2:171

(குருட்டுத்தனமாய்த் தங்கள் மூதாதையர்களைப் பின்பற்றும்) அந்தக் (காபீர்களின்) நிராகரிப்பவர்களின் உதாரணம்; (அர்த்தத்தை உணராமல்) கூச்சலையும்; ஓசையையும் மாத்திரம் பின் பற்றிச் செல்லும் (கால்நடைகளான மிருகங்களின்) உதாரணத்தை ஒத்திருக்கிறது; ஊமையர்களாகவும்; செவிடர்களாகவும் இருக்கினறனர் ; ஆதலால் அவர்கள் அறிந்துகொள்ள வேண்டாமா?

குர்ஆன்: 31:21

அவர்களை நோக்கி ''அல்லாஹ் இறக்கியதைப் பின்பற்றுங்கள்'' என்று கூறப்பட்டால், அதற்கு அவர்கள், ''இல்லை எங்கள் மூதாதைகள் எதன் மீதிருக்கக் கண்டோமோ அதனையே பின்பற்றுவோம் என்று கூறுகின்றனர்'' அவர்களுடைய மூதாதையர்களை ஷைத்தான் நரக வேதனையின்பால் அழைத்திருந்தாலுமா? (பின்பற்றுவார்கள்?)

இல்லாத ஒன்றைக் கற்பனையினால் உருவாக்குவதும் அதை உவப்பதுமே பக்தியென்று மனிதன் பெரும்பாலும் நம்பியருக்கிறான். இது வெறும் மூடப்பக்திதான். இருப்பதை உவப்பதே பக்தியாய் இருக்கிறது. இருப்பது இரண்டில்லாத ஒன்றுமட்டுமே என்றறியும் போது பக்தியென்ற சொல் செயலிழந்துவிடும். உவப்பவன், உவக்கப்படும் பொருள், உவப்பு இம்மூன்று அம்சங்களும் அமையாமல் பக்தி, உவப்பு, ஆசை, வேண்டுதல் என்பவை இடம்பெறா. இஸ்லாத்தின் கலிமா உள்ளது, வுஜூது, என்ற அல்லாஹ் மட்டுமே என்று வலியுறுத்துகிறது. அதனுடன் அதுவல்லாத எதுவுமே இல்லையென்று ஆணித்தரமான ஆதாரங்களுடன் வலியுறுத்துகிறது. ஆகவே இஸ்லாத்தின் ஆரம்பம் பக்தியில் ஆரம்பித்தாலும் பக்தியை ஒழிப்பதாய் இருக்கிறது. இது ஒரு நாளில் முடியக்கூடிய ஒரு வேலையல்ல. ஆகையால்தான் அனாநிய்யத்தினால் உருவான தவறான பக்தியை நான்குபடித் தரங்களில் முற்றாய் ஒழித்துவிட, அனாநிய்யத்தை அழித்து நஜீஸிலிருந்தும் விடுபட இஸ்லாம் வழிவகுத்துத் தந்திருக்கிறது. இருளில் கிடந்து அல்லலுறும் மனிதனை ஜோதியின் பக்கம் அழைத்துச்சென்று ஆறுதலளிக்க முயலுகிறது. இஸ்லாத்தின் கொள்கையான கலிமத்துத்தையிபா.

நித்திய ஜீவனான(வுஜூது) அல்லாஹ்வுடன், அழிந்தொழியும் அற்பனான நானும் ஒரு வுஜூதாய் இருக்கும் பொருளாய், இருக்கிறேனென்று நம்புவதே ஷிர்க் என்பதைத் தெளிவாய் உணர்ந்துகொள்ளும் அறிஞர்கள் இஸ்லாம் ஒரு தனிவழியென்று நான் கூறியதை ஒப்புக்கொள்வார்களென்பது எனது நம்பிக்கை. ஒருசில அறிஞர்கள் இருப்பியல் வாதம் என்று ஒரு கொள்கையை உருவாக்கியுள்ளார்கள். பொருள் முதல் வாதம் என்பது இக்கொள்கைதான். இருக்கும் பொருளான பௌதீகத்தையன்றி வேறொன்றில்லாதிருப்பதால் இந்தப் பௌதீகத்தை அடிப்படையாய்க் கொண்டு உலோகாதாய நோக்குடன் உருவாக்கப்பட்டதே இக்கொள்கை. கார்ல் மாக்ஸ், லெனின் போன்றோரின் கொள்கை இவ்வடிப்படையிலுள்ளதே. ஆனால் உண்மையான இருப்பியல்வாதம் என்பது இஸ்லாத்தின் கொள்கையான தௌஹீதாக இருக்கிறது. இதைத்தான் வஹ்தத்துல் வுஜூதுக் கொள்கையென்று கூறப்படுவது இருப்பது வுஜூது மட்டுமே என்பதை அடிப்படையாய்க் கொண்டு அதன் ஸிபத்து அஸ்மாக்களை விளங்கித் தெளிவுபெற்று உண்மையான தன் நிறைவை (பூரணத்தன்மையை)ப் பெறுவதே இந்த இருப்பியல்வாதம் என்ற தௌஹீதுக் கொள்கையின் நோக்கமாய் இருக்கிறது. இதை அமுல்படுத்தும் பயிற்சிகளே அமல்களாகும். இப்பயிற்சிகள் இம்மை மறுமைக்குரிய சகல நன்மைகளையும் பொதிந்தவையாய் இருக்கின்றன. ஆதலால் இஸ்லாத்தையும் அதன் கொள்கை விளக்கத்தையும் தெளிவாய் விளங்கியறிந்து செயற்படுவதே இம்மை மறுமையின் வெற்றிக்கு வழியாகும்.

ஹதீஸ்:

நடுநிலைமையைக் கொண்டு இறை முன்நிலையை எய்திக் காலையிலும் மாலையிலும் இரவின் பிற்பகுதியிலும் வணக்கத்தில் பெரும்பாலும் ஈடுபடுங்கள், மார்க்கப் பிரசாரமும் செய்யுங்கள். மேலும் அறிந்துகொள்ளுங்கள், நிச்சயமாக எவருடைய வணக்கமும் அவரைச் சுவர்க்கம் சேர்த்துவிடாது என்று றசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது நாயகமே! தாங்கள்!!.... என்று மக்கள் வினவினார்கள். அதற்கு றசூல்(ஸல்) அவர்கள் முடியாது. அல்லாஹ்வுடைய மன்னிப்பும் கிருபையும் என்னை அடைந்தாலொழிய என்னுடைய வணக்கமும் என்னைச் சுவர்க்கம் சேர்த்துவிடாது என்று கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுறைறா(றலி)
ஆதாரம் : புஹாரி

இந்த ஹதீஸில் பல உண்மைகள் தென்படுகின்றன. பாவம் மன்னிக்கப்படுதல் என்பது, நான் அல்லாஹ்வைவிட்டும் வேறானவன் என்று நம்பியுள்ள அனாநிய்யத் என்ற ஷிர்க்கில் இருந்தும் விடுபடுவதாய் இருக்கிறது. இந்த ஷிர்க்கில் இருந்து விடுபடுவதற்காக மனிதன் முதலில் கலிமாவை விளங்கியறிந்து அக்கலிமா உணர்த்தும் உண்மையில் நிலைப்படும்போது பாவம் என்ற ஷிர்க்கிலிருந்தும் விடுபடுகிறான், இந்த அனாநிய்யத்தென்ற ஷிர்க்கிலிருந்து விடுபடுவதற்காகவே அமல்களைச் செய்யும்படி ஏவப்பட்டிருக்கிறது. இதைத்தவிர அமல்செய்வதே போதுமென்றும் கலிமாவின் விளக்கம் அவசியமல்ல என்றும் நினைப்பது தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வதாகும்.

ஹதீஸ்:
தூர்க்கிகை முதலான கெட்காரியங்களை விட்டும் நிவர்த்தியாக்காத எந்தத் தொழுகையினாலும் அல்லாஹ்வைவிட்டுத் தூரமாவதே உண்டாகிறது.

ஹதீஸ்:
தொழுகிறவர்களில் எத்தனையோ பேருக்கு உடல் வருத்தமும் நோவுமே தவிர மற்றப்படி (தொழுகையினால்) பயனில்லை.

தொழுகையும் நோன்பும் மற்ற உங்களுடைய சகல அமல்களும் உங்களை அல்லாஹ்விடமிருந்து பிரித்தால் அவை உங்களுக்குச் சாபக்கேடானவைதான் என்று முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜெய்லானி (றலி) அவர்கள் கூறுகிறார்கள். இவற்றிலிருந்து நாம் புரிந்துகொள்வது என்னவென்றால் பாவ நிவர்த்திக்காக, ஷிர்க்கிலிருந்து விடுபடுவதற்காக அமல்கள், அணுகுமுறைப் பயிற்சிகளாய்த் தரப்பட்டிருக்கின்றன என்பதே. ஆனால் இன்றுள்ள மிகப் பெரும்பாலான மக்கள் கலிமாவை விளங்கிக்கொள்ளாத காரணத்தினால், அவர்களுடைய அமல்கள் மூலம் மேலும் மேலும் ஷிர்க்கிலேயே உறுதியடைகிறார்கள் என்பதே. அமல்களின் நோக்கம் அனாநிய்யத்தென்ற ஷிர்க்கிலிருந்து மனிதனை விடுவிப்பதேயன்றி ஷிர்க்கில் உறுதிப்படுத்துவதல்ல.

இளம் சந்ததிகளுக்கோர் அறிவுரை

என் அன்பிற்குரிய தம்பிகளே!

"இஸ்ராக்" என்ற சொல் ஷிர்க் என்ற சொல்லடியாக "இப்ஆலு" என்னும் ஒலிநிறையில் பிறந்த ஓர் அறபுச் சொல்லாக இருக்கிறது. தௌஹீது என்பதும் இதைப்போலவே "அவ்ஹத்;" என்ற சொல்லடியாகப் பிறந்த "தப்ஈலுன்" "இப்ஆலுன்" என்ற ஒலி அளவைகளால் நிறுத்தெடுக்கப்பட்ட பிறவினைப் பெயர்ச்சொல்லாய் இருக்கிறது. இது எனது சொந்தக் கருத்துமட்டுமல்ல, அவ்லியாக்களான பெரும் பெரும் மேதைகளும் உலமாக்களும் ஒப்புக் கொண்ட ஒரு விஷயம்தான், ஷிர்க் என்பது தௌஹீதுக்கு முரணானது.

தௌஹீது என்றால் ஒருமைப்படுத்தல் என்பதுதான் அதன் உண்மையான அர்த்தம் என்று கூறமுடியாது. ஒருமைப்படுத்தல் என்றால் அதில் ஓரு நுட்பம் இருக்கிறது. ஏதோ பலது இருந்தாலதான் அவற்றை ஒருமைப்படுத்தலாம். ஒன்றுமட்டுமே உள்ளது என்றால் ஒருமைப்படுத்தல் என்பது கருத்தற்ற சொல்லாய்விடும். ஆகவே, ஒருமைப்படுத்தல் என்ற சொல் பொருந்தாது. ஏகமாக்கல் என்பதே அதன் உண்மை விளக்கமாகும். இந்த ஏகமாக்கல் என்பதே தௌஹீது என்ற சொல்லுக்குரிய சரியான தமிழ் விரிவுரைச் சொல்லாகும். இந்த நுட்பத்தை உணராதோர் ஒருமைப்படுத்தல் என்று கூறலாம். இது விளக்கத்துக்குப் போதுமானதுதான். அத்வைதம் என்ற தமிழச் சொல்லும் இதேபோல இரண்டல்ல ஒன்றே என்ற பொருளைக் கொடுப்பதால் இதையும் விளக்கத்துக்காகப் பாவிக்கலாம். ஆயினும் தௌஹீது என்ற அறபுச் சொல்லுக்கு நேர்பொருள் தரக்கூடிய ஒற்றைச்சொல் பிறபாஷைகளில் இருப்பதாய்த் தெரியவில்லை. ஆகவே, நாம் இங்கு ஏகமாக்கல் என்ற சொல்லையே எடுத்துக்கொள்வோம்.

சாதாரண பகுத்தறிவுள்ள மனித இனம் பலவாகக் காண்பதை விவேகம் அல்லது நுண்ணறிவைக்கொண்டு ஏகமாய் (ஒன்றாய்க்) காண்பது, அறிவது, அனுபவத்தில் கொள்வது என்பதே அதன் சரியான விபரமாய் இருக்கிறது. இதற்கு முற்றிலும் முரணானதே ஷிர்க் என்பது. அதாவது ஏகமாய் உள்ளதை (ஒன்றை)ப் பலவாய்க் கண்டு அறிந்து அனுபவத்தில் கொள்வதே ஷிர்க் என்பதன் உண்மையான விபரமாகும். இவ்விஷயம் மிக நுண்ணறிவோடு அனுபவமுள்ள அறிஞர்களை அணுகிப் பெறவேண்டிய ஒரு கல்வியாகும். இந்த அறிவுக்கு இரண்டு ஆதாரங்கள் இருக்கின்றன. ஒன்று குர்ஆன் ஹதீஸ் முதலாம் ஸ்ருதிகள் என்று கூறப்படும். மற்றொன்று யுக்தி அல்லது புத்தி என்பதாகும். இஜ்மாஉ, கியாஸ் என்பவற்றைப் பின்னால் நோக்குவோம். தௌஹீதையும் ஷிர்க்கையும் ஒப்பிட்டு நோக்கி உண்மையோடு ஒன்றவேண்டும் என்ற அவா உங்களிடமிருந்தால் எக்கட்டத்திலும் குர்ஆன் ஹதீஸுகளையோ புத்தியையோ நீங்கள் உதறித்தள்ளிவிடவே கூடாது.

இன்றைய உலகின் மக்கள் 73 கூட்டத்தினராய் இருக்கிறார்கள். இவர்களில் ஒரேயொரு கூட்டத்தினர் மட்டும்தான் சுன்னத்வல் ஜமாஅத்துக் கூட்டத்தவர் என்று கூறுகிறார்கள். உண்மையை நோக்கினால் இவர்கள் இமாம் ஜமாஅத் கூட்டத்தினரே என்பது தென்படுகிறது. இவர்களை அடையாளம் கண்டறிய ஒரு வழியுண்டு. சுன்னத்வல் ஜமாஅத்தாரின் ஆதாரங்கள் குர்ஆன், ஹதீஸுகளும், பகுத்தறிவுமாகவே இருக்கும். இவ்வகையினருக்கு மாறான 72 கூட்டத்தினரும் குர்ஆன் ஹதீஸுகளை ஏற்றுக்கொண்டோம் என்று வாயால் கூறினாலும் அவர்களுடைய சொல், செயல், கருத்துகள் யாவும் குர்ஆன் ஹதீஸுகளுக்கும் அறிவுக்கும் முரணாகவே இருக்கும். இதைத்தவிர அவர்களை வேறுபிரித்துக்காண வேறுவழி இருப்பதாக நான் அறியவில்லை. செட்டிவிக்கட்டுக்கள் இந்த உண்மையையுணர்த்தாது.

இந்த (ஸமானில்) காலத்தில் எத்தனையோ வகையான கூட்டங்கள் இருந்தாலும் குர்ஆன் ஹதீஸுகளோடு ஒன்றி நிற்கும்

கூட்டம் மிகமிகக் குறைவுதான். இவ்வகையான உண்மையான மூ.்மீன்கள் பெரும்பெரும் சமூகங்களைத் தங்களுடன் எப்போதும் அணைத்துக்கொண்டதே இல்லை. இன்றும் அதே நிலைமைதான். எங்கேயோ ஒரு மூலைமுடுக்கில் ஒருசிலர் இருக்கலாம். உலகின் நாலா பாகங்களிலும் இவ்வித நல்லடியார்கள் ஒருசிலர் ஒவ்வோர் ஸமானிலும் இருந்துகொண்டே இருக்கிறார்கள். இவ்வகையினரைக் கண்டறிந்து அவர்களுடைய ஆதாரபூர்வமான விளக்கங்களைக் கேட்டறிந்து பகுத்தறிவோடும் குர்ஆன் ஹதீஸுகளோடும் ஒப்பிட்டு நோக்கித்தான் உண்மையை உணரவேண்டியதாய் இருக்கிறது. இக்காலத்தில் நம்மிடையேயுள்ள மௌலவிமார்களில் மிகப்பெரும் பாலாரைக் கொண்டு இஸ்லாத்தின் உயிரான தௌஹீதை வஹ்தததுல் வுஜூத் என்ற நபிமார் றசூல்மார்கள் அவ்லியாக்களின் கொள்கை விளக்கத்தைப் பெற முடியாதென்பது நிச்சயமான உண்மை.

ஏனென்றால் இவர்கள் கற்றிருப்பது பிக்ஹுக்கலையின் ஒரு பகுதி மட்டுமே. இந்த இல்மு தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ்ஜு முதலாம் வெளி அமல்களின் விஷயங்களை சட்ட அடிப்படையில் விளக்குவதே அதாலத் பிக்ஹு என்பது. ஈமானின் உண்மை விளக்கத்தைக் கண்டறிவதற்கு வேறோர் வகையான இல்மு இருக்கிறது. இதை தஸவ்புவுடைய இல்மு என்று கூறப்படும். இந்த இல்மு பெரும்பாலும் இன்றுள்ள மதரஸாக்களில் கற்பிக்கப்படுவது இல்லை. இன்றுள்ள மதரஸாக்கள் பெரும்பாலும் வஹ்ஹாபிஸக் கோட்பாடுகளுடன்தான் இயங்குகின்றன. இந்த வஹ்ஹாபிஸம் என்பது வழிகெட்ட ஒரு கூட்டத்தின் ஆக்கமாகும். ஆயினும் இக்கூட்டத்தின் சில சாதாரண சமூகப்பழக்க வழக்கங்களையொட்டிய சிற்சில சீர்திருத்தங்கள் உண்டு என்பது உண்மை. ஆனாலும் இவர்களும் தௌஹீதை ஷிர்க்காகக் காண்பவர்கள்தான். அவ்லியாக்களையும் அவர்களின் கொள்கை விளக்கங்களையும் இந்த வஹ்ஹாபிகள் நிராகரித்திருக்கிறார்கள். ஆகவே இந்த அடிப்படையில் உருவான எந்த ஒரு மௌலவியும் உண்மையான விளக்கம் தருவார் என்பதை நீங்கள் நம்புவது வீழ்ச்சிக்குக் காரணமாய் அமையலாம்.

ஆனால் வஹ்ஹாபிஸம் நம் நாட்டில் படையெடுப்பதற்கும் மதரஸாக்கள் வஹ்ஹாபிஸப் பிடியில் சிக்குவதற்கும் முதலிலுள்ள ஒருசில ஆலீம்களில் ஆராய்வும் அனுபவமும் உள்ளோர் உண்மையான விளக்கங்களைத் தரக்கூடும்.

குர்ஆன்: 7:181

நாம் படைத்தவர்களில் சிலருண்டு, அவர்கள் சத்திய வழியை (ஹக்கை) அறிவித்து; அதனைக் கொண்டே நீதியும் செய்கின்றனர்.

ஆகவே, நீங்கள் உண்மையை அறிய விரும்பினால் ஷிர்க் தௌஹீது சம்பந்தமான விளக்கங்கள் இரண்டையும் ஒன்றோர்ரொன்றை ஒப்பிட்டு நோக்கித்தான் அறியவேண்டும், ஆகவே ஷைத்தானால் எழுதப்பட்டதென்று நீங்கள் கேள்விப்பட்டாலும் அதை வாசிக்காமல் அதை எழுதியவன் ஷைத்தானே என்று மருண்டுவிடக் கூடாது. வழக்காளியையும் எதிரியையும் விசாரணை செய்யாமல் தீர்ப்புக்கட்டுவது நீதிபதியான பகுத்தறிவுக்கு இழுக்காகும். அது மட்டுமின்றி எமது வீழ்ச்சிக்கும் காரணமாய் அமையலாம். ஆகவே மார்க்க விஷயத்தில் விசேடமாய் ஈமானுடைய விஷயத்தில் நீங்கள் திடீர் முடிவுக்கு வருவது தவறாகும்.

ஆகவே, இளம் சந்ததியினரான நீங்கள் வெறும் பசப்பு வார்த்தைகளில் ஆதாரமற்ற வரட்டு வாதங்களில் மூழ்கி உங்களுடைய இம்மை மறுமை வாழ்வுகளைப் பாழ்படுத்திக் கொள்ளாதீர்கள். எமக்கென்று ஒரு வேதமுண்டு, ஒரு நபியுண்டு. நாம் எவரிடமும் பிச்சை வாங்க வேண்டிய அவசியமே இல்லை. எத்தனையோ மொழிகளில் பற்பல விதமான வியாக்கியானங்களோடு பலவகையான தப்ஸீர்களும் ஹதீஸ்க் கிரந்தங்களும் இருக்கின்றன. புத்திக்கு விளங்காத சிற்சில சொற்களை விளக்குவதற்குத்தான் உங்களுக்கு வழிகாட்டிகள் தேவை. அறபு பாஷையோ பட்டம் பதவியோ உங்களுக்கு வழிகாட்டாது என்பதை முதலில் நீங்கள் நம்பவேண்டும்.

குர்ஆனுக்குப் புர்க்கான் என்றோர் பெயருண்டு. புர்க்கான் என்றால் பிரித்தறிவிப்பது என்பதே அதன் பொருள். ஆகவே

பிரித்தறிவிக்கும் பகுத்தறிவுக்கும் குர்ஆனுக்கும் எள்ளளவும் மாறுபாடு இருக்கவே முடியாதென்பதை நீங்கள் நம்பவேண்டும்.

லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவில் உள்ள இலாஹ" என்ற சொல்லை அதன் உண்மை அர்த்தத்திலிருந்து புரட்டியது யார்? ஏன்? என்ற விவரங்களை நீங்கள் அறிஞர்களை அல்லது அவர்களின் நூற்களை ஆராய்ந்து தெளிவுபெற வேண்டும். இந்தப் புரட்டல் றசூல்(ஸல்) அவர்களின் வபாத்துக்கு 30 வருடங்கள் கழிந்த பின் ஆரம்பிக்கப்பட்டுச் சுமார் 180 வருடங்களுக்குள்ளாகப் பூரணப்படுத்தப்பட்டிருக்கிறது.

குர்ஆன்: 2:208
விசுவாசிகளே! நீங்கள் இஸ்லாத்தில் முற்றிலும் நுழைந்து விடுங்கள்; ஷைத்தானின் அடிச்சுவட்டைப் பின்பற்றாதீர்கள்.
(மூ.்.மீன்களை நோக்கியே இஸ்லாத்தில் முற்றிலும் நுழைந்து விடுங்கள் என்று இறைவன் கூறுவதன் அர்த்தம் என்ன? என்பதை ஆராயுங்கள்.)

குர்ஆன்: 32:22
தன் இறைவனின் திருவசனங்கள் (ஆயத்துக்கள்) ஞாபக மூட்டபபட்டபின்னும் அவற்றைப் புறக்கணித்துவிடுபவனைவிட அக்கிரமக்காரன் யார்? நிச்சயமாக இத்தகைய குற்றவாளிகளிடம் நாம் பழி வாங்கியே தீர்வோம்.

குர்ஆன்: 32:24
பொறுமையுடன் சகித்துக்கொண்டு நம் வசனங்களை உறுதியாக நம்பிய அவர்களில் சிலரை நம்முடைய கட்டளைப்படி வழிகாட்டும் தலைவர்களாக நாம் ஆக்கினோம்.
(குர்ஆனை மறுப்போர் வழிகாட்டும் அமீர்கள், இமாம்கள் தலைவர்களேயல்ல. வழிகெடுக்கும் தலைவர்கள்தான்.)

குர்ஆனைப்பற்றி முதலில் உங்களுக்கு ஓரளவு விளக்கித் தரவேண்டியது அவசியமாகிறது.

குர்ஆனைப் பற்றிய விவரம்

நம்மிடையேயுள்ள குர்ஆன் உண்மையானதுதான். அதன் மொழிபெயர்ப்புகளிலும் விரிவுரைகளிலும் தான் உண்மைக்கு மாறான சில விஷயங்கள் தென்படுகின்றன. இக்காலத்திலுள்ள பல தப்ஸீர்களை ஒப்புநோக்கி ஆராய்ந்தால் இந்த உண்மை உங்களுக்குப் புலனாகும். தப்ஸீர்களில் பல ஒன்றுக்கொன்று சிற்சில விஷயங்களில் முரண்பட்டிருப்பதைக் காணமுடியும், இதற்கு முக்கிய மான ஓர் காரணம் இருக்கிறது.

குர்ஆனை றசூல் (ஸல்) அவர்களிடம் கேட்டறிந்து அவற்றை மனனம் செய்தவர்களும் எழுதியவர்களும் மிக உயர்ந்த அந்தஸ்தையுடைய அபூபக்கர் (றலி) உமர் (றலி) அலி (றலி) அவர்களும் அவர்களை ஒத்த இன்னும் பலரும் சேர்ந்த ஓரு குழுவாகும். இவர்களைக் (காத்திபே-வஹி) என்று கூறப்படும். றசூல் (ஸல்) அவர்களுக்கு வஹிவந்தால் இவர்களில் யாரையாவது ஒருவரை அல்லது சிலரை அழைத்து வசனங்களைக் கூறி எழுதும்படியும் மனனம் செய்யும் படியும் றசூல் (ஸல்) அவர்கள் ஏவுவார்கள். ஸஹாபாக்களும் அவ்விதமே செய்வார்கள். இந்த ஆயத்துகள் வந்த முறைப்படி ஒன்றன் பின் ஒன்றாய் இறக்கப்பட்டிருந்தாலும், நம்மிடையேயுள்ள குர்ஆனில் அந்த ஆயத்துகள் வந்த வந்த ஒழுங்கின்படி அமைக்கப்படவில்லை. றசூல் (ஸல்) அவர்கள் எந்த ஆயத்தை எவ்விடத்தில் எந்த ஆயத்துக்குப் பின் அல்லது முன் வைக்கவேண்டும் என்று கட்டளையிட்டார்களோ அவ்வவ்விடங்களிலேயே இந்த ஆயத்துகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இறங்கிய விரிசைக்கிரமப்படி அவை குர்ஆனில் அமைக்கப்படவில்லை.

நான் கூறுவது பொய்க்கூற்றல்ல. தப்ஸீர்களில் நான் தந்துள்ள விபரத்தை நீங்கள் காணலாம். இந்த அமைப்பு முறையினால் சிற்சில ஆயத்துகள் ஒன்றுக்கொன்று

தொடர்பற்றவைபோல் தென்படுகின்றன, ஓர் ஆயத்துத் தெளஹீதை விளக்கினால் அடுத்த ஆயத்து வேறொரு விஷயத்தை விளக்கலாம், ஒரே சூறாவில் மக்கீம, தனி என்ற இருவகை வசனங்களும் இடம்பெற்றிருக்கலாம். குர்ஆன் இப்படி அமைந்திருப்பதால் பெரும்பாலான மக்களுக்கு குர்ஆனின் கூற்று விளங்குவதே இல்லை. ஒரு ஆயத்துக்கு மற்றோர் ஆயத்து முரணாகவும் தென்படுகிறது. இதில் ஓர் ஆழிய நோக்கம் இருக்கிறது. மேல்நாட்டுப் பிற மத ஆராய்ச்சியாளர்கள் குர்ஆன் இப்படி அமைந்திருப்பதைப் பெரும்பாலும் கண்டித்திருக்கிறார்கள்.

குர்ஆனைக் கொண்டு அனேகரை வழிகெடும்படி செய்வதாகவும் ஒரு சிலருக்கு நேர்வழி காட்டுவதாயும் ஒருவரையொருவர் பிரித்தறிந்து கொள்ளுவதற்காகவும்தான் இந்தத் தொகுப்பு முறையை இறைவன் றசூலுக்களித்தான். அப்படியில்லாமல் ஆயத்துகள் இறங்கிய வரிசைக்கிரமப்படியே அமைக்கப்பட்டிருந்தால் எல்லோருமே உண்மையை இலகுவாய் உணரக்கூடியதாய் இருந்திருக்கும். ஏனென்றால் முஸ்ரிக்கீன்கள் என்ன என்ன எதிர்ப்புத் தெரிவித்தார்களோ அவ்வவற்றிற்குரிய விடையும் அந்த எதிர்ப்புக்கேற்றபடியே கூறப்பட்டிருப்பதை எம்மால் இலகுவாய் உணரமுடியும். குர்ஆன் அப்படி அமைக்கப்படாமையால் மனிதரில் பெரும்பாலாரினால் அதன் உண்மையை இலகுவாய் உணரமுடியாமல் இருக்கிறது. இப்படியிருந்தாலும் நாம் உண்மையைக் கண்டறிவதற்கு இலகுவான இரு வழிகளிருக்கின்றன. அவற்றில் ஒன்றை இங்கே தருகிறேன். மற்ற வழியைப் பெரியோர்களிடம் கேட்டறிய வேண்டும்.

எந்த விஷயத்தை நாம் எடுத்துக்கொண்டோமோ அந்த விஷயம் சம்பந்தமாய்க் குர்ஆனில் இடம்பெற்றுள்ள முழு ஆயத்துகளையும் ஒன்றுதிரட்ட வேண்டும். இதேபோல நாம் எடுத்துக் கொண்ட விஷயத்தோடு தொடர்புடைய எல்லா ஹதீஸுகளையும் ஒன்றுதிரட்ட வேண்டும். நாம் எடுத்துக்கொண்ட ஆயத்துகள் ஹதீஸுகளுக்கு நேர்முரணான ஆயத்துகள், ஹதீஸுகளையும் ஒன்றுசேர்த்துக் கொள்ள வேண்டும். இப்போது ஆயத்துகளையும்

ஹதீஸுகளையும் சரியான பகுத்தறிவோடு ஆராய்ந்தால் இயல்பாகவே உண்மை புலனாகிவிடும். ஹதீஸ் என்பது குர்ஆனின் வியாக்கியானம்தான். இதற்கொரு வழிகாட்டி அவசியமே இல்லை. இருந்தால் நல்லதுதான். எடுத்துக்கொண்ட மொழிபெயர்ப்புகள் சரியானவையா? என்பதை ஆராய்வதுதான் எமது கடமை. சந்தேகம் ஏற்படும்போது விளக்கமுடையோரை அல்லது இஜ்மாஉ என்ற ஏகோபித்த அபிப்பிராயத்தை ஆராயவேண்டும். இப்படியானால் நிச்சயமாக நாம் உண்மையைக் கண்டறிய முடியும். இங்கே இஜ்மாஉவைப்பற்றியும் நான் ஓரளவு விளக்கவேண்டியது அவசியமாகிறது.

இஜ்மாஉ என்பது என்ன?

எங்களின் முன்னோர்களான உலமாக்கள் ஒன்றுசேர்ந்து ஏகோபித்துக் கூறிய அபிப்பிராயமான இஜ்மாஉவைத் தனிப்பட்ட ஒருவராகிய உங்களின் அல்லது ஒருசிலரின் அபிப்பிராயத்துக்கு மாறாய்க் கண்டு நாங்கள் எப்படி நம்புவது என்று நீங்கள் கேட்கக் கூடும் என்பதற்காகவே இத்தலைப்பை நான் எடுத்துக்கொண்டேன் என்பதை முதலில் கூறிவிடுகிறேன்.

இஜ்மாஉ என்றால் அறிஞர்களின் ஏகோபித்த அபிப்பிராயம் என்பதே அதன் அர்த்தம். இந்த இஜ்மாஉ என்பதற்குச் சில நிபந்தனைகள் (வரைவிலக்கணம்) இருக்கின்றன. அவை இரண்டு.

1ஆவது:- எடுத்துக்கொண்ட விஷயம் எதுவோ அந்த விஷயத்தில் அறிஞர்கள் ஒன்றுசேர்ந்து ஏகோபித்த அபிப்பிராயத்தைத் தெரிவிக்க வேண்டுமானால் எடுத்துக்கொண்ட விஷயம் மார்க்கவிஷயமாய் இருக்க வேண்டும். மார்க்கமல்லாத விஷயத்தில் ஏற்படும் ஏகோபித்த அபிப்பிராயம் இஜ்மாஉ என்று கூறப்படுவதில்லை.

2ஆவது:- ஒரு விஷயத்தில் ஏற்படுகிற சிக்கல் சந்தேகங்களை நீக்கி உண்மையைத் தெளிவாய் விளக்கவும் இதுதான் உண்மையென்று ஆதாரங்களைக் காட்டித் தீர்ப்புக்கட்டவும் கூடிய திறமைவாய்ந்த "அஹ்ல்லுல்ஹல்லிவல் அக்திகள்" என்ற சிறப்புமிக்க அறிஞர்கள் (உலமாக்கள்) ஒரே காலத்திலாவது அடுத்தடுத்து வருகிற சமீபகாலங்களிலாவது அவ்விஷயத்தில் ஒன்றுபட்டு முடிவுக்கு வரவேண்டும். இந்த அறிஞர்கள் அல்லது உலமாக்கள் என்று கூறப்படுபவர்கள் பட்டதாரிகளாகச் செட்டிவிக்கட்டுடையவர் களாக இருக்க வேண்டும் என்பது கருத்தல்ல. ஆயினும் இன்றுள்ள மக்கள் செட்டிவிக்கட்டைக் கொண்டே எடைபோடுகிறார்கள்.

இந்த இரு விஷயங்களும் ஒன்று சேர்ந்திருப்பது எதுவோ அதுவே இஜ்மாஉ ஏகோபித்த அபிப்பிராயம் என்று கூறப்படும். இப்போது ஆராய்ந்து பாருங்கள். முஹ்கமுவைச் சேர்ந்த ஒரே கருத்துடையது கலிமா என்று இறைவேதமான குர்ஆனும் (ஆயத் 3:7) ஹதீஸும் தெளிவாய்க் கூறிக்கொண்டிருக்கும் போதும் கலிமா வுக்குப் பல பொருட்கள் உண்டு என்று கூறுவோரை அறிஞர்கள் உலமாக்கள் என்று கூறமுடியுமா? கலிமா தௌஹீதை உறுதிப்படுததவே தரப்பட்டதென்று குர்ஆன் ஹதீஸ்கள் தெளிவான விவரம் தரும்போது அதைப் புரட்டி ஷிர்க்கை உறுதிப்படுத்தக்கூடிய கருத்தை மக்களிடம் திணித்தவர்கள் அறிஞர்களாய் உலமாக்களாய் இருக்க முடியுமா? இவர்களைப் பெரியார்கள் இமாம்கள் அஹ்லுல் ஹல்லிவல் அக்திகள் என்று கூறமுடியுமா?

இரண்டாவது, கலிமாவையும் அதன் உண்மையையும் புரட்டிக் குர்ஆன் ஹதீஸ்களுக்கு மாறாய் மக்களை ஏமாற்றிக் கொண்டிருப்பது மார்க்க சம்பந்தமான ஸறகுடைய விஷயமாயருக்குமா? மார்க்கத்துக்கு முரணான பித்அத்தாயிருக்குமா? அது உண்மையாகவே பித்அத்துத்தான். இவ்வகையினர் பட்டம் பதவிகளோடிருப்பினும் இவர்களுக்கும் மார்க்கத்துக்கும் எவ்வித தொடர்புமே கிடையாது.

அஹ்லுல் ஹல்லிவல் அக்திகளான உலமாக்கள் (அவ்லியாக்கள்) எங்கேயாவது எப்போதாவது கலிமாவுக்குப் பல கருத்துண்டு என்றும் வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ் வைத்தவிர என்றும் கலிமாவுக்குப் பொருள் கூறியதுண்டா? கலிமத்துத்தையிபா என்னும் மணக்கும் கலிமாவை கலீமத்துலகபீஸா என்னும் துர்நாற்றக் கலிமாவாகப் புரட்டியதுண்டா? இல்லவே இல்லை. முஹ்கமுவுக்குப் பல கருத்துக்கொள்ளக் கூடாது என்றும் வலிந்துரைகொள்ளக் கூடாதென்றும் அல்லாஹ் தவிர இலாஹு இல்லையென்பதே கலிமாவின் பொருள் என்றும் தான் கூறியிருக்கிறார்கள். 57:3ஆம் ஆயத்தின் படி வெளியாகியிருப்பவன் இறைவனே என்றுதான் கூறியிருக்கிறார்கள். அப்படியிருக்கக் குர்ஆனை மறுத்து வெளியாய் இருப்பது

இறைவனல்லாததே என்று கூறும் முஸ்ரீக்குகளை அஹ்லுல்ஹல்லிவல் அக்திகள் என்று நாம் ஏற்க முடியுமா? இவ்விதமாய்க் குர்ஆன் ஹதீஸுகளுக்கு மாறான விளக்கம் தருகிற முஸ்ரீக்குகளின் ஏகோபித்த அபிப்பிராயத்தை இஜ்மாஉ என்று கூறமுடியுமா? இந்தப் பின்பற்றல் வாதிகள் ஒருவரையொருவர் கண்மூடித்தனமாய்ப் பின் பற்றுகிறார்கள்.

இந்த மூடமக்களின் கூற்று அபூஜஹ்ல் போன்ற முஸ்ரீக்குகளின் ஏகோபித்த அபிப்பிராயமேயன்றி மூ.்மீன்களின் இஜ்மாஉ அல்ல, தெளஹீது என்னும் ஏகத்துவக் கொள்கையை விளங்கியறிந்த நபிமார்கள் ஸுபிகளான (அவ்லியாக்களான) மகான்கள்தான் அஹ்லுல்ஹல்லிவல் அக்திகள் என்ற பெரியார்கள். இவர்கள் தான் கனம் தங்கிய உலமாக்கள் என்ற பெயருக்குப் பாத்திரமானவர்கள். றசூல் (ஸல்) அவர்களோ அவர்களுடைய ஸஹாபாக்களான தாபியீன்களோ அவர்களையடுத்த தப்அத்தாபியீன்களோ எங்கேயாவது எப்போதாவது கலிமாவுக்குப் பல பொருள் உண்டு என்றும் வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத் தவிர என்பதே கலிமாவின் பொருள் என்றும் கூறியதுண்டா? இல்லையே! இது புரட்டல்வாதிகளான ஒரு கூட்டத்தின் புரட்டல்தான். இந்தப் புரட்டல் சுமார் 14 நூற்றாண்டின் முன்பே உருவாக்கப்பட்டது. பெரும்பாலான மனித இனம் இந்த உண்மையை அறிந்துகொள்ளாமல் அந்தப் புரட்டலிலே பன்னெடும் நாட்களாக ஊறிவாழ்ந்திருக்கிறார்கள். யாராவதொருவர் ஆராய்ந்து தெளிந்தவர் இவ்வுண்மையைக் கூறும்போது இது ஒரு புதுமார்க்கமென்று நம்புவது ஏன்? அறியாமைதான். வழிகாட்டிகளான ஷைத்தான்களின் விஷமத்தில் சிக்குண்ட மனிதன் தான் நேர்வழியிலிருப்பதாகவும் தனக்கு வழிகாட்டுவோர் அவ்லியாக்களான மக்களே என்றும் நம்பிவிடுகிறான். இஸ்லாத்தின் அடிப்படையே புரட்டப்பட்டுள்ளது என்பதை இளவட்டங்களான நீங்கள் எப்படி அறிவீர்கள்? உங்களுக்குத் தற்போது விளக்கம் தந்துகொண்டிருக்கிற மிகப்பெரும்பாலார் மார்க்க விளக்கம் தெரியாதவர்கள் என்பது உங்களுக்கு எப்படித் தெரியவரும்?

வாலிபர்களாய்ப் படித்தவர்களாய்ப் பகுத்தறிவு தொழிற்படுபவர்களான நீங்கள் உங்கள் பொன்னான நேரத்தை மண்ணாக்கி விடாமல் ஜாஹீல்களின் பேச்சுகள் எழுத்துகளில் மயங்கிவிடாமல் குர்ஆன், ஹதீஸுகளையும் உங்கள் பகுத்தறிவையும் அடிப்படையாய்க் கொண்டு ஆராய்வுசெய்து மார்க்கம் இதுதான் என்பதைக் கண்டறியுங்கள், அதன்படி வாழப்பழகுங்கள், இம்மையிலும் மறுமையிலும் வெற்றிபெறுங்கள். சரியையும் பிழையையும் ஒப்பிட்டு நோக்காதவரையிலும் பகுத்தறிவு தொழிற்படாது என்று நம்புங்கள்.

இறைவன் குர்ஆன் என்ற திரையிலிருந்து இன்றும் நம்மோடு பேசிக்கொண்டிருக்கிறான் என்பதையும் ஹதீஸ் என்ற திரையிலிருந்து எங்கள் றசூல் (ஸல்) அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நம்புங்கள். எம்முடைய பிரச்சனைகள் எதுவானாலும் அல்லாஹ்வும் றசூலும் விளக்கம் தருவார்கள் என்பதை நம்புங்கள்.

குர்ஆன்: 2:118

மேலும் கல்வியில்லாதோர் அல்லாஹ் நம்முடன் நேரடியாகப் பேச வேண்டாமா? அல்லது ஒரு வசனம் நமக்கு வரவேண்டாமா? எனக் கேட்கின்றனர். இதற்கு முன்னிருந்தோரும் (இப்படித்தான்) கேட்டார்கள். (அவர்களின் இருதயத்தை) இவர்களுடைய இருதயங்கள் ஒத்திருக்கின்றன; உறுதிகொள்ளும் மக்களுக்கு நம்முடைய ஆயத்துகளை, நிச்சயமாக நாம் தெளிவாக்கியிருக்கிறோம்.

ஆகவே, இனிமேல் எதையும் நமக்குப் புதிதாய் அறிவிக்க வேண்டியதில்லை. எல்லாமே குர்ஆனிலுண்டு. நமக்கு வேண்டியது விளக்கம்தான். நீங்கள் ஈமான்கொண்டு செயல்பட்டால் வாரிதாத் என்ற ஒரு வழியைக் கொண்டு ஆயத்தின் ஹதீஸின் விளக்கம் உங்களுக்குத் தரப்படும் என்பதை நம்புங்கள். அந்த மகாமை எய்தக்கூடிய முயற்சியைச் செய்யுங்கள்.

இன்று எமது கிராமங்களில் தப்லீக் என்ற போர்வையில் உலாவுகிற ஒரு கூட்டம் இருந்துகொண்டிருக்கிறது. இக்கூட்டத்தின்

உண்மை விவரம் உங்களுக்குக் கிடைக்காத செய்தியாய் இருக்கலாம். இக்கூட்டம் அல்லாஹ் றசூலினால் சாபமிடப்பட்ட கூட்டம் என்பதை நீங்கள் அறியாமல் இருக்கலாம். இவர்களைப் பற்றி முன்னறிவிப்புச் செய்யப்பட்ட பல நூற்றுக்கணக்கான ஆயத்துகள் ஹதீஸுகளைத் தரமுடியும். இந்த கூட்டத்தைப்பற்றி முன்னறிவிப்புச் செய்யப்பட்ட ஒரு சில ஆயத்துகளையும் ஒருசில ஹதீஸுகளையும் எமது குர்ஆன் தீர்ப்பு 1ஆம் பாகத்தில் தந்துள்ளேன்.

இக்கூட்டம் இறுதியாகத் தஜ்ஜாலுடன் சேர்ந்து கொள்ளும் என்று றசூல் (ஸல்) அவர்களால் வெளிப்படையாய்க் கூறப்பட்ட ஹதீஸ்களையாவது பார்த்தபின் என் பேச்சை நம்புங்கள். அதுவரை அவர்களுடைய நடையுடை இபாதத்துக்களில் ஏமாந்துவிடாதீர்கள். இக்கூட்டத்தினர் உண்மையாகவே ஈமான் என்பது எள்ளளவும் இல்லாத அறிவிலிகளாகவும் இஸ்லாத்தைப் புரட்டுபவர்களாயும் இருக்கிறார்கள் என்பதை அறிஞர்களையணுகி ஆராய்ந்து தீர்ப்புக் கட்டுங்கள்.

இராணுவ உடையைக் கண்ட நாம் இந்த இராணுவம் எம்மைக் காப்பாற்றவே வந்துள்ளது என்று நம்பிவிடலாம். ஆனால் பெரும்பாலான கொள்கைக் கோஷ்டிகள் இந்த இராணுவ உடையைக் கேடயமாகக் கொண்டுதானே கொள்ளையடிக்கிறார்கள். இதேபோலத்தான் இன்றுள்ள பட்டம் பதவிகள் தாடி தலைப்பாகைகள் போன்ற சீருடையணிந்த கூட்டத்தினர்தான் இன்றுள்ள பெரும்பாலான எத்தும் கூட்டத்தினர்கள். இந்தச் சீருடைகளில் மயங்கிய மக்களின் அறிவும் திருடப்படுவது நிச்சயமே.

ஹதீஸ்:

வணக்கங்களில் சிறந்தது எதுவென்று றசூல் (ஸல்) அவர்களிடம் கேட்க இஸ்லாம் என்றும் இஸ்லாத்தில் சிறந்தது எதுவென்று கேட்க ஈமான் என்றும் விடைகூறினார்கள்.

ஹதீஸ்:
தொழுகை, தவாபு, ஹஜ்ஜுமுதலான எல்லா இபாதத்துக்களையும் பர்லாக சுன்னத்தாகக் கற்பிக்கப்பட்டது அல்லாஹ்வைப் பற்றிய ஞாபகம் (திக்று) நிலைப்படுவதற்காகவே.

ஹதீஸ்:
அல்லாஹ்வைத் திக்று செய்வதைவிட அடியானின் எந்த இபாதத்தும் அல்லாஹ்வின் வேதனையை விட்டும் அவனைக் காப்பாற்றக் கூடியதாயில்லை.

அறிவிப்பவர் : முஆதிப்னு ஜபல்(றலி)
ஆதாரம் : அபூதாவூத்

இன்னும் பல நூற்றுக்கணக்கான ஹதீஸ்களைத் தரமுடியும்.

தஜ்ஜால் என்ற சொல்லை நான் ஆராய்ந்தபோது அது ஒரு தனிப்பட்ட மனிதனல்ல என்பதும், தங்கள் கொள்கையை விற்றுப் பிழைக்கும் வியாபாரிகளின் கூட்டமே தஜ்ஜால் என்ற சொல்லால் உணர்த்தப்படுவது என்பதும் தெரியவந்தது. 30 தஜ்ஜால்களாவது வெளியாகாமல் துன்யா முடியாது என்று ஒரு ஹதீஸ் காணப்படுகிறது. இதை எமது முதல் நூலில் ஓரளவு விளக்கியிருக்கிறேன். இக்கூட்டம் தங்கள் கொள்கையை விற்பதற்கு லேபலாய் அணிந்து கொண்ட ஒரு விஷயம்தான் தொழுகைக் கழைப்பது என்பதை நீங்கள் உணராமல் இருக்கலாம். உண்மை இதுதான் இக்கூட்டத்துக்கும் இஸ்லாத்துக்கும் எவ்விதத் தொடர்புமே கிடையாது. இவர்கள் கொண்டிருப்பது அபூஜஹ்லின் கொள்கையாயும் செயல் முஸ்லீம்களுடையதாயும் இருப்பதால் இவர்கள் முனாபீக்குகள் என்பதில் எள்ளளவும் சந்தேகமேயில்லை. இவ்விதமான கூட்டங்களில் சிக்கிக் கொண்டும் வஹ்மு என்ற காரிருளில் மாட்டிக் கொண்டும் உங்கள் வாழ்நாளை வீணாக்கிக் கொள்ள வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கூட்டத்தினர் ஒவ்வோர் கிராமத்திலுமுள்ள கற்றவர்கள் பணவசதியுடையவர்களை அமீர்களாய் அமைத்துக் கொள்கிறார்கள். இந்த அமீர்களுக்கு மார்க்கத்தைப் பற்றிய விஷயஞானம் அணுவேனும் கிடையாது. ஆயினும் அமீர் என்ற ஒரு பட்டம் சூட்டப்பட்டுவிட்டால் அது ஒரு பிரதம மந்திரியின் பதவி என்றே நம்பி விடுகிறார்கள். தங்கள் பதவியைக் காப்பாற்றும்

நோக்கோடு பல்லாயிரக் கணக்கான ரூபாய்களைச் செலவு செய்கிறார்கள். அவர்களின் பின் செல்லக்கூடிய பாமர மக்களையும் சேர்த்துக் கொள்கிறார்கள். தொழுகைக்காக அழைக்கும் கூட்டம் உண்மையான மூ.்மீன்கள் முஸ்லீம்கள் தானே என்று மக்கள் நம்பிக்கொள்கிறார்கள். ஆனால் இந்தக் கூட்டத்திலுள்ள ஒவ்வொருவரும் முத்திரையிடப்பட்ட லஹ்னத்துக்குள்ளானவர் என்பது மக்களுக்குத் தெரியவே தெரியாது. இந்தக் கூட்டத்தில் எவராவது ஒருவர் குர்ஆன் ஹதீஸ்களை ஒப்புக்கொண்டவர், பகுத்தறிவைப் பயன்படுத்துபவர் இருக்கிறாரா? இல்லவே இல்லை. இவர்களிடமுள்ள வேதஞானம் அவர்களின் அமீரால் போதிக்கப்படுவது எதுவோ அது மட்டும்தான். இவர்களுடைய ஆயுதங்களில் மிகக் கடினமான ஒன்று இஸ்லாத்தில் கேள்விக்கிடமில்லை என்று கூறுவதுதான்.

ஹதீஸ்:

அறிவு ஈமான்தாரிகளின் தவறிப்போன சொத்தாகும். அதை அவர்கள் (எங்கே கண்டாலும்) அடையப்பெறினும் அது அவருக்கே உரித்தாகும்.

அறிவிப்பவர் : அபூஹுறைறா(றலி)
ஆதாரம் : திர்மிதி

மேலும் அறிவுடைய பெட்டகத்தின் திறவுகோல் (நியாயமான) கேள்வியாய் இருப்பதனால் அறிவைக் கேட்டுக் கற்றுக் கொள்வார்களாக என்று பல ஹதீஸ்கள் விளக்கம் தருகின்றன.

அன்புப் பெருமக்களே!

றசூல் (ஸல்) அவர்களால் பல ஹதீஸ்கள் மூலம் தெளிவாய் விளக்கித் தரப்பட்ட தவறான கொள்கையுடைய வஹ்ஹாபிஸம் தோன்றிச் சுமார் 100 வருடங்களாகின்றன. இது எங்கு உருவாகும் என்று றசூல் (ஸல்) அவர்களால் கூறப்பட்டதோ அதே இடத்தில்தான் இந்த வஹ்ஹாபிஸம் அப்துல் வஹ்ஹாப் நஜ்தி என்பவரால் உருவாக்கப்பட்டதாகும். உமர் (றலி) போன்ற பல ஸஹாபாக்களால் அறிவிக்கப்பட்ட அனேக ஹதீஸ்கள்

தென்படுகின்றன. இதையிட்டு அவ்வப்போது வாழ்ந்த நல்லடியார்களான சுன்னத்வல் ஜமாஅத்தினரால் எழுதப்பட்ட அனேக கிதாபுகளும் விரிவுரைகளும் பல பாஷைகளில் அமைந்திருக்கின்றன. இந்த விபரங்கள் எதுவுமே எம் நாட்டு மக்களுக்குத் தெரியாது. இந்த வஹ்ஹாபிஸம் என்ற புரட்டுவாதம் காலாகாலம் மாறுபாடடைந்து இன்று முஸ்லீம் என்ற போர்வையோடும் தொழுகையென்ற கேடயத்தோடும் தப்லீக், நஜாத் சவூதி, நஜ்தி, நத்வி, தேவ்பந்தி, உம்ரீ, ஸலபீ, S.I.M போன்ற பல பிரிவுகளாய்க் காட்சியளிக்கிறது.

கட்சிகள் பலவாய் இருப்பினும் இவர்கள் அனைவரும் அடிப்படைக் கொள்கையில் ஒருமைப்பட்டவர்கள்தான். தொழுகையைக் கேடயமாய்க் கொள்ளாவிட்டால் இவர்களுடைய கொள்கையைப் பரப்பமுடியாதல்லவா? ஆகவே இவ்வித மதிமாறாட்டமான குர்ஆன் ஹதீஸுகளுக்கு மாறான எந்த ஒரு கோஷ்டியையும் பின் பற்றி நாம் ஈமான்தாரிகளாய் வாழ முடியாது.

இன்னொரு விஷயத்தை எத்திவைக்க விரும்புகிறேன். உங்கள் மத்தியில் அடிக்கடி ஒரு சிறு பிரசாரம் நடந்துகொண்டிருப்பதை நான் அறிகிறேன். அது என்னவென்றால் அப்துல்லாப் பயில்வானாலும் அவரைப் போன்றோராலும் கூறப்படும் கொள்கை இந்துக்களின் கொள்கையென்றும் அது இஸ்லாத்தின் கொள்கைக்கு மாறானதென்றும் அதுதான் அத்வைதம் என்றும் ஒரு சிலர் உங்களிடம் பிரசாரம் செய்கிறார்கள்.

இது உண்மைக்கு முற்றிலும் மாறான ஆதாரமற்ற படுபொய்யாய் இருக்கிறது. தௌஹீது, ஏகமாக்கல், ஒருமைப்படுத்தல், அத்வைதம் என்று கூறப்படும் கொள்கை ஒரு சமூகத்திற்கு அல்லது ஒரு காலத்துக்கு மட்டும் உள்ள கொள்கையல்ல. இக்கொள்கை ஆதம் (அலை) அவர்களால்தான் முதன் முதல் உலகில் உபதேசக்கப்பட்டது. ஆராய்வு குறைந்த ஒரு சாரார் ஆதம் (அலை) அவர்கள் சுமார் 7,000ம் வருடங்களுக்கு முந்தியவர்கள் என்று கூறுகிறார்கள். இது தவறான கணக்காகும். இதை உறுதிப்படுத்தும்

ஆதாரங்கள் கிடையாது. ஒருசில ஆயத்துகள் ஹதீஸ்களைக் கொண்டு யூகிக்கப்பட்டதுதான் இந்த முடிவு. இன்றைய விஞ்ஞான உலகம் பல இலட்ச வருடங்களுக்கு முன் மனிதனால் பாவிக்கப்பட்ட பல பொருட்களையும் மனித உறுப்புக்களையும் கண்டெடுத்திருக்கிறது. இவர்களுடைய காலம் எம்மால் யூகிக்கமுடியாத ஒன்றுதான்.

இவர்களின் பின் வந்த நூஹ் (அலை) அவர்கள் காலத்தில் ஜலப்பிரளயம் ஏற்பட்டு மக்கள் அழிந்தபின் மீதியாயுள்ளோரின் வாயிலாகவே இன்றுள்ள மக்கள் தோன்றியவர்கள். எனது திருக்குர்ஆன் தீர்ப்பு என்ற நூலின் 1ஆம் பாகத்தில் இப்றாஹீம் (அலை) அவர்களின் கூட்டத்தார்கள் வாயிலாய் ஸுஹ்புகளை ஆதாரமாய்க் கொண்டே இந்துக்களின் மதங்களும் கொள்கைகளும் உருவாகின என்று கூறியுள்ளேன். இஸ்லாம் என்ற பெயரை ஏற்படுத்தியவர்கள் இப்றாஹீம் (அலை) அவர்களே என்பது உங்களுக்குத் தெரியும். இந்த இப்றாஹீம்(அலை) அவர்களுக்கு மிகமிக நீண்டகாலத்துக்கு முந்தியவர்கள்தான் நூஹு (அலை) அவர்கள். இவர்களுடைய காலத்திலும் இஸ்லாம் இருந்ததென்றும் இந்த இஸ்லாத்தின் கொள்கையே தௌஹீது என்பதும் குர்ஆன் மூலம் தென்படுகிறது.

குர்ஆன்: 6:84

நாம் (இப்றாஹீமாகிய) அவருக்கு இஸ்ஹாக்கையும் ய.ஃகூப்பையும் தந்தருள் புரிந்தோம். இவர்கள் யாவரையும் நாம் நேரான வழியில் செலுத்தினோம். இதற்கு முன்னர் நூஹுவையும் அவர்களுடைய சந்ததிகளாகிய தாவூத், ஸுலைமான், ஐயூப் மூஸா, ஹாறூன் முதலியோரையும் நேரான வழியில் செலுத்தினோம்.

இவ்வாயத்தின்படி இப்றாஹீம் (அலை) அவர்களுக்கு நீண்ட நாளைக்கு முன்பே நூஹு (அலை) வாழ்ந்தார்கள் என்பதை அறிகிறோம். இன்னும் வேதகாலம் என்பது மூஸா (அலை) அவர்களில் இருந்துதான் ஆரம்பமாகிறது. முதல் வேதம் தௌறாத் என்பது. இதற்கு முன் வேதம் இல்லை. ஸுஹ்புகள் என்ற ஆகமங்கள்தான் அப்போதுள்ளவை. இந்த வேத காலத்துக்கும்

நீண்ட காலத்துக்கு முன் வாழ்ந்தவர்கள்தான் நூஹு (அலை) அவர்கள். இவர்களின் எத்தனையோ சந்ததியினருக்குப் பின் தோன்றியவைதான் இந்துக்களின் கொள்கை, புராண, இதிகாசங்கள். இது சுமார் 5000 வருடங்களைக் கடக்காதவைதான். இதைவிடப் பல்லாயிர வருடங்களின் முன் வாழ்ந்த அந்த நூஹ் (அலை) இஸ்லாம் என்ற ஓரு மார்க்கத்தையே முஸ்லீம் என்ற பெயரோடு பின்பற்றியிருந்தார்கள் என்பதை உங்களால் மறுக்க முடியுமா?

குர்ஆன்: 10:72

பின்னும் நீங்கள் புறக்கணித்தால், நான் உங்களிடத்தில் யாதொரு கூலியும் கேட்கவில்லை; என்னுடைய கூலியெல்லாம் அல்லாஹ்விடமேயன்றி இல்லை. நான் முஸ்லீம்களில் இருக்குமாறே ஏவப்பட்டுள்ளேன்.

இந்த ஆயத்தில் நூஹ் (அலை) அவர்கள் ஓர் முஸ்லீமே என்பதை அறிகிறீர்கள். இந்த நூஹு நபியை இரண்டாவது ஆதம் என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். இவர்களுக்கு முன் உள்ள மக்கள் அழிந்துவிட்டனர். ஆகவே நூஹ்(அலை) அவர்களை ஆரம்பமாய்க் கொண்டவர்கள்தான் அன்றிலிருந்து இன்றுவரை வாழும் மக்கள். இவர்களில் யார் யார் என்ன என்ன பெயரைக் கூறினாலும் இவர்களால் வெளியாக்கப்படுகிற தௌஹீது என்ற ஏகத்துவக் கொள்கை நூஹ் (அலை) என்ற முஸ்லீமுக்குப் பின்னுள்ளவைதானே. இக் கொள்கையை பற்பல காலத்தில் வாழ்ந்த பற்பல விதமான அறிவுடைய மக்கள் அவரவர் அறிவுக்கேற்றபடி கூட்டியோ குறைத்தோ சிறிது மாறுபடுத்தியோ கூறியிருக்கிறார்கள். அதாவது இந்தக் கொள்கை ஒன்றேயொன்றுதான். இந்தக் கொள்கையை ஆதாரம் தந்து விளக்கும் முறைகள் பலவாயும் பலபாஷைகளாயும் இருக்கின்றன. அறபிகள் தௌஹீது என்பதைத்தான் இந்து அவனுடைய பாஷையில் அத்வைதம் என்று கூறுகிறான், இக் கொள்கை அறபிகளுடையதுமல்ல இந்துக்களுடையதுமல்ல.

இக்கொள்கையை விளக்கும் முறைதான் இந்துவுடையதும் அறபியுடையதும். இம் முறையில் பிழைகள் பல இருக்கலாம்.

இப் பிழைகளை நீக்கி உண்மையை உறுதிப்படுத்துவதே புர்கான் என்ற குர்ஆனின் வேலையாய் இருக்கிறது. இந்த புர்கானை விளக்கும் வியாக்கியானம்தான் றசூலுடைய ஹதீஸுகள். ஆகவே எக்காலத்தவர் எம்மதத்தைச் சேர்ந்தவர் எந்த நாட்டைச் சேர்ந்தவராயினும் குர்ஆன் ஹதீஸுகளுக்கமைவாய் விளக்கம் தந்தால் அது இஸ்லாத்தின் கொள்கையல்ல என்று நாம் கூறுவது எம் அறிவீனமல்லவா? அத்வைதம் இந்துக்களின் கொள்கையென்று கூறுவது ஆதாரமற்ற வரட்டுவாதமல்லவா? இப்படிக் கூறினால் மக்களைத் திசைதிருப்பலாம் என்பதே வரட்டுவாதிகள் கையாளும் தந்திரம்.

ஷிர்க் என்ற கொள்கையும் இதேபோலத்தான். அல்லாஹ் தவிர இலாஹு இல்லை என்று கூறுவது முஸ்லீம்களின் கொள்கையென்றும் அதற்குமாறான அல்லாஹ்வுடன் வேறு பொருளுமுண்டு என்ற கொள்கை நூஹ் (அலை) அவர்களுக்கு விரோதியாயிருந்த முஸ்ரீக்கில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது என்றும் கூறும் அறிஞர்களை நாம் பிழைகாணவேண்டியதேயில்லை. சரித்திர நூற்கள் தராத பூரண உண்மைகளைக் குர்ஆன் தந்திருக்கிறதென்பதை நீங்கள் உணரவேண்டும். ஆதாரமற்ற வரட்டுவாதங்களில் ஏமாறக்கூடாது.

நாம் கூறுவது உண்மையானால் ஒருசில உலமாக்கள் அத்வைதம் இந்துக்களின் கொள்கையென்று கூறுவது ஏன்? இந்த விஷயத்தில் எள்ளளவு அறிவும் அவர்களிடமில்லாதது ஒரு காரணம். அப்படித் தெரிந்தாலும் சொல்லமுடியாத காரணம் மற்றொன்று. சொன்னால் இவரும் வழிதவறியவரென்ற பட்டம் சூட்டப்படலாம். இன்னொன்று மக்களுடைய அறிவுக்கேற்றபடி விளக்கமளிக்கப் போதிய அறிவு விளக்கம் இவர்களிடம் இல்லை. இன்னொன்று நான் பலவருட முயற்சியில் பட்டம் பெற்றிருந்தும் பட்டமில்லாத பயில்வானின் பேச்சை ஏற்று ஆம்போட்டால் கௌரவம் பாழாய்ப் போகுமே என்ற பயமும். இன்னும் எத்தனையோவைகளையும் கூறலாம்.

கலிமாவின் உண்மையான பொருள் என்ன? அதன் உண்மையை அறிவது எப்படியென்று நீங்கள் அறியவிரும்பினால் எமது முதல் நூலான ஈமானின் உண்மையை நீ அறிவாயா என்ற நூலில் கலிமாவின் பொது விவரம் என்ற தலையங்கத்தின் கீழ் வாசித்து தெளிவுபெறுங்கள்.

இல்லாமை என்பது அல்லாஹ்விடம் இல்லாதிருப்பதாலேயே அவன் நிரப்பமுடையவனாயிருக்கிறான் என்பதை ஊன்றி உணர்வீர்களாக.

குர்ஆன்: 7:147

இன்னும் நமது ஆயத்துக்களையும், மறுமையின் சந்திப்பையும் பொய்ப்பித்தார்களே அவர்கள், அவர்களது அமல்கள் அழிந்துவிட்டன; அவர்கள் செய்துகொண்டிருந்ததற்கல்லாமல் அவர்கள் பிரதி செய்யப்படுவார்களா?

இப்படிக்கு
ஷெய்குல் முப்லிஹீன்
M.S.M,அப்துல்லாஹ் (றஹ்)

ஷெய்ஹுல் முப்லிஹீன்
எம். எஸ். எம். அப்துல்லாஹ் (ரஹ்) அவர்களின்
வெளியீடுகள்

1. ஈமானின் உண்மையை நீ அறிவாயா? (தமிழ், ஆங்கிலம்)
2. ''பித்அத்''துக்கு உண்மையின் சவுக்கடி - பாகம் 1
3. ''பித்அத்''துக்கு உண்மையின் சவுக்கடி - பாகம் 2
4. திருக்குர்ஆன் தீர்ப்பு - பாகம் 1
5. திருக்குர்ஆன் தீர்ப்பு - பாகம் 2
6. திருக்குர்ஆன் தீர்ப்பு - பாகம் 3
7. சுன்னத்வல் ஜமாஅத்தினரை தெரிந்து கொள்வது எப்படி? (தமிழ், ஆங்கிலம்)
8. ஏகத்துவம் பற்றி அல்குர்ஆன் (தமிழ், ஆங்கிலம்)
9. பகுத்தறிவின் நீதிமன்றம் (தமிழ், ஆங்கிலம், சிங்களம்)
10. ஏகத்துவப் பாடல்கள் (181 பாடல்கள் உள்ளடக்கிய CD இலவசம்). இணையத்தளத்திலும் Download செய்துகொள்ள முடியும். www.mufliheen.org.

குறிப்புகளுக்காக

குறிப்புகளுக்காக